[illegible]/190[illegible]

O-, IM.EN, A
NO2
118912

1902

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலபுராணமும்

## அருணாசலேசுரர்

## தோத்திரப்பிரபந்தத்திரட்டும்.

இவை

ஆறுகாடு - ஸ்ரீமான் - ஆறுமுகமுதலியாரவர்கள்

குமாரரும்

திருவண்ணாமலை ஆலய தர்மகர்த்தருமாகிய இராயபஹதூர்

ஆறுகாடு - தனக்கோட்டி முதலியார்

F. M. U.; F. R. A. S.; F. T. S.; F. R. S. A.

வேண்டுகோளின்படி

சுத்தப் பதிப்பு.

கோன்னூர் - லோகநாதமுதலியாரால்

தமது மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை:

Copy-right Registered.

1902.

O-IKEN.A. 1
118912.

## புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சப்தரிஷிவாக்கியம் 5500 - பாடம் (சோதிடம்) | 4 | 0 | 0 |
| சுப்பிரமணியபண்டிதர் ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |
| திருவிளையாடற்புராணம் செய்யுள் | 2 | 0 | 0 |
| பகவற்கீதைவசனம் (தஞ்சைபதிப்பு) | [illegible] | 4 | 0 |
| தத்துவராயர்பாடுதுறை | 0 | 12 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர் (16) சாஸ்திரம் | 0 | [illegible] | 0 |
| செய்யுளிலக்கணம் | 0 | [illegible] | 0 |
| வேதாந்தபோதினி | 0 | 8 | 0 |
| மனவுல்லாசகதை | 0 | 8 | 0 |
| வள்ளலார் (20) சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம் | 1 | 0 | 0 |
| பொன்னம்பலசுவாமிகள் கைவல்லியநவநீதவுரை | 2 | 0 | 0 |
| திருமூலர் திருமந்திரம் (கூஅ) | 1 | 8 | 0 |
| பிரபுலிங்கலீலை மூலம் | 0 | 8 | 0 |
| சேதுபுராணவசனம் படத்துடன் | 2 | 0 | 0 |
| கந்தபுராணச்சுருக்கம் | 0 | 12 | 0 |
| சானந்தகணேசர்புராணம் உரை | 0 | 12 | 0 |
| திருவாதவூரர்புராணம் உரை (யாழ்ப்பாணபதிப்பு) | 1 | 0 | 0 |
| விருத்தாசலபுராணம் உரை | 0 | 10 | 0 |
| நந்தனார்சரித்திரகீர்த்தனை லெத்தகிராப் படத்துடன் | 0 | 8 | 0 |
| மணிமேகலை | 0 | 8 | 0 |
| ஞானவாசிட்டவசனம் | 1 | 8 | 0 |
| சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் திருவருட்பா | 2 | 8 | 0 |

இவைதவிரத் தங்களுக்குவேண்டும் பலவித புத்தகங்களும் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரைரூபாய் தொகைக்குக் குறைந்த புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பமுடியாது. அரையணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒருகேட்லாக்கு இனமாக அனுப்பப்படும். மற்றவிஷயங்கள் கேட்லாக்கில் கவனித்துப்பார்க்கும்படி கோருகிறேன்.

☞ கொ. லோகநாதமுதலியார்.
மநோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,
நெ-29, வைத்தியநாதமுதலிவீதி, சென்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.
சைவ-எல்லப்பநாவலரவர்களியற்றிய

# அருணாசலபுராணம்

## மூலமும்,

மழவை - மகாலிங்கையரவர்களால்
செய்யப்பட்ட வுரையும்,
திருவண்ணாமலைத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், க்ஷேத்திர வெண்பா, குருநமசிவாயர் சரித்திரம், அண்ணாமலை வெண்பா, அருணகிரியந்தாதி, திருவருணைத் தனிவெண்பா, தீபதரிசனச் சரித்திரச்சுருக்கம், அருணாசலபுராணத்தின் சுருக்கசங்கிரகம் படத்துடன், திருவருணையந்தாதி, திருவருணைக் கலம்பகம், சோணசைலமாலை, சாரப்பிரபந்தம், அண்ணாமலைச் சதகம், கார்த்திகைதீப வெண்பா, சோணாசல வெண்பா, சோணாசலதசகம், திருவருணைக்கலி வெண்பா, திருவருட்பதிகம், அருணாசலீசர் பதிகம், அருணாசலேஸ்வரர்பதிகம், உண்ணாமலையம்மன்பதிக முதலாகிய
தோத்திரப்
பிரபந்தத்திரட்டும்,
16 - ஜதிக சித்திரப்படங்களுடன்.

சென்னை:
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

Copy-right Registered.
1902.

# விளம்பரம்.

ஈதனால் யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில்:—இவ்வருணாசலபுராணத்தை இதுகாறும் [illegible] யாவாகிய சைவ - எல்லப்ப நாவலர்வாக்கை மாற்றியும் சொன்னயம் பொருணயம் வேறுபட்டுச் சிதைந்துக் கிடைப்பதைக் கவனிக்காமலும் அநேகர் அச்சிட்டுவிற்று வந்தனர்கள். இப்புராணத்தைச் சிலவித்வான்களைக்கொண்டு நன் காராய்ச்சிசெய்வித்து ஒவ்வொரு சருக்கத்தின் முதலில் அச்சருக்கத்தின் கருத்தைக் கத்தியரூபமாகச் சுருக்கியெழுதியும், திருவண்ணாமலைத்தலத்தின் தேவாரம் திருப்புகழ் முதலிய தோத்திரங்களைத் திரட்டியும் சுத்தபிரதியாக தனமானகாயிதத்தில் அச்சிட்டு வெளியிடத் துணிந்தேன். யான் இதன்விஷயமாக வெடுத்துக்கொண்ட சிரமம் இதைக் கண்ணுறுங் கல்விமான்களுக்கும் ஏனையோருக்கும் புலப்படாமற் போகாதென்பது திண்ணம்.

| | |
|---|---|
| அருணாசலபுராணம்முதலிய தோத்திரப் பிரபந்தத்திரட்டு ரப்கடிதம் அப்பவுண்டு. | 0 8 0 |
| ஷை கிளேஸ்கடிதம் புல் காலிக்கோகட்டடம். | 0 12 0 |
| ஷை தனமான கிளேஸ்கடிதம். | 1 0 0 |

இப்படிக்கு,

☞ கோனூர் - லோகநாதமுதலியார்,

மனோன்மணிவிலாசம் பிரஸ்,

நெ-29, வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.

**NOTE**:— This MANMIAM Comprising of ARUNACHELLA PURANAM and ARUNACHELLESWARAR THOTHIRA PRABANTHATHIRATTU is registered and copy right reserved under Act XX of 1847.

Any person or body of persons publishing or reprinting this book without my permission will not only subject themselves to the penalty imposed by the Act, but also they will be liable to pay the loss that I will incur by so doing.

Madras, 1902. } K. L.



1.—தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள்முதலிய யாவர்களும் புடைசூழ உமாமகேஸ்வரி சமேதராய் பரமசிவன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-கைலயங்கிரி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையில்

# திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகம்.

சுவாமிபெயர்—அருணசலேசுரர்.

தேவிபெயர்—உண்ணாமுலையம்மை.

பண்-நட்டபாடை. (முதற்றிருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (௧)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (௨)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (௩)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
குழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (௪)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருக்கால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (௫)

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைமேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (௬)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௭)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ணிறந்தான்முரியநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (௮)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றூடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. (௯)



தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. (௧௦)

† அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவண்ணாமலையில்

## திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

## திருநேரிசை. (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே. (௧)

பண்டனைவென்றவின்சொற்பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
வண்டனேயமரர்கோவேயணியணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமாசொல்லிலேனே. ( )

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைப்பிறப்புவீடாய்நின்றவெம்பெருமான்மிக்க
மருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான்மற்றொருமாடிலேனே. (௩)

யெம்பொனேபவளக்குன்றேபரமனேபால்வெண்ணீறாய்
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேமிக்க
வம்பொனேகொழித்துவீழுமணியண்ணாமலையுளானே
யென்பொனேயுன்னையல்லாலேதுநானினைவிலேனே. (௪)

பிறையணிமுடியினானேபிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டார்கொன்றையாய்வாமதேவா
வறைகழலமரரேத்துமணியண்ணாமலையுளானே
யிறைவனேயுன்னையல்லாலியாதுநானினைவிலேனே. (௫)

புரிசடைமுடியின்மேலோர்பொருபுனற்கங்கைவைத்து
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா
வரிகுலமலிந்தவண்ணாமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய்பாதநான்மறப்பிலேனே. (௬)

இரவியுமதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்று
முரகமார்பவனமெட்டுந்திசையொளியுருவமானா
யரவுமிழ்மணிகொள்சோதியணியண்ணாமலையுளானே
பரவுநின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. (௭)

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தா
யார்த்துவந்தீண்டுகொண்டலணியண்ணாமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. (௮)

பாலுநெய்முதலாய்மிக்கபசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்று
யாலுநீர்கொண்டல்பூகமணியண்ணாமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. (௯)



இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்கவொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

இதுவுமது.

## திருக்குறுந்தொகை. (௫-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வட்டனைமதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை
யிட்டனையிகழ்ந்தார்புரமூன்றையு
மட்டனையடியேன்மறந்துய்வனோ. (௧)

வானனைமதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
யேனனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வானனையடியேன்மறந்துய்வனோ. (௨)

மத்தனைமதயானையுரித்தவெஞ்
சித்தனைத்திருவண்ணாமலையனை
முத்தனைமுனிந்தார்புரமூன்றெய்த
வத்தனையடியேன்மறந்துய்வனோ. (௩)

காற்றனைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றனைத்திருவண்ணாமலையனைக்
கூற்றனைக்கொடியார்புரமூன்றெய்த
வாற்றனையடியேன்மறந்துய்வனோ. (௪)

மின்னனைவினைதீர்த்தென்னையாட்கொண்ட
தென்னனைத்திருவண்ணாமலையனை
யென்னனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வன்னனையடியேன்மறந்துய்வனே. (௫)

மன்றனைமதியாதவன்வேள்விமேற்
சென்றனைத்திருவண்ணாமலையனை
வென்றனைவெகுண்டார்புரமூன்றையுங்
கொன்றனைக்கொடியேன்மறந்துய்வனே. (௬)

வீரனைவிடமுண்டனைவிண்ணவர்
தீரனைத்திருவண்ணாமலையனை
யூரனையுணரார்புரமூன்றெய்த
வாரனையடியேன்மறந்துய்வனே. (௭)

கருவினைக்கடல்வாய்விடமுண்டவெந்
திருவினைத்திருவண்ணாமலையனை
யுருவினையுணரார்புரமூன்றெய்த
வருவினையடியேன்மறந்துய்வனே. (௮)

அருத்தனையரவைந்தலைநாகத்தைத்
திருத்தனைத்திருவண்ணாமலையனைக்
கருத்தனைக்கடியார்புரமூன்றெய்த
வருத்தனையடியேன்மறந்துய்வனே. (௯)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
யிரக்கமாயென்னுடலுறுநோய்களைத்
துரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---



இதுவுமது.

திருக்குறுந்தொகை. (௫-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந்தேறிப்பலவில
மிட்டமாகவிரந்துண்டுழிதரு
மட்டமூர்த்தியண்ணாமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. (௧)

பெற்றமேறுவர்பெய்பலிக்கென்றவர்
சுற்றமாயிருதொல்புகழாளொடு
மற்றந்தீர்க்குமண்ணாமலைகைதொழ
நற்றவத்தொடுஞானத்திருப்பரே. (௨)

பல்லிலோடுகையேந்திப்பலவில
மொல்லைசென்றணங்கல்கவர்வாரல்
ரல்லதீர்க்குமண்ணாமலைகைதொழ
நல்லவாயினநம்மையடையுமே. (௩)

பாடிச்சென்றுபலிக்கென்றுநின்றவ
ரோடிப்போயினர்செய்வதொன்றென்கொலோ
வாடிப்பாடியண்ணாமலைகைதொழ
வோடிப்போகுநம்மேலைவினைகளே. (௪)

தேடிச்சென்றுதிருந்தடியேத்துமி
னாடிவந்தவர்நம்மையுமாட்கொள்வ
ராடிப்பாடியண்ணாமலைகைதொழ
வோடிப்போகுநமதுள்ளவினைகளே. (௫)

கட்டியொக்குங்கரும்பினிடைத்துணி
வெட்டிவீணைகள்பாமெல்விர்தனை

ராட்டமூர்த்தியண்ணாமலைமேவிய
நட்டமாடியைநண்ணநன்காகுமே. (௬)

கோணிக்கொண்டையர்வேடமுன்கொண்டவர்
பாணிநட்டங்களாடும்பரமனா
ராணிப்பொன்னனண்ணாமலைகைதொழப்
பேணிநின்றபெருவினைபோகுமே. (௭)

கண்டந்தான்கறுத்தான்காலனாருயிர்
பண்டுகொல்கொடியாய்ந்தபரமனா
ரண்டத்தோங்குமண்ணாமலைகைதொழ
விண்டுபோகுநம்மேலைவினைகளே. (௮)

முந்திச்சென்றுமுப்போதும்வணங்குமி
னந்திவாயொளியானண்ணாமலை
சிந்தியாவெழுவார்வினைதீர்த்திடுங்
கந்தமாமலர்சூடுங்கருத்தனே. (௯)

மறையினொன்மொழியாலவன்காண்கிலா
நிறையுநீர்மையுனின்றருள்செய்தவ
னுறையுமாண்பினண்ணாமலைகைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

திருவாதவூர், மாணிக்கவாசக சுவாமிகள்

திருவண்ணாமலையில் அருளிச்செய்த

# திருவெம்பாவை.

[சத்திவியந்தது.]

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (௧)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். (௨)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். (௩)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (௪)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (௫)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே



போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். (௬)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா வென்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (௭)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (௮)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்

மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
  சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
  லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (௯)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
  போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
  வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
  கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
  ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (௧௦)

மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே ரென்னக்
  கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
  செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
  வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
  மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (௧௧)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
  தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
  காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
  ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்



பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
  மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
  லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
  லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
  சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
  பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௩)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
  கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
  வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
  யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
  பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (௧௪)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
  சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
  பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
  மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
  யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௫)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (௧௬)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௭)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். ()

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா



லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பக லெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். (௧௯)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (௨௦)

திருச்சிற்றம்பலம்.

இஃதுமது

௸ சுவாமிகள்

திருவண்ணாமலையிலருளிச்செய்த

# திருவம்மானை.

## ஆனந்தக்களிப்பு.

[ஒப்புமைபற்றிவந்த வாறடித்தரவு கொச்சகக்கலிப்பா.]

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி

யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையா
னங்கண னந்தணனா யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௧)

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தா
ராராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந் துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௨)

இந்திரனு மாலயனு மேனோரும் வானோரு
மந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
யெந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௩)

வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந்து ரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௪)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்



தில்லைநகர் புக்குச் சிற்றம் பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௫)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான் கொண்டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய். (௬)

ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௭)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். (௮)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்டபுரி நூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்ற
னண்டமுத லாயினா னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளு
மண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய். (௯)

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
வண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (க0)

செப்பார் முலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
றப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினா
னப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
வப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கு
மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய். (கக)

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனு
மெப்பிறவி யுந்தேட வென்னையுந்தன் னின்னருளா
லிப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறா
யெப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகு
மப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய். (கஉ)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
யையா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய். (கங)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவரா
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை



ஊனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (கச)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினி
லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். (கரு)

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ரானா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய். (கசு)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
யாடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். (கஎ)

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளா

வெள்ளிவந்தெ ழுள்ளத்தி ருள்ளே யொளிதிகழ
வள்ளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௮)

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
யென்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
யன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௯)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௨௦)

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீமத்-சுப்பிரமணியக் கடவுள் வரப்பிரசாதியாய்த்
திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த
அருணகிரிநாதர் அருளிச்செய்த

# திருப்புகழ்.

தனனாதனனத் தனனாதனனத்
தனனாதனனத்—தனதான.

அருமாமதனைப் பொருவாள் கயல்குத்
தயிலார்நயனக் கொடியார்தம்
அழகார்தனநற் புழுகார்சயிலத்
தணையாவலிகெட் டிழல்தாழ



இருமாமடைபுக் குரைபோயுணர்வற்
றிளையாதவுளமுட் குயிர்சோர
எரிவாய்நரகிற் புகுதாதபடிக்
கிருபாதமெனக் கருள்வாயே
ஒருமால்வரையட் டிருகூறிடவுற்
றொருவேறனைவிட் டெறிவோனே
உறமான்மறவக் குறமாமகளுக்
குருகாவிருபொற் புயவீரா
திருமால்கமலப் பிரமாவிழியிற்
றெரியாதவனுக் கரியோனே
செழுநீர்வயல்சுற் றருணைபுரியிற்
றிருவீதியினிற் பெருமானே.

---

தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த—தனதான.

தோத கப்பெ ரும்ப யோத ரத்தி யங்கு
தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே
சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று
சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாதே
பாத கச்ச மன்றன் மேதி யிற்பு குந்து
பாசம் விட் டெறிந்து பிடியாதே
பாவ லர்க்கி ரங்கி நாவி னுக்கி சைந்த
பாட லின்க செஞ்சொ றரவேணும்
வேத மிக்க விந்து நாத மெய்க் கடம்ப
வீர பத்ர கந்த முருகோனே
மேரு வைப்பி ளந்து சூர னைக்க டிந்து
வேலை யிற்று ளைந்த கதிர்வேல

கோதை பொற்கு றிஞ்சி மாது கச்ச ணிந்த
கோம ளக்கு ரும்பை புணர்வோனே
கோல முற்று யர்ந்த சோண வெற்பி லங்கு
கோபு ரத்த மர்ந்த பெருமாளே.

---

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித் தேனெனை செயலொழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் பெறுமாறு
கருதுபுத் ராவெனப் புதல்வராப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலையீதே
பயில்குலத் தாரழப் பழையபட் டாரழப்
பறைகள்கொட் டாவரச் சமனாரும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாளடையைத் தரவேணும்
அயிலிடைச் சேவல்கைப் பரிதாத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே
யமரரத் தாசிறைக் குமரிகட் பாகனைத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலிளைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடெகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே.

---



தான்தன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆறுமயில் போலொத்த தோகையர்க ளோமெத்த
வாரவட மேலிட்ட முலையீதே
யானதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்கு
மானமடை யாரிக்கு மொழியார்பால்
மாலொடவர் போகத்தி லேகுலவி யேநித்தம்
வாடுமெனை நீசித்த மகிழ்வாகி
மாகமுக டாருக்ர வேகமயி லேயுற்று
வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுக வேதற்கு மாலிலையில் மாயற்கு
நாடவரி யார்பெற்ற வொருபாலா
நாகமுடி மீதுற்ற ஞானமதி லேபத்தர்
ஞானமுனி வோர்கட்கு மிறையோனே
வேலைவிழி வேடிச்சி யோடுமரர் மாதொக்க
வீறருணை மால்வெற்பி லுறைவோனே
வீரமுட னேயுற்ற சூர்கிளை வீழ்விக்க
வேலையிக வேவிட்ட பெருமாளே.

---

தானதன தானத் தானதன தானத்
தானதன தானத்—தந்ததான.

ஆலவிழி சீலத் தாலதர பானத்
தாலளக பாரக் கொண்டலாலே
யாரநகை யால்விற் போலுநுதலால்வித்
தாரநடை யால்வற் கொங்கையாலே
சாலமய லாகிக் காலதிரிகுலைத்
தாவிறுரு பாசத் தும்பினாலே

தாழ்விதுயர்பாழ்பட் டேழ்வினைவிடாமற்
  சாகுமுனிநேவற் — கொண்டிடாதே
சோலைதருகானிற் கோலமறமானைத்
  தோளிலுறவாக் — கொண்டவாழ்வே
சோதிமுருகாதித் தாபமுயர்ஞானச்
  சோணகிரிவீதிக் — கந்தவேலே
பாலககலாபக் கோமளமயூரப்
  பாகவுமைபாகத் — தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர்தூவிப்
  பாடுமவர்தோழத் — தம்பிரானே.

---

தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
  முழுமதிநி லாவினிற்கும் — வசையாலும்
மொழியுமட மாதருக்கு ளினியதனி வேயிசைக்கு
  முதியமத ராசனுக்கு — மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியகு ராமிரைத்த
  புதுமையினி லாறிரட்டி — புயமீதே
புணரும்வகை தானினைத்த துணரும்வகை நீலசித்ர
  பொருமயிலி லேறிநித்தம் — வரவேணும்
எழுமகர வாழிசுற்று பொழிலருணை மாநகர்க்கு
  ளெழுதரிய கோபுரத்தி — லுறைவோனே
யிடைதுவள வேடிச்சி பவளவித ழேதுடிப்ப
  விள்முலைவி டாதசித்ர — மணிமார்பா
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த
  சிவனைமுத லோதுவித்த — குருநாதா



திசைமுகன்மு ராரிமற்று மரியபல தேவருற்ற
  சிறையடையமீள விட்ட — பெருமாளே.

---

தனன தனதன தனன தனதன
தனன தனதன—தனதான.

இறுகு மணிமுலை மருவு தாளமு
  மெரியு மெழுமதி — நிலவாலே
யிரவி லெனதுயிர் கவர வருகுயி
  லிசையு முறுகட — லலையாலே
சருக ணதிபதி மதனன் விடுகொடு
  சரமு மினியெனை — யணுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
  சயில மிசையினில் — வரவேணும்
முறுகு திரிபுர மறுகு கனலெழ
  முறுவ லுடையவர் — குருநாதா
முடிய கொடுமுடி யசுரர் பொடிபட
  முடுகு மரகத — மயில்வீரா
குறவர் மடமக ளமிர்த கனதன
  குவடு படிமொரு — திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
  குறுக விடவல — பெருமாளே.

---

தனனதத் தத்தத் தனத்தத் தனதன
தனனதத் தத்தத் தனத்தத் தனதன
தனனதத் தத்தத் தனத்தத் தனதன—தனதான.

கமலமொட் டைக்கட் டழித்துக் குமிழியை
  நிலைகுலைத் துப்பொற் குடத்தைத் தமனிய
  கலசவர்க் கத்தைத் தகர்த்துத் தலையற — விளைநீரைக்

கறுவிலட் டடைப்பிற் றூரத்திப் பொருதவ
சயம்வினைத் துச்செப் படிப்பித் தலவிய
கரியருப் பைப்புக் கொடித்துத் திறன்மத — னபிஷேக

அமலர்கெற் றிக்கட் டழற்குட் பொடிசெய்து
வதிகசக் ரப்புட் பறக்கக் கொடுமையி
னடனமிட் டச்சப் படுத்திச் சபதமோ — டிருதா

மறைதல்கற் பித்துப் பொருப்பைக் குலவிய
சிறகறுப் பித்துக் கதித்துப் புடைபடு
மயிரவச் சித்ரத் தனத்துத் திருடிக — ஞறவாமே

தமரமிக் குற்றுக் கலக்கப் பலபறை
தொகுதொகுத் தொக்குத் தொகுக்கத் தொகுதொகு
த்ரிகிடதத் தத்தத் தரிக்கத் தரிகிட — வெனமொழி

சடவுடற் பக்கப் பழுத்துப் புகையெழு
விழிகளுட் செக்கச் சிவத்துக் குறளிகள்
தசைகள்பட் சித்துக் களித்துக் கழுகொடு — கழுகாட

அமரில்மெத் தக்கொக் கரித்துப் பொருதிடு
மசுரரத் தத்திற் குளித்துத் திமியென
வடிகடித் திட்டுக் கைகொட்டிச் சமர்செயு — மயிலாக

வழகுமிக் குச்சித் திரப்பொற் புரவியி
னுலவுகிர்த் தக்கொற் றசித்துக் குருபர
வருணையிற் சித்தத் தெனக்குத் தெளிவருள் — பெருமாளே

முற்றிற்று.

---

திருவண்ணாமலை க்ஷேத்திர வெண்பா.

வேதச் சிரத்தும் வியன்கயிலைத் தடத்து
மோதித் தெளிந்தார்த முள்ளத்தும்-நாதிக்கும்
தண்ணா ரமுதமழைத் தாழ்பொழில்சூழ் தென்னருணைக்
கண்ணா ரமுதன் கழல்.

---



சிவமயம்.

திருவண்ணாமலை

# குகைநமசிவாயர்

உபதேசம் பெற்று

## சிதம்பரம் திருப்பணிசெய்த

# குருநமசிவாயர் சரித்திரம்.

---

தலேச்சரமென்னுந் திருநாமம்பெற்றத் திருவண்ணாமலையில் நமசிவாயமூர்த்தி யென்றொருசித்தர் எழுந்தருளி இருந்தனர். அவர் மேற்படியூர் மலையின்மேற் குகைசெய்து கிஷ்டைபுரிந்து வந்ததால், குகைநமசிவாயமூர்த்தி யெனக் கூறப்பட்டனர். அவர் அக் குகை யின் சமீபத்தில் வளர்ந்தோங்கிநின்ற ஓர் ஆலாலவிருட்சத்தின்பே ரில்தூங்கும் ஊஞ்சலிட்டு, அதில் யோகநித்திரைக்கொள்வது வழக் கம். அவருக்கு நமசிவாயமூர்த்தியென்றொரு சிஷியரிருந்தனர். அவர் அருகேயிருந்து அதிபக்தி விசுவாசத்துடன் பணிவிடைசெய்துகொ ண்டிருக்கச்சே, ஒருநாள் குலுக்கென்று நகைத்தார்; நமசிவாயம்? என்னவதிசயங்கண்டு நகைத்தாயென்றுகேட்டார். உடல், பொருள், ஆவி மூன்றுந் தத்தஞ்செய்ய, அவைகளை யேற்றுக்கொண்டு அடி மையையாள விருப்புற்ற வெனதையனே!

திருவாரூரின்கண் தியாகராஜ சுவாமிகள் எழுந்தருளச்செய்து தெருவீதிவரச்சே, அப்ஸரப்பெண்களுக் கொப்பற்ற நடனமாட்டி யப்பெண்கள் ஆடிக்கொண்டுவர, அதிலொருதேவதாசி கால்தடுக்கி மல்லாந்து விழுந்தாள், அங்கு நின்றபேர்களெல்லாம் நகைத்தார் கள், அடிமையும் நகைத்தேன்; அஃதேதவிர மற்றொன்று மில்லை யென்றார்.

இதன்றிக், மற்றொருநாள் வஸ்திரத்தைப்பிடித்துத்தேய்த்தார், அஃதேதுக்காகத் தேய்த்தது என்று துகைநமசிவாயமூர்த்தி கேட்க; சிதம்பரத்திலே கனகசபைக்குக் கறுப்புத்திரை போட்டிருந்தது, அதற்கருகே குத்துவிளக்கிலே நெய்விட்டுத்திரிபோட்டெரிய, அஃதை ஓரெலி இழுத்துக்கொண்டுபோகச்சே, அத்திரை பற்றிக்கொண்டது, அவ்விருந்தபேர் அதைத் தேய்த்தார்கள்; அடியேனும் மென்மேலும் எரியாவண்ணம் தேய்த்தேன் சுவாமி யென்றார்.

பின்பொருநாள், துகைநமசிவாயமூர்த்தி சிவகாரணார்த்த சோதனை நிமித்தம் வாந்திசெய்து, அதை திருவோட்டிற்பிடித்து இதை மனிதர் அடிபடாத இடத்திற் கொண்டுபோய்விடென்று கட்டளையிட்டனர்; அதை நமசிவாயர் மனிதர் சஞ்சரிக்கப்படாத விடமெதுவெனவறிந்து தானேவாங்கி உட்கொண்டனர்.

ஆசாரியர் இவ்வற்புதச் செய்கையையறிந்து சிஷ்யனைப்பார்த்து அப்பா நமசிவாயம்; அடிபடாதவிடத்தில் வைத்தாயாவென்று கேட்டார்; சிஷ்யர் வைகுந் தானத்தில் வைத்தேனென்று தலைவணங்கிக் கூறினர். அதற்குமேல் இந்தமூன்று அதிசயமும்பார்த்து, நமக்குமேல் சிஷ்யனுக்கு வர வர ஞான உதயம் அதிகமாயிருது இவ்விடத்தில் வைத்திருக்கக்கூடாது இன்னும் ஓர் அதிசயம்பார்த்து சிஷ்யனை அதற்கேற்ற இடத்துக்கனுப்ப வேண்டுமென்று ஆலோசனைசெய்து, ஒருவெண்பாவிலரை வெண்பா எடுத்துக் துகைநமசிவாயமூர்த்தி கூறினர்; அதுவருமாறு:—

வெண்பா.

ஆல்பழுத்துப் பக்ஷியினுக் காகாரமானதென
வேல்பழுத்து நின்றதிலே வீணிலென—

என்றனர்—அருகே இருந்தசிஷ்யர் என் சுவாமி! குறைவெண்பாவையு முடிக்கலாமே என்றுசொன்னார்; ஆசாரியர், அப்பா நம



சிவாயம்! குறைவெண்பாவும் நீமுடிக்கலாமே என்று சொன்னார் சிஷ்யர் சுவாமி! குருவாக்குக் கெதிர்வாக்கடியேன் சொல்லக் கூடாது; இது சிஷ்யனுக் கடுத்ததல்லவே என்று சொன்னார். நீ ஞானப் பிள்ளையானபடியினாலே சும்மா சொல்லுமென்று குருவாக்கு வந்தது; நமசிவாயர் அதைச்சிரசாய்வகித்து அக்குறை வெண்பாவையு முடித்தனர்; அஃதெப்படியென்னில்:—

—சாலவனம்

செய்யா வருத்தருடன் சேர்ந்து மிருப்பீரோ
ஐயா நமச்சிவாயா.

என்று முடித்தார்.

அதற்குமேல் துகைநமசிவாயமூர்த்தி யோக நித்திரைசெய்யும் மஞ்சம்விட்டிறங்கி, அப்பா என் இருகண்மணியே! இன்றல்லோ நீ மெய்ஞ்ஞானத்தை யடைந்தாய்! ஆச்சரியம்! ஆச்சரியம்! உன்னைப்போல் சிஷ்யன் யாருக்குக்கிடைப்பான்! ஆகையால் இன்றுதொட்டு நீ குருநமசிவாயமூர்த்தி எனத் திருநாமம் பெறப்பட்டாய் என்றுதழுவிக்கொண்டு, ஒருகம்பத்திலே இரண்டுயானை கட்டக்கூடாது; இதுவோ போகஸ்தலம், அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தாராநின்ற அம்பலவாணர் எழுந்தருளியிருக்கும் திவ்விய க்ஷேத்திரமாகிய சிதம்பரம் என்றொருஸ்தலம் ஒன்றுளது; அந்தஸ்தலம் உம்மால் இன்னும் திருப்பணிமுதலிய காரியங்கள் நடக்கவேண்டியிருப்பதால், அங்கேபோய்ச் சேருமென்று கட்டளையிட்டனர். சிஷ்யர், சுவாமி! அடியேன் குருதரிசனம் செய்துகொண்டு இவ்விடம் குருபாதம் சேவனையல்லாமல், வேறொரு ஸ்தலத்திற்குப் போவதில்லை என்றும், பின்னும் அடியேன் நித்தியம் குருதரிசனையில்லாமல் இருப்பதில்லையென்றுங் கூறினர். துகைநமசிவாயர் நீர்சிதம்பரம்போய் கனகசபையை தரிசனஞ்செய், அங்கேநம்மைப்போல் தரிசனங்கொடுத்தாலிருந்;

அல்லாவிடில் இவ்விடம் வந்துவிடும் என்றுசொல்ல; சிஷ்யர் நல்லபுத்திதந்தீர் என்று குருவுக்குத் தோத்திரம்செய்த விபரம்.

விருத்தம்.

வாக்காலே தியானத்தாலே மனமகிழ் கிருபையாலே
நோக்காலே பரிசத்தாலே நுண்ணிய பிறவிதீர்க்கும்
தாக்கான நமசிவாயம் சலக்கமெய் யாகின்ற
நாற்காலி காலதானால் நான்முத்திப் பெறலுமாமே.

என்றித்தப்பிரகாரம் அடிமைக்கிரமமாய்ப் பத்துப்பாடல் தோத்திரம் செய்தனர். "நடக்கலாம்" என்று குருவாக்குவந்தது.

உடனே குருநமசிவாயர் ஏகாங்கியாய் சாயங்காலம் புறப்பட்டுக் கிழக்குநோக்கிக் காதவழிவந்தார், இருட்டிப்போயிற்று; அவ்விடத்தில் ஒரு இடம்பார்த்து ஓர்விருக்ஷத்தின்கீழே நிஷ்டையிலிருந்தார். ஒரு ஜாமத்திற்குமேல் பசிப்பிணியால் நொந்து அப்போது உண்ணாமுலையம்மனை நோக்கி ஒரு வெண்பா இயற்றினர்.

வெண்பா.

அண்ணா மலையார் அகத்துக் கினியாளே
உண்ணா முலையே உமையாளே—நண்ணா
நினைதோறும் போற்றிசெய நின்னடியர் உண்ண
மனைதோறும் சோறுகொண்டு வா.

இவ்வெண்பா இயற்றிய சமயத்தில், அண்ணாமலையாருக்குச் சர்க்கரைப்பொங்கல்செய்து, பொற்றாம்பாளத்தில்வைத்து, நைவேதித்துக் கோவிலிலே வைத்துத் திருக்காப்பிட்டு அர்ச்சகர்முதலியோர் மறந்துபோய் அவரவர் வீடுவந்து சேர்ந்தார்கள். பின்புஅதை யறிந்த உண்ணாமுலைத்தாயார் கொண்டுவந்து குருநமசிவாயமூர்த்திக்



குக் கொடுத்துவிட்டுக் கோயிலுக்குட்போய்விட்டாள். விடிந்தபின் அர்ச்சகர் முதலானவர்கள் கோவிலுக்குவந்து கதவைத்திறந்து பொற்றாம்பாளத்தைப் பார்த்தார்கள்; பொற்றாம்பாளம் எங்குங்காணோம்! யாரோ கள்வன்வந்து கொண்டுபோய்விட்டானென்று கோவிற்குருக்கள் முதலானோரும், பட்டணத்திலுண்டானவர்களும், இதென்ன அதிசயமோ! தெரியவில்லையென்று அவரவர் ஆலோசனை செய்கதில், கோவிலுக்கு இருபதுநாழிகை மட்டும் பூசையில்லாமல் இருந்துவிட்டது; அப்போது ஒரு பிராமணப் பிள்ளையின்பேரில் ஆவேசம்வந்து குருநமசிவாயமூர்த்தி சிதம்பரத் தலத்துக்குபோகிற வழியிலே ஆலவிருக்ஷத்தின்கீழே இருக்கிறார்; அவருக்கு அமுது கொண்டுபோய் அம்மன்கொடுத்தாள், அங்கே தாம்பாளங்கிடக்கிறது, எடுத்துக்கொண்டு வாருங்களென்றுசொன்னார்; அதைக்கேட்டு ஆச்சரியமுற்று அணியண்ணாமலையாரையும் உண்ணாமுலையம்மனையுந் தோத்திரஞ்செய்து, அதற்குமேல் குருக்கள்முதலிய யாவரும் அவ்விடம்சென்று தாம்பாளத்தைக்கண்டு எடுத்துக்கொண்டு அருணாசலப்பதிக்கு வந்துவிட்டார்கள்.

பிறகு மறுநா அருணோதயத்தில் குருநமசிவாயமூர்த்தி யெழுந்து நித்திய கடனைமுடித்துக் குருவைத்துதிசெய்துகிழக்குநோக்கி வரும்வழியில் இருஷிவர்த்தனம் என்றொருதிவ்வியஸ்தலத்தைக்கண்டனர்; அத்தலத்தில் அம்மனும் சுவாமியும் அர்த்தபாகம் பிரியாமலிருக்கிறது; முனிவர்களுக்கரசனாகிய அகஸ்திய மகாமுனிவரால் பூசிக்கப்பட்டது; அங்கு ஐயாயிரங்கொண்டான் என்று திவ்வியதீர்த்தமுமுண்டு; அதில் ஸ்நானம்பண்ணி பூசைமுடித்து திரிகரணசுத்தியுடன் சுவாமியைத் துதித்துத் தரிசனஞ் செய்துகொண்டபிறகு, தீர்த்தக்கரையில் நிஷ்டையிலிருக்கச்சே பசிநோய்வந்தனாக, அப்போதியற்றிய:—

வெண்பா.

தாயிருக்கப் பிள்ளை தளர்ந்திடுமோ தாரணியில்
நீயிருக்க யான்றளர நீதியோ—வேயிருக்கும்
தோளியே விண்ணோர் துதிக்கும் திருமுத்து
வாளியே சோறுகொண்டு வா.

இவ்வாறு சொன்னமாத்திரத்தில் அம்மன் செவியில் அம்மு றைக்கேட்ட வளவில் வந்து என்னப்பா! நான் அர்த்தபாகம் பிரி யாமலிருக்கச்சே நீ பிரித்துப் பாடினது சரியா? இப்போது உன் வாக்கினாலேசேர்த்துப் பாடவேண்டுமென்றகூற, அவ்வாறே குரு நமசிவாயமூர்த்தி சேர்த்துப்பாடிய:—

வெண்பா.

மின்னும் படிவந்த மேவுகல நீசருடன்
மன்னுந் திருமுத்து வாளியே—பொன்னின்
மலையாளே தாயேயென் கன்மனத்தே நின்ற
மலையாளே சோறுகொண்டு வா.

என்று இவ்வெண்பா சொன்னவுடனே, அம்மன் அமுதுகொ ண்டுவந்து கொடுத்தாள்; அதை யுட்கொண்டு அங்குநின்று புறப் பட்டு விருத்தசைலம் வந்து மணிமுத்தாநதியிலே ஸ்நானம்செய்து, பழமலைநாதரையும் பெரியநாயகியம்மனையும் தரிசித்து, ஒருகுளக்க ரையில் கிடந்தையிலிருக்கச்சே பசிவந்தது; அப்போதுசொல்லிய:—

வெண்பா.

நன்றிபுனை யும்பெரிய நாயகியெ னுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பா லிடக்கிழத்தி—நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.



இவ்வெண்பா சொன்னவுடனே, அம்மன் தன்னேறிக்கொண்டு விருத்தாம்பிகையாய்வந்து குருநமசிவாயமூர்த்தியைப் பார்த்து என் னப்பா! உன்னுடையவாக்கினாலே என்னைக் கிழத்திகிழத்தி என்று பாடுதல்லமா! கிழவிக்கு நடக்கத்தன்னுமா! ஜலமெடுக்கத் தன்னு மா! அமுதுகொண்டு வரத்தன்னுமா! என்றுசொல்ல, குருநமசி வாயமூர்த்தி அம்மா! பாலகாசியிற் பாலாம்பிகை, இது விருத்த காசி, நீரும் பெரியநாயகி, உம்முடைய சுவாமியும் பழமலைநாதர், அதற்காக நான் அப்படிச் சொன்னேனென்றுசொன்னார்; அம்மன் உன்னுடைய வாக்கினாலே இளமையாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க, குருநமசிவாயர் இரண்டு அம்மன் ஆகிரதே என்றுசொல்ல, அம்மன் ஆனால் ஆகட்டும், இளமையாய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்! அதற்குமேற்சொன்ன:—

வெண்பா.

முத்தநதி சூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே—அத்த
ரிடத்தாளே மூவா முலைமே லாரா
வடத்தாளே சோறுகொண்டு வா.

இவ்வெண்பா சொன்னவுடனே, அம்மன் வாலாம்பிகையாய்ச் சோறுகொண்டுவந்து கொடுத்தாள்; அதை உட்கொண்டு அதற்கு மேல் நடந்து புவனகிரிக்குவந்து நாலுகோபுரமும் தரிசனைசெய்து சொல்லிய:—

வெண்பா.

கோபுரங்க ணான்கினையும் கண்டமட்டிற் குற்றமெலாம்
தீபாந்த பஞ்சதுபோற் சென்றதே—நூபுரங்கள்
ஆர்க்கின்ற செஞ்சரண வம்பலவா நின்பாதம்
பார்க்கின்றார்க் கென்றோ பலன்.

இவ்வெண்பா கூறிக்கொண்டே சிதம்பரம் வந்து கோவிலிலே பேரிச் சிவகங்கா ஸ்நானஞ்செய்து சொல்லிய:—

வெண்பா.

கண்டமட்டில் கண்டவினைச் சுத்தம்போம் கைலைவள்ளி
கொண்டமட்டில் கொண்டவினை கொள்ளைபோம்—வண்டமி
வாயார வேபுகழும் வண்ணச் சிவகாமித் [ழ்சேர்
தாயார் திருமஞ்ச னம்.

இவ்வெண்பாசொன்னவுடனே கனகசபைக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்யும்போது, சபாநாதர் மலையின்பேரி லிருந்த குகை நமச்சிவாயரைப்போலவே தரிசனங்கொடுத்தார்; அப்போது தோத்திரஞ்செய்த:—

விருத்தம்.

திருவணா மலையிற் குகைநம சிவாய
தேசிக வடிவமா யிருந்து
காவலு மடியேன் சென்னிமே லுனது
கழலிணை வைத்தவா றறியேன்
விரகனா ரியரைப் புதல்வரைப் பொருளை
வேண்டிய வேண்டிய தனைத்தும்
பிரவினர்ப் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
பலவனே பரமரா சியனே.

என்று இந்தப்படி நூறுபாடல் ஒருநாழிகையில் நின்றபடியே பாடித் தோத்திரஞ்செய்துகொண்டு, அதற்குமேல் ஒரு அறையில் நிஷ்டையிலிருந்தனர்; அப்போது தில்லைமூவாயிரவரிலே மூன்று பேர் குருக்கள்மார் பல்லக்கு ஏறுகிறவர்கள்; அவர்கள்பேர் சிவமுந்



தர், ஜடாமுந்தர், மதாமுந்தர், அம்மூவரிடம் சபாநாயகர் சென்று திருவண்ணாமலையி லிருந்து, ஒரு பரதேசி மகாபெரியவர் வந்திருக் கின்றனர்; அவர்யோகத்திலே அதிகமாயிருப்பவர்; அவருக்குத் தனித்து இடங்கொடுக்கவேணும்; அவராலே நமக்கு அநேகதிருப் பணிகளாகக் காத்திருக்கின்றன; அதற்கெங்கே இடம் என்றால் நம்முடைய கோவிலுக்கு வடபுறத்தின் எல்லைக்கப்புறம் இடமிருக் கிறது; அங்கே நாம்போய் இரண்டுதரம் பாதம்வைத்திருக்கிறோம். அஃது எதற்காகவெனில், மாணிக்கவாசகருக்குத் திருவாசகம் எழு துவதற்காகவும், உபமன்னியருக்குத் திருப்பாற்கடல் அழைப்பித் துக் கொடுப்பதற்காகவும் போயிருந்தோம்; அவ்விடத்தில் இவரைக் கொண்டுபோய் விடுங்களென்று வாக்களித்தனர். அந்தப்படியே குருக்கள் மூவரும் குருநமசிவாயமூர்த்தியைக் கொண்டுபோய் அவ் விடத்தி லிருக்கச்செய்து, கோவிலுக்கு வந்துவிட்டார்கள். அதற்கு மேல் நிஷ்டையிலிருக்கச்சே பசிவந்தது. அப்போது சொல்லிய:—

வெண்பா.

ஊன்பயிலுங் காய முலாமல லுந்தனது [யிலும்
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன்—தேன்ப
சொல்லிய னல்லார் துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறுகொண்டு வா.

இவ்வெண்பா சொன்னவுடனே, சிவகாமியம்மன் அமுதுகொ ண்டுவந்து சொன்ன:—

வெண்பா.

அம்மன் வாக்கு

கொண்டுவந்தேன் சோறு குகைநமச்சி வாயநீ
தொண்ட ரடியார் சுகிக்கவே—பண்டுகந்த

அப்படியே கொள்ளப்போய் மறைந்து கோவிலுக்குப்போய் தில்லை மூவாயிரவரை யழைத்து நாம்போய் இட்டம்செய்து வந்திருக்கிறோம், நீங்களெல்லாருங்கூடி நமக்குண்டான விருதுகளையும் நாம் ஏறுகிற சிவிகையையும் எடுத்துக்கொண்டுபோய், அவரை அச்சிவிகையிலேற்றி விருதுகளுடன் வீதிப்பிரகாரம்செய்து நம்மிடத்திற்குக் கொண்டுவந்து விடுங்களென்று சொன்னார், அப்படியே தில்லை மூவாயிரவர் எடுத்துக்கொண்டுபோய் இனிமேலாவது வரலாமே! இந்தப்பல்லக்கின்பேரில் ஏறவேண்டுமென்று சொன்னார்கள் நமக்கேன்பல்லக்கு, தேவையில்லை யென்றுசொன்னார். இது பல்லக்கு அல்ல குருசிம்மாசனம் என்றார்கள். கூடாது என்றார், அதற்கு மேல் நேற்றுமத்தியானம் எங்கள் சுவாமி தங்களிடத்திற்கு வந்தாரே, நீங்களென்னசொன்னீர்கள் என்றார்கள். குருநமசிவாயர் திஷ்டையிலே பார்த்தார். சபாபதிதரிசனமாயிற்று. இவ்விடத்திற்கும் வந்து அங்குபோய் சொன்னாரென்று அப்போதுசொன்ன:—

வெண்பா.

சங்கமரா யம்பலவர் தாமே யெழுந்தருளி
இங்கெமக்குப் பிட்சை யிடுவென்ன—அங்கமுது
இட்டமுட னமக்கு நீதினமு மேசர்வ
கட்டளையுண் டாக்குகென்றார் காண்.

இவ்விதமாய்ச் சொல்லிக்கொண்டே பல்லக்கிலேறி வீதிப்பிரகாரம் போகச்சே சொன்ன:—

விருத்தம்.

அல்லலாகிய விருவினை தனையறுத் தடியிணை தருவாரோ
மல்லல்நீடிய புவியின்மேலின்னமும் வரும்பிறப்பறுப்பாரோ
நல்லமாமுலை மாதுமை நாயகர் ஞானிக நவின்றேத்தும்
தில்லைநாயக ரம்பலத் தாடிவர் திருவுளந் தெரியாதே.



இந்தப்பிரகாரஞ் சொல்லிக்கொண்டு கோவிலிலே போய்க் கொடிக்கம்பத்தருகே பல்லக்கிறக்கி பஞ்சாட்சரமதில்மட்டும் பாதக்குறடுபோட்டுக் கொண்டுபோய், அதற்குமேல் கனகசபையிற்சென்று ஸ்வாமிதரிசனம் செய்து, தில்லைமூவாயிரவரைப்பார்த்து இப்போதுநாம் என்ன கட்டளை நடப்பிக்கப்போமென்று யோசனைசெய்ய, சபாநாயகர் அசரீரிவாக்கியமாய் சர்வஜனத்துக்கும் சர்வகட்டளையென்று தொடும் என்று வாக்கியம் வந்தது. நாம்சர்வகட்டளையென்று தொடுவதற்கு இப்போது இந்தியாதிபேரும் பார்த்திருக்கச்சே சபாநாயகர் பிட்சைகொடுத்தால் எப்போதும் நடக்குமென்றுபொற்றும்பாளத்தை யேந்திச்சொல்லிய:—

வெண்பா.

காதலுடன் சர்வ கட்டளையாய் உன்னுடைய
பாதமலர்ப்பூசை பண்ணவே—யோது
குருவா யென்னையாண்டு கொண்டவனே பிட்சை
தருவாய் சிதம்பர நாதா.

இந்தப்பிரகாரம் சொன்னவுடனே, சபாநாயகர் முன் ஆகாசமார்க்கமாய் சகலஜனமும் பார்க்கத்தக்கதாக ஒரு தங்கக்காசு விழுந்தது. சுவாமியே பிட்சைகொடுத்தார் என்று சகலஜனமும் வராகன், ரூபாய், பணம், காசு அநேகமாய்ப் போட்டார்கள். குருநமசிவாயர் இதைத் தில்லைமூவாயிரவர் கையிற்கொடுத்து சிறிதுநடந்தார், சற்றுத்தாங்கிற்று; எதுதாங்குகிறதென்று மூவாயிரவரைக் கேட்டார், அது எங்களுக்குத் தெரியுமாவென்று சொன்னார்கள். குருநமசிவாயர் யோகத்திலே பார்த்து ஸ்வாமிக்கு ஆபரணங்க ளிருந்ததுண்டாவென்று கேட்டார். ஆபரணம் ஏதென்றுசொல்லி அதற்குமேல் ஆலோசனைசெய்து பதஞ்சலி வியாக்கிரபாதர் நடனம்பார்க்கச்சே, பாதச்சிலம்பும், கிண்கிணியும் இருந்ததுண்டென்பர், அது காணக்

வேண்டுமென்று சொன்னார்கள். குருநமசிவாயர் ஆடச்சொல்லுகிறது நாமா! நிறுத்தச்சொல்லுகிறது நாமா! என்று சொன்னார், சுவாமி தாளம் போடுகிறவர்கள் நிற்கவேண்டுமென்று சொன்னார்கள், அப்போது குருநமசிவாயமூர்த்தி சொன்ன:—

வெண்பா.

தூக்கியகால் நோகாதோ துஷ்டன் முயலகன்மேல்
தாக்கியகால் தானும் சலியாதோ—வாக்கா
தினவாதா தில்லைத் திருத்தாண்ட வாசீ
அனவரதங் கூத்தாடி னால்.

இவ்வெண்பா சொல்லியவுடனே, மெத்த நடனமாச்சுது, ஆச்சே, தில்லை மூவாயிரவர்கூடி சபாபதியின் பேரில் குருநமசிவாயமூர்த்தி தோத்திரம் செய்கிறாரே! நாம் அவர்பேரில் தோத்திரம்சொல்லுவோமென்று தோத்திரஞ்செய்த தில்லைமூவாயிரவர்:—

பாடல்.

வேட்டெனச்சில் மிகவிரும்பும் வேளைவன்றன் மேனிபொன்ற
ஆடனித்தங் காளியொடா டம்பலவர் சந்நிதிக்குக்
கோடிலக்ஷம் கவிபாடும் குருநமசி வாயருட்
பாடல்மெச்சி யம்பலவர் பாதகச்சை யாடியதே.

இந்தப்பிரகாரம் சொன்னவுடனே குருநமசிவாயமூர்த்தி சங்ணம்கிற்குப்படி சொல்லிய:—

வெண்பா.

நகுதத்தா தாதநியென் னுடைகத்திற் கேற்ற
தகுதித்தா னுஞ்சிலம்புத் தானும்—அகுதப்பா
பாரே யினியமையும் பொன்னம் பலத்தாடு
வாரே திருத் தாண்டவம்.



இவ்விதமாய்ச் சொன்னவுடனே நடனம் நின்றது. அதற்குமேல் தில்லைமூவாயிரவர்கூடி தேவர் பரிபூரணத்தையடைந்து விட்டாராமானால் நாங்கள் பூசிக்கிறோமென்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே செய்யலாமென்றுசொல்லி அநேகத்திருப்பணிகள் நடத்திவந்தனர். பின்னும் கட்டளைவிஸ்தாரமாய் நடக்கத்தக்கதாக ௭௨-பேர் தம்பிரான்களுக்குப் பல்லக்கு பிருது மற்றும் வேண்டியவைகளையுங் கொடுத்துத் தேசமெங்கும் சஞ்சாரம் செய்வித்தனர்.

அதற்குமேல் குருநமசிவாயமூர்த்தி அநேககாலமிருந்து திருப்பெருந்துறையிலே லிங்காகாரம் ஆயினர்.

வெண்பா.

வந்தீஸ் வரவருடம் வைகாசி தேதிநவம்
இந்துதினம் நாழிகை யேழரைமேல்—வந்தகுரு
தாறு மருணைகிரி தானுசிவ லிங்கத்தான்
ஆனான் நமச்சிவா யன்.

மேல் குருநமசிவாயமூர்த்தி மரபில் இத்தனைப் பட்டமென்று சொல்லுவதற்குக் காலாந்தரங்களிலே ஆதாரங்கள் கைசோர்ந்துபோயிருக்கின்றன. அதற்குமேல் குருநமசிவாயமூர்த்தி பட்டத்திற்கு வந்தவர்காலத்தில் சபாநாயகர் சர்வகட்டளைக்கு ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்-௧௧௧௯-யுவ௵ தை௴ ௨௨௨ புவனேகவீரன் பட்டணம் காட்டாரேவரும் காலாட்கள் தோழரும் சிதம்பரேஸ்வரர் சர்வகட்டளைக்குக் குருநமசிவாயமூர்த்தி பணிவிடைக்கு ஆகுர்ப்பத்தில் இளங்கம்பூர் நான்கெல்லையுட்படச் சேர்ந்தபடியினாலே சந்திராதித்தர் உள்ளவரைக்கும் சிவார்ப்பிதமாகத் தந்தது.

சிலாசாசனத்துப் பாடல்.

விருத்தம்.

தென்னருணை மருவுகுகை நமச்சிவாய
தேவர்சிஷ்யன் குருநமச்சி வாயன்செய்யும்

மன்றுபணி விடையாகப் புலியூர்ச்செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்துவாழ்க
இன்னிலமை வாந்தழைக்க அரகுருப்பத்து
இலிங்கபுர சாதனக்கல் லெழுதிநாட்டி
நன்னெறிசேர் காலாட்கள் தோழன்சின்ன
நல்லநய னன்கொடுத்து நடத்தினனே.

பின்னும் அரியலூர் சீமையில் ஒப்பில்லாத மழவராயர் கட்டளை ௨௪-கிராமம் விட்டு நடந்தது, அம்பலக்கட்டளை அரைக்கட்டளை என்றுபேர். அனந்தகிரிசீமையில் சொக்கம்பட்டு உடையார் சீமையில் பிச்சனூர், மானூர் இரண்டுகிராமம் விட்டது. வீரகனூர் என்று இரண்டு கிராமம் நடப்பிவித்தது, கள்ளக்குறுச்சி சீமையில் பாளையப்பட்டு சேலம் சேஷாதரப்பிள்ளை குருநமசிவாயபுரம் என்று ஒரு கிராமம் நடப்பித்தது. மங்கனூர் சீமையில் ஆதிபுர மாளிகைமேடு என்று இரண்டுகிராமம் நடந்தது. வேட்டவலம் பண்டாரத்தார் காடி பூமாசி என்று இரண்டு கிராமம் நடந்தது. இவைகளெல்லாம் சபாபதி சர்வகட்டளைக்கும் குருநமசிவாயமூர்த்தி மடத்திற்கும் நடந்துவந்தன. உடையார்பாளையம் பண்டாரத்தார் தென்னந்தோப்புக்கு ரூபா-௪௦௦ கொடுத்துச் சிதம்பரத்தில் சுவாமி சர்வகட்டளைக்கு வாங்கிவிட்டது. இவைகளெல்லாம் அநேகமாய் முன்னாலே நடந்தது, கலிகாலக்கொடுமையால் வரவர நின்றுபோயிருக்கின்றன.

அந்த கிராமத்தி லிருக்கிற விபரம். சகாப்தம் - ௧௬௬௩-ஆம் முதல் குருநமசிவாயமூர்த்தி பட்டம் ௧௭-க்கு சகாப்தம்-௧௭௨௭-ஆம் த்துக்குச் சரியான குரோதன௵ வரை வந்த பட்டத்துக்குள்ளாக உடையார் பாளையத்திலிருக்கிற பண்டாரத்தார் அநேக வாகனமுதலானதும் தருமமும் நடப்பிவித்தார். இந்தப்பிரகாரம் குருநமசிவாய



மூர்த்தி தேசசஞ்சார யாத்திரைசெய்து சபாநாயகர் சர்வகட்டளைக்கும் மடதருமத்துக்கும் பிட்சை நடத்திவந்தது.

உடையார் பாளையம் சீமையில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சிங்காரத்தோப்பு மடம் தீர்த்தம் உண்டாக்கிக்கொடுத்து, உடையார் பாளையம் கஸ்பாவில் பேரணிசுஸ்வரர் கோவிலும் கிழக்கு மடமும் தீர்த்தமும் உண்டாக்கி யிருக்கின்றன.

இளங்கம்பூர் முன்னாலே சர்வமானியகிராமம். இப்போது சர்க்காரிலே கழிந்துவருகிறது சாலிவாகன சகாப்தம்-௧௧௯௦-க்குமேல் செல்லும் புவ௵ தைமீ ௨௦௳ இளங்கம்பூர் சபாநாயகர் சர்வகட்டளைக்கு சாதனக்கல் எழுதினது காஞ்சிபுரத்திலிருந்துவந்து சின்னநல்ல காளாக்க தோள்படைத்தார் உடையதனு.

௨. வது, பட்டம் நல்லநாயக பண்டாரத்தார் சபாநாதருக்கு வெள்ளியானை வெள்ளிரிஷபம் பின்னும் சில திருப்பணி செய்து வைத்தார்.

௩. வது, அவர்புத்திரர் நல்லநாயகபண்டாரத்தார் சபாநாயகருக்கு பொன்குதிரையும் அநேக அம்மன்களும் உடையார் பாளையம் சீமையில் மாமேனி என்னுங் கிராமமும் நடப்பிவித்தனர்.

சாலிவாகன சகாப்தம் - ௧௬௯௫ - க்குச் செல்லாநின்ற ஜய௵ தைமீ ௨௨௳ சின்னநல்லநாயகபண்டாரத்தார் புத்திரர் நல்லநாயக பண்டாரத்தார். அவர்புத்திரர் சின்னநாயகபண்டாரத்தார் பாளையம் அரண்மனையும் ஆலயமும் மடமும் மற்றுமுண்டான தருமங்களெல்லாம் செய்தனர். அவர்காலத்தில் சாலிவாகன சகாப்தம் சார்வரி௵ மார்கழிமீ ௨௨௳ மானூர் பிச்சனூர் இந்த இரண்டு கிராமமும் ஜயங்கொண்ட சோழபுரம் சிங்காரதோப்பும் செய்துவைத்தனர்.

௪. வது, பெரியநல்லநாயக பண்டாரத்தார் காலத்திலே பூதவாகனம், மயில்வாகனம், அன்னவாகனம் செய்து உற்சவம் நடப்

பித்தா மடப்புரமென்னும் கிராமமும் எங்கும் வாங்கித் தருமங்களைச் செய்துவந்தனர்,

௩. வது, சின்னகல்லநாயக பண்டாரத்தார் காலத்திலே சிவகாமி அம்மனுக்கு குருமக்கிலியம் செய்து, கட்டளை அமைகட்டி வைத்து, மேல்கோபுரத்துக்கு மேற்கே பிள்ளையார் கோவிலும் கட்டிவைத்து, திருப்பெருந்துறை குருநமசிவாயமூர்த்தி மடத்துக்கு தெற்கு ௫௦௦ - பொன் கொடுத்துத் தென்னந்தோப்பு வாங்கிவிட்டனர்.

௪. வது, சின்ன அம்பலநாயக பண்டாரத்தார் சிதம்பரவேலனுக்கு ௨௦-தளிகை நைவேத்தியஞ்செய்து குருநமசிவாயமூர்த்தி அடியார்களுக்கு பிட்சைநடப்பிவித்து வந்தது; சகாப்தம் ௧௬௪௦ சர்வதாரி௵ மார்கழி௴ ௨௨.

இந்த சகாப்தம் வரைக்கும் கோபுரத்தில் சாசனம் இருக்கிறது.

இவ்வாதீனம் வீரசைவமடம்.

## குருநமசிவாயர் செய்த பாடல்

பரமாசியமாலை-சிதம்பரவெண்பா-அண்ணாமலைவெண்பா.

## குகைநமசிவாயர் செய்த பாடல்

அருணகிரியந்தாதி-தனிவெண்பாமாலை.

இவ்வாதீனத்தார்க்கு நாளதுவரையில் சிதம்பர உற்சவகாலத்தில் சுவாமியுடன் பல்லக்கு பிருதுகள் நடந்துவருகின்றன.

## குருநமசிவாயர்சரித்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருவண்ணாமலை

குகைநமசிவாயசுவாமிகளால் உபதேசம்பெற்ற

## சிதம்பரம் - குருநமசிவாய சுவாமிகள்

அருளிச்செய்த

# அண்ணாமலை வெண்பா.

காப்பு.

மன்னுதிரு வண்ணா மலைமாலை நாயடியேன்
பன்னுதமிழ் வெண்பாவிற் பாடவே—துன்னுமலர்ப்
பாதனே மூடிகத்தின் பாலேறுந் தேவகண
நாதனே நீமுன் னட.

நூல்.

ஆதிநட மாடுமலை யன்றிருவர் தேடுமலை
சோதிமதி யாடரவஞ் சூடுமலை—நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (௧)

அன்பர் பிறப்பை யகற்றுமலை யன்பல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலை—யன்பை
வடிக்குமலை சிந்தத்தை வந்திம்பு னாகி
யடிக்குமலை யண்ணா மலை. (௨)

கூற்றை யுதைத்தமலை கோமாறன் கூடல்வைகை
யாற்றை யடைத்தமலை யாரூரன்—போற்றச்
சிறந்தமலை தீவினையேன் செய்தகுறை யெல்லா
மறந்தமலை யண்ணா மலை. (௩)

ஏழைக் கிரங்குமலை யேதேது கேட்டாலும்
கோழைப் படாமற் கொடுக்குமலை—வேழ

மூரித்தமலை யம்மைக் கொருபாக மீந்த
மருந்துமலை யண்ணா மலை. (௪)

கண்டற் கரியமலை கண்மூன் றுடையமலை
யண்டரெல்லாம் போற்றற் கரியமலை—தொண்டருக்குத்
தோற்றுமலை நாளுந் தொழுவோ ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (௫)

அன்புடன் சொன்ன மளிக்குமலை யாதரிப்போ
ருன்னுவ ரெல்லா முதவுமலை—துன்னுபுகழ்
கொண்டமலை யங்கிக் கொழுந்தாகி யண்டமுற
மண்டுமலை யண்ணா மலை. (௬)

மாமா தவனமச்சி வாயன் றினமொருவெண்
பாமாலை சாத்திப் பணியுமலை—காமாதி
வென்றுமலை தான்கடந்தோ ரின்பத் திருவுளத்தே
மன்னுமலை யண்ணா மலை. (௭)

அஞ்சக் கரமா யமர்ந்தமலை யாதரிப்போர்
வஞ்சக் கருவினையை மாற்றுமலை—நெஞ்சைத்
திருத்துமலை மெய்ஞ்ஞான சித்திதருந் தெய்வ
மருந்துமலை யண்ணா மலை. (௮)

தொண்டர் வலமாகச் சூழுமலை சூழுமவர்
பண்டைவினை யெல்லாம் பறிக்குமலை—யண்ட
முருவுமலை யென்சற் குருநமச்சி வாயன்
மருவுமலை யண்ணா மலை. (௯)

கொம்பனைய பெண்ணைக் குறமகளிர் வானிலுறு
மம்புலியி னேறிவிளை யாடுமலை—செம்பவள
மொத்தமலை சற்குருவா மொண்கழலென் சென்னியின்மேல்
வைத்தமலை யண்ணா மலை. (௧௦)



ஞான குருநாத னமச்சிவா யன்கருணை
யானபா னாகியெனை யாண்டமலை—வானவர்கள்
போற்றுமலை தீவினையேன் புந்திக் கவலையெல்லா
மாற்றுமலை யண்ணா மலை. (௧௧)

சரண கமலத் தமைப்புகழுந் தொண்டர்
மரண பவத்துயர மாறக்—கருணை
பொழியுமலை தட்டுப் புழுகு பனிநீரே
வழியுமலை யண்ணா மலை. (௧௨)

அன்பர் கருத்தி லனவரத மேவுமலை
துன்ப மகலத் துரத்துமலை—யின்பம்
விளைக்குமலை செம்பொன்மக மேருவினை வில்லா
வளைக்குமலை யண்ணா மலை. (௧௩)

நன்பாக் குகையி னமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய் விளையுமலை—திண்பா
ரந்தமலை செஞ்சடையா யன்றிருவர் தேட
வளர்ந்தமலை யண்ணா மலை. (௧௪)

நீதமல ரோனெனமா றேடுமலை யன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலிக்குமலை—மாதவர்கள்
மொய்த்தமலை யுண்ணா முலையுமையைப் பாகத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (௧௫)

வைத்தநிதி யோநமச்சி வாயகுரு நாடோறு
மெய்த்தமிழி னற்புகழ்ந்து மேவுமலை—யெத்திசையு
மின்னுமலை மாதுடனே வெள்ளிமலை வீடாக
மன்னுமலை யண்ணா மலை. (௧௬)

முக்கோண மாக முளைத்தமலை முண்டகன்மா
லக்கோடி காக மணித்தமலை—இக்கோடி

துன்னுமலை தன்னைத் துதிக்குமடி யாருளத்தின்
மன்னுமலை யண்ணா மலை. (கஎ)

வண்டமிழா லோநமச்சி வாயகுரு வேத்துமலை
கண்டுதொழு வார்க்கினிய காட்சிமலை—யண்டமுறு
நீளுமலை போற்றி நினைக்குமடி யாருளத்தே
வாழுமலை யண்ணா மலை. (கஅ)

அஞ்செழுத்தாய் வேதமா யாகமமாய் நின்றமலை
விஞ்செழுத்தா யொன்றாய் விளங்குமலை—நெஞ்சகத்தே
தைத்தமலை நாயேனைத் தன்னடியார் கூட்டத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (க௯)

மன்னுஞ் ஞோநமச்சி வாயகுரு செந்தமிழாற்
பன்னுஞ் மேத்திப் பணியுமலை—யெந்நாளு
மெய்க்குமலை பொல்லா வினையேனைத் தன்னடிக்கீழ்
வைக்குமலை யண்ணா மலை. (உ0)

எந்தை குருநாத னிருக்குமலை யென்பாச
பந்தமற நோக்கிப் பரித்தமலை—சந்திரனைத்
தேய்த்தமலை நாயடியேன் சிந்திக்குஞ் சிந்தனைக்கே
வாய்த்தமலை யண்ணா மலை. (உக)

அஞ்ஞானக் கங்கு லகற்றுமலை யன்பர்க்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலை—அஞ்ஞானச்
சந்தமலை நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலை யண்ணா மலை. (உஉ)

நீற்றை யணிந்தமலை நீள்சுடராய் நின்றமலை
யேற்றைப் பரியாக வேறுமலை—கூற்றை
யுதைத்தமலை யன்றரியை யோர்சிம்பு ளாகி
வதைத்தமலை யண்ணா மலை. (உங)



தலையிடுந் தேவர்குழா முய்யத் திருமிடற்றி
லாலவிடந் தன்னை யடக்குமலை—நான்மறை
யந்தமலை நாயேனை யாளக் குருவாகி
வந்தமலை யண்ணா மலை. (உச)

ஆதி நெடுமா லயன்காண வன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை—வேத
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை யண்ணா மலை. (உரு)

வந்தருளி லோநமச்சி வாயகுரு வாயடியேன்
சிந்தைகுடி கொண்டிருக்குந் தெய்வமலை—முந்தைவினை
நீக்குமலை சொல்லரிய நீள்பிறவித் துன்பமெல்லா
மாய்க்குமலை யண்ணா மலை. (உசா)

சத்திக் கொருபாகந் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை—யெத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வா ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (உஎ)

ஞால மதியை மௌலியின்மேல் வைத்தமலை
சீலமுனி வோர்கள் செறியுமலை—காலங்
கடந்தமலை சீறிவருங் காலனைக்கா லாலே
யடர்த்தமலை யண்ணா மலை. (உஅ)

சிட்ட ரிடருஞ் சிவந்தி யில்லாத
துட்டர் சுகமுந் துடைக்குமலை—நட்டம்
பயிலுமலை யெவ்வுலகும் பாழ்படுமென் றால
மயிலுமலை யண்ணா மலை. (உ௯)

கண்ட மிருளக் கடுவிடத்தை வானவர்க்கா
வுண்டபிரா னுறை யுத்தமலை—தொண்ட

ரிணக்குமலை வானோரு மேனோரும் போற்றி
வணங்குமலை யண்ணா மலை. (௧௦)

அன்பப் பசிதீர்க்குஞ் சத்தசிவ ஞான
வின்பப் பசுந்தே னிருக்குமலை—யன்பர்க்
கிருளுமலை வாராம லெப்போதுங் காட்சி
யருளுமலை யண்ணா மலை. (௧௧)

செகமருவு மைம்புலனிற் சேரமன் ஞானச்
சுகமருவ மேன்மைபுனை தொண்ட—னகமருவுந்
தூயமலை வஞ்சகர்க்குத் தோன்றும லேயொளிக்கு
மாயமலை யண்ணா மலை. (௧௨)

கரத்தி லினிய கனபொருளைத் தந்தந்
சிரத்தி லடியிணையைச் சேர்த்தும்—பரத்து
யிகத்துமலை வாராம லென்குருவா யாண்ட
மகத்துமலை யண்ணா மலை. (௧௩)

பற்றி யிமையோர் பகைசெய்வான் வந்தெதிர்த்த
வெற்றி மதராசன் வேகவே—யுற்று
விழித்தமலை தக்கனார் வேள்விதனை முன்னா
ளழித்தமலை யண்ணா மலை. (௧௪)

பாட றனைவிரும்பிப் பாவலர்க்கா கப்பரவை
வீடுதனக் கிருகால் மேவியே—கூட
விணக்குமலை தன்புகழை யெண்டிசைக டோறு
மணக்குமலை யண்ணா மலை. (௧௫)

கந்திக்குந் தேமாங் கனியறித்துக் கார்க்கடுவன்
மந்திக்கு நல்கி மகிழுமலை—சிந்திக்கு
மெண்ணமலை வந்தோர்க் கினியமலை யோரஞ்சா
வண்ணமலை யண்ணா மலை. (௧௬)



உன்னு தவம்புரியு மோகமச்சி வாயகுரு
மன்னுங் கருணைமுகில் வாழுமலை—பென்னம்
பெரியமலை மாலும் பிரமனுந் தேடற்
கரியமலை யண்ணா மலை. (௧௭)

வேண்டு மயன்மால் விழிமனத்துக் கெட்டாம
னீண்டுதழற் பிழம்பாய் நின்றமலை—யாண்ட
கருணைமலை யொப்புரைத்துக் காணவரி தான
வருணைமலை யண்ணா மலை. (௧௮)

வீடு முதலா விரும்பும் பொருளனைத்தும்
பாடுமடி யார்க்குப் பலிக்குமலை—நீடுபுகழ்
பூண்டமலை சற்குருவாய்ப் பொல்லாச் சிறியேனை
யாண்டமலை யண்ணா மலை. (௧௯)

அனைத்துலகும் போற்றுதிரு வைந்தெழுத்தை யோதித்
தனைத்தொழுது பேணுந் தவத்தோர்—நினைத்தவா
நல்குமலை யென்றாரு நல்லோரு நன்னெறிய
மல்குமலை யண்ணா மலை. (௨௦)

மானனைய கண்ணார் வசமாகி நாயடியே
னூனவினைக் காட்டி லுழலாமல்—ஞானநெறி
காட்டுமலை தன்னைக் கருதுமடி யாரிடரை
வாட்டுமலை யண்ணா மலை. (௨௧)

பிள்ளை யறுத்துதவும் பேராளை யுவந்து
கொள்ள வயிரவமெய்க் கோலமாய்—மெள்ள
நடந்தமலை சிம்புளாய் நாரசிங்க ரூபை
யடர்ந்தமலை யண்ணா மலை. (௨௨)

உய்யவார் தந்தகுரு மோனமச்சி வாயகுரு
வையமுழு தாக்குதிக்க வாழுமலை—துய்யவர்க்

தேக்குமலை நல்லோர் செறியுமலை பெண்ணையா
ளுக்குமலை யண்ணா மலை. (௪௩)

உண்ணா முலையா ளொருபாக மானமலை
கண்ணா ரமுதாய காட்சிமலை—விண்ணோர்
துதிக்குமலை யன்பர் தொழுதேத்தி நாளு
மதிக்குமலை யண்ணா மலை. (௪௪)

நாதனரு ளான னமச்சிவா யன்கவிவா
யோதுதமிழ் மாலை யுகந்தமலை—பாதிமதி
சூடுமலை பத்திசெய் தொண்டருடன் கூடிவிளை
யாடுமலை யண்ணா மலை. (௪௫)

தேவரையுந் தேவருக்குந் தேவராச் செப்புமொரு
மூவரையு மன்னோர் முனிவரையும்—யாவரையும்
பெற்றமலை தன்பெருமை பேசுங்காற் றுய்தக்கை
யற்றமலை யண்ணா மலை. (௪௬)

நேசிக்கு மன்பர் நினைவுகொடு பாவித்துப்
பூசிக்கும் பூசை பொருந்துமலை—யாசைக்குள்
வீழுமலை பற்றொழிந்த மெய்யடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை யண்ணா மலை. (௪௭)

நன்றிபுனை நன்ப னமச்சிவா யன்றினமுந்
துன்றுமலர் தூவித் துதிக்குமலை—யன்றிருவர்
தேடுமலை சந்ததமுந் தில்லைச்சிற் றம்பலத்தே
யாடுமலை யண்ணா மலை. (௪௮)

நெஞ்சகத்தி லொன்று நினைப்பார்க்கு மாலறியாக்
கஞ்சமொத்த பொன்னடியைக் காட்டுமலை—யஞ்செழுத்தி
னுமமலை யம்பிகையுண் ணாமுலையம் மைக்குகந்த
தாமமலை யண்ணா மலை. (௪௯)



பன்றலையின் மாயன் புவியிடந்துங் காணரிய
நன்றிதரும் பொன்னடியை நாடியே—யென்றுமொரு
நாளுமலை வாராம னுயேனைச் சற்குருவா
யாளுமலை யண்ணா மலை. (௫௦)

சண்ட விடத்தைச் சகமிறந்து போகாமற்
கொண்ட திறம்பாடிக் கொண்டாடித்—தொண்டர்
பணியுமலை மெய்ம்முழுதும் பால்வெள்ளை நீற்றை
யணியுமலை யண்ணா மலை. (௫௧)

தில்லைவனங் காசி திருவாரூர் தென்மதுரை
நெல்லையினும் பேரொளியாய் நின்றமலை—தொல்லைமறை
பாடுமலை சந்ததமும் பத்தாக மேவிட
மாடுமலை யண்ணா மலை. (௫௨)

மூலமுத றுண்ணா முலையென்று மன்பருக்குச்
சாலவரு ளீந்தருளுந் தாயென்று—நாலுமறை
பேசுமலை பாகம் பிரியாச் சிவஞான
வாசமலை யண்ணா மலை. (௫௩)

தொன்மைதரைச் சுந்தரற்காத் தூதுபோய் வந்தமலை
நன்மைதரத் தொண்டருக்கு நல்குமலை—மன்மதனைக்
காய்ந்தமலை கூடலிற்சங் கத்தா ருடன்றமிழை
யாய்ந்தமலை யண்ணா மலை. (௫௪)

புண்டரிகன் மாறேடிப் பொன்முடியும் பொன்னடியுங்
கண்டறிய வொண்ணாத காட்சிமலை—தொண்டருடை
யூனமலை பற்றறுக்க வோநமச்சி வாயகுரு
ஞானமலை யண்ணா மலை. (௫௫)

துன்றுமலர் சோலைதொறுஞ் சூழுமலைச் சோணையென்
மன்றல் கமழு மதுமாரி—யென்றும்

பொழியுமலை மந்தாரம் பூஞ்சுனைநீர் பொங்கி
வழியுமலை யண்ணா மலை. (௩௬)

வேட்ட வடியார் விளக்குஞ் சிவஞான
நாட்டம் பொழிபோ லெந்தநீ—நாட்டக்
குளிக்குமலை நாளுங் குறைவிலாச் செல்வ
மளிக்குமலை யண்ணா மலை. (௩௭)

நீலமலை தேடரிதாய் நின்றமலை நின்றநூற்
கோலமலை மன்றிற் குனிக்குமலை—மூலமலை
யத்தமலை சுந்தரற்கா யன்றிரவிற் றூதுபோய்
வந்தமலை யண்ணா மலை. (௩௮)

தரையெலா முய்யத் தனித்திருந்து செய்யுங்
கரையிலா மாதவத்தைக் கண்டு—விரவியொரு
பாகமலை மாதுபெறப் பாலித்து நின்றருளு
மாகமலை யண்ணா மலை. (௩௯)

கள்ளப் புலவேடர் கைவசமா கக்களித்து
தெள்ளித் தெளிந்தோர் செறிவாக—வுள்ளக்
கருத்துமலை யாதிருக்கக் காட்சிதருந் தெய்வ
மருத்துமலை யண்ணா மலை. (௪0)

முக்குணமு மைம்புலனு மூளா வகையடக்கி
யொக்குமுணர் வாயிருப்போ ருள்ளத்தே—புக்குலவும்
பாதமலை தாய்வயிற்றிற் பார்மீதில் வந்துபிற
வாதமலை யண்ணா மலை. (௪௧)

பண்ணடுத்த கூடற் பழம்பதியிற் பிட்டமுதை
யுண்ணடுத்து வைகை யுடையாமன்—மண்ணெடுத்துப்
போடுமலை சுந்தரமும் பொன்னம் பலத்தினட
மாடுமலை யண்ணா மலை. (௪௨)



அண்டமுழு தும்பறந்தே யன்னவுரு வாய்த்தேடி
மண்டலமெ லாங்கோல மாய்த்தேடிப்—புண்டரிகன்
சீர்க்கமலை கோணறியாத் தெய்வச் சிவஞான
மார்க்கமலை யண்ணா மலை. (௪௩)

கூனற் சிறுபிறையைக் கோளரவுக் கஞ்சாமல்
வானப் பணிசடைமேல் வைத்தமலை—ஞானச்
சரதமலை யானந்தத் தாண்டவத்துக் கேற்ற
வரதமலை யண்ணா மலை. (௪௪)

பொருத்துதலைச் சங்கப் புலவர்தமைப் போலே
விரித்தபுகழ்க் கூடலிலே மேவி—யருந்தமிழை
யாய்ந்தமலை பார்மீதி லைந்தெழுத்த னாகிவந்து
வாய்ந்தமலை யண்ணா மலை. (௪௫)

ஆதிமலை யாதி யநாதிமலை யம்மையொரு
பாதிமலை யோதிமறை பாடுமலை—நீதிமலை
தந்த்ரமலை யந்த்ரமலை சாற்றியபஞ் சாக்கரமா
மந்த்ரமலை யண்ணா மலை. (௪௬)

அஞ்சு புலனு மடக்கி யறிவுடையோர்
வஞ்ச வினைப்பிறவி மாயவே—நெஞ்சி
லழுத்துமலை யன்ப ரனவரதம் போற்றி
வழுத்துமலை யண்ணா மலை. (௪௭)

சதித்தமுனி பாலகன்மார்க் கண்டனையே சீறிப்
பதைத்துவருங் காலன் படவே—யுதைத்ததொரு
வீரமலை சற்குருவாய் மேவியெனை யாண்டபட்ச
வாரமலை யண்ணா மலை. (௪௮)

இமயவரும் பத்தருமா கேசருங் காணச்
சமயகுரு வாகநி தாங்க—வுமையொருபங்

காரணமலை வாக்குமனக் காயந் தமக்கரிய
வாரணமலை யண்ணா மலை. (௬௯)

ஆத்தி சுமெக்கைமுத லானமல ரைங்தெழுத்தாற்
சாத்தி யடியவருந் தக்கோரு—மேத்திப்
புகழுமலை யாங்கவரைப் பொற்கொடியோ டெய்தி
மகிழுமலை யண்ணா மலை. (௭௦)

மாலூன்றிச் செய்யு மணந்தகைக்கு சுந்தானைக்
காலூன்றி யாளக் கருணையாய்க்—கோலூன்றித்
தந்த விருத்த சனாவே தியனாக
வந்தமலை யண்ணா மலை. (௭௧)

அறுகு மதியு மணிமுடிமேற் கூடன்
மறுகு தனி லடியார் வாழ—விறகு
சுமந்தமலை போற்றிசெயுந் தொண்டாகந் தோறு
மமர்ந்தமலை யண்ணா மலை. (௭௨)

மட்டலவு கஞ்ச மலரோனு மாயோனுந்
திட்டமுடன் றேடித் திகைத்தாலு—மெட்டரிய
ஞானமலை பார்மீது நாலுகத்தி ளுறுவடி
வானமலை யண்ணா மலை. (௭௩)

மறைவடிவாஞ் சோமாசி மாறன்மக டன்னி
லுறைவடிவாம் பங்கினுமை யோடு—நிறைவடிவாய்ச்
சென்றமலை யந்தணர்குழ் தெய்வக் கனகமணி
மன்றமலை யண்ணா மலை. (௭௪)

எப்பொருளு மாகி யிருசுடர்பா ராக
மெய்ப்பொருளு மாகி விளங்குமலை—கைப்பொருளை
யொத்தமலை யென்றலைமே லோகமச்சி வாயவடி
வைத்தமலை யண்ணா மலை. (௭௫)



பல்லுயிருங் கேட்டறியப் பார்த்தன்கை யாலடித்த
வில்லடியும் புத்தன் மிகவெறிந்த—கல்லெறியும்
பட்டமலை மன்மதனைப் பார்வையினால் வெந்துவிழ
வட்டமலை யண்ணா மலை. (௭௬)

வானை யுருவ வளர்ந்தமலை வாமபச்சைத்
தேனையொரு பாகத்திற் சேர்த்தமலை—யானை
யணித்திரள்சேர் சார லதில்வேங்கை யீன்ற
மணித்திரள்சே ரண்ணா மலை. (௭௭)

அன்று கயிலை யரக்க னெடுத்தவப்போ
தின்றவனைக் காலா னெரித்தமலை—யென்று
மருந்துமலை யெவ்வுலகு மன்பரிடர் நோய்க்கு
மருந்துமலை யண்ணா மலை. (௭௮)

அன்றுபசி நூறுவய தானமார்க் கண்டர்தமக்
கென்றுமீ ரெண்வயதே யென்றமலை—நின்று
சிறக்குமலை தன்னடியார் செய்தகுறை யெல்லா
மறக்குமலை யண்ணா மலை. (௭௯)

அன்றிருவர் தேட வனல்வடிவாய் நின்றமலை
நின்றுருகுந் தொண்டருக்கு நேயமலை—யென்று
நடிக்குமலை வெள்ளியிலே நாரணனை யோட
வடிக்குமலை யண்ணா மலை. (௮௦)

கஞ்சணியுங் கண்டமலை நாளு மடியவர்தம்
வஞ்சவினை தானறுக்க வந்தமலை—நெஞ்சக
மிளகுமலை யன்பர்க் கினியபே ரின்பம்
வளர்க்குமலை யண்ணா மலை. (௮௧)

பையரவஞ் சூடுமலை பத்தர்பணிந் தேத்துமலை
கையின்மழு மான்றரித்த காட்சிமலை—துய்ய

நதியணியும் வேணியின்மே ணறுமலர்க் கொன்றை
மதியணியு மண்ணா மலை. (அஉ)

மயிலாலுஞ் சேருமலை மான்புலிகள் கூடிப்
பயிலுமலை வானோர் பரவுங்—கயிலை
பொருந்துமலை யெந்நாளும் போற்றுமன்பர் நாவா
லருந்துமலை யண்ணா மலை. (அங)

உற்றுப் புரத்தி லொருமூவர் தம்மைவைத்துப்
பற்றி யெரித்துவிழப் பார்த்தமலை—நித்தியே
நாளுந் தனைத்தேடு நம்பு மடி யார்தமையே
யாளுமலை யண்ணா மலை. (அச)

உள்ளும் புறம்பு மொருசெயலா மன்பருளங்
கொள்ளுமலை நாட்டங் குளிக்குமலை—துள்ளு
மெருத்தின்மே லேறுமலை யென்பிறவி நோய்க்கு
மருத்துமலை யண்ணா மலை. (அரு)

துன்ப மகற்றுமலை தொல்வினையை நீக்குமலை
யன்பர்தமை வாவென் றழைக்குமலை—தன்பதத்தைக்
காட்டுமலை தன்னைக் கருத்திலு மன்பரிடர்
வாட்டுமலை யண்ணா மலை. (அசு)

போதமுற்ற மெய்யடியார் புத்தியிலே வேரோட்டிப்
பாதமுச்சி மட்டாய்ப் படர்ந்தமலை—நாதந்
தழைக்குமலை யன்பர் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (அஎ)

முப்போதும் பூசித்து மோகித்துப் போற்றுமவர்க்
கப்போது முன்னின் றருளுமலை—யெப்போதுந்
தாய்க்குமினி தானமலை சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை யண்ணா மலை. (அஅ)



காலை யுதைத்தமலை கையில்மான் சூலமலை
வேலை விடமருந்தும் வெற்றிமலை—மாலை
யணிசேரு நீண்முடிமே லங்கரவ மீன்ற
மணிசேரு மண்ணா மலை. (அகூ)

மாறுபட்ட தக்கனுயிர் மாய்த்தமலை மாலயற்கு
நீறுபட்ட செந்தழலாய் நின்றமலை—கூறுங்கா
லொப்பனைக ளில்லா துயர்ந்தமலை நீண்முடிமே
லப்பணியு மண்ணா மலை. (கூ0)

பச்சைநிறத் தாளுமைப் பாதிவடி வானமலை
கச்சையெனக் கட்செவியைக் கட்டுமலை—நிச்சயமாய்
மாளுமடி யேனை மாளா வகையருளி
யாளுமலை யண்ணா மலை. (கூக)

மாவொருகை வெற்றி மழுவொருகை யானமலை
ஞானமுனி வோர்களித்த நாமமலை—யானை
யுரித்தமலை யம்மை யுமையாலே யார்க்கு
மருத்துமலை யண்ணா மலை. (கூஉ)

முல்லைமலர்க் கொன்றை முடிமே லணிந்தமலை
யெல்லையிலா மாதவர்க ளேத்துமலை—தில்லையிலே
நட்டமலை முப்புரத்தை காடுமன்பர் மூவரைவிட்
டட்டமலை யண்ணா மலை. (கூங)

எல்லாருங் காணற் கினியமலை யென்னுடைய
பொல்லா வினையறுக்கப் போந்தமலை—சொல்லாரும்
நல்லமலை பொல்லாரை நாசமுறப் பார்க்கைக்கு
வல்லமலை யண்ணா மலை. (கூச)

ஆழி நெடுமா லயர்க்குமரி தானமலை
யூழின்வினை யன்பர்க் கொழிக்குமலை—யாழியிலே
நஞ்சழலைக் கண்டு நடுங்கினரைக் காக்குமலை
யஞ்சுமுகத் தண்ணா மலை. (கூரு)

எத்திசையுந் தோற்றுமலை யேறுகந்து நின்றமலை
சித்திவா மீந்தருளிச் செய்யுமலை—முத்தர்மனம்
பூணுமலை யண்டர் புகழுமலை நீண்டதொரு
மாணுமலை யண்ணா மலை. (௯௬)

வண்மைக் குணத்தவரை மாதவரை வந்தடைந்தோர்
தம்மைத் தளராமற் றுக்குமலை—புன்மை
பொருந்துமலை விண்ணவர்கள் போகாம லால
மருந்துமலை யண்ணா மலை. (௯௭)

வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி
யானைக்கு நீட்டி யணையுமலை—ஞானத்த
ருன்னுமலை யென்னாளு மோசமச்சி வாயகுரு
மன்னுமலை யண்ணா மலை. (௯௮)

அழியாத முத்தி யளிக்குமலை யன்பர்க்
கொழியா வினையை யொழித்துக்—கழியாத
வேற்றுப் பிறப்பை யினியமையு மென்றருளி
மாற்றுமலை யண்ணா மலை. (௯௯)

பெற்றுந் தனிற்றோன்றிப் பெய்வளையுந் தானுமென்றன்
குற்றங் களைந்தருளிக் கொண்டமலை—நித்தம்
புதியமலை கங்கையணி பொற்சடைமேல் வைத்த
மதியமலை யண்ணா மலை. (௧௦௦)

---

அண்ணா மலைமாலை யான தமிழ் வெண்பாவாற்
றண்ணாரு மைந்தெழுத்தைச் சாற்றியநூற்—பண்ணாகக்
கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியிற் பேரின்ப
முற்றலகை யாள்வ ருவந்து. (௧௦௧)

மன்னுதிரு வண்ணா மலையைவல மாகவந்தன்
னுன்னுதிரு வைந்தெழுத்தை யோதினேன்—றன்னருணா
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன் பெற்றெடுத்த
தாயகத்தைக் கண்டவர்போற் றான். (௧௦௨)

அண்ணாமலைவெண்பா முற்றிற்று.

உ

கணபதிதுணை.

தெய்வீகம்விளங்கிய

குகைநமசிவாயதேவரருளிச்செய்த

# அருணகிரியந்தாதி.

## காப்பு.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும்—கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

---

## நூல்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்—சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையாநீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால். (௧)

மாலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே—மேலாய
யோகிகளே கண்டபித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தகிகளோ நீகண்டாய் திக்கு. (௨)

திக்குவே றில்லை திருவுளமே யல்லாம
விக்குவே ளைக்காய்ந்த விசனே—மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேச. (௩)

பேசமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசபுகழ்ச் சோணகிரி வித்தகா—மாசிலா
வண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணா மலையாகண் பார். (௪)

பாராம லிருந்தாற் பார்மீதி லையேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே—நீராய்
பிறப்பை யகற்றுதற்கும் பின்னுசனே சூழ்ந்த
விறப்பை யகற்றுதற்கு மின்று. (௬)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காம—னன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேயெங்
காரணனே நீநினைக்குங் கால். (௭)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யால முகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (௮)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேனென் கைம்மாறு. (௯)

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா—வாறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (௧௦)

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்திக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து.

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டே—ஞாலத்



தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
யெரித்தபிரான் வந்தா னிதென். (௧௧)

என்னதவப் பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணாத முக்கண்ணன்—றன்னையே
தேடுகைக்குஞ் சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (௧௨)

பெற்றேம் பலனைப் பிறந்ததனு னெஞ்சமே
யற்றே மனத்தி லனவரதம்—பற்றுவா
ருள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக் கொண்டாட வரம். (௧௩)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து. (௧௪)

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (௧௫)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மன்புருக்கொள் பெண்ணா யிருக்குமே—யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (௧௬)

பரம னருணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ—மருமந்த
கூட்டித் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையானை யால். (௧௭)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சாலவெருண் டோடுஞ் சமயத்தி—லோலமென
நின்றா னுலகரிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ. (௧௮)

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னோடி வட்டவா னுறங்குமே—நாமெங்கா
லக்கண்ணார் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். (௧௯)

நகுமானை யேந்தருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதனை நீயல்லாற் பேருலகி லாரேனுங்
குற்றதனை மற்றியார்வ ரோது. (௨௦)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணாசலனை
யோதக் கடனெஞ்சே யோதினாற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம். (௨௧)

ஆமென்று நம்பி யனுதினமும் போற்றினா
றாமென்று பற்றி நலமாகக்—காமித்தாற்
கிட்டாகுஞ் சோணகிரிச் சித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (௨௨)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தன் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (௨௩)

காய நெகிழாமுன் கண்ண விருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்



தோடிநமன் வாராமுன் றுள்ளே சோணகிரி
நாடிநம வென்றே நட. (௨௪)

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம். (௨௫)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராலு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் காளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (௨௬)

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்—சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணா தரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (௨௭)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே—நின்னருளைக்
கொண்டொழியா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டொழியா தென்றன் கருத்து. (௨௮)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா—பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு. (௨௯)

கண்டயினை யென்பார் கருத்தாக வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே—விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம். (௩௦)

சிரமாலை தானணிந்து சேவினுகந் தேறி
யருமா மறைதேடு மண்ணல்—வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேச
னினிக்கூட்டான் றுன்பத் தொகை. (௰௧)

எமையாளுஞ் சோணகிரி யீசரின் பாகத்
துமையாளு நீயு முகந்த—சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று. (௰௨)

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில கால
மிருந்தே னிராமலிருந் தேன். (௰௩)

எனமனந் தேட வினையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தானுவா—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு. (௰௪)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா—னொருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர். (௰௫)

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ—வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு. (௰௬)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே—யெப்பொழுதும்



பெண்ணைவிட்டு நீங்காமின் பொழுது சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (௰௭)

காணா ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணுமற் றுன்கான வாடியே—சேணுட
ராயும் புகழருணை யண்ணு மலையானே
மாயுந் தமியேன் மனம். (௰௮)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா—னனத்தனரு
டக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (௰௯)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த—வுண்மையை நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கெடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று. (௨0)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெருவ தெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரு
மேகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம். (௨௧)

சாகாவரம் பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்ற னடியே—யேகாந்த
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடுத்து. (௨௨)

எடுத்த பயனை யிருவினையை யெண்ணு
றடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
யறியாத மானிடவ ரச்சு. (௨௩)

அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
வைச்ச தென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். (௪௪

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதைதாய்—தானே
யனைத்தாயிருங் காக்கு மருணேச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு. (௪௫

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்தனக்கு வேண்டினு—லீண்டுலகில்
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்றெருக்காற் சொல். (௪௬

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேசுருதி
கில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ. (௪௭

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்—றுயகமா
மண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது. (௪௮

போதமதி ருடும் புனிதர் புவியின்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்—பாதத்
திறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (௪௯

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலி
லேற்றிருக்கு மாயவன்க ணெப்பொழுதுஞ்—சாற்றுமைந்



லம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலைநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு. (௫௦)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நன்னூ லறிந்தாலு—மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று. (௫௧)

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ—யுற்றகட
ணஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (௫௨)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்—செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட னெஞ்சமே யுன். (௫௩)

உன்னைக் கருத்துண் ணுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து. (௫௪)

உயர்ந்தவர்க்கு ளெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா—பயந்தமர
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென். (௫௫)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார்—முன்னமே
யொன்னார் புரமெரித்த வுண்ணு முலைபாக
னென்னார் திருநீ றிடார். (௫௬)

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக்—காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம். (௩௭

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வென்றுநீ பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாய்ப் பிறந்தருணை மீசா
விறப்பிற்கு மீடாயி னேன். (௩௮)

ஏனிருந்து நெஞ்சே பிரபஞ்ச வாயுடலைத்
தானென் றிருப்பாய் சோணகிரித் தாணுவா—மானுகந்த
வெந்தையா ரிங்கு பிறவிநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல். (௩௯)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்—விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான். (௪௰)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தந்தையாய்த்—தானென்னைச்
செப்பரிய வின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயெது மான். (௪௧

ஆனவர நற்குருவா யாயிரஞ்செஞ் ஞாயிறென
ஞானம் பதிந்துநந் தான்செய்யே—ணனங்க
னஞ்சடையான் சோணகிரி யண்ணாமலை யென்றுந்
நெஞ்சடையார் பூதலத்தே நின்று. (௪௨

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையுநஞ் செய்திடாய்—வென்றிதரு



மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (௪௩)

சும்மா கிடைக்குமோ சோணசலன் பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மா
லிருந்துகதை சொன்னக்கா லென்றுகு நெஞ்சே
பொருந்த நினையாத போது. (௪௪)

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்—றாதை
விருப்பா மதிருடி வெண்டலையோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று. (௪௫)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனாதமா
மென்றைக்குப் போமருணை யீசனே—கொன்றைமதி
புன்னை யெருக்கும் புலையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை. (௪௬)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிகோ ளெல்லா—முருக்குமவை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (௪௭)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று—மறைபுகுந்தேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (௪௮)

வேலைவிட முண்ட விமலாரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை—மேலமார்
பண்ணினோர் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினோ ரெல்லா நலம். (௪௯)

எல்லார் பிறப்பு மிறப்புமியாற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோஞ் சோணேச—நில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்தாண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம். (௭௦)

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார்—தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சகம னுக்கஞ்ச வார். (௭௧)

வஞ்சகம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே—நெஞ்சறிய
வாண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கனைத்த மண். (௭௨)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே—விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (௭௩)

தருவா யெனக்குகந்தன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்றே—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து. (௭௪)

எடுப்பானுங் கப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்—விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது. (௭௫)

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே—யெப்போதும்



பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ளினைந்து. (௭௬)

நினையேன் றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
வினையேன் பிறப்பறுக்க நாடேன்—புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர். (௭௭)

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்—வாராது
நீதி கலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னன்றே யிரு. (௭௮)

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தானு மருணகிரி
யெம்பிரா னோரஞ் செழுத்து. (௭௯)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—யஞ்சுதலைக்
கொன்றறுத்த நாவா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று. (௮௦)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனார்க்—கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (௮௧)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துவார்க்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு—முத்திதரும்
மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றறிய நெஞ்சமே பூண்டு. (௮௨)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (௮௩)

கங்கா தரனே கடையேனை யெந்நாள
ஙங்கா தரவா வழக்குநா—ணங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு. (௮௪)

செப்பரிய வானவத்தைச் சேருமுற் மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே—னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வெண்ணுளத்தே கொண்டு. (௮௫)

கொண்டநெறி சற்றுங் குலையார் மன்றிருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே—தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல். (௮௬)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி லுட்டேன்யான்—சொல்லரிய
வண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
துண்ணா முலையாளை யும். (௮௭)

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா—லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புவிமீதி
லல்லார் துதிக்கு நடம். (௮௮)

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொறுத் தாலவ னன்றோ—வடலையா



லோதிறைற் பாச மொழியுமோ புற்றிலே
மோதிறைற் பாம்புசா மோ. (௮௯)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
றேகமறே னின்பெருமை தானறியேன்—காகநாய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி. (௯0)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்கு மரிதா மரனே—தெரிக்குமறை
காணாத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணாத நாயேன் பிறந்து. (௯௧)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திரவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றான். (௯௨)

தானவர்கள் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே—யேனம்
விருப்பா மலர்கூடி வேண்டினு னீண்ட
நெருப்பா யிருந்ததென்ன நீர். (௯௩)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே—பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (௯௪)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே—யென்னை
யெடுப்பதற்குக் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெதி. (௯௫)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னின்பிறப்பை
யார்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற்—பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
யையா கருணை வயா. (௯௬)

கருணை லயா நின் கழல்பணிய மாட்டே
னருணை சலாவென் றழையேன்—மரணாந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து. (௯௭)

குறியே னிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க்கொன் றாற்றேன்—சிறியேனின்
றாயுமறை தேடரிய வண்ணா மலையானே
மாயுமிருங் கையா மனம். (௯௮)

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
யென்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கு
முன்னிச்சை யன்றோ வுரை. (௯௯)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை—நிரைக்குமே
யெண்ணார் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணா ரமுதமெனுங் கார். (௧00)

அருணகிரியந்தாதி முற்றிற்று.

☞ இந்த அருணகிரியந்தாதியானது கன்னடசா மூர்த்தியா
ய குகைநமசிவாயதேவர் மல்லிகார்ச்சுனத்தி லிருந்து "தெற்கே
வெல்லாம் யாத்திரைசெய்து வருகிறேன்" என்று தன் குருவின்
அனுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தன்குருவுருவாக
எழுந்தருளிய அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடி திருவண்ணாமலை
யிலே குகையினிடத்து மகிமையுடனிருந்து அண்ணாமலையார் வரப்
பிரசாதத்தினாலே அவரைத் தோத்திரஞ்செய்தது.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையின்கண் எழுந்தருளியிருந்த

## குகைநமசிவாயசுவாமிகள்

திருவாய்மலர்ந்த

## திருவருணைத்

# தனிவெண்பா.

சொன்னந் தருங்குருவே சோணா சலத்தானே
இன்னம் பிறந்தாலு மிப்படிநின்—சன்னிதியை
நாடக் கிடைத்திடுமோ நன்னெஞ்சே நாமவரைக்
கூடக் கிடைத்திடுமோ கூறு. (௧)

சம்பா வமுதும் சருக்கரைத்தே னெய்பாலும்
தென்பாகத் தந்தருளுந் தேசிகா—என்பார்க்கே
வந்தருள் சோணேச வயதுநா றுங்கொடுத்துத்
தந்தருள்வாய் நின்பதமே தான். (௨)

ஆரிருக்க லாமே யருணேசரே யுலகில்
நீரொருத்த ரல்லாமல் நேடுங்கால்—நீரும்
பிறவாமலே யிருந்தீர் பின்பிறந்தா ரெல்லாம்
இறவாரோ மண்மீ தினில். (௩)

வானவரு மித்திரனு மாலொடய னுஞ்சென்று
போனவிடம் புன்முளைத்துப் போகாதோ—தானமுதாய்
அத்த ருணேச னன்பாக நஞ்சுதனை
பத்தியுட னுண்ணாத போது. (௪)

சோணு சலனைத் துதியாமற் ஜெல்லுலகில்
வீணுசை கொண்டிருந்து விட்டோமே—பூணும்
பெண்டிர்மக்கள் சுற்றம் பெருவாழ் வெனக்கருதி
உண்டி தனக்கா யுழன்று. (௫)

ஓதி யுரைத்தாலு மூண்படுக்கை யற்றாலும்
மாதரைத்தன் னெஞ்சின் மறந்தாலும்—நீதி
வழுவாமற் சோணகிரி வள்ளலை யன்பு
தழுவாம லாமோ தவம். (௬)

அங்கனையார் மேல்வைத்த வாசையிலே நூற்றிலொரு
பங்கருணை யீசன்மேற் பற்றிஞல்—சங்கையற
அத்தவின் பம்பெறலா மாராய்ந்து நெஞ்சமே
நித்தர் தவம்பெறலா நீ. (௭)

இந்தவரந் தானே யெமக்கமைய நீகுருவாய்
வந்திருக் கோலத்தை மாருமல்—சிந்தைதனில்
வைச்சிருக்க வுச்சியிலே வைத்தபதத் தைக்கருத்தில்
தைச்சிருக்க சோணுச லா. (௮)

உன்னை யடுக்க வொருகுருவைக்கீழ் வையமெலாம்
பண்ணைப் பணத்தேடப் பாவிக்க—எண்ணியெம்
அந்தநாள் பின்னிட் டடியே னுனைத்துதிப்ப
தெந்தநாள் சோணேச னே. (௯)

மண்ணும்பொன் ஞகாதோ மாற்றுன் விலகாதோ
பண்ணும் தவங்கள் பலியாவோ—நண்ணுபுகழ்
விண்ணும் பரவும் விமல வருணகிரி
அண்ணல் புரிந்தா லருள். (௰)

மாணயிலி பொய்யன் மனங்கனிவி லாதபுத்தி
யீனனிவ னென்று யிகழாதே—ஞான



வுருவே யருணகிரி யூமசி வாய
குருவே யெனையாண்டு கொள். (௧௧)

ஆதிமறை தேடரிய அண்ணு மலையாருக்
கேதுமுடி யேதடியென் றேத்துவேன்—நீதி
ஒளியே திருமேனி யும்பருக்கு மெட்டா
வெளியே யவரிருக்கும் வீடு. (௧௨)

ஆயாசந் தீர்க்கு மருணேச ரேதமியேன்
மாயாம லொன்றுதர மாட்டரோ—ஓயாமல்
ஊசலுக்கு நேரா யுழலுமனந் தானெருவர்
வாசலுக்குப் போகா வரம். (௧௩)

பல்லுயிரைக் கொன்ற பழிநீங்கு நீங்காத
புல்லறிவு நீங்கும் புலைநீங்கும்—கொல்லவந்த
கூற்றுவனு நீங்குங் குவலயத்திற் சோணகிரி
போற்றுந் தவத்தோர்க்கப் போது. (௧௪)

சிந்தையினல் வாக்கினல் செய்தொழிலால் பார்வையினல்
வந்தபிறப் பிறப்பும் வனபிணியும்—எந்தைகுரு
நாதனெனச் சோணகிரி நம்பனென மால்தேடும்
பாதனெனப் போமே பறந்து. (௧௫)

பொல்லாத வெம்பிறவிப் புண்ணுக் கொருமருந்து
சொல்லா யருணகிரிச் சோதியே—எல்லாரும்
போற்ற நடம்புரியும் புண்ணியா நான்மறைகள்
ஏற்றுஞ் சிவலோக னே. (௧௬)

சூலங் கரத்திருக்கச் சோதிமழு மானிருக்க
ஆலமுண்ட கண்டத் தழகிருக்க—வேலை
விழித்த விழியிருக்க மெய்யோக ராயா
தரித்ததென்ன தாமதமோ தான். (௧௭)

அடைக்கலமாச் சோணகிரி யப்பனடி சார்ந்தோம்
கடைப்பிறவி முந்நீர் கடந்தோம்—படைக்குமந்த
முண்டகனை யும்மதியோம் மூரிக் கடாவேறும்
கண்டகனை யும்மதியோங் காண். (௧௮)

இந்தப் பிறப்பி லிரங்காத தேவரீர்
எந்தப் பிறப்பி லிரங்குவீர்—சிந்தைக்
கனியே யருணகிரிக் கண்ணுதலே பொல்லாத்
தனியே னிடர்தீரத் தான். (௧௯)

ஆயபிணி முந்நூற் றறுபதுக்குங் கூடாகி
மாயுமுடலைச் சுமக்க மாட்டேனே—தோயுமதி
அப்பணியும் வேணி யருணேச ரேதமியேற்
கிப்பிறவி மாற்றீ ரினி. (௨௦)

பொழுதிருக்கச் சாமமெனும் போதே யெழுந்து
முழுகிவெண் ணீற்றினின் மூழ்கி—தொழுதனது
பொன்னுனை சேவடியைப் போற்ற விறைஞ்சருணை
மன்னு தருவாய் வரம். (௨௧)

வையமுழு தும்படைத்து வாழு மருணகிரி
ஐய னமைத்தபடி யல்லாமல்—பொய்யமனம்
நூறு யிரமாக நோக்கிடினு மெள்ளளவும்
ஏறு தலிற்குறை யாது. (௨௨)

ஆகாவழியா யடியேன் பிறந்திறந்து
போகா வழியருளப் போகாதோ—வாகா
அருணையனே யன்பர்க் கனவரத மான
கருணையனே கண்பார்த் தருள். (௨௩)

கைவிலை நீயிருக்கக் கன்னெஞ்ச னேனுலகப்
பொய்யிலே வீழ்ந்தழிந்து போவேனோ—மெய்யிலே



...று வினைத்துநிக்கு நேசருளத் திற்கருப்பஞ் (௨௪)
...சாறு மருணு சலா.

...நெற்றிவிழி கண்மூன்று மித்திரையோ சோணேசா
...பற்றுமழு சூலம் பறிபோச்சோ—சற்றும்
...அபிமான மின்றே வடியார்க ளெல்லாம்
...சபிமாண்டு போவதே தான். (௨௫)

ஆண்ட குருவை யறியாத மானிடர்கள்
...ஆண்டி விடவொருத்தி தோன்றினள்—நீண்டபுகழ்
...இக்கெலாம் போற்றுதிரு வண்ணு மலைதனில்வாழ்
எக்கலா தேவி யிவள். (௨௬)

குற்ற லரிசி குறைந்தநாள் போதாதோ
வெற்றிலைக்குங் கேடுவர வேண்டுமோ—நித்தநித்தம்
அண்ணு மலைநாதா ஐம்ப தரைக்காசுக்
கெண்ணிவிற்ற தற்குவந்த தென். (௨௭)

கோள ரிருக்குமூர் கொன்றுதுங் கேளாவூர்
காளையரே நின்று கதறுமூர்—நாளும்
பழியே சுமக்குமூர் பாதகரே வாழுமூர்
அழியாதூ ரண்ணு மலை. (௨௮)

வீடுதருஞ் சோணகிரி வித்தகனார் சந்நிதியுடன்
நீடுதே ரேறியவர் நிற்கின்றார்—ஓடி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தவர்க்கு முத்தி
யிடக்கிடைக்கும் யாருக்கு மின்று. (௨௯)

பூமாலை சாத்திப் புவிபுகழ்சோ ணேசற்குப்
பாமாலை சூட்டிப் பலநாளும்—நாமாலை

பண்ணா யிரம்பாடிப் பார்த்திருக்க லாமேற்குக்
கண்ணா யிரம்வேண்டுங் காண். (௬0

எனக்குத் தனக்கென் றிகலியைந்து பூதம்
தனக்குத் தனக்கே தலையாய்—மனக்குவசம்
ஆவதில்லை சோணகிரி யையா விதைநீக்கப்
போவதில்லைப் போகாப் பொறி. (௬௧

போகாப் பொறியாய்ப் புலனைந்துங் கூடியவித்
தேகாதி தன்னுகைக்குந் தேட்டமா—யோகா
இருக்கு மருணகிரி யீசா விதனை
உருக்கும் வகையே துணை. (௬௨

தாயினுநல் லாரினிய தாதையினுந் தானல்லார்
ஆயிலரு ணேச ரடியேற்கு—மாயவுடல்
நோகப் பொருந்துவரோ நூறு வயதிருந்தும்
சாகப் பொருந்துவரோ சாற்று. (௬௩

பத்தர்களை வாவென்றும் பாவிகளைப் போவென்றும்
முத்திவழி யீதென்றும் மூதலிக்கும்—சத்தியமே
அன்னவயல் சூழருணை யண்ணா மலைநாதர்
சன்னிதியி லூதுதிருச் சங்கு. (௬௪

நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுதவன்றன்
இச்சையிலே தானு மிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதும் முண்பதுவும் வந்துதிரு வாசலிலே
தூங்குவதுந் தானே சுகம். (௬௫

திருவருணைத் தனிவெண்பா
முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணாமலைத்
# தீபதரிசனச் சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாகவிளங்கும் ஸ்ரீகைலாசபதியானவர் இந்த உலகின்கண் ஆங்காங்கு வசிக்கும் ஆத்மகோடிகளொவ்வொன்று முய்யும்பொருட்டுத் திருவருட்கண்சார்ந்து திருக்கோயில்கொண்டிருக்கின்ற பலஸ்தலங்களு ளொன்றாகியும், ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தசுவாமிகளாலும், ஆளுடையவரசுகளாகிய திருநாவுக்கரசுசுவாமிகளாலும், பதிகம்பெற்றுள்ளதும், ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாசகசுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானை பாடியருளியதும், பட்டினத்துச்சுவாமிகளது வீரியத்தாற் றிருவவதாரஞ்செய்தருளிய அருணகிரியார் திருப்பரங் குன்றின்கண்ணே எழுந்தருளி யிருப்பவரும், திருச்செந்தூரின்கண்ணே எழுந்தருளி யிருப்பவரும், திருவாவினன் குடியின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருவேரகத்தின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், இதுவன்றி மலைகடோறும் விளையாடுதலே நிலைபெற்ற குணத்தையுடைய முருகப்பிரானிடத்து அன்புடையோராய் திருப்புகழ் முதலிய அநேகபிரபந்தங்கள் பாடியருளப்பெற்றதும், சோழதேசமுதலான தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோராகிய அறிவுடையோர்க ளேற்படுத்தினக் கிரமப்படியே மகதநாடு அல்லது நடுநாட்டுக் குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய

திருவண்ணாமலை யென்னும் திவ்வியக்ஷேத்திரமானது, கிரேதாயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில் தாம்பிரமலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவும், திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்று இவ்வாறு பல திருநாமங்களுடையதும்: ஆன்மகோடிகளை இடைவிடாது இரக்ஷிக்குஞ் சிவபெருமானே கிரிரூபமாயிருப்பதும்: பார்வதிதேவியார் திருவவதாரமானதும்: திருக்கண் புதைத்ததும்: மகிடாசுரமர்த்தனஞ்செய்ததும்: இடப்பாகம் பெற்றதும்: சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கதபாண்டியன் பேறுபெற்றதும்: கலாதரன், காந்திசாலி, தவஞ்செய்து பேறுபெற்றதும்: அக்கினிவம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகந்தீர்ந்ததும்: இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களும்: அன்பர்கள் திருமலைவலம்புரிதலும்: ஆதித்தனுக்கு தரிசனங்கொடுத்ததும்: சூரியவம்சத்தனாகிய பிரதத்தராஜனால் அநேககாணிக்கைகள் தரப்பெற்றதும்: அஷ்டவசுக்களும் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்ந்ததும்: புளகாதிபன் பேறுபெற்றதும்: நினைக்க முத்தி தரும் தலமென்பதும் ஆகப் புராணத்திற் சொல்லப்படுகின்றன.

பரமசிவம்:—மலையுருவமானதற்குக் காரணமியாதெனின், ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தாம்தாம் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் அழற்றூணாயவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத்தீர்த்து அநுக்கிரகித்து அவர்கள் வேண்டுதலினால் ஒரு சிறியமலையா யுருக்கொள்ள, அதைக்கண்ட பிரமதேவனும், மகாவிஷ்ணுவும், சுவாமியைநோக்கி இம்மலையி னுச்சியில் ஒருஜோதி எந்நாளுந் தெரியும்படிக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள், அதற்குச் சிவபெருமானவர் வாரீர் பிரமவிஷ்ணுக்களே! கார்த்திகைமாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையி னுச்சியின்கண் ஒரு



ஜோதிகாண்பிப்போம்; அச்சோதியைத் தரிசித்தவர்கள் பிணியும் வியாதியும், நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்றுவாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும், இதைத் தொழுதவர்களுக்கும், தரிசித்தவர்களுக்கும், அவர்மட்டில்லாமல், அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங் கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்து போல் இருப்பதினால் மலை மருந்தென்றும் அழலின்வண்ணமாயிருப்பதினால் அருணாசலமென்றும் பெயருள்ளது; இதை ஒருதரஞ் சொன்னவர்களுக்கு பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்தபலன் வருமென்பது அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமதேவனும், மகாவிஷ்ணுவும், ஆனந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியோங்கள் எப்படி பூசைசெய்யக்கூடும்! ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருளவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்தமாகின்றோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தமாய் மயனென்னுந் தேவதச்சனால் ஆலயங் கட்டுவித்தார்கள். அப்போதவ்விடத்தில் வளப்பம்பொருந்திய நகரமும், புண்ணிய தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாமலும் ஆகாயகங்கை சுனைகளாகவும், கற்பகவிருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும், இருடிகளும், சித்தர்களாகவந்து பிறந்தார்கள். அரம்பாஸ்திரீகள் தாசிகளாகப்பிறந்தார்கள். ஆகையால் எல்லாஸ்தலங்களும் உட்பட்டென்றும், அருணாசலஸ்தலம் முதலென்றும், அதில் சிவபெருமான் கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச்

சொல்லுதற் கருமையென்றும், நமது பெருமானாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேயமுனிவருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியபிரகாரம் அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில்வருகின்ற கார்த்திகைநக்ஷத்திரத்தில் ஜோதி தரிசனமாகிக் கொண்டுவந்தபாவனையாக இப்போதும் அந்தமலையின் மேல் தீபதரிசனமாகின்றமையால். அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம்வந்து தங்கடங்கள் சத்திக்குத் தக்கபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ்செய்து அருணசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ்செய்து உள்ளன்போடு துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையும் மோக்ஷத்தையுமடைவார்கள்.

இதன்றியும், ஆதிவாரத்தில் திரிகரணசுத்தியுடன் தீர்த்தமாடி அந்தமலையை யாதொருசிந்தனையில்லாமல் நிர்மலமாய் வலஞ்செய்து தம்மாலியன்றவளவில் தர்மங்கள்செய்தவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச்சேர்த்துக்கொள்வார்கள்; சோமவாரத்தில் அருணோதயத்திற்குமுன் தீர்த்தமாடி சாவதானத்துடன் வலம்வந்தவர்கள் தேவேந்திரனைப்போல் ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாருப்பியத்தை அடைவார்கள்; மங்களவாரத்தில் தீர்த்தமாடி யாருடனும் வாய்பேசாமல் சித்தத்தைசிவன்பாலிருத்தி வலஞ்செய்பவர்கள் தங்கள்வறுமையும் சங்கிலித்தொடர்போல் வருகின்ற எழுபிறப்பையும் நீங்குவார்கள்; புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சணஞ்செய்வோர்கள் நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும், அறுபத்துநான்கு கலைகளையும் தெளிந்து முத்திக்குரியவராய்த் தேவர்களாவார்கள்; குருவாரத்தில் வலம் வந்தவர்கள்; திரிமூர்த்திகளும்புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மேலாவார்கள்; சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்திற் சேர்வார்கள்: சனிவாரவுதயத்தில் வலம்வந்தவர்களுக்கு நவக்



கிரகங்களும் பதினோராமிடத்தில் நற்பலனைக்கொடுக்கும்; சிவராத்திரியிலும் விருஷப்பிறப்பிலும், ஐப்பசி முதலாகிய மூன்று மாதங்களிலும், வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமானபலன் சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தரும் தேவரும் இந்தமலையை உள்ளன்புடன் வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சணஞ் செய்யும்போது வாகனத்தின்மேலேறிக்கொண்டு வராமலும், போர்வை போர்த்துக் கொள்ளாமலும், குடைபிடித்துக் கொள்ளாமலும், பாதரட்சை தொடுத்துக் கொள்ளாமலும், தாம்பூலந் தரியாமலும், வேறொருசிந்தனை யில்லாமலும், மனத்தினால் வந்தனஞ்செய்து அருணசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருத்தல் வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ்செய்து ஆலயத்திற் போகின்றவர்களுள் அனுகூலமல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக்கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச்செய்வித்தால் தங்கள்கையினாற்செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

[சர்வாலய தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.]

ஸ்ரீ-கைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்போது, அவ்விடத்தில்-ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒருதீபம் அணையுந்தருணத்தில் ஓரெலியானது அதிலிருந்தநெய்யை உண்ணப்போனபோது, அவ்வெலியின்முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டியமாத்திரத்தில், பிரகாசம் அதிகரித்ததினால் சிவபெருமானவர் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானுடச்சரீரமும், அரசும், மற்றப்பேறுந்தந்து பூமியில்

பிறக்கும்படி கட்டளையிட்டனர். அவ்வெலியானது மாபலிச்சக்கிரவர்த்தியாய்ப்பிறந்து சகல ஐசுவரியத்தையும் அனுபவித்திருக்குங் காலத்தில், ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக எத்தனித்துத் தன் இராசசின்னமுதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சணம் வருகையில், அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர் துளி இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன், அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது, ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே? நீ யெலியும் அசங்காரி யாகையால் நம்மாலுணர்க்கித் துன்பமுண்டாயிற்று: நீ இன்றுமுதல் உணர்ந்து, நெய்முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையே யானால் உனக்கு இந்த விரணந் தீர்ந்து சாயுச்சியபதவி கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற அச்சக்கிரவர்த்தியானவர் ஆநந்த மடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும், மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும், தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில், ஒருநாள் ஸ்ரீ-கைலாசபதியாகிய சிவபெருமானானவர் திருவுளமிரங்கி கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில், தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபத மளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாரும் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து, சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரி, அவல், நிவேதனஞ் செய்தார்கள். இவ்வாறு கைலாசபதியான சிவபெருமான் மாபலிச்சக்கிரவர்த்திக்குச் சோதிசொரூபமாய்த் தரிசனங்கொடுத்த காரணமாக இன்றும் சிவாலயங்கடோறும் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம்



கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் * சுட்கப்பனை கட்டவும் ஆயிற்று.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னாள் பரணி நக்ஷத்திரஞ் சாயுங்காலே அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலியவைகளின் மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனஞ்செய்து அந்தத்தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்முனே பூசித்து வைக்கவேண்டும்.

மறுநாள் சாயங்காலே அர்த்த சூரியமண்டலத்தில் தென்னை, பனை, கமுகு, வாழை, மூங்கில் என்னும் இத்தமரங்களில் ஓர் வித மரத்தை ஆலயத்திற்கும் இந்திரத்திக்குக்கும் மத்தியஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும் இந்த மரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம்.

## தண்டவுன்னதப் பிரமாணம்.

சுவாமி கர்ப்பக்கிரகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது, அந்தவிமானக்கழுத்தி னளவாவது இருக்கவேண்டும்; இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சருகாவது தாழஞ்சருகாவது அசோகச்சருகாவது சேர்த்து விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணிநக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நட்சத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதமாய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி ௸ தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அந்தத்தண்டத்தின்மேல்வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச்சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்டத்தைச் சோதித்துவிடவேண்டும். அச்சோதியைச் செபெரு

---

* சுட்கப்பனை யென்பது-சொக்கப்பனை.

மாறுகப் பாவனைசெய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும், மறுமையில் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

### தண்டவிதி.

உத்தமம் தென்னைமரம்; மத்திமம் பனைமரம்; அதமம் பாக்குமரம்; அதமாதமம் வாழையும் மூங்கிலுமாம்.

### தண்டவுன்னதப் பிரமாணம்.

உத்தமம் உயர்வு, மத்திமம் அதன் கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச்சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணிமிதிதி பிரதானமாகவும், தீபம் வைக்கவேண்டியதென்று ஆகமங்களில் சொல்லுகின்றது.

தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

முற்றிற்று.



ௐ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## அருணாசலபுராணச்சருக்கத்தின்

### திருவுருவப்படங்களட்டவணை.


| | | |
|---|---|---|
| ௧-வது. | விநாயகர் படம். | ௧ |
| ௨-வது. | நந்திதேவர் படம். | ௧ |
| ௩-வது. | திருமலைப் படம். | ௧ |
| ௪-வது. | அடிமுடி தேடிய படம். | ௧ |
| ௫-வது. | பார்வதியார் திருவவதாரப் படம். | ௧ |
| ௬-வது. | திருக்கண்புதைத்த படம். | ௧ |
| ௭-வது. | இடப்பாகம்பெற்ற படம். | ௧ |
| ௮-வது. | மகிடாசுரசம்மார படம். | ௧ |
| ௯-வது. | வச்சிராங்கதபாண்டியன் படம். | ௧ |
| ௧௦-வது. | வல்லாளமகாராஜன் படம். | ௧ |
| ௧௧-வது. | தீர்த்தத்தின் படம். | ௧ |
| ௧௨-வது. | திருமலைவலம்புரிப் படம். | ௧ |
| ௧௩-வது. | ஆதித்தபகவான் படம். | ௧ |
| ௧௪-வது. | பிரதத்தராஜன் படம். | ௧ |
| ௧௫-வது. | பாவந்தீர்த்த படம். | ௧ |
| ௧௬-வது. | புளகாதிபன் படம். | ௧ |


ஆக ஐதிகப் படங்கள் பதினாறும் அடங்கியிருக்கின்றன.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலபுராணச்சருக்கத்தின் அட்டவணை.


| சருக்கங்கள். | | பக்கம். |
|---|---|---|
| | பாயிரம். | கங |
| க-வது. | திருநகரச்சருக்கம். | கஉகூ |
| உ-வது. | திருமலைச்சருக்கம். | கசுஎ |
| ங-வது. | திருவவதாரச்சருக்கம். | உ0எ |
| ச-வது. | திருக்கண்புதைத்தசருக்கம். | உருங |
| ரு-வது. | இடப்பாகம்பெற்றசருக்கம். | உகூங |
| சா-வது. | வச்சிராங்கதபாண்டியன்சருக்கம். | ஙஉரு |
| எ-வது. | வல்லாளமகாராஜன்சருக்கம். | ஙசுஎ |
| அ-வது. | தீர்த்தச்சருக்கம். | ங[illegible] |
| கூ-வது. | திருமலைவலம்புரிசருக்கம். | ச0கூ |
| க0-வது. | ஆதித்தன்சருக்கம். | சஉஅ |
| கக-வது. | பிரதத்தராஜன்சருக்கம். | சஙஅ |
| கஉ-வது. | பாவந்தீர்த்தசருக்கம். | சசங |
| கங-வது. | புளகாதிபன்சருக்கம். | சருக |


பாயிரமுட்பட சருக்கங்கள்—கச.

முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலபுராணச் செய்யுளகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அ. | | அண்ணாமலையுடையா | ஙசச |
| அக்கணமழற்கிரி | ககங | அதற்பின்னன்னனு | உருஉ |
| அக்கணங்கயிலை | ஙகஎ | அத்தனோர்பெருங் | கஉக |
| அக்கணகன்னிராடி | ஙஅச | அத்தனைசயதல | கசங |
| அங்கர்புற்றேற | சஙக | அத்தனுமொழிவா | உசஎ |
| அங்கமெல்லாமயிர் | கசரு | அத்தனைசயகீதிகட | உஅக |
| அங்கதன்பிணமழு | ங0கூ | அத்தடமுழுகி | ச0உ |
| அங்கம்யாவு | ஙஉஉ | அத்தனடியார் | ஙருச |
| அங்கிருவமோங்க | கஉஅ | அத்திரிமுதற்றலை | உஅரு |
| அங்கிராசனபதி | கஎக | அந்தகர்க்குஞ் | ஙசக |
| அஞ்சிதன்பெயரா | ஙகூரு | அந்தமுடிவெல்லை | கஎகூ |
| அஞ்சனக்கிரியில் | உகங | அந்தரத்தமா | உகக |
| அஞ்சவெளவலம | உருஅ | அந்தவேலாயி | உருசு |
| அஞ்செழுத்தம்வாழி | சகங | அந்தவிடத்துமை | உஅங |
| அடிதலைவாவி | ககக | அந்தரியுமாய | உகக |
| அடலவன்வாக்கண் | ங0உ | அந்தவனாடர் | ஙஉஎ |
| அடுத்தசெஞ்சடை | ஙஉங | அந்தாவியக | ககக |
| அடுத்தருணகிரி | உ0க | அந்தமலைவலம் | சஎ |
| அட்டதிக்குப்பாலரும் | உஉக | அந்தகத்தடத்தி | ஙகூஅ |
| அட்டதிக்கினைத்தங் | உசக | அந்தவினை | சகங |
| அட்டவயிரவர்படை | உகூக | அந்தமைந்தர்தம்மை | சஉக |
| அணிச்சிறுபிறை | ஙசங | அப்பதிதமிழ்நாட் | கருச |
| அண்டகூடமுண்டு | உஉஉ | அப்படிமகிடன்சிறு | உகூஎ |
| அண்ணாவிவைமொழி | உ00 | அப்பொழுதாறு | உசரு |
| அண்ணாமேலதமையா | ஙருக | அம்மலைச்சுடாடி | கசஉ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அம்போருகவஞ் | ௧௬௮ | அற்பமிதாம | ௩௭௧ |
| அம்மொழியோர்க்த | ௩௭௬ | அற்றமற்றமுனிவர் | ௪௨௯ |
| அயனசங்கிராம | ௪௨௧ | அற்றமில்லவன் | ௧௫௫ |
| அயன்றவத்தினி | ௩௧௨ | அனந்தமாபுரத்தி | ௨௭௧ |
| அரதனுங்கதனு | ௩௪௧ | அனையமருக்கக | ௨௬௨ |
| அரவொருகுழவி | ௩௮௫ | அன்பர்கருதி | ௪௫௫ |
| அரன்சிலை | ௨௩௪ | அன்பினுயர் | ௨௮௭ |
| அரம்மையுருப்பசி | ௩௧௧ | அன்புமுனியுரைத்த | ௩௧௫ |
| அரிட்டையென்ப | ௧௭௧ | அன்றுமாறிசை | ௧௫௧ |
| அரிமாவிதனடி | ௧௮௮ | அன்னதுவாயிரு | ௨0௩ |
| அரியயனாவிடா | ௧௫0 | அன்னமிசை | ௨0௧ |
| அரியயனுமன | ௨0௧ | அன்னவயலருனை | ௪௪௭ |
| அரியமண்ட | ௨௫0 | அன்னமோகினியோ | ௪௪0 |
| அருக்கவெண்பஞ்சு | ௨௩௮ | அன்னவன்மகிட | ௨௧௫ |
| அருசிகன்றனை | ௩0௫ | அன்னவீரக | ௩௩௩ |
| அருணகிரிவலம் | ௪௧௩ | அன்னையுங்குகனை | ௨௭0 |
| அருணைவாழிறை | ௪௩௪ | ஆ. | |
| அருணைப்பதிவள | ௩௪௫ | ஆகமாரணி | ௨௪௮ |
| அருணைநகர்வள | ௧௨௭ | ஆகமாதிமதனி | ௩௨௮ |
| அருந்தவரைம்பதின் | ௩௧௩ | ஆகையாலும | ௧௯௭ |
| அரும்பவிழ்மலர் | ௪௩௧ | ஆங்கவர்சொற் | ௩௧௪ |
| அருவுருவாமொரு | ௩௧௯ | ஆசையாலுருகு | ௧௯௫ |
| அர்க்கமாமலையுள | ௧௫௧ | ஆசைதருந்திரு | ௨0௫ |
| அலகைநாலிரண்டு | ௨௧௮ | ஆடவர்க்த | ௩௨௧ |
| அவ்வுரைமறுத்தெ | ௨௯௮ | ஆடுமந்தகதி | ௧௪௪ |
| அழகுதரக்கனி | ௧௨௫ | ஆதரவாகத்தங்க | ௩௮௧ |
| அழிந்தனைய | ௧௯௪ | ஆதியாமிவர்க | ௧௫௪ |
| அழியாதவளநக | ௨0௪ | ஆதியேசரண | ௩௮௭ |
| அளகையாளரசே | ௩௯௭ | ஆதிவேதனரு | ௩௯௨ |
| அளித்திடுகெளி | ௧௭௪ | ஆரணனுநாரணனு | ௧௮0 |
| அறிதற்கரிதா | ௧௯௮ | ஆரணன் | ௨௯௭ |





| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| ஆரிடமிராக்கத | ௧௪௯ | இலகுமங்கை | ௨௫0 |
| ஆலயத்திலுற்ற | ௩௯0 | இல்லமுற்ற | ௩௮௧ |
| ஆவடியளவு | ௪0௪ | இளமுலை | ௧௧௫ |
| ஆளிமேற்கன்னி | ௩0௩ | இளைத்தகொடி | ௨௧0 |
| ஆளியேறுசென் | ௩0௮ | இறந்திடும் | ௧௫௯ |
| இ. | | இறந்தவுயிரி | ௨௯0 |
| இக்கதைபடி | ௪௯௪ | இன்பெருகுமுதி | ௩௮௨ |
| இக்காதையின் | ௩௪௯ | இன்னதா | ௧௮௭ |
| இங்கிதுவாய் | ௨௨௪ | இன்னவாறமை | ௩௭௮ |
| இங்கிவையிரு | ௨௨௯ | ஈ. | |
| இங்கிவன் | ௨௮௪ | ஈசர்வடிவான | ௪௫௮ |
| இதைவிடதேவ | ௩௭௪ | ஈசனனிகதி | ௧௩௧ |
| இத்தலத்தில் | ௨௮௪ | ஈசனோர்விழி | ௨௫௯ |
| இத்தலமுதல் | ௨௮௮ | ஈசனோர்வடி | ௪௨௯ |
| இத்தலத்தை | ௧௯௮ | ஈசனுமங்கு | ௨௫௯ |
| இத்தகைசிறப்பை | ௩௫௨ | ஈதுகண்டவ | ௩௧0 |
| இந்தமொழி | ௨௮௮ | உ. | |
| இந்தவண்ணம் | ௩௫௫ | உண்ணிலாவு | ௨௧௨ |
| இந்தமரக்கதை | ௩௨௪ | உடுக்கணமுதி | ௧௭௮ |
| இந்திரநீல | ௧௧௨ | உதயமேசனி | ௪௨௧ |
| இந்திரன்போன | ௯௫0 | உத்தமதலத்தி | ௪0௪ |
| இந்திரா | ௧௪௩ | உந்திமலரோ | ௧௭௫ |
| இப்படியே | ௧௪௫ | உருட்டுசெக | ௧௮௧ |
| இமகிரிப்பதி | ௨௪௮ | உருவுபலவேறு | ௪௧0 |
| இமையவெற் | ௨௪0 | உருவெனத்தெரி | ௨௩௩ |
| இம்மடலெங் | ௧௮௧ | உலகினில்வரும் | ௩௮0 |
| இரவிகள்சந் | ௧௧௫ | உலவுகின்ற | ௪௩௧ |
| இருப்பனத்தன் | ௧௩௮ | உறவொடுபகை | ௧௯௭ |
| இருமருங்குந் | ௧௩௩ | உறுதுணை | ௩0௪ |
| இருமைசேர் | ௧௭0 | உற்றபெருந்தவ | ௪௪௧ |
| இருவினையகற்று | ௪௨௩ | உன்னுமைந்த | ௧௯௧ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| கூ. | | சந்தனமனமு | ௨௩௫ |
| கூற்றுனை | ௨௬௯ | சா. | |
| கெ. | | சாபவெஞ்சிலை | ௩௦௪ |
| கெண்டைபோல் | ௩௭௦ | சாலைகள்சமைத் | ௬௦௫ |
| கே. | | சி. | |
| கேட்டளவில் | ௩௦௦ | சித்தாந்தத்தொ | ௨௨௮ |
| கை. | | சிந்தையிற்கலலை | ௩௭௭ |
| கைதைய | ௪௧௫ | சிலகணைக்க | ௨௨௧ |
| கைவிலங்கனை | ௩௩௨ | சிலந்தியொன் | ௬௦௭ |
| கொ. | | சிலையெலாம் | ௧௫௮ |
| கொண்டலேழை | ௨௧௭ | சிறந்திக்குப் | ௨௨௧ |
| கொண்டுசென் | ௩௧௨ | சிறையெலாம் | ௧௮௮ |
| கொந்தாருமலர் | ௧௨௦ | சீ. | |
| கொந்தனக | ௨௧௦ | சீராகேட்டி | ௧௧௩ |
| கொம்பனுள் | ௨௪௮ | சு. | |
| கொய்வனச | ௧௩௧ | சுந்தரமன்று | ௩௮௮ |
| கொற்றவனில் | ௩௮௭ | சுந்தரவருணை | ௩௫௭ |
| கோ. | | சுரமடக்கெ | ௨௪௯ |
| கோணியரு | ௨௩௭ | சூ. | |
| கோதமனே | ௨௮௯ | சூடகச்செங்கை | ௪௫௩ |
| கோதமாச்சிர | ௨௧௨ | சூலபாணி | ௩௦௫ |
| கோபமேதவம | ௩௯ | செ. | |
| ச. | | செங்கனென் | ௪௬௯ |
| சக்கரதீர்த்த | ௬௦௧ | செங்கைவீசாமற் | ௪௨௩ |
| சங்கரன் | ௨௩௯ | செத்ததேவர் | ௩௨௨ |
| சடைமிளம் | ௨௪௩ | செந்தபனர் | ௩௩௫ |
| சண்டனுருத் | ௨௪௮ | செம்மலையுரு | ௩௩௯ |
| சண்முகனை | ௪௪௯ | செய்தபின் | ௩௪௩ |
| சத்தபுரி | ௪௬௭ | செருமலையுங்கனி | ௩௯௯ |
| சத்தியமதா | ௧௪௧ | செருவிலங்க | ௩௦௯ |
| சந்தமு | ௩௭௭ | செல்வதின்றெம | ௨௩௪ |





| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| சென்றுசோ | ௩௭௩ | தாமரைக்கண் | ௨௩௪ |
| சென்றுவேசை | ௩௭௫ | தாமரகுனைத்த | ௨௩௯ |
| சே. | | தாயனைக்கண் | ௨௧௧ |
| சேரமானின | ௩௩௧ | தாயுமங்கது | ௩௧௨ |
| செவிநுர்க்கினிய | ௩௩௯ | தார்ப்பொலி | ௧௧௦ |
| சேற்பொதிந்து | ௬௧௮ | தாவரத்தை | ௨௯௧ |
| சொ. | | தானவர்சென்று | ௨௩௧ |
| சொல்லுதலும் | ௬௪௯ | தி. | |
| சோ. | | திக்குப்பாலகர் | ௨௪௭ |
| சோணகிரிவலம் | ௬௧௧ | திருந்துசேயா | ௪௦௦ |
| சோலைபோன் | ௩௩௧ | திருவிழைய | ௨௪௫ |
| சோதிபெறுக | ௨௭௫ | திருவுயர்தரும | ௩௯௪ |
| ஞா. | | தில்லையைக்காண | ௧௫௧ |
| ஞானம்வாழி | ௪௧௩ | திலையனைவு | ௧௨௯ |
| த. | | தீ. | |
| தக்கவிராட்புரு | ௧௩௯ | தீர்த்தமும்மதிற் | ௩௧௧ |
| தங்கனுயகலன் | ௬௨௮ | தியிருந்த | ௨௧௪ |
| தவழ்திரவிலாத | ௪௨௪ | து. | |
| தம்போனை | ௧௮௭ | துக்கமழுவுழைபிரம்பு | ௧௩௦ |
| தருணராகிய | ௧௭௨ | துங்கவாம்பரி | ௧௬௦ |
| தலத்தின்மேன் | ௩௧௨ | துத்துயிக்கொடி | ௩௦௫ |
| தனபதிதடந்திற் | ௩௧௮ | துத்துமிழுதலா | ௩௦௪ |
| தனுவலித்தவ | ௧௭௦ | துன்னியமைகதை | ௧௧௧ |
| தன்னிகர் | ௧௫௩ | தெ. | |
| தன்னையே | ௧௫௩ | தென்றிசைதரும | ௩௧௯ |
| தன்னையுநியர் | ௬௫௪ | தே. | |
| தா. | | தேக்குநாவி | ௧௪௦ |
| தாங்காழியவன் | ௧௩௭ | தேங்குமன்பிற் | ௩௧௨ |
| தாதவிழ்மலரோ | ௪௨௭ | தேசின்மிகுகயிலை | ௩௭௫ |
| தாந்தயிவை | ௨௮௫ | தேவர்கோன்முன் | ௪௫௫ |
| தாத்திரிமுற்று | ௩௫௭ | தேவர்மானிட | ௨௫௭ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| தேவுறைகயிலை | ௯௧௮ |
| தேறுகின்ற | ௩௨௪ |
| தேனூருதடத்தின் | ௪௦௨ |
| **தொ.** | |
| தொண்டருட | ௨௮௨ |
| **தோ.** | |
| தோடுகமழ் | ௫௨௪ |
| தோரணம் | ௨௪௨ |
| **ந.** | |
| நச்சுகோபுர | ௨௮௦ |
| நஞ்சுகப்போர்வை | ௪௦௧ |
| நஞ்சுகொப்புளி | ௨௧௪ |
| நடுக்குமுறு | ௯௮௨ |
| நந்தியிரு | ௧௨௫ |
| நவரதியும் | ௫௧௧ |
| நவ்வியங்காத்தி | ௫௭௦ |
| நன்றிதரு | ௬௧௯ |
| **நா.** | |
| நாடுமலருமன் | ௨௮௨ |
| நாட்டுமெய்வரச | ௫௫௦ |
| நாதன்வாழருமை | ௫௯௮ |
| நாமமோகன் | ௧௧௧ |
| நாயகனிசை | ௧௮௦ |
| நாயகனுமரும் | ௪௦௧ |
| நாயகன்மொழி | ௨௮௮ |
| நாரிதனை | ௫௧௮ |
| நாறுபொழி | ௬௯௭ |
| நாற்றிசையும் | ௫௨௦ |
| **நி.** | |
| நிட்டைசெய்வோர் | ௫௭௯ |
| நித்தனைமுதற் | ௨௮௩ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| நிர்த்தர | ௪௧௮ |
| நிருத்தாலய | ௪௦௪ |
| நிலத்தொழு | ௧௧௨ |
| நிழலையும் | ௨௭௫ |
| நினைப்பளவின் | ௬௯௭ |
| நின்னிலைமை | ௨௮௫ |
| **நீ.** | |
| நீக்கருநிருதி | ௫௧௭ |
| நீடருணகிரி | ௪௧௯ |
| நீதியையவர் | ௫௧௯ |
| நீதியாய்ப்புவி | ௫௯௪ |
| நீதியாய்வரு | ௫௫௪ |
| நீரிருக்குமெனை | ௧௨௯ |
| **நெ.** | |
| நெஞ்சுருகி | ௨௮௭ |
| நெற்றியிலோர் | ௨௨௭ |
| **நே.** | |
| நேருமியா | ௨௮௨ |
| **ப.** | |
| பசுக்களேறு | ௨௧௫ |
| பச்சைவண்ண | ௫௨௫ |
| பச்சைநாவி | ௫௫௨ |
| பஞ்சபாதக | ௧௪௭ |
| பஞ்செழுத்து | ௪௨௫ |
| படையிற்சேர்ந்த | ௫௫௦ |
| பண்ணுர்கம | ௨௮௦ |
| பண்ணியதவமோ | ௫௭௫ |
| பதினெருகோடி | ௫௦௯ |
| பதுமனுமவர் | ௨௭௨ |
| பத்துவார்திசை | ௫௨௯ |
| பத்மாயதி | ௫௧௯ |





| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பரிவுத்தி | ௧௬௮ |
| பரதபாடக | ௨௧௨ |
| பரத்தையர்க | ௧௭௨ |
| பரமமாமதி | ௫௧௯ |
| பரவையாமென | ௫௧௧ |
| பரிபதானதன் | ௧௭௨ |
| பருவனையா | ௧௪௨ |
| பழுதரவே | ௧௪௦ |
| பன்னருமனந்த | ௪௪௧ |
| பன்னிருதிங்க | ௧௯௧ |
| பன்னிருவர் | ௨௦௧ |
| பன்னிருமாதர் | ௬௫௫ |
| **பா.** | |
| பாசமுற்ற | ௫௯௧ |
| பாடிநின் | ௧௧௯ |
| பாதலத்தி | ௧௮௨ |
| பாய்த்தநாவி | ௫௫௫ |
| பாய்ப்பரியதனி | ௫௦௨ |
| பார்புறாத்த | ௨௯௮ |
| பானுகம்பன் | ௫௨௧ |
| **பி.** | |
| பித்தனுனை | ௧௭௭ |
| பிரகலாதனன் | ௧௭௦ |
| பிறப்பிலா | ௫௨௨ |
| பிறர்பொருளா | ௫௯௫ |
| பிறையேழு | ௧௧௭ |
| பின்னுமவனுரை | ௨௮௪ |
| பின்னுமம்மவ் | ௫௮௪ |
| **பு.** | |
| புக்கலனத் | ௫௫௯ |
| புண்ணியவாது | ௪௦௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| புவியுண்ட | ௨௨௪ |
| புழுருபனிநீர் | ௪௧௨ |
| புழுக்குடை | ௧௮௧ |
| புளகமெனுமோ | ௪௧௫ |
| **பூ.** | |
| பூதாங்கும் | ௪௪௮ |
| பூமணக்கோல | ௨௪௫ |
| பூதலமேற் | ௨௧௧ |
| பூவிலப்பொரு | ௫௯௮ |
| பூவலனை | ௧௮௯ |
| **பெ.** | |
| பெண்ணுமாறு | ௫௨௨ |
| பெருத்ததேர | ௨௪௦ |
| பெரும்பழனத் | ௨௭௮ |
| **பை.** | |
| பையரவணிந்த | ௫௭௧ |
| **பொ.** | |
| பொங்கியவுடுக் | ௨௫௧ |
| பொடிமூடிய | ௧௧௭ |
| பொய்ம்மகிட | ௧௫௮ |
| பொய்யாது | ௧௪௨ |
| பொருத்தெனை | ௪௯௧ |
| பொருவிலா | ௧௯௧ |
| பொன்னனித்தா | ௫௫௫ |
| **போ.** | |
| போகியொருபுத்தி | ௧௫௧ |
| போதவர்னவர் | ௫௧௧ |
| போதித்தபடி | ௪௫௨ |
| போற்றியங்கவர் | ௨௧௭ |
| **ம.** | |
| மங்கலதினத்திற் | ௪௨௯ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| மங்காதிபின் | உகஉ | மன்னன்றே | கூசஎ |
| மச்சவுரு | நஎஎ | மன்னவன் | கூசஎ |
| மஞ்சுபற்றி | உகஉ | மன்னனேனாக | கூஎசா |
| மடங்குசமைத்த | சா0ரு | மன்றுமை | கூசாரு |
| மட்டின்மாயை | கூக0 | மன்னரியமார்க் | சகூசா |
| மணிகொழி | கூருஉ | மா. | |
| மணிகொண்ட | சகஎ | மாமிலாமெது | கூகூக |
| மணிவரைபரி | சஉரு | மாச்சரியமிக்க | கூகூசா |
| மணிவிள | உசாஉ | மாதமும்மாரி | கூருசா |
| மண்மதண் | உசாக | மாதவனேயருண | சாசாஉ |
| மதுரைந்து | சகக | மாதவமுனிவர் | கூசாக |
| மந்திரம்பரவும் | சகசா | மாதவர்களின் | உஅகூ |
| மந்திரிக்கிழவ | சாசாக | மாதுலன் | உசாக |
| மயிலின்று | உகரு | மாயமால்விட | சாருஉ |
| மயிலெலாத்திகழ் | உருஉ | மாயவனூரத்தின் | உகூக |
| மரணபவ் | உ0உ | மாயவிற்கை | உசாக |
| மரிவியக்கி | சசக | மாயவேடக்க | கூச0 |
| மருங்கிழித்து | உசஅ | மாயுமாயவர் | உகசா |
| மருவிய | சருகூ | மாரவேறு | கூகூசா |
| மலையிறை | உகூக | மாலயனிருவர் | கூசஅ |
| மல்லிகை | உகூரு | மாலயன்வசு | கூஅக |
| மழைதவழு | உக0 | மாவியாழத்தின் | சாஉச |
| மழைப்புண | சா0ரு | மாலேயெனு | உஎசா |
| மறையுவனு | உருஎ | மி. | |
| மற்றிதுகிவனென | கஅக | மிக்கருத்து | உகக |
| மற்றுநால்வரை | சருஉ | மிக்கவேத | சசக |
| மற்றுமேழ்தரு | கூகசா | மின்னலையு | உருரு |
| மனத்தாதிவைத்த | உசசா | மு. | |
| மனுமுறையரி | கூசகூ | முகுந்தர்தேடு | சாகூரு |
| மனையாளே | சஉகூ | முக்கணத்த | உசகூ |
| மன்மதன்கவனை | சாருச | முக்கணன்பொருளை | சாகூச |





| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| முடித்தகங்கை | உசாரு | மேற்றிசை | சருஉ |
| முண்டகவகத்தை | சகசா | மேனகையு | சாசஎ |
| முண்டகமண் | கூசக | மை. | |
| முதிருஞ்சுவை | சசசா | மைந்தாது | சஎகூ |
| முத்தழல்புரி | சருஅ | மையாகிய | கூசாசா |
| முத்துமணி | கூகூரு | மையுலாம்விழி | கூஎஎ |
| முந்தவசுரரை | சாசாஅ | யோ. | |
| முயலகனலகை | சாசக | யோகத்தி | உகூ0 |
| முருமலர்குழலி | சருஉ | வ. | |
| முருகுமல | கூசஎ | வகுத்தனன் | சாரு0 |
| முலைக்குவெகு | சஅகூ | வசையறுமலை | கூசஎ |
| முறையிதெலிறையி | கூசாஉ | வச்சிரமொ | உஉக |
| முற்றிழையுமோக | சாருஎ | வஞ்சமென் | சசஉ |
| முனிவதுதவர்த்து | கூகூஎ | வஞ்சியர்புணி | சாசக |
| முனிவனேயெனை | கூஉசா | வட்டிகைக்கு | கூசஎ |
| முன்பணியிற் | உகக | வதுவைசெய | கூருக |
| முன்னையார | உரு0 | வந்தவழி | சஎக |
| முன்னமகத் | கூசகூ | வந்தமாமுனி | கூசாசா |
| முன்னமேயொரு | சாகூஎ | வந்தவொது | கூஎக |
| மூ. | | வயவேனமென் | உஎ0 |
| மூசுவண்டின | சஎக | வாம்பெற்ற | உசாசா |
| மூடிகமொன்று | சா0க | வாந்தரு | சாஉ0 |
| மெ. | | வருணமண்ட | எகூஅ |
| மெத்துமரை | சஅரு | வலம்கொளோ | சசச |
| மெய்ப்பொருள் | உஅஎ | வளர்ப்புடைய | சஅக |
| மே. | | வன்னிமாமலை | கூசஉ |
| மேவினிதெடு | கூஎக | வன்னிமலை | சாசக |
| மேவியருணை | சாருஅ | வன்னிமுன் | கூகூசா |
| மேவுபுனல் | உஎக | வா. | |
| மேவுமத்த | கூசஉ | வாக்கிறெல்வடி | சசாரு |
| மேவுமென | சாகூக | வாசிமகமேமுதன் | சாருச |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| வாதமிகு | ௧௬௭ | வெ. | |
| வாதுகொண்ட | ௧௨0 | வெங்கடாமுகன் | ௩0௯ |
| வாதைபடு | ௧௯௯ | வெண்மைசேர் | ௪௫0 |
| வாய்ந்தசாலி | ௩௩௪ | வெதிர்சிலம்பு | ௨௧௯ |
| வாலவெங்கதிர் | ௬௨௫ | வெம்மைச்சர | ௧௯௭ |
| வாளிருவம் | ௨௧௭ | வெம்புசெம்பு | ௩0௭ |
| வாணக்கண் | ௧௮௪ | வெய்யவனமை | ௨௭0 |
| வாணத்திறம் | ௩௨௮ | வெவ்விருக | ௩௨௭ |
| வாணமார்மலைய | ௬௨௫ | வெளித்தல | ௨௩௭ |
| வி. | | வெள்ளையானனி | ௬0௩ |
| விசையமகள் | ௨௫௧ | வெள்ளவாழி | ௨௪௧ |
| விஞ்சைமன்னர் | ௩௩௩ | வெற்புகள் | ௧௭௮ |
| விடந்தரும்பிய | ௩0௧ | வெற்பெனுமுலை | ௬௫௩ |
| விடுத்தனள் | ௨௬௫ | வெற்றிகொண்ட | ௩0௭ |
| விண்ணிலார் | ௨௩௧ | வெற்றிரும் | ௪௬0 |
| விதிபுனைந்த | ௨௨0 | வென்றியிறுற் | ௨௭௫ |
| வித்தகமுனி | ௧௭௫ | வே. | |
| வித்தகர்கண் | ௨௭௩ | வேதனிலை | ௧௭௫ |
| விரகமுற்ற | ௩௮௩ | வேந்தனுரை | ௩௮௫ |
| விருப்படியார் | ௪௩௧ | வேலினுன்கடிநா | ௩௩௮ |
| விருப்பில்கோ | ௩௯௩ | வேழமும்பரியுக் | ௩௯௧ |
| விலைமாதர்தனி | ௩௭௨ | வேற்றுமேறு | ௨௮0 |
| விழியிலே | ௨௨0 | வை. | |
| வீ. | | வைத்தவோரடி | ௬௪௯ |
| வீசலரிலைமெய் | ௪௯௧ | வையகத்தி | ௨00 |
| வீரையே | ௨௪௫ | வையகமனி | ௬௫௫ |
| வீழ்ந்தபின்ப | ௩0௧ | வையமீர் | ௨௨௮ |
| வீறுமம்புலி | ௩௩0 | வையமுண்ட | ௨௨௫ |


செய்யுளகராதி முற்றிற்று.



௨. கைலாசபதிக்குத் தொண்டுபூண்டொழுகும் நந்திகேசுரர், மார்க்கண்டேய மகாமுனிவருக்கு அருணாசலச்சிறப்பையும், அதன்மகிமையையும், தரிசிக்கவேண்டிய விதிமுதலியவைகளையு முபதேசித்தல்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலபுராணம்

## மூலமும் - உரையும்.

## பாயிரம்.

### விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

மிக்க வேத வியாசர் விளம்பிய
இக்க தைக்கியை யின்றருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ளிற்றினைக் கைதொழு தேத்துவாம்.

(இதன்பொருள்.) அநேகவேதங்களை இயல்பாகவே உணர்ந்த வியாசரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில் உருத்திர சங்கிதையிலிருக்கும் இந்த அருணாசலமான்மியத்தை யிக்காலத்தில் தமிழினாற்செய்ய (இதற்கு இணையில்லையென்றுசொல்லும்படி) அநுக்கிரகஞ் செய்வதற்கு மூன்றுகண்களையுடைய மலைபோன்றவனைச் சமுத்திரம்போன்ற * மும்மதத்தையும் தும்பிக்கையினையு முடைய யானைமுகம் பொருந்திய விநாயகரைக் கையினாற்றொழுது எடுத்த நூல் இடையூறின்றி இனிதின் முடிதற்பொருட்டு தோத்திரஞ்செய்வோம். என்றவாறு. (௧)

நடேசர் துதி.

முதிருஞ்சுவை மதுரம்பெற
மொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர்
பவபஞ்சன னமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு
முடையும்படி யிலகும்படி
யதிரும்படி நடனம்புரி
பதிருங்கழ லதிருங்கழல்.

(இ-ள்.) மிகுந்தமதுர ரசமுண்டாகப்பாடுகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைத் தரிக்கின்றவராயும், தம்மை யடைந்தவர்கள் பிறவியைக்கெடுப்பவராயும், மலரகிதராயும் விளங்கி சூரியனுதிரவும், பகிரண்டமுடையவும் விளங்குகின்ற பூமியதிரவும் நடனத்தைச்செய்யாநின்ற மிகவுஞ் சப்திக்கின்ற வீரகண்டையைத்தரித்த நடேசரது பாதத்தை வணங்குவோம். எ-று. இச்செய்யுளுக்குப் பயனிலை வருவிக்கப்பட்டது. (௨)

* மும்மதமாவன — கன்னமதம், கபோலமதம், பீஜமதம்.



ஸ்தலமகிமை.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

இரவிகள் சந்திரர் வயிரவர் வித்தைய
ரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவர் பங்கய
ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கவி னுலக நிறைந்தவர்
பணியு மிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய
தருணை வளம்பதியே.

(இ-ள்.) சூரியர்களும், சந்திரரும், வயிரவரும், வித்தியாதரரும், தேவரும், அஷ்டதிக்குப்பாலகரும், நாகலோகத்தாரும், அரியதபசிகளும், முனிவர்களும், பிர்மாக்களும், கருடக்கொடியையுடைய விஷ்ணுக்களும் பரந்து நெருக்குதலினால் உலகம் நிறைந்து அவர்கள் வணங்குதற்கு இடங்கிடையாததாய் அவர்களாலே சொல்லப்பட்ட அரகர வென்கிறசப்தமானது சமுத்திரத்திலும் அதிகமாக முழங்கும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னும் ஸ்தலமாம். எ-று. (௩)

இளமுலை மங்கையர் முகமு நெருங்கிய
விருகுழை யும்பகலே
யொளிரொரு சந்திர னுடனிரு செங்கதி
ருதயமெ னுந்தனியூர்

தளையவி ழுந்தொடை மகபதி தன்பதி
தனபதி தன்பதியா
மளகை வளம்பதி தனிலும் வளம்பதி
யருணை வளம்பதியே.

(இ-ள்.) இளமையாகிய ஸ்தனங்களையுடைய பெண்கள் முகங்களும், அவர்களணிந்த இரண்டு இரத்நகுண்டலங்களும், பகலிலே பிரகாசிக்கின்ற ஒருசந்திரனுடனே இரண்டு சூரியர் உதயமானார்களென்று சொல்லும்படியாகிய ஒப்பற்ற ஊர், முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுடைய பட்டணமாகிய அமராவதியையும், குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியையும் பார்க்கிலும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னும் ஸ்தலம். எ-று. (௪)

காலனெ திர்த்திட மார்பி லுதைத்தவர்
காம னுருப்பொடியா
ஆல மிடற்றினர் மாலை மதிக்குறை
யாட ரவப்பணியார்
நாலு முகத்தவன் ஞால மளிப்பவ
னொடு மதற்கரியார்
சூல மெடுப்பவர் மேவு திருப்பதி
சோண கிரிப்பதியே.

(இ-ள்.) இயமனை எதிர்க்க மார்பில் உதைத்தவராகியும், மன்மதனுடைய தேகத்தைப் பொடியாகச் செய்தவராகியும், விஷத்தைக் கண்டத்தில் தரித்தவராகியும், இளம்பிறையைத் தரித்தவராகியும், ஆடுகின்றசர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்டவராகியும், பிரமாவும் விஷ்ணுவும் தேடுதற்கரியவராகியும், சூலத்தைக் கையிலெடுத்தவராகியும் விளங்குகின்ற பரமசிவன் வாசஞ்செய்கின்ற அழகாகியபதி அருணாசலமென்னும் ஸ்தலமாம். எ-று. (௫)



## பரசிவவணக்கம்.

சந்தக்கலிவிருத்தம்.

உறவொடு பகையறு மொருமுத லெவனெவ
னிறுதியி லுலகரு ளிறையவ னெவனெவன்
மறைமுடி வினினடம் வளர்பவ னெவனெவ
னறிவினி லறிபவ னடியிணை தொழுதனம்.

(இ-ள்.) உறவும் பகையுமில்லாத ஒப்பற்ற முதன்மையானவனெவன்? சருவசங்காரமானபின்பு உலகத்தை உண்டாக்குகிறவனெவன்? வேதமுடிவிலே நடனஞ்செய்கின்றவனெவன்? தன்னியற்கையறிவினாலே சகலத்தையுமறிகிறவனெவன்? (பரமசிவம்) அப்படிப்பட்ட தன்மையையுடைய பரமசிவனது திருவடிகளை யாம் வணங்குகிறோம். எ-று. (௧)

## அருணசலேசர்துதி.

கலிநிலைத்துறை.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந்
திருமாலு மறையி னானும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து
மீதலத்தும் பரிந்து தேட
வணிகொண்ட பிரமாண்ட கோளகைபோழ்
கோளகையா யழகு காட்டக்
கனிகொண்ட வொருருவாயா மொருவனையா
மகலாது கருத்துட் சேர்ப்பாம்.

(இ-ள்.) இரத்நங்களுக்கிருப்பிடமாகிய நீண்டகடலிலே நித்திரைசெய்கின்ற விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவரும், நாகங்கள்வாசஞ்

செய்கின்ற பாதாளத்திலும் பூமியிலும் மேலுலகத்திலும் வருந்தித் தேட அவர்களால் எட்டப்படாமல் அழகாகிய பிரமாண்டகோளகையானது பொன்னாற்செய்யப்பட்ட கோளகைபோலாகி அழகுகாண்பிக்க எண்ணங்கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயகமலத்திற் சேர்த்துக்கொள்வோம். எ-று. (எ)

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தி னில்வைத் துலகமேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்
பொருமானை மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

(இ-ள்.) தாருகாவன இருஷிகள் வரவிட்ட மானைக் கையிலே வைத்தும், ஒரு மான்போன்ற கங்கையை முடியில்வைத்தும், ஏழுலகத்தையும்பெற்ற உமாதேவியை வாமபாகத்தில்வைத்தும், அடியார்க்கருள்செய்கிறவரும், பவளம்போல்வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவரும், போர்செய்கிற இடபவாகனத்தின் மேலூர்ந்தருளுகின்ற ஆண்டவருமாகிய (அருணாசலன்தலத்தில் வீற்றிருக்கின்ற) பரமசிவனுடையதிருவடிகளைவணங்கி இனிவரும் பிறப்பைத் தீர்த்துக்கொள்ளுவோம். எ-று. (அ)

உண்ணாமுலையம்மை துதி.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண்ணாளை
ஏராவி னிலவொழுகப் புழுகொழுக
வழகொழுகு முகத்தினாளை



வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்குலாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலையும், கிருபைவழிந் தொழுகின்ற இரண்டுகடைக்கண்களையும், தந்தங்களின்காந்தி இளமையாகிய சந்திரிகைபோற் பிரகாசிக்கப் புழுகுவசிக்கின்ற அழகுபொருந்திய முகத்தையும், கச்சணிந்த ஸ்தனங்களையும், அதிகவழகையுடையதா யொருவருக்குந் தெரியாத இடையையும் சிறப்புப்பொருந்திய பாதங்களையுமுடைய அருணாசலதலத்தில் வீற்றிராகின்ற உண்ணாமுலையம்மையை மனத்தில் நினைத்துக்கொள்ளுவோம். எ-று. (கூ)

யானைதிறைகொண்ட விநாயகர் துதி.

மதமூன்று மாறாக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்றுங்
கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு
மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்கு மானைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்.

(இ-ள்.) மும்மதங்களும் ஆறாகி ஓடிவருகின்ற யானைமுகமுள்ளவரும், மனதில் தம்முடைய திருவடிகளைச்சிந்திக்கின்ற அரியதவத்தையுடையவர்களுக்கு நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைக்கொடுப்பவரும், முப்புரத்தை நீறுசெய்த சிவபிரானாலளிக்கப்பட்டவரும் ஒப்பற்ற முதலாகிய வேர் ஓடுகிற சஞ்சித (ஆகாமியம் பிராரத்தம்)

வினையையுடையபிறப்பைக்கெடுக்கின்றவருமாகியயானைதிறைகொண்டவரென்னும் விநாயகரைமனதிற் சேர்த்துக்கொள்வோம். எ-று.

சிவசுப்பிரமணியர் துதி.

கொந்தாரு மலர்ச்சோலை யருணைநெடுங்
கோபுரத்திற் குமர வேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி
தனிலுறையு மயிலினானைக்
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத்
தருநிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாரானைப் பணியவர்தா
டலை மேற் கொள்வாம்.

(இ-ள்.) பூங்கொத்துகளையுடைய சோலைசூழ்ந்த அருணாசலத்திற்குக் கிழக்குக் கோபுரவாசலுக்கடுத்த மேற்புறமண்டபத்திலிருக்கின்றவரும், தம்மையடைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்ய வடவீதியிலே வாசஞ்செய்கின்ற மயில்வாகனத்தை யுடையவரும், தறியிற்கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்திலேறுகின்ற தேவேந்திரனுக்குத் தேவலோகத்தையும், கற்பக விருக்ஷத்தி னிழலையுங் கொடுத்தவரும், கடப்பமாலையைத் தரித்தவருமாகிய சிவசுப்பிரமணியக்கடவுளை வணங்குகின்ற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல் வைத்துக்கொள்ளுவோம். எ-று. (௧௧)

சமயகுரவர் துதி.

வாதுகொண்ட பரசமய கோளரியை
யடிவணங்கி வன்கற் றூணாற்
றீதுகொண்ட கருங்கடலைக் கடந்துசெழுந்
தமிழ்க்கடலின் றிருத்தாள் போற்றி



காதுகொண்ட விழிப்பாவை திருமனைக்கெம்
பெருமானைக் கால்க ளேவித்
தூதுகொண்ட சுந்தரனைத் தம்பிரான்
றோழனையாந் துதிசெய் வோமே.

(இ-ள்.) வாதுகொண்டு செயிக்கவந்த சமணர்களாகிய யானைகளுக்குச் சிங்கமாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளது திருப்பாதத்தைவணங்கி, வலியகருங்கல்லோடு பிணித்துச் சமணர்கள்சமுத்திரத்திற்போட அக்கல்லையேதெப்பமாகச் சமுத்திரத்தைக் கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பர்சுவாமிகளது பாதத்தைவணங்கி, காதளவுந் தாவியகண்களையுடைய பரவைநாச்சியாருடைய திருமனைக்கு இரண்டு பாதங்களும்நோக எமதாண்டவனைத் தூதாக்கனுப்பிய தம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்குவோம். எ-று. (௧௨)

திருவாதவூரடிகள் துதி.

தரவுகொச்சகக்கலிப்பா.

அத்தனார் பெருந்துறைபுக் கரியவினை கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமா கியசிவன்
முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி.

(இ-ள்.) பரமசிவன் குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த திருப்பெருந்துறைக்குப்போய் அச்சுவாமியினுடைய அநுக்கிரகம்பெற்று அரிதாகிய தீவினைக்கடலைத்தாண்டி அக்காலத்தில் வியாபித்திருந்த பௌத்தர்களுடைய மதத்தைக் கண்டனஞ்செய்து பரிசுத்தமாகிய சிவன்முத்த தசையடைந்தவரும், அம்மூர்த்தியாகியசிவத்திற்குவிதை

யாகியும் திருவாதவூரிற்பிறந்த ஞானசொரூபியாகியும்,(அரிமர்த்தன பாண்டியனுக்கு முதன்மந்திரியாகியும்)இருந்த மாணிக்கவாசகசுவாமிகளுடைய பாதத்தை வணங்கி. எ-று. (கசு)

## திருத்தொண்டர்கள் துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மனையாளை யாற்களித்து மனங்களித்த
  வியற்பகையார் மலர்த்தாள் போற்றித்
தனையாளும் பெருமானுக் கெச்சிலிடுங்
  கண்ணப்பர் சரணம் போற்றி
வினையாள ரறியாத திருநீல
  கண்டரடி விரும்பிப் போற்றி
எனையாளு மிளையான்றன் குடிமாற
  ரிணையடியை யிறைஞ்சு வோமே.

(இ-ள்.) பரமசிவன் அடியார்வேடம் பூண்டுவந்து பெண்சாதியையெனக்குக் கொடுவென்றுகேட்க அதற்காக அதிக சந்தோஷத்தையடைந்து சுவாமிக்குத்தன்மனையாளைக்கொடுத்து அதனால் அதிகமகிழ்ச்சியடைந்த இயற்பகை நாயனாருடைய மலர்போன்ற பாதங்களைவணங்கி; தன்னை யாட்கொண்ட சுவாமிக்குத் தான் தின்று உருசிபார்த்த எச்சிலைக்கொடுத்த கண்ணப்பசுவாமிகளது பாதத்தை வணங்கி, வினையையுடையவர்கள் அறியாத திருநீலகண்ட நாயனாருடைய பாதத்தை மகிழ்ந்து வணங்கி, அடியேனை ஆட்கொண்டருளும் இளையான்றன் குடிமாறநாயனாருடைய பாதத்தை வணங்குவோம். எ-று. (கஎ)



ஐயடிகள் காடவர்கோ னிரடியை
  வணங்கிமக வறுத்தெம் மாற்கு
நெய்யடிசி லுடன்படைத்தார் திருவடியைத்
  தொழுதுதிரு நீற்றுச் சோழன்
மெய்யடியைப் புகழ்ந்துதெய்வ வுலாச்சொன்ன
  சேரனடி விரும்பி யேத்திப்
பொய்யடிமை யில்லாத புலவர்முத
  லனைவரையும் போற்று வோமே.

(இ-ள்.) ஐயடிகள்காடவர்கோன்நாயனாரது இரண்டுபாதத்தையும்வணங்கி,எமதுசுவாமிக்குப்பிள்ளையை அறுத்துச்சமைத்தகறியை நெய்விட்ட அன்னத்துடன்படைத்தசிறுத்தொண்டநாயனாருடைய மெய்ம்மையாகிய பாதத்தை வந்தித்து, தெய்வீகம்பொருந்திய திருவுலாப் பிரபந்தம் பாடிய சேரமான் பெருமானாயனாருடைய பாதத்தை ஆசையுற்றுப்பணிந்து,மெய்யடிமையையுடைய புலவர்கள் முதலாகிய சகலரையும் வணங்குவோம். எ-று. (கஅ)

## நந்திகேசுரர், துர்க்கை, கௌதமர், சண்டேசுரர் துதி.

நந்திதிரு வடியிறைஞ்சி விந்தையடி
  புகழ்ந்துமறை நான்கிற் கைந்தாய்
வந்தருளுங் கோதமனார் மலரடியென்
  முடிக்குமுடி மாலை யாக்கித்
தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாத
  பதத்திருந்த தண்டி தாளைச்
சிந்தைமிசைக் குடியிருத்தி யருணகிரி
  நினைப்பவர்தான் சென்னி சேர்ப்பாம்.

(இ-ள்.) நந்திகேசுரருடைய அழகியபாதங்களைத் தொழுது, துர்க்கா தேவியினுடைய பாதத்தை வணங்கி, நான்குவேதத்தினின்றும் ஐந்தாம்வேதசொரூபமென்று சொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்றபாதத்தை என் சிரத்துக்குத் தரிக்கப்பட்ட மாலையாகச்செய்து, தம்முடைய தகப்பனாரது இரண்டு பாதங்களையும் வெட்டி அதனால் கெடாத மோக்ஷபதத்திலிருந்த சண்டேஸ்வரருடைய பாதத்தை இருதயத்திற் குடியிருக்கச்செய்து அருணாசலத்தலத்தை நினைப்பவருடைய பாதத்தைச் சிரத்திற் சேர்த்துக்கொள்ளுவோம். எ-று. (௪௬)

அவையடக்கம்.

தேறுகின்ற பலகலையுந் தெளிந்தசுவை
யிருநான்குந் திரளும் பாடல்
கூறுகின்ற புலவர்முன்னே தமியேனுஞ்
சிலபுகல்சொற் குறித்த வாறு
வீறுகின்ற மறைவிரிஞ்ச னேறிவரு
மனத்தின் முன்னும் விரிஞ்சன்றாதை
பேறுகின்ற கருடன்முன்னு மொருமசகம்
பறவை கொடுத்திடுதல் போலும்.

(இ-ள்.) பலநூற்களையுங் குறைவறக்கற்று * எட்டுச்சுவையும் பொருந்திய தமிழ்ப்பாடல்களைச் சொல்லுகின்ற வித்துவான்கள் முன்னே ஒன்றுமறியாத யானுஞ் சிலபாடல்களைப்பாட நினைத்தவிதம் விளங்கிய நாலுவேதங்களையுடைய பிரமனேறிநடத்தும் அன்

* எட்டுச்சுவையாவன:—சிங்காரம், வீரம், பெருநகை, கருணை, ரௌத்திரம், குற்சை, அற்புதம், பயம் என்பனவாம்.



னத்தின்முன்னும் அவன்தகப்பனாகிய விஷ்ணு ஏறும்படியான கருடன் முன்னும் ஒருசிறியகொசுகு பறந்திடுதலைக் காண்பித்ததுபோலும். எ-று. (௪௭)

நீரிருக்கு தெனப்பழித்து விடுவரோ
வதுபாலி னிகழு மானல்
நாரிருக்கு தெனக்கழித்து விடுவரோ
வதுமலரி னண்ணு மானா
லாரிருக்குஞ் சடைமுடியார் விடமிருக்குந்
திருமிடற்று ரருணை நாதர்
பேரிருக்குந் தகைமையினு லெனதுரையை
யிகழுவரோ பெருமை யோரே.

(இ-ள்.) பாலொடு கலந்திருக்கின்ற நீரைச் சகவாசயோக்கியத்தால் தள்ளாமலெடுத்துக்கொள்ளுவார்கள், புட்பமாலையோடு சேர்ந்த நாரையும் அப்படியே கொள்ளுவார்கள், ஆத்திமாலையைச்சூடிய சடைமுடியையும் ஆலகாலமிருக்குங் கண்டத்தையுமுடைய அருணாசலேசுரருடைய நாமமிருக்கிற பெருமையினாலே என்னாற் செய்யப்பட்ட புன்பாடல்களையும் பெரியோர்கள் ஒப்புக் கொள்வார்களேயன்றி இகழார்கள். எ-று. (௪௮)

அழகுதாக் கனிந்தநச்சு மரம்பழைய
தெனினுமதி லமுதுண் டாமோ
விழைவுதரு சுவைக்கரும்பு புதியதுவே
யெனினு மது விரதம்போமோ
இழிவுறுபா டலுமுயர்வு தங்கியசெய்
யுளுமவைபோ லிருக்கு மாகில்
பழமையென நலந்தருமோ புதுமையென
விகழ்படுமோ பயன்கொள் வோர்க்கே.

(இ-ள்.) அழகிய சிவப்புநிறம்பொருந்தப் பழம்பழுத்த எட்டி மரம் வெகுநாளையமரமாயிருந்தபோதிலும், அதில் மாதுரியமுண்டாகாது; யாவராலும் இச்சிக்கப்பட்ட இனிப்பாகிய கரும்பு கொஞ்சநாளையதாயிருந்தாலும், அதில் கசப்புண்டாகாது; அதுபோற் பிரயோசனத்தைக் கொள்ளுவோர்களுக்கு, குற்றந்தோகூடிய செய்யுள் பழமையா யிருந்தாலுமே ஒரு நன்மையைத்தாராது; யாதொரு தோஷமுமில்லாத உயர்வான பாடல் சிலநாளைக்குமுன் உண்டாயிருந்தாலுமே இகழப்படாது. எ-று. (௧௯)

இளையளவுந் தமிழ்மிடியற் றதிமதுரம்
பிறந்தகல்வித் திறமை யோரும்
விளையுமியற் கனவறியா மூடர்பனுவ
லறிவின் முன்னே நிற்கலாமோ
விளையடருங் குவளைவிழி யனிச்சமலை
யனையதிரு மேனி மாதர்
புனைவில்மதன் மலர்க்கணையைப் பொறுப்பதல்லா
லமரினம்பு பொறுத் திடாரே.

(இ-ள்.) கொல்லுக்கொழுதி லடைகின்ற நீலோற்பலம்போன்ற கண்களையும் அனிச்சம்பூவொத்த உடம்பினையுமுடைய பெண்கள் கருப்புவில்லைத்தரிக்கின்ற மன்மதனாலே விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பார்களேயல்லாமல் கொடிதாகிய யுத்தத்திலெறி அம்பைப் பொறுக்கார்கள். அதுபோல, இளையளவுடைச் செந்தமிழ்த் தரித்திரம் இன்றி அதிக மதுரம்பிறந்த கல்வி வல்லவர்களும் இலக்கணாசமேயறியாத மூடர்களுடைய விருத்த அறிவையுடைய கல்விப் பிரசங்கத்தின் முன்னிற்கார்கள். எ-று. (௨௦)



## நூல்வரலாறு.

கருத்துருக விறைவனந்திக் கருள்புரிய
நந்தியுமார்க் கண்டற் கோத
விருத்திமறை வியாதமுனிக் கவனுரைக்கச்
சூதனுக்கு வியாதன் சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன்
மொழிந்த சிவபுராணங் கோடி
யுருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி
வளத்தினையா னுரைக்க லுற்றேன்.

(இ-ள்.) மனமுருகப் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய, நந்திகேசுரரும் மார்க்கண்டேயருக் கருள்செய்ய, மார்க்கண்டேயர் வேதங்களை யொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய, வியாசர் சூத முனிவருக்குச்சொல்ல, சூதர் ஒருவழிப்பட்ட மனமுடைய சௌனகாதிரிஷிகளுக் கருள்செய்த சிவபுராணங்கோடியாகும்; அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் உருத்திரசங்கிதையிற் சொல்லிய அருணாசலத்தலமகிமையைச் சொல்லத் தொடங்கினேன். எ-று. (௨௧)

அருணைநகர் வளமையுமா லயனகந்தை
விடவழல்வெற் பானவாறும்
பொருவில்மக மழித்ததுவு மாதுமையை
மணந்ததுங்கண் புதைத்த வாறும்
வருமகிடற் றலைத்ததுவு மிறைவியிடங்
கலந்ததுவும் வயிரப் பூண
னிருவினையை யகற்றியது மற்றுமுள
சரிதையெலா மியம்பு வேனே.

(இ-ள்.) அருணாசல தலமகிமையும், பிரம விஷ்ணுக்களுடைய கர்வமடங்க அக்கினிமலையானவாறும், ஒப்பில்லாத தக்கனுடைய

யாகத்தை அழித்ததும், பரமசிவன் பார்வதியை மணஞ்செய்ததும்; அப்பார்வதி சுவாமியினுடைய திருக்கண்களை மூடியதும், மகிடாசுரனை உமாதேவி கொன்றதும், அப்பார்வதி வாமபாகத்திற் சேர்ந்ததும், வச்சிராங்கதபாண்டியனுடைய பாவத்தைத்தீர்த்ததும் மற்றுமுள்ளதுஞ் சொல்வேன். எ-று. (௨௨)

அங்கிருவ ரோங்கவரு வல்லாள
பூபன்ற னரிய தொண்டுந்
துங்கமிகுந் தீர்த்தமுடன் றிருமலையை
வலம்புரியுங் கடவோன் பேறும்
பொங்குபிர தத்தனெனு வினைதீர்த்த
வாறுபுரா காதி பனு
மிங்கிதஞ்சேர் வடகலையி லிருந்ததனைத்
தென்கலையா லியம்ப லுற்றேன்.

(இ-ள்.) உலகின்கண் ஐயறு முக்குலவேந்தருள் அக்கிருலோத்துங்கனென்று வழங்குஞ் சோழகுலாதிபனுகிய வல்லாளராஜனுக்குப் பிள்ளைக்கலிதீர்த்து முத்தியளித்ததும், அத்தலத்திலோங்குந் தீர்த்தங்களின் பெருமையும், அவ்வருணாசலத்தை வலஞ்செய்பவர்கள் பெறும் பேறும், ஏதிரவனுடைய கர்வத்தையடக்கி முத்தியளித்தவாறும், பிரதாபம்பொருந்திய பிரதத்தனென்னும் வேந்தனது சரிதையும், பாவதீர்த்தசரிதையும், புழுகு பூனையாகவிருந்து மூன்றுலோகங்களிலுஞ் சஞ்சரித்துவந்த புராகாதிபனென்னு மகனுடைய சரிதமும், இங்கிதமிகுந்த வடமொழியிலிருந்ததைத் தென்மொழியாகிய தமிழினுற்சொல்லத் தொடங்கினேன். எ-று. (௨௩)

பாயிரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௩.



3. ஒருகற்பத்தில் பிரமவிட்டுணுக்கள் "நாமே நாம் பிரமம்" என வாதிட்டுப் போரிடுந்திறத்தைத் தீர்த்தானச், சிவபெருமான் அவர்கள்மத்தியி லக்கினி மலையாய்நின்று அவ்விருவருடைய வெண்ணங்களை மாற்றியருளியது.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

# திருநகரச்சருக்கம்.

## திருவண்ணாமலைச்சரித்திரம்.

### ஸ்தலச்சிறப்பு.

பூலோகத்திலுள்ள சிவஸ்தலங்களுக்குள்ளே நடுநாட்டிலிருக்கும் திருவண்ணாமலை யென்னும் திவ்வியக்ஷேத்திரமானது நினைத்த உடன் முத்தியைக்கொடுக்கத் தக்கதாகையால் அது மற்றவைகளைப் பார்க்கிலும் சிறப்புற்றது. இதற்கு கௌரிநகரம், தேசுநகரம், அருணசலம், சிவலோகநகரம், வாயுநகரம், முத்திநகரம், ஞானநகரம், தலேச்சரம், சுத்தநகரம், தென்கயிலாயம், சோணகிரி என்றும்பேர் இன்னும் அனேகநாமங்களுமுண்டு. இதில் தேவர்களும், மகத்தாகிய தபசிகளும் முத்தியை அடைந்தார்கள். இதன்தென் திக்கில் என்றும் நிலைபெற்று விளங்காநின்ற ஒருமலையுண்டு. இது லிங்கசொரூபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இதற்கு சோணகிரி

யென்றும், அருணாசலமென்னும்பேர். இதற்குக்கீழ்ப்பக்கத்தி லிருக்கும் அர்க்கமலையில் தேவேந்திரனும், தென்பக்கத்திலிருக்கும் தெய்வமலையில் யமனும், மேற்பக்கத்திலிருக்கும் தண்டமலையில் குபேரனும், மற்றநான்கு திக்குகளிலும் இருக்கும் மலைகள் நான்கிலும் மற்ற திக்குப்பாலகர்களும், அவைகளைச் சுற்றியிருக்கிற மலைகளிலெல்லாம் மற்றத்தேவர்களும் இருந்துகொண்டு சுவாமியைத் தோத்திரஞ்செய்வார்கள். வச்சிராங்கதபாண்டியன் முதலிய அனேகர் அருணாசலத்தைப் பிரதக்ஷணஞ் செய்ததால் பாவம்நீங்கி மோக்ஷத்தையடைந்தார்கள்.

---

## திருநகரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

துங்கமழு வுழைபிரம்பு சுரிகையக
லாதகையான் றுகிர்க்குன் றூடே
திங்களுமிழ் நிலவனைய வெண்பொடியான்
சடைமுடியான் செறிமுக் கண்ணான்
பொங்குதிரு வரையகலாப் புலித்தோலான்
புயநால்வான் புரிமுந் நூலான்
கங்கைமதி தவழ்சடையான் றிருவாணை
செலுத்தி வெள்ளிக்கயிலை காப்பான்.

(இ-ள்.) உயர்வாகிய மழுவும், மானும், பிரம்பும், உடைவாளும் நீங்காத கையை யுடையவர்; பவளமலையில் சந்திரன் பொழிகின்ற நிலவுபோலத் தேகத்தில் அணிந்த விபூதியையுடையவர்; சடைமுடியையுடையவர்; நெருங்கிய மூன்றுகண்களை யுடையவர்; விளங்குகின்ற இடுப்பில் நின்று நீங்காத புலித்தோலையுடையவர்; நான்கு புயங்களையுடையவர்; மூன்றுபுரியாகிய பூணூலையுடையவர்; கங்



கையும், சந்திரனும் தவழ்கின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச் செலுத்திக்கொண்டு வெள்ளிமயமாகிய கைலாசகிரியைக் காக்கின்றவர். எ-று. (௧)

கொய்வனச மலர்நிறத்தான் மைவளருந்
திருமிடற்றான் குலவெள் ளேற்றான்
சைவ மெனும் பயிர்தழைக்கக் கருணைமழை
பொழிமேகந் தன்னை யொப்பான்
ஐவரையு மகத்தடக்குஞ் சிலாதற்குப்
புறத்துலவு மாவி போல்வான்
றெய்வமெல்லாந் தொழச்சிவந்த மலர்ப்பதத்தா
னந்தியெனுந் திருநா மத்தான்.

(இ-ள்.) கொய்யப்பட்ட தாமரைமலரொத்த நிறத்தையும், விஷம்பொருந்திய கண்டத்தையும், நல்லவெண்மையாகிய இடபவாகனத்தையுமுடைய பரமசிவன் சம்பந்தமாகிய சைவசமயமென்னும் பயிர்தழைப்பக் கருணையாகிய மழையைப் பொழிகின்ற மேகம் போன்றவர்; பஞ்சேந்திரியங்களையும் அகத்தில் நின்றும் புறத்தில் தீமையாகிய பொருள்களிற் போகவொட்டாமல் அடக்கிய சிலாதரிஷிக்குப்புறத்திற் சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர்; விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் வணங்க அதனால் சிவப்பேறிய தாமரைமலரையொத்த பாதங்களையுடையவர்; இப்படிப்பட்ட தன்மையையுடைய நந்திகேசரென்கிற அழகிய திருநாமத்தைப்பெற்றவர். எ-று.

ஈசனணி நதிமதியுந் திருவுருவுந்
திருவுருவி லிசைந்த நீறும்
தேசுவென விளங்குமொரு கயிலாயச்
சிலம்புளதச் சிலம்பின் மீதே

வாசவனை முதலிமையோர் நெருங்குதலான்
மகுடமொடு மகுடந் தாக்கி
யோசையுடன் கனகமணிப் பொடியுதிர்ந்து
கனகமலைக் குவமை யாகும்.

(இ-ள்.) பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ் சந்திரனும் அவரது வெண்மையாகிய திருவுருவமும் அவ்வுருவத்தில் அணிந்த திருநீறுமாகிய இந்நான்கினுடைய காந்திபோலப் பிரகாசிக்குங் கயிலாயமென்னும் ஒப்பற்ற திருமலையுண்டு. அத்திருமலைமேல் வணங்குகிற தற்காகத் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியால் கிரீடத்தோடு கிரீடம் இடிபட்டுச் சத்தத்துடனே சொர்ணப் பொடிகளும் இரத்தினப்பொடிகளும் உதிர்ந்து மகம்மேருகிரிக்குச் சமானமாகக் குவியும். எ-று. (கூ)

இந்திரநீ லச்சிலையா லிசைந்த *கடந்
தெரியாம லெழுதிச் சேர்த்து
மந்தரமா மெனவயிரத் தூணிறுத்தி
மாணிக்க மதலை கூட்டிச்
செந்துகிராற் ‡போதிகையு மரகதத்தா
லுத்திரமுஞ் செறித்து மீதே
சந்திரகாந் தத்தகடு பரப்பியமண்
டபமுளதச் சயில மீதே.

(இ-ள்.) இந்திரநீலக் கல்லினாலே ஒன்றோடொன்று சேர்த்த சந்து தெரியாமற் சித்திரமெழுதிச் சுவர்வைத்து மந்தரகிரிபோல் வயிரத்தூண்களை நிறுத்தி மாணிக்கத்தினாற்செய்த கொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாற் போதிகையும் மரகதத்தினால் உத்

* கடம்=அருநெறி. ‡ போதிகை=குறுக்கதி.



திரமுஞ் சேர்த்து அதன்மேல் சந்திரகாந்தத் தகடுபரப்பிய மண்டபம் ஒன்று அந்தமலையின்மே லுள்ளது. எ-று. (எ)

இருமருங்குந் தாளமணி யிழைத்தவரி
யாசனத்தி லிருந்து நீலப்
பருமணியா லிழைத்ததொரு பாதபீடிகை
யின்மலர்ப் பதத்தை யூன்றி
மருவுபெருங் கைலையின் மீதிருந்துமுய
லகன்முதுகில் வலத்தா ளூன்றி
யருமறையை முனிவருக் குரைக்குமிறை
யெனவிருந்தா னந்த வேலை.

(இ-ள்.) நந்திகேசுரர் அந்தமண்டபத்தில் இரண்டு பக்கமும் முத்துகளிழைத்த சிங்காதனத்திலிருந்து பருத்த நீலரத்தினத்தினால் இழைக்கப்பட்டிருக்கிற பாதகுறட்டின்மேலே மலர்போன்ற பாதங்களை வைத்துக்கொண்டு சிவகணங்களால் மருவப்பட்ட பெருமையாகிய கயிலாயகிரியில் எழுந்தருளியிருந்து முயலகன்மேல் வலப்பாதத்தை வைத்து அரிதாகிய வேதப்பொருளை முனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிய பரமசிவம்போல் இருந்தார் அந்த வேளையில். எ-று. (அ)

குற்சனுரோமசன் குமுதன் குமுதாக்கன்
சகடாயன் கும்ப சாதன்
வற்சர்வை சம்பாயனர் கௌசிகமுனி
புலிக்காலன் வாம தேவன்
நற்சனகன் சனற்குமாரன் வாதரா
யணன்மதங்க னடனத் தானை
யர்ச்சனைசெய் யனந்தமுனி முதலனந்த
முனிவர்தம் மருகிற் கும.

(இ-ள்.) குற்சர், உரோமசர், குமுதர், குமுதாட்சர், சகடாயர், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கருசிமுனி, வியாக்கிரபாதர், வாமதேவர், சனகர், சனற்குமாரர், வியாசர், மதங்கர், சுவாமியினுடைய நடனம்பொருந்திய திருவடிகளில் அருச்சனை செய்கின்ற பதஞ்சலி முதலாகிய அனந்த முனிவர்கள் தம்முடைய பக்கத்திற் சூழ. எ-று. (௬)

மன்னியமார்க் கண்டமுனி யுடனெழுந்து
பணிந்துயிர்கள் மழைமின் போல
விந்நிலத்திற் பிறப்பதுவு மிறப்பதுவு
மிருவினையு மெமக்குத் தோன்றச்
சொன்னவொரு தனிமுதலே முத்திபெறும்
பரிசெமக்குச் சொல்வா யென்றா
னன்னவுரை செவிப்புகலு நந்தியருள்
சாந்தமுனிக் கருள்வ தானான்.

(இ-ள்.) நிலைபெற்ற வயதினையுடைய மார்க்கண்டேய முனிவர் சீக்கிரத்தில் எழுந்திருந்து நந்திதேவரை வந்தனஞ்செய்து சுவாமி! மேகத்தில்தோன்றி அதிசீக்கிரத்தில் அழியு மின்னல்போல் உயிர்கள் இவ்வுலகத்தில் பிறப்பதும் இறப்பதும் இவைகளுக்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்கும்படியாக அருளிச்செய்த ஒப்பற்றகடவுளே! நாங்கள் மோக்ஷத்தையடைவதற்குத் தக்கவழியைக் கிருபைசெய்ய வேண்டுமென்று கேட்க; அந்தவார்த்தையைக் கேட்டவுடனே மிகுந்த கிருபையுடையவராகி நந்திதேவர் மார்க்கண்டேயருக்கு அருளிச்செய்யத் தொடங்கினார். எ-று. (௭)

கம்பைநதி கும்பநதி காவிரிகோ
தாவரியே கன்ன வேணி
பம்பைநதி வேகவதி வேதவதி
சரயுநதி பரமாங் கங்கை



செம்புநதி பொன்முகரி யமுனைநதி
கருமநதியேற் செப்புஞ் சோணை
யம்புவியின் மிகவுளவங் காடினர்தம்
வினையகற்று மதுவல் லாமல்.

(இ-ள்.) கம்பைநதி, கும்பநதி, காவிரி, கோதாவரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகவதி, வேதவதி, சரயுநதி, எல்லாநதிகளுக்கு மேலாகிய கங்காநதி, தாமிரபருணி, பொன்முகரி, யமுனாநதி, கருமநாநதி, மேன்மையாகச் சொல்லப்பட்ட சோணைநதியென்று அழகான பூவுலகத்தில் அநேகநதிகளுண்டு. அவைகள் தம்மிடத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவத்தை நீக்கும். அதுவல்லாமல். எ-று. (௮)

காசியெனு மொருதலமிக் கயிலையினுஞ்
சிறப்புளது கங்கை நீத்தம்
வீசுதிரைக் கொழுந்தோட்டிப் பாகதிக்கு
வேரோட்டும் வியந்து மூழ்கின்
மாசுறுட லதுவிறந்தான் மரமேனும்
விலங்கேனு மனிதரேனு
மீசனரு ளுபதேசஞ் செவிப்புகலா
லிறைவனென விருக்க லாமே.

(இ-ள்.) காசியென்கிற ஒருதிவ்வியதலம் இந்தக்கைலாயத்தைப் பார்க்கிலும் சிறப்புள்ளது. அக்காசியில் வருகின்ற கங்காப்பிரவாகம் எறிகின்ற அலைகளைக்கொழுந்தாக ஓட்டிச்செய்து தன்னிடத்தில் விரும்பி (திரிகரணசுத்தியுடன்) முழுகினால் அவர்களுக்கு மோட்சத்துக்கு வழிகாட்டும். களங்கம் உள்ளதேகம் அவ்வூரில் விட்டால் மரமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனுடைய தாரகப்பிர

மோபதேசம் செவியிற் சேர்தலாலே சிவசாரூப்பியத்தை யடைந்திருக்கலாம், எ-று. (௯)

போகியொரு புற்றிடங்கொண் டிருப்பதுகண்
டிடுதலல்லாற் புனிதர் போற்றும்
யோகியொரு புற்றிடங்கொண் டிருந்ததலங்
கண்டதுண்டோ வுரைப்பக் கேளு
நாகமிசை நடித்தவருக் குயிர்வேண்டித்
திருதவஞ்செய் நளினக் கோயில்
சேருமனத் தவரான மருவாரூர்
தனையெரித்தார் திருவா ரூரே.

(இ-ள்.) சர்ப்பம் புற்றை யிடமாகக்கொண் டிருந்ததைப் பார்த்ததேயல்லாமல் ஞானிகள் போற்றுகின்ற யோகி புற்றினிடத்திலேயிருந்த தலத்தைப் பார்த்ததுண்டோ? அதுயாதெனில் சொல்லக் கேளுங்கள், காளிங்கனென்னும் பாம்பின்மேலேறி நடனஞ்செய்த விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சைவேண்டி இலட்சுமி பூசைசெய்துகொண்டிருந்த கமலாலயமென்னும் தலமாகி வஞ்சம்பொருந்திய மனமுடைய திரிபுராதிகளையெரித்த சிவபிரான் வாசஞ்செய்கின்ற ஊராகிய திருவாரூர் என்னும் திவ்யஸ்தலந்தான். எ-று. (௧௦)

தக்கவிராட் புருடன்மனத் தலமெனுமோர்
தலமுளதத் தலத்தின் மீதே
முக்கணனார் நடிப்பாவர் மூர்த்தியிலா
யிரத்திலொரு மூர்த்தி தானே
யிக்கயிலை யிடத்துறைவ தென்னிலதின்
பெருமைநம்மா லிசைக்க லாமோ



வக்கனக சபைகண்டா ரரியயன்
காணாத முத்தி யடைகுவாரே.

(இ-ள்.) பெருமைபொருந்திய விராட் புருடனுடைய இதயத் தலமாகிய சிதம்பரமென்று ஒருதலமுண்டு அதிலுள்ளதாகிய கனக சபையில் மூன்றுகண்களையுடைய பரமசிவன் ஆனந்ததாண்டவஞ் செய்வார்! அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இக்கைலாச பதத்திலிருக்குமென்றால் அத்தலத்தின் பெருமையை நம்மாற்சொல்லக்கூடுமோ! அப்படிப்பட்ட அழகுபொருந்திய கனக சபையை (உள்ளன்புடன்) கண்டு தரிசித்தவர்கள் விஷ்ணுவினாலும் பிரமாவினாலும் காணப்படாத மோட்சத்தை யடைவார்கள். எ-று. ()

தாங்காழி யவன்சிவனை வழிபடுமுது
வரையந்தத் தலத்தைப் பார்க்கி
லோங்கார வடிவதிலே யுயிர்பிரிந்தா
லுடலழியா தொளி கெடாது
வீங்காது நெகிழாது பிறவுயிரால்
வருந்தாது வெடித் திடாது
தீங்கான மணக்கிருமி பிறவாது
கிடக்கும்வலச் செவிமே லாக.

(இ-ள்.) சக்கரத்தைக் கையில்தரிக்கின்ற விஷ்ணுமூர்த்தி பரமசிவனைப் பூசைபண்ணிய விருத்தாசலமென்று ஒருதலமுண்டு; அந்தத் தலத்தைப் பார்க்குமிடத்தில் அதுபிரணவ சொரூபமாயிருக்கும், அந்தத்தலத்தில் உயிர்விட்டால் தேகமழியாது, பிறங்குன்றாது, வீங்கமாட்டாது, கட்டுநழுவாது, மற்றப்பட்சிமிருகங்களால் பின்னமாகாது, வெடிபடாது, அதில் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாது மேலாகக் கிடக்கும். எ-று. (௧௨)

பொய்ம்மகிட முகனைவென்ற வம்மைமயிட
மகலாத புனித மூர்த்தி
செம்மையிட மென்றிருந்த கருமகிட
முகமாகச் செறிகே தாரம்
இம்மையிடர் மறுமையிடர் ஞானமில்லாச்
சிறுமையிட ரெல்லாந் தீர்க்கும்
மும்மையிடம் பெறுமுலகுக் கெளிதாகத்
தனியிருந்த முத்தி போலும்.

(இ-ள்.) பொய்ம்மையாகிய எருமைமுகத்தினையுடைய மகிட
சுரனைச் சயித்த பார்வதி வாமபாகத்தில் நீங்காத பரிசுத்தராகிய ப
மசிவன் செம்மையாகிய இடம் இதுதானென்று எழுந்தருளியிரு
கிற கறுப்பாகிய எருமையினது முகம்போல் விளங்கிய திருக்கேதா
மென்னும் தலம்; இந்தச் சென்மத்தில் வருகிற துக்கமும் ம
மையில்வருகிற துக்கமும் ஞானமில்லாததனாலே உண்டாகின்
துக்கமுமாகிய எல்லாத்துயரத்தையும் தீர்ப்பதற்கு மூன்றுலகத்த
ருக்கும் எளிதாகித் தனியேயிருந்த முத்தித்தானம்போல் இரு
கின்றது. எ-று. (௧௩

இருப்பனைத்தன் பருப்பதத்திற் பிரமராம்
பிகையுடனென் றிரண்டு போதும்
விருப்பனைத்தன் பணிந்திமையோ ருலகுமுத
லனைத்துலகும் விதித்தான் மற்றைத்
திருப்பதிக்கே யிருப்பவனுந் தேவர்களுஞ்
சராசரமாய்ச் செனித்தவ் வூரி
லிருப்பதற்கு முயல்வரென்ற லெத்தலமு
மத்தலத்துக் கிணைய தாமோ.



(இ-ள்.) மல்லிகார்ச்சுன மென்னும் பர்வதத்தில் பிரமராம்பி
கையுடனே பரமசிவன் எழுந்தருளி யிருக்கின்றாரென்று அன்னவா
கனத்தையுடைய பிரமன்வந்து பக்தியோடு இரண்டுவேளையும் வண
ங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாலோகத்
தையும் படைத்தார்; மற்றைத் திருப்பதியிலிருக்கிற வேங்கடாசல
பதியும் தேவர்களும், அந்தத்தலத்தில் சரமாகவும், அசரமாகவும்
பிறந்திருப்பதற்குத் தவஞ்செய்வார்களென்றால் எப்படிப்பட்டதலங்
களும் அந்தக்ஷேத்திரத்திற்குச் சமானமாகுமோ. எ-று. (௧௪)

விருப்படியார் சொரிந்தவறு கலருடனே
விழியிடந்த வேடர் காலிற்
செருப்படியு முகந்தபிரான் காளத்தி
நகரமெனுந் தெய்வ பூமி
பருப்பதமா கியும்விளங்குந் தன்னனைருக்
கொழிக்கு மலர்ப்பதுமை யோடு
மருப்படியுந் துழாய்மார்பன் வடமலைமே
லிருந்துகண்டு வணங்க மாதோ.

(இ-ள்.) திருக்காளத்தி யென்னுந் தெய்வீகம்பொருந்திய தலத்
தில் ஆதிசைவப் பிராமணராகிய சிவகோசரியார் பக்தியோடு வி
தியாக அருச்சனைசெய்த அறுகு புஷ்பங்கள் இவையுடனே கண்
ணைப்பிடுங்கிப்பதித்த கண்ணப்பநாயனாரது காற்செருப்பையும் விருப்
பமாக ஏற்றுக்கொண்ட இலிங்கசொரூபமாகிய சிவபெருமான் தா
னே குளிர்ச்சிபொருந்திய தேனைச் சொரிகின்ற தாமரைமலரிலிருக்
கின்ற இலட்சுமியோடு வாசனையுள்ள துளசிமாலையை யணிந்த மார்
பினையுடைய விஷ்ணுமூர்த்தி திருவேங்கடமென்னுந் திருப்பதியில்
நின்றுகொண்டு தரிசனஞ்செய்து வணங்கும்பொருட்டு அந்தக்கா
ளத்தியில் மலையாகியும் விளங்குகின்றார். எ-று. (௧௫)

தேக்குறா விருநிலையும் புகழ்ந்தொண்டை
நாடேனுமோர் தெய்வ நாட்டி
னோக்கினோர் வினையகற்று மொருதலமுன்
டதன்பெயரை நுவலக் கேளும்
வாக்குறா மகிழ்நன்வன் படைத்தபுவி
தழைக்கவறம் வளர்த்தெக் காலுங்
காக்குமா யகியுடனே கம்பநா
யகருறையுங் கச்சி மூதூர்.

(இ-ள்.) அகன்ற எட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கின்ற தொண்டைமண்டலமென்னுந் தெய்வீகம் பொருந்திய நாட்டில் தரிசனஞ்செய்தவர்களுடைய பாவத்தைப் போக்குகின்ற ஒருதலமுண்டு; அதன்பெயரைச் சொல்லக்கேளுங்கள்: சரஸ்வதியின் கணவனாகிய நான்முகன்படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படி முப்பத்திரண்டு தருமத்தையும் பரிபாலனஞ்செய்து எக்காலும் காக்கின்ற காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீகாஞ்சிபுரமாகும். எ-று. (௧௧)

பழுதறவே யெழுகடலு மெழுகிரியு
மெழுதலமும் படைத்த வேதக்
கிழவனறி யாமுடியை யொருபால
னறிந்தபதி னைத்தக் கேளு
மழுதரு நடப்புரியு மிறைவருக்கும்
பிசைபூசை யயனூர் பூசை
விழைவுதரு மரிபூசை காண்பூசை
புரிந்ததிரு விரிஞ்சை மூதூர்.



(இ-ள்.) யாதொரு பழுது மில்லாமல் ஏழு சமுத்திரத்தையும் ஏழுமலையையும் ஏழுலகத்தையும் படைத்த பிரமனால் அறியக்கூடாத * சிரத்தை ஓர் ஆதிசைவப் பிராமணப்பிள்ளை அறிந்த தலத்தைச் சொல்லக்கேளுங்கள்; ஆனந்ததாண்டவஞ்செய்த சுவாமிக்குப் பார்வதியாரும் பிரமனும் சிவசேயிருந்த விஷ்ணுவும் காளும் பூசித்த விரிஞ்சிபுர மென்னுந் தலமாம். எ-று. (௧௨)

---

* சுவாமிசிரத்தைப்பாலன் அறிந்ததாவது:—"பயனுறும்பசுபதிபாசம்புகல் பலநூலுக்கெளிவோ, னியலாகும்பெயர் சிவநாதன்றின யிவனேதன்புறமா, யயனுணர்த்தனி வடமீனுக்கொழு தலயார்பண்புடையாள், டயவாமக்கவ டருபாலன்சிவ சருமாவென் பவனே."— (இ-ள்.) பயனுள்ள பசுபதிபாசங்களைச் சொல்லுகின்ற ஆகமமுதலிய பலசாத்திரங்களையு முணர்ந்தவன், சிவநாதன் என்னுமியற்பெயரையுடையவன், நாடோறுமிவனுடனின்பமுற்றிருக்குமனைவி நயனுநந்தினி அருந்ததியுந் தொழத்தக்க கற்புடையவள், அன்புள்ள அவன்பெற்றபுத்திரன் சிவசருமா எனப்பெயருள்ளவன்.—(அப்பேர்க்கொத்த சிறுபாலன் அபிஷேகமுதலியவை செய்கிறதற்கு மார்க்கசகாயர் சந்நிதிக்குட்சென்று பார்க்குமளவில், அந்தோ! பூசாகாலந் தவறுகின்றதே!)—"திருகரத்தி னவிவர் முடிதொட வரிதென்றே, கருதியெய்த்து சொக்கினன்பெயன் கொல்செயலெனக் கவன்றனன், பாகதிக்கு வந்தருள்புரி பதவி சகாயன், மரகதக்கொடி யிடத்திறைவன் திருமுடி வளைத்தான்."— (இ-ள்.) நம்முடைய இரண்டுகைகளால் இம்மார்க்கசகாயருடைய திருமுடியைத்தொடுவது நமக்கு அரிதென்றுகருதி மனமிளைத்துவருந்தி இனியாதுசெய்வதென்று துயரமடைந்தான்; அப்போது பாகதிக்குவந்தருள்செய்த மரகதவல்லியம்மையை யிடப்பாகத்திலுடைய மார்க்கசகாயராகிய பரமசிவம் தன் திருமுடியைவளைத்தார்.—(இவ்வரலாற்றை திருவிரிஞ்சைப்புராணம் பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்திற் காண்க.)

பொய்யாது புனல்பெருகுங் காவேரி
நதிக்கரையிற் பூந்தராயு
மையாறு மிடைமருதுந் திருக்குடந்தை
வளர்கருமா னைக்காவு
மையாரு மிடற்றார்திரி சிராமலையு
மாணிக்க மலையுந்தோன்று
மெய்யாக வறைந்தனது பெருமையெல்லாம்
விரித்துரைக்கும் வேதந் தானே.

(இ-ள்.) பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரிநதியி னிருகரையிலும் சீர்காழி, திருவையாறு, திருவிடைமருதூர், வளம்பொருந்திய கும்பகோணம், திருவானைக்கா, விடம்பொருந்திய கண்டத்தையுடைய மாதொரு பூதேசர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரம், இரத்தினகிரி இவைமுதலான தலங்களில் விளங்கிக்கொண் டிருக்கும் அந்தத் திவ்யக்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம் வேதமொன்றுதான் மெய்ம்மையாக விரித்துச்சொல்லும். எ-று. (கஅ)

பருவளையார்ப் பரிக்கும்வைகை நதிக்கரையின்
மதுரை யறு பத்துநாலு
திருவிளையாட் டிறைவனியற் றியதலமா
மதன்பெருமை செப்ப லாமோ
கருவிளையாட் டற்றுயிரா மேச்சுரந்தென்
கடற்கரையிற் காணு மங்கே
செருவிளையாட் டிராகவனு ரிராவணனைத்
தொலைத்த பழி தீர்த்திட்டாரே.

(இ-ள்.) பெரியசங்குகள் முழங்குகின்ற வைகையாற்றின் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளிய மதுரை என்னும் ஒருதலமுண்டு; அந்தத்தலத்தின் பெருமை



யாவராலுஞ் சொல்லப்படாது. தென்சமுத்திரத்தின் கரையில் ஜனனதுக்கத்தைப் போக்குகின்ற இராமேச்சுரமென்று ஒருதலமுண்டு; யுத்தத்தை விளையாட்டாகச் செய்கின்ற இராமபிரான் இராவணனைக்கொன்றதனால் வந்ததோஷத்தை அந்தத்தலத்தில் சிவனைப் பூசித்துத் தீர்த்துக்கொண்டார். எ-று. (க௯)

அத்தகைய தலங்கடமிற் பிறக்கவுட
லிறக்கவிழி யமையக் காணச்
சுத்தவெளி தனிலாடுஞ் சுடரொளிக்கு
மனங்களிக்கத் தூய்நீ ராட்ட
வித்தமதை யெடுத்திறைத்துச் சிவாலயமும்
விரிபொழிலு மிகவுண் டாக்க
வுத்தமமா மெபரம கதியுளதென்
றுரைக்கமுனி யுரைப்ப தானான்.

(இ-ள்.) அப்படிப்பட்ட தன்மையையுடைய தலங்களிலே யாவரானாலும், பிறந்தாலும், இறந்தாலும், போய்த்தரிசித்தாலும், பரிசுத்தமாகிய சிதாகாசத்தில் நிருத்தஞ்செய்யும் மிகுந்தபிரகாசமே சொரூபமாகிய பரமசிவனுக்குத் திருவுளங் களிக்கும்படி தூய்மையாகிய நீரினால் அபிஷேகஞ்செய்தாலும் திரவியங்களைச் செலவு செய்து சிவாலயங்கட்டுவித்தாலும், விரிந்தபூஞ்சோலை மிகவைத்தாலும், உத்தமமானபரகதியுண்டாமென்று நந்திதேவர் அருளிச்செய்யக்கேட்டு மார்க்கண்டேயர் சொல்லத்தொடங்கினார். எ-று. (உ0)

இங்கிவரா நதிதோறுந் தலந்தோறு
மிப்படியே யியற்ற வென்றான்
முன்னியசி ரமாருக்குஞ் சித்தருக்கு
முனிவருக்கு முடி வுறாது

மின்னிகருஞ் சிறுவாழ்க்கை மனிதர்தமக்
கெளிதாமோ மேவி னுறு
மன்னியமாம் பிறவியர்க்கு மரத்திறுக்குங்
கிடையாதே யமல னென்றான்.

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய நதிகடோறும் தலங்கடோறும்போய்த் தேவரீர் கட்டளையிட்ட விதமாகவே தீர்த்தமாடி வழிபாடு முதலானவைகளைச் செய்யவேண்டு மென்றால் மிகுந்த சிறப்புப்பொருந்திய தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும் முடியாது. அப்படி மின்னல்போற்றோன்றி க்ஷணத்தி லழியுஞ் சிறியவாழ்வையுடைய மனிதர்களுக்கு எளிதில்முடியுமோ! அப்படிமுடிக்காதிம் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் விருட்சங்களுக்குங் கிடைக்கமாட்டாதே சுவாமீ என்று சொன்னார் மார்க்கண்டேயர். எ-று. (௨௪)

ஆடுமெய்த்த நதிதோறு மினிதெனுமத்
தலந்தோறு மனந்த காலம்
தேடுகின்ற பயனுதவுஞ் சிவஞானம்
வருந்தாமற் சிறிது போதி
னாடுகின்ற வறுப்பிலர்க்கு மறிவிலர்க்கும்
புலையருக்கு நரகர் வார்க்கு
மோடுகின்ற விலங்கினுக்கு மற்றெவைக்குந்
தருமொரான் றுரைப்பா யென்றான்.

(இ-ள்.) மனிதர்கள் ஆடுகின்ற அந்த நதிகடோறும் இனிதாகிய அந்தத்தலங்கடோறும் அநேககாலமாக ஸ்நானஞ்செய்து தரிசனமுதலியவைகளைச் செய்ததனால் உண்டாகிய பிரயோசனமாகிய சிவஞானத்தை, வருத்தப்படாமல் சொற்பகாலத்திலேதானே பிரதட்சணஞ்செய்தல், கும்பிடுதல், தரிசனஞ்செய்தல் முதலியவற்றினு



ஊனமாகிய கைகால் கண்களற்றவர்களுக்கும் விவேகஹீனர்களுக்கும் நீசர்களுக்கும், நரகத்தில் வீழத்தகுந்தபாவஞ் செய்தவர்களுக்கும், சஞ்சரிக்கிற மிருகங்களுக்கும் மற்றுமுள்ள எல்லாச்சீவராசிகளுக்கும் கொடுக்கின்ற ஒருதலம் அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டார் மார்க்கண்டேயர். எ-று. (௨௫)

இப்படியே நமனைவென்ற பெருந்தவனு
மிருந்தவரு மியம்பி யேத்திக்
கைப்பதும மலர்கொடுதன் காற்பதுமந்
தீண்டுதலுங் கருணை யாகி
அப்படியே முத்திதரு மொருதலமுன்
டுரைக்குதுமென் றமைத்தான் பின்னை
மைப்படியுங் கண்டத்தா னருணகிரி
நினைந்துபர வசத்த னானான்.

(இ-ள்.) இயமனைச்சயித்த பெருமையாகிய தவத்தினையுடைய மார்க்கண்டேயரும் மற்றுமுள்ள முனிவர்களும் இந்தப்பிரகாரமாகச் சொல்லித் தோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்ற கைகளால் நந்திதேவருடைய தாமரைமலரையொத்த திருவடிகளைப் பரிசித்து வந்தனஞ்செய்யுமளவில் அவர்கிருபையுள்ளவராகி, நீங்கள் சொன்னபடியே மோக்ஷங்கொடுக்கிற தலம் ஒன்றுண்டு, அதைச்சொல்லுகின்றேம் என்று கையமர்த்திப்பின்பு விஷத்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவம் எழுந்தருளி யிருக்கிற அருணாசலமென்னுந் தலத்தை நினைந்து பரவசமானார் நந்திதேவர். எ-று. (௨௬)

அங்கமெல்லா மயிர்பொடிப்ப நடுநடுங்கி
விழியிரண்டு மருவி பாயச்
செங்கையினை மலர்குவிய மொழிதளர
நெடும்போது நெறியி லாமற்

கங்கைப்பணி சடையானே யருணகிரிப்
பெருமானே கனற்கண்ணனே
எங்களையா ளுடையானே யெனத்துதித்து
விழித்ததற்பின் னிசைப்ப தானன்.

(இ-ள்.) தேகமெல்லா மயிர்க்குச்செறிய நடுநடுங்கிக்கொண்டு இரண்டு கண்களிலும் நின்று அருவிபோல் ஆனந்தபாஷ்பம்வர, மலர்போன்ற இரண்டு கைகளும் ஒன்றாய்க்குவிய, வார்த்தை தடுமாற அநேக நாழிகை ஞாபகமில்லாமல் கங்கையைத் தரித்திருக்கின்ற சடையையுடையவரே! அருணகிரியில் எழுந்தருளியவரே! அக்கினிக்கண்களையுடையவரே! எங்களையாட்கொண்டவரே! என்று தோத்திரஞ்செய்து விழித்துக்கொண்டு அதன்பின்பு சொல்லத் தொடங்கினார் நந்திகேசுரர். எ-று. (உச)

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சத்தியம தாமொழிவன் முத்திதரு மூரது
தனக்குரிய நாமமிக வுண்
டத்தனையு நான்மொழிய வெத்தனைவ லேனதிலோ
ரற்பவள வேபுகலு வேன்
சித்தியுத வுங்கவுரி தேசுநக ரென்றுபெயர்
தென்னருணை யென்று பெயர்சீர்
வைத்தசிவ லோகநக ரென்றுபெயர் நீடுசதுர்
வாயுநக ரென்று பெயரே.

(இ-ள்.) அப்படி தோத்திரஞ்செய்த பின்பு நந்திதேவர் சொல்வார், கேளும் மார்க்கண்டேயரே! சத்தியமாகச்சொல்லுகின்றேன், மோக்ஷத்தைக்கொடுக்கிற தல மொன்றுண்டு. அதற்குரிய நாமங்களோ அநேகம். அத்தனை பெயரையுஞ் சொல்லுகிறதற்கு நான் எவ்வளவு சக்தியுடையவன், ஆனாலும் அவைகளில் சில நாமமாத்திரஞ்சொல்லுகின்றேன். சித்திகளைக் கொடுக்கிற கவுரிநகரமென்றும், தேசுநகரமென்றும், அழகிய அருணாசலமென்றும், சிறப்புப்பொருந்திய சிவலோகநகரமென்றும், நாகரிகமிகுந்த வாயுநகரமென்றும், நால்வரிற் சொல்லப்பட்ட திருநாமங்களை யுடையது. எ-று. (உரு)



சத்தபுரி யெழுத லெடுத்ததலம் யாவுமொரு
தட்டுமொரு தட்ட தனிலே
யத்தலமு மிட்டெதிர் நிறுக்கவவை கட்கதிக
மானதொளி ரந்த நகரம்
முத்திநக ரென்றுபெயர் ஞானநக ரென்றுபெயர்
முந்தியத லேச்சர மெனுஞ்
சுத்தநக ரென்றுபெயர் தென்கயிலை யென்றுபெயர்
சோணகிரி யென்று பெயரே.

(இ-ள்.) பின்னும் நந்திதேவர்சொல்வார்; சத்தபுரிகளென்கிற அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை முதலாகிய எல்லாத் தலங்களையும் ஒருதட்டிலும், அந்த அருணாசலத்தை ஒருதட்டிலும் வைத்து நிறுக்க அந்தத் தலங்களுக்கெல்லாம் அதிக கனத்தையுடைத்தாயிருந்து பிரகாசிக்கின்ற அந்தத் தலத்துக்கு முத்திநகரமென்றும், ஞான நகரமென்றும் முதன்மையாகிய தலேச்சரமென்றும், சுத்தநகரமென்றும், தக்ஷிணகைலாயமென்றும், சோணகிரியென்றும் பெயராம். எ-று. (உசு)

வாதமிகு காலவழ லூழியிலே மேழுபுயல்
வானதபுரி யாத நகரஞ்
சீதமுத வானபிணி நீமையிடை யூறுபசி
சோவரி தான நகரம்

மாதவர்கள் மாதவர்கள் பூசைபுரி மாநகர
மாதவர்க ளூழி மலராம்
போதிருந்தை வேதியர்தெ ராறுபெய
சோடுமவர் பூசைபுரி தேவநகரம்.

(இ-ள்.) இறுதிக்காலத்தில் உண்டாகிய பிரசண்ட வாயுவினு னும், ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினுலும், சமுத்திர பிரளயத்தினுலும், யுகமுடிவில் பொழிகின்ற எழுமேகங்களினுலும், யாதொருவேதனையும், அடையாத தலம்; சைத்தியமுதலான பிணிகள் நிமையாகிய இடையூறுகள் பசி இவைகள் சேராத தலம்; மகத்தாகிய தவசிகள் அநேக விஷ்ணுக்கள் பூசைசெய்த தலம்; அப்படிப்பட்ட விஷ்ணுக்களுடைய நாபிகளாகிய தாமரைமலர்களில் உண்டாகிய தொண்ணூற்றாறு பிரமர்கள் பூசித்த தெய்வீகம்பொருந்திய தலம் அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (உஎ)

ஒன்றுளது பூமிதனி லின்பமுறு தன்றுலகு
மும்பரு முயர்ந்த வெளியு
மென்றுளதந் நாளுளது வேதமுடி மீதினி
லிருப்பதக லாமல திலோர்
குன்றுதவி லாதவொரு வெற்புளது புண்டரிக
கோளகையு முருவி யே
நின்றுளது தென்றிசையி லென்றுமழி யாதுநெடு
நீருலகு வாழ்வு பெறவே.

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய தலம் ஒன்றுண்டு அந்தத்தலம் இன்றைக்குப் புதிதாக வந்ததல்ல; இந்தப்பூவுலகமும், மேலுலகங்களும், ஆகாயவெளியும் என்றுண்டாயினவோ அன்றே உண்டாயிருக்கின்றது. நீங்காமல் வேதத்தின் முடிவிலுள்ளது; அந்



தத்தலத்தில் கெடுதலில்லாத ஒருமலையுண்டு; அதுநெடியகடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்கு தென்திக்கில் என்றும் நிலைபெற்றுப் பிரமாண்ட கோளகையை யூடுருவி நிற்கின்றது. எ-று. (உஅ)

கலி விருத்தம்.

ஆரிட மிராக்கத மசுரந் தேவதந்
தாருடை மானிடஞ் சம்பு வென்றுநாம்
பேரிடு மிலிங்கமே பிறங்கு மெங்கணு
மேருடைப் பருப்பத மிலிங்க மாவது.

(இ-ள்.) * ஆரிஷமென்றும், ராக்ஷஸமென்றும், ஆசுரமென்றும், தைவதமென்றும், மாலையைத்தரிக்கின்றமானுடமென்றும், நாமங்கள்பெற்ற லிங்கங்கள் எந்தத்தலங்களிலும் பிரகாசிக்கும்; இந்தத்தலத்திலோவென்றால் மலையே இலிங்கமா யிருக்கின்றது. எ-று.

செங்கனல் முதல்யுகந் திரேதை மாமணி
பொங்கிய துவாபரம் பொலிந்த பொன்னிறந்
தங்கிய கலியுகந் தன்னிலே சிலை
யங்கமா மதன்பெய ரருண பூதரம்.

(இ-ள்.) முதல்யுகமாகிய கிருதயுகத்தில் சிவப்பாகிய அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் மிகுந்த பிரகாசத்தையுடைய பொன்மலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவுந் திருவுருக்கொள்ளும் அந்த மலைக்கு அருணசலமென்னுந் திருநாமமாம். எ-று. (கூ0)

---

* இருடிகளாலே பூசை செய்யப்பட்டது ஆரிஷலிங்கம், ராக்ஷசர்களாலே பூசைசெய்யப்பட்டது ராக்ஷசலிங்கம், தேவர்களாலே பூசை செய்யப்பட்டது தைவதலிங்கம், மானுடராலே பூசைசெய்யப்பட்டது மானுடலிங்கம் என்பர். ஆரிஷம், ஆரிடமெனத் திரிந்தது.

கருவியா முகக்கடைச் சொரியுங் காரின
முருவமே முன்றியொல் லொன்று கோடியாய்ப்
பருவமா யிரந்துளி பனையிற் பெய்யினு
மருவியா யடக்குமவ் வசல மீதினில்.

(இ-ள்.) எல்லாச் சீவராசிகளும் கருவதும்படி புகார்நகாலத்திலெபாழிகின்றமேகங்கள், ஏழுமன் றிற எண்ணிக்கையில்லாமல்ஒவ்வொன்று கோடியாகி ஆயிரம்வருஷம் ஒவ்வொருதுளி பனையின்களிபோலப் பருமனுசப் பெய்தாலும் அந்தமலையின்மேல் சிறிய அருவியாகச்சுவறி அடங்கிப்போமல்லாமல் புறத்தில்வரமாட்டாது. எ-று.()

அரியய னளவிடா தளந்த காலமாய்த்
திரிதரி னதற்கிணை செப்ப லாகுமோ
சுரகதி பாவதிற் கனைமி னிருண
விரவிதன் புரவிமே லேறிச் செல்லுமே.

(இ-ள்.) விஷ்ணு பன்றியாகியும், பிரமன் அன்னமாகியும், அநேககோடி காலமாய்த்தேடி அடிமுடி காணுமல் வருந்துவார்களானல், அந்த அருணாசலத்துக்கு ஒன்றைச்சமானமாகச் சொல்லக்கூடுமோ! அசைதலில்லாமல் ஆகாசகங்கை தன்னிலும் முக்கியமென்றுதுதிசெய்கின்ற அந்த மலையிலிருக்கின்ற சுனையிலேசூரியன்னுடைய குதிரைகள் தேரிற்கட்டிய குதிரைகள் தாவிச்செல்லும். எ-று.— (௯௨)

வெண்மைசேர் புயலத னடியின் மேவுத
லெண்மயிற் கயிலைமீ திருப்ப தொக்குமா
றண்மைசேர் கார்த்திகை விளக்கு சாற்றுதன்
மண்மகள் மகுடமா மணியிற் றேன்றுமே.

(இ-ள்.) வெள்ளை நிறமாகிய மேகங்கள் அந்தமலையடிவாரத்திற் சேருதல் யாவராலும் எண்ணப்பட்ட கைலாயகிரிமேல் அந்த மலை



யிருக்கிறதை ஒக்கும். குளிர்ச்சிபொருந்திய கார்த்திகைமாதத்தில் கிர்த்திகாதீபம் அந்த மலைமேல் ஏற்றுதல் பூமிதேவியினுடைய கிரீடத்தில் பதித்த இரத்தினம்போற் றேன்றும். எ-று. (௯௩)

அன்றுமா றிசைமுக னளவி டாமுதன்
மன்றல்சேர் திருமலை வடிவு கொள்கையா
னின்றுநம் மருகனு னாற மோர்குல
மென்றுள மகிழ்ந்ததே யிமைய பூதரம்.

(இ-ள்.) முற்காலத்தில் விஷ்ணுவினுலும், பிரமனுலும், அறியப்படாத பரமசிவன் கீர்த்திபொருந்திய அந்தமலையுருவங்கொண்டதினுல் இமயபர்வதராஜனென்பவன் தன்னுடைய (இத்தனை காலம்வரைக்கும்வேறுசாதியாயிருந்த) நம்முடைய மருமகன் இப்போது நங்குலமென்று மனஞ்சந்தோஷித்தான். எ-று. (௯௪)

பன்னிரு திங்களும் பரிதி யாண்டு
மன்னிய மதியமும் வலம் தாய்வரு
மன்னிலை யுரைக்கவென் னறிவு போதுமோ
வுன்னிய வாசையா லுரைக்க லுற்றனன்.

(இ-ள்.) பன்னிரண்டுமாதமும் சூரியசந்திரர்கள் மகாமேருவை வலஞ்செய்தல்போலப் பிரதக்ஷணஞ்செய்து வருவார்களென்றல், அந்த அருணாசலத்தின் பெருமையைச் சொல்லுவதற்கு அற்பமாகிய என்னுடைய புத்திபோதுமோ! ஆனாலுஞ் சொல்லவேண்டுமென்று நினைவுகொண்ட ஆவலினுல் சொல்லத்தொடங்கினேன். எ-று. ()

அர்க்கமா மலையுள தமைந்த நிழ்த்திசை
நற்கண யித்தவ னன்னனி வாழ்ந்துவன்
தெற்கிலே யுளதுபுத் தேளிர் மாமலை
யொற்றையந் தகன்றினம் புகழ்ந்து போற்றுவான்.

ருந்திய கலாதரன், காந்திசாலி இவ்விருவரும் அந்தத் தலத்தை வலம்வந்து மோட்சத்தை யடைந்தார்கள். எ-று. (௪௧)

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

ஆதியா மிவர்க டொடங்கியின் றளவுக்
கனேகருண் டருணையை நினைத்துங்
காதலா லுரைத்துங் கேட்டுமுன் கண்டுங்
கால்களால் வலஞ்செய்து மதிலே
நீதியா யிருந்து நெறியினை நடந்து
நெடுங்கயம் படிந்தறம் புரிந்துஞ்
சோதிதா டொழுதும் பணிவிடை செய்துந்
துளக்கிலா முத்திபெற் றிருந்தார்.

(இ-ள்.) முன்சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத் தொடங்கி அன்றுமுத லின்றுவரைக்கும் அநேகம்பேர் அருணாசலத்தை நினைத்தும், ஆசையோடு தோத்திரஞ்செய்தும், கேள்விப்பட்டும், தரிசனஞ்செய்தும், கால்களாலே பிரதட்சணஞ்செய்தும், அதில் நீதி பொருந்திய வேதமார்க்கத்தை அநுசரித்துக்கொண்டிருந்தும், மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலே முழுகியும், தருமங்களைச் செய்தும், சோதி சொரூபமாகிய சிவனதுபாதங்களைத்தொழுதும், திருப்பணிசெய்தும், கெடுதலில்லாத மோட்சத்தைப் பெற்றிருந்தார்கள். எ-று. (௪௨)

அப்பதி தமிழ்நாட் டுளதிடை பெண்ணை
யாறுசெய் யாறுபிங் கலையாஞ்
செப்பிய கமலை நதிசுழி முனையாஞ்
செய்தநீரா னாயிரம் பலமாம்



முப்பது மூன்று கோடி தேவர்களு
முனிவருந் தவஞ்செய்வா ரதற்கோர்
ஒப்புவே றில்லை யிம்பர்நாட் டிடத்து
மும்பர்நாட் டிடத்துமென் றுரைத்தான்.

(இ-ள்.) அவ்வருணாசலத் தலம் தமிழ்நாட்டிலிருக்கிறது. அப்பதிக்கு வலப்பக்கத்தில் வருகிற பெண்ணையாறு இடை என்னு நாடியாகும்; இடப்பக்கத்தில்வருகிற செய்யாறு பிங்கலை யென்னு நாடியாகும்; கமலை என்கிற நதி சுழிமுனை என்னு நாடியாகும்; அந்த நதிகளில் ஸ்நானஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம்பங்குபலன் வரும்; முப்பத்துமுக்கோடி தேவர்களும் முனிவர்களும் அத்தலத்தில் தவஞ்செய்வார்கள். அதற்கு ஒப்பு இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் இல்லையென்று சொன்னார் நந்திதேவர். எ-று. (௪௩)

அற்றமி லவன்சொ லருணையின் சிறப்பா
லகமகிழ்ந் துருகிய முனிவன்
மற்றுள தலத்தி லதிகமென் றுரைத்த
வாய்மையை மனங்கொளா துரைப்பான்
சிற்றறி வுடையே னுதலா லொருசொற்
றெளிந்திலே னெனச்சொன்ன னதனை
முற்றுள முணர்ந்தான் மொழியென மொழிந்தான்
முனிவனு மவர்க்கிவை மொழிவான்.

(இ-ள்.) சிவபக்தியிற் சோர்வில்லாத நந்திதேவரால் சொல்லப்பட்ட அருணாசலத்தின் மான்மியத்தினாலே மனமகிழ்ந்து உருக்கத்தையடைந்த மார்க்கண்டேயர் மற்ற சிவத்தலங்களைப் பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்றுசொன்ன வுண்மையை மனத்தில் ஒப்புக்கொள்ளாமல் சொல்வார்; சுவாமி? நான் சிறிய அறிவை

11

யுடையவனாதலால் நீங்கள் திருவுளம் பற்றியருளியது நன்றாய்த் தோன்றவில்லை என்றுசொல்ல, அதுகேட்டுச் சகலத்தையும் உணர்ந்திருந்த நந்திதேவர் உமக்குண்டான சந்தேகத்தைச் சொல்லுமென்றுகேட்க, மார்க்கண்டேயர் அவருக்குச்சொல்லுவார். எ-று.

இல்லையைக் காணக் காசியி லிறக்கச்
சிறக்குமா ரூர்தனிற் பிறக்க
வெல்லையில் பெருமை யருணையை நினைக்க
வெய்தலா முத்தியென் றுரைத்தி
சொல்லியி ருநு தலங்களுந் தம்மி
லொக்குமென் றுரைத்திடா தடியே
னல்லிரு முருணை யதிகமென் றுரைத்த
தருளென வருள்செய்வா னவனும்.

(இ-ள்.) சிதம்பரத்தைத் தரிசனம்செய்தாலும், காசியிலே தேகத்தைவிட்டாலும், சிறப்புள்ள திருவாரூரிலே பிறந்தாலும், அளவில்லாத பெருமையையுடைய அருணாசலத்தை நினைத்தாலும், முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர். இந்நான்கு தலங்களையும் ஒன்றுக்கொன்று ஒப்பென்று திருவுளம்பற்றாமல் சுவாமி! அல்லிமலர்களையுடைய தடாகஞ்சூழ்ந்த அருணாசலத்தை மாத்திரம் அதிகமென்று கட்டளையிட்டதை அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர் கேட்க அதற்கு நந்திதேவரும் அருளிச்செய்கிறார். எ-று. (சுஎ)

இறந்திடும் தொழிலும் பிறந்திடுந் தொழிலு
மெண்ணிய படியவை முடியா
பறந்திடு மவைக்குஞ் சிலவிலங் கினுக்கும்
பாதப முதலவோ ருயிர்க்கு



நிறைந்த புன்மைச ரந்தகர் தமக்கு
நிருத்தமண் டபந்தொழு நோா
தறந்திகழ் பயனாற் சிலர்சிலர்க் கெளிதா
மல்லவர்க் கரியதா மதுவே.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே, ஒருவன் இறக்குந்தொழிலும் பிறக்குந்தொழிலும் நினைத்தபடி முடியாது. அதிருக்கட்டும், பட்சிசாதிகளுக்கும் மிருகங்களுக்கும் விருட்சமுதலாகிய ஓரறிவுயிருக்கும், புன்மை நிறைந்த நீசருக்கும் குருடருக்கும் நடராஜனது திருநடனசபையைத் தரிசனஞ் செய்யக்கூடாது. பூர்வஜனன புண்ணியத்தினாலே அந்தச் சபைக்குப்போய்க் காணத்தகுந்தவர்களாகிய சிலர்க்குமாத்திரங் கிடைக்கும், மற்றவர்களுக்கு அரியதாகும்; அத்தத்தலமாம். எ-று. (சுஅ)

குண்டகர் பதிதர் கோளகர் புலையர்
கொலைவினை குறுப்பினிற் குறைந்தோர்
கண்டகர் கெடுந்து ரத்தினி லிருப்போர்
கருணைசே ரருணபூ தரத்தை
யண்டக வொருகா னினைத்திட முத்தி
யிவரலால் விலங்குபுள் மரங்கள்
முண்டக முதலா யினவுமுன் னாண
முனைத்திட முத்தியே பெறுமால்.

(இ-ள்.) ஒரு மாது தன் கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களுக்கும், பாவிகளுக்கும், விதவை பெறப்பட்ட கோளகருக்கும், நீசருக்கும், கொலை செய்கிறவர்களுக்கும், அவயவங் குறைந்தவர்களுக்கும், தீமைசெய்கின்றவர்களுக்கும், வெகுதூரத்தி லிருப்பவர்களுக்கும் கிருபை பொருந்திய அருணாசலத்

(இ-ள்.) ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில் நரை, திரை, மூப்பு, உண்டாகாதபடி அமிர்தமுண் டிருப்போர்களாகிய தேவர்களும், போகத்தை அனுபவித்தற்குரிய அந்தச்சொர்க்கமுதலான உலகங் களைத் தனித்தனி யாளுகின்ற தேவேந்திரன் முதலாகிய திக்குப் பாலர்களும், அருணாசல தலத்தில் கிருமியாகப்பிறக்கிறது சொர்க் கத்தின் பதத்தை அனுபவித்தலைப் பார்க்கினும், அதிகமென்று பிறப்பதற்கு ஆசைப்படுவார்கள். தெய்வத்தன்மைபொருந்திய அந் தப்பதியில் பிறக்கிறது நூறுயாகஞ் செய்தவர்களுக்கு அல்லாமற் கிடையாது சுவாமியினுடைய கிருபைபெற்றவர்கட்குக் கிடைக்கும், அவர்களன்றி மற்றத்தேவர்கள் முதலான மகத்துவம்பொருந்திய யாவர்க்கும் அப்படி பிறக்கிறது கிடைக்கமாட்டாது. எ-று. (௩௦)

வெற்றிரும் பிடத்திற் செம்பில்வெண் கலத்தில்
வெள்ளியில் வெள்ளிய பொன்னிற்
குற்றமொன் றில்லாக் குயிற்றிய மணிபோற்
குலவிய சிவனிருந் திடுவன்
மற்றைய தலத்தி லருணையென் றுரைக்கும்
வளம்பதி தனிலெழுந் தருள்வன்
பொற்றகட் டிடத்து மணியென வுரைத்தான்
புனிதனா கியவரு ணந்தி.

(இ-ள்.) சொற்ப விலைபெற்ற இரும்பிலும், செம்பிலும், வெ ண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப்பொன்னிலும் பதிக்கப் பட்ட யாதொரு தோஷமில்லாத மாணிக்கரத்தினம்போல் மற்றத் தலங்களில் எங்கும் நிறைந்த பரமசிவன் எழுந்தருளி யிருப்பார். பொன்னாற்செய்த தகட்டில் பதிக்கப்பட்ட அந்த இரத்தினம்போல் அருணாசலமென்று சொல்லப்பட்ட வளம்பொருந்திய தலத்தில்



எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தராகிய வருணந்திதேவர் திரு வுளம்பற்றினர்; ஆதலால் எல்லாத்தலத்திற்கும் இத்தலம் அதிக மாம். எ-று. (௩௧)

கண்ணினால் விளங்குந் திருமுக முகத்தாற்
கரியகண் விளங்குமவ் விரண்டின்
பண்ணினால் விளங்கு முடலெலா மவைபோற்
பரமனால் விளங்குமவ் வருணை
யண்ணலான் விளங்கு மருணைமா நகரா
லமலனு டருணைமா நகரா
லெண்ணிலாப் பதிக ளனைவரும் விளங்கு
மெவற்றினுஞ் சிறந்ததென் றிசைத்தான்.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே! கண்களிருக்கிறதினால் முகம் பிரகாசிக்கும்; முகத்தினிடத்தி லிருப்பதால் அக்கண்கள் விளங்கிக்கொண்டிருக்கும்; இந்த இரண்டினுடையசேர்க்கை யி னாலே தேகமெல்லாம் விளங்கும்; அவைபோல் பரமசிவனாலே அருணாசலம் சிறப்புடைத்திருக்கும்; அந்த அருணாசலத்தால் சுவாமி யும் அதிசயை யுடையவராய் விளங்குகிறார்; அத்தலத்திலும் அதில் எழுந்தருளியிருக்கிற சுவாமியினாலும் எண்ணிக்கையில்லாத எல்லாக்ஷேத்திரங்களுஞ் சிறப்பாய் விளங்கும்; ஆனதினாலே எல் லாத்தலங்களிலும் அது சிறந்ததென்று திருவாய்மலர்ந்தருளினார். எ-று. (௩௨)

இதனால் எல்லாத்தலங்களும் உடலாகவும், அருணாசலத்தலம் முகமாகவும், அதிற் சுவாமி கண்ணாகவும் சொல்லப்பட்டது.

வீசல ரிலைமெய்க் குளிர்ந்திடுங் கொடியின்
வேரினீர் சொரிந்திடு மதுபோற்
பூசனை யருணை நகரிலே சிறிதும்
புரையற நடக்குமே யாகிற்

காசியே முதலெத் தலமெலாம் பூசை
கணம்பெற நடந்ததா மிலேயே
லீசர்வா ழுந்தத் தலமெலாம் பூசை
யியற்றியே னியற்றிடா திருந்தேன்.

(இ-ள்.) ஒரு கொடியினது வேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மணம்வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சியையடையும். அதுபோல் அருணாசலத்தலத்தில் சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசை குற்றமில்லாமல் நடக்குமாகுல் காசிமுதலாகிய எல்லாத்தலங்களிலும் மேன்மையாகப் பூசைநடந்ததாகும். அத்திருவண்ணாமலையில் பூசை நடவாவிட்டால் மற்றத்தலங்களில் நடந்தாலென் நடவாவிட்டாலென் ஒருபயனுமில்லை. எ-று. (கூ)

நிலந்தொழு மருணா சலந்தனி லிருந்து
நெஞ்சினி லையமாய்ப் பிரிந்தோர்
தலந்தனை விரும்பி நடந்தவர் முன்செய்
தவங்களு மறங்களுந் தவறுங்
குலந்தனி லுதித்தோ ராயினும் புலையர்
குணத்தவ ராகிலுங் கொடிய
ருலந்தவ ருயிரோ டிருக்கினு மதற்கோ
ருவமைசொன் னவர்க்குமீ தொக்கும்.

(இ-ள்.) உலகத்தார் போற்றுகின்ற அருணாசலத் தலத்திலிருந்து இதைவிட உயர்ந்த தலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகங்கொண்டு பிரிந்து ஒரு க்ஷேத்திரத்தைநாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அதற்குமுன் செய்யப்பட்ட தவங்களும், தருமங்களும், பிரயோசனப்படமாட்டா; அவர்கள் நல்லகுலத்திற் பிறந்தவர்களானாலும் நீசராவார்கள்; நல்ல குணங்களை யுடையவர்களானாலும் கொடிய

103 O-,IKEN,A
No 2



பிறந்த ஆலகாலவிடத்தையுண்ட மூர்த்தியே! கோபஞ்செய்யவேண்டாம் கோபஞ்செய்யவேண்டாம். எ-று. (எக)

பிறையேமுழு மதியேயுறை பெண்ணே பிறவாணே
நறையேநறு மலரேயென நானாவித மாவை
பொறையேதிரு வருளேபொழி மயலேயிய லிசையே
முறையேபல முறையேயெனை முனியேலெனை முனியேல்.

(இ-ள்.) இளம் பிறையாகியும், பூரணசந்திரனாகியும், பெண்ணாகியும், ஆணாகியும், தேனாகியும், புஷ்பமாகியும், மலையாகியும், கிருபாவருஷத்தைப்பொழிகின்ற மேகமாகியும், சொல்லாகியும், நாதமாகியும், மற்றும் நானாவித ரூபமாகியுமிருக்கின்ற மூர்த்தியே! உமக்குமுறையோ முறையென்னை கோபிக்கவேண்டாம் கோபிக்க வேண்டாம். எ-று. (எஉ)

11872

வெம்மைச்சர மலராகிய வில்வேள்தனு வன்றே
கொம்மைத்தலை மதவாறெழு குஞ்சரமு மன்றே
செம்மைக்கன லன்றேகொலை செய்யுமந்தக னன்றே
மும்மைப்புர மன்றேயொரு பொருளாயெனை முனியேல்.

(இ-ள்.) மிகுந்த வெப்பத்தைக் கொடுக்கின்ற புஷ்பபாணங்களையுடைய மன்மதன் தேகமல்லவே! தாருகாவனத்து ரிஷிகள்விட எழும்பினதலையும் ஆறுபோன்ற மதத்தையுமுடைய கோபமாகிய யானையல்லவே! அந்தரிஷிகள் பின்புவிட்ட சிவப்பாகிய அக்கினியல்லவே! கொலைசெய்யுந் தொழிலையுடைய எமனல்லவே! திரிபுரமல்லவே! நான் எவ்வளவு! உமக்கு என்னை ஒருபொருளாகக் கோபஞ்செய்ய வேண்டாம். எ-று. (எங)

அறிதற்கரி தாமுன்முடி யறிவேனென வுளவே
பறவைப்படி வானேனினி மேலோவிடர் படுவேன்
சிறுமைப்படு மென்பாலருள் செய்யென்றுரை செய்தான்
மறுகிக்குளி ரனல்போலிறை மகிழ்வாயிவை மொழிவான்.

(இ-ள்.) யாவராலு மறியக்கூடாத உம்முடைய முடியை யறிவேனென்ற மாத்திரத்திலே பறவையுருவமானேன்; இனிமேலோ துக்கத்தையடைவேன்; சிறுமையை யடைந்த என்னிடத்தில் கிருபைசெய்யுமென்றுசொல்லி வியசனப்பட்டபோது, மறுகக்காய்ந்து குளிர்ந்தசலம்போலச் சிவபிரான் சந்தோஷமாய்த் திருவாய்மலர்ந்து சிலமொழிகளை அருளிச்செய்வார். எ-று. (௭௪)

அம்போருக வஞ்சேலினி யவனித்தல மறையோர்
தம்பூசனை யுன்பூசனை யாகித்தப வியமாஞ்
சம்பூதர வுலகேழையும் விதியென்றருள் செய்தான்
கம்பூர்கடல் விடமுண்டருள் கருணைக்கட லானான்.

(இ-ள்.) பிரமனே? இனிமேல் நீபயப்படாதே, பூமியில் பிராமணர்களுக்குச் செய்கிற பூசை உன் பூசையாகக்கொண்டு, பொன்னுருவமாயுண்டாகிய மகாமேருமலைதாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும்போல் படையென்று அருளிச்செய்தார் சங்குகள் தவழ்கின்ற சமுத்திரத்தின் விஷத்தையுண்ட கிருபைக்கடலாகிய சிவபெருமான். எ-று. (௭௫)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

இத்தலத்தை யுமக்குவரங் கொடுத்தலினால்
யோசனைமூன் றெல்லை, தூரம்
சுத்தபவித் திரஞானத் தலமாகப்
பொலிகவிந்தச் சோதி தானுஞ்





சிற்றுருவ மலையாகி வரமுதவக்
கடவதின்பஞ் சிறந்த தான
முத்திதனைத் தகையாம லுதவுமிதற்
கருணைபுரி மொழியு நாமம்.

(இ-ள்.) பிரம விஷ்ணுக்களே? உங்களுக்கு இந்தத்தலத்திலே அநுக்கிரகஞ்செய்து வரங்கொடுத்த படியினால் இத்தலத்தைச்சுற்றி மூன்றுயோசனை தூரம் வரைக்கும் சுத்தபவித்திரமாக விருக்கவேண்டும்; இந்தச்செந்தீமலை சிறிய உருவத்தோடுங் கூடிய மலையாகக்கடவது; பேரின்பஞ்சிறந்த மோட்சத்தை தடையில்லாமற் கொடுக்கும். இந்தத்தலத்துக்கு அருணைபுரியென்று பெயராம். எ-று. (௭௬)

வாதைபடு மிந்திரனு மிமையவரு
நினைக்கவவர் வருத்தந் தீர்த்தோம்
ஆதலினு மித்தலத்தை நினைப்பவர்க்குப்
பிறப்பிடும்பை யகற்று வோமிப்
பூதரமு மித்தலமும் பிரளயத்து
மழியாத பொற்ப தாகி
மோதியகாற் றடைந்ததிசைச் சராசரங்க
ளவையுமுயர் முத்தி சேர்க்கும்.

(இ-ள்.) துன்பத்தையடைந்த தேவேந்திரனும், தேவர்களும் நம்மைநினைக்க அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தோம், ஆனபடியாலிந்தத் தலத்தை நினைக்கின்றவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்குவோம்; இந்தப்பர்வதமும் இந்தத்தலமும் பிரளயகாலத்திலும் நாசமடையாத லக்ஷணத்தை யுடையதாகி மோதுகின்ற வாயுசஞ்சரிக்கின்ற திக்குகளிலுள்ள சராசரங்க ளெல்லாவற்றையும் மேலான முத்தியிலே சேர்க்கும், எ-று. (௭௭)

வையகத்தி லரியதவம் புரிந்தவருக்
கினியமுத்தி வழங்க வேண்டிச்
செய்யவிந்தத் திருநகரி லவதரிக்க
வரந்தருவோஞ் செய்த தான
மெய்பெறவொன் றாயிரமாய் வளருமிதிற்
கொடும்பாவம் விளையா திதை
யையமென வுணர் வார்க்குப்
பாகதிகிட் டாதுநம தாணைதானே.

(இ-ள்.) பூமியி லரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனிமையான மோட்சத்தைக் கொடுக்கவிரும்பிச் சோதிவடிவமாகியஇத் தத்தலத்திலவதரிக்க வரத்தைக்கொடுப்போம்; இஃதிலோர் தானஞ்செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும்; இந்தத்தலத்தில் பாவமேயுண்டாகாது; இதைச்சந்தேகமாக நினைப்பவர்களுக்கு மோக்ஷங்கிடைக்கமாட்டாது; நம்முடைய ஆணைப்படி என்றார் பரமசிவன். எ-று. (௭௮)

அண்ணலிவை மொழியளவி லழற்றாண
மதுகுறுகி யசல மாகி
வண்ணநெடுஞ் சுடர்விரிந்து விளங்குதல்கண்
டயன்திருமால் வணங்கிச் சொல்வார்
விண்ணவர்க்கு மெங்களுக்கு மிதன்சோதிக்
கெதிர்குறுகி விழிக்கப் போகா
தெண்ணரிய சுடர்களெல்லா முட்கரந்த
மலையாக விருக்க வென்றார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரஞ் சுவாமிசொன்ன அளவில், அக்கினிமலைகுறுகி ஒரு சிறியமலையாய் நிறம் பொருந்திய மிகுந்த பிரகாசம்



விரிந்து பிரகாசித்தலைப்பார்த்த பிரமவிஷ்ணுக்களும் சுவாமியை வணங்கிச் சொல்லுவார்கள்; தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்த மலையின் சோதிக்கெதிராகப் போய்விழிக்கக் கூடவில்லை; ஆனபடியினால் எண்ணுதற்கரிய கிரணங்களெல்லா மறைந்து ஒருமலையாயிருக்கவேண்டு மென்றார்கள். எ-று. (௭௯)

அன்னமிசை வருவானுங் கருடன்மிசை
வருவானு மமல மூர்த்தி
வன்னியொளி மறைத்துமற்றை மலையாக
விருத்தியென மலையாச் செய்தார்
சென்னியிலே யொருசோதி யனுதினமுந்
தெரியவருள் செய்வா யென்று
ரென்னுமந்த வடியவர்க்கா விறையவனு
மிரங்கியிவை யியம்ப லுற்றான்.

(இ-ள்.) அன்னவாகனத்தி லேறுகின்ற பிரமனும், கருடவாகனத்தில் வருகின்ற விஷ்ணுவும், மலாகிதாகிய சுவாமி அக்கினிப் பிரகாசத்தை மறைத்து, மற்ற மலைகள்போ லிருக்கவேண்டுமென்று கேட்க, அப்படியே மலையுருவாகச்செய்தார்; இந்த மலையினுச்சியில் ஒருபிரகாசம் எந்நாளுந் தெரியும்படியாகக் கிருபைசெய்ய வேண்டுமென்றார்கள்; அப்படிச்சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச் சுவாமியுந் திருவாய்மலர்ந்தார். எ-று. (௮௦)

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்
லாதுலகில் மன்னி வாழ்வார்

பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவிருமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்.

(இ-ள்.) பிரம விட்டுணுக்களே? கார்த்திகைமாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையினுச்சியில் ஒரு பிரகாசங்காண்பிப்போம்; அப்படிப்பொருந்திய சுடரைக்கண்டால் பசியும் வியாதியுமில்லாமல் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள்; இந்தச் சோதியைக்கண்ட அரசர்களுக்கும் அரிய தவசிகளுக்கும் இடையூறு நீங்கும்; இதைப்பணிந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் முத்திவரங் கொடுப்போமென்றார் அருணாசலேசுரர். எ-று. (அக)

மரணபவ மறுக்கநல்ல மருந்தாகு
மதற்குமலை மருந்தென் றோர்பே
ரருணவடி வாதலினு லருணகிரி
யெனுமொருபே ரதனை யோர்கால்
தரணியிலே யுரைத்தவர்க்கு முக்கோடி
யஞ்செழுத்துச் சரித்த தாமென்
றிருணிலவு மிடற்றிறைவ னிசைக்கமகிழ்ந்
திறைஞ்சியவ ரிசைப்ப தானார்.

(இ-ள்.) இறப்பினையும் பிறப்பினையும் நீக்குதற்கு மருந்தானபடியினாலே இந்தமலைக்கு மலைமருந்தென்றும் பெயர்; இந்தமலை சிவப்புநிறமானபடியினாலே அருணகிரியென்றும் ஒருபெயர்; அதை ஒருதரம் பூமியில் சொன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச் சமானமாகுமென்று நீலகண்டத்தை



யுடையசிவன் அருளிச்செய்ய, பிரமவிஷ்ணுக்கள் சந்தோஷத்தை யடைந்து சுவாமியை வணங்கிச் சொல்லுவார்கள். எ-று. (அஉ)

அடுத்தருண கிரியானே யுனக்குவிண்ணீ
ரலதுபுன லாட்டுவா ரார்
தொடுத்த வுடுத் திரளலது திருமுடிக்கு
மணிமாலை சூட்டுவா ரார்
கடுத்திகழு மிடற்றானே கதிர்களன்றி
மணித்தீபங் காட்டுவா ரார்
எடுத்திறைஞ்சிப் பூசைசெய்ய விதன்கீழோ
ரிலிங்கவடி வெடுப்பா யென்றார்.

(இ-ள்.) அருணாசலேசுரரே! மலையாகிய உமக்கு ஆகாயத்தினின்றும் பெய்யாநின்ற மழையேயல்லாமல் ஜலங்கொண்டுவந்து அபிஷேகஞ் செய்கிறவர்களார்? நக்ஷத்திரக் கூட்டங்களே முத்துமாலையாவ தல்லது வேறேமுத்துமாலை சூட்டுகிறவர்களார்? சூரியகிரணமே தீபமாவதல்லாமல் தீபங்கொண்டுவந்து வேறேகாட்டுகிறவர்களார்? ஆனபடியினாலே, நாங்கள் அபிஷேகமுதலானவைகள் செய்து பூசைசெய்வதற்கிந்த மலையின்கீழ் ஓரிலிங்க வடிவமாயெழுந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எ-று. (அங)

அன்னதுவா யிருக்குதுநீர் காமியத்தி
லருச்சியுமென் றசலம் புக்கா
ரெங்கிலமும் புகழுவங்கோர் சிவனுருவ
முளைத்ததுகண் டிறைஞ்சி யேத்தி
மன்னியபூ மழைபொழிந்து பரவசமாய்
மகிழ்ந்தாடி மயனைக் கூவித்
தன்னிகரில் கோபுரமு மண்டபமு
மணிமதிலுஞ் சமைப்பித் தார்கள்.

(இ-ள்.) அப்படியே இலிங்கமாகிறேம் பத்தியுடன் பூசியுங்களென்று அத்தமலையினுள்ளே மறைவுகோலஞ்செய்தார்; எந்தத் தேசமும் புகழும்படி யவ்விடத்தில் ஓரிலிங்கந் தோன்றிற்று; அதைக்கண்டு வணங்கித்தோத்திரஞ்செய்து, புட்பவருஷம் பொழிந்து, பரவசமாய்ச் சந்தோஷமடைந்து, ஆநந்தக்கூத்தாடி, மயனென்கிற தேவதச்சனைக் கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்களும் மண்டபங்களும் அழகுபொருந்திய மதிலுஞ் செய்வித்தார்கள். எ-று. (அச)

அழியாத வளநகருந் தீர்த்தமுமுந்நூற்
றறுபதுங்கண் டழகு செய்தார்
வழியாநீர்ச் சுரநதியுஞ் சுரதருவுங்
கேணிகளு மாமு மான
வொழியாம லிமையவரு மிருடியரு
மனிதரென வுருவங் கொண்டார்
விழியால விடமனைய கணிகையரா
யரம்பையரு மேவி னாரே.

(இ-ள்.) ஒருகாலத்து மழியாத வளப்பமுள்ள நகரமும், முந்நூற்றறுபதுவகையாகிய தீர்த்தமும் உண்டானது கண்டழகுசெய்தார். வழியாதசலத்தையுடைய ஆகாயகங்கையும், கற்பகவிருட்சமும், கிணறுகளும், மரங்களாயின, நீங்காமல் தேவர்களும் ரிஷிகளும் மனிதவடிவங்கொண்டு பிறந்தார்கள்; விஷம்போன்ற கண்களையுடைய தாசிகளாக அரம்பாஸ்திரிகள் பிறந்தார்கள். எ-று.

காலையிலே முழுகிமா வுரியுடுத்துச்
சிவந்தசடை கட்டி நீறு
மேலணிந்து கண்டிகைபூண் டனமுதலா
மஞ்சனத்தான் மிகுந்த சாந்தான்



மாலையினாற் சிவபூசை புரிந்தண்ணா
மலையதனை வலங்கொண் டேத்தி
யேலவொரு பதினைா யிரவாண்டு
கழிந்ததற்பின் னிறைவ ராணுர்.

(இ-ள்.) பிரம விட்டுணுக்கள் இருவரும் காலையில் முழுகி மாவுரிதரித்துக்கொண்டு, சிவந்த சடைகட்டி விபூதியைத் தேகமெல்லாந்தரித்து உருத்திராக்கமாலை பூண்டுகொண்டு, அன்னமுதலாகிய திருமஞ்சனத்தினாலும் சந்தனத்தினாலும் மாலையினாலுஞ் சிவபூசைசெய்து திருவண்ணாமலையைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிப், பதினாலாயிரம் வருஷம் ஆனபின்பு சுவாமியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள் பதிக்குப்போய்த் தங்களதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். எ-று. (அகூ)

ஆசைதருந் திருவருணைசமைத்த தற்பின்
கயிலைமலை யாசை போயிற்
றீசனுக்குங் கனகமலை யிதுவாயின்
வெள்ளிமலை யினிமே லென்றுங்
காசிமுத லெடுத்துரைக்குஞ் சிறப்புடைய
தலமேழுங் கனக நாடு
மாசகன்ற கதிர்தோன்ற வொளியிழந்த
வுடுக்கணம்போல் வளமை தேய்ந்த.

(இ-ள்.) சுவாமிக்கு ஆசைகொள்ளும்படி திருவருணாசலத்தலம் அமைந்தபிறகு, கயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது; இந்தமலையே பொன்னுருவங் கொள்ளுமாயின், வெள்ளிமலையின்மே லாசையுண்டாகுமா? காசி முதலாகச் சொல்லப்பட்ட ஏழு தலங்களும் தேவலோகமும் குற்றம் நீங்கிய சூரியனுதயமாகப் பிரகாசமிழந்த நக்ஷத்திரங்கள்போல ஒளி மழுங்கிப்போயின. எ-று. (அஎ)

அரியயனு மளவிடுதற் கரியமலை
நிலையுரைக்க வரிதென் றாலுந்
தெரியவுனக் கறிந்தபடி சிறிதுரைத்தே
னினியுரைக்குந் திறமேதென்றான்
வரிசைபெறு மார்க்கண்ட முனிமகிழ்ந்து
பணிந்துமையாள் மலையிற் றோன்றி
யுரியசிவ னிடங்கலந்த கதையுமுரைத்
தருளுகென வுரைப்ப தானான்.

(இ-ள்.) நந்திதேவர் மார்க்கண்டேய ரிஷியைப்பார்த்து, விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் அறிதற்கரிதாகிய திருமலையின் சிறப்பை என்னால் சொல்லுதற்கரியதென்றாலும், எனக்குத் தெரிந்த அளவில் சிறிது உமக்குத் தெரியும்படி சொன்னேன்; இனிச்சொல்லவேண்டிய தென்னவென்றால்; வரிசைபெற்ற மார்க்கண்டேயரிஷி சந்தோஷித்து வணங்கி, சுவாமி? பார்வதியார் இமாசலத்தில் அவதாரஞ்செய்ததுவும், சுவாமியைநோக்கித் தவஞ்செய்து அவரிடப்பாகம் பெற்றதுவுஞ் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்லத்தொடங்கினர். எ-று. (அஅ)

இரண்டாவது
திருமலைச் சருக்கம்
முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் - ௧௬௯.



5. தக்கன் பரமனைநிந்தித்து யாகஞ்செய்யவும், அதையறிந்த பரமன் வீரபத்திரரால் யாகத்தையழிக்கவும், பின்பு பரமனைப் பாணிக்கிரகணஞ்செய்ய பார்வதி பர்வதராஜனுக்குப் பெண்ணாயவதாரஞ் செய்ததுமறிக.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

# பார்வதியார் திருவவதாரச்சருக்கம்.

## அம்மன் திருவவதாரம்.

தக்கன் அருமையான தவஞ்செய்து பார்வதியார் தன்மகளாகப் பிறந்து சுவாமிக்குக் கலியாணஞ்செய்து கொடுத்து மாமனாராகும் படி வரம்பெற்று, அந்தப்படி வாய்த்தபின்பு ஒருநாள் பரமசிவன் தனக்கு எழுந்து மரியாதைசெய்யவில்லையென்கிற கோபங்கொண்டு அவரைப்பார்க்கிலுந் தான் மேன்மையை அடையவேணுமென்று ஒருபெரிய யாகஞ்செய்யத் தொடங்கினான். அந்தயாகத்திற்குவந்த பார்வதியைத் தக்கனும் அவனுடைய பெண்சாதியும் அவமதித்ததற்காக அம்மனுக்குக் கோபம்வந்து இந்தயாகசாலை சுடலையாகக் கடவதென்று சபித்து இவர்கள்வளர்த்ததேகம் இருக்கக் கூடாதென்று யோகத்தினாலே தன்னுடைய தேகத்தைவிட்டாள். இந்தச்செய்தியைக்கேட்ட பரமசிவனுக்குக் கோபமுண்டாக, அப்போது அவர்

நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய வீரபத்திரர் சுவாமியை வணங்கி என்னை அழைத்தகாரியம் யாதென்றுகேட்கத் தக்கனுடைய யாகத்தை அழித்துவாக் கடவை என்று பரமசிவன் கட்டளையிட்ட க்ஷணம், வீரபத்திரர் பூதகணசகிதராய் யாகசாலைக்குப்போய்த் தக்கனுக்காகத் தன்னை எதிர்த்த தேவர்களையும் யாகத்தைநடத்தி நின்ற ரிஷிமுதலானவர்களையுங்கொன்று, யாகசாலையை அழித்துத் தக்கனையுங் கொன்று சுவாமியினிடத்திற்குப்போய் இந்தச்சங்கதியைச்சொல்ல, அப்போது பரமசிவனுக்குக் கோபம்நீங்கிக் கிருபைவந்து இறந்தவர்களையெல்லாம் மறுபடியும் பிழைப்பித்து அவர்கள் குற்றத்தைப் பொறுத்துப் பழையபடி அவரவரிடங்களை அவரவர்களுக்குக்கொடுத்து அனுப்பிவிட்டார். தக்கனைமாத்திரம் ஆட்டுத் தலையை அவன் உடலில்வைத்துப் பொருத்தி எழுந்திருக்கும்படி செய்தார்.

முன், யோகஅக்கினியால் தன்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்ட பார்வதி தேவியானவள் இமயகிரிராஜனும் அவர்மனைவியாகிய மேனாதேவியும்செய்த தபோபலத்தால் அவர்களுக்குக் குமாரத்தியாகத் திருவவதாரஞ்செய்து வளர்ந்துகொண் டிருந்தாள்.

இவ்விடத்தில் இப்பிரகாரமிருக்க தேவேந்திரன் மற்றத் தேவர்களோடு பிர்மாவினிடஞ்சென்று தாருகாசுரனால் தாங்கள் இம்சைப்படுவதைச்சொல்ல, அதற்கு பிர்மா அவனை யாரும்வெல்லமாட்டார்கள் ஆயினும் பரமசிவனுக்குப் பார்வதியாரிடத்தில் பிறக்கப்போகிற சுப்பிரமணியர் அவனைவெல்வார் ஆதலால் இப்போது இமயமலைச்சாரலில் யோகஞ்செய்துகொண் டிருக்கும் பரமசிவன் பார்வதியாருக்கு திருமங்கிலியதாரணஞ் செய்யும்படியான முயற்சியைத் தேடுங்களென்றுசொன்னார். பின்பு தேவேந்திரன் முதலானோர் மன்மதனைத் தருவித்து, சுவாமியினுடைய தவத்தை அழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவன் அப்படியே போய் யோகத்திலிருந்த பரமசிவன்பேரில் தன்பாணத்தைப் பிர



யோகஞ்செய்தவுடன், பரமசிவன் தன்நெற்றிக்கண்ணைத் திறந்து பார்க்க அதனால் மன்மதன் எரிந்துபோய்விட்டான். பின்பு பரமசிவன் கயிலாயத்திற்கு எழுந்தருளி இமயகிரிராஜன் புத்திரியாகிய பார்வதியாரைத் தனக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேணுமென்று அவனுக்குச்சொல்லியனுப்ப, அவனும்சந்தோஷத்துடன் இசைந்து பட்டணத்தை அலங்கரித்து கலியாணமண்டப முதலானதுஞ் சிறப்பாக அமைத்து சுவாமியினுடைய வரவுக்கு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருக்கும்போது, பரமசிவன் கலியாணகோலராய் ரிஷபவாகனத்தின்மேலேறித் தேவர்கள் ரிஷிகள் முதலானவர்கள் சூழ்ந்துவர இமயமலைக்கு எழுந்தருளிக் கலியாணமண்டபத்தில் வீற்றிருந்தார். பார்வதியாரை அலங்காரஞ்செய்து இட்டுக்கொண்டுவந்து சுவாமியின்பக்கத்தில் உட்காரவைத்தவுடன், பிர்மாவானவர் வேதவிதிப்படி கலியாணசடங்குகள்செய்ய சுவாமி அம்மனுக்கு மங்கிலியந் தரித்தருளினார். அப்போது தேவர்கள் ரிஷிகள்முதலான சர்வத்திரபேரும் புகழ்ந்து துதிசெய்தார்கள், இவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் சுவாமி மன்மதனையும் வரவழைத்துக் கொடுத்தார். பிறகு விக்கினேஸ்வரரையும் சுப்பிரமணியரையும் பார்வதியார் பெற்றாள், சுவாமிகொடுத்த வேலாயுதத்தைக்கொண்டு சுப்பிரமணியர் தாருகாசுரனைக் கொன்றுவிட்டார். பின்பு பரமசிவனும் பார்வதியும் தங்கள் புத்திரர்களுடனே கயிலாயத்தில் எழுந்தருளி யிருந்தார்கள்.

## பார்வதியார் திருவவதாரச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பன்னிருவர் பதினொருவ ரெழுவரெண்மர்
திசைக்கிறைவர் பணிநாட் டுள்ளோர்
கின்னரர் கிம்புருடர் சித்தரியக்கரிமை
யவர் முனிவர் கிளைஞ ருள்ளோர்

மன்னுமல ரவன்றிருமால் கலைமடந்தை
மலர்மடந்தை மகிழ்ந்து சூழ
முன்னவனை யிகழ்ந்து தக்கன்
முடியாத பெருவேள்வி முடிக்கலுற்றான்.

பூருவகதை.

கேளும் மார்க்கண்டேயரே முன்னாளிலே பிரமனிடத்திற் பிறந்த தக்கனென்பவன், அரியதவஞ்செய்து உயர்ந்த வரங்களைப் பெற்றுக்கொண்டு மிகவும் பிரசித்தனாகி வாழுகிறகாலத்தில், பார்வதியார் தன்னிடத்திற் பிறக்க அந்த அம்மையைச் சுவாமிக்குத் திருக்கலியாணஞ் செய்துகொடுத்து மாமனாராகும்படி வரம்பெற்று, அந்தபடி செய்தபின்பு, ஒருநாள் இவன்சுவாமியினுடைய சபைக்குப் போனான்; அவ்விடத்தில் சுவாமி தனக்குஎழுந்து மரியாதை செய்யவில்லையென்கிற கோபங்கொண்டு தன்னுடைய வீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வை யடையவேண்டுமென்று எண்ணங்கொண்டு

(இ-ள்.) பன்னிரண்டு சூரியர்கள், பதினொருருத்திரர்கள், சத்தரிஷிகள், அஷ்டதிக்குப்பாலகர், நாகலோகத்தார், கின்னரர், கிம்புருடர், சித்தர், யக்ஷர், தேவர்கள், முனிவர்கள், கலைபெற்றபிரமன், விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி மிகவுஞ்சந்தோஷம் அடைந்துசுற்றிக்கொள்ள, எல்லோருக்கும் முதல்வராகிய பரமசிவனைநிந்தித்து நிறைவேற்றாத பெரிய யாகஞ் செய்யத்தொடங்கினான். எ-று. (க)

எந்தைசெயு மகம்பார்க்க விடையருளென்
றிறைக்கிறைவி யிசைத்தா ளெந்தை
புந்தியிலா திகழ்ந்தனனென் றுரைத்தனனீ
தெனைவேண்டிப் பொறுப்பா யென்று



வந்தனஞ்செய் தனளவளை நகைபுரிந்து
கடிதுசென்று வருவா யென்றான்
கந்தமலர்க் குழலாளுந் தந்தைமகந்
தொடங்குகன தலத்தைச் சார்ந்தாள்.

(இ-ள்.) பார்வதி தேவியானவள் தகப்பனாகிய தக்கன் யாகம் பண்ணுவதைக்கேட்டு, சுவாமி? என்னுடைய தகப்பன் செய்கிற வேள்வியைப் பார்த்து வருகிறதற்கு உத்தரவுகொடுமென்று கேட்க, அதற்கு சுவாமியானவர் உன் தகப்பன் புத்தியில்லாமல் என்னை மிகவும்நிந்தித்திருக்கின்றானே, நீபோகலாமாவென்றுசொல்ல, அதைக் கேட்டு சுவாமி என்தகப்பன்செய்த இந்தகுற்றத்தை என்னைவேண்டிப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்தபோது அந்த அம்மையைப்பார்த்து நகைத்து நல்லது நீபோய்ச்சீக்கிரத்தில் வந்துசேரென்று சொல்லப் பார்வதியும் தகப்பன் யாகஞ்செய்கிற இடத்துக்குப்போனாள், எ-று. (உ)

தாயரைக்கண் டடிதொழுதா ளவடழுவா
திருந்தனடன் றந்தை யான
தியவனைப் பணிந்தனளங் கவனுமிகழ்ந்
தானிகழ்ந்த செயலை நோக்கிப்
பேயிருக்குஞ் சுடலையெனப் பிழைபிறந்து
விடுகவுங்கள் பெருவாழ் வென்று
வாய்பிறக்குங் கொடுமைசொலி மறைந்தனளச்
செயலறிந்தான் மங்கை பாகன்.

(இ-ள்.) பார்வதி தக்கன் யாகசாலைக்குப்போய் தன்னுடைய தாயைவணங்கினாள், அவன் இந்த அம்மையை தழுவி உபசாரஞ் சொல்லாமலிருந்தான்; அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனை

வந்தனஞ்செய்ய, அவனும் நிந்தித்தான்; அதைப்பார்த்துக் கோபங்கொண்டு உன்னுடைய யாகசாலை வாழ்வு, பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகிப் போகக்கடவதென்று சபித்து, இப்பாவிவளர்த்த தேகம் இருக்கக்கூடாதென்று யோகத்தினாலே தன்னுடைய தேகத்தைவிட்டாள்; அச்செய்கை யுணர்ந்தார் பரமசிவன். எ-று. (௩)

கலி விருத்தம்.

உண்ணிலாவு வஞ்சிசெல்ல வொருவனாவி யுய்யுமோ
தண்ணிலா முடிக்குணின்று தழலைமொண் டிறைக்கையா
லண்ணல்வெம்பி முனிவுகொள்ள வளவினெற்றி விழிதனில்
விண்ணடுங்க மண்ணடுங்க வீரன்வந்து தோன்றினான்.

(இ-ள்.) எப்பொழுதுங் கூடவிருந்தபார்வதி தேகத்தைவிட்டவுடனே, ஒன்றியாகி யிருந்த பரமசிவனுடைய உயிர் சவுக்கியத்தையடையுமோ! குளிர்ந்த சந்திரன். தம்முடைய சிரத்திலே தானேயிருந்து நெருப்பைவாரிச் சொரிகின்றபடியினாலே அதிக தாபமடைந்து இந்தத்தக்கனாகிய பாவியினாலல்லவோ இவ்வருத்தம் உண்டாயிற்றென்று கோபித்துக்கொள்ளும்போது, அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரர் ஆகாயவுலகமும் பூமியும் நடுங்கும்படி தோன்றினார். எ-று. (௪)

மஞ்சுபற்றி யுடல்கருத்து மணிமயூர முடியுடன்
சஞ்சரிக்கு மேருவென்ன விடிமுழங்கு தழலின்வாய்
நஞ்சுகொப் புளிக்கநெற்றி நயனமுங் கொதிக்கமே
லஞ்சலித்த கையொடெங்க ளையன்வந்து தோன்றினான்.

(இ-ள்.) மேகத்தைப்பார்க்கிலும் உடம்புகறுத்துமயிலின்நிறம்போன்ற மரகதரத்தினமிழைத்த கிரீடத்துடன் சஞ்சரிக்கின்றமேருவுக்கு ஒப்பாகி இடிபோல் முழங்குகின்ற நெருப்பாகிய சொல்லையு



டைய வாய்நஞ்சைக் கொப்புளிக்க, நெற்றிக்கண் கொதிக்கச் சிரத்தின்மேல்வைத்துக் கூப்பிய கைகளோடு எம் ஐயராகிய வீரபத்திரர்வந்து தோன்றினார். எ-று. (௫)

ஒழித்தசிங்க வுரிபுயத்தி னுத்தரீய மாகவே
கழித்தெறிந்த வல்லியத்தி னதளிசைத்த கச்சையாய்
விழித்திமைக்குமுன்னம்விண்ணின் வெளியடைத்தமேனியா
யழைத்ததென்னவென்னவென்றனையன்வந்துதோன்றினான்.

(இ-ள்.) இரணியனைக் கொன்ற நரசிங்கத்தினுடைய தோல் உத்தரீயமாகவும், தாருகாவனத்து ரிஷிகளால் விடப்பட்டுச் சுவாமியால் மரணமடைந்த புலியின் தோல் இடுப்புக்கச்சையாகவும், விழித்து இமைப்பதற்குமுன்னே ஆகாயமெல்லாமறைத்த தேகத்துடனே என்னை யழைத்தது என்னகாரணம் என்னகாரணமென்று வீரபத்திரர் வந்தார். எ-று. (௬)

முக்கணத்த னீர்கொடாது கனல்கொடுக்கு முகிலெனத்
தக்கன்வேள்வி யைத்தகர்த்து மீள்தியென்று சாற்றினா
னக்கணத்தி னவனைபொங்கி யடிவணங்கி யேகினான்
பக்கநின்ற பூதநாதர் பாரிடங்கள் சூழவே.

(இ-ள்.) என்னையழைத்த காரியம் என்னவென்று கேட்டவீரபத்திரரைப் பார்த்து, மூன்று கண்களையுடைய பரமசிவன், சலத்தைப்பொழியாமல் நெருப்புகளைக் கக்கும்மேகம்போற்போய்த்தக்கனுடைய யாகத்தையழித்து வாவென்றருளிச்செய்ய, அக்கணமே வீரபத்திரர் அதிகசந்தோஷமடைந்து சுவாமியினது திருவடியைத் தொழுது பக்கத்திலின்ற பூதகூட்டங்களும் பேய்களுஞ் சூழப்போனார். எ-று. (௭)

நஞ்சுகொப் புளிக்குநாக நாலிரண்டு மாலையா
யஞ்சிரட்டி பூதநீல வாலவட்டம் வீசவே
குஞ்சரங்க ளெட்டையுங் குதம்பையாக விட்டவெண்
கஞ்சுகத்தர் நால்வர் தூய கவரிநின்று வீசவே.

(இ-ள்.) விஷங்கக்குகின்ற அஷ்டமா நாகங்களை மாலையாகத் தரித்துக்கொண்டு பத்துப்பூதங்கள் நீலவர்ணமான ஆலவட்டம்வீசிக் கொண்டுவரவும், திக்கிலிருக்கும் யானைகளெட்டையுங்காதிலேகுண்டலமாகத் தரித்துக்கொண்டு, வெள்ளைச்சட்டை யணிந்த நால்வர் பரிசுத்தமாகிய சாமரம் வீசவும் புறப்பட்டார் வீரபத்திரர். எ-று. ()

தீயிருந்த வுதரவெம்மை விண்பிழிந்து தீர்த்திடும்
பேயிரண்டு நூறுநூறு காகளம் பிடிக்கவே
வாயிரண்டு போலுமாலை மதியிடந்த பூதமோ
ராயிரங் கவிக்கமுத்தி னாதபத்தி ரங்களே.

(இ-ள்.) வடவாமுகாக்கினி குடிகொண்டிருந்த வயிற்றினுடைய பசியை மேகங்களைப் பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்றஇரண்டாயிரம் பேய்கள் எக்காளம் பிடிக்கவும், சந்திரனை இரண்டாகப்பிளந்து இரண்டு கடைவாயிலும் வைத்தது போலுமிருக்கும் ஆயிரம்பூதங்கள் முத்துக்குடைகள் பிடிக்கவும் புறப்பட்டார். எ-று. ()

மாயுமாயர் தந்தசங்கு கோடிகோடி மருகவே
தீயின்வாயி னூர்திதந்த சிங்காத மூதவே
சாயுமெண்ணில் காலர்மேதி தந்தகொம் பிசைக்கவே
யாயிரங்க ளிற்றெருத் தணைத்ததேரி லேறினான்.

(இ-ள்.) இறந்திறந்து பிறக்கிற அனேககோடி விஷ்ணுக்களுடைய கையிலிருந்த சங்குகளை அனேக பூதங்கள் வாயில் வைத்தூதவும், இறந்த அக்கினிபகவான் வாயுபகவானேறுகின்ற ஆட்டுக்



கடா கலைமான் இவைகளுடைய கொம்புகளை வாயில் வைத்து அனேகபூதங்களூதவும், இறந்துபோன எமராசர்களேறிய எருமைக் கடாக்களுடைய கொம்புகளை வாயில்வைத்து அனேக பூதங்களூதவும், ஆயிரம் யானைகள் கட்டியிழுக்கிற தேரிலேறினார் வீரபத்திரர். எ-று. (௧௦)

சிலகணங்க ளானையான சிலகணங்க டேரதா
யுலவுகின்ற சிலகணங்க ளோடுகின்ற வாசியாய்
மலைவுகொண்டு சிலகணங்கண் மனிதர் தேவராயினர்
வலகைதானு மலகிலா தனந்தவேட மானதே.

(இ-ள்.) அப்படி வீரபத்திரர்தேரிலேறினபோது, சிலபூதங்கள் யானைரூபங் கொண்டன; சிலபூதங்கள் தேரினுருவங் கொண்டன; சில பூதங்கள் குதிரையாயின; சில பூதங்கள் மனிதரும் தேவருமாயின; எண்ணில்லாத பேய்கள் எண்ணிறந்த ரூபங்கொண்டு புறப்பட்டன. எ-று. (௧௧)

வீரையே முடங்கவுண்டும் விடாய்கெடாது மீளுமே
பாரவேழு பாருமுண்டு பசிகெடாது படருமே
கூரவே லெறிந்துகால னூடுகொள்ளை கொள்ளுமே
போரையே விரும்பிமுன் னடந்துசென்ற பூதமே.

(இ-ள்.) வீரபத்திரர் புறப்பட்டவுடனே, யுத்தஞ்செய்ய விரும்பி அவருக்குமுன்னே நடந்த பூதங்கள் எழு சமுத்திரத்து நீரடங்கலும் குடித்தாலும்விடாய் தீராமல்திரும்பும்; பாரமாகிய எழுலகத்தையும் சாப்பிட்டும் பசிபோகாமல் அலைந்துகொண்டிருக்குங் கூர்மைபொருந்திய வேலாயுதத்தை எறிந்து எமனுடைய நாட்டைக் கொள்ளை கொள்ளும். எ-று. (௧௨)

கொண்டலேழை யுஞ்சிவந்த குஞ்சிமீது சுற்றுமே
புண்டரீக ரண்டமும் புகைகொளுத்தி மீளுமே
யெண்டிசா முகத்தைநாடி யாகசாலை தேடுமே
சண்டவாயு வென்னவக்கை தட்டியோடு பூதமே.

(இ-ள்.) பூதங்கள் ஏழுமேகங்களையும் பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சுற்றிக் கட்டிக்கொள்ளும்; அனேக பிரமாண்டங்களையும் புகையுண்டாக நெருப்பினால் கொளுத்தும்; எட்டுத்திக்குந்தேடி யாகசாலை யெங்கேயென்றுதேடும்; பிரசண்டவாயுபோலக்கைகளைக் கொட்டிக்கொண்டு வீரபத்திரர் பின்னே ஓடாநிற்கும். எ-று. (கஉ)

வெள்ளவாழி மதுநுகர்ந்து வீழுகின்ற சிலகணந்
துள்ளவந்து புவனமுற்றுஞ் சுற்றுகின்ற விறையையார்
தள்ளுகின்ற பேர்களென்று சாய்க்கநின்று நகைசெயும்
பள்ளிகொள்ளு முடனெழுந்து பரிவுகொண்டு பாடுமே.

(இ-ள்.) வெள்ளமாகிய சமுத்திரம்போன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து அதனால் விருப்புமேலிட்டுச் சண்டைக்கு எழுந்தன; சிலபூதங்கள் துள்ளிக்கொண்டு உலகமெல்லாஞ்சுற்றிவரும்; சிலபூதங்கள் நம்முடைய சுவாமியைத் தள்ளுகிறவர்கள் யாரென்றுகேட்டு அவர்களைக் கொல்லுகிறதற்காக நின்று வீர நகைகொள்ளும்; சில பூதங்கள் நித்திரைசெய்யும்; சிலபூதங்கள் உடனே யெழுந்து அன்பு கொண்டு சிவனைக்குறித்துப் பாடும். எ-று. (கங)

வெதிர்சிலம்பு முரசுசங்கம் விருதுபம்பை யதிரவே
புதியகண்டை மணிதவண்டை புரிமதங்க மறுகநீள்
கதிகடந்து யாகசாலை கண்டு பூத கணமெலா
மதிதிமைந்த ரானபேர்க ளாவிவாரி வீசினார்.

(இ-ள்.) வீரபத்திரர் புறப்பட்டவுடனே புள்ளாங்குழல், சிலம்பு, முரசு, சங்கங்கள், விருதாகிய உடுக்கை முதலானவாத்தியமுழக்கவும், பெரியமணி, தவண்டை, மிர்தங்கம், சத்திக்கவும், வழிமுழுதும் போய்த் தக்கனுடைய யாகசாலையைக் கண்டு எல்லாப்பூதக் கூட்டங்களும் அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகல தேவர்களையும் அள்ளி வாரி வீசினார்கள். எ-று. (கச)



காரிலேறி மையிலேறி கடாவிலேறி யலகைமே
லேரினேறி மகரமேறி யிரலையேறி யளகையாம்
பாரிலேறி மானமேறி பசுவிலேறி யெண்மருந்
தேரிலேறி வந்தவீரர் சேனைமாள மோதினார்.

(இ-ள்.) மேகவாகனனாகிய தேவேந்திரனும், ஆட்டுக்கடாவிலேறுகின்ற அக்கினியும், எருமைக்கடாவாகனனாகிய யமனும், பேய்வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மான்வாகனனாகியவாயுபகவானும், அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்ற குபேரனும், எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேருந் தேரிலேறி எதிர்த்துக்கொண்டுவந்த வீரபத்திரருடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள். எ-று. (கரு)

வாளிசூலம் வேலுலக்கை வச்சிரங்க ணிச்சிவாள்
மீளிசேனை காவலாளர் வீழுமாறு வீசினார்
கூளிநா லிரண்டுசென்று கொடியவெண்மர் பரியெலா
மாளியோ டெடுத்தெறிந்த * வம்மனைக்கு நிகரவே.

(இ-ள்.) அஷ்டதிக்குப்பாலகரும் பாணம், சூலாயுதம், வேல், உலக்கை, வச்சிராயுதம், மழு, கத்தி இவைகளை வீரபத்திரருடைய சேனைத்தலைவர்கள் விழும்படி பிரயோகஞ்செய்தார்கள்; அப்போது எட்டு பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுப்பேரையும், அவர்களேறியவாகனங்க ளெட்டையும், அம்மனைக்குச்சமானமாக எடுத்தெறிந்தன. எ-று. (கசு)

* அம்மனை என்பது மகளிராடும் ஒருவிளையாட்டு.

அலகைகா ளிரண்டும்வீழ வமர்செய்பூத மோடவே
மலைவுகண்டு திக்குபாலர் வாகைமாலை சூடினார்
கலிதல்கண்டு வீரன்வாளி காலிரண்டை யேவினா
னுலகபால ருடல்புகுந்து ளமுதமுண் டோயதே.

(இ-ள்.) முன்னே எட்டுப்பூதங்களால் எறிபட்டு விழுந்த திக்குப்பாலகரெண்மரும், அந்த எட்டுபூதங்களும் கீழேவிழவும், மற்றைப் பூதங்களெல்லாம் ஓடிப்போகவும் யுத்தம் செய்து, வெற்றிமாலை சூடிக்கொண்டார்கள்; அதுகண்டவீரபத்திரர் எட்டுபாணத்தை விட்டார்; அவைகள்போய் எட்டுபேர்களுடலைத் துளைத்து அவ்வுடல்களுள் இருக்கிற அமிர்தத்தைப் புசித்து சஞ்சரித்தன. எ-று. ()

மருங்கிழிந்து குயிலதாகி வச்சிரத்த னோடினா
னொருங்குமீச னளகையாளி நிருதிவாயு வருணனுஞ்
சுருங்கினார் கடாவிலேறி துஞ்சினா னழற்பிரான்
பெருங்கையேழு மீசனன்பர் பிறவிபோ லறுத்தனன்.

(இ-ள்.) தேவேந்திரன், தன் வாகனத்தைவிட்டுக் குயில்வடிவங்கொண்டு ஓடினான்; ஈசானன், குபேரன், நிருதி, வாயு, வருணன் இவர்கள் தோற்று வெட்கத்தை யடைந்தார்கள்; எமன் இறந்தான்; அக்கினி பகவானுடைய எழு கையையும், சுவாமி அன்பருடைய பாவங்களை அறுப்பதுபோல் அறுத்துத் தள்ளினார் வீரபத்திரர். எ-று. (கக)

கச்சமற்ற வச்சமோடு கலையதான வெச்சனா
ரச்சனாக வுயிரைவாரி யுடலுரித் தெரிந்தனன்
பச்சைவல்லி யன்னையான பன்னிகா திரண்டையும்
வச்சிரத்தி னலரிந்து மாமன்முன்பு சென்றனன்.



(இ-ள்.) அளவில்லாத பயங்கொண்ட யாககர்த்தாவாகிய கலைக்கோட்டு மகாரிஷி பிராணனுந் தேகமும் வேறாகக்கொன்று உடலை உரித்து எறிந்தார்; பார்வதியின் தாயாகிய தக்கனுடைய பெண்சாதியின் இரண்டு காதையும் அறுத்துத்தள்ளி, மாமனாகிய தக்கனிடத்திற்குப் போனார் வீரபத்திரர். எ-று. (உ0)

மிக்கருந்து சோமபானம் வீரபான மாகவே
யொக்கநின்ற யாகதண்ட மொன்று கொண்டு குன்றுபோற்
றக்கனா ரெதிர்த்தபோது தலையரிந்து தள்ளினா
னக்கணத்தி லொன்றுசென் றரைக்கணத் தயின்றதே.

(இ-ள்.) தேவர்கள் கூடிச் சோமபானஞ் செய்வதை நீக்கித் தனக்கு வீரமே பானமாகும்படி யாகசாலையிற் புகுந்து, யாகத்தம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு எதிர்த்த தக்கனுடைய தலையைமலைபோல் கீழேவிழ அறுத்துத்தள்ளினார்; அப்போது அந்தப் பூதகணங்களிலொன்று அரைநொடியிற்றானே அத் தக்கன் தலையைத்தின்றுவிட்டது. எ-று. (உக)

பசுக்களே ருருத்திரப் பசுக்களாவி தன்னையும்
வசுக்களாவி தன்னையு மருத்துதேவ ராவியும்
முசுக்கள்போ லொளித்திருந்த முனிவராவி தன்னையு
மசிக்கவீரன் விட்டசூல மள்ளியள்ளி யுண்டதே.

(இ-ள்.) மாடுகளிலேறுகின்ற பசுப்போன்ற உருத்திரக் கூட்டங்கள் பிராணனையும், அஷ்டவசுக்க ளுயிரையும், மருத்துவர்கள் உயிரையும், குரங்குகள்போல் ஒளித்துப்பதுங்கியிருந்த முனிவருடைய பிராணனையும், பரியாசஞ்செய்ய வீரபத்திரர்விட்ட சூலாயுதமானது எடுத்து எடுத்து * தின்றுவிட்டது. எ-று. (உஉ)

* தின்றுவிட்ட தென்றது, இங்ஙனம் பிளந்து கொன்றது என்று பொருள் கொள்க.

விழியினோ டருக்கர்பல்லை வோறுத்து வாணிமா
வெழில்படைத்த நாண்டனா விரண்டு துண்ட மாக்கினான்
கழலமைத்த கான்மிதிக்க வயிர்தழுண்ட கலைநிலா
வழலவிக்கு மாறுதாளி லப்புவெண்ணெ யொத்ததே.

(இ-ள்.) சூரியன் பற்களுங் கண்ணுந் தெறித்துக் கீழேவிழ அடித்துச் சரசுவதியைப் பிடித்து இரண்டாக நாக்கையறுத்தார்; இலக்குமியை மூக்கறுத்தார்; வீரகண்டாமணியைத் தரித்த காலினால் சந்திரனை மிதிக்க, அவன் நசுங்கித் தக்கனுடைய யாகசாலை நெருப்பை மிதித்ததனால் அந்த வெப்பந்தீர அப்பிய வெண்ணெய் போலானான். எ-று. (௨௪)

காயமண்ணில் விட்டதேவர் கரியமேனி யலகையாய்
மாயமாகி முன்னையாகம் வந்துதோன்றி யமர்செயத்
தூயசேனை யாயபேர் தொடர்ந்துசாக வமர்செய்தார்
பேயதா யிருக்கவும் பிணக்ககன்ற தில்லையே.

(இ-ள்.) பூதகணங்களாலே இறந்துபோன தேவர்கள், கரிய தேகத்தையுடைய பசாசாகி, மறுபடியும் முன்யாகத்திலே மாயமாய்த் தோன்றி எழுந்து சண்டைசெய்ய, அவர்களை வீரபத்திர சேனை அடித்துக்கொன்றார்கள்; ஆகையால் பேயாய்ப் போகியுந் துக்கம் நீங்கவில்லை. எ-று. (௨௫)

விதிபுனைந்த வோமகுண்டம் வேறுபட்ட தென்னினும்
புதியசோறு மெள்ளினோடு பொரியும்வாய் புகட்டிமுன்
குதிகொணெய்க் கடாமெடுத் தொழுக்குபோதொர் கூழின்
னுதரகுண்ட மனலெழுந்த வோமகுண்ட மானதே.

(இ-ள்.) பிரமனாலே விதிக்கப்பட்டயாகசாலை நாசத்தையடைந்தாலும், அதற்குபயோகமாக வைத்திருந்தசோறும், எள்ளும், பொரியும், ஒருபூதம் வாயிற் கொட்டிக்கொண்டு நெய்க்குடங்களை யெடு



த்து மடமடவென்று உட்கொள்ளும்போது, அதனுடைய வயிறே ஓமகுண்டமாகவும் உதராக்கினியே நெருப்பாகவு மிருந்தது. எ-று.

அட்டதிக்கு பாலரும் வசுக்களுங் குருக்களும்
மூட்டரான முப்பதிற்று மூன்றுகோடி தேவரும்
பட்டபோ தவர்தம்மெய்கள் பழுதுறாது தன்னுளே
இட்டபூத வுதரமுன்னை யாகசாலை யொத்ததே.

(இ-ள்.) அஷ்டதிக்குப் பாலகரும், அஷ்டவசுக்களும், தலைவராக வந்தகுருக்களும், மூட்டப்பட்டவராகிய முப்பத்து மூக்கோடி தேவர்களும் இறந்தபோது, அவர்கள்தேகம் வீணாகப் போகாமல், வீரபத்திரருக்கு முன்னே அவருடைய சேனைகள் சாப்பிட்டபடியினால் அந்தப் பூதகணங்களுடைய வயிறு யாகசாலையை யொத்தது. எ-று. (௨௬)

கற்பகால மூங்கெடாத கணமிதிக்க வமரர்தம்
மற்பமா முடம்பிரத்த மாவிகார மொத்ததால்
பற்பலா ரியக்கர்சித்தர் பண்டிசிந்து குடர்களாற்
சர்ப்பயாக மொத்ததன்று தக்கர்செய்த யாகமே.

(இ-ள்.) கற்பகாலத்திலும் அழிவில்லாத பூதகணங்கள் மிதித்தபடியினால், தேவர்கள் அற்பமாகிய உடம்பினின்றும் பீறிட்ட உதிரம் யாகத்துக்கு நெய்யெடுத்துச் சொரிதல்போலிருந்தது; பல பல யட்சர் சித்தர்களுடைய வயிறு பிதுக்கப்பட்டு அவர்களுடைய குடல் கொடி கொடியாகச்சிந்திக்கிடந்தது, சர்ப்பயாகஞ் செய்தலையொத்தது அன்று தக்கன் செய்தவேள்வி. எ-று. (௨௭)

சிறந்ததிக்கு பாலராதி தேவர் சித்தர் முதலினோ
ரிறந்திறந்து போகவேத னிறைவிலே யியற்றினான்
பிறந்துவந்து வந்துபோர் பெருக்கினார் பிறந்தபேர்
மறந்துவீழ வீரன்மோதி மலரினானை யண்டினான்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர் முதலாகிய தேவர்கள், சித்தர்கள் முதலானோர் இறக்க இறக்கப் பிரமன் கொடிப்பொழுதில் அவர்களைப் படைத்துக்கொண்டே வந்தார்; அவர்கள் மறுபடியும் யுத்தஞ்செய்தார்கள்; (பிறக்கும்வரலாற்றை யுணர்ந்து) அவர்கள் பின்னும் பிறக்காம லிருக்கும்படி பிரமனை யுதைத்து யுத்தஞ்செய்யத் தொடங்கினார் வீரபத்திரர். எ-று. (௨௮)

செத்ததேவர் மீளவுஞ் செருச்செயப் படைத்திடுங்
கைத்தலங்கள் வீழுமாறு கமலனை மோதினான்
* முத்தலைக்கொள் படையெடுத்து முண்டகத்தர் சிந்தைசேர்
பத்துமைந்தர் சென்னியும் படிக்குளே பாப்பினான்.

(இ-ள்.) இறந்துபோன தேவர்கள் மறுபடியுஞ் சண்டைசெய்யப்படைக்கும் பிரமனுடைய கைகளை அறுத்துத்தள்ளினார்; மூன்று தலையை யுடைய ஆயுதத்தினால் அவர்மனத்தில் உண்டாகிய பத்துப்பிரமருடைய தலைகளையும் குத்திப், பூமியில் விழத்தள்ளினார் வீரபத்திரர். எ-று. (௨௯)

அண்டகூட முண்டுமிழ்ந்த வாதிமாய னமர்செயத்
துண்டமேரு வெனவிளங்கு கருடன்மீது தோன்றியே
விண்டவாளி வருடமாக வீரன்மார்பில் வீசினான்
கண்டதுண்ட மாகவீரன் கையின்வாளி யேவினான்.

(இ-ள்.) அண்டங்களை விழுங்கி உமிழ்ந்த முதல்வராகியவிஷ்ணுமூர்த்தி சண்டைசெய்ய மேருகிராக விளங்கிய மூக்கையுடைய கருடன்மேல் ஏறிக்கொண்டு அநேக பாணவருஷங்கள் வீரபத்திரர் மார்பில் படும்படியாகப் பொழிந்தார்; அப்படிவிட்ட பாணங்களை எல்லாம் கண்டதுண்டமாகத் தங்கைப்பாணத்தினால் அறுத்தெறிந்தார் வீரபத்திரர். எ-று. (௩௦)

* முத்தலை கொள்படை-சூலாயுதம்.



வையமுண்ட மால்வெகுண்டு வான்விதிர்த்து வீசினா
னையனங்கொர் வாளியா லறுத்தெறிந்தொ ரம்பினாற்
பையரா வருந்தியாவி பருகினான்மெய் கருகினான்
கையிலாழி யேவினான் பணிந்ததண்ணல் காலிலே.

(இ-ள்.) விஷ்ணு, வில்யுத்தம் பண்ணுகிறதற்குச் சக்தியில்லாமல்கோபங்கொண்டு, ஒருசத்தியை எடுத்துச்சுற்றி வீசினார்; வீரபத்திரர், அச்சத்தியை ஒருபாணத்தைவிட்டறுத்தெறிந்து ஒரு பாணத்தினால் பாம்பைக் கொல்லுகின்ற கருடனைக் கொன்றுவிட்டார்; அதுகண்டு துக்கத்தினால் உடம்பு கருகிப்போய்க் கையிலிருக்கிற சக்கிரத்தை வீரபத்திரர்மேல் பிரயோகஞ் செய்தார்; அஃதோடிவந்து சுவாமி காலில்விழுந்து பணிந்தது. எ-று. (௩௧)

எந்தைமுன் னளித்தவாழி யெந்தைதாளில் வீழவே
யந்தமெய் யொழிந்துபன்றி யரியின்வேட மாகிய
வந்துவந்து போர்தொடங்கி வாளின்வேலின் வவ்வினா
னுந்திவேறொர் சேலதாகி வாரிமீ தொளித்தனன்.

(இ-ள்.) முற்காலத்தில், விட்டுணு ஆயிரம் தாமரை மலரைக்கொண்டு பரமசிவனைப் பூசித்து வருகிறபோது, இவர் பத்தியைப் பரிசோதிக்கவேண்டி ஆயிரம் பூவிலே ஒரு பூவை சுவாமி மறைத்துவைத்தார் விட்டுணு பூசைசெய்து அருச்சனை பண்ணிக்கொண்டு வரும்போது, ஒருபுட்பங்குறைய அதற்குப்பதிலாகத் தன்னுடைய தாமரைப்பூவொத்த கண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச்சுவாமிக்குமனத்தில் சந்தோஷம் வந்து சக்கிராயுதம் கொடுத்தார்; அந்தச் சக்கிரத்தைத்தானே சுவாமிமேல்விட, அதுபயந்து காலில் விழவே, இனிமேல் இந்த ரூபத்தோடே நின்றால் பிழைக்கமாட்டோமென்று அந்த உருவத்தை யொழித்துப்பன்றியாகவும், சிங்கமாகவும்,ரூபமெடுத்து வந்து யுத்தஞ்செய்ய அந்தந்த உருவங்களை வாளாயுதத்தாலும்,

வேலாயுதத்தாலும், வீரபத்திரர்கொன்றார்; அதன்பின்புமிகவும்பய ந்து மீனுருவ மெடுத்துச் சமுத்திரத்தில் விழுந்து ஒளித்தார். எ-று.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

புவியுண்ட நெடுமாலும் பழையபடி
புவியுண்டு போனான் வேதா
தவியுண்டு தலைநாலுந் தடியுண்டா
ரிமையவர்தந் தடியூ னுண்டார்
கவியுண்ட கனற்குண்டம் பேயிறைச்சி
யருந்துகண கலமே யான
தவியுண்டு மனமகிழ்தற் கெய்துமுனி
வரரெல்லா மவியுண் டாரே.

(இ-ள்.) மண்ணையுண்ட மகாவிஷ்ணுவுந்தோற்று மண்ணைவா யிற்போட்டுக் கொண்டு (அலைகடலில்) ஒளித்துக் கொண்டார்; பிர மன் தவிர்த்து நான்குதலையும் அறுப்பட்டிறந்தார்; தேவர்களுந் தண்டத்தாலடியுண்டு இறந்தார்கள்; பூதகணங்கள், இறைச்சிசாப் பிடுகிறதற்கு ஓமகுண்டம்பாத்திரமானது அவிர்ப்பாகஞ் சாப்பிட்டு மனமகிழ வந்த முனிசிரேஷ்டர்கள் எல்லாரும் வீரபத்திர சுவாமி யின் விறந்தார்கள். எ-று. (௧௮)

இங்கிதுவாய் முடிந்ததற்பின் வீரனிறை
பதம்பரவி யிசைத்தா னெல்லா
மங்கனைனு முனிவாறி யருள்சுரந்து
மகத்திறந்தார்க் காவி யீந்து
மங்கரிய பதங்களெலாம் பழையபடி
யுதவுதலும் வணங்கிப் போனார்
சங்கரியை முன்பெற்றா னென்பெற்றான்
றனக்காட்டுத் தலை பெற்றானே.



(இ-ள்.) இவ்விடத்தில் இவ்வாறாக யாகசாலையோடு யாவரும் நாசமடைந்த பிற்பாடு, வீரபத்திரர் கைலாயத்திற்குப்போய்ச் சுவா மியினுடைய பாதத்தில்வணங்கி அங்குநடந்த சமாச்சாரமெல்லாஞ் சொன்னார்; அதுகேட்டருளிப் பரமசிவனுங் கோபமாறி கிருபை பிறந்து யாகத்திலிறந்தவர்கள் அனைவரையும் பிழைப்பித்துக் கேடி ல்லாத அவரவரிடங்களை யவரவர்க்குப் பழையபடியே அருளிச்செய் ததும்; அவர்கள் சுவாமி! நாங்கள் விவேகமில்லாமையினால் செய்த குற்றத்தைப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்கரித்து விடைபெற் றுக் கொண்டார்கள்; பார்வதியைப்பெற்ற தக்கனுக்குமாத்திரம் நிந் தைசெய்ததற்கு அபராத அடையாளமாக ஆட்டுத்தலையை அவனு டலில்வைத்துப் பொருத்தி எழுந்திருக்கும்படி செய்தார். எ-று. ()

எந்நாதன் றனையிகழ்ந்தோன் புதல்வியென
வுலகுரைக்கு மிடுக்கண் டீரத்
தன்னாகந் தன்யோக சாதனத்தால்
விடுத்திமவான் றவத்தி னாலு
முன்னாக மைந்நாகன் றனைப்பயந்த
மேனையது முயற்சி யாலு
மின்னாக வவதரித்தா ளமரரெலாங்
கற்பகப்பூ விசி னாரே.

(இ-ள்.) எமக்குநாதராக இருக்கின்ற பரமசிவனை நிந்தித்த தக் கனுடைய குமாரியென்று பழிப்பாக உலகம் சொல்லுமே நம்மை யென்று பார்வதி அந்தத் துக்கந்தீரத் தன்னுடைய தேகத்தை யோ காக்கினியினாலே நிவர்த்திசெய்து, மலையரசன் தபோமகிமையினு லும் முன்னே மைநாகனென்கிற பிள்ளையைப்பெற்ற மேனாதேவியி னது தவமுயற்சியினாலும், அவர்களுக்குக் குமாரியாக அவதாரஞ் செய்தாள்; தேவர்கள் கற்பகப்புட்பங்களை வருஷமாகப் பொழிந் தார்கள். எ-று. (௧௯)

சித்தாந்தத் தொன்றுசத்தி சிவத்திரண்டாய்
ஞானமிச்சை செயலின் மூன்று
கொத்தாகிக் குடிலைதரு நாதவிந்து
விரண்டினுக்குங் கொழு கொம்பாகி
முத்தாகிச் சிவனிடத்தே யுருத்திரன்மா
லயன்முதலே முளைத்த மூல
வித்தாகி நிறைவனைப் பயந்தவர்க்கு
முடிந்த தவம் விளம்பலாமோ.

(இ-ள்.) சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்தில் ஒன்றுபட்ட அபின்னசத்தியாய்ப் பின்பு அச்சிவத்தினின்றும் பின்னசத்தியென்று வேறுபட்டுப் பின்பு ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தியென மூன்றுவகையாகிக் குடிலையினுலுண்டாகிய நாதவிந்துகளுக்குக் கொழுகொம்பாகியும், சுவாமிக்கு முத்தாகியும், பரமசிவனிடத்தில் உருத்திரன், விட்டுணு, பிரமன் முதலானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகிய வித்தாகியும், எங்குநிறைந்த பார்வதியைப்பெற்றவர்க்கு முடிந்த தப்பெருமையைச் சொல்லக்கூடுமோ. எ-று. ()

கலைவளரு மதிபோன்று சிவனைவெல்ல
மதன்வளர்க்குங் கரும்பு போன்றும்
புலகலையுந் தெளிந்து பந்துகழங்
கூசலியற்றியுமை பயிலு நாளில்
மலையரச னிடத்தின்மறை நாரதனு
மொருநாளின் மகிழ்வா யெய்தி
யுலகமெலாங் குடியிருக்குந் திருவயிற்று
ளிலக்கணம் பார்த்துரைக்க லுற்றார்.

(இ-ள்.) பார்வதி, இமாசலராஜனுக்கும் மேனாதேவிக்கும் குழந்தையாகி வளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்ந்து மன்மதன் சிவனை



வெல்ல வில்வேண்டி அதற்கு வளர்த்த கரும்பையொத்துப் பலபல சாஸ்திரங்களையுங் கற்றுப் பந்து, கழங்கு, ஊசல், விளையாட்டு முதலானவை பார்வதி செய்துகொண்டு வருகிற காலத்தில், மலையரசனிடத்தில் வேதமுணர்ந்த நாரதர் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம் வயிற்றில் வைத்திருந்த அம்மையுடைய இலக்ஷணம்பார்த்துச் சொல்லுவார். எ-று. (௬௭)

நெற்றியிலோர் புறத்திலரை நேத்திரமுண்
டாமொருகை நெடிய சூலம்
பற்றுமொரு தனமறையு மொருபாக
மரகதம்போய்ப் பவள மாகும்
கற்றைநறுங் குழல்பாதி சடையாகு
மொருகைவளை கழன்று போகு
முற்றுவர விவைகளென மலையரசன்
மனமுருகி யுவகை யானான்.

(இ-ள்.) பருவதராஜனே! உம்முடைய குமாரத்திக்குச் சிலபொழுதில் நெற்றியில் ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும்; ஒருகையில் சூலமுண்டாகும்; ஒருபக்கத்துத்தனம் மறைந்துபோகும்; பாதிசரீரம் பச்சைநிறம்போய்ப் பவளமாகும்; கூந்தலிற்பாதி சடையாகும்; ஒருகையில் வளைகளில்லாமற்போகும்; இவைகள் சம்பவிக்குமென்று நாரதர்சொல்லப் பருவதராஜன் உள்ளமுருகிச் சந்தோஷத்தை யடைந்தான். எ-று. (௬௮)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வேறு.

வையநீர்க் கங்கை பாயும்
பனிவரை மருங்கி னந்நாள்
துய்யநீர்ச் சடையான் வந்தங்
கோர்தவந் தொடங்கக் கேட்டு

வையக மளித்தா டாதை
வள்ளலைப் பணிந்து மானை
யையநின் றவத்துக் கேவல்
கோடியென் றளித்துப் போனான்.

(இ-ள்.) இப்படி நாரதர் சொன்னதைக்கேட்டுப் பார்வதியே நமக்குப் பெண்ணாக வந்தபடியினால், பரமசிவன் மருமகனாகி வர வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிற நாளையில், பூமியில் கங்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிற அந்த இமயபர்வதத்தி லொருபக்கத்தில் பரமசிவன் யாதோவொரு நினைவினால் யோகத்தி லிருக்கிறாரென்கிற வார்த்தை கேள்வியாகித் தன்மகளாகிய பார்வதி யையும், சிலதோழிப்பெண்களையும், அழைத்துக்கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து என்னுடைய பெண்ணை உம்முடைய தவத்துக்காக ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மையை விட்டுப்போனான் பருவதராஜன் என்று. (௩௯)

ஓங்குமா லயன்மற் றுள்ளோ
ரொழிவிலாத் தவம் புரிந்தால்
தாங்குபே றளிப்பான் றானோர்
கருத்தினாற் றவஞ்செய் போதிற்
பூங்குழல் கனியும் போது
முஞ்சியும் புனலுங் கொண்டு
பாங்கியர் பலருஞ் சூழப்
பணிவிடை பலவுஞ் செய்தாள்.

(இ-ள்.) எல்லாத்தேவரினு முயர்ந்த விட்டுணு, பிரமா மற்றவர்கள் பெருமையா யொழிவில்லாத தவஞ்செய்தால் அவர்களுக்கு வேண்டியவரத்தைக் கொடுக்கிற சுவாமியானவர் யாதோ ஒருகருத்தி



னாற் றவஞ்செய்கிறபோது பார்வதி, பழம், புஷ்பம், தருப்பை, திருமஞ்சன முதலானவைகளைக் கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களுடனே பல பணிவிடையுஞ் செய்துகொண் டிருந்தாள். எ-று. ()

இங்கிவை யிருக்கத் தேவ
ரியாவரு மிமையோர் கோவும்
பங்கயத் தவனை யெய்திப்
பணிந்தனர் பதுமத் தோனு
மங்கவர்க் கிருக்கை யீந்தா
னவரவர் முகத்திற் சோர்வுங்
குங்குமக் குழம்பு நீத்த
புயங்களிற் குழைவுங் கண்டான்.

(இ-ள்.) இவ்விடத்தில் இப்படியிருக்க, எல்லாத்தேவர்களும் தேவேந்திரனும் கூடிப் பிரமனைச்சேர்ந்து தொழுதார்கள்; அந்தப் பிரமனும் அவர்களுக்கு இருக்க ஆசனங்கொடுத்தப்பிற்பாடு, அவர்களுடையமுகஞ் சோர்ந்து இருப்பதையும் குங்குமம் பூசியிருந்த தோள்கள் இளைத்திருப்பதையும் பார்த்தார். எ-று. (௪௧)

வச்சிர மொடிந்தீ சானன்
கணிச்சிவாய் மடிந்துங் காலன்
முச்சிரம் வளைந்து மற்றோர்
படையெலா முறிந்துந் தேவர்
மெய்ச்சிர மகுட நீத்து
மெலிந்தமை விளம்பு மென்று
னச்சுரர் தமக்குக் கோமான்
றாரக னழித்தா னென்றான்.

(இ-ள்.) வச்சிராயுதம் ஒடிந்துபோயும், ஈசானன் மழுவாயுதத்தின் வாய்மழுங்கியும், எமனுடைய சூலாயுதம் வளைந்தும், மற்றவர்கள் ஆயுதமுறிந்தும், தேவர்கள் சிரத்தில் இருக்கிற மகுடம் பிடுங்கப்பட்டும், வருத்தத்தை யடைந்தீர்கள்; அவ்வருத்தத்தைச் சொல்லுங்களென்று கேட்கத் தேவேந்திரன் தாருகாசுரன் இப்படி அவமானஞ்செய்தானென்று சொன்னான். எ-று. (சஉ)

காலையம் புயத்தோன் சொல்வான்
காலனாற் கனலாற் காற்றான்
மாலினா லென்னா லுன்னா
லவன்வலி தொலைக்க லாமோ
வாலமா மிடற்றான் பேறு
யசலமா திடத்தே தோன்றும்
வேலனார் வெல்வா ருங்கள்
சிறையெல்லாம் விடுப்பா ரென்றான்.

(இ-ள்.) அப்படி தேவேந்திரன் சொல்லக்கேட்ட பிரமன் சொல்வான்; இயமன், அக்கினி, வாயு, விட்டுணு இவர்களாலும், என்னாலும், உன்னாலும் அந்தத் தாருகாசுரனைக் கொல்லக்கூடுமோ! சிவனுடைய பிள்ளையாய், இமாசலபுத்திரியான பார்வதியினிடமாக சிவசுப்பிரமணியர் அவதரித்து அவனைக்கொன்று உங்கள் சிறையை மீட்பாரென்று சொன்னான். எ-று. (சங)

யோகத்தி லிருக்கு மீச
னுமைக்கு நாண்டரிக்கு மாறு
வேகத்தி லியற்று மென்றே
யயன்விடை கொடுத்தான் மீண்டு



மாகத்தி லனுகித் தேவர்
மதனனை நினைத்தார் மாரன்
சோகத்தை யொழிக்குந் தென்றற்
றேருடன் றோன்றிச் சொல்வான்.

(இ-ள்.) யோகத்திலிருக்குஞ் சிவபிரான் பார்வதிக்கு மங்கிலிய தாரணஞ்செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிரமன் சகலருக்கும் உத்தரவுகொடுக்கத் தேவர்களெல்லாம் அமராபதிக்குவந்து மன்மதனை நினைத்தார்கள்; அவன் விடாய் தீர்க்கத்தகுந்த தென்றலாகிய தேரிலேறிவந்து சொல்லுவான். எ-று. (சச)

எவன்றவ மழிக்க மாத
ரெவர்களை மயக்க நீவிர்
கவன்றதெத் துயரா லெம்மை
யழைத்ததென் கரும மென்று
னவன்றனை யிறுகப் புல்லி
யமரர்கோ னருளி னோக்கிச்
சிவன்றவ மழிக்க வேண்டி
யழைத்தமை தெரியச் சொன்னான்.

(இ-ள்.) மன்மதன், தேவர்களைப்பார்த்து எவனுடையதவத்தை அழிக்கவேணும்? எந்தப்பெண்களை மயக்கவேணும்? நீங்கள் எந்தத் துக்க நிமித்தமாக என்னை யழைத்தீர்களென்று கேட்கத் தேவேந்திரன் அந்தமன்மதனை இரண்டுகையினாலும் இறுகக்கட்டித் தழுவி உபசாரத்துடனே பார்த்துச் சிவனுடைய தவத்தை யழிக்கும்படி உன்னைவேண்டி யழைத்ததென்று தெரியச்சொன்னான். எ-று. ()

விண்ணிலார் மகவான் சொலில
வெருண்டுவேள் பயந்து கூறும்
பெண்ணலா னலியா னல்லன்
பிறப்பிலா னிறப்பு மில்லான்

கன்னிநா ளிவளை நாலாற்
கருத்தினா லளவா வந்தத்
தண்ணிலா முடியான் செய்யுந்
தவத்தையார் தவிர்க்க வல்லார்.

(இ-ள்.) தேவலோகத்திலிருக்கும் இந்திரன்சொல்லக் கோபித்துச் சுவாமிக்குப் பயப்பட்டுச் சொல்லுவான்; தேவேந்திரனே? சிவன் பெண்ணுமல்லர்; ஆணுமல்லர்; அலியுமல்லர்; பிறப்பும் இறப்புமில்லாதவர்; காட்சிப்பிரமாணத்தினாலும், ஆகமப் பிரமாணத்தினாலும், கருத்தினாலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத்தரிக்கும் முடியையுடைய அந்தச் சுவாமி தவத்தை யழிக்கின்றதற்கு யார்வல்லவர். எ-று. (௬௬)

கன்னிகை கவுரி யீசன்
கதமிலாப் பிரம சாரி
சந்நிதித் தன்மை யாலே
யுயிரெல்லாந் தழையா நிற்கு
முன்னிய வுயிர்கள் போல
வொடுங்கிடு மவன்பாற் செல்லு
மன்னிய பொருளுந் தோன்றி
மனதிலே யொடுங்கு மாபோல்.

(இ-ள்.) அம்மனே! கன்னிகை; சிவனே! குற்றமில்லாத பிரமசாரி; இவர்களிருவருடைய சந்நிதி மகிமையினாலே சகல உயிர்களுமுண்டாகி விருத்தியாகும்; முன் எப்படி சுவாமியிடத்திலிருந்து சீவன்கள் உண்டாயினவோ, அப்படியே அவரிடத்தில் ஒடுங்கும்; மனதிலே தோன்றிய அனேக வஸ்துக்கள், அதிலே ஒடுங்குவது போல். எ-று. (௬௭)



தாமத குணத்த னென்பர் சங்கரித் திடலா லீசன்
சேமமா முயிர்கட் கெல்லா மிளைப்பொழித் தருள்வ தாகும்
மாமல குணமொன் றில்லை வடிவமுங் கனலா மென்கைப்
பூமலர் சொரிந்தக் காலும் புகையெழப் பொரிந்து போமே.

(இ-ள்.) உலகத்தில் சங்காரத்தொழில் செய்வதனால், சிவன் தமோகுணத்தை யுடையவரென்று சொல்வார்கள்; அப்படி அன்று; அஃதுயிர்களுடைய இளைப்பை யொழிப்பதாகும், மற்றத்தேவர்களுக்கு உண்டாயிருக்கின்ற மும்மலசம்மந்தமில்லை; இவருடைய சொரூபமும் நெருப்பாகும்; அவர்மேல் நான் புஷ்பபாணத்தை விட்டால் அவைகள் புகையாய்க் கரிந்துபோகும். எ-று. (௬௮)

உருவெனத் தெரியா தானை யுருவினோ டருவா னானை
யருவெனத் தெரியா தானை யமர் செயி லரிதென் றஞ்சி
வெருவரப் புகுந்தா னந்த வேளையில் வேளை நோக்கித்
தருவனத் திடையில் வாழுஞ் சதமக னுரைப்பா னானன்.

(இ-ள்.) உருவென்று யாவராலும் தெரியக்கூடாதவரை உருவமாகியும், அருவமாகியும், இருக்கின்ற சிவனை அருவமென்றுந் தெரியாதவரை மிகவும் யுத்தஞ்செய்து செயிக்கப்படாதென்று மன்மதன் பயப்பட்டுத் தன்னுடைய தானத்திற்குப்போகப் புறப்பட்டான்; அக்காலத்தில் மன்மதனைப்பார்த்து கற்பகத்தருவி னிழலில் வாசஞ்செய்யாநின்ற தேவேந்திரன் சொல்லத் தொடங்கினான். எ-று. ()

மாயவ னுரைத்தின் மீது மலரவ னுவின் மீது
நாயகன் சிரத்தின் மீதும் பொறுத்ததுன் னலமே யன்றோ
காயுறச் சிறின் மேனி கடைந்தது மெனக்கு மிந்த
வாயிர நயனந் தந்த செயலுமுன் னுண்மை யன்றோ.

(இ-ள்.) விட்டுணு, தம்முடையமார்பினிடம் இலட்சுமியைவைத்துக்கொண்டதும், பிரமன் சரஸ்வதியை நாவில்வைத்துக்கொண்டதும், மகாதேவர் தலையிலே கங்கையென்கின்ற பெண்ணை வைத்துக்கொண்டதும், உன்னுடைய சாமர்த்தியமல்லவோ! சூரியனைச் சாலையில் கடையச்செய்ததும், எனக்கு ஆயிரங்கண்கள் வந்ததும், உன்னுடைய ஆண்மையல்லவோ! என்றான் தேவேந்திரன். எ-று. ()

செல்வநின் றெமக்கா யிங்கே
தருவது தேவர்க் காவி
வெல்வது சிவனை வென்று
கொடுப்பது காம வேட்கை
சொல்வது மறுக்க வேண்டா
மெனச்சொலிக் கரத்தைப் பற்றி
நல்வர மிதுதா வென்ன
மதனவே ணயர்ந்து கூறும்.

(இ-ள்.) பின்னுந் தேவேந்திரன் சொல்வான்; மன்மதனே! எனக்காக அங்கேசென்று சிவனை ஜயித்து அவருக்குக் காமவிச்சியுண்டாகும்படி செய்தால் அவருக்குப் புத்திரனுண்டாகும்; அந்தப் புத்திரன், அசுரர்களைக்கொன்று தேவர்களைப் பிழைக்கும்படி செய்வார்; அதற்கு நீயே காரணமாயிருக்கிறாய்; நான்சொன்ன வார்த்தையை மறுக்க வேண்டாமென்று கையைப் பிடித்துக்கொண்டு எனக்கு இந்த நல்வரத்தைக் கொடுவென்று கேட்க, மன்மதன் சந்தோஷித்துச் சொல்வான். எ-று. (ருக)

அரன்சிலை மலையென் றாலு
மடுக்கணை யரியென் றாலும்
வாம்புற விசைந்த நாணும்
வாசுகி யாவென் றாலுங்



கரும்பெனுஞ் சிலையா லந்து
கணையெனு மலரா னீலச்
சுரும்பெனுங் குணத்தால் வெல்வே
னெனச்சொலித் தொழுது போனான்.

(இ-ள்.) தேவேந்திரனே? சிவனுக்கு வில் மலையாகி யிருந்தாலும், விட்டுணுவே பாணமாகியிருந்தாலும், வாசுகியே நன்றாக ஏற்றுகின்ற நாணியானாலும், என்னுடைய கரும்பாகிய வில்லினாலும் பஞ்சபுட்பங்களாகிய பாணங்களாலும் நீலநிறம்பொருந்திய வண்டென்கிற நாணியினாலும், அந்தச்சிவனை ஜயித்துப்போடுகிறேனென்று வந்தனஞ்செய்து சுவாமியிடத்துக்குப்போனான் மன்மதன். எ-று. (ருஉ)

சந்தன மணமுந் தெய்வத் தமிழ்ப்புது மணமுங் கொண்டு
வந்தது மலயத் தென்றல் வசந்தமந் திரியுஞ் சேர்ந்த
திந்துவு நிலவாம் வெள்ளை வலையினை யெறிந்த தெங்குங்
கொந்தல ரிளமா வெல்லாங் கோகில முழங்கிற் றன்றே.

(இ-ள்.) மன்மதன் சிவனைஜயிக்கும்படி புறப்படும்போது, பொதியமலையிலிருந்து அவ்விடத்தில் தங்கிய சந்தனவாசனையும், திவ்யமான தமிழ்வாசனையுங்கொண்டு தென்றற்காற்று வந்தது; வசந்தனாகிய மந்திரியும்வந்து சேர்ந்தான்; சந்திரனுங் கிரணமாகிய வெள்ளை வலையினை நான்குபக்கமும் வீசினான்; புஷ்பக்கொத்துகளையுடைய இளமையுற்ற மாமரத்திலெல்லாங் குயில் முழங்கியது. எ-று. ()

மல்லிகை முகையாஞ் சங்க
மதுகர முழக்கஞ் செய்ய
முல்லைசண் பகமா சோகு
முளரியே முதலா யுள்ள

வெல்லையில் மலருந் தேனு
மிறைத்தன ரிரும்பைச் செம்பைக்
கல்லினை யுருக்குஞ் சொல்லார்
குறிஞ்சியாழ் கரத்திற் கொண்டார்.

(இ-ள்.) மல்லிகையரும்பே சங்கமாகவும், அவ்வரும்பில் சப்திக்கின்ற வண்டுகள் அச்சங்கத்தை வாயில்வைத்து ஊதுகிற வீரர்களாகவும் விளங்க முல்லை, சண்பகம், அசோகு, தாமரைமுதலாகிய கணக்கில்லாத புஷ்பங்களையும், தேனையும், நான்குபக்கமு மிறைத்துக்கொண்டு கடினமாகிய இரும்பு, செம்பு, கல், இவைகள்கூட உருகும்படி சொல்லுகிற வார்த்தையையுடைய பெண்கள் குறிஞ்சியாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள். எ-று. (௬௪)

பொங்கிய வுடுக்க ளான
புகாணி முகத்துச் செக்கர்
நக்குசிந் தூர மாகுந்
தனியிருட் கரியுங் கிள்ளைப்
பைங்குர கதமுஞ் செல்லப்
பனைமுலைப் பவளச் செவ்வாய்
மங்கைய ரெனும்போர் வீரர்
வடிக்கண்வாள் விதிர்த்துச் சென்றார்.

(இ-ள்.) மிகுந்த நட்சத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாகவும், செவ்வானம் ஒரு திலகப்பொட்டாகவும், விளங்குகின்ற ஒப்பற்ற இருட்டாகிய யானையும், பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும், நடக்கப் பருத்தமுலையையும் பவளம்போன்ற வாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். எ-று. (௬௫)



கோணிய கரும்பு மைந்து குலமலர்க் கணையுங் கொண்டு
வாணுத லிரதி செல்ல மகரகே தனத்தினோடு [டஞ்சி
தாணுமா வனத்தைச் சேர்ந்தான் றவஞ்செய்வான் றனைக்கண்
நாணினா னறுகால் வண்டு நாணினா னடுங்கி னானே.

(இ-ள்.) வளைவாகிய கரும்புவில்லையும், புட்பங்களாகிய ஐந்து பாணங்களையும் எடுத்துக்கொண்டு ஒளிபொருந்திய நெற்றியையுடைய இரதிதேவி கூடவர மீனக்கொடியுடனே பரமசிவன் யோகத்திலிருக்கிற வனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்கிற அந்தச் சுவாமியைப்பார்த்து இவரை எவ்வாறு செயிப்போமென்று பயந்து வெட்கத்தையடைந்து நடுங்கினான். வண்டை நாணாகவுடைய மன்மதன். எ-று. (௬௬)

வெளித்தலத் தெதிர்த்தா லென்ன
விளையுமோ தனக்கென் றெண்ணி
யொளித்தனன் முன்னேபின்னே
யுமையவள் வரவு கண்டு
களித்தனன் மயக்க மாமோ
கனத்துக ளிறைத்து வில்லை
வளைத்தன னளிநாண் பூட்டி
வடிக்கணை தொடுத்தான் மாரன்.

(இ-ள்.) நேரே வெளியாகவந்து யுத்தஞ்செய்தால் என்னகேடு நமக்குண்டாகுமோ! என்று நினைத்து சுவாமியின்பின் தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக்கொண்டிருந்தபோது, பார்வதி அக்கடவுள்முன்னே பணிவிடைசெய்ய வருதலைக்கண்டு, பெண்துணை நமக்கிருக்கிறபடியினால் வெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகத்தை உண்டாக்கும் புஷ்பபாணத்தை இறைத்து வில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைத் தொடுத்தான் மன்மதன். எ-று. (௬௭)

ஒருகரும் புருவச் சாப
மொடியினு முலகை யீன்ற
விருகரும் புருவச் சாப
முளவென வெழுச்சி யாலே
பொருகணை தொடுத்தான் சென்று
புரஞ்சுடு கணையி னானு
மொருகணை விடுத்தான் மார
னுடலெல்லாங் கொளுத்திற் றன்றே.

(இ-ள்.) மன்மதன் தானிக சண்டை செய்தால் ஒரு கரும்புருவமாகிய வில்லானது ஒடிந்தாலும், உலகத்தைப்பெற்ற பார்வதியின் இரண்டு கரும்புருவமாகியவில் உண்டாயிருக்கின்றன நமக்கு யாதொரு குறைவுமில்லை யென்கிற செருக்கினாற்போய் அனேக பாணங்களை விட்டபோது, மூன்றுபுரத்தையும் எரித்த கணையாகிய அம்பையுடைய சிவன் அந்த மன்மதன்மேல் தன்நெற்றிக்கண்ணாகிய ஒருகணையைச்செலுத்தினார், அக்கணை மன்மதனுடைய உடம்பையெல்லாங் கொளுத்திவிட்டது. எ-று. (௬௮)

அருக்கவெண் பஞ்சு போல
வழற்கணின் றனங்க னானா
னிருக்குளங் கனலக் கண்டு
தேவருந் திசையி னோரும்
வெருக்கொள வொளித்தார் பூத
கணத்துடன் விடையி னானும்
பொருக்கென மறைந்து வெள்ளிப்
பொருப்பிடைப் புகுந்தா னன்றே.



(இ-ள்.) நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனாகிய மாறுபாடு பொருந்திய மனத்தை யுடையவன் எரிந்துபோகக்கண்டு தேவர்களும், அஷ்டதிக்குப்பாலகரும், பயப்பட்டு ஒளித்துக்கொண்டார்கள்; அதன்பின் சுவாமி பூதகணங்களுடன், சீக்கிரமாக அந்த விடம்விட்டுக் கைலாயத்துக்கு எழுந்தருளினார். எ-று. (௬௯)

சங்கரன் மணத்தை வேண்டி
யுமையுகற் றவமே செய்தா
ளங்கது புனரு மாறேழ்
முனிவருக் கமலன் சொன்னான்
மங்கல முரைக்க வேழு
முனிவரு மகிழ்வா யெய்தித்
துங்கவெற் பிறையார்க் கிந்தச்
சோபனஞ் சொல்லி னார்கள்.

(இ-ள்.) பரமசிவன் தன்னைக்கலியாணஞ் செய்துகொள்ளப் பார்வதி தவஞ்செய்கிறாள்; அவன் வந்து சேர் சப்தரிஷிகளை யழைத்துப் பருவதராஜனிடத்திற்போய்ச் சுவாமிக்கு உன்பெண்ணைக் கலியாணஞ்செய்து கொடுவென்று கேளுங்களென்று அனுப்பினார்; அந்தப்படியே அந்த ஏழுபேரும் பருவதராஜனிடத்திற்குப் போய் இந்தச் சோபனசங்கதி சொன்னார்கள். எ-று. (௭0)

மலையிறை மகிழ்ந்தா னந்த மலையிறை புதல்வன் வள்ளல்
குலமெது பயந்தோர் நாமங் குடிப்பெய ரேது வாழுந்
தலமெது புகலுமென்றான் றவத்தவர் நகைத்துச் சொல்வா
ரலகிலான் பிறப்பு நல்ல விலையென வறிவித் தார்கள்.

(இ-ள்.) இருடிகள்போய்ச் சொன்னவுடனே, பருவதராஜன் சந்தோஷித்தான்; அவன் பிள்ளையாகிய மைநாகன் ரிஷிகளைப்பார்

த்து சிவன் என்னசாதி? அவருக்குத் தாய்தகப்பன் பெயரென்ன குடிப்பெயரென்ன? அவரிருக்கும் ஊரெது? சொல்லுங்களென், கேட்டான்; அதை முனிவர்கேட்டு நகைத்துச் சிவனே அளவிட கூடாதவர், அவர் பிறந்தவிடம் மூங்கில், அவர் நல்லசாதியென்று தெரிவித்தார்கள். எ-று. (கக

பெருத்ததோ ருவகை யாகிப்
பிறைமுடி யன்பேர் நாளிற்
பொருத்தமு நாளுந் தேர்ந்து
முனிவரைப் புகழ்ந்து போற்றி
விருத்தியார் வரவு நாளுங்
குறித்திறை விடுத்தா னன்னோர்
பரித்தகங் கையிறுற் றிந்தப்
படியெலாம் பணிந்து சொன்னார்.

(இ-ள்.) அப்படி சப்தரிஷிகள் சொன்னபிறகு பருவதராஜன் முதலானவர்களெல்லாம் மகா சந்தோஷத்தையடைந்து சந்திரனைத் தரித்த முடியையுடைய சிவன்பிறந்த நட்சத்திரத்திற்கும், அம்மை பிறந்த நட்சத்திரத்திற்குத் தகுந்த பொருத்தமுங் கலியாணஞ்செய்கிற காலமுமறிந்து நிச்சயஞ்செய்து ரிஷிகளினுடைய பாதத்தைப் புகழ்ந்து வணங்கி விருத்திபொருந்திய திருக்கலியாணமுகூர்த்த ஓலையும் எழுதிக்கொடுத்தனுப்புவித்தான்; அந்த ஏழுரிஷிகளும் கங்கையைத்தரித்த சுவாமிக்கு நடந்தசங்கதிகளெல்லாம் வணங்கிச் சொன்னார்கள். எ-று. (கஉ)

இமையவெற் பிறைவ னோலை
முகத்திலேழ் கிரிக்கு மேருச்
சிமையமால் வரைக்குஞ் செம்பொற்
றிகிரிமால் வரைக்கு மேழு



தமரவான் கடற்குஞ் சித்த
சாரணர் முனிவோ ருக்கும்
அமரரா னவர்க்கும் வஞ்சி
மணத்தினை யறிவித் தார்கள்.

(இ-ள்.) இமயபருவதராஜன் பார்வதியம்மையின் திருக்கலியாண முகூர்த்த ஓலையை அநேகதூதர்கள் கையிற் கொடுத்தனுப்புவிக்க, அவர்கள்சத்தகுல பருவதங்களுக்கும், கொடுமுடிபொருந்திய மேருவுக்கும், சக்கிரவாளகிரிக்கும், ஒலியையுடைய சத்தசமுத்திரத்திற்கும், சித்தர், சாரணர், முனிவர் தேவர் முதலானவர்களுக்கும், அம்மைத் திருக்கலியாணத்தைத் தெரிவித்தார்கள். எ-று. (கங)

ஓலைகண் டளவே சேர்ந்த வுததிகளேழும் பூமி
மாலையாய்ச் செல்லுகின்ற மகிமைசேர் நதிகளேழும்
நிலமே முதலாயுள்ள கிரியெலா நெருங்கிச் சென்ற
கோலமா முனிவோர் சித்தரிமையவர் குழாங்கொண்டார்கள்.

(இ-ள்.) ஓலையைக் கண்டவுடனே ஏழுசமுத்திரத்திற்கும் பூமிதேவிக்கும்மாலைபோலப் பிரகாசிக்கின்ற மகிமைபொருந்திய ஏழு நதிகளுக்கும், நீலகிரிமுதலாகிய சப்தகுல பருவதங்களுக்கும், அதிஷ்டானமாகிய தேவதைகள் நெருங்கிச்சேர்ந்தார்கள்; முனிவர்களும், சித்தர்களுந் தேவர்களுங் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து வந்தார்கள். எ-று. (கச)

அட்டதிக் கினைத்துந் தோரற்
கொடிகளா லடைத்தார் விண்ணோ
மிட்டறு விமானந் தன்னான்
மாலையான் மறைத்தார் வீதி

கொட்டிலை யரம்பை பூக
நிரைகளால் நிறைந்தார் வெற்பிற்
றட்டிய புழுதி னாலே
மெழுகினார் தரைக ளெல்லாம்.

(இ-ள்.) எட்டுத்திக்கையுந் தேரினாலும் கொடிகளாலும் இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள்; ஆகாயத்தை இடமில்லாமல் விமானத்தினாலும், மாலைகளினாலும் மறைத்துவிட்டார்கள்; வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைகளையும், கமுகுகளையும், நிரைநிரையாகநட்டு அலங்காரஞ் செய்தார்கள்; மலையிலிருக்கிற புழுகைக்கரைத்துத் தரைகளெல்லாம் மெழுகினார்கள். எ-று. (௬௫)

தோரணஞ் சமைத்தார் முத்தின்
றொடையெலாந் தொடுத்தார் விண்ணிற்
பூரண கும்பம் வைத்தார்
புதுமணி விளக்கு மிட்டார்
ஆரண னுலகு மற்றை
யளகையு மமரர் நாடு
நாரண னுலகும் வந்து
காணவே நாணு மாறே.

(இ-ள்.) தோரணங் கட்டினார்கள்; அதில் முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள்; ஆகாயகங்கையைக் கொண்டுவந்து பூரணகும்பம் வைத்தார்கள்; நூதனமாக இரத்தினவிளக்கு ஏற்றினார்கள்; பிரமலோகமும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும், இதைப்பார்த்து நாணும்படிச்சிங்காரித்தார்கள். எ-று. (௬௬)

மணிவிளக் கனைய மின்னை மலையர மகளிர் கூடிக்
கனிமலர்க் கங்கையாட்டிக் கலையினான் மருங்கை வாட்டிப்



பணிமணி யாரம்பூட்டிப் பரிமளத் தாமஞ் சூட்டி
யணிநுதற் றிலகந் திட்டி யருமறைச் சடங்கு செய்தார்.

(இ-ள்.) இரத்தினதீபம்போன்ற பார்வதியை மலையிலிருக்கிற பெண்கள்கூடிக் கற்பகமலர்வாசனை சேர்ந்த கங்காசலத்தினாலஸ்நானஞ் செய்வித்து, இடுப்புத் துவளும்படி சேலைகட்டி, ஆபரணங்களும் முத்துமாலையும்பூட்டிப் பரிமளம் பொருந்திய நறுமலர்மாலை சூட்டி, அழகிய நெற்றியிற்றிலகப்பொட்டு அணிந்து வேதவிதிப்படிச் சடங்குசெய்தார்கள். எ-று. (௬௭)

பூமணக் கோலஞ் செய்த பொடியணி புனிதனைத்
தாமணக் கோலஞ் செய்யச் சதுர்முகன் முதலோ ரீண்டித்
தூமணித் துகில்கள் சாத்திச் சுரதரு மாலைசாத்தி
மாமணிப் பணியை நீக்கி மாமணிப் பணிகள் பூட்டி.

(இ-ள்.) வாசனை பொருந்திய புட்பாபரணங்களை யுடையவரும் நெற்றிக்கண்ணுடையவரும் அந்தப் பஸ்மத்தைப் பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ்செய்யும்படியாகப் பிரமன் முதலானவர்கள்கூடிப் பரிசுத்தமாகிய இரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக் கற்பகப்பூமாலை தரித்து, முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக் கழற்றிப்போட்டு மாணிக்க இரத்தினங்களாலாகிய ஆபரணங்களைத் தரித்தார்கள். எ-று. (௬௮)

சடையிளம் பிறையைத் தங்க
ளிறையெனத் தகைந்து சூழ்ந்த
வுடுக்குல மென்ன முத்தா
லொளிவிடு மகுடஞ் சூட்டி
யுடைவுடன் விழியாந் திங்க
ளாதவர் காதின் மீது
குடியிருந் தனபோற் செய்ய
குண்டல மிரண்டுஞ் சாத்தி.

(இ-ள்.) சுவாமியினது சடையிற்றரித்த பிறையைப்பார்த்துத் தம்முடைய புருஷனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக் கூட்டங்கள்போல, முத்துக்கள் பிரகாசிக்கின்ற கிரீடஞ்சூட்டிப் பொருந்திய கண்களாயிருக்கிற சந்திர சூரியரிருவருங் காதினிடத்திற் குடியிருந்தாற்போல அழகாகிய இரண்டு குண்டலங்களைச் சாத்தினார்கள். எ-று. (கக)

வரம்பெற்ற திருமால் சாத்து
மலர்விழிக் கரிய சோதி
பரம்பிய தனைய நீலப்
பருமணிச் சிலம்பு சாத்தி
விரும்பிய கோலஞ் செய்தா
ரிறையுமால் விடைமேற் கொண்டா
ரரம்பையர் நெருங்கித் தெண்ணீ
ராஞ்சனங் காட்டி னார்கள்.

(இ-ள்.) விட்டுணுவரம் பெற்றுக்கொள்வதற்காகத் தம்முடைய கண்களி லொன்றைப் பாதத்திற் சாத்தினாரே, அந்தக் கண்ணினது கறுப்புச்சோதி காலைச்சுற்றிப் பரவினதுபோல நீலமணிகளை யிழைத்தச் சிலம்பைத் தரித்து சகலாலும் விரும்பத்தகுந்த அலங்காரஞ்செய்தார்கள்; பரமசிவன் விட்டுணுவே யுருவமாகிய ரிஷபத்திலேறினார்; அப்பொழுது, அரம்பா ஸ்திரீகள் மஞ்சளாலத்தி யெடுத்தார்கள். எ-று. (எ0)

குலவுமா லனுகிப் போற்றக்
குமுதவாய் மலர்ந்தான் கஞ்ச
மலரினன் வணங்கச் சற்றே
மணிமுடி யசைத்தான் விண்ணோர்



தலைவனு ரெதிர்கின் றேத்தத்
தனிநகை புரிந்தான் றேவர்
பலரும்வந் திறைஞ்சி யேத்த
வவர்க்கெலாம் பார்வை யீந்தான்.

(இ-ள்.) விட்டுணு சுவாமியின்முன்னே வந்து வணங்கச் செவ்வாம்பற்பூப்போலுந் திருவாய்மலர்ந்து வாருமென்றார்; தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமன் வந்து நமஸ்கரிக்கச் சற்றே இரத்தினகிரீடமிழைத்த திருமுடியை யசைத்தார்; தேவேந்திரன் வந்தனஞ்செய்யப் புன்சிரிப்பு கொண்டார்; மற்றதேவர்களெல்லாரும்வந்து வணங்கக்கிருபைக் கண்ணினாலே பார்த்தருளினார், எ-று. (எக)

கலி விருத்தம்.

முடித்த கங்கையாற் பிறைக்கொழுந்
தெழுந்துமேன் முகைத்து
வெடித்த தாமெனத் தவளவான்
கவிகைமேல் விளங்க
வடித்த கங்கையி னருவியு
மம்புலிக் கொழுந்துந்
தொடுத்து வீழுமா றெனவிரு
கவரிக ளிளங்க.

(இ-ள்.) சடையில் வைத்த கங்காசலத்தினால் பிறையானது கொழுந்துவிட்டு அரும்பாகிப் புட்பித்ததென்று சொல்லும்படியாக வெள்ளை வட்டக்குடை பிடிக்கவும், அலையடிக்கிற கங்கையினருவியும் சந்திரனும்சேர்ந்து விழுந்தனபோலும் இரண்டு சாமரம் வீசவும், எ-று. (எஉ)

திருவி ளையக ளடைப்பைகொண் டொருபுறஞ் சேரத்
தருவி னையகன் களாஞ்சிகொண் டொருபுறஞ் சார
விரவி நான்முக னாலவட்டங் கொடு வீசப்
பரவி நாரதர் தும்புரு விருபுறம் பாட.

(இ-ள்.) இலக்குமி காந்தாரஞ் சிட்டுறை யாஞ்சு வெற்றிலை முதலானவை வைத்திருக்கிற அடைப்பையெடுத்துக்கொண்டு ஒருபக்கம்வரவும், கற்பகத்தருவிற்குநாதனாகிய தேவேந்திரன் படிக்கம் எடுத்துக்கொண்டு வரவும், பிரமன் சமீபத்திலிருந்து ஆலவட்டம் வீசவும் அம்புருநாரத ரிருவரும் வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம் பாடவும், எ-று. (௭௩)

கூற்ற னானவன் கனகபா தாகைகொடு குறுகக்
காற்று வேந்தனுந் திசையெலா நறும்புகை காட்ட
வேற்று வாகனக் கடவுளுந் துறியவா ளெடுப்பத்
தோற்று மாதவர் கலைமதி விளக்கொடு குழ.

(இ-ள்.) இயமன் தங்கத்தினாற் செய்திருக்கிறபதாகைகளைக் கையாலெடுத்துக்கொண்டு வரவும் வாயுபகவான் திக்குகளெட்டிலும் அகிற்புகை சாம்பிராணிப்புகை காண்பிக்கவும், ரிஷபத்திலேறுகின்ற ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், சூரியர்களனேகரும் சந்திரசேகரும் விளக்கெடுத்துக்கொண்டுவரவும், எ-று.

சுர மடந்தையர் துகிலின்மஞ் சிகைபல சுமப்ப
வரவ மங்கையர் நவமணிப் பணிசுமந் தணுகப்
பரவு கின்னரர் முதலியோர் வீணையாழ்ப் பரிக்கப்
பொருவி லுன்மறை நடாத்திரை தலைமையைப் புகழ.

(இ-ள்.) தேவகன்னியர் அனேகர் வஸ்திரம்வைத்திருக்கிறபெட்டிகளைத் தாக்கிக்கொண்டு வரவும், நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச் சுமந்துகொண்டு வரவும், கின்னரர் கிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும்; நான்கு வேதங்களுஞ் சமீபித்துச் சுவாமியெல்லாருக்கும் பெரியவரென்று புகழ்ந்துமுறையிடவும், எ-று. (௭௪)



கிரக மேழுமெண் வசுக்களு முனிவருங் கிளா
வுரகர் விஞ்சைய ரிமையவர் மகிழ்ந்துகண் டுருக
விருத ரங்களா லுருத்திரர் மலர்மழை யிறைப்பத்
திருவும் வெண்கலை மடந்தையு மிமசலந் தெளிப்ப.

(இ-ள்.) சந்திரசூரியர் இருவருந்தவிர, மற்றை யேழுகிரகங்களும், அஷ்டவசுக்களும், முனிவர்களுங் களிகூர்ந்துவர; நாகலோகத்தார், வித்தியாதரர்கள், தேவர்கள், பார்த்துச் சந்தோஷத்தையடைந்து உருக; ஏகாதச ருத்திரர்களும் இரண்டு கைகளாலும் புட்பங்களை வருடமாக இறைப்ப, இலக்குமியும் சரஸ்வதியும் பனிநீர் தெளிக்கவும், எ-று. (௭௫)

திக்குப் பாலகர் தெரிவையர் திசைதொறுந் திகழ
மிக்க மாதர்க ளெழுவருஞ் சோபனம் விளம்ப
விக்குவேர் மொழி நீரர மகளிர் வாழ்த் தெடுப்பத்
தக்க விஞ்சையர் மகளிர்பல் லாண்டுரை தழங்க.

(இ-ள்.) திக்குப்பாலகருடைய தேவிகள் அவரவர் திசைகளினின்று சேவிக்கவும், சப்தமாதர்கள் சோபனம்பாடவும், கரும்பஞ்சாறுபோல் மாதுரியம் பொருந்திய வார்த்தைகளுடைய நீரரமகளிர் வாழ்த்துச் சொல்லவும், தகுந்த வித்தியாதர மாதர்கள் பல்லாண்டு கூறவும், எ-று. (௭௬)

கண்டை பேரிகை குடமுழா முழவு காகளந்
தண்டை மல்லரி சல்லரி வலம்புரி யொலிப்ப
வண்ட கோளகை மடந்தையர் சிலம்பொலி யதிர்ப்ப
வெண்டிசா முகந் தனிலுமெண் பிரம்பொலி யிசைப்ப.

(இ-ள்.) பெரிய மணியோசையும், பேரிகை, குடவாத்தியம், மத்தளவாத்தியம், காகளம் தண்டை மல்லரி சல்லரி சங்கங்கள் கோஷிக்கவும், தேவப்பெண்கள் காலின்சிலம்பு சலிரென்று சப்

திக்கவும் எட்டுத்திக்கிலும் கத்திதேவர்வருகிற கூட்டங்களை விலக்க அடிக்கிற பிரம்பினது சப்தம் பிரகாசிக்கவும். எ-று. (எஅ)

எண்ணும் வெள்ளிமால் வரையடி யிறங்கிய திடப
மண்ணல் சேனையின் கொழுந்திம கிரித்தல மடைந்த
விண்ணு மண்ணு மெள்ளிடமற நெருங்கிய விமானம்
மண்ணுமால் விடை நெறிகடந் தடைந்தது பதிமே.

(இ-ள்.) யாவராலுந் தோத்திரஞ் செய்யப்பட்ட கைலாயகிரி யடிவாரத்தில் ரிஷபவாகன மிறங்கியது; சுவாமியினுடைய சேனையின் முன்னணி இமையபர்வதத்தை யடைந்தது; ஆகாயமும் பூமியும் எள்ளிருக்க இடமில்லாமல் விமானங்கள் நெருங்கின; அலங்கரித்திருக்கின்ற விட்டுணுவாகிய ரிஷபம் சுவாமியைத் தூக்கிக்கொண்டு வழி முழுதுங்கடந்து இமயபர்வதராஜன் பட்டணத்தில் வந்துசேர்ந்தது. எ-று. (எக)

இமகிரிப் பதியடைந்தது மிமகிரி மடவார்
நிமலனார் திருவழ கெலாம் விழிகளா னிரைத்தா
ருமை தவத்தினுக் கழிவிலை யெனப்புகழ்ந் துரைத்தா
ரமர்செய் காமனை யழித்தகண் ணெதுவென வறைந்தார்.

(இ-ள்.) அப்படியே சிவன் இமயபருவதத்தில் எழுந்தருளின போது, அந்தமலையிலிருக்கின்றபெண்கள் சுவாமியின் அழகைப்பார்த்துப் பார்வதி செய்த தவத்துக்கு ஒரு குறைவுமில்லாமல் பலன் சித்தியாயிற்று என்றார்கள்; அவர்களில் சிலர் யுத்தத்துக்கு வந்த மன்மதனை எரித்தகண் எதுவோ அந்தக் குரூரமான கண்ணைப் பார்ப்போமென்பார்கள். எ-று. (அ0)

ஆகமா னிங்கிருக்கவு முலகெலா மயர்ந்த
யோகமீ திவரிருக்கை யான்மத னுடலொழித்துப்



போகமீதிவர் விருப்புற வுயிர்க்கலை புணர்ந்த
மோகமாக்கிடு முதலிவ ரெனச்சிலர் மொழிந்தார்.

(இ-ள்.) மன்மதன் தேகத்தையுடையவனா யிருந்தபோதும் இவர் யோகத்திலிருந்ததனால் உலகத்திலுள்ள சனங்களெல்லாம் விகாரமில்லாமல் அசந்துகிடந்தன; மன்மதன்தேகம்போயும், இவர் போகத்தில் விருப்பம் உண்டானபடியினால் சகலருக்கும் போகத்திலாசையுண்டாச்சுது; ஆனபடியினால் மோகத்தை யுண்டாக்குகிறவர் இந்தச் சிவனேயன்றி வேறொருவரு மில்லையென்று ஸ்திரீசனங்கள் சிலர் சொன்னார்கள். எ-று. (அக)

மாயவிற் கைவே ளழகிவ ரெழின்மிகு வடிவி
லாயிரத்தி லொன்றிலையெனத் தனைமதித் தவனைத்
தீயிடத் துடல் கொளுத்திய தவத்தினற் றிறனே
யாயு முத்தம ராழிப்பரோ வெனச்சில ரறைந்தார்.

(இ-ள்.) மாயஞ்செய்கின்ற கருப்புவில்லைக் கையிற்றரித்திருக்கின்ற மன்மதன் அழகு இந்தச்சுவாமியினுடைய வடிவமாகிய அழகில் ஆயிரத்திலொருபங்கு காணாது; அதனாலே அவனை இகழ்ந்து தன்னை மதித்துத் தீயினால் அவனைக்கொளுத்திப்போட்டது; தபோமகிமையினாலேயே ஆராய்ந்தெடுக்கத்தகுந்த உத்தமர்கள் ஆனால் அப்படிச்செய்வார்களோவென்று சிலமாதர்கள் சொன்னார்கள். எ-று.

மாதுலன் பெருங்கிளைஞரு மருகனார் கிளைஞரும்
காதலன்பினு லெதிரெதிர் தழுவினர் கலந்தா
ராதியந்தமு மதனிலை யளவிட லரியோன்
வேதியன்கரம் பிடித்தினி திழிந்தனன் விடைமுன்.

(இ-ள்.) மாமனாகிய மலையாசன் சுற்றத்தார்முதலிய சேனைகளும், மருமகனாகிய பரமசிவத்தினுடையசேனாசமூகமுமிருந்த ஆசையோடுங் கூடினவர்களாய் எதிரெதிராகவந்து ஒருவருக்கொருவர்

கத் தழுவிக்கொண்டார்கள்; முதலுமீறுமில்லாத அளவிடப்படாத சிவபிரான் பிரமன்கையைப் பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்திலின்று இறங்கினார். எ-று. (அ௫)

இலகுமங்கைய ரனேகர்நீ ராஞ்சன மெடுப்ப
வுலகபாலக ரிருமருங் கினுநடந் தொதுங்கத்
திலகமாதவ னிருகைமே லொருகாஞ் சேர்த்திட்
டலகிலாமணி யிழைத்ததோர் மண்டபத் தணைந்தார்.

(இ-ள்.) இப்படி சுவாமி ரிஷபவாகனம்விட்டு இறங்கினவுடனே அழகுள்ள அனேகம்பெண்கள் ஆலாத்தி எடுக்கவும், திக்குப்பாலகரெண்மரும் சுவாமியினிருபுறத்திலும் நடந்தொதுங்கி வரவும், எல்லாருக்குந் திலகமாகிய விட்டுணுவினுடைய இரண்டு கைமேலும் தம்முடைய ஒருகையைச்சேர்த்துக் கணக்கில்லாத ரத்தினங்களால் இழைக்கப்பட்டிருக்கின்ற மண்டபத்தில்வந்து சேர்ந்தார்கள். எ-று. (அ௬)

அரியமண்டபத் தமைந்தபீ டிகையின்மீ தடைந்தார்
வரையிடைப் பிறந்தமை வளர்முலை சொலவருவார்
குருமலர்க் கையிலேந்தி வந்தருள்குடி யிருக்கும்
திருமுகத்தியை யிறையவன் வலப்புறஞ் சேர்த்தார்.

(இ-ள்.) சுவாமி அருமையாகிய அந்த மண்டபத்தில் இட்டிருக்கிற ஆசனத்தி லெழுந்தருளினார்; ஸ்தனங்கள் மலைபோலிருப்பதனால், அந்தத் தனங்களே இவர்கள் மலையிற் பிறந்தார்களென்று காண்பிக்கும்படியாகவருகிற மாதர்கள் தங்களுடைய நிறம்பொருந்திய புட்பம்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையே குடியாகவிருக்கின்ற அழகியமுகத்தையுடைய பார்வதியைச் சிவனுடைய வலப்புறத்தில் உட்காரவைத்தார்கள். எ-று. (அ௭)

முன்னையாரணன் வதுவையின் சடங்கெலா முடித்து
வன்னிமேற்பொரி யிறைத்துநெய் சொரியமந் திரத்தா-



கொடுத்துக் கிருபைசெய்தார் பரமசிவன்; பின்பு யாவரும் விடைபெற்றுக்கொண்டு போனார்கள். எ-று. (அ௮)

அதற்பி னண்ணலுங் கவுரியு முருகி யொன்றாகி
மதத்த வானையைக் குமரனைப் பயந்தனர் மகிழ்வாய்
விதிர்த்த வேலினைக் குமரனுக் களித்திறை விடுத்தான்
கொதித்த தாருக னுயிர்குடித் துவந்தனன் குமரன்.

(இ-ள்.) அப்படியே திருக்கலியாணம் நடந்தபின்பு, சுவாமியும் அம்மையும் மிகுந்த அன்புகொண்டு ஒருருவமாகிச்சேர்ந்து வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுவரரையும், சிவசுப்பிரமணியரையும் பெற்றார்கள்; அதன்பின்பு, சுவாமி சிவசுப்பிரமணியருக்கு அஞ்சத்தக்க வேலாயுதத்தை அருளிச்செய் தனுப்புவிக்க, அவர்போய் அந்தத் தாருகாசுரனை வேலாயுதத்தை விட்டெறிந்து கொன்று சந்தோஷத்தை யடைந்தார் குமாரசுவாமி. எ-று. (அ௯)

மயிலெ னத்திகழ் மலைமகள் பொருகரி வதன
னயிலெ டுத்தசெங் கரனுட னிமையவெற் பகன்று
கயிலை வெற்பில்வந் திமையவர் முனிவர்கண் களிக்க
வெயிலு டைப்புர மெரித்தவ னிருந்தன னப்பால்.

(இ-ள்.) மயில்போல் விளங்குகின்ற பருவதராஜன் மகளாகிய பார்வதி யானைமுகத்தையுடைய பிள்ளையார் வேலாயுதத்தைத் தரித்த சிவசுப்பிரமணியருடன் இமயகிரியைவிட்டு நீங்கித் தேவர்கள் முனிவர்களுடைய கண்களிகூரக் கைலாயத்தில் எழுந்தருளி யிருந்தார் முப்புரத்தை யெரித்தவராகிய பரமசிவன் அதன்பின்பு. எ-று.

மூன்றாவது

திருவவதாரச்சருக்கம்

முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உ௫௬.

லென்னையா ளுடை யிறைவனு மேழுல கீன்ற
கன்னிசெங் கரம்பிடித்து மூவலஞ்செய்தான் கனலை.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாணமண்டபத்தி லெழுந்தருளியிருக்க, அந்தவேளையில் பிரமதேவர் கலியாணச்சடங்கை விதிப்படி முடிக்க, என்னையாட்கொண்ட பரமசிவன் அக்கினியிற் பொரிசொரிந்து செய்யாகுதிசெய்து, முன்னமே ஏழுலகத்தையும்பெற்ற அம்மனை கையைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம் வலமாகச் சுற்றிவந்தார். எ-று. (அ௬)

ஒற்றை வால்வளை யொலித்தது சுருதியு மொலித்த
சுற்றும் வானவ ரிருடியர் மலர்மழை சொரிந்தார்
பற்றி யாசனத் திருந்தன னனைவரும் பணிந்தார் [பை.
பெற்ற தாதையோ டன்னையைப் பணிந்தனள் பெதும்

(இ-ள்.) வெண்மைபொருந்திய ஒப்பற்ற சங்குமுழங்கவும், நான்குவேதங்களும் சப்திக்கவும், நான்குபுறமும் சுற்றிக்கொண்ட தேவர்களும் ரிஷிகளும் புஷ்பமாரியைப் பொழியவும், சுவாமி ஓர் ஆசனத்தில் எழுந்தருளினார்; அப்போது, சர்வத்திரபேரும் வந்தனஞ் செய்தார்கள்; பார்வதியானவள் அவள் தாயையுந் தகப்பனையும் வணங்கினாள். எ-று. (அ௭)

எரித்த காமனைத் தருதிபென் றிமையவ ரயன்மா
லொருத்த ரன்றியே யிறையவன் மகிழ்ச்சிகண் டுரைத்தார்
மரித்த காமனை யழைத்தருள் புரிந்தனன் வள்ளல்
பெருத்த வன்பினு லனைவரும் விடைகொடு பெயர்ந்தார்.

(இ-ள்.) தேவர்களும், பிரமனும், விட்டுணுவும் மற்றயாவரும் சுவாமி எல்லாரிடத்திலும் வைத்த பிரியத்தைப்பார்த்துச் சுவாமி! நீர் முன்னே எரித்த மன்மதனை எழுப்பித் தரல்வேண்டுமென்று கேட்டார்கள்; அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்துக்



௫. திருச்சபையில் வேடிக்கையாய்த் தமாய பார்வதியார் சுவாமியின் கண்களை மூட அத ஞ்ச் சோதிமயமாகப் பெற்றது.

௬. ஜோதிலிங்க பார்வதியார் காஞ்சி நகரிலே கம்பாநதியில் மணலால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்தது.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

## பார்வதியார்

# திருக்கண்புதைத்ததும்

ஐந்தாவது

## இடப்பாகம் பெற்றதும்.

அப்படியிருக்கும்போது ஒருநாளையதினம் சுவாமியானவர் சூரியசந்திரர்கள் நமதுகண்களென்று சொல்லப் பார்வதியார் வேடிக்கையாக அவரதுகண்களைத்தன் இரண்டுகைகளாலும் மூடினவுடன் உலகங்களெல்லாம் இருண்டு எல்லாப்பொருள்களுங்கரேத்து மயங்குகின்ற காலத்தில், மும்மூர்த்திகள் முதலானவர்கள்வந்து சுவாமியினிடத்தில் முறையிட்டார்கள். அப்பொழுது பரமசிவன் தன் நெற்றிக்கண்ணைத்திறக்க உலகங்களிற்பரவிய இருள்நீங்கி எங்கும் பிரகாசம் உண்டாச்சுது. பார்வதியார் தன்கைகளைவாங்கிக் கண்களைமூடியபாவம் போகும்படி பூலோகத்தில் தொண்டைமண்டலத்திலிருக்கும் காஞ்சிபுரத்திற்குவந்து கம்பைநதியருகில் மணலைத்

குவித்து லிங்கரூபமாக்கிப் பூஜைசெய்யும்போது சுவாமியின் கிருபையால் கம்பாநதி பெருகிவர, இலிங்கத்திற்கு அபாயம்வாராதிருக்க அதைத்தன் இரண்டுகைகளாலும் மார்பிலே இறுகத்தழுவிக்கொண்டாள். அப்பொழுது பரமசிவன் ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளியபோது அம்மன்வணங்கி உமது இடப்பாகங்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நீ திருவண்ணாமலைக்கு வந்தால் அப்படியே கொடுப்போமென்றுசொல்லிக் கயிலாயத்திற்குப் போய்விட்டார். பின்பு அம்மன் திருவண்ணாமலைக்குவந்து அங்கே கௌதமருடைய ஆச்சிரமத்தில் இறங்கி ஊசியில் ஒருகாற்பெருவிரலை யூன்றிக்கொண்டு அருமையான தபசுசெய்யும்போது, விஷ்ணுமுதலான தேவர்கள் தவசாலைக்குவந்து அம்மனைவணங்கி மகிடாசுரனாலே தாங்கள்படுகிற துன்பத்தைச் சொல்லிக்கொண்டதின்பேரில் பார்வதியார் துர்க்கையை வரவழைத்து அந்த அசுரனைக் கொன்றுவிடென்றுசொல்லத் துர்க்கையானவள் பார்வதியின்கணங்கள் சூழ்ந்துவரச்சென்று மகிடாசுரனோடு அகோரயுத்தஞ்செய்து அவனையும் அவன் சேனையையுங்கொன்று பார்வதியாரிடத்தில்வந்து செய்தியைச்சொல்லத் தேவர்களெல்லோரும் சந்தோஷப் பட்டார்கள். பின்பு பார்வதியார் அருணசலேசுரருக்குக் கார்த்திகைமாதத்தில் திருவிழாநடத்தி வணங்கின உடன் மலைமேல் ஒருபிரகாசம் உண்டாகி அதினில் பரமசிவன் எழுந்தருளி, பெண்ணே! இம்மலையைப் பிரதக்ஷணஞ் செய்யென்றுசொல்லி மறைந்துவிட்டார். அப்படியே பார்வதியார் பிரதக்ஷணம்வரும்போது மேற்குத் திக்கில் பரமசிவன் ரிஷபவாகனரூடராய்த் தரிசனங்கொடுத்தார். அவ்விடம்விட்டு ஈசான்னியதிசைக்குவரும்போது பரமசிவன் மறுபடியும் ரிஷபவாகனரூடராய்த் தரிசனங்காட்டி இடப்பாகத்தில் இருவென்று கையினாலே அணைத்துக்கொண்டபோது, சுவாமியினுடைய பாதி வலது பக்கத்திலும், அம்மனுடைய பாதி இடதுபக்கத்திலுமாக, இரண்டு தேகமும் ஒருதேகமாய்ப் பிரகாசித்தது. இதைத்தரிசித்த தேவர்களெல்லோரும் ஆனந்தம் அடைந்து வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள்.

134



அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மின்னனையு முகிறவழு மிமகிரியின்
றபோ பலத்தான் மேனையான
வன்னையிடத் தென்னன்னை யவதரித்த
கதைசிறிதே யறைந்தே னிப்பால்
பொன்னனைய சடை யிறைவன்
றிருநயன மிருகரத்தாற் புதைத்தவாறுந்
தென்னருணை மாநகரி லன்னைவினை
தீர்த்ததுவுஞ் செப்ப லுற்றேன்.

(இ-ள்.) மின்னல்பொருந்திய மேகங்கள் தவழ்ந்துபோகின்ற இமயபருவதத்தின் தபோபலத்தால் மேனாதேவியிடமாக என் தாயாகிய பார்வதி அவதரித்த கதையிலே கொஞ்சந்தான் சொன்னேன். அப்பார்வதி பொன்போலுஞ் சடையையுடைய சிவனது அழகிய கண்களை இரண்டு கைகளினாற்பொத்தியதும், அதனால் வரும்வினையைத் தெற்கின்கணிருக்கின்ற அருணாசலத்தில் அம்மை பூசைசெய்து தீர்த்துக்கொண்டதுவும் சொல்லத்தொடங்கினேன். எ-று. (௧)

கலி விருத்தம்.

ஊடுவர் புலவிதீர்ப்ப ரொருவருக் கொருவர் மாலை
சூடுவர் மறைநூல் கேட்பர் சொல்லுவர் வீணைநாதம்
பாடுவர் பலவினோதம் பயிற்றுவர் பலகாற் சூது
மாடுவர் வெல்வர் தோற்ப ரணிகலம் புனைவரன்பால்.

(இ-ள்.) சிவபிரானும் பார்வதியும் பிணங்கிக் கொள்வார்கள்; அதை மறுபடியும் தீர்த்துக்கொள்வார்கள்; ஒருவருக்கொருவர் மாலைகளைச் சூடிக்கொண்டு வேதசாஸ்திரங்களைத் தேவர்கள் முனிவர்

கள் சொல்லக்கேட்டும், அதன்பொருளைச் சிலருக்குச்சொல்லியும், வீணைமுதலியவற்றைவாசித்தும், மற்றும் பல விளையாட்டுகள் செய்தும், பலதரம் சூதாடியும், அஃதால் வெற்றியையும் தோற்பையுமடைந்தும் அழகிய ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு மிருந்தார்கள், எ-று. (உ)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அந்தவே ளையிலென் னன்னை யையனை யின்றஞ்சி யையா
விந்துவு மிரவி தானும் யாவரென் றிசைத்தா ளெந்தை
சுந்தரக் கனிவாய் மின்னே சுடர்களெம் மிருக ணென்றார்
கந்தனைப் பயந்தா ளீசன் விழிகளைப் புதைத்தாள் கையால்.

(இ-ள்.) அச்சமயத்தில் என்தாயாகிய பார்வதி சுவாமியையு வணங்கி, ஐயா! சந்திரசூரியர்கள் யாவரென்றுகேட்க, அதற்குச் சுவாமி அழகியகனிபோலும் வாயையுடைய பெண்ணே! அந்த இருவரும் நம்முடையகண்களென்று சொன்னார். சிவசுப்பிரமணியரைப் பெற்ற தாயானவள்கேட்டு வேடிக்கையாகச் சுவாமியினுடைய கண்களை இரண்டு கைகளால் மூடினாள். எ-று. (௩)

கலி விருத்தம்.

ஈச னார்விழி புதைத்தலு மிருட்பிழம் புருக்கிப்
பூசி னாலென விருண்டன திசைகளும் புவியு
மாசி லீலமால் வரையெனக் கருகிய மலைகள்
காசு லாவிய நதியெலாம் யமுனைபோற் கருத்த.

(இ-ள்.) பரமசிவத்தின் கண்களைப் பார்வதி புதைத்தலும் இருட்கூட்டத்தை யுருகச்செய்து பூசினதுபோல் திக்குகளும் பூமியுமிருண்டதுகள்; மலைகளெல்லாங் குற்றமற்ற நீலகிரியைப்போல் கறுத்தன. மணிகள் பொருந்திய நதிகளெல்லாம் யமுனாநதிபோல் கறுத்ததுகள். எ-று. (௪)



அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மறையவனு நாரணனு முனிவர்களும்
வசுக்களுநான் மறையும் வானோ
ரிறையவனும் விழியொளிபோய்ப் பிறவிநெடுங்
குருடரென விருந்தார் மற்றைக்
கறவைகிளை முதல்விலங்கு பறவைகளு
மொளியிழந்த கண்ண தான
துறவறமும் பிறவறமுந் தொலைந்தன மற்
றுளதொழிலுந் தொலைந்த தன்றே.

(இ-ள்.) பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும், நான்குவேதங்களும், தேவேந்திரனும் கண்களினது பிரகாசமற்றுப் பிறவிக்குருடர்போ லிருந்தார்கள்; பசு காளைமுதலியமிருகங்களும் பக்ஷிகளும் கண்ணொளியற்றன; துறவறமில்லறமிரண்டும் ஒழிந்தன; மற்ற எல்லாத்தொழில்களும் கெட்டதுகள். எ-று.

கலி விருத்தம்.

தேவர் மானிட ரிராக்கதர் நிறமெனத் திரிந்தார்
கோவி லிந்திரன் வெண்கரி கருநிறங் கொண்ட
தாவி லம்புயன் கொடிகொடி யானதவ் வளவின்
மூவர் தேவனுக் கனைவரு முறைசொலிப் புகன்றார்.

(இ-ள்.) தேவர்களும், மனிதர்களும், இராக்ஷதர் நிறம்போலக் கறுத்தார்கள்; ஆகாயத்தில் இந்திரன் வாகனமாகிய வெள்ளையானை கரிபோலக் கறுத்தது; கெடுதலில்லாத பிரமன் கொடியாகிய அன்னம் காகம்போல் கருகியது; அப்படி எல்லாப் பொருளுங்கறுத்து மயங்குகின்றகாலத்தில், மும்மூர்த்திகட்கு முதல்வனான சிவனிடத்தில் எல்லோரும்போய் முறையிட்டுத் தங்கள் குறையைச் சொல்லிக்கொண்டார்கள். எ-று. (௫)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அஞ்சலெனு வமைத்தகரத் திறைவனுதல்
விழிதிறந்தா னவனி யேழுந்
துஞ்சுமிரு ளகன்றதுபன் னிருகோடி
சூரியர்தந் தோற்றம் போல
வஞ்சியுமை யிறைவன்விழி புதைத்ததிருக்
கரமலரை வாங்கி நின்றாள்
விஞ்சுமறை யவர்வளர்க்குங் கனல்போல
விழிமூன்றும் விளங்கிற் றன்றே.

(இ-ள்.) சிவபிரான் பயம்வேண்டாமென்று கையமைத்துப் பன்னிரண்டுகோடி சூரியருதயம்போலத் தம்முடைய நெற்றிக்கண்ணைத் திறக்க, ஏழுலகமும் அந்தகாரத்தைநீங்கியது; பார்வதியானவள் பரமசிவத்தின்விழிகளைப்பொத்தியகையை வாங்கினின்றாள்; பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல் மூன்று கண்களும் விளங்கின. எ-று. (எ)

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பா
ணெடுஞ்சூலப் படையாய் காலன்
மார்புதைத்த மலர்ப்பதத்தா யார்புதைத்த
சடாடவியாய் வைய மேழுங்
கார்புதைத்த விருளாக விழிபுதைத்த
கொடும்பாவங் கழலுமாறு
நீர்புதைத்த பாரிடத்திற் றவம்புரிதற்
கானவிட நிகழ்த்து மென்றாள்.

(இ-ள்.) எல்லாச்சீவராசிகளையும் கருவாக வைத்துக்கொண்ட வயிற்றையுடைய பார்வதி சுவாமியைப் பார்த்து நெடிய சூலத்தையுடையவரே! எமனை மார்பிலேயுதைத்த மலர்போன்ற பாதங்களையுடையவரே! ஆத்திமாலையையணிந்த சடைக்காட்டினையுடையவரே!



ஏழுலகமும் மேக நிறத்திலும் அதிகநிறமான இருளுண்டாக உமது கண்களைமூடிய கொடியபாவம் போம்படிச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியினிடத்தில் தவஞ்செய்தற்கு நல்ல இடஞ் சொல்லுமென்று கேட்டாள், எ-று. (அ)

ஈசனுமங் குரைத்தருள்வா னுனைவினைவந்
தணுகாதே யெனினும் யார்க்கும்
மாசகலும் படிக்கரிய தவம்புரிய
விரும்பினையேல் மதுரை மாயை
காசியவந் திகைதுவரை யயோத்தியினுஞ்
சிறப்புடைய காஞ்சி மேவிப்
பூசைபுரிந் தரியதவம் புரியென்றான்
விடைகொண்டாள் புகழ்ந்துபோற்றி.

(இ-ள்.) அப்படி பார்வதிகேட்கச் சுவாமி பெண்ணே! உன்னைப் பாவம்வந்து சேராதாயினும், மற்றவர்களுக்குப் பாவம் நீங்கும் பொருட்டுத் தவஞ்செய்ய இச்சித்தாயானால் மதுராபுரி, மாயாபுரி, காசி, அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி இவைகளுள் சிறந்த காஞ்சிபுரத்திற்போய்ப் பூசையுடன் அரியதவஞ் செய்யென்றுசொல்லச் சுவாமியை வணங்கி விடைபெற்றுக்கொண்டாள். எ-று. (௯)

விசையமகள் குடையெடுப்பச் சயமகள்பொ
னடைப்பைகொடு விரைந்து மேவ
வசையுமணிக் கவரியிரண் டருந்ததியுங்
கமலினியு மருத்து வீசத்
திசையிலிள நிலவெறிக்குந் தாளமணிச்
சிவிகையின்மேற் சென்ற போது
நசைபெருகு மறம்பெருகப் புனல்பெருகும்
புகழ்க்கங்கா நதியைச் சேர்ந்தாள்.

(இ-ள்.) பார்வதியம்மைக்கு வீரலட்சுமி குடைபிடிக்க, ஜயலட்சுமி பொன்னடைப்பந்தாங்கிச் சீக்கிரத்தில்வர, இரத்தினங்களிழைத்த சாமரைகளால் அருந்ததியும் இலட்சுமியும் இரண்டு பக்கங்களில்நின்றுங் காற்றுகளைவீச, நாலுதிக்கிலுஞ் சந்திரனைப்போலப் பிரகாசம்வீசும் முத்துப்பல்லக்கிலேறி யாவரும் விரும்புகின்ற தருமம்பெருகச் சலம்பெருகுகின்ற கீர்த்தியினையுடைய கங்காதீர்த்தத்தில் வந்துசேர்ந்தாள். எ-று. (௧0)

இறந்தவுயி ரினிமீளப் பிறவாம
லிறவாம லிறைவனார் தந்
சிறந்ததிரு வுருவாகுந் திருக்காசித்
தலமடைந்து சிவன்றாள் போற்றி
வறந்தமழைக் குருகுமந்தத் தலத்தவர்கள்
பிழைக்கவறம் வளர்த்துப் பண்ணுள்
நறுந்தொடையி னரசன்விடை கொண்டுசிறப்பத்
தொண்டைவள நாட்டைச் சேர்ந்தாள்.

(இ-ள்.) இறந்துபோன உயிர் இனி திரும்பிப்பிறக்காமலு மிறக்காமலும் பரமசிவத்தினுடைய திவ்விய சொரூபமான காசிப்பதியைச்சேர்ந்து விசுவேசருடைய பாதம்போற்றி, மழையில்லாமல் வருந்துகின்ற சீவராசிகள் பிழைக்கும்பொருட்டு அத்தலத்தில்தருமத்தைப் பலநாள்வளர்த்துத் தேன்தங்கிய மலர்மாலையைத்தரித்த அத்தேசத்தரசன் விடைபெற்று சிறக்கத் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தாள் பார்வதி. எ-று. (௧௧)

மழைதவழுந் தலைப்பலவின் பழமதுவாய்
விரிந்தாலு மகர வாழைப்
பழமதுவாய் விரிந்தாலும் புதுமதுவாய்
விரிந்தொழுகும் பழன நீங்கிக்



குழையளவு நடமாடும் விழிமாதர்
நடமாடுங் குறிப்பு நோக்கிப்
பொழிலதனின் மடமயில்க ணடமாடுந்
திருக்காஞ்சி புரத்தைச் சேர்ந்தாள்.

(இ-ள்.) மேகங்கள் தவழ்கின்ற தலையையுடைய பலாவினது பழங்கள் வாய்விண்டாலும், மகரவாழைப் பழங்கள் அளிந்தாலும், புதியதேன் பெருக்கெடுத்து வாய்க்கால்வழியாக ஓடி விழுகின்றகழனிகளைக்கடந்து குண்டலம் வரைக்குந் தாவுகின்ற கண்களையுடையபெண்கள் நாட்டியஞ் செய்கின்ற குறிப்பைப் பார்த்துச் சோலைகளிலிளமையாகிய மயில்கள் நடனஞ்செய்கின்ற காஞ்சிபுரத்தைச் சேர்ந்தாள் பார்வதி. எ-று. (௧௨)

தாவரத்தை யறிவாக்கி மணிதரையுள்
ளறிவழிக்குந் தடங்கண் மாதர்
நூபுரத்தம் புயசரணஞ் சிவப்பேற
விழைமருங்கு னுடங்க வேறு
மாபுரத்தின் மணிமேடை யரம்பையார்க்கு
விளையாட மலைக ளாகுங்
கோபுரத்தி னெடுங்கொடிகள் காமவல்லி
யெனுங்கொடிக்குக் கொழுகொம் பாகும்.

(இ-ள்.) கற்களையும் மரங்களையும் உருகச்செய்து மனிதர்களுடைய உள்ளறிவைக் கெடுக்கிற விசாலமாகிய கண்களையுடைய பெண்கள் சிலம்பணிந்த தாமரைமலர்போலும் பாதஞ்சிவக்க, நூல்போலும் இடை வளைய ஏறுகின்ற அப்பட்டணத்திலிருக்கும் இரத்தினமிழைத்த உப்பரிகைகள் அரம்பைமுதலாகிய பெண்கள் விளையாடுதற்குமலைகளாக விருக்கும்; சிவாலயத்தின் கோபுரத்திற் கட்டி

விருக்கிற கொடிகள் கற்பக விருட்சத்திற்படர்ந்த காமவல்லியென்னுங் கொடிக்குப் படருகிறதற்குக் கொழுகொம்பாயிருக்கும். எ-று.

பரதநா டகமாடு மயில்போலுங்
கயிற்றுவழிப் பாவை போலுஞ்
சுரதநா டகமாடுந் துடியிடையார்
கணவருடன் றுவளும் போது
மரகதா திகளுறுத்த விழித்துமணி
மேடையினும் வாரி வீச
வரதநா கரமான தன்றுமுத
லின்றளவு மாழி தானே.

(இ-ள்.) பரதநாட்டிய மாடுகின்ற மயிலுக்குச் சமானமாகவும் கயிற்றுவழியாக ஆடுகிற சிங்காரம் பொருந்தியபிரதமை போலவும், சுரதவிளையாட்டைச் செய்கிற உடுக்கைபோன்ற இடையினையுடையபெண்கள் புருடர்களோடு படுத்துப் புரளும்போது, மரகதமுதலிய இரத்தினாபரணங்களுறுத்தக்கோபித்து அவ்வுப்பரிகையில் நின்றும் எடுத்து வீசியெறிய, அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலே விழுந்ததனாலேதான் அது இரத்தினாகரமெனப்பெயர்பெற்றது, எ-று. (கஎ)

அனையமருங் ககன்றுவஞ்சி யொருமாவின்
கீழிருக்கு மானைப் போற்றிக்
கனலனைய வினைகளையு நடுங்குவிக்க
நடந்ததிருக் கம்பை மேவிப்
புனையமணற் குவித்திலிங்க வடிவாக்கி
யுமைபூசை புரிந்தா ளப்போ
தெனையுடையா னவடவத்தி னுறுதிதனைத்
தரியகங்கை யேவி னானே.



(இ-ள்.) அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்ற மாவிருக்ஷத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரை வணங்கி, நெருப்பையொத்த பாவங்கள்நடுங்கி ஓடிப்போகவருகின்ற கம்பைநதியருகேபோய் அலங்காரமாய்மணலைக்குவித்து இலிங்கரூபமாக்கிப்பார்வதி பூசைசெய்யும்போது, எம்முடைய சுவாமி அவள் தவத்தின் உறுதியையறிய அரிதாகிய கங்கையைப் பிரவாகமாக வரச்செய்தார். எ-று. (கஅ)

பூதலமேற் குறுமுனிவன் குண்டிகையிற்
கவிழ்ந்துவரும் பொன்னி தானோ
ஆதியிலே யந்தமுனி யாசமித்தே
யுமிழ்ந்தவலை யாழி தானோ
ஏதமறத் தவம்புரியும் பகீரதற்காச்
சன்னுமுனி யிரக்கத் தாலே
காதின்வழி யொழுக விட்ட
பரவியகங் காநதியோ கம்பையாறு.

(இ-ள்.) பூமியில் அகத்தியமுனிவர் கமண்டலங் கவிழ்த்ததினால்வருகிற காவேரியோ! அந்தமுனியானவர் ஆதிநாளையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ! குற்றமற்றத் தவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் இரக்கத்தினால் காதின்வழியாகவிடப் பெருக்கெடுத்துவந்த கங்காநதியோவென்று சந்தேகப்பட விருந்தது கம்பைநதி. எ-று. (கக)

வேறு.

மங்காநதியின் மணலி லிங்க
மழியா திருக்கும் வகையுமையாள்
வெங்கா தலினா லணைபவள்போல்
வெற்பா ரிமைய வெற்பாடன்

சங்கார் கரந்தா ளிருதனத்தா
லிருக விருகத் தழுவுதலுங்
கொங்கார் களபத் திருமார்பு
முருகி யுருகிக் குழைந்தாரே.

(இ-ள்.) பார்வதி கெடாத கம்பையாறு பெருக்கெடுக்கும்போது மணலால்செய்த இலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயந்து காமங்கொண்ட ஆசையினால் அணைபவள்போல் பர்வதராஜகுமாரி வளையலணிந்த கைகளாலும் இரண்டு கொங்கைகளாலும், இறுகி யிறுகத்தழுவுதலும் வாசனைபொருந்தியசந்தனத்தை யணிந்த திருமார்பு உருகிக்குழைந்தார். எ-று. (கஎ)

மனத்தா னினைந்த பெருந்துயரு
மணக்காப் பிரிவுடன் றீரத்
தனத்தா னெருக்கி முகமழுத்தித்
தலைநாட் போலத் தழுவுதனு
மனத்தால் விளங்குங் கம்பைநதி
யருணா சலத்தை யொருபொழுது
நினைத்தார் வினைக ளிரண்டுபோ
லிரண்டாய்ப் பகுந்து நீங்கியதே.

(இ-ள்.) தன்னுடைய தவத்துக்குப் பின்னம்வாராமல் நினைத்திருந்த துன்பமும், சுவாமி கூடாமற் பிரிந்த துன்பமும் தீரும்படித் தனங்களிலே நெருக்கி முகமழுத்தி முன்னாள் போல் அணைந்தவுடனே, அன்னங்கள் சூழ்ந்த கம்பை நதியானது, அருணாசலத்தைஒருவேளை நினைத்தவர்களுடைய நல்வினை தீவினைபோலிரண்டாகப்பிரிந்து இலிங்கத்தைச் சுற்றிப்போனது. எ-று. (கஅ)



விடுத்தனள் கரத்தைப் பாங்கர்
விளங்கிழை யவர்கள் சூழத்
தொடுத்தபூந் தொடையுஞ் சாந்து
மணிந்தவள் தொழுதா ளந்த
வடுக்கணாள் தனது கேள்வன்
மார்பினைத் தொடாது நாணித்
தடுத்திடுங் குறிகள் போல
விளங்கிய தழும்ப ரம்மா.

(இ-ள்.) பார்வதி சுவாமியைத் தழுவிய கைகளை விட்டாள்; அருகில் பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய அநேகம் பெண்கள் சூழப் புட்பமாலையுஞ் சந்தனமுந் தரித்து வந்தனஞ்செய்தாள்; மாவடுப்போன்ற கண்களையுடைய அந்த அம்மை தன்னுடைய சுவாமி மார்பை மற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்து தொடாமலிருக்கும்படி தடுக்கவைத்த குறிகள்போல் தழும்புகள் விளங்கியதுகள். எ-று

அப்பொழு தரனு மார
னடித்தழும் பிருக்குந் தோளு
முப்பொழு திறைஞ்சுந் தேவர்
முடித்தழும் பிருக்குந் தாளு
மைப்பொலி குழலாள் கொங்கை
வளைத்தழும் பிருக்கு மார்பு
மெய்ப்பொலி நீறு மாகத்
தோன்றினார் விடையின் மீது.

(இ-ள்.) அக்காலத்தில், பரமசிவன் (அரிமர்த்தன) பாண்டியராசன் அடித்தழும்பிருந்த திருத்தோள்களும், மூன்றுகாலத்திலும்

வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்களின் தழும்பியிருந்த திருவடிகளும், மேகம்போல் விளங்குங் கூந்தலையுடைய பார்வதிமுலைத் தழும்பும், வளைத்தழும்பு மிருக்கின்ற மார்பும், தேகத்திற் பொலிந்த திருநீறுமாய் ரிஷபவாகனத்தில் எழுந்தருளினார். எ-று. (௨௰)

அந்தரத் தமர ரெல்லா மலர்மழை சொரிய வானிற்
றுந்துமி முழக்கத் தோடே சுருதிகண் முழங்கா நின்ற
விந்திரன் றிருமாற் றேவ ரிறைவியைத் தொழுது நின்றார்
சுந்தரக் கனிவாய் மின்னு மீசனைத் தொழுது நின்றாள்.

(இ-ள்.) ஆகாயத்தில் தேவர்களியாவரும் புட்பவருஷம்பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடு வேதங்கள் முழங்காநின்றன. தேவேந்திரனும், விட்டுணுவும், தேவர்களும், பார்வதியைத் தொழுதார்கள்; அழகியகனிபோலும் வாயையுடைய அம்மையும் பரமசிவனை வணங்கிநின்றாள். எ-று. (௨௧)

ஒண்ணுதல் விடைமுன் சென்று
பணிந்துள முருகிப் பூசை
பண்ணுதல் புகழ்த லாகிப்
பணிந்தன ளவனை நோக்கிக்
கண்ணுத லுனக்கு வேண்டும்
வரமெது கழறு கென்றா
னெண்ணுதல் பிறிதொன் றில்லை
யிடப்புறந் தருதி யென்றாள்.

(இ-ள்.) விளங்குகின்ற நெற்றியையுடைய அம்மை, ரிஷபவாகனத்தின் முன்பாகச்சென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூசைசெய்து புகழ்ந்து வணங்கினாள்; சுவாமி பார்வதியைப்பார்த்து உனக்குவேண்டியவரம் யாது? சொல்லென்றார்; அதற்கு அம்மையும் யாதும் வேண்டிலேன், உமது இடப்பாகத்தை அருளுமென்று கேட்டாள். எ-று. (௨௨)



அத்தனு மொழிவா னென்கண்
புதைத்ததா லடைந்த தீமை
இத்தலத் தினிய பூசை
யியற்றலா லகன்ற திந்த
மெய்த்தலந் தனக்குத் தென்பா
லொருநகர் விளங்கித் தோன்று
முத்திமா நகரந் தன்னை
நினைத்தபேர்க் களிக்கு மூதூர்.

(இ-ள்.) அதற்குப் பரமசிவன் அருளிச் செய்வார்; என் கண்களை மூடியதனாலே அடைந்தபாவம், இந்தத்தலத்தில் இனிமையான பூசைசெய்தலினால் நீங்கியது; இந்த மெய்ம்மையான ஸ்தலத்துக்குத் தென்பாரிசத்தில் ஒருநகரம் பிரகாசிக்கும்; அதை நினைத்தால் முத்தியுண்டாகும். எ-று. (௨௩)

ஆரணன் றிருமால் தேட வடிமுடி யொளித்து ஞானப்
பூரண வொளியாய் மேல்கீ ழுலகெலாம் பொருந்தி நிற்போந்
தாரணி யவர்க்கு மற்றைச் சயிலமா யிருப்போ மங்கே
வாரணி முலையாய் பாகந் தருகுவோம் வருதி யென்றார்.

(இ-ள்.) பிரமனும், விட்டுணுவும் தேடப் பாதமுஞ் சிரசும் அவர்களுக்குத் தெரியாமலொளித்துப் பூரணமாகிய ஞானவொளியாய் மேல் கீழுலகங்களெல்லாம் ஒன்றாய்நிற்போம், பூமிகளி லிருப்போர்க்கு மலையுருவமா யிருப்போம், அவ்விடத்தில் வந்தால் கச்சணிந்த தனத்தையுடையபெண்ணே! இடப்பாகத்தைத் தருவோம் வாவென்றார் பரமசிவன். எ-று. (௨௪)

என்னலு மிறைவி சொல்வா ளினிமைசேர் கயிலை காசி
தன்னினு மினிது காஞ்சித் தலமென வுரைத்தீ ரிந்த
நன்னிலந் தனக்குச் சோணை நகரமே யதிக மென்றீர்
பின்னையு முளதோ வந்தத் தலத்தினுக் கிணையாம் பேரூர்.

(இ-ள்.) பரமசிவன் இப்படி திருவுளம்பற்றிய அளவில், பார்வதி சொல்லுவாள், இனிமைசேர்ந்த கைலாயம், காசி இவ்விரண்டு தலங்களிலும் இக்காஞ்சீபுரம் அதிகமென்று அருள்செய்தீர்; இதைப்பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்கிறீர்; அத்தலத்துக்குச் சமானமான பெருமைபொருந்திய தலம் வேறொன்றுண்டோ? என்றாள் பார்வதி. எ-று. (௨௫)

அவ்வுரை மறுத்தெங் கோமா னருணுவா னமக் கொப்பான
தெய்வமைந் தெழுத்து மானத் திருந்து மந்திரமு மில்லை
சைவமே யனைய தான சமயமு மருணை போல
வெவ்வினை தவிர்க்கு மூரு மிலையென விளம்பிப் போனான்.

(இ-ள்.) அப்படி பார்வதிசொன்ன வார்த்தையைச் சுவாமி மறுத்து நமக்குச்சமானமாகிய தெய்வமும், பஞ்சாக்கரத்திற் கொப்பான மந்திரமும், சைவத்திற்குச் சரியான சமயமும், பொல்லாத பாவங்களைத் தீர்க்கும் அருணாசலத்திற்குச் சரியான தலமும் உலகத்திலில்லை என்று திருவாய்மலர்ந்து கைலாயத்திற் கெழுந்தருளினார். எ-று. (௨௬)

கொம்பனாள் பொறுப்பா யீதென்
றிறைவனைக் குவித்துப் போற்றிக்
கம்பையா றகன்று காஞ்சித்
தலத்தையுங் கடந்து வேலன்



றும்பிமா முகத்தோன் கன்னி
வயிரவர் கணங்கள் சூழச்
செம்பொனார் கவரி வீசச்
சிவிகைமேற் சிறந்து சென்றாள்.

(இ-ள்.) புஷ்பக் கொம்பை யொத்த பார்வதி யானவள் சுவாமீ! நான் தெரியாமற் சொன்ன வார்த்தையைப் பொறுத்துக்கொள்ளு மென்று இரண்டு கைகளையுங் குவித்து வணங்கிக் கம்பையாற்றை விட்டுக் காஞ்சீபுரத்தையுங் கடந்து சுப்பிரமணியர், கணபதி, சப்த கன்னிகள், வயிரவர், சிவகணங்கள் சூழவும் இலக்குமி கவரிவீசவும், பல்லக்கில் எழுந்தருளினார். எ-று. (௨௭)

மண்மகள் மகிழப் பட்ட
மரங்களுந் தழைத்து வீறிக்
கண்மலர் சொரியக் கல்லு
மலைகளுங் கரைந்து சோர
வெண்மலர் மடவாள் போற்றக்
காவத மிரண்டு நீங்கி
விண்மதி முகத்தாள் மற்றோர்
வெள்ளிடை மருங்கிற் சேர்ந்தாள்.

(இ-ள்.) பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போன மரங்களும் தளிருண்டாகித் தழைத்துத் தேனோடும் புஷ்பங்களைச் சொரியப் பாறுங்கல்லுகளும் பெரிய மலைகளுங்கரைந்துருக, வெள்ளைத்தாமரைப்பூவில் வாசஞ்செய்யும் சரஸ்வதி தோத்திரஞ்செய்ய, இரண்டு காததூரம்போய்ச் சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதி ஒரு வெளியிடத்தி லிறங்கினாள். எ-று. (௨௮)

வெய்யவ னமையா ரென்று
 வினவுகா ரணத்தா னிலக்
கையவன் மரகதத்திற்
 கரியவள் காமுங் காலுஞ்
செய்யவள் வருந்தி னளென்
 றறிந்துயிர் சிதைப்பான் போலப்
பையமேற் [illegible]விற் பாய்ந்தான்
 குமரவேள் பந்தர் செய்தான்.

(இ-ள்.) சூரியன் தன்னை யாரென்று பரமசிவனைக் கேட்டதினல் நீலம்போன்ற கையும், மரகதம்போன்ற வடிவமும், தாமரைப் பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும் பொருந்திய அம்மை சாபத்தினால் வருந்தினளென்றறிந்து தன்னுயிரை விட்டுவிடுகிற வன்போல மெள்ள மெள்ள மேற்குச் சமுத்திரத்தில் விழுந்து அத்தமித்தான்; சுப்பிரமணியர் அம்மையிருக்கிறதற்காக ஒருபந்தல் போட்டுவைத்தார். எ-று. (௨௧)

அன்னையுங் குகனை நோக்கி
 யரம்பையாற் பந்தர் செய்து
பன்னிரு கரமுஞ் சால
 வருந்தினை யெனப்பா ராட்டி
யின்னுமோர் கருமஞ் சந்தி
 முடிப்பதற் கினிய நன்னீர்
கைக்கிறை வேலை யேவி
 யழைத்திடு கணத்தி லென்றாள்.

(இ-ள்.) அதன்பின்பு,பார்வதி சுப்பிரமணியரைப் பார்த்து வாழைமரத்தினால் பந்தர்போட்டுப் பன்னிரண்டுகைகளும்சிவக்கவருத்தத்தை யடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி,இன்னும் ஒருவே



லையிருக்கின்றது, அஃதென்னவென்றால் சந்தியாவந்தனஞ் செய்கிறதற்கு நல்லபரிசுத்தமானசலம்வேண்டும், உன்கையிற்பிடித்திருக்கிற வேலாயுதத்தையேவி அழைப்பியென்று சொன்னாள். எ-று.()

காதலா லிறைஞ்சிக் கந்த னேவினன் கைவே லவ்வேல்
போதவான் புத்தி ராண்டன் புகழ்புரு கூதன் போதன்
வாதில்பாண் டரங்கன் சோமன் வாமனென் பவரை வாட்டி
மிதுலேழ் கிரியை வீட்டிக் கொணர்ந்தது வேலை நீத்தம்.

(இ-ள்.) அப்படிசொன்ன அளவில், அதிக பத்தியோடு, சுப்பிரமணியர் வேலாயுதத்தை யேவினார்; அது போதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டரங்கன், சோமன், வாமன் என்று சொல்லப்பட்ட ஏழுபேரையும் அவர்களிருந்த ஏழுமலையையும் உருவிநல்ல தண்ணீர்க்கடலுக்குப்போய்ச் சலங்கொண்டு வந்தது; அந்நதிக்குச் * சேயாறென்று பெயர். எ-று. (௩௧)

கந்தவே ளழைத்த வாற்றிற் கடனெலாங் கழித்து வாழைப்
பந்தரி லிருந்தா ளப்போ துமைபதம் பணிந்தவ் வாற்றிற்
சிந்துநீர் சிவப்ப தேதென் றுரைத்தலுஞ் சிறப்ப தாக
வந்தவா றதனை யாறு திருமுகற் குரைப்பாள் வஞ்சி.

(இ-ள்.) சுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லா முடித்துக்கொண்டு வாழைப்பந்தரி லிருந்தாள்; அப்போது, அம்மையை வணங்கி இந்த ஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டிய தென்னவென்று கேட்க, அந்த விவரத்தைச் சுப்பிரமணியருக்குச்சொல்லுகின்றாள் பார்வதி. எ-று. (௩௨)

அனந்தமா புரத்தி லேழு மறையவ ரறியாக் காலத்
தனந்தமா வினைகள் செய்தா ரதன்பினல் லறிவு தோன்றி

* உலகோர் செய்யாறு என்று அழைப்பதுமுண்டு.

யனந்தமா வெனவே யேறு மயன்பதங் கருதிப் பன்னா
ளனந்தமா லமதா யுட்கொண் டருந்தவம் புரிந்தா ரந்நாள்.

(இ-ள்.) அனந்தமாபுரமென்கிற பட்டணத்தில் ஏழுபிராமணர்கள், அறியாதகாலத்தில் அனந்தம் தீவினைகளைச் செய்து, அதன்பின்பு நல்லவிவேகந்தோன்றி அதமமென்ற அன்னத்தைத் தனக்கு வாகனமாகக்கொண்ட பிரமனைக்குறித்து, இலைகளையே உணவாக உண்டு பலநாள் தவம்செய்தார்கள் அக்காலத்தில். எ-று. (௬௩)

பதுமனு மவர்முன் சென்று
பாவிகாள் வரைக ளேழில்
விதிமுறை தவஞ்செய் வீரேற்
குமரவேள் விடுக்கும் வேலாற்
பொதிசடை முடியுந் தங்கள்
வினைகளும் பொடியா மென்று
சதுர்முக னுரைத்துப் போந்த
னவருமத் தவமே செய்தார்.

(இ-ள்.) பிரமன் அவ்வேழுபேர் முன்னேபோய் பாவிகளே நீங்களேழுபேரும் ஏழுமலைகளில் விதிமுறையாகத்தவம் செய்வீர்களானால், அப்போது அம்மைக்குச் சலம்வேண்டிய நிமித்தியத்தால், சுப்பிரமணியர் வேல்விடுவார், அதனால் உங்களுடையே சடைகூடிய சிரங்களும் பாவங்களும் பொடியாகப் போமென்று சொல்லிவிட்டுப் போனார்; அவர்களும் அப்பிரகாரம் தவஞ் செய்தார்கள். எ-று. ()

வேறு.

எழுவரையு மதிலிருக்கு மெழுவரையும்
பிளந்ததுன் பொருந்த வேலே
வழியுமவ் ருதிரமுடன் புனல்கலந்து
சிவந்ததுகா ணகைமயிலே



வழுவிலையுங் குனக்கென்ன வடிபணிந்து
மகிழ்ந்திருந்தான் மலைமேற் பட்ட
செழுமுனிவர் குருதியினாற் சிவந்தது போற்
சிவந்ததுவே செக்கர் வானம்.

(இ-ள்.) அவ்வேழுபேரையும், அவர்களிருக்குமலை யேழையும் பிளந்தது உன்னுடைய கூர்மைபொருந்திய வேலாயுதம்; அதனால் வழிந்தொழுகுகின்ற அவர்களுடைய இரத்தத்தோடு சலங்கலந்து சிவந்துபோய்விட்டது; உனக்கொருகுற்றமு மில்லையென்று சொல்ல, அம்மன் பாதத்தில் சுப்பிரமணியர்வணங்கிச் சந்தோஷமாயிருந்த அளவில், மலையில் தவம்செய்துக்கொண்டிருந்த முனிவர்களுடைய இரத்தத்தினால் சிவப்பு நிறத்தை யடைந்ததுபோலச் சிவந்தது செவ்வானம். எ-று. (௬௫)

வித்தகர்கண் புதைக்கமுனம் பரந்தவிருண்
மறுமையிற்சூழ் வினையைப் போல
வத்தலத்தி லுமையவளைப் பின்பிடித்தா
லெனப் பரந்த தந்தகார
முத்தமியோ சிறுகதலிப் பந்தரின்கீ
ழிருப்பவளென் றும்ப ரிட்ட
நித்திலப்பந் தரைநிகராய் விளங்கியது
தாரகையா னெருங்கும் வானம்.

(இ-ள்.) சுவாமியினுடைய கண்களை முன்னே மூடினதினால் உலகமெல்லாம் பரவியவிருள் ஒருவனுக்கு மறுமையில் வந்துபிடித்துக்கொள்ளுகிற பாவத்தைப்போல் அந்தத் தலத்தில் பிறகுவந்து அம்மையைப் பிடித்ததுபோலிருண்டது; பார்வதியோ ஒருவாழைப் பந்தரின் கீழிருப்பாளென்று தேவர்கள் போட்டுவைத்த முத்துப் பந்தரை யொத்திருந்தது நக்ஷத்திரங்களால் நெருங்கப்பட்ட ஆகாயம். எ-று. (௬௬)

மாலையெனுங் குமரியிருண் மயிடமுக
மகற்றியந்தி வானிற் சோரிக்
கோலமுடன் படிகலிங்கங் கொண்டதுபோன்
மதியெழுந்து குடபாற் சென்ற
தாலமணி மிடற்றிறைவன் விழிபுதைக்க
வளைந்தவிரு ளனைத்து நீங்கப்
பாலமிசை வெடித்தெழுந்த விழியெனவே
யெழுந்தது செம்பரிதி தானே.

(இ-ள்.) மாலைக்கால மென்னும் துர்க்கை இருட்டாகிய மகிடாசுரன் தலையையறுத்து, அதனால் செவ்வானமென்று சொல்லப்பட்ட இரத்தக்கோலத்தோடு படிகலிங்கத்தைக் கைக்கொண்டது போலச் சந்திரனுதயமாகி மேற்குத்திக்கில் அத்தமித்தது; நீலகண்டராகிய பரமசிவன், இரண்டு நேத்திரங்களையும் அம்மை புதைத்த அளவில், நான்கு திக்கும்பரவிய வெல்லாவிருளும் போகும்படியாய் விழித்த அச்சுவாமியின் நெற்றிக்கண்போலச் செம்மைநிறம்பொருந்திய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானான். எ-று. (கஎ)

வேறு.

கங்கை நிகராஞ் சேயாற்றிற்
காலைசந்திக் கடன் கழித்து
மங்கை கனகச் சிவிகையின்மேன்
மறையோ லமிட வழிகொண்டாள்
பங்க மலந்தீர் வழியடியார்
கொடிய வினையாம் பஞ்சமலைக்
கங்கி மலையாய் விளங்கியசீ
ரண்ணா மலைகண் டடிதொழுதாள்.

144



(இ-ள்.) பார்வதி கங்கைக்குச் சமானமாகிய சேயாறு என்கிற நதியில் காலைக்கடனைமுடித்துக்கொண்டு, பொன்மயமாகிய பல்லக்கிலேறி, வேதகோஷ்ட முழங்கநடந்துபங்கப்படுத்து மும்மலங்களை நீர்க்கிற அடியார்களுடைய பாவமாகிய பஞ்சமலைக்கு நெருப்புமலையாய் விளங்கிய திருவண்ணாமலையைப் பார்த்துச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டாள். எ-று. (கஅ)

வென்றியினாற் கவர்ந்தபொருள் பகிர்ந்திறைவி
பலியாடும் வேனிற் பாலைக்
குன்றமெலாம் வெறியாடன் முல்லையெலாம்
பொதுவர் மின்னார் குரவையாடன்
மன்றல்கம ழிந்திரற்கு விழாவெடுத்துக்
கொண்டாடன் மருத வேலி
முன்றிலெலாஞ் சினச்சுறவு முன்னுணக்கி
யணக்காடு முந்நீர்க் கானல்.

(இ-ள்.) வல்லமையினாலே பாலைநிலத்தார் வழிச்செல்வோரை அடித்துப்பறித்த பொருளைப் பங்கிட்டு அந்த நிலத்திலிருக்கிறதுர்க்கைக்குப் பலிபோடுவார்கள்; மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தில் இருப்பவர்கள் ஆடுபலிகொடுக்கிற பூசைபோடுவார்கள்; முல்லை நிலத்தில் இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள்; கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உற்சவஞ்செய்வார்கள்; முற்றங்களில் சுறுமீன்களைக்காயப்போடுகின்ற கடலருகாகியநெய்தநிலத்தி லிருக்கின்றவர்கள் வருணனுக்குத் திருவிழாச் செய்வார்கள், எ-று. (கக)

சோதிபெறு காருக மறையவம்பு
சொரிகையினாற் றூய்மை யாய
மாதரையெ லாங்கலந்த மகிழ்ச்சியினாற்
பொன்கலந்து மருவு நீராற்

போதவரி சனங் களையப்
பெருகுதலான் மதுவுடையப் பொருதலாலே
சீதரனே நிகராகத் திருநதிநாற்
றிசைகளெலாஞ் சிறந்த தன்றே.

(இ-ள்.) திருநதி ஒளிபொருந்திய துதிக்கையையுடையயானைகள் மறையச் சலத்தைப் பெருக்கி வருதலாலும், பரிசுத்தமாகிய பெரிய பூமியெல்லாம் பரவிய சந்தோஷத்தினாலும், பொற்பொடிகளையுந் திரட்டிக்கொண்டு வருதலாலும், மஞ்சள் பொடிகளையப் பெருகின படியாலும், தேன்கூடுடைந்து மோதலினாலும் என்று நதிக்குப்பொருள்கொண்டு (சிலேடை வகையால்) கானுடையதேகமறையப் பாணங்களைச் சொரிதலாலும், அம்மைபொருந்தியகோபிகாஸ்திரிகளைச் சேர்ந்திருந்த விருப்பத்தினாலும் இலக்குமியைச்சேர்ந்திருக்கிறதினாலும், வைஷ்ணவர் உருசுத்தயைசெய்தலாலும், மதுவென்கிற அசுரன்சாயுத்தஞ் செய்தாலும், விஷ்ணுவுக்குச் சமானமாக நாலு திக்கிலுஞ் சிறந்தது. எ-று.

இது நதிக்கும் திருமாலுக்கும் செம்மொழிச் சிலேடையணி என்க. (௪௦)

[இதுமுத லாறுபாடல் வயற்சிறப்பு.]

மேவுபுனல் பாக்தொழுகக் குளிர்ந்துமயிர்
பொடித்தனபோல் விதத்திற் றோன்றிக்
காவிலுறை பசுங்கிளியின் சிறகெனவே
பசந்துதொன்னைடக் கதிராய் முற்றிக்
கூவுகுல வாரணத்தின் களம்போல
நிமிர்ந்தெழுந்து குறைவில் சாலி
பாவையுமை தவம்புரியுந் தலமிதெனப்
பணிந்தனபோற் படிந்த மாதோ.



(இ-ள்.) அந்நதியில் வந்த நீர்பாய்ந்து ஒழுகுகிறபடியினால் குளிர்ந்த பூமிதேவியினுடைய தேகத்தின் மயிர்க்குச் செறிந்ததுபோல் குறைவில்லாத நெற்பயிர்களுண்டாகத் தோப்புகளில் வாசஞ்செய்கிற பச்சைக்கிளிகளின் சிறகுபோல பச்சைநிறத்தையடைந்து தொண்டைக் கதிராய்முற்றிக் கூவுகின்ற கோழிக்கழுத்துப்போல நிமிர்ந்து பார்வதி தவஞ்செய்கிற தலம் இதுவென்று வணங்கினதுபோல வளைந்து இடக்கின்றன. எ-று. (௪௧)

சந்ததமு மேருழுவர் பதம்பார்த்தங்
கரிந்தவரி தடுத்து வாரி
யிந்திரனு ருலகினொடு போர்செய்வா
னெழுமலையா மென்னப் போர்செய்
தந்தரமே சுற்றிரவி புரவிகள்போற்
கடாவிடுத்தே யாற்றித் தூற்றி
மந்தரமா மெனக்குவித்து வழங்குநினுந்
தொலையாநென் மருத வேலி.

(இ-ள்.) எப்பொழுதும் உழுவோர்கள் பதம்பார்த்து அறுத்து அரிகளைச் சுமையாகவாரித் தேவேந்திர னுலகத்தோடு சண்டை செய்ய எழுந்த மலையென்று சொல்லும்படியாகப் போர்போட்டு ஆகாயவழியாக வருகிற சூரியனுடைய குதிரைகள்போலும் கடாக்களைவிட்டு அடித்து வைக்கோலைத் தூற்றி மந்தரகிரிபோலக்குவியல் செய்து எல்லாமனிதர்களுக்குங் கொடுத்தாலும் நெல் குறையாது மருதநிலத்தில். எ-று. (௪௨)

கயலினமென் றுழத்தியர்தங் கண்ணிழலைக்
கண்டுகருங் கயல்வந் தேறு
மயலிலிவர் கொடும்புருவ நிழலினைக்கண்
டேசிலையென் றஞ்சி மீளு

மயலுதவு மாவதனந் தாமரைப்போ
தெனமருவி வண்டு சேரு
மியலுமவர் நாசிநிழல் சண்பகப்போ
தெனவெருவி யிரியல் போகும்.

(இ-ள்.) வயலிற் களையெடுக்கிற பள்ளத்திகளுடையகண்ணிழலைக்கண்டு சேற்கண்டைகள் நம்மினமென்று வந்துசேரும். பின்பு அருகில் அவர்களுடைய புருவ நிழலைப்பார்த்து வில்லென்று பயப்பட்டோடும், ஆசையைக்கொடுக்கிற அவர்களுடைய முகத்தைத்தாமரைப்பூவென்று நினைத்து வண்டுகள் வந்துசேரும், அதன்பின்பு அவர்களுடைய நாசியினிழலைப்பார்த்துச் சண்பகப்பூவென்று ஓடிப்போகும். எ-று. (சங)

பெரும்பழனத் துழத்தியர்தங் கணைக்காலை
வாராலெனப்போய்ப் பிடித்து மள்ளர்
இரும்பவுமங் கவர்புறங்கால் கமடமெனப்
பிடிமருதத் திணைக டோறும்
குரும்பையெனு முலைச்சியர்கண் முகத்தினுக்கும்
விழியினுக்குங் குலைந்தோ மென்று
சுரும்பினுடன் கலுழ்வனபோற் றாமரையுங்
குவளையுந்தேன் சொரியுந் தானே.

(இ-ள்.) பெரியவயல்களிற் களைபிடுங்குகிற உழத்திகளுடைய கணைக்காலைவரால் மீனென்று மள்ளர்பிடித்து வெட்கத்தையடைந்திமறுபடியும் அப்பெண்களுடைய புறங்காலை ஆமையென்று பிடிக்குமருதநிலந்தோறும் தென்னங் குறும்பைப்போன்ற முலைகளையுடையபெண்கள் முகத்திற்கும் கண்ணுக்குந் தோற்றுப்போனேமென்று வண்டுடனே சொல்லி யழுகிறதுபோல் தாமரைப்பூவும் நீலோற்பலமும் தேனைச்சொரியும். எ-று. (சச)



## வேறு.

கிழலையுஞ் சுழிக்கு மேதி நெடும்புனல் குடைய வன்ன
மழலைவண் டானத் தோடு மருதவண் டானத் தோடு
மழலவிர் மணிப்பூண் மள்ள ரரிகிணைக் கிசைய வூதுங்
குழலிசை யறுகான் மாதர் குழலிசை யறுகாற்கூட்டம்.

(இ-ள்.) எருமை நீரிலே போய் விழுந்துகலக்க அன்னம் இளமையாகிய நாரையுடனே மருதநிலத்தில் வளம்பொருந்திய தானத்தையுடைய சோலையில் ஓடும்; பிரகாசம்பொருந்திய இரத்தினாபரணங்களையுடைய மள்ளர்கள் அடிக்கிற அரிகிணையென்னும் வாத்தியத்திற்கு இசையும்படியாக ஊதுகின்ற புள்ளாங்குழலிசை இல்லாதபோது பெண்களுடைய கூந்தலிற்பொருந்திய வண்டுகள் இசையும்படியாகவூதும். எ-று. (சரு)

மூசுவண் டினங்க ளெல்லா முடிந்தசங் கிலிகளாகக்
காசுநெற் கதிர்க ளெல்லாங் கன்னசா மரைகள் காட்டத்
தேசுவாய்க் கவளம் பெற்றுத் தேறுகட் பாகைச் சிந்தி
வாசவன் களிறு போல மருதம்வீற் றிருந்த மாதோ.

(இ-ள்.) ஒழுங்காய் மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுக்கூட்டங்கள் சங்கிலியாகவும், இரத்தினம்போலும் நெற்கதிர்கள் சாமரைபோன்றகாதாகவும் பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்று பருவங்கொண்டதேறுகிய அமிர்தத்தைச்சிந்தி, தேவேந்திரனேறுகிற அயிராவதமென்னும் யானைபோல மருதநிலம் வீற்றிருந்தது. யானையானது தன் அழகிய வாயினாலே கவளம்பெற்றுத் தேறித் தன் கண்ணிருக்கின்ற பாகனைத்தள்ளிக் கொல்லுதலால் 'தேசுவாய்க்கவளம் பெற்றுத் தேறுகட்பாகைச் சிந்தி வாசவன் களிறுபோல மருதம்' என்று சிலேடையாகக் கூறினார். எ-று. (சசு)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

பண்ணார் கமலப் பழனப் பதிநீங்கி
மண்ணோர் போற்றும் வடவீ தியிற்குறுகி
யண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றுதொழ
விண்ணார் கொடிநெடுந்தேர் வீதிகளின் மேவினாள்.

(இ-ள்.) வண்டுகளிசைபாடுகின்ற தாமரை புட்பங்களுடைய மருதநிலத் தூரைவிட்டு நீங்கிபூலோகத்தார்வணங்கும் வடக்குவீதியிலெழுந்தருளி அருணாசலேசருடைய பாதார விந்தத்தைப் போய் வணங்க ஆகாயத்தையளாவிய கொடிகளையுடைய தேர்களிருக்குங் கிழக்கு வீதியில் வந்தாள் பார்வதி. எ-று. (௪௭)

கலி விருத்தம்.

நச்சு கோபுரத் துச்சிமே விலோர்
வச்சி ரத்தினான் மதியின் மாசுபோம்
வச்ச மாமணிச் செம்மை யாலினன்
பச்சை மாவெலாம் பவள மாகுமே.

(இ-ள்.) யாவரும் விரும்பப்பட்ட கோபுரத்தின் சிகரத்தினருகில் சந்திரன் வரும்போது, அக்கோபுரத்தி லிழைக்கப்பட்டிருக்கிற ஒப்பற்ற வச்சிரங்களின்னொளியினாலே தனது களங்கத்தைநீக்குவான் இன்னும் அக்கோபுரத்தி லிழைத்திராநின்ற மாணிக்கங்களுடைய சிவந்தவொளியினாலே அதனருகில் வரும்போது சூரியன் இரதத்திற் கட்டிய பச்சைக் குதிரைகளேழும் பவளக் குதிரைகளாகத் தோன்றும். எ-று. (௪௮)

வேற்று மேருநேர் மேடை மீதினும்
போற்று கார்மதிற் புரிசை மீதினும்
தோற்று நீலமா மணியின் சோதியா
லேற்ற வானதி யமுனை யானதே.



(இ-ள்.) வேறுவேறாகி மேருவையொத்த மேடைகள் மேலும், மேகங்கள் சஞ்சரிக்கிற மதில்கள்மேலும், இழைத்திருக்கும் நீலரத்தினத்தின் பிரகாசத்தினால் ஆகாயத்திலிருக்கும் கங்கை யமுனைபோல் கறுப்புநிறமடைந்தது. எ-று. (௪௯)

பரவை யாமெனப் பணைமு ழங்கவே
யரிவை மாதரா ராட ரங்கின்மேல்
விரவு பச்சையின் கதிரை வெய்யவன்
புரவி கௌவிடும் புல்லென் றுன்னியே.

(இ-ள்.) சமுத்திரம்போல வாத்தியங்கள் முழங்கப் பெண்கள் நாட்டியஞ் செய்கின்ற மேலுப்பரிகையில் இழைத்திருக்கும் பச்சைரத்தினங்களுடைய கிரணங்களைப் புல்லென்று நினைத்துச் சூரியன் இரதத்திற் கட்டிய பச்சைக்குதிரைகளேழுங் கௌவும். எ-று. (௫௦)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

அத்தகைய வீதி கடந்துமணி யாலயஞ்சேர்ந்
துத்தமனை யென்னையா ளுடையானைச் சோணகிரி
வித்தகனைக் கண்டு பணிந்துருகி மீண்டுபல
சத்திகள் தம்மோடு தலைச்சுரத்தை மேவினாள்.

(இ-ள்.) அப்படிப்பட்ட தன்மையையுடைய வீதியைத்தாண்டி அழகுள்ள கோயிலுக்குட்போய் உத்தமரை என்னை யாட்கொண்டவரை அருணாசலத்தி லிருக்கின்ற ஞானசொரூபரைத்தரிசித்து நமஸ்கரித்து உருக்கத்தை யடைந்து திரும்பிப் பலசத்திகளுடனே தலைச்சுரமென்கிற மலைச்சாரலை யடைந்தாள் அம்மை. எ-று. (௫௧)

ஊசியிலோர் கால்விரலை யூன்றியொரு கான்மடித்து
நாசிமிசை விழியை நாட்டி யழன் மூட்டித்
தேசினமு துருக்கித் தெள்ளமுதை யுண்டுதவக்
கோசிகனைப் போன்முயல்வார் * கோடான கோடியே.

* கோடானகோடி யென்பது கிராமிய வழக்கச் சொல்.

(இ-ள்.) ஊசியிலே ஒருகாலின் விரலை யூன்றிக்கொண்டு, ஒரு காலைமடித்து மூக்குநுனியிலே கண்களைச் சேர்த்துப் பஞ்சாக்கினி யை வளர்த்துப் பிரகாசமான அமிர்த தாரணைசெய்து பிரமரந்திரத் தின் வழியாய்வருகிற அமிர்தத்தைச் சாப்பிட்டு விசுவாமித்திரன் போலத் தவஞ்செய்வார் அனேகங் கோடிபேர். எ-று. (௫௨)

நாடுமல மூன்றகற்றி நல்வினையுந் தீவினையுஞ்
சாடிமன மிறந்து தானிழந்து தன்மயமாய்
வீடுபெற விரும்பி வேட்கைபிறி தில்லாமற்
கூடுசிவ ஞானியர்கள் கோடான கோடியே.

(இ-ள்.) ஆணவம், காமியம், மாயையென்கிற மும்மலங்களையும் நீக்கி, நல்வினைதீவினை யொப்புவந்து மனமென்பது இறந்து தற் போதங்கெட்டு, உலகம் சிவசொரூபமாய் மோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றோராசையுமின்றிச் சிவஞானம் பெற்ற ஞானி கள் வெகுகோடிபேர்கள் அம்மலைச்சாரலில் இருப்பார்கள். எ-று.()

தொண்டருட னாகமங்கள் சொன்னவிதி முறையைத்
தண்டி முடிவு சவுராதி யாய்ப்பூசித்
தண்டர்பிரா னஞ்செழுத்தை யோதியக மகிழ்ந்து
கொண்ட கிரியையினர் கோடான கோடியே.

(இ-ள்.) அடியார்களோடு ஆகமங்கள் சொன்ன விதிமுறைப் படி சூரியன்முதல் சண்டேசுரர் அந்தமாகப் பூசைசெய்து தேவர் களுக்கெல்லாம் முதல்வனான சிவபிரானுடைய பஞ்சாக்கரமந்திரத் தை யோதிமனமகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர்கள் கோடான கோடி. எ-று. (௫

நேரு மியம நியமா தனவகையும்
பேர்பிரா ணாயாமம் பிரத்தியா காரமொடு



தாரணைதி யான சமாதிவகை தன்னிலுமெய்
கூடுமுயல் யோகியர்கள் கோடான கோடியே.

(இ-ள்.) இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என்று சொல்லப்பட்ட அஷ்டா ங்கயோகங்களின் வகைகளை யறிந்து அவைகளைத்தேக சிரமப்பட்டு முயல்கின்ற யோகியர்கள் அனேககோடிபேர்கள். எ-று. (௫௫)

மாதவர்க ளின்னசெயல் செய்யும் வகைபார்த்துச்
சூதவனஞ் சூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த
சீத வருவிகளும் பார்த்துச் சிறப்புற்றுக்
கோதமனா ராசிரமந் தன்னிற் குறுகினாள்.

(இ-ள்.) மகத்தாகிய தவத்தினையுடையோர்கள் செய்யும்செய் கையைப்பார்த்து மாந்தோப்புச் சூழ்ந்தசுனையுஞ் சுனைசூழ்ந்தசீதள மான அருவிகளையும்பார்த்துச் சிறப்பையடைந்து அவ்விடத்தில் இருக்கிறகௌதமருடைய ஆச்சிரமத்தில் அம்மன்சேர்ந்தாள். எ-று.

அந்த விடத்துமையாள் செல்ல வகலிகையு
மைந்தனும்வந் தேத்தினார் வாழ்த்திமறைக் கோதமனார்
முந்து முனி யெவ்விடத்தே யென்றாள் முனிபுதல்வன்
தந்தைமலர் தருப்பைக் கெய்தியதுஞ் சாற்றினான்.

(இ-ள்.) அக்கௌதமருடைய இடத்திற்கு அம்மைபோனவுட னே, அவரது பெண்சாதி அகலிகையும் புத்திரராகிய சதானந்தரும் வந்துபணிந்தார்கள்; அம்மை ஆசீர்வதித்து வேதங்களை யுணர்ந்த முதன்மையான கௌதமரிஷி எங்கே யிருக்கிறாரென்று கேட்க, சதானந்தர் புட்பம்தருப்பைகொண்டு வருகிறதற்குப்போனாரென்று சொன்னார். எ-று. (௫௭)

பின்னு மவனுரைப்பான் பேதைமையேன் புன்குடிலில்
கன்ன லமுதே கணப்போ திருந்தருளி
லன்னவனைக் கொணர்வே னென்றே யடிதொழுது
தன்னை யளித்தவன்பாற் சென்றான் சதானந்தன்.

(இ-ள்.) மறுபடியும் பார்வதியைப்பார்த்து கருப்பஞ்சாறுபோன்ற பார்வதியம்மையே! அறியாமையுடைய என்குடிசைவீட்டில் ஆணப்போது இருந்தால், என் தகப்பனாரைக் கொண்டுவந்துசேருகிறேனென்றுபாதங்களைத்தொழுது தன்னைப்பெற்றகௌதமரிடத்திற்குப்போனார் சதானந்தர். எ-று. (௩௮)

இங்கிவன் செல்போதி லிளந்தருப்பை கொய்துமுனி
புங்கவர்கள் சூழ்ந்து வருமுனிவன் பூத்தலர்ந்து
துங்கவனங் கற்பகம்போற் றோன்றுதலா லிந்தவனந்
தங்கள்வன மல்லவென்று சங்கையுற்று நோக்கினான்.

(இ-ள்.) சதானந்தர்போகிறபோது, இளமையாகிய தருப்பைக்கொய்து அனேக முனிவர்கள் சூழக் கௌதமர் வருகிறதற்கு முன்னே இவ்விடத்தில் எல்லாவிருக்ஷங்களும் புஷ்பித்துக் கற்பக விருக்ஷம்போலக் காணுகிறபடியால் நம்முடையவனமல்லவே! இது யாருடையதென்று சந்தேகப்பட்டுப் பார்த்தார். எ-று. (௩

இத்தலத்தில் வந்தவரா ரென்றுரைத்து மாதவற்குப்
பத்துருவந் தந்த முனியும் பராசரனு
மத்திரியு மப்புதுமை யாராயு மெல்லையிற்றன்
புத்திரனைக் கண்டுவா வென்ன புகலென்றான்.

(இ-ள்.) இவ்விடத்தில்வந்த பெரியோர்கள்யாரென்றுவிஷ்ணுவுக்குப் பத்துத்தரம்பிறக்கச் சாபங்கொடுத்த பிருகுரிஷியும், பராசரும், அத்திரியும் அப்புதுமை விசாரிக்குமிடத்தில் தம்முடையபிள்ளைசதானந்தரைக்கண்டு இவ்விடத்திலுண்டாகிய விசேஷம் என்னவென்று கேட்டார் கௌதமர். எ-று. (௪௦)

கலி விருத்தம்.

தாதையிவை கேளிறைவர் தங்களை யளிக்குஞ்
சோதியில ணைப்தின ளெனத்தொழுது சொன்னா
னாதமறை தேடுமவ ளங்குடிலின் மேவற்
கேதுதவ மேதுதவ மேதுதவ மென்றான்.

(இ-ள்.) சதானந்தர், தன் தகப்பனாராகிய கௌதமரைப்பார்த்து ஐயா! பிரமன்முதலாகிய ஐவரையுந் தன்னிடத்திலுண்டாக்கிய தேசோமயமாகிய பராசத்தி இவ்விடத்தில் வந்திருக்கிறாளென்று வணங்கிச்சொல்ல, நாதசொரூபமாகிய வேதங்கள் தேடுதற்கரிய அம்மை நம்முடைய குடிசையில்வர என்னதவம்! என்னதவம்! என்னதவஞ்செய்தோமென்றார் கௌதமர். எ-று. (௪௧)

ஓடின னணைத்துமக னுச்சியை முகந்தா
னாடினன் மகிழ்ச்சியெனு மாழ்கடல் புகுந்தான்
பாடின னெடுத்தகுசை பாரிசை யெறிந்தான்
வீடினது நந்தம்வினை வேரினுட னென்றான்.

(இ-ள்.) கௌதமர் இவ்வார்த்தையைச்சொன்ன சதானந்தரைக் கட்டியணைத்து உச்சிமுகந்து ஓடினார்; திருக்கூத்தாடினார்; சந்தோஷமென்கிற சமுத்திரத்திலாழ்ந்தார்; பாடினார்; தருப்பையைப் பூமியிலேயெறிந்துவிட்டார்; என்னுடையபாவம் வேருடனேகெட்டுப் போயிற்றென்றுசொன்னார். எ-று. (௪௨)

அத்திரி முதற்றலைமை யந்தணர்க ளெல்லாங்
கைத்தல மெடுத்தனர் நடித்தனர் களிப்பால்

விந்தகி யிருக்குமிட மேவியெதிர் கண்டார்
பத்திவலை யிற்படு பதங்களில் விழுந்தார்.

(இ-ள்.) அத்திரி ரிஷிமுதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டு கைகளையுந் தலைமேல் வைத்துக் கூத்தாடினார்கள்; சந்தோஷத்துடனே பார்வதியிருக்கிற இடத்தை யடைந்து எதிரே கண்டு பத்தியாகிய வலையில் அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள். எ-று. (௬௫)

நின்னிலைமை கன்னியிறை நீள்பிரம சாரி
யென்னுமறை யன்றுமுத லின்றுவரை யெல்லா
முன்னிடை யுதித்துல குயிர்த்தொகைக ளெல்லா
மன்னையெனு முன்பெருமை யாரறிய வல்லார்.

(இ-ள்.) தாயே! நீயோ கன்னிகை, சுவாமியோ நித்தியபிரமசாரி யென்று சிருஷ்டிதொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாஞ்சொல்லிக் கொண்டிருக்கின்றன; அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிலிருக்கின்ற எல்லாவுயிர்களுந் தோன்றித் தாயென்றுசொல்லும், அப்படிப்பட்ட உன் பெருமையை யாரறியப் போகிறார்கள். எ-று. (௬௬)

நித்தனை முதற்றருவை நித்தன் றிடத்தே
சத்தியென நீவருவை சத்திசிவ மென்றே
இத்தகைமை கொண்டுயிர்கள் யாவையு மளிப்பா
யத்துவித மாகுமுனை யாரறிய வல்லார்.

(இ-ள்.) நித்தியமாகவிருக்கிற சிவபிரானை முதலில் உண்டாக்குவாய்! அச்சிவனிடத்திலே சத்தியாக வருவாய்! சத்தி சிவமென்கிற தன்மையைக்கொண்டு உயிர்களையெல்லாம் பெறுவாய்! அத்துவித சொரூபமாகிய உன்னையாரறியப்போகிறார்கள். எ-று. (௬௭)



மெய்ப்பொருண் மகேசனரன் வேதனரி யானால்
மைப்பரும கேசியுமை வாணிதிரு வாவை
யிப்படியு மன்றியவ னெப்படி யெடுத்தா
னப்படியு மாவையுனை யாரறிய வல்லார்.

(இ-ள்.) பரமசிவன், மகேசுரர், உருத்திரர், பிரமன், விஷ்ணு ஆனால், நீ மகேசுவரி, உருத்திரி, சரஸ்வதி, இலக்குமியாகிய சத்திகளாய் இப்படியுமல்லாமல் அச்சிவபிரான் எப்படிப்பட்ட உருவங்கொண்டனரோ அதற்குத்தகுந்த உருவங்கொள்வாய்! உன்பெருமையை ஆரறியவல்லவர்கள். எ-று. (௬௮)

நெஞ்சுருகி மாதவர்க ணின்றிவை புகழ்ந்தார்
வஞ்சியிடை கோதமனும் வந்தனன் வரும்போ
தஞ்சலிபு ரிந்தன னதற்குமுன மேயின்
கஞ்சமல ரென்னவிரு கால்களில் விழுந்தான்.

(இ-ள்.) மாதவத்தையுடைய ரிஷிகளெல்லாம் நெஞ்சமுருகி நின்று இப்படி தோத்திரஞ்செய்தார்கள். அச்சமயத்தில் பார்வதி சமீபத்தில் கௌதமர் வரும்போதே இரண்டுகைகளையுஞ் சிரத்தில் வைத்துக் கூப்பித் தாமரை மலரையொத்த அம்மையின் இரண்டு பாதத்திலும் நமஸ்கரித்தார். எ-று. (௬௯)

அன்பினுயர் கோதமனு மன்னையை வணங்கி
யின்புற வுரைப்பனய னெண்டிசை புரப்போர்
தன்சிர மிதிக்கரிய தாளிணைக ளின்றென்
புன்குடின் மிதிக்கவென புண்ணிய முடித்தேன்.

(இ-ள்.) பத்தியினாலே உயர்ந்த கௌதமரிஷியும் பார்வதியம்மையை வணங்கிச்சொல்வான்; பிரமன் அஷ்டதிக்குப்பாலகர்சிரத்

திலேகூட வைத்தற்கு அருமையான பாதமிரண்டும் அடியேனுடைய புன்மைபொருந்திய சிறுவீட்டிலமிதிக்க என்ன புண்ணியஞ்செய்தேன். எ-று. (௬௮)

இந்தமொழி சொற்றனு மிளங்கொடியும் வேலன்
றந்தியிடை சென்றிடுவ னங்கது தவிர்ந்தால்
சிந்தைமகி ழுன்னிடையில் வந்துகுறை தீர்வேன்
மைந்தவென வோதினன் மறுத்துமிவை சொல்வாள்.

(இ-ள்.) இவ்வார்த்தையைச்சொன்ன அளவில், இளமையாகிய கொடிபோன்ற அம்மையும் பிள்ளையாகிய கௌதமனே? எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணியனிடத்திலும் கணபதியினிடத்திலும் சென்று தீர்த்துக்கொள்வேன்; அவ்விடம் விட்டால் என்மேல் அன்புவைத்த உன்னிடத்தில் வந்து தீர்த்துக் கொள்வேனென்று சொல்லி மறுபடியுஞ் சொல்வாள். எ-று. (௬௯)

நாயகன் மொழிந்திட நடந்தபடி யெல்லாம்
பாயிர மெனும்படி பகர்ந்தன ளவர்க்குந்
தாயிவை மொழிந்தன ளினிற்சுத மகற்கன்
றாயிரம் விழித்திர ளளித்தமுனி சொல்வான்.

(இ-ள்.) பரமசிவன் சொன்னபடி பூமியில்வந்து தான் நடந்த சமாச்சாரமெல்லாம் பாயிரத்தோடுங்கூடிய நூல்போல் முறையாக விரித்து எவருக்குந்தாயாகிய பார்வதி சொன்னபோது, முற்காலத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண் ணுண்டாகச்செய்த கௌதமர் சொல்வார். எ-று. (௭௦)

இத்தல முதற்றல மிதன்பெயர் தலேச்சு
முத்தம மிதிற்றரும மொன்றுபல வாகும்
மெய்த்தவ மியற்றதனில் வெள்விடையின் மேல்வந்
தத்தனு மிடப்புற மளித்தருளு மென்றான்.



(இ-ள்.) இத்தலம் முதன்மையான தலம்; இதனுடையபேர் தலேச்சுரம்; இதுமிகவு முத்தமமானது, இஃதில் ஒருபுண்ணியத்தைச்செய்தால் ஒன்று பலவாய்விருத்தியாகும்; இதிலிருந்துகொண்டு நீ மெய்மையாகிய தவஞ்செய்தால், வெண்மையுள்ள ரிஷபவாகனத்தின்மேலெழுந்தருளிய பரமசிவன் உனக்கு இடப்பாகங்கொடுப்பாரென்றார் கௌதமர். எ-று. (௭௧)

மாலயன் வசுக்கண்மக வான்முனிக ணத்தோர்
சாலைகள் சமைத்ததில் தனித்தவ முடித்தார்
காலமிட நன்றுசெயல் கைப்பலமி தென்றான்
மூலமுதல் வல்லியு முடிப்பனிது வென்றாள்.

(இ-ள்.) அம்மையே? விட்டுணு, பிரமன், அஷ்டவசுக்கள் தேவேந்திரன் அனேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துகொண்டு ஒப்பற்ற தவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக்கொண்டார்கள்; நீ வந்தகாலமு மிடமு நன்மையாகும், இவ்விடத்தில் நீ தவஞ்செய்தால் கைப்பலமாகி முடியுமென்று கௌதமர் சொல்ல, எல்லாப் பொருள்களுக்கு மூலமாகிய அம்மையும் தவஞ்செய்து என்கருத்தை முடித்துக் கொள்ளுகிறேனென்னுள். எ-று. (௭௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கோதமனே முதலாய முனிவர்க் கெல்லாங்
குளிர்ந்தமொழி பகர்ந்துவிடை கொடுத்துச் சோண
பூதரமா மதன்குணபாற் பன்ன சாலை
புதிதமைப்பித் தகமகிழ்ந்து புறம்பு காக்க
மாதரெழு வரையமைத்து நாலு பாலின்
வாயிலையென் வயிரவர்கண் மகிழ்ந்து காக்க
வாதரவி னிறுத்தி மைந்தர் மருங்குகாக்க
வந்தரியுட் புறங்காக்க வமைத்தாண் மன்றோ.

(இ-ள்.) கௌதமர் முதலான முனிவர்களுக்கெல்லாம் பிரியவசனஞ்சொல்லி உத்தரவுகொடுத்து, அருணாசலத்துக்குக் கிழக்குப்பக்

த்தில் பர்ன்னசாலை புதிதாகச் செய்வித்து, சந்தமாதர்களைப்புறக் காவலாக வைத்து, நான்குவாயில்களையும் எட்டுவைரவர்கள் காக்கவும், விநாயகர் சுப்பிரமணியர் தன் இரண்டுபக்கமுங் காக்கவும், துர்க்கை உட்பக்கங்காக்கவுஞ் செய்தாள் பார்வதி. எ-று. (எக)

கொந்தளகஞ் சடைபிடித்து விரித்துப் பொற்றோட்
குழைகழுத்திற் கண்டிகையின் குப்பை பூட்டி
யுந்துமர வுரிநிகர்பட் டாடை நீக்கி
யுரித்தமர வுரிசாத்தி யுத்தூளத்தால்
விந்தைதிரு நீறணிந்து கனற்குட் காய்ந்து
விளங்குமூசியி னொருகால் விரலை யூன்றி
அந்திபக லிறைபதத்தின் மனத்தை யூன்றி
யரியபெருந் தவம்புரிந்தா ளகில மீன்றாள்.

(இ-ள்.) புட்பங்களைத் தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத் தோள் கழுத்து காதுகளில் உருத்திராக்ஷ மாலைகளைத்தரித்து, ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கிற பட்டாடை யுடுப்பது விட்டு மரவுரிதரித்து, செயத்தைக்கொடுக்கின்ற விபூதியைச்சருவாங்கமுந் தரித்து நெருப்பில்காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியில் ஒரு காற்பெருவிரலையூன்றி, இராப்பகலாக மனத்திலே பரமசிவத்தைத் தியானஞ்செய்து, அரிதாகிய பெரியதவத்தைச் செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்வதி அம்மன். எ-று. (எஉ)

இளைத்தகொடி மருங்குவளைந் தெரியி னுப்ப
ணினியதவ மியற்றுதல் கண்டிளைத்து வாடிக்
களைத்துமனந் துடித்துவிழி புதைத்துவாணி
கண்ணீரின் மூழ்கினின்றாள் கமலத் தானு
முளைத்துமனந் தளர்ந்தழுது விழுந்தான் மற்றை
யுயிர்களெலாங் கரைந்துகரைந் துருகா நின்ற
வளைத்துவளைத் துரைப்ப தென்றாய் வருந்து மானால்
வயிற்றிலுள்ள கருப்பமெலாம் வருந்தி டாதோ.



(இ-ள்.) மிகவுஞ் சிறிதாகிய கொடிபோன்ற இடை வளைந்து அக்கினி மத்தியில் இனிமையான தவத்தைச் செய்வதைப் பார்த்து, இளைத்து வாட்டமடைந்து களைத்து, மனந்துடித்து, இரண்டு கண்களையு மூடிக்கொண்டு, சரசுவதி கண்ணீரால் முழுகினாள்; இலக்குமியும் மனம் வருந்திச் சஞ்சலப்பட்டு அழுது விழுந்தாள்; மற்றசிவராசிகளெல்லாம் மனங்கரைந்துருகின; நானிதைப் பிரித்துப் பிரித்துச்சொல்வதனால் என்னபயன்! தாயானவள் வருந்துவளாயின் வயிற்றிலுள்ளகருவாகியசீவனெல்லாம் வருத்தத்தையடையாதோ! எ-று,

முன்பனியிற் கருகுபடாக் கமலம் போல
முகந்தோன்றப் பனிக்கயத்துண் மூழ்கி நிற்கும்
பின்பனியி லதிசித விடத்திற் சேரும்
பெருமழைக்குண் மீனென்னப் பேணி நிற்கும்
அன்பனிடம் பெறுமளவு மதுபோல் வேண்டு
மரியதவம் புரிந்தனளவ் விடத்து வேதன்
வன்பணியிற் றுயினெடுமான் முதலாந் தேவர்
மறைபுகுந்த தவச்சாலை மருங்கிற் சார்ந்தார்.

(இ-ள்.) முன்பனிக்காலத்தில் கருகிப்போகாத தாமரைப் பூப்போலமுகமாத்திரந்தெரியக் குளிர்ச்சிபொருந்திய தடாகங்களில்நின்றும், பின்பனிக்காலத்தில் அதிகசீதளம்பொருந்தியஇடத்திலிருந்தும், மழைபெய்கிறபோது அதில் ஒரு மீன்போலச் சஞ்சலப்படாது நின்றும், பரமசிவன் இடப்பாகத்தைப்பெருகிற வரைக்குமதுபோல வேண்டியதவத்தைச்செய்தாள்; அவ்விடத்தில் பிரமனும் வலியசர்ப்பத்தில் நித்திரைசெய்கின்ற விட்டுணு முதலாகிய தேவர்களும் வேதகோஷ்டம் பொருந்திய தவச்சாலையைவந்து அடைந்தாள். எ-று. ()

அந்தரியு மாயவனார் முதலாந் தேவ
ரனைவருக்கு முபசார மளித்து நீங்கள்
வந்தவா வியம்புமென மகிட னாலே
வருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச் சொன்னார்

153



சுந்தரியுங் குமரியுடன் சுட்ரும் வாளாற்
றெடுகளத்தின் மகிடனுரந் தொலேப்பா யென்றாள்
விந்தையது புரிவனெனப் பணிந்தா ளன்னே
விளம்புதல்கண் டகமகிழ்ந்து விடைகொண் டாரே.

(இ-ள்.) பார்வதி, விட்டுணு முதலான தேவர்களெல்லாருக்கு முபசாரஞ்சொல்லி நீங்களிவ்விடத்திற்கு வந்தவகை சொல்லுங்க ளென்றுகேட்க, அவர்கள் மகிடாசுரனால் தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்தவகை விவரமாகச்சொன்னார்கள்; அதற்குப் பார்வதிதுர்க்கையைக் கூப்பிட்டு நீ சத்தியினால் யுத்தகளத்தில் மகிடாசுரன் வல்லமைகெடக் கொன்றுவிடென்று சொன்னாள், அதற்குத் துர்க்கை அப்படியே செய்வேனென்று பணிந்தாள்; தாயாகிய பார்வதி இந்தவார்த்தையைச் சொன்ன அளவில், விட்டுணுமுதலானவர்கள் சந்தோஷத்தை யடைந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டார்கள். எ-று. (எஎ)

கலி விருத்தம்.

கோத மாச்சிர மந்தனிற் கோல்வளே
தீதி லாத்தவஞ் செய்தது செப்பினேன்
மேதி மாமுகற் காய்ந்ததும் வெள்விடைச்
சோதி பாக மடைந்ததுஞ் சொல்லுவேன்.

(இ-ள்.) சத்திதேவி கௌதமருடைய ஆச்சிரமத்திற்குறைவில்லாததவஞ் செய்ததுஞ்சொன்னேன்; பிறகு மகிடாசுரனைக் கொன்றதும், ரிஷபவாகனத்தையுடைய சிவபிரானது இடப்பாகத்தைப் பார்வதி அடைந்ததுஞ் சொல்வேன். எ-று. (எஅ)

நான்காவது

திருக்கண்புதைத்தசருக்கம்.

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ருருசு.



7. பார்வதிதேவியார் தூர்க்கையைக்கொண்டு மகிடாசுரனைச் சம்மாரிக்கச்செய் வித்தபின், பரமசிவன் பார்வதியார் தவத்துக்கிரங்கி இடப்பாகந்தந்து, அர்த்தநா ரீச்சுரரென்னு மியற்பெயருங் குட்டப்பெற்றனர்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

பார்வதியார்

# இடப்பாகம் பெற்ற சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அஞ்சனக் கிரியில் வாழு
மசுரன்று ணர்க்குந் தீர
னஞ்சமே யனையா னந்த
கமனுக்கு நமனாய் வந்தோன்
செஞ்சிகை யெரியைத் தீய்க்கு
திமையா னளகை நா...
விஞ்சையான் வருந்த வுள்ள
வளமெலாங் கவர்ந்த வீரன்.

(இ-ள்.) நீலகிரியில் வாசஞ்செய்து கொண்டிருக்கிற அசுரன் எல்லாரிலும் அதிகபராக்கிரமத்தை யுடையவன், விஷத்தினுக்குச் சமானமானவன், அந்த எமனுக்கும் எமனானவன், சிவப்பாகி மேலே யெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச் சுடத்தகுந்த தீமை யையுடையவன், அளகாபுரியில் குபேரன் தரித்திரத்தை யடைய அங்கேயிருக்கிற வளங்களெல்லாங் கொள்ளையிட்டவன். எ-று. (௧)

தாமரைக் கண்ணன் றாங்கு
மரவினைத் தலைவால் கூட்டி
மாமணிக் கவண்போற் கொள்வன்
வன்னிவா கனத்தை வாங்கி
வேமழற் குஞ்சி மைந்தர்க்
குதவுவன் விமானத் தோடே
சோமனைப் பிடித்துக் கையாற்
பிழிந்தமு தருந்துஞ் சூரன்.

(இ-ள்.) விட்டுணு நித்திரைசெய்கின்ற ஆதிசேடனைத்தலையை யும், வாலையும், ஒருகையினால் சேர்த்துப்பிடித்து கவணாக அந்த விட்டுணுவைக் கல்லாக்கித் தூரத்தில் எறிந்து விளையாடுவான்; அக்கினியைத் தள்ளிவிட்டு அவனேறுகிற ஆட்டை நெருப்பைப் போலச் சிவப்புமயிரையுடைய தன் பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப் பான்; சந்திரனை அவனுடம்பிலிருந்து வருகிற தேவாமிர்தத்தைப் பானம்பண்ணுகிற சூரன். எ-று. (௨)

கரு[illegible]முகவான் வெள்ளைக்
களிற்[illegible]ன்மேற் றிரிவன் பின்னைப்
பரிதிதே ரதனிற் பச்சைப்
பரிசெலப் பவனி போவா



னிருதியைச் சுமக்கு மாளி
யேறுவ னிணத்தின் மூழ்கிக்
குருதிகொப் பளிக்கும் வாளொன்
றெடுத்துயி ரனைத்துங் கொல்வான்.

(இ-ள்.) உயர்வாக நினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள் ளையானையின்மேல் திருவோலக்கம்வருவான்; சூரியனுடைய தேரி லேறிக்கொண்டு பச்சைக் குதிரைகளேழும் நடக்கப் பவனியாகப் போவான்; நிருதியைச் சுமக்கின்ற ஆளியின்மே லேறிக்கொள்ளு வான்; நிணங்களால் மூழ்கப்பட்டு இரத்தங்களைக் கொப்பளிக்கும் ஒருவாளாயுதமெடுத்துச் சருவசீவன்களையும் கொல்வான். எ-று. ()

அன்னவன் மகிட மான வாற்றினா லஞ்சிக் காலத்
தென்னவன் மகிடமேறான் காலினாற் றிரிந்தானென்றா
லென்னவன் கொடுமை நம்மா லியம்பலா மிலங்குஞ் சோதி
மன்னவன் கிரியைச் சாய்த்தான் மீனுக்கா வாரி தூர்த்தான்.

(இ-ள்.) அப்படிப்பட்ட அசுரன் எருமைமாட்டு முகத்தை யு டையவனானபடியினால் தெற்குத்திக்கிலிருக்கின்ற எமன் எருமைக் கடாவிலேறாமற் காலினால் நடந்துதிரிந்தானென்றால் அந்த மகிடா சுரனுடைய கொடுமை நம்மாலெப்படிச் சொல்லக்கூடும்! சோதி சொரூபமாகிய சிவபிரானிருக்கிற கைலாயத்தையுஞ் சாயச்செய் தான்; மீன்வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந் தூர்த்தான். எ-று.

மயனெனுந் தச்சன் செய்த மகிடமா புரத்தி லொன்றா
னயனறு கரிசி நல்க விருக்குநா ளவனுக் காய
பயனுறு நுகர்ச்சி வேண்டி யாயிரம் படைக்கை யாளர்
கயமுதல் விலங்கை நாடி வேட்டையாக் கானிற் சென்றார்.

(இ-ள்.) மயனென்கிற தேவதச்சனால் இரத்தின கசிதமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் அந்த அசுரன், பிரமதேவர் நித்தியம் அறுகும் அக்ஷதையுங்கொடுக்க வாழ்த்துகொண்டிருக்கிற நாளில் அந்தஅசுரன் தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம்பேர்கள்யானைமுதலான மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக்காட்டுக்குப்போனார்கள். எ-று. (ரு)

தானவர் சென்று வஞ்சி தவஞ்செய்கா னகத்தைச் சூழ
வானவர் பணியு மட்ட வயிரவர் தொலைத்தா ராவி
போனவ ரழிந்த வாறும் புரிகுழ றவமுந் தூத
ரானவ ரவுணர் கோவுக் கடிபணிந் தறிவித் தார்கள்.

(இ-ள்.) அப்படி வேட்டை வெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதி தவஞ்செய்துகொண்டிருக்கிற வனத்தைச் சுற்றிக்கொள்ள, அதைக்கண்டு தேவர்கள் பணிகின்ற காவலாக விருந்த அஷ்டபைரவர்களும் அந்த ஆயிரம்பேரையுங் கொன்றார்கள்; அவர்கள் இறந்துபோனதும், அம்மை தவம் பண்ணுகிறதும் தூதர்கள் மகிடாசுரன்பாதத்தை வணங்கித் தெரிவித்தார்கள். எ-று. (சா)

போற்றியவ் கவர்கள் சொல்லப் புகைநகை பிறந்த தங்கி
யூற்றிய விருக ணண்ட கோளமுஞ் சுழன்று தங்கே
நாற்றிசை யின்வேழ நடுங்கிய திமையோர் கூட்டங்
கூற்றமுங் கரந்த தால காலமுங் குளிர்ந்த தன்றே.

(இ-ள்.) தூதர்கள் வணங்கித் தெரிவித்த அளவில் புகையுண்டாகும்படி கோபச் சிரிப்பு முண்டாயின; இரண்டுகண்களும் செருப்புகள் பறக்கவீசின; அண்டகோளமும் திறுகிறென்று சுழன்றது; அஷ்டதிக்கிலிருக்கிற யானைகளும் தலையைத் தொங்கப்போட்டன; தேவர்கூட்டம் நடுக்கத்தையடைந்தது; எமனும் ஒளித்துக்கொண்டான்; ஆலகால விஷமுங் குளிர்ந்தது. எ-று. (எ)



அப்படி மகிடன் சீறு
மளவினி னிரும்ப னென்போன்
செப்பிடு முனது கோபம்
பொறுப்பரோ சிறிய ரென்றே
முப்புடை யிளநீ ரென்னு
முலைச்சிவாழ் வனத்து ளாரைக்
கைப்படை யதனாற் கொல்வே
னெனச்சொலிக் கடிது போனான்.

(இ-ள்.) அப்படி மகிடாசுரன் கோபிக்குமளவில் இரும்பானென்கிறபடைத்தலைவன் அரசனே! உம்முடையகோபத்தை அற்பமானவர்களா பொறுப்பார்கள் என்றுசொல்லி, இளநீர் ஒத்தஸனமுடைய பார்வதி தவஞ்செய்கிறவனத்தி லிருப்போரைக் கையிலிருக்கின்ற வாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்திற் புறப்பட்டுப்போனான். எ-று. (அ)

குடதிசைக் கடலைச் சீறிக்
குணதிசைக் கடல்சென் றென்ன
நெடியதேர் கரிமா சேனை
யெழுந்தன விரும்ப னென்போன்
வடகிரி தனக்குக் கும்ப
மாமுனி மலைக்கு நேரே
இடையொரு கரிய மேரு
வெழுந்தது மென்னச் சென்றான்.

(இ-ள்) மேற்குச் சமுத்திரத்தின்மேற் கோபித்துக் கிழக்குக் கடல் சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும், யா

னைகளும், குதிரைகளும், காலாள்களும் புறப்பட்டதுகள்; நிரும்பாசூரன் மகா மேருவுக்கும் அகத்தியரிருக்கின்ற பொதியமாமலைக்கு மத்தியில் நிறைந்த ஒரு கரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாகப் போனான். எ-று, (௯)

வே று.

எழுந்தவனு மாகதநேர் துரகத
மாயிரம்பூண்ட விரத மேறி
வழிந்தகரி மதக்கடலே யெழுந்ததுக
ளடக்கவுமை வனத்திற் சென்றான்
கொழுந்துவிடுங் கனலனையார் வரவுகண்டு
பலகோடி குன்றம் வீசித்
தழைந்தபடைத் தாக்கணங்கு நோக்கணங்கும்
பொருதெதிரே தடுத்தா ரன்றே.

(இ-ள்.) இப்படி நிரும்பாசூரன் பச்சைக்குதிரை ஆயிரங்கட்டிய தேரிலேறிக்கொண்டு அப்பொழுது எழும்பிய சிறு அணுக்கள் முன் போகின்ற யானைகளின் மதஜலம்சமுத்திரமாகத் தேங்கியிருப்பதை வற்றச்செய்ய, பார்வதிதவஞ்செய்யும் வனத்திற்குப்போனான்; கொழுந்துவிட்டெரியு நெருப்பையொத்த அசுரப்படைகள் அநேகமலைகளைவிட்டெறிய இவர்கள் வருவதுகண்டு அம்மனிடத்திலிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப் போய் எதிரே தடுத்தார்கள். எ-று. (௧௦)

சண்டனுருத் திரன்சோமன் கபாலிநிகர்
சங்காரன்கோ தண்டன் வீத
னெண்டரிய சித்திராங் கதனென்னும்
வயிரவர்க ளிருநால் வோரு



மண்டமுக னுடையநகைத் தானைகளைத்
தொலைத்திட்ட வரிகள் போலக்
கண்டகனுஞ் சாரதியுந் தேருமன்றிச்
சேனையெல்லாங் கணத்திற் சாய்த்தார்.

(இ-ள்.) சண்டன், உருத்திரன், சோமன், கபாலி, தனக்குத் தானே ஒத்தசங்காரன், கோதண்டன், வீதன், சித்திராங்கதன், இவ்வெட்டு வயிரவர்களும் அண்டகோளமுடைபட யானைகளைக்கொல்லுகிற சிங்கங்கள்போலக் கர்ச்சித்து, நிரும்பாசுரனும் அவன்சாரதியும் தேருந் தவிர மற்றச்சேனைகளையெல்லாம் நொடிப்பொழுதில் கொன்றார்கள். எ-று. (௧௧)

அட்டவயி ரவர்படையா லனைத்துநாற்
றனதுபடை யழிதனோக்கி
வட்டநெடுந் தேர்முடுக்கித் தாக்கணங்கின்
முகத்திலெண் ணில் வாளி யோத்தான்
விட்டகணை களைவிலக்கித் தேருருட்டுஞ்
சாரதியை வீழ்த்தி வாளி
தொட்டகரங் களைப்பிடுங்கி யவனுயிரைக்
குடித்தனளச் சூர மாது.

(இ-ள்.) எட்டு வயிரவர்களுடைய ஆயுதங்களினாலும், இரண்டு பெண்களாலும், தன்னுடைய படைமுழுவதும் இறந்துபோவதைப் பார்த்து நிரும்பாசூரன் வட்டமாகிய நெடியதேரை விட்டுக்கொண்டு தாக்கணங்கென்பவளுடைய முகத்தில் கணக்கில்லாத பாணங்களைவிட்டான்; அப்பாணங்களை விலக்கித் தேர்நடத்துகிறசாரதியைக்கொன்று அம்புதொடுத்த கைகளையறுத்து அவனுடைய தலையையும் அறுத்துக் கொன்றாள் அந்தத் தாக்கணங்கு. எ-று. (௧௨)

ஓடினசெங் குருதிநதி யுடலிழந்து
விழுமவுண ருயிர்கள் போல
வாடினவெங் குறைத்தலைக ளனுதினமு
மருந்துகின்ற வலகை போலச்
சூடினர்கள் வயிரவருந் தாக்கணங்கு
நோக்கணங்குந் தும்பை வாகை
வீடினர்க ளவுணரென மகிடமுகற்
குரைத்தனர்போய் விரைந்து தூதர்.

(இ-ள்.) வயிரவர்களாலும் இந்த இரண்டு பெண்களாலும் தேக மறுபட்டுச் சீக்கிரத்தில்போகு மசுரருயிர்போல் இரத்தநதிஓடியது; நித்தியம் மாமிசத்தைத்தின்று கூத்தாடுகிற பேய்போல்கவந்தங்கள் கூத்தாடின; வயிரவர் தாக்கணங்கு நோக்கணங்கும் தும்பை வாகைமாலை சூட்டிக்கொண்டார்கள்; அசுரர்களிறந்துபோனார்களென்று மகிடாசுரனுக்குத் தூதர்கள் சீக்கிரத்தில் போய்சொன்னார்கள். எ-று. (௬௩)

கேட்டளவின் மகிடமுகன் கயிடவன்றன் •
முகநோக்கிக் கிளத்து வானோர்
காட்டிலுறை சிறுபேயுங் கணங்களுநம்
பெரும்படையைக் கடிந்தவென்றால்
நாட்டுநுத லியனரியு மெனக்கினிமேற்
றிறை கொடுக்க நாணுவாரென்
றீட்டிநகை புரிந்தெழுந்தா னேறினா
னயிரங்கரிகு ழிரத மீதில்.

(இ-ள்.) மகிடாசுரன் இவ்வார்த்தையைக்கேட்ட அளவில், தன்னருகிலிருக்குங் கயிடவன்முகத்தைப் பார்த்துச்சொல்லுவான், ஒ



காட்டிற் சஞ்சரிக்கிற சிறியபேய்களும் கணங்களும் நம்முடைய பெரியசேனைகளைக் கொன்றனவென்றால் சிவன், பிரமன், விஷ்ணு, முதலானவர்கள் சொன்னபடி கேட்பார்களோவென்று அதிகமாகிய நகைகொண்டெழுந்திருந்து ஆயிரம் யானைகள் கட்டிய தேரிலேறிக்கொண்டான். எ-று. (௬௪)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

பதினொரு கோடி யானைப்
பலத்தராய் காந்த னீலன்
முதுகரன் குமுதி யண்ட
னீசகன் சண்டன் முண்டன்
மதுகயிட வன்றீக் கண்ணன்
புகைக்கண்ணன் மாலி யென்றுந்
துதிகொளா றிரண்டு பேரும்
தேர்களைத்தூண்டிச் சென்றார்.

(இ-ள்.) மகிடாசுரன் தேரிலேறினவுடனே, பதினொருகோடி யானைப்பலத்தை யுடையவராகிய காந்தன், நீலன், முதுகரன், குமுதி, அண்டன், நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன், மாலியென்றுந் துதிக்கப்பட்ட பன்னிருவரும் தங்கள் தங்கள் இரதங்களை நடத்திக்கொண்டு போனார்கள். எ-று. (௬௫)

கரிமுகத் தவர்நி வாத கவசர்கள் காலகேயர்
பரிமுகத் தவுணர் மேதிப் பணைமுகத் தவர்கள் பற்றி
எரிமுகத் தவுணர் சீறி யெழும்புலி முகத்துக் கள்வ
ரரிமுகத் தவுணர் வெள்ள மாயிரஞ் சென்ற வன்றே.

(இ-ள்.) யானைமுகத்தையுடையவர்கள், நிவாதகவசர்கள், காலகேயர்கள், குதிரைமுகத்தையுடையவர்கள், எருமை முகத்தையு

டையவர்கள், நெருப்பெரிந்து கொண்டிருக்கிற முகத்தையுடைய வர்கள், புலிமுகத்தையுடையவர்கள், சிங்கமுகத்தை யுடையவர்க ளாகிய அசுரர்கூடிய ஆயிரம் வெள்ளம் நடந்தாகள். எ-று. (கக)

பாய்பரி யதனிற் பாதி பரிகளிற் கரிகள் பாதி
காய்கரி யதனிற் பாதி படிம்பரிக் கொடிஞ்சிதேர் செல்லப்
பேய்களுங் கொடிக ளாடப் பிணங்கிவெண் கொடிக ளாட
வேய்களப் பறைக ளார்ப்பக் குறுகினன் விந்தை கானில்.

(இ-ள்.) இப்படி ஆயிரம்வெள்ளக் காலாட்கள் புறப்பட்டவு டனே, ஐந்நூறுவெள்ளங் குதிரையும், இருநூற்றைம்பதுவெள்ளம் யானையும், நூற்றிருபத்தைந்து வெள்ளம் தேரும்நடக்கப் பேய்க ளும் சாக்ஷிக்கூட்டமும் விருந்தகப்படுமென்று களித்துக்கூத்தாட வெள்ளைக் கொடிகளாடப் புள்ளாங்குழல் பேரிகை இவைமுதலான வாத்தியமுழங்க மகிடாசுரன் அம்மை இருக்கிறகாட்டில் வந்துசேர் ந்தான். எ-று. (கஎ)

அடலவன் வரக்கண் டஞ்சி
யடைந்துமைக் கபய மென்று
படருறு முனிவர் கூற
வுமையவள் பயங்க டீர்த்து
விடலுட னருகு நின்ற
விந்தையை விரும்பி நோக்கிக்
கடகங்கொண் டடுவா யென்றாள்
விடைகொடு பெயர்ந்தாள் கன்னி.

(இ-ள்.) வல்லமை பொருந்திய மகிடாசுரன் வருவதைப் பார்த் து பயப்பட்டு ஓடிவந்து பார்வதிக்கு அபயமென்று முனிவர்கள் மு றையிட்டுச்சொல்ல, அம்மை அவர்களுடைய பயங்களைத்தீர்த்துத்





தன்சமீபத்தில் நின்ற பெருமைபொருந்திய துர்க்கையைப்பார்த்து உன்னுடைய சத்தியினாலே அவ்வசுரனைக் கொன்றுவிடென்று சொல்ல உத்தரவு பெற்றுப் புறப்பட்டாள் துர்க்கை. எ-று. (௧௬)

ஆளிமேற் கன்னி செல்ல
 வருணநா யகிமுன் செல்லக்
காளிதுர் துமிபின் செல்லச்
 சுந்தரி கணங்கள் செல்ல
ஞாளிமேல் வடுகர் செல்ல
 நான்முகி முதலா மாதர்
தாளிமேற் செல்லத் தங்கள்
 விடையின்மேற் றாசிச் சென்றார்.

(இ-ள்.) துர்க்கை ஆளிவாகனத்தி லேறிக்கொண்டு போக, அருணநாயகி யென்பவள் முன்னேபோகவும், காளி, துர்துமி என்கிற இருவரும் பின்னேபோகவும், பார்வதியின் கணங்களும் சுவானவாகனத்தில் வயிரவர்போகவும், அபிராமி முதலாகிய மாதரெழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிக்கொண்டு தூசிப்படையாகத் துகளெழும்பப்போனார்கள். எ-று. (௧௭)

சென்றுதோ மரத்திற் குன்றிற்
 சிலைகளிற் படையிற் கையிற்
கன்றிய மகிடன் சேனைப்
 பாதியைக் கணத்திற் சாய்த்தார்
வன்றிறன் மகிடன் சேனைத்
 தலைவரும் மகிடன் றானுங்
குன்றென வெதிர்ந்து கன்னி
 படையெலாந் தூத்திச் சென்றார்.

(இ-ள்.) இப்படித் துர்க்கைசேனைகள் போனவுடனே உலக்கையினாலும், மலைகளாலும், வில்முதலாகிய ஆயுதங்களாலும், கைகளினாலும் கோபத்துடனே போர்செய்கிற மகிடாசுரனுடைய பாதிச் சேனையை ஒரு நொடிப்பொழுதிலே கொன்றுவிட்டார்கள்; மகிடாசுரனும் அவனுடைய சேனைத்தலைவர்களும் மலைபோல் எதிர்த்து துர்க்கையின் சேனைகளையெல்லாந் துரத்திச் சென்றார்கள். எ-று. (௨௦)

துந்துமி முதலா நால்வ ரிடைந்தனர் சூலி யால
கந்தரி வாகி யாறு முகத்தவ டிகிரிக் கையா
ளிந்திரை மறையா ளென்னு மெழுவரு மறைந்தார் ஞாளி
யுந்தின ரிடைந்தார் கன்னி மனந்தளர்ந் துமையே யென்றாள்.

(இ-ள்.) அசுரனது படைகள் எதிர்த்து யுத்தஞ்செய்த அளவில் துந்துமி, காளி, மதங்கி, சண்டி என்கிற நான்குசத்திகளுந் தோற்றார்கள்; சூலி, நீலகண்டி, வாராகி, சண்முகி, திகிரிக்கையாள் இந்திரை மறையாளென்கிற ஏழுமாதரும் யுத்தஞ்செய்ய மாட்டாமல் காட்டி லொளித்தார்கள்; சுவானவாகனத்தையுடைய வயிரவர்களும் தோற்றார்கள்; துர்க்கைமனந்தளர்ந்து உமாதேவியே யென்று தியானித்து நின்றாள். எ-று. (௨௧)

உறுதுணை யுமையே யென்னும்
பொழுதில்யோ கினிகள் வானி
லறுபது நாலு கோடி
யதிர்த்தெழுந் தழலின் மாரி
இறுதியா யுருளச் சேனை
யிடிமழை சொரிகை யாலே
குறுகிய மகிடன் சேனைத்
தலைவருங் கோதித்துச் சென்றார்.



(இ-ள்.) துர்க்கையானவள் அம்மையே! துணையென்றபோது, அறுபத்துநான்குகோடி யோகினிகள் ஆகாசத்தி லார்பரித்தெழுந்து நெருப்புமழையையும், இடிமழையையும், சொரிந்தபடியினால் மகிடாசுரனுடைய சேனைகளெரிந்துபோயின; அப்பொழுது சேனைத்தலைவர்கள் கோபித்துச் சண்டைசெய்தார்கள். எ-று. (௨௨)

கலி விருத்தம்.

அருசி கன்றனைச் செற்றன ளாரணி
மருவு காந்தனை மாய்த்தனள் வாரணி
கரனை வென்றனள் வேலுடைக் காரணி
நரக னுருயி ருண்டன ளாரணி.

(இ-ள்.) அப்படி மகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே, அபிராமி யென்பவள அருசிகனென்பவனைக் கொன்றாள்; வாரணியென்பவள் காந்தனெனபவனைக் கொன்றாள்; சண்முகியென்பவள் கரனென்னும் அசுரனைக்கொன்றாள். எ-று. (௨௩)

சூல பாணி தொலைத்தனண் மிண்டனைக்
கோல மாமுகி சண்டனைக் கொன்றனள்
ளால வுணி மதுவை யழித்தன
ணீல னுருயி ரிந்திரை நீக்கினாள்.

(இ-ள்.) சூலக்கையா ளென்பவள் மிண்டனென்பவனையும், வாராகி சண்டனென்பவனையும், நீலகண்டி மதுவென்னு மசுரனையும், இந்திரை நீலனென்பவனையுங் கொன்றார்கள். எ-று. (௨௪)

துர்க்கை மிக்கொடி சோணித வுணனைக்
கந்து மிக்கொம் படிக்கதை காட்டினள்
நந்து மிக்க நிகர்த்தரு ணாசலை
வந்து மிக்கெரிக் கண்ணனை வாட்டினாள்.

(இ-ள்.) அந்துயிக்கொடியையுடையவன் சோணிதனுனென்பவனைத் தலையறும்படி தண்டாயுதத்தா லடித்தாள்; சங்கத்தைக் கையிலேதரித்த அருணாசலை யென்றவள் அக்கினிக் கண்ணனைக் கொன்றாள். எ-று. (௨௫)

கயிட வன்புகைக் கண்ண னிருவருந்
செயிரின் மாளுறச் சிந்தினள் சுந்தரி
நெயிடு மிக்க நிணமிடு வேலினன்
மயிட வன்முகக் கண்டெதிர் வந்தனன்.

(இ-ள்.) சுந்தரியென்கிற சத்தி கயிடவனையும், புகைக்கண்ணனையும் யுத்தத்திற்கொன்றாள்; நெய்யைப்பொழிகின்ற நிணம்பொருந்திய வேலாயுதத்தையேந்திய துர்க்கை மகிடாசுரனைக் கண்டு எதிர்த்துவந்தாள். எ-று. (௨௬)

வெங்க டாமுகன் மேவலு மாதர்க
டங்க ளாயுதங் கொண்டு தடுத்தனர்
சிங்க வூர்தி யவனெதிர் சென்றுகைச்
சங்கை யூதினள் மேரு சலிக்கவே.

(இ-ள்.) வெப்பம்பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்கு நேரிட்ட அளவில் சப்தமாதர்களும் தங்களாயுதங்களினால் அவன்விட்ட ஆயுதங்களை விலக்கினார்கள்; அவ்வேளையில் சிங்கவாகனத்திலேறிவந்த துர்க்கை யவனுக்கெதிரேபோய்த் தன் கையிலிருக்கிற சங்கத்தை மகாமேரு அசையும்படி வாயில் வைத்து ஊதினாள். எ-று. (௨௭)

செருவி லங்கவள் சங்கொலி செய்திட
ஒருவ ரின்றி யவுண ருறங்கினார்
பெருவ ரங்களிற் பெற்ற சரங்களை
யிருவருஞ் சொரிந் தார்மழை யென்னவே.



(இ-ள்.) வல்லமைபொருந்திய சிங்கவாகனத்தையுடைய துர்க்கை சங்கத்தொனிசெய்ய அசுரர்களொருவரும் இல்லாமல் மயக்கத்தை யடைந்தார்கள்; அருமையாகிய வரத்தினால் பெற்றுக்கொண்ட பாணங்களை இருவரும் மழைபோலச் சொரிந்தார்கள். எ-று. (௨௮)

எந்த வெந்தக் கணையிவ ளேவினும்
அந்த வந்தக் கணையா லறுத்தனன்
விந்தை மீண்டிரு வெம்பிறை வாய்க்கணை
சிந்தி னளவன் சென்னி யழுந்தவே.

(இ-ள்.) எந்தெந்தப் பாணங்களைத் துர்க்கைவிட்டாலும் அவைகளை அந்தப்பாணங்களினாலே மகிடாசுரன் அறுத்துத் தள்ளினான்; அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடைய சிரத்தில் அழுந்தும்படியாக விட்டாள். எ-று. (௨௯)

வெம்பு செம்புனல் வெள்ள முருக்கிய
செம்பு போலச் சிதற விடுங்கணை
யம்பு போல விருக்கினு மாங்கவன்
கொம்பு போல விளங்கின கோடியே.

(இ-ள்.) இரத்தவெள்ளம் உருக்கின செம்புபோல் சிதறிவிழ விட்ட அர்த்தசந்திரபாணங்கள் அம்பாகவிருந்தாலும் அசுரன் தலையில் முளைத்திருந்த கொம்பிரண்டுபோல் தலையில் தைத்து அழுந்தி விளைந்து தோன்றின. எ-று. (௩0)

வெற்றி கொண்டவள் வில்லை முறித்தன
ளுற்ற வம்பிற் சிலைநுத லூன்றினள்
சொற்ற வம்பின் குலங்கள் விடுத்தவ
னெற்றி யிற்கண் ணழலி னிமிர்த்ததே.

(இ-ள்.) ஜெயங்கொண்டவளாகிய துர்க்கையின் கையிலிருந்த வில்லை யிரண்டாக முறித்தான்; அந்தவில்லினால் அசுரனுடைய

நெற்றியில் அடித்தான்; மிகப்பலம்பொருந்திய அம்புகளை விட்டவளாகிய அந்த மகிடாசுரன்நெற்றியில் சுவாமியினுடைய கண்ணெருப்புப்போலச் சுறுக்கென்று தாக்கியது. எ-று. (௩௧)

சாப வெஞ்சிலை போகத் தரிப்பளோ
கோபம் விஞ்சிக் கொதித்தெழு கூற்றத்திற்
றீப மென்னத் திகிரியொன் றேவியே
பாப காரி தலைவிழப் பண்ணினாள்.

(இ-ள்.) துர்க்கை வில்லொடிந்ததும் பொறுக்காமல் அதிக கோபங்கொண்டு கொதித்தெழும்பும் எமன்போல் பிரகாசிக்கின்ற ஒரு சக்கிராயுதம்விட்டுப் பாவியாகிய மகிடாசுரன் தலையறும்படி செய்தாள். எ-று. (௩௨)

கன்னி யாழி யெறியக் கடாமுகன்
சின்ன பின்னங்க ளாயுஞ் சிதைந்திலன்
முன்னை மாதவத் தண்மையின் மும்மதந்
துன்னு மால்கரி யாயெதிர் தோன்றினான்.

(இ-ள்.) துர்க்கை சக்கிராயுதத்தை விட்டெறிய, மகிடாசுரன் தேகஞ் சின்னபின்னமாயும் சாகாதவனாகிப் பூருவகாலத்திற்செய்த தபோபலத்தினால் மும்மதங்களைப் பொழிகிற பெரிய யானையுருவங் கொண்டு எதிராக வந்தெதிர்த்தான். எ-று. (௩௩)

ஆளி யேறுசென் றங்கவ னுச்சியின்
மூளை வாரி நுகர்ந்தது மொய்ம்பினான்
மீளவுங் கதைகொண் டெதிர் வீசினான்
கூளி நாயகி கூரவே லேவினாள்.

(இ-ள்.) அப்படி யானையுருவங்கொண் டெதிர்த்த அளவில் துர்க்கையேறுகின்ற ஆளிபோய் அந்தயானை யுச்சியிலிருக்கின்ற



மூளையைக் கையினால் அறைந்து தோண்டியெடுத்துத் தின்றது; அதனாலேயுஞ் சாகாமற் கையினால் திரும்பியுந் தண்டாயுதங்கொண் டெறிந்தான், பேய்களுக்கதிகாரியாயிருக்கிற துர்க்கை கூர்மை பொருந்திய வேலாயுதத்தை விட்டாள். எ-று. (௩௪)

விடந்த தும்பிய வேல்பட வெஞ்சமர்க்
கிடைந்த தும்பி முகனு மிறந்தன
னடைந்த தும்பிக ளாயிர மாயிரங்
குடைந்த தும்பி மரமெனக் குன்றியே.

(இ-ள்.) விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற வேலாயுதம் பாய்ந்தவுடனே யுத்தத்தில்நின்ற யானைமுகன் அதைச் சகிக்கமாட்டாமல் இறந்துவிட்டான்; அநேகமாயிரம் வண்டுகள்குடைய வுள்ளே யொன்றுமில்லாமற் றுளையோடுகூடிய அத்திமரம்போல் குன்றினான். எ-று. (௩௫)

வீழ்ந்த பின்பரி வேடம தாயெதிர்ப்
போந்து வெங்கதை கொண்டு புடைத்தனன்
சேர்ந்த வன்கதை யும்மவன் சென்னியு
நாந்த கங்கொண் டறுத்தன ணாரணி.

(இ-ள்.) அப்படிவிழுந்து இறந்துபோனவுடனே, குதிரைமுகமுள்ள அசுரனாகி யெதிரேவந்து தண்டாயுதத்தினால் அடித்தான்; அடித்த தண்டாயுதத்தையும் கத்தியினால் அறுத்துத்தள்ளினாள் துர்க்கையும். எ-று. (௩௬)

அங்க தன்பி னழலுரு வாயினன்
கங்கை யாயினன் காரிரு ளாயினன்
பங்க யாசன னாயினன் பங்கய
மங்கை நாயக னாயினன் மாயையால்.

(இ-ள்.) அதன்பின்பு அசுரன் நெருப்புருவங்கொண்டு வந்தான் அதன்பின்பு சலப்பிரளய ரூபங்கொண்டும் அந்தகாரமாகியும், நா

மரைப்புட்பத்தி லிருக்கின்ற பிரமனுகியும், இலக்குமி நாயகராகிய விஷ்ணுமூர்த்தியாகியும், எதிர்த்தான் மாயையினுலே. எ-று. (௩௭)

ஈது கண்டவ ளென்செய்வன் மாயையால்
வாதை செய்தன னென்றுத ளர்ந்துமை
பாத நெஞ்சினிற் பற்றினள் பற்றிய
போதி லோர்மொழி விண்ணிற் புகன்றதே.

(இ-ள்.) அப்படி அசுரன் பலபல வடிவங்கொண்ட வுடனே பார்த்து மாயையினுலே துன்பப்படுத்துகிறுன், என்ன உபாயஞ் செய்தாலும் சாகிறதில்லை, இதற்கென்னசெய்வேனென்று துர்க்கை பார்வதிதேவியினுடைய இரண்டுபாதங்களையும் மனத்திலே தியானித்தாள், அப்படி தியானித்தவுடனே ஆகாயத்தில் நின்றும் அசரீரி ஒருவாக்கியஞ் சொல்லிற்று. எ-று. (௩௮)

மாய வேடங்க ளன்றி மகிடமே
யாய போதி லவன்றலை தள்ளியே
தூய தாளின் மிதிக்கத் தொலைந்திடுந்
தீய மாயை யெனச்சொலத் தேறினுள்.

(இ-ள்.) அநேகவிதமான மாயவேஷங்களல்லாமல் சுபாவமான எருமைமுகரூபங் கொண்டபோது அவன் தலையையறுத்துக் கீழே தள்ளி உனதுபரிசுத்தமாகிய காலினுலே மிதித்தால் தீமைபொருந்திய மாயைதொலைந்துபோமென்று சொல்லத் துர்க்கைதேறினுள். எ-று. (௩௯)

மட்டின் மாயை வடிவின் மலைந்தபின்
னெட்டி லைத்தலைச் சூலத்தி னீக்கினுள்
துட்டன் மேதிய தாய்ப்படை தொட்டனன்
வெட்டி வீழ்த்தி யடியின் மிதித்தனள்.



(இ-ள்.) அளவில்லாத மாயரூபங்கொண்டுவர நெடுமையான தவருடைய சூலத்தினுற் குத்திக்கொன்றுள், பின்பு அத்துஷ்டன் பழைய எருமைக்கடாமுகத்தை யுடையவனுகி ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்த அளவில், அவைகளைவிலக்கி வாளாயுதத்தால் தலையைவெட்டித்தள்ளிக் காலினுல் மிதித்துக்கொன்றுள் துர்க்கை. எ-று. (௪௦)

ஒப்பி லாப்பத மூன்றி மிதித்திடில்
தப்பின் மாயை தவிர்ப்பது பாரமோ
வப்ப தத்தை நினைக்கினு மாணவஞ்
செப்பு காமிய மாயையுந் தீர்க்குமே.

(இ-ள்.) துர்க்கை பாதத்தை நினைத்தாலும், அதை நினைத்தவருடைய ஆணவம், மாயை, காமியம் என்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும்; அப்படிப்பட்ட ஒப்பில்லாத பதம் பரிசமாகும்படி யூன்றி மிதித்தால் பொய்யாகிய மாயைமாத்திரந் தவிர்ப்பது பெரிதோ! எ-று. (௪௧)

போத வானவர் பூமழை பெய்தனர்
மேதி மாமுகன் மெய்க்கதி யுற்றனன்
தீதி லாவவன் செங்களந் தன்னிலோர்
சோதி லிங்க மிருந்தது தோன்றவே.

(இ-ள்.) தேவர்கள் மிகவும் புட்பவருஷம் பொழிந்தார்கள்; மகிடாசுரனும் அம்மைகையினு லிறந்ததனுலே மெய்ம்மையான மோட்சத்தைச் சேர்ந்தான்; யாதொரு குற்றமுமில்லாத அவன் சிவப்பாகியகண்டத்தில் ஒருபடிகலிங்கமிருந்தது. எ-று. (௪௨)

கண்ட மட்டிலக் கைக்கொளக் கார்நவ
கண்ட மட்டிற் புரந்த கடாமுகன்

கண்ட மட்டி லிருந்த கடவுளைக்
கண்ட மட்டி லெடுத்தனள் கன்னியே.

(இ-ள்.) நவகண்டமட்டும் ஆண்ட மகிடாசுரனுடைய கழுத்தை இலக்காகவைத்துத் தூர்க்கைஅறுக்க, அக்கழுத்திலிருந்த படிகலிங்கத்தைக் கண்டபோதே கையினாலெடுத்தாள். எ-று. (௬௧)

கொண்டு சென்றுமை கோகந கப்பதங்
கண்டு போற்றிக் கடவுளை யீந்தனள்
வண்டு வார்குழல் வாங்கினள் செங்கையை
யண்டர் நாயகன் விட்டில னாசையால்.

(இ-ள்.) அப்படிப்பட்ட படிகலிங்கத்தை எடுத்துக்கொண்டு போய் உமாதேவி பாதங்களைத்தொழுது நடந்தகாரியமெல்லாஞ் சொல்லிச் சுவாமியைக் கொடுத்தாள்; வண்டுகள் சூழ்ந்திருக்கின்ற கூந்தலையுடைய பார்வதி கையினால் வாங்கினாள்; தேவர்கட்கெல்லாம் நாதராகவிருக்கின்ற சுவாமியும் அம்மை கைமேல்வைத்திருக்கிற ஆசையினால் கையைவிடாமற் கெட்டியாகவிருந்தார். எ-று. ()

தாயு மங்கது கண்டுமகிழ்ந் திறை
யேய வென்கரம் பற்றிய தேதென
வாயை யங்கை புதைத்து மகபதிக்
காயி ரங்கண் ணளித்தவன் கூறுவான்.

(இ-ள்.) பார்வதி, அந்த ஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து; என்கையை விடாமலிருந்தது எதனால் என்றுகேட்க, தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்கொடுத்த கௌதமர் வாயைக் கையினால் பொத்திக்கொண்டு அம்மைக்குச் சொல்லத் தொடங்கினார். எ-று. (௬௩)



அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முன்னமகத் தியன்முதலா முனிவர்களைம்
பதின்மர்வரா முனிபாற் செல்ல
வன்னவன்றன் றவமதிப்பா லவமதிப்பா
யிருந்திடவு மவனை நோக்கிப்
பொன்னனைய தவமுனிவர் வெகுண்டு ரைப்பா
ரெமை யிகழ்ந்த புன்மையாலே
உன்னரிய கருங்கடவா யினிப்பிறக்கக்
கடவையென் றுளையச் சொன்னார்.

(இ-ள்.) முற்காலத்தில் அகத்தியர் முதலான ஐம்பது ரிஷிகள் கூடி, வரமுனியென்பவருடைய ஆச்சிரமத்திற்குப் போனார்கள்; அந்தவரமுனி தம்முடைய தபோபலத்தினால் மரியாதையாக உபசாரம் செய்யாமலிருந்தார்; அப்போது அவரைப்பார்த்து பொன்போலும் அரியதவத்தையுடைய எல்லா முனிவர்களுங் கோபித்து எங்களை அவமரியாதை செய்தபடியினால் யாவராலும் குறைவு சொல்லப்பட்ட கரிய எருமைக்கடாவாகப் பிறப்பாயென்று அவர்கள்மனம்வருந்திச் சபித்தார்கள். எ-று. (௬௪)

அருந்தவரைம் பதின்மருமன் றுரைத்தமொழிக்
கொடுமை யைக்கண் டச்சமாகி
யிருந்தவனு மெழுந்துபணிந் தெனதுபிழை
பொருத்தருள்வீ ரென்று ணந்தப்
பெருந்தவரன் புடனுரைப்பார் மகிடமுகத்
தவுணனெனப் பிறந்து பின்னர்
திருந்தவா விடம்வேண்டித் தவம்புரியு
முமைகணத்திற் றீர்ப்பா ளென்றார்.

(இ-ள்.) அரிய தவத்தினையுடைய ஐம்பது முனிவர்களும் அன்றுசொல்லிய சாபத்தின் குரூரத்தைக்கேட்டு பயப்பட்டு, பெருமைபொருந்தியதவஞ்செய்த வரமுனியும் எழுந்துவந்தனஞ்செய்து முனிவர்களே! தெரியாமல் நான்செய்தபிழையைப் பொறுத்துக் கொள்ளுங்களென்றார்; அதற்கு முனிவர்கள் நீர் எருமை முகம்பொருந்திய அசுரனாகி அரசாளுங்காலத்தில் சுவாமி இடப்பாகத்தைப் பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மை உம்முடைய சாபத்தை தொடிப்பொழுதில் தீர்ப்பாளென்று சொன்னார்கள். எ-று.

ஆங்கவர்சொற் படியிலவ னசுரர்பெருங்
குலத்திலுதித் தரச னாகி
யோங்கியபேர் மகிடனெனக் கொடுங்கோன்மை
புரிகுதலு மொருநாள் வேட்டைத்
திங்குசெய வனத்திலடைந் தழற்பசியா
லிளைத்தோடித் திரிந்தா னங்கே
நீங்கரிய வருச்சனைசெய் மன்னதனென்
றொருமுனிவ னேர்ப்பட் டானே.

(இ-ள்.) அந்த முனிவர்கள் சொன்னபிரகாரம் வரமுனி அசுரகுலத்திற்பிறந்து அரசனாகி மகிடாசுரனென்கிற பெயரையடைந்து கொடுங்கோலரசு செய்துகொண்டு வருகையில், ஒருநாள் வேட்டையாடும்படிவனத்தில்வந்து மிகுந்தபசியினால் இரையொன்றும் அகப்படாமல் ஓடித்திரிந்துகொண்டிருந்தான்; அவ்விடத்தில் நீங்குதற்கரிய தவஞ்செய்கின்ற மன்னதரிஷி என்பவன் எதிர்ப்பட்டான். எ-று. (௪௮)

மன்னதனை மவனியிலவன் கரத்திலிங்கத்
துடன்விழுங்கி மகிழ்ந்து போனான்
பின்னதனா லவன்மிடற்றிற் சிவனுருவ
மிருந்ததந்தப் பெருமை யாலே



யுன்னதமா மினன்சிவனு முருத்தரித்த
வுடலுமிறை யுருவ மன்றோ
வன்னதனால் வினையடைந்த ததுதவிரு
நவதீர்த்த மாடி யென்றான்.

(இ-ள்.) எதிர்ப்பட்ட அம் மன்னதனென்கிற ரிஷியைக் கையிலிருக்கும் இலிங்கத்தோடே இம்மகிடாசுரன் எடுத்துவிழுங்கிவிட்டுப்போனான்; பின்பு அவன் கண்டத்திற் சிக்கிக்கொண்டு படிகலிங்க மிருந்ததனால் மிகுந்தபெருமையையடைந்தான், அந்த இலிங்கமிருந்த கண்டத்தையுடையவனும் சிவசொரூபமன்றோ! அவனைக் கொன்றபடியினால் பாவம் சம்பவித்தது, நீ நவதீர்த்தங்களாடினால், அப்பாவம் போமென்றார் கௌதமர். எ-று. (௪௯)

அன்புமுனி யுரைத்தளவி லொருமொழியந்
தரத்திலெழுந் தரிய தீர்த்த
மொன்பதுமிவ் விடத்தில்வரு மவைவருமா
றியற்றுமென வுமையும் விந்தை
தன்பதும முகநோக்கி யுனதுகைவா
ளெறிந்துகங்கை தருவா யென்றாள்
வன்பணில மெடுத்தாளுந் தொழுதுகைவா
ணிலத்தெறிந்து வாங்கும் போதில்.

(இ-ள்.) மிகவும் பக்தியையுடைய கௌதமர் இப்படிசொன்ன அளவில், பாவந்தீர ஆடுதற்கு ஒன்பதுதீர்த்தமும், இவ்விடத்தில் வரும்படிச்செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒருவார்த்தைபிறந்தது; அதைக்கேட்டுப் பார்வதியும், துர்க்கை மலர்போன்ற முகத்தைப் பார்த்து உன்னுடைய கையிலிருக்கின்ற வாளினால் பூமியைப்பிளந்து கங்கைவரும்படி செய்யென்றுசொல்ல, ஜயசங்கைக்கையிற்

றரித்த துர்க்கையும்வணங்கி வாளாயுதத்தால் பூமியில் வீசியெடுத்த போது. எ-று. (௬௦)

கவநதியும் பிறவுளநன் னதிகளுஞ்
சோகந்தீர் நல்ல தான
சுவையதிக முதவுபல தடங்களுமங்
கெழுந்தவந்தச் சுனையி னூடே
பவமகல வொருமாத முழுகியிருந்
தாள்கரத்தைப் பற்றி நீங்காச்
சிவவடிவு மகன்றதுதன் னுளமகிழ்ந்து
கரையில்வந்தா டேவர் போற்ற.

(இ-ள்.) ஒன்பது தீர்த்தங்களும் மற்றுமுள்ள நதிகளும் விடாயாறும்படி உதவிசெய்யும் நல்லருசியைக் கொடுக்கின்ற அநேகந் தடாகங்களும் உண்டாயின; அந்நதிகளில் ஒருமாதவரைக்கும் அம்மை குற்றம் நீங்கும்படி ஸ்நானஞ்செய்து கொண்டிருந்தாள்; கையைப்பற்றிக்கொண்டு விடாமலிருந்த இலிங்கமும் நீங்கிற்று; அப்போது தேவர்கள் போற்றும்படி மனம் சந்தோஷித்து அம்மை கரையில் வந்துசேர்ந்தாள். எ-று. (௬௧)

அருவுருவா மொருசிவனை யதன்கரைமேற்
புறத்திருத்தி யருச்சித் தானம்
மிருவினையுந் தவிர்ப்பானுக் கென்பாவந்
தீர்த்தானென் றியற்பே ரிட்டாள்
திருமருவும் பெருஞ்சுனைக்கு மினியகட்க
தீர்த்தமெனத் திருப்பே ரிட்டாள்
குருமணியை யருணகிரிப் பெருமானைத்
தொழக்கனகக் கோயில் சார்ந்தாள்.



(இ-ள்.) அருவமாயும், உருவமாயும்விளங்கும், ஒப்பற்ற சிவனை அந்நதிக் கரையில் எழுந்தருளச்செய்து அருச்சனைசெய்தாள்; நம்முடையநல்வினை, தீவினை, இரண்டையும் நீக்குகின்ற சுவாமிக்கு என்பாவந்தீர்த்தாரென்று பேரைத்தரித்து அழகிய அச் சுனைக்குக் கட்கதீர்த்தமென்று பெயரிட்டாள்; நிறம்பொருந்திய மணியொத்தவரை அருணாசலத்தில் எழுந்தருளி யிருக்கிறபரமசிவனை வணங்கும்படியாகப் பொன்மயமாகிய கோவிலுக்குப் போனாள். எ-று. (௬௨)

முருகுமல ரயன்றடத்திற் படிந்துவெண்ணீ
றணிந்துசெங்கை முடியிற் கூப்பி
யருகுவருங் கோதமன்சொற் படிதொழுதட்
புகுந்துதன்னை ரமுதைக் கண்ணுற்
பருகிநில முறவிழுந்து பணிந்தெழுந்து
பரவசமாய்ப் பாடி யாடி
யுருகியுவந் தழுதுயிர்த்து வலம்புரிந்து
தனதுகுறை யுரைத்துப் போற்றி.

(இ-ள்.) வாசனையுள்ள தாமரைமலரிலிருக்கிற பிரமதீர்த்தத்தில்முழுகி விபூதிதரித்துச் சிவந்தகைகளைச் சிரமேல்வைத்துத் தண்டனிட்டுத் தன்னருகே வருகிற கௌதமர் சொன்னபடிபோய்க் குளிர்பொருந்திய அமிர்தம்போன்ற சுவாமியைக் கண்ணுற்றறிசித்துப் பூமியிற் றேகம்பொருந்த நமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து பரவசமாகிப் பாடியாடி உருக்கமடைந்து களித்து ஆனந்தக்கண்ணீர் பெருகிப் பெருமூச்செறிந்து வலமாகவந்து தன்னுடைய குறையைச்சொல்லி வணங்கினாள். எ-று. (௬௩)

கார்த்திகைத்திங் களிற்றிருநா ளாகமத்தின்
படிநடத்திக் கனற்கண் ணானைத்
தோத்திரம்பண் ணுதலுமொரு சுடர்மலைமே
லெழுந்ததந்தச் சுடரி னூடே

எத்தரிய பலகோடி யிரவியென
வொருசோதி யெழுந்து மின்னே
வாய்த்தமலை வலமாக நடத்தியென
வுரைத்துடனே மறைந்த தன்றே.

(இ-ள்.) கார்த்திகைமாதத்தில் ஆகமத்தின்படி திருநாள்செய்து, நெருப்புக்கண்களையுடைய சிவபிரானைப்பணிந்தஅளவில், மலைமேல் ஒருபிரகாசமுண்டாகி, அதிற்சொல்லுதற்கரியபலகோடி பாலசூரியப் பிரகாசமாய் சுவாமியெழுந்து பெண்ணே! இம்மலையை வலமாக நடந்து வாவென்றுசொல்லி மறைந்துவிட்டார். எ-று. (௫௭)

நாரிதனைச் சிலையாக்கு முனிவனுமப்
படிவலமா நடத்தி யென்றான்
வாரியென மறைபுகழக் காரிகையு
நடந்தனடன் மலர்க்கை கூப்பிப்
பேரிகையுங் காகளமுஞ் சல்லரியு
மல்லரியும் பெரிய வானிற்
றாரியமுந் துந்துமியு மத்தளமுங்
குடமுழவுந் துவைத்த வன்றே.

(இ-ள்.) அகலிகையாகிய பெண்ணைக் கல்லாக்கிய கௌதம ரிஷியும், அம்மா! அப்படியே வலமாகப்போவென்று சொல்லச் சமுத்திரம்போல் வேதகோஷ்ட முழங்கவும் பேரிகை, காகளம், சல்லரி, மல்லரி, முரசு, துந்துமி, மத்தளம், குடமுழா இவைமுதலான வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்கவும் பார்வதி இரண்டு கைகளையுங் கூப்பிக்கொண்டு நடந்தாள். எ-று. (௫௮)



அரம்பையுருப் பசிமுதலா மகபதிநாட்
டரிவையர்க ளாடல் காட்டக்
குரும்பையென நெருங்குமுலை வரையரமங்
கையர்மலரின் குப்பை கொட்டக்
கரும்புகனித் தேனையமொழிப் புனலரமங்
கையரிரட் டுங்கவரி யாட்ட
விரும்புருக நகைபுரியு மரவமினார்
மணிவிளக்க மெடுத்து நீட்ட.

(இ-ள்.) இப்படி பார்வதி வலம் வரும்போது, அரம்பை ஊர்வசி முதலான தெய்வலோகத்துப் பெண்கள் நாட்டியமாடத் தென்னங் குரும்பையொத்த தனத்தையுடைய மலையர மகளிர் அம்மை நடந்து வரும்போது, பாதம் பூமியிற்பட்டு உறுத்தாமலிருக்கப் புட்பங்களைக் குப்பையாகக்கொட்டக் கருப்பஞ்சாறுபோலும் வார்த்தையையுடைய நீரமங்கையர் சாமர மெடுத்துவீச, இரும்பு முருகும்படி நகைசெய்கின்ற நாகலோகப்பெண்கள் இரத்தினதீபங் கையிலெடுத்துக்கொண்டுவர. எ-று. (௫௯)

[இதுமுதல் இரண்டுபாடல் குளகம்.]

மூண்டகமண் டபமயிலும் புலோமசையு
நறுந்தவள முளரி மாதுங்
கண்டகமும் வழிப்பாலு மொழித்தவர
நிலமகடன் கைக ணீட்ட
அண்டர்குல மடந்தையரு முனிவர்குல
வனிதையரு மருவிப் பூந்தேன்
வண்டலிடுஞ் சேறகற்ற மலரினறுந்
துகள்சொரிந்து வழிக ளாக்க.

(இ-ள்.) தாமரைப் புட்பமாகிய மண்டபத்தி லிருக்கிற இலக்குமியும், இந்திராணியும், வெண்டாமரைப் பூவிலிருக்கிறசரஸ்வதியும், போகிறவழியிலிருக்கும் முள்ளுகளையும் கற்களையுந் தள்ளிக்கொண்டுவரப், பூமிதேவி கைகளைநீட்டிச்சாக்கிரதையாகத் தாங்க தேவஸ்திரீகளும் முனிவர்களுடைய ஸ்திரீகளும் புட்பத்திலிருக்கிற தேனருவியினால் வழிசேருக்கிக்கிடந்ததை நீக்க புட்பத்துக்குள்ளிருக்கிற பராகப்பொடிகளைக் கொட்டி நல்லவழியாகச்செய்ய. எ-று. ()

கன்றினதுன் றிருசரணம் பொறுத்தருள்வா
யெனவங்கை கங்கை கூப்ப
மன்றனலத் திசையணுகி யழற்கிரியை
யெதிர்முகமா வணங்கிப் போற்றித்
தென்றிசையு நிருதிபெருந் திசையினையுங்
கடந்துகுட திசையிற் சென்றாள்
குன்றரிய புகழரு மழவிடைமீ
தினிற்காட்சி கொடுத்துப் போனான்.

(இ-ள்.) கங்கையானவள், அம்மாபார்வதி உன் பாதமிரண்டும் பூமியிலே பட்டுக் கன்றிப்போய்விட்டன; பொறுக்கவேண்டு மென்று இரண்டு கைகளையுங்கூப்ப, அழகிய அக்கினிதிசையில்வந்து அக்கினிமலையை எதிர்முகமாகத்தொழுது, தெற்குத்திசையும்நிருதி மூலையுந்தாண்டி மேற்குத் திசையிற்போனாள்; குறைவில்லாத கீர்த்தியையுடைய சுவாமியும் இளமைதங்கிய ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத்து நடந்தார். எ-று. (௧௮)

நாற்றிசையும் போற்றிசெயும் புகழணியண்
ணாமலையா னடத்தாள் போற்றி
மேற்றிசையுங் காற்றிசையுங் கடந்துவட
திசையணுகி விரும்பி யேத்தி



யேற்றிசையு மிறைதிசையு மகிழ்ந்துகுண
திசையடைந்தா ளிமய வெற்பிற்
சேற்றிசையு மணவழலை வலம்புரிந்த
செயல்போலச் செறிந்த தன்றே.

(இ-ள்.) நாலுதிக்கும் வணங்குகின்ற கீர்த்தியையுடைய அருணசலேசுரரது நடனபாதத்தை வணங்கி மேற்குத் திசையும் வாயுதிசையுந் தாண்டி, வடதிசையில் மறுபடியுந்தொழுது எருதிலேறுகின்ற ஈசானனுடைய திசையைக் கடந்து கிழக்குத்திசைக்கு வந்தாள், அப்படிவந்தது இமாசலத்தில் சுவாமி கலியாணஞ் செய்தபோது ஓமாக்கினியை வலம்வந்ததுபோ லிருந்தது. எ-று. (௧௯)

கலிநிலைத்துறை.

பானு கம்பன்கைச் சங்கொலி நெடியமால் பணிலத்
தான கம்பலை நாரதர் வீணையி னரவம்
வான துந்துமி கம்பலை திசையெலா மறைந்த
தேனி றைந்தநி மலர்மழை யிமையவர் சிதற.

(இ-ள்.) பானுகம்ப னென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளிலுஞ்சங்கத்தைவைத்து ஊதுகிற ஒலியும், விட்டுணு தமது சங்கத்தைவாயில்வைத்து ஊதுகிறசத்தமும், நாரதர் வீணையை வாசிக்கிற சத்தமும், ஆகாச துந்துமியினுடைய சத்தமும் திசைகளெல்லாஞ் செவிடுபடச் செய்தன; தேனிறைந்த புட்பவருஷங்களைத் தேவர்கள் சொரிய. எ-று. (௨௦)

[இதுமுதல் மூன்றுபாடல்களுந் துளகம்.]

கற்றை வார்சடை பிளப்பிறை நெடுநிலாக் கமழப்
புற்ற ராமணி யிளவெயில் விரித்திடப் புலியைப்
பெற்ற மீதினுக் கொருபுற மலிந்திடப் பிடித்த
வெற்று அதலெனப் புரிமுதான் மார்பகத் திலங்க.

(இ-ள்.) கற்றையாகிய நீண்டசடையில் தரிக்கப்பட்ட இளமையாகியபிறையின் நெடுமையான சந்திரிகை பிரகாசிக்கவும், ஆபரணமாகிய புற்றிலிருக்கின்ற சர்ப்பத்தின் தலையிலிருக்கிற மணி காந்தியை விரிக்கவும், உலகமாதாவாகிய பார்வதிக்குப் பாதிசரீரத்தைக் கொடுப்பதற்குமத்தியாகப் பிடித்த எற்றநூல்போல் புரியாகியபூணூல் பிரகாசிக்கவும். எ-று. (௬௧)

பிறப்பி லாமுதன் மறையெலா மளவிடாப் பெரியோ
னிறப்பி லாவிறை விடையின்மே லினிதெழுந் தருள
வறத்தி னாயகி யடிபணிந் திறைஞ்சின ளனைத்துந்
துறக்கு மண்ணலு மவளுட னிவையிவை சொல்லும்.

(இ-ள்.) பிறப்பில்லாத மூர்த்தி அநேகவேதங்களாலும் அறியப்படாதவர் இறப்பில்லாத பரமசிவன், ரிஷபவாகனத்திலெழுந்தருளத் தருமம் வளர்கின்றபார்வதி, அச்சுவாமி பாதத்தைத்தொழுது வணங்கினாள்; எல்லாவற்றையும் நீக்கியகடவுள் அவ்வம்மையோடு சொல்லுவார். எ-று. (௬௨)

பெண்ணுமாணுமா யுலகுயிர்ப்பொருளெலாம்பிரித்தோ
மண்ணிதாகிய பீடமு மிலிங்கமு மானோ
மெண்ணு நீயெண நானென விரண்டிலை மாமு
முண்ணிலாவிய வயிரமு நிகர்த்துட னுறைவோம்.

(இ-ள்.) உமையே! நீயும், நானும், பெண்ணு மாணுமாகி, உலகத்தில் அநேகம் ஜீவராசிகளை வேறு வேறுண்டாக்கினோம்; சமீபமாய் ஆவிடையாரும் இலிங்கமுமானோம், நீயென்றும்நானென்றும் வேறுபேதமில்லை; மாமும் அதற்குள்ளேயிருக்கிற வயிரமும்போல் ஒன்றாய்ச் சேர்ந்திருப்போம். எ-று. (௬௩)

அங்கம் யாவுநம் பொருட்டுவிட் டிமயமெற் பயடைந்தா
யிங்கு நாமுனக் கொருபுற மளிப்பதே யியற்கை
மங்கை யேநம திடப்புறத் துறையென மகிழ்வுற்
றங்கை யாலணைத் தருளினா னுருகியொன் றானார்.



(இ-ள்.) தேகத்தை விட்டு நம்பொருட்டாக இமயபர்வதத்தில் வந்து பிறந்தாய், இவ்விடத்தில் நாம் ஒருபாகங் கொடுப்பது சுபாவமே, பெண்ணே நம்முடைய இடப்பாகத்திற் சேர்ந்திருவென்று சந்தோஷமடைந்து கையினால் அணைத்துக்கொண்டார்; இரண்டு தேகமும் உருகி ஒருதேகமானார்கள், அம்மையும் அப்பனும். எ-று. ()

அடுத்த செஞ்சடை யொருபுற மொருபுற மளகந்
தொடுத்த கொன்றையோர் புறமொரு புறநறுந்தொடையல்
வடித்த சூலமோர் புறமொரு புறமலர்க் குவளை
யிடத்தி லார்கழ லொருபுற மொருபுறஞ் சிலம்பு.

(இ-ள்.) அப்படி யிருவரும் உருகிச் சுவாமியினுடையபாதியும், அம்மனுடைய பாதியும், ஒருதேகமானபோது ஒருபக்கத்திற்சிவந்த சடையும், ஒருபக்கம் கூந்தலும், ஒருபக்கம் கொன்றைமாலையும், ஒருபக்கம் புஷ்பமாலையும், ஒருபக்கம் சூலமும், ஒருபக்கம் நீலோற்பல புஷ்பமும், ஒருபக்கம் வீரகண்டாமணியும், ஒருபக்கம் சிலம்புந் தோன்றின. எ-று. (௬௫)

பச்சை வண்ணமற் றொருபுற மொருபுறம் பவளங்
கச்சுலா முலை யொருபுற மொருபுறங் கவின்மா
ரச்ச நீக்கிய வரதமொன் றபயமொன் றங்கை
யிச்சையாமிவ் ருறுதல்கண் டிறைஞ்சின ரிமையோர்.

(இ-ள்.) ஒருபுறம் பச்சை நிறமும், ஒருபுறம் பவள நிறமும், ஒருபுறம் கச்சணிந்த தனமும், ஒருபுறம் அழகானமார்பும், ஒருபுறம் அபயமும், ஒருபுறம் வரதமுமாகியகைகளாக ஆசையோடுஇருவரும் பொருந்துதலைப் பார்த்துத் தேவரும் வணங்கினார்கள். எ-று. (௬௬)

இவ்வாறு இருவர்நின்ற கோலத்தைச் சேரமான் பெருமானும், "வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே, கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென், பலந்தா ர் வலமிட மாடகம் வேல்வல மாழியிடஞ், சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ்

சங்கரற்கே'' எனப்பொன்வண்ணத் தந்தாதியில் அருளிச்செய்த வாறு மறிக.

இந்த மாக்கதை படித்தவர் செவிகளிற் கேட்டோர்
சந்த ணசல முனியினிற் றமிழ்க்கடல் கடப்பார்
மைந்த ரோமுதற் கிளையுட னுலகினில் வாழ்வார்
பந்த பாசமற் றழிவிலாப் பரகதி பெறுவார்.

(இ-ள்.) இக்கதையைப் படித்தவர்களும், செவியிற்கேட்டவர்களும் சந்தனவிருக்கங்கள் சூழ்ந்த பொதியமலையிலிருக்கின்ற அகத்தியர்போற் றமிழ்க்கடல் கடப்பார்கள், சந்தான பாக்கியத்தோடுஞ் சுற்றத்தாரோடும் உலகத்தில் வாழ்வார்கள்; தங்களைப் பந்தமாகச் சூழ்ந்துகொண்டிருக்கிற தீவினையைத் தள்ளி மோக்ஷம் பெறுவார்கள். எ-று. (௬௭)

முனிவனே யெனைப்பயந்தவ னுரைத்ததிம் முறையென்
றனைய மாமுனிக் குரைத்தலு மவனெழுந் திறைஞ்சிக்
கனக வச்சிராங் கதனுயர் கதிபெறுங் கதையை
வினவி னன்முனி வினவலு மகிழ்ந்திவை விளம்பும்.

(இ-ள்.) நந்திதேவர் மார்க்கண்டேயரைப் பார்த்து என்னைப் பெற்ற பரமசிவன்சொன்ன சரித்திரத்தின் முறையிதுவென்று அவருக்குச் சொல்ல, அம்மார்க்கண்டேயரிஷி எழுந்து தெண்டஞ் செய்து, பின்பு, சுவாமீ? வச்சிராங்கத பாண்டியன் உயர்வாகிய மோட்சம் அடைந்தகதையைச் சொல்லுங்களென்று கேட்க, நந்திதேவர் சந்தோஷமடைந்து சொல்லத்தொடங்கினார். எ-று. (௬௮)

ஐந்தாவது

## இடப்பாகம்பெற்றசருக்கம்.

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௦௨.

புழுகுபூனையாகவும் போகக்கடவீர்களென்று சபித்து, நாங்கள்வருந்திக் கேட்டுக்கொண்டதின்பேரில் இந்த அருணாசலத்தைப் பாண்டிநாட்டரசனால் நீங்கள் பிரதக்ஷிணஞ் செய்யும்படி நேரிடும். அப்போது இந்தச்சாபம் விமோசனமாகுமென்று சொன்னார். அதனால் அந்தப்படியே சம்பவித்தது. நீர் இந்தமலையைக் காலினால் பிரதக்ஷிணஞ் செய்யாமல் குதிரையின்மேலேறிப் பிரதக்ஷிணஞ் செய்தபடியால் உமக்குப் பாவம்வந்திருக்கிறது. அதுவும் சுவாமியைப் பூசைசெய்தால் போய்விடுமென்று சொல்லிவிட்டுத் தங்கள் விமானங்களின்பேரில் ஏறித்தங்கள் ஊருக்குப்போய் விட்டார்கள். பின்பு வச்சிராங்கதபாண்டியன் தன்பிள்ளையாகிய இரத்நாங்கத பாண்டியனுக்குத் தன் அரசாக்ஷியை ஒப்பித்துவிட்டு, அண்ணாமலையாருக்கு விசேஷத் திருப்பணிகள் செய்வித்துக் கிரிப்பிரதக்ஷிணஞ் செய்துகொண்டுவரும் நாளில், ஒருநாள் பரமேஸ்வரர் ரிஷபவாகனரூடராய்ப்பாண்டியனுக்குத்தரிசனங்கொடுத்து, பாண்டியனே! முன்ஜென்மத்தில் தேவேந்திரனாயிருந்த நீ நம்மேல் உன்வச்சிராயுதத்தைப் பிரயோகஞ்செய்தபடியால் பூமியில் மனிதனாகப்பிறந்தாய். இப்போது நம்மைப்பூசித்துப் பிரதக்ஷிணஞ்செய்தபடியால் மறுபடியும் தேவேந்திரனாகப் போயிருவென்று வரங்கொடுத்துவிட்டு மறைந்தார்.

---

கலி விருத்தம்.

தோடுகமழ் சந்தன வனத்திடை துன்னித்
நீடுதமி ழின்சுவை யளைந்துநெடு நாளா
யாடுமயி லன்னவர்க ளன்னநடை போலே
வாடையிசை தென்றல்புகும் வையைவள நாடு.

(இ-ள்.) பூவிதழ் மணக்கும் சந்தனவனத்தின் மத்தியிற் சஞ்சரித்து, என்றுமுள தமிழின் மதுரம்அளைந்து நெடுநாள்ஆடுகின்ற



மயில்போன்ற பெண்கள் நடைபோல வாடைக்காற்றோடு சம்பந்தமாகத் தென்றற்காற்று வருகின்ற வையையாறு பொருந்திய பாண்டிநாடு. எ-று. (க)

வெவ்விருக ணாரிடையை மின்னென மருண்டே
செவ்விபெறு கேதகை செறிந்தலரு நாடு
நவ்வியனை யாரளக நள்ளிரு ளென்றே
மவ்வலரு கேயலரும் வையைவள நாடு.

(இ-ள்.) வெப்பமதைச் செய்யும் கண்களிரண்டையு முடைய பெண்களினிடையைப்பார்த்து மின்னலென்று மயங்கி அழகுபொருந்திய தாழைகள் புஷ்பிக்கும் நாடு, மான்போன்றமாதர்கள் கூந்தலைப்பார்த்து இருளென்று நினைத்து முல்லைச்செடிகள் கரையில்புஷ்பிக்கும் வையைஆற்றினால்வளம்பொருந்தியபாண்டிநாடு. எ-று. (உ)

அந்தவள நாடர்பெரு மானரசர் கோமா
னிந்திரன் முடிக்கிடை யெறிந்தவளை வீர
னிந்தையறு தென்கயிலை நெற்றிவிழி போலே
*முந்திய திசைக்கரி முகத்தெழுதி வைத்தோன்.

(இ-ள்.) அத்தன்மையாகிய பாண்டிவள நாட்டாருக்கு அரசன் அரசர்க்கரசனானவன் தேவேந்திரன்முடி சிதறும்படியாக வளையென்னும் ஆயுதம்பிரயோகித்தவன்; குற்றமற்ற தென்கைலாயத்துக்கு நெற்றிக்கண்போல் அஷ்டதிக்கிலுமிருக்கிற யானைகள் முகத்திற்றன்னுடைய மீனக்கொடியை யெழுதி வைத்தவன். எ-று. (௩)

---

* முந்தியதிசைக் கரிமுகத்து எழுதிவைத்தோன் என்பதற்கு, எல்லாத்திசைகளிலுஞ் சிறந்த கீழ்த்திசை யானையாகிய ஐராவதத்தின் முகத்தில் அத்திசைக்கிறைவனான இந்திரனைத் தன்வலியால் பொருது வென்றமை எழுதிவைத்தவ னென்னலுமாம்.

## வேறு.

ஆக மாதி மதனி னழகினு
ளாக மாதி தெளிந்த வறிவினான்
பாக நாரியர் பத்தியி னான்மொழிப்
பாக நாரியர் பற்றிய தோளினான்.

(இ-ள்.) தேக முதலானவைகளால் மன்மதன்போ லழகுள்ளவன், ஆகமமுழுவதும் தெளிந்த விவேகத்தையுடையவன், பாகத்தில் பார்வதியையுடைய சிவன்மேல் பத்தியுடையவன், பாகுபோல் மதுரமாகிய சொற்களையுடைய ஸ்திரீகள் விரும்புகின்ற தோளையுடையவன். எ-று. (௪)

வான கத்தினு மண்ணினு மெண்ணிம
வான கத்திலும் வைத்த புகழினான்
கான கத்தொளி யார்சடைக் கண்ணிதன்
கான கத்தொளி யாமனைக் காப்பவன்.

(இ-ள்.) தெய்வலோகத்திலும், பூமியிலும், எண்ணத்தக்க இமயபருவதத்தினிடத்திலும், தன் கீர்த்தியை நாட்டினவன்; சுவாமி தரிக்கின்றசடைக்காட்டினிடத்தில்பிரகாசிக்கும் ஆத்திமாலையின் வாசனையைத் தன் மனத்தில் நினைத்துக்கொண்டு பூமியைக்காக்கின்றவன். எ-று. (௫)

தங்க ளாயக னைத்தலை சூடிய
வெங்க ணாத ரடித்தலை யேத்தினான்
பொங்கு நன்றி யறிந்தது போற்றுவா
ரிங்கி வற்கிணை யாவரு மில்லையே.

(இ-ள்.) தங்குலத்துக்குத் தலைவனாகிய சந்திரனை முடியில் தரித்த எங்கள் நாதரது பாதங்களைத் தலையினால் வணங்குகிறவன்; மிகுந்த நன்றியையறிந்து அதைப்பாதுகாக்கின்றவர்களில் இவனுக்கொப்பானவ ரொருவருமில்லை. எ-று. (௬)



பத்து வாரிசை மீதும் படர்புகழ்
வித்து வாரி யிறைக்கின்ற மேன்மைபோ
லத்து வாரியில் வாரினர் நல்கிய
முத்து வாரி யிறைத்திடு முன்றிலான்.

(இ-ள்.) நீண்ட பத்துத்திக்கிலும் பரவுங் கீர்த்தியாகிய விதையை வாரியிறைக்கின்ற தன்மைபோல், சங்கங்கள் தவழ்கின்ற கடலிற்குளித்துவாரிவந்தவர்கள் கொடுத்த முத்துகள் இறைந்துகிடக்கின்ற முற்றத்தையுடையவன். எ-று. (௭)

ஆட லார்ந்த வரசன் புகழ்க்கடற்
கோடு கின்ற கலங்கதி ரோட்டுதேர்
கூடு செக்கர் பவளக் கொடிகளே
நீடு திக்கினர் நீரின் மனிதரே.

(இ-ள்.) வெற்றியமைந்த அரசன் கீர்த்தியாகிய கடலில் ஓடுகின்ற கப்பலானது சூரியனோடுகிற தேர்கூடிய செக்கர்வானமே அக்கடலிற்படர்ந்த பவளக்கொடிகள்நீண்ட எட்டுத்திக்கிலுமுள்ள மனிதர்களே அக்கடலிற் சஞ்சரிக்கும் நீர் மனிதர். எ-று. (௮)

எச்சரா சர முங்களிப் பெய்தவே
நச்ச ராவுல காளு நலத்தினான்
கச்ச ராவு கழற்பொலி காலினான்
வச்சி ராங்கத னென்றொரு மன்னவன்.

(இ-ள்.) அசையும்பொருள் அசையாப்பொருள்களாகிய எவையும் சந்தோஷத்தையடைய விஷத்தையுடைய ஆதிசேஷன் தாங்கும் உலகத்தை ஆளும் தன்மையுடையவன்; கச்சு ஆராவிய வீரகண்டாமணியைத் தரித்த காலையுடையவன் வச்சிராங்கத பாண்டியனென் றொருவனிருந்தான். எ-று. (௯)

படையிற் ரேற்ற வரசரைப் பல்சிறை
யிடையிற் போட்டன னென்கை வியப்பதோ
கொடையிற் ரேற்றிடுங் கொண்டலே யுஞ்சிறை
யிடையிற் போட்டன னென்ப திருக்கவே.

(இ-ள்.) அவன் யுத்தத்திற்ரேற்ற அரசர்களைச் சிறையிலிட்டானென்ப தென்ன ஆச்சரியம்! தன்கொடைக்குத்தோற்ற மேகத்தையுஞ் சிறையிற்போட்டானென்ப திருக்கும்போது. எ-று. (௧௦)

நாட்டு மவ்வர சன்னொரு நாளிலே
வேட்டை யாட விரும்பின னாகியே
மூட்டு சேனை கரிபரி யொய்த்திட
ஓட்டி னன்பரி யுத்தர திக்கிலே.

(இ-ள்.) இப்படி செயத்தைநாட்டிய வச்சிராங்கத பாண்டியன் ஒருநாள் வேட்டையாடும்படி மனத்திலெண்ணி யானை, குதிரை, சேனைகள்சூழக் குதிரையை நடத்திக்கொண்டு வடதிசையில் நடந்தான். எ-று. (௧௧)

துங்க வாம்பரி மீதிலன் ரேன்றலு
மங்கை வேழ மகன்றகன் ரோடின
திங்க ளின்குலச் செல்வனென் றஞ்சியே
யெங்கு மோடி யிருட்கண மென்னவே.

(இ-ள்.) சந்திரவம்சத்திற்பிறந்த அரசன்தாவும் சிறந்தகுதிரை மேலேறின மாத்திரத்தில் சந்திரனைக்கண்ட இருட் கூட்டம்போல் திக்கையையுடைய யானைக்கூட்டங்க ளஞ்சியோடின. எ-று. ()

வீறு மம்புலி யின்குல மேன்மையான்
வீறு மம்புலி யின்குலம் வீட்டின



னூறி லொன்று கடமைகொண் டான்பல
னூறி லொன்று கடமைகொண் டானரோ.

(இ-ள்.) சிறப்புள்ள அம்புலியென்னும் பேரினையுடைய சந்திர குலத்திற்பிறந்த மேன்மையினுல் இரமாப்படைந்த அழகிய புலிகளைக்கொன்றான்; ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு ஆள்கிறவன் வழியிற்நேரிட்ட கடம்பை மிருகங்களைக்கொன்றான். எ-று. ()

சேர மானினந் தன்னைச் சிதைப்பவன்
சேர மானினந் தன்னைச் சிதைத்தனன்
வார மாய்கலைச் சங்கம் வளர்த்தவன்
வார மாய்கலைச் சங்கம் விளைத்திட்டான்.

(இ-ள்.) சேரமானென்னும் பெயரையுடைய சேரனது சேனையை ஜெயித்தவன் ஒருமிக்க மானினங்களைக்கொன்றான்; அன்போடு ஆராய்கின்ற வித்தியாசங்கத்தை வளர்த்தவன்; அநேக கலைமான் கூட்டங்களை விளைத்துக்கொண்டான். எ-று. (௧௩)

சோனை போன்மத மாரி சொரிந்திடும்
யானை தேர்பரி யாள் முதலாகிய
தானை பின்னிடத் தான்றனி வாசிமேற்
கான நாவியைக் கண்டுதொ டர்ந்தனன்.

(இ-ள்.) சோனை மழைபோல் மதத்தைச் சொரிகின்ற யானை, தேர், குதிரை, காலாள் இவர் பின்னிட்டுப்போகத் தானொருவனாகவே குதிரைமேற் கொண்டவனாய் ஒரு புழுகு பூனையைத் தொடர்ந்தான். எ-று. (௧௪)

அந்த நாவி யகன்றரு ணைசலத்
தந்தி யெவல மாய்விரைந் தோடலு
முந்து வாசி யதன்பின் முடுகினன்
கந்த நாவி விழுந்தது கண்முனே.

(இ-ள்.) அப்படி அரசனாலே தாக்கப்பட்ட புழுகுபூனை சீக்கிரத்தில் அருணாசலத்தை வலமாகச்சுற்றி யோடினவளவில், வேகத்தோடுங் குதிரையைநடத்தினான்; அந்தப்புழுகுபூனை (அவன்) கண்முன்னேவந்து விழுந்தது. எ-று. (௧௬)

> பச்சை நாவி பருகினர் போல்விழுந்
> தச்ச நாவிதன் றேகம் விடுத்தெழில்
> விச்சை வேந்தர் துதிக்க விமானமே
> லிச்சை மேனிகொண் டேகி யெழுந்ததே.

(இ-ள்.) நாவியாகிய விஷம் சாப்பிட்டவர்கள்போல் விழுந்து பயத்தையுடைய புழுகுப்பூனை தன்தேகத்தை விட்டு வித்தியாதரர் முதலானவர்கள் துதிக்க விமானத்தின்மேல் திவ்விய தேகம் பெற்றுக்கொண் டெழுந்தது. எ-று. (௧௭)

> மேவு மந்த வாசன் விழுந்திட
> மாவும் வீழ்ந்து வடிவு தனைத்துறந்
> தோவி யர்க்கெழு தாவுருக் கொண்டொரு
> பூவி மானம தேறிப் பொலிந்ததே.

(இ-ள்.) தற்செயலாய் ஏறின வரசன் விழவே குதிரை இடர்விழுந்து தன்தேகம்விட்டுச் சித்திரக்காரரும் எழுதக்கூடாத திவ்வியரூபம் பெற்று ஒரு புட்பவிமானம் ஏறிப்பிரகாசித்தது. எ-று. ()

> கைவி லங்கனை யான்பரிக் காலின்வீழ்ந்
> தவ்வி லங்கை யரசனைப் போலவே
> செவ்வி லங்க லடியினிற் றேம்பினான்
> வெவ்வி லங்குட னோடில் விழார்களோ.

(இ-ள்.) யானைபோல்பவனான வச்சிராங்கதபாண்டியன் குதிரைக்காலினருகில் விழுந்து, அந்த இலங்காபுரியையாண்ட இராவணன்போல் அருணாசலத்தி னடியில் வருந்தினான்; மிருகத்தின்பின் ஓடினால் யார்தான் விழார்கள். எ-று. (௧௯)



> பாய்ந்த நாவி பரிப்பெயர் போய்ப்பழங்
> காந்தி சாலி கலாதரப் பேர்படைத்
> தாய்ந்த நண்பொ டருவியங் கண்ணராய்
> மோந்த ணைந்து மகிழ்ச்சியின் மூழ்கினர்.

(இ-ள்.) பாய்ந்து செல்கின்ற குதிரை நாவியென்னும் பேர் போய் பழய காந்திசாலி கலாதரனென்கிற பேர்படைத்தவராய் மிக்க நண்பாய் அருவிபோல் கண்ணிலிருந்து நீர்பெருக ஒருவர்க்கொருவர் கட்டியணைத்து உச்சிமோந்து சந்தோஷத்திலே முழுகினார்கள். எ-று. (௨௦)

> அன்ன வீரர்க ளவ்விடை நின்றுழி
> யொன்ன லர்க்கு முறுந்துய ருற்றிடும்
> மன்னர் மன்னவன் மற்றிது வந்தவா
> றென்ன வென்னவென் றேங்கிப் ரங்கினான்.

(இ-ள்.) அவ்வீரர்கள் அவ்விடத்தில் நின்றபோது தன் சத்துருக்களுக்குவந்த துக்கத்திலும் அதிகமாய்வருந்துகின்ற பாண்டியன் இது வந்தவகை யென்னவென்று இரங்கி வருத்தமுற்றான். எ-று. ()

> விஞ்சை மன்னர் விமானத்த ராகியே
> தஞ்ச மில்லவன் றன்புடை சூழ்ந்துநீ
> யஞ்ச லஞ்சலென் றங்கை யமைத்தனர்
> பஞ்ச வன்மகிழ் வோடும் பகருவான்.

(இ-ள்.) வித்தியாதரர்களாகிய இருவரும் விமானத்திலேறிக்கொண்டு தஞ்சமில்லாத பாண்டியனிடத்தில்வந்து நீபயப்படவேண்டாம் பயப்படவேண்டாமென்று கையமர்த்தினார்கள்; அப்போது பாண்டியன் மிகவுஞ் சந்தோஷத்தோடு சொல்வான். எ-று. (௨௨)

நீதி யாய்வரு நீரெவ ரித்துயர்க்
காதி காரணம் யாதிவ் வருந்துயர்
போது மாறெது போதியு மென்றவ
னோத வோதக் கலாதர னோதுவான்.

(இ-ள்.) நீதிபொருந்திய நீங்களிருவரும் யார்? உங்களுக்கு இப்படிவந்த துக்கத்திற்குக் காரணமென்னை? அதுசென்றது எவ் விதத்தினால் சொல்லுங்களென்று கேட்கக் கலாதரனென்பவன் சொல்லுவான். எ-று. (உ௩)

வாய்ந்த சாலி மதுரையின் மன்னனே
ஏய்ந்த விஞ்சையர் யாங்க ளிவன்பெயர்
காந்திசாலி கலாதர னென் பெயர்
ஆய்ந்த நண்பின ராய்விளை யாடினோம்.

(இ-ள்.) நெல்விளைகின்ற மதுரைக்கு அரசனே? நாங்கள் ஒப் பற்ற வித்தியாதரர்கள், இவன்பேர் காந்திசாலி, என்பெயர் கலா தரன் நாங்களிருவரும் மிகுந்தநேசராய் விளையாடிக்கொண் டிருந் தோம். எ-று. (உச)

மார வேளும் வசந்தனும் போலவே
யார வேபிரி யாதுறை காளிலே
சேர வூழ்வினை சென்று தொடர்ந்திட
மேரு மால்வரைச் சாரலின் மேவினோம்.

(இ-ள்.) மன்மதனும் அவன் சிநேகனாகிய வசந்தனும்போல; ஒருவர்க்கொருவர் பிரியாமல் வாசஞ்செய்யு நாளையில் முன்செய்த ஊழ்வினைவந்தடைய மகாமேருவின் சாரலில்போய்ச் சேர்ந்தோம். எ-று. (உரு)

வேறு.

மாச்சரிய மிக்கதுரு வாசமுனி வாழு
மாச்சிரம மேலருகி லந்தமுனி தானே



நீர்ச்சொரிய நெஞ்சுருகி நின்றமர மெல்லாம்
பூச்சொரியு நந்தவன மீதினிடை புக்கோம்.

(இ-ள்.) கோபமிகுந்த துருவாசரிஷி வாழ்கின்ற ஆச்சிரமத்தி னருகில் அந்த ரிஷி மனமுருகித் தண்ணீர்சொரிய வளர்ந்த விருட் சங்களெல்லாம் புட்பங்களைச் சொரியும் நந்தவனத்திற் புகுந் தோம். எ-று. (உகா)

புக்கவ னத்திற்சிறு புதற்களை மிதித்தான்
மிக்கவினை யேனுமதின் மென்மலர் பறித்தேன்
அக்கணமு ணர்ந்துமுனி யங்கிவிழி யாலே
நக்கவொளி மிக்கசடை கட்டவிழ வந்தான்.

(இ-ள்.) அப்படிப் புகுந்தவனத்தில் இக்காந்திசாலி அங்குள்ள சிறுபுதற்களை மிதித்தான், மிகுந்த வினையையுடைய நானும் அவை களிலிருக்கும் மென்மையாகிய புட்பங்களைப் பறித்தேன், அக்கண மே துருவாசரிஷி அறிந்து விழிகளால் நெருப்பைக் கொட்டிக் கொண்டு சடையவிழ்ந்துவிழக் கோபித்துவந்தார். எ-று. (உஎ)

முத்துமணி யாமெனமு கத்தினில் வியர்ப்ப
வித்துருமம் வைத்தனைய மெல்லிதழ் துடிப்ப
வுத்தரியம் வீழ்வதை யடிக்கடி யுயர்த்திச்
சித்திர வழற்பொறி தெறிக்கவிவை சொன்னான்.

(இ-ள்.) முத்துகள்போல்முகத்தில் வேர்வையுண்டாகவும், பவ ளம்போன்ற மிருதுவாகிய இதழ் துடிக்கவும், நழுவிப்போகின்ற வஸ்திரத்தை யடிக்கடி உயர்த்திக்கொண்டு சித்திரமாகிய அக்கினிப் பொறி தெறிக்க இவைகளைச்சொன்னார். எ-று. (உஅ)

செந்தபனர் தங்கதி ருறாதுசிறு காலு
நந்துமது கானுமொரு காலுமிதை நன்னா

முந்திலையு திர்ந்துபுல ராதுமுடி வெய்தா
இந்தவன மீதொருவ ரெய்தவெளி தாமே.

(இ-ள்.) சிவப்பாகிய சூரியகிரணமும் என்னுடைய் பயத்தினாலே வரக்கூடாது; தென்றற்காற்றும், வண்டுகளும், ஒருபோதும் இவ்வனத்தை யடையமாட்டாது; இலையுதிராது; வாடாது; நாசமடையாது; இவ்வனத்தில் ஒருவர்வருவதற்கு எளிதோ. எ-று. (௨௯)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சேவினார்க் கினிய பூசைக்
கணிமலர் செலுத்துங் காவில்
பாவிகாள் புகுந்தென் கோபக்
கனலிடைப் பஞ்ச தானீர்
மேவிய துரங்க மாகென்
றிவற்குறை விடத்தை யீந்தா
ளுவியாப் பிறப்பா யென்று
ஞண்மலர் பறித்த வென்னை.

(இ-ள்.) ரிஷபவாகனராகிய சிவபிரானுக்கு இனிமையாகிய பூசைக்காகச்சாத்தும் புட்பங்கள் இருக்கும் சோலையில் பாவிகளே! நீங்கள் புகுந்து என்னுடைய கோபமாகிய நெருப்பினிடத்தில் அகப்பட்டு பஞ்சானீர்கள், குதிரையாய்ப்போவென்று விஷம்போல் இக்காந்திசாலிக்குச் சாபங்கொடுத்தார்; புட்பம்பறித்த என்னைப் புழுகுபூனையாய்ப் போவென்று சபித்தார் துருவாசரிஷி. எ-று. (௩௦)

கோபமே தவம தாகப்
பலித்திடுங் கொடியோ னிட்ட
சாபமேல் வரவே நாங்க
ளிருவருந் தளர்ந்து ஞானத்



தீபமே யருளே யன்பர்
செல்வமே யெனச்சென் றேத்திப்
பாவமே விடுமிச் சாப
மொழியுநாள் பகர்தி யென்றோம்.

(இ-ள்.) கோபமே தவமாகப் பலித்த பொல்லாத இருடியிட்ட சாபம் எங்கள்மேல்வர, நாங்களிருவருந் தளர்வடைந்து ஞானவிளக்கே! கிருபையே! பத்தருடைய செல்வமே! என்று வணங்கிப் பாவம் உண்டானதினால் எங்கள்மேல் வந்தசாபம் ஒழியுநாள் என்றைக்குச் சொல்லுமென்று கேட்டோம். எ-று. (௩௧)

முனிவது தவிர்ந்து சாப
முனிவனு மொழிவா னிந்தத்
தனிவருஞ் சாபஞ் சோணா
சலத்தினை வலஞ்செய் தாற்போம்
மனிதருஞ் சுரரும் போற்று
மலைவலம் புரிகை தானு
மினிமையாம் பாண்டி நாட்டி
னிறைவனா யெய்து மென்றார்.

(இ-ள்.) துருவாசரிஷிக்குக் கோபம்நீங்கி நானிட்ட இவ்வொப்பற்ற சாபம் திருவண்ணாமலையை வலமாகவந்தாற் போகும், மனிதரும் தேவரும் வணங்கும் அந்த மலையைப் பிரதக்ஷணஞ் செய்தல் சிறந்த பாண்டிய தேசத்தரசனாற் கிடைக்குமென்றார். எ-று. (௩௨)

என்றொரு கதையுஞ் சொல்லா
னெறியுறற் கிரிய தாக
நின்றவெம் மிறைவன் முன்னா
னெடுவெண் கடவு ளீந்த

மன்றல்சேர் கனியைத் தன்சே
  யிருவரும் வருந்திக் கேட்க
வின்றுல கனைத்துஞ் சூழ்ந்தோர்க்
  களிப்பமென் றிறையுஞ் சொன்னான்.

(இ-ள்.) இப்படிச்சொல்லி ஒரு கதையுஞ்சொல்வார்; அக்கினி மலையாய்நின்றசுவாமி, முன்னே வருணன்கொடுத்த வாசனைபொருந்திய மாம்பழத்தைத் தமதுபிள்ளைகளாகிய விநாயகர், சுப்பிரமணியர் இருவரும் வருந்திக்கேட்க, இன்றைக்குள் உலகமுழுதுஞ் சுற்றிவந்தவர்க்கு இப்பழங்கொடுக்கின்றேனென்று சொன்னார். எ-று. (௧௧)

கந்தனு மயிலி லேறிக்
  கடலுல கனைத்துஞ் சூழ
முந்தினன் கரிய வானை
  முகத்தவ னெழுந்தெல் லோர்க்குந்
தந்தையாந் தனது தாதை
  தனைவலம் புரிந்தான் றந்தை
மைந்தனைத் தழுவி வேண்டும்
  வரத்துடன் கனியு மீந்தான்.

(இ-ள்.) சுப்பிரமணியரும் மயில்வாகன மேறிக்கொண்டு சப்தசமுத்திரஞ் சூழ்ந்த பூமிமுழுதுஞ் சுற்றிவந்தார்; யானைமுகமுடைய விநாயகர் எழுந்திருந்து சுவாமிதானே உலகமாயிருக்கிறார், அவரைச் சுற்றிவந்தால் உலகத்தைச் சுற்றிவருதலொக்குமென்று யார்க்குந் தகப்பனாகிய தன்னுடைய தகப்பனைப் பிரதக்ஷணஞ்செய்தார்; சுவாமி மகனைத் தழுவிக்கொண்டு வேண்டியவரங்களும் பழமுங்கொடுத்தார். எ-று. (௧௨)

வேலினன் கடிது மேவிக்
  கனிதா வெனவத் தம்மைக்
காலினால் வலமா யிந்தக்
  கரிமுகன் வந்தா னேழு



தாலமே வலஞ்செய் தாலும்
  பலபல தவஞ்செய் தாலும்
பாலகா நமைச்சூழ் தெய்வப்
  பலத்தினுக் கிணையோ பார்க்கில்.

(இ-ள்.) சுப்பிரமணியர் சீக்கிரத்தில் பூமியைச்சுற்றிவந்து பழங்கேட்கச் சுவாமி நம்மைவிக்கினேசுரன் காலால்நடந்து சுற்றிவந்தான்; ஏழுலகத்தை வலஞ்செய்தாலும் பலபலவாகிய தவத்தைச் செய்தாலும் மகனே! நம்மைச் சுற்றிவரும் பலனுக்கு ஒப்பாகுமோ பார்க்குமிடத்தில். எ-று. (௧௩)

செம்மலை யுருவா நம்மைத்
  தினம்வலம் புரிந்தோர் வேதன்
றம்மினு மதிக மாலோன்
  றனக்குமே லதிகம் பார்க்கி
லும்மினு மதிக ரிந்த
  வுமையினு மதிகர் மைந்தா
எம்மினு மதிக மென்றா
  னெவர்க்குமே லதிக மானோன்.

(இ-ள்.) சிவப்பான மலையுருவமாகிய நம்மை தினம் வலம்வந்தவர்கள் பிரமனிலும் அதிகராவார்; விட்டுணுவிலும் அதிகராவார்; பார்க்கில் உம்மிலும் அதிகராவார்; பார்வதியிலுமதிகராவார்மகனே! எம்மைப்பார்க்கிலும் அதிகராவர் என்றார். எல்லார்க்கு மேலாகிய சிவபிரான். எ-று. (௧௪)

மாசிலா நமது மேனி
  வரைதனக் கமரர் தாமும்
பூசனை புரிய மாட்டா
  ரதைவலம் புரிந்த பேருக்

காசையா யளிக்கும் பூசை
நமக்கினி தளிக்கும் பூசை
கூசமா றிழைத்த திங்கு
நமைச்செயுங் கொடுமை யாகும்.

(இ-ள்.) குற்றமில்லாத நம்முருவமாகிய இம்மலைக்குத் தேவர்களும் பூசைபண்ண மாட்டார்கள்; அதை வலமாகச் சக்கிரவர்த்தி யவருக்கு ஆசையுடனே செய்கிறபூசை நமக்கு இனிதாகச் செய்கிற பூசையேயாம்; அவர்களுக்குக் கூசம்படிசெய்த தீமை நமக்குச் செய்த தீமையே யாமென்று சுவாமி சுப்பிரமணியருக்கு அருளினார். எ-று. (௧௭)

என்பது மொழிந்தா னந்த
னெனச்சொலி முனிவன் போனான்
பின்பதன் படியே நாவி
புரவியாய்ப் பிறந்தோ மின்று
தென்புவி யுடையாய் நின்றற்
றிருமலை வலமும் பெற்றே
மின்பொலி பழய கோலம்
படைத்தெழில் விமானத் தானோம்.

(இ-ள்.) இப்படிச் சுவாமி சொன்னாரென்று குருவாசாரியார் சொல்லிப்போனார்; பின்பு அப்படியே குதிரையாகவும் நாவியாகவும் பிறந்தோம்; பாண்டியதேசத்தையுடைய அரசனே! இன்றைக்கு உன்னால் திருமலையைப் பிரதட்சணஞ்செய்தோம்; மின்னல்போல் பிரகாசிக்கின்ற பழைய உருவம்பெற்று விமானத்தில் ஏறினவர்களானோம். எ-று. (௧௮)

எங்கடம் வாலி தான்பா
விடுக்கவவ் வந்தடைந்த திக்க
வெங்கனல் வரையை மாலின்
மிசைவலம் வருகை யாலே



பொங்கிய ததுவும் பூசை
புரிந்திடிற் போமென் றோதித்
தங்களூர் புகுந்தார் காந்தி
சாலியுந் தானு மாக.

(இ-ள்.) எங்களுடைய சரித்திரமிது; அக்கினிசொரூபமாகிய இம்மலையைக் காலினால் வலஞ்செய்யாமல் குதிரையிலேறி வலஞ்செய்தபடியினாலுனக்குத் துன்பம்வந்துசேர்ந்தது; அதுவுஞ் சுவாமியைப் பூசைசெய்தாற் போமென்று சொல்லிக் காந்திசாலியுங் கலாதரனுந் தங்களூருக்கு போனார்கள். எ-று. (௧௯)

வேழமும் பரியுந் தேரும்
வீருஞ் சுவடு நாடிச்
சூழமந் திரிக ளோடுஞ்
சூழ்ந்தனர் துயரந் தீர்ந்தான்
தாழையின் கமுகின் காடுந்
தவளவான் கதிரைத் தீண்டும்
வாழையுங் கரும்பின் சாற்றின்
வளர்ந்திடும் வையை நாடன்.

(இ-ள்.) அதன்பின்பு யானையும், குதிரையும், தேரும், காலாள்களும், அடிபற்றிக்கொண்டு மந்திரிகளுடனே அரசனை சுற்றிக்கொண்டார்கள்; அப்பொழுது வியசனம்நீங்கினான்; தென்னமரங்களும் கமுகவனமும் சந்திரனைத்தழுவும் வாழைமரங்களும் கரும்பின்சாற்றினால் வளர்ந்திடும் பாண்டியதேசத்துக் கரசனாகிய வச்சிராங்கத பாண்டியன். எ-று. (௨௦)

ஆதனுங் கதனு மைந்தன்
றனைக்கடி தழைப்பித் தாதி
பாதனு மெனவிப் பாரைப்
புரவெனப் பகர்ந்தான் பில

விரதனுங் கதனைக் கோர
வதன்முன்ம் விடைபெற் றனை
யிரதமான் மருங்குஞ் சூழப்
பதிபுகுந் திறைமை செய்தான்.

(இ-ள்.) வச்சிராங்கத பாண்டியன் தன் பிள்ளையாகிய இரத்தினாங்கத பாண்டியனைச் சீக்கிரத்தில் வரவழைத்து, முன்னால் நமது வமிசத்திற் பிரபலனாயிருந்த பரதன்போல் இராச்சியத்தைக் காப்பாற்றென்று சொன்னான்; அவ்வார்த்தையைக் கேட்பதற்கு முன்னமே விடைபெற்றுக்கொண்டு யானை தேர் முதலாகிய சேனைகள் சூழ மதுரைக்குப்போய் இராச்சியபரிபாலனஞ் செய்தான் இரத்தினங்கதன். எ-று. (௪௧)

முறையினு விறையின் வந்த
கனகமு முத்துந் தெவ்வர்
திறையினு ளந்த பொன்னுந்
தினந்தொறுங் களிற்றின் மேலே
இறைவனுந் தனது தாதைக்
களித்திட விறைவன் வேணிப்
பிறையினுற் கினிய பூசை
திருப்பணி பெரிதுஞ் செய்தான்.

(இ-ள்.) நியாயமாக ஆறிலொருகடமைகொண்ட திரவியமும், கடலிற்குளித்து வாரிவந்த முத்துக்களும், சத்துருக்களால் இறையிட்ட பொன்னும், தினந்தோறும் யானையின்மேலேற்றி அரசனாகிய தன் தகப்பனுக்கு அனுப்புவிக்க, வச்சிராங்கத பாண்டியன் சடையில் சந்திரனைத்தரித்த சுவாமிக்கு இனிமையாகிய பூசை திருப்பணி பெரிதாகச் செய்தான். எ-று. (௪௨.)



செய்த பின் றவமதாகிக்
கவுதமாச் சிரமத் தோர்பா
லெய்திய பன்ன சாலை
யியற்றிநம் பாவந் தீர்க்கு
மைதவழ் மிடற்றாற் கன்பாய்
மலைவலஞ் செயுநா ளந்தக்
கைதவற் கெதிரே வந்தான்
கைதவர்க் கெதிரே வாரான்.

(இ-ள்.) அருணசலேசருக்குத் திருப்பணியும் பூசைமுதலானவைகளும் சிறப்பாகநடந்தபின்பு, தவஞ்செய்வதற்கு நினைத்து கௌதமருடைய ஆசிரமத்திலொருபக்கத்திற்சேர்த்து பர்ணசாலைகட்டி நம்முடைய பாவத்தைத் தீர்க்கின்ற நீலகண்டமுடைய சுவாமிக்கு அன்பாய்க் கிரிப்பிரதட்சணஞ் செய்கின்றநாளில், கைதவனாகிய பாண்டியனுக்கெதிரே தோன்றினார், வஞ்சம்பொருந்திய மனத்தையுடையவர்க ளெதிரே வாராத பரமசிவன். எ-று. (௪௩.)

அணிச்சிறு பிறையும் போத
வருள்பொழி விழியு நீல
மணிக்கறை மிடறு நாலு
புயங்களு மலர்க்கை மானுங்
கணிச்சியும் விடையின் மீதி
லிருப்பதுங் கண்டேன் பாவப்
பிணிச்சிறை விடுப்ப தென்றே
வெனச்சொலிப் பெரிதுந் தாழ்ந்தான்.

(இ-ள்.) அழகு அமைந்த சிறிய சந்திரனையும், மிகவும் கருணை பொழிகின்ற கண்களையும், நீலமணிபோல் பிரகாசிக்கின்ற கண்டத்தையும், நான்குபுஜங்களையு மலர்போன்றகையில் மானு மழுவுமுடையவராய் ரிஷப வாகனத்தின்மேலிருப்பது பார்த்து என்று

டைய பாவப்பிணிப்பு என்னைவிடுவது என்றைக்கோவென்று சொல்லி மிகவும் பாண்டியன் வணங்கினான். எ-று. (௪௯)

வேறு.

அண்ணாமலை யுடையாய் மழ
விடையா யணி சடைசேர்
தண்ணாமலை யுடையா யெமை
யுடையாய் நுதல் தழுவுங்
கண்ணாமலை வுடையா வினை
கடவா ரறி வறிதற்
கொண்ணாமலை யுடையா யுமை
யுண்ணா முலை தலைவா.

(இ-ள்.) அண்ணாமலை யென்னும் பெயரை யுடையவரே! இளமையாகிய ரிஷபவாகனத்தை யுடையவரே! அழகுள்ள சடையில் குளிர்ந்த கங்கையையுடையவரே! எங்களையாட்கொ[illegible] உடையவரே! நெற்றியிற் கண்ணுடையவரே! மயக்கமுடையவரும் பாவங்களைக்கடக்காத பாவிகளறியப்படாதகைலாயத்தி லிருக்கின்றவரே! உண்ணாமுலையாகிய பார்வதியினது தலைவரே. எ-று. (௫௰)

மையாகிய வினையே னுனை
யொருமா வினில் வலமாய்ச்
செய்யாதது செய்தே னிது
தீரென் றுரை செய்தான்
பொய்யா தவன் மொழிகின்றது
கண்டே யருள் பொழிவுற்
றையானன முடையான் மழ
விடையா னிவை யருள்வான்.



(இ-ள்.) தீவினையை யுடையவனாகிய நான் உம்மை ஒரு குதிரையிலேறி வலமாகவந்து நான்செய்யத்தகாத காரியம் செய்ததனால் பொறுத்தருள வேண்டுமென்று பொய்யில்லாத பாண்டியன் சொல்ல, அதைக்கேட்டு கிருபையுண்டாகி இளமைபொருந்திய ரிஷபவாகனாகிய ஐந்து திருமுகத்தையுடைய பரமசிவன் அருளிச்செய்தார். எ-று. (௫௧)

மன்னாமக பதிநீ யெமை
மதியா தொரு குலிச
மன்னாள்விட வுற்றா யத
னாலே நர் வடிவா
யின்னாதன பெற்றா யினி
யிமையோ ரதி பதியாய்ப்
[illegible]ன்னாடனை யென்றே வரம்
[illegible]ந்தே யிறை மறைந்தார்.

(இ-ள்.) [illegible]ராங்கதபாண்டியனே! நீ பூர்வஜன்மத்தில் தேவேந்திரனாயிருந்தாய், அந்நாளில் நம்மை அலட்சியஞ் செய்து வச்சிராயுதத்தை நம்மேல் பிரயோகஞ்செய்தாய், அதனால் பூமியில் மனிதனாகப் பிறந்து துன்பமடைந்தாய், அதன்பின்பு (இப்போது நீ) நம்மைப் பூசித்துவலம்வந்த படியினால் இனித் தேவர்களுக்கு அதிபதியாகிய தேவலோகத்துக்குப் போவென்று வரங்கொடுத்து சுவாமி மறைந்தார். எ-று. (௫௨)

அருணைப்பதி வள மிப்படி
யருணை புரி கிளைவோர்
மரணத்துக ளடையார் சிவன்
வடிவா குவ ரென்றான்

கருணைக் கொரு கடலேபர
கதி பெற்றன மென்றே
சரணத்திடை பணிந்தா னமன்
றனை வாட்டிய தவத்தோன்.

(இ-ள்.) அருணாசலத்தின் வளமைப்படி, இத்தலத்தை நினைப்பவர்கள் மரணத்துன்பம் பொருந்தாமல் சிவனுடையருபம் பெறுவார்களென்று நந்திதேவர்சொல்ல, எமன்வாமெம்படிச்செய்ததவமுடைய மார்க்கண்டேயர்கேட்டு இருபாசமுத்திரமானவரே! உம்மால் பாகதியடைந்தேனென்று அவர்பாதத்திலே வணங்கினர். எ-று. (௬௮)

இக்காதையின் பொரு ளானதோ
ரெழுத் தாகிலுந் தெளிந்தோர்
தக்காருடன் படித்தோர் சிவ
சாயுச் சியம் பெறுவார்
மூக்காலமு மிது கற்றவர்
வினவிப் பொருண் முடிப்பார்
புக்கார்சிவ கதி யென்பது
புதுமைப் பொரு ளன்றே.

(இ-ள்.) இக்கதையில் ஒருஎழுத்தினது பொருளாயினும் அறிந்தோர்களும், பெரியோர்களோடு படித்தவர்களும், சிவசாயுச்சியமடைவார்கள்; திரிகாலத்திலுமிதைக் கற்றவர்கள் இதின் அருத்தத்தைக்கேட்டு முடிப்பவர்கள் சிவகதியிற் சேர்வார்களென்பது ஆச்சரியமாமோ. எ-று. (௬௯)

ஆறாவது
வச்சிராங்கதபாண்டியன்சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் ௬௱௫௯.



10. திருவண்ணாமலையை யாசகனுட வல்லாளமகாராஜனுக்குச் சிவபெரு
மான் புத்திரனாகக்கோன் நீ மன்றாத்து, பிள்ளையாக ஓடாதபடியால் இவ்வாச
னிக்குங் காரசீக்க மகாத்மியம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

# வல்லாளமகாராஜன் சரித்திரம்.

சந்திரசடாதரராகிய சிவபெருமான் திருக்கோலங்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ அருணையம்பதியின்கண் அக்கினிகுல திலகனும் பக்த சிரோமணியுமான வல்லாளமகாராஜ னென்பவன் மனுநீதி முறைவழாது செங்கோனடாத்திவந்தனன். அவ்வரசற்கு இகத்தின்கண் ணடைதற்குரிய வின்பங்களை மலியச்செய்யும் அளவிறந்த செல்வமிருந்தும், புத்திரப் பேறின்மையான் மனந்தளர்ந்தவனு யப்பேற்றை யடையுமாறு மந்திரிகளிடத்திற் பரியாலோசித்து யாவராயினுந் தன்னிடமிருந்து எதை யடையக்கருது கின்றனர்களோ அதை அவர்கள் மனோபீஷ்டப் பிரகாரம் அளிப்பதாக ஆகாயத்தை யளாவத் துவசங்கட்டி உலகெங்கணும் முரசறைவித்தான். அவ்வாறே வேண்டுமவர்கள் வேண்டியவண்ணம் நட - தருமங்களையும் முறைவழு நடத்திவருங்கால் முற்றுமுணர்ந்தும் அறியார்போல் ஜை

லாயத்தில் வீற்றிருக்கும் நம்பெருமான் காதரால் வல்லாளராஜன் உலகின்கண்செய்யும் தருமங்களையும் அதனாலுண்டான புகழையும் அறிந்து அன்புகூர்ந்து அவ்வரசனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு கருணாநிதியாகிய கடவுள் தங்கணங்களுடனும் தமது நண்பனாகிய குபேரனும் உபசங்கமர்களாகப் புடைசூழவும் தாம் அச்சங்கமக்கூட்டத்தலைவராக வேடங்கொண்டு வல்லாளனால் பரிபாலிக்கப்படுவரும் அருணையம்பதியில் ஆரோகணித்து கணிகையர் வீதியிற்சென்று சிற்றின்பவாசையி லமிழ்ந்தினவர்போல நடித்து தங்களுக்குரிய விரகதாபத்தை தீர்த்துக்கொள்ளுவதற்காக தங்களுடன் மனமொத்த லீலைகளைச்செய்து போகநுகர்வதற்கு ஓர் இரவுமுழுவதற்கு முரியபொருளைத் தருவதாகத் தீர்மானித்து அவ்வாறே தன்கூட்டங்களை யெல்லாம் கணிகையர்கள் வீடுகளொன்றேனும் தவராமல் விடுத்து அன்றிரவு விடியுமளவும் அவரவர்கள் கைக்கொண்ட மாதர்களை விட்டுப் பிரியாதிருக்கும்படி தங்கூட்டத்தவர்களுக்குக் குறிப்பாக வுரைத்து தாம் வல்லாளமகாராஜனைச் சோதிக்க வெண்ணங்கொண்டு அரண்மனையைநோக்கிவர, அவ்வரசனால் எதிர்கொண்டுசென்று ஆராதிக்கப்பட்டவராய்விளங்கும் சங்கமர் உருக்கொண்ட மான் மழு சதுர்புஜ காளகண்ட திரியம்பகராகிய நம்பெருமான் தாம் மன்மதன்கணையால் கணைபட்டவர்போல் நடித்து அதனை நிவிர்த்திப்பான் தமக்கு ஒருமாதைத்தேடிவிடும்படி செய்யவேண்டுமென்றும் அதனாலவ்வாசனது புகழ் நிலவுலகின்கண் பிரகாசித்தலோடும் வானுலகிலும் பிரகாசிக்குமென்றுங் கூறினர்.

அரசனவ்வாறு தருவதாகச் சங்கமருக்கு வாக்களித்து, தூதர்களைநோக்கி, கணிகையர் வீதிசென்று மிக்க ரூபலாவண்யம் பொருந்திய ஒருமாதை அழைத்துவரும்படி உத்திரவுசெய்ய வவர்களுமப்படியேபோய் நோக்குங்கால் கணிகையர்களெல்லாம் ஒவ்வொரு சங்கமர்களோடும் ஆனந்தித்துக் கொண்டிருக்குஞ் சம்பிரமங்களைக் கண்டு இன்று முடியாதென்று அரசனிட முரைத்தனர். அஃதை யரசன்கேட்டு தாமேசென்று அழைத்துவருவதாய் போனபொழுது கணிகையர்கள் வீடுதோறுந் தவராமல் ஒவ்வொரு சிவவேடர்களிருந்துகொண்டும், மாதர்களோடுகலந்து லீலைகளைப்புரிந் தானந்தித்துக்கொண்டு மிருப்பதை நோக்கியும் யாராவது ஒருமாது தன்னெண்ணத்திற் குடன்படுவர்களுக்கு தந்நாடு, ராச்சியபாரம் முதலிய சம்பத்துகளைக் குறைவறக்கொடுப்பதாகக் கொண்டிருக்கும் எண்ணத்தை வெளியிட்டும் ஒருவரும் அதற்கிணங்காததால் மனக்கிலேசமுற்று இன்னது செய்வதென்று தோன்றாது இன்றோடே தன் புகழுங் கூனம் வந்துவிடுமே என்பதை யுட்கொண்டவனாய் அரண்மனைக்குச் சென்று அயர்வடைந்திருந்தான். பூரணைச்சந்திரோதயம் போன்ற அவ்வரசனது முகாரவிந்தம் வேறுபட்டிருத்தலை நோக்கி தன்பத்தினிமார்களி லிளையவளான சல்லமாதேவி தன்னாயகனுக்குற்றுள்ள கவலையையறிந்து அரசனது கீர்த்தியை நிலைநாட்டக்கருதி அச்சங்கமரது மனோபீஷ்டத்தை நிறைவேற்றும்படி ஆக்ஞாபித்தால் உடன்படுந் தனதுஎண்ணத்தை நாயகனுக்குத் தெரிவித்தாள். அதனைக்கேட்ட வல்லாளன் அதிகசந்தோஷமடைந்து சங்கமருக்குத் தான் அளித்தவாக்கு நிறைவேறும்படி முன்வந்தது மிய தன்மைவாய்ந்த தன்னிளைய மனைவியினது திறத்தை மெச்சி அவ்வாறேநடத்த ஆக்ஞாபித்து பின்னர் சங்கமர் சன்னிதானத்தில் வந்து "தேவரீர் தமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக பள்ளியறைக்கு எழுந்தருளி கிருபை பாலிக்கவேண்டும்" எனப் பணிந்து அஞ்சலியத்தனாய் நின்றவரசனைச் சங்கம ருருத்தரித்த பரம்பொருள் தண்ணளிகூர்ந்து அரசனால் நியமிக்கப்பட்ட சுவர்த்த கசிதமான அம்சதூளிகா மஞ்சமுதலியன வமைக்கப் பெற்றுள்ள திருப்பள்ளியறைக்கு எழுந்தருளி அம்மஞ்சத்தின்மீது யோகநித்திரையி லமர்ந்தனர்.

இதனிடையில் தன்னாயகனை வாசனாற் பணிக்கப்பட்ட ஆ
ணையை சல்லமாதேவி சிறமேற்கொண்டு சுகந்தபரிமள தைலா
களால் நீராட்டப்பெற்று பீதாம்பரமுதலிய பட்டாடைகளை யணி
ந்து சூரியகிரணங்களையுந் தோற்கச்செய்யும் நவமணிக ளிழைத்
துள்ள ஆபரணங்களாலும் களபகஸ்தூரி முதலிய வாசனைத் தி
வியங்களாலும் நறுமலர் மாலைகளாலும் அலங்காரஞ் செய்துகொ
ண்டு தன்னாயகனைத் தியானித்தும் சங்கமரைக்கூடுந் தொழிலை
கருதினவளாயும் மயிற்சாயலையுடைய நடையோடு மிளமான்போ
ன்ற மிரண்ட பார்வையோடும் சங்கம ரமர்ந்திருக்குந் திருப்பள்ளி
யறையை நோக்கிச்சென்றுட்புகுந்து சிவனடியாரைக் குளிர்ந்த பார்
வையால் நோக்கி அவர் நித்திரைசெய்வதாக வெண்ணி அதிலிருந்
தும் விழிக்கச்செய்வான் கருதி தனதுகரத்திலமையப்பெற்ற வீணை
யைமீட்டி கேட்டபேருக்கு ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய கீதத்
தை யூட்டியும், சுகந்தபரிமளங் கமழக்கூடியதும் புளகாங்கிதம்
செய்யக்கூடியதுமான களபம் பனிநீர் முதலியவைகளை முறையே
அவர் தந்திருமேனியிற் புரோட்சித்தும், துயினீங்காததுகண்டு மார
னது வெவ்விதாகிய கணைகளால் துன்புற் றயர்வடைந் திருப்ப
தொன்று கவலையுற்று சோகவிகாரந்தீர்க்க ஆலிங்கனம் என்னும்
மருந்தை ஒருகணமேனுந் தாமதிக்காமல் அருத்த உன்னி; தனது
இருகரங்களாலும் அவரைமெய்யுடன் சேர்த்தணைக்கத்தொடங்குங்
கால் நம்பெருமானாகிய அறிவுக்கறிவாய்நின்ற அற்புதன் தாம்கொ
ண்ட சங்கம ருருவங்கரந்து, இளங்குழந்தையாகி யழுங்குரலைக்கே
ட்டு இதுவும் பரமன் திருவிளையாடலென் றவ்வரசி யானந்திக்க
வவள் தன்னிருகரங்களிலு மேந்தப்பெற்றுள்ள செவ்விய பாலகனா
யுத் தோன்றினார். அதனை யம்மாதுசிரோமணியும் வல்லாளமகா
ராஜனும் தம் அருந்தவத்தை நிலைபெறச்செய்து புகழைநிலைநாட்டும்
பேறு இதுவோ எம்பெருமான் நமக்களித்தது என்று அக்குழந்தை
யின் சிரகாந்தியையும் அருள்நிறைந்தபார்வையையும் செவ்விதழு



இதழமைந்த வாயையும் நோக்கி நோக்கி முத்தமிட்டு உச்சிமோந்து மிக்ககாதலோடும் பேரானந்தங்கொண் டிருக்கையி லவர்கள் வியப்புற்று துக்கசாகரத்தி லமிழும்படி மாயமாய் எம்பெருமான் மறைந்து திருக்கைலாய கோலத்தோடும் ஆகாயத்திற்றோன்றி தேவதுந்துமிகளார்ப்பரிக்கவும் வானவர்கள் புஷ்பமாரிவருஷிக்கவும், இமையோர்கள் அஞ்சலியத்தராய்ப் போற்றவும், தரிசனந்தந்தார். வல்லாளமகாராஜன் அக்காக்ஷியைக் கண்டு ஆவலோடும் பூமியிற் பணிந்தெழுந்து இருகரங்களையும் கூப்பி "அடியார்களைச் சோதித் தாட்கொள்ளும் சோதியே சரணம், அடியேனுக்குப்பின் னிவ்விராச்சியபாரந் தாங்குவதற்கும் சாஸ்திரவிதிப்படி எனக்கு நடத்தவேண்டிய கிரியைகளை நிறைவேற்றுவதற்குமாக ஒரு புதல்வனை கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று" தொழுதான். அதற்குப் பரமசிவம், அரசனே உனக்கு நாமே பிள்ளையாய்த் தோன்றின படியால் உனது வாணாளுக்குப்பின் புத்திரன் செய்யவேண்டிய சகல கிரியைகளையும் நாமே செய்துவருவோமென்று திருவருள்புரிந்து தம்பதிசென்றடைந்தார் பிறகு மிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராஜன் அருணையம்பதியை நெடுநாளாக ஆண்டுவந்தான்.

---

கலிநிலைத்துறை.

பாச முற்றவச் சிராங்கத பாண்டியன் சீரை
வாச மாய்நவின் றேமினி * வல்லாளனுக்
கீச னேமக வாகவந் தெய்திப்பின் னுறுதி
ஒசை யாயருட் செய்ததை யுமக்குரை செய்வாம்.

---

* ஆதியில் விஜயநகரத்தை யரசாண்ட கிருஷ்ணதேவராயர் விஜயத்தாலும் பிரதாப உருவத்தாலும் மேற்படி வல்லாளமகாராஜன் வம்சந் தெரிந்துகொள்ளலாம்.

(இ-ள்.) சந்திரசேகர மூர்த்தியாகிய பரமசிவனுடைய பாத பத்மங்களில் மிகவும் அன்பினையுடைய வச்சிராங்கதபாண்டியன் சரித்திரத்தைச் சொன்னோம்; இனி, வல்லாள மகாராஜனுக்கு (அரிபிரமாதி தேவர்களுக்குஞ் சிவஞானியும், பார்வதிதேவியாரோடுந் தேவகணங்கள் பணிந்து போற்றும்படியாயும், ஸ்ரீ கைலாயகிரியில் எழுந்தருளியிருக்கும்) பரமசிவமே புத்திரனாகத் தோன்றி மறைந்து பின்னர், அக்கடவுள் விசும்பின்கண் வெள்விடையின்மீதெழுந்து அவ்வரசனுக்கு அருள்சரித்தையும் மார்க்கண்டேய முனிவரே? உமக்குச் சொல்லுகிறோமென்று நந்திதேவர் திருவாய்மலர்ந்தருளினார். எ-று. (௪)

மணி கொழித்திடு மாடமா ளிகைதவழ் சோலை
கனிகொ ளம்பரத் தினையுறு சிறப்பினை யார்ந்த
கணிகை யாமவர் கற்பினை யருந்ததி தனக்கே
யிணையெனச் சொல் விளைக்குமா வருணையம் பதியாம்.

(இ-ள்.) மாணிக்கம், மரகதம், வயிரம், வயிடூரியம், கோமேதகம், புட்பராகம், இந்திரநீலம், முத்து, பவளமென்னும் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளும், ஆகாயத்தையளாவியுயர்ந்து தீஞ்சுவைக்கனிகளை உதிர்க்குஞ் சோலைகளும், மலர்ச்சோலைகளெங்கும் நிறைந்து பரிமளிக்கவும், அருந்ததிக்கொப்பான வடிவழகும் கற்பும் வாய்ந்த கணிகையர்கள் வசிக்கும் அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (௫)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இத்தகை சிறப்பை வகித்திடு நகருக்
கிறைவனும் வல்லாள பூபன்
சத்திய மொழியா னற்குண முடையான்
மன்னுயிர் மன்னுயி ராகப்



பத்தியாய் நாளும் பாதுகாத் திடுவோன்
பகருஞ் சோனற் குலத்தோன்
அத்தனா ரடியை நித்தமுந் துதித்தே
யவர்திருப் பணிசெய வந்தோன்.

(இ-ள்.) இத்தன்மை பொருந்திய புகழினையுடைய அருணாசலம் என்னுந் தலத்திற்கு அரசனாகிய வல்லாளமகாராஜனென்பவன் மிகவும் சத்தியவாக்கிய முடையவன்; சகல வுயிர்களையுந் தன்னுயிர்போற் பாதுகாப்பவன்; அக்கினிவம்சத்தில் உதித்தவன்; சகலேசனாகிய பரமசிவனுடைய உபய சரணாம்புயங்களைத் தினந் தினந் திரிகாலமுந் துதிசெய்பவன்; அக்கடவுளினது திருப்பணிசெய்ய வுதித்தவன். எ-று. (௬)

பிறர்பொரு ளாசை யற்றவன் றனது
பெண்டிரை யன்றிமற் றோரை
முறையுடன் றமக்கை தங்கைய ரெனவு
மொழிந்திடு நன்னடை யுடையோன்
நெறியுட னாறி லொருபங்கு குடிக
ணிலையுடன் றரப்பெறும் புனிதன்
கறைமிடற் றண்ண லாலயப் பணியைக்
கருத்துகந் தியற்றுநல் லன்பன்.

(இ-ள்.) ஒருவன் பொருளின்மீது இச்சையென்பதை மறந்தவன்; தன்மனைவியாரையன்றி மற்றஸ்திரீகளைத் தமக்கைமார்களைப் போலவும், தங்கைமார்களைப் போலவும், மனத்திற் பரிவுகொண்டு பேசுவன்; குடிகளிடத்தில் ஆறிலொருபங்கு பகுதிபெறப்பட்டவன்; ஆலகாலமுண்ட ஸ்ரீகண்டராகிய அருணாசலேசரது ஆலயத் திருப்-

பணியை மனக்களிப்போடும் நடத்தும் மேன்மைபொருந்திய பத்தியையுடையவன். எ-று. (௪)

நீதியாய்ப் புலியும் பசுவுமோர் துறையி
னெருங்கியே புனலுண்டு வசிக்கும்
போதனை யருளும் வேதியர் மறையைப்
புகன்றிட யாவருங் கேட்பார்
ஆதியாங் கடவு ளருட்பெற நகரை
யலங்கரித் தற்புதஞ் செய்வார்
வீதியிற் புனலைத் தெளித்துமின் னார்கள்
மேம்படு கோலமு மிடுவார்.

(இ-ள்.) அரசன் ஆணையால் புலியும் பசுவும் ஒருதுறையிற்சேர்ந்து தண்ணீரருந்திக்களித்து விளையாடிவாசஞ்செய்துவரும்; வேதாகமங்களையுணர்ந்து உபதேசிக்கும் அந்தணர்கள்செய்யும் வேதபாராயணம் யாவரும் பத்தியோடுங் கேட்பார்கள்; ஆதியாகவும் ஒப்பற்றதாயும் விளங்குங் கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசருடைய திருவருளைப் பெறும்பொருட்டு அந்நகர் முழுவதும் வீதிகடோறும் வரிசை வரிசையாய் மகரதோரணங்களும், மாவிலைத்தோரணங்களும் விருஷபத்துவசங்களுந் தூக்கி எங்குஞ் சுகந்தபரிமளம் வீசும் புட்பங்களால் அலங்காரஞ்செய்து வீதிகளில் மங்கையர்கள் வாசனைகமழுஞ் சலந்தெளித்து விசித்திரங்களாகிய கோலங்களை யிடுவார்கள். எ-று. (௫)

மாதமும் மாரி சொரிந்துவே ளாண்மை
மாறிலாச் செழிப்புற விளையும்
சாதமென் போரை யக்கண மழைத்தே
தழைக்க ஷட்சுவை யமுதளிப்பார்



மாதவர்க் கேவல் புரிந்தவர் கேட்கும்
வகையெலாந் தந்தருள் பெறுவார்
நீதனு லயத்தி னெய்விளக் கமைத்து
நிரந்தரம் பூசித்து வருவார்.

(இ-ள்.) அவ்வருணையம்பதியென்னுந் தலத்தில் மாதமும்மாரி பொழிந்து வேளாண்மை எந்நாளுங் குறையாது செழித்தோங்கி விளைந்துவரும்; அல்லாமலும் அந்நகருள் யாவரேனும் பசிப்பிணியால் மெலிந்துவந்து புசிப்பு வேண்டுமென்று வினவுபவர்களை அக்கணமே அழைத்து சயித்யோபசாரஞ்செய்து (கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என்னும்) அறுசுவையோடுங் கூடிய உணவை திருப்தியாகக்கொடுத்து உபசரிப்பார்கள்; மேலும் தபோமகிமையையுடைய குணமுடையவர்களுக்கு, சொல்லுங் குற்றேவல்களைப் புரிந்து இச்சித்துக்கேட்ட வஸ்துக்களை யெல்லாங் குறைவில்லாமல் ஈந்து, அவர்கள் அருளைப் பெறுவார்கள், அஃதல்லாமலும் நீதனாகிய ஸ்ரீ அருணாசலேசராலயத்தில் எங்கும்பிரகாசம் பொருந்தத் தக்கதாய் திருவிளக்குகள் அமைத்து அக்கடவுளை என்றும் பத்தியுடன் பூசித்துப் பணிந்துவருவார்கள். எ-று. (௬)

கலி விருத்தம்.

இந்த வண்ண மிறைவன் விதிப்படி
அந்த மாநக ரானதி லங்குநாள்
எந்தச் சிறுமிருக்கமன் போர்சொல
சந்ததி யில்லை யென்று தளர்ந்தனன்.

(இ-ள்.) இத்தன்மையாய் அரசன் செங்கோன் முறைப்படி யாதும் குறைவில்லாமல் அந்நகரம் செழித்தோங்கியிருக்கையில், ஓர் நாள் மன்னனாகிய வல்லாளமகாராஜன் தனக்கு ஆண்டவனருளால்

வல்லாச்சிறப்பும் பொருந்தியிருக்க நாம் எடுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிடவும் இனிய மழலைச்சொற்களாற் சிரவணானந்த முறவும், பின்னர் நம்பெயரைச்சொல்லவும், பிள்ளையில்லாமற் போயிற்றேயென்று மனம்வெதும்பி மிகவுந் துன்பமுற்றான். எ-று. (எ)

ஐயன் பூசையதிற் குறை வோவிந்த
வைய நீதியின் மாறுளதோ வன்றிக்
கொய்ம் மலர்களிற் கோதுறச் செய்தனே
செய்யும் வண்ணமென் செப்பு மமைச்சரே.

(இ-ள்.) ஜகதீசனாகியும் உமாமகேசனாகியும் என்னையாட்கொள்ளும்பொருட்டு எழுந்தருளியிருக்கும் ஐயனாகிய ஸ்ரீ அருணாசலேசருக்குப் பேதையேனாற் செய்யப்பட்ட பூசையில் ஏதேனுங் குறையுளதோ! அல்லது இவ்வுலகநீதி நடத்துவதில் மாறுபாடாகிய குற்றங்களுண்டோ! அதுவல்லாமலும் நங்கடவுளை அருச்சித்துப் பணியும்பொருட்டு கொய்தமலர்களி லேதேனுங் குறையுண்டோ! என் செய்கேன்! அறியேன்! இனி யான்செய்யும் விதியாது கூறுவீர்கள் மந்திரிகளே என்றான் வல்லாளமகாராஜன். எ-று. (அ)

அண்ணலேனமை யாதரித் தாண்டிடுங்
கண்கள் மூன்றுடை யானற் கருணைபால்
நண்ணு மாதுலர் யார்க்குநல் லன்புடன்
றிண்ண மாயறஞ் செய்யிற் சுதனுண்டாம்.

(இ-ள்.) எங்களிறைவனே! நம்மை யாட்கொள்ளும் பொருட்டெழுந்தருளிய சகல புவன கர்த்தாவாகியுஞ் சர்வாந்தரியாமியாயும் திரிநேத்திர முடையவராயும் அடியார்களிருதயத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாசலேசுரரது மேன்மைபொருந்திய கருணையினால் நம்பதி



யைநாடிவரும் ஆதுலர்முதலிய அந்தணர்களும் இன்னும் மற்றவர்களும் எதைக்கேட்டபோதிலும் அவைகளை இல்லையென்னாது அவர் மனங் களிப்புறும்படி உள்ளன்போடும் நல்குவோமாயின் (பரமசிவனருளால்) புத்திரனுண்டா மென்றுசொன்னார்கள்மந்திரிகள். எ-று.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சுந்தர வருணை நாதர் துலங்குமிந் நகரி னுள்ளே
வந்தவ ரெதுகேட் டாலும் வழங்குது மெனவிப் போது
அந்தர மளாவ நீங்க ளழகிய துவச நாட்டி
எந்தனற் பெயர், விளங்க வெழின்முர சறையச் செய்மின்.

(இ-ள்.) சோமசுந்தரக் கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசுரர்வாழும் இப்பதியின்கண் வந்தவர்கள் எந்தப் பொருளை விரும்பிக் கேட்டாலும் குறைவின்றித்தருகிறோம் வாருங்கள் நற்றவர்களே என்று கரங்களை நீட்டியழைப்பதுபோலும் இவ்வெல்லையுட் புக்கிய மாந்தர்களைக் கலியென்னும் பிணியணுகாமற் றாத்த ஆகாய பரியந்தமளாவி யுயர்ந்து, படபடாகாரஞ் செய்யும்படியாய் அழகிய ஓர் துவசம் நாட்டி என்பெயர் எங்கணுஞ் சிறக்கும்பொருட்டு எழுகடலொலிகளையுங் கவளீகரித்து இடி முழக்கம்போற் பேரொலிகாட்டும் முரசமார்ப்பச் செய்யுங்களென்றான், வல்லாளராஜன். எ-று. (௧0)

தாத்திரி முற்று நற்சீர்
தழைக்குமெங் கோனே கேண்மோ
சாத்திரம் புகழு மீசர்
தாடொழுந் தொடர் பூப்பர்
தோத்திர விரவ லோர்கள்
தோன்றிய வண்ண மீயப்
பாத்திர ரோநா மென்று
பகர்ந்தன ரமைச்ச ரானோர்.

(இ-ள்.) வேலைகடல் சூழ்ந்த உலகமெங்கும் மிகுந்த கீர்த்தியை விளங்கச்செய்த எங்களரசே! (தேவரீர்) இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் ஆறுசாத்திரங்களும் புகழ்ந்தேத்த உமாமகேசனாகிய ஸ்ரீ அருணாசலேசுரருடைய உபயசரணம் புயங்களைப்பணியும் மெய்யன்பர்கள், தபோமகிமையைப்பெற்றவிருத்தர், தோத்திரஞ் செய்யும் பாவலர் முதலியவர்களின் மனத்திற்றோன்றியவெல்லாம் அளித்து களிப்படையச் செய்விக்கும்படியாகிய பத்திரிகை நாம், இறைவனேயென்று மொழிந்தார் மந்திரிமார்கள். எ-று. (௪௧)

பூவிலப் பொருளைக் கேட்கப் போகுமோ கேட்கி லவ்வா
றியாவரா யினுந்தா னல்கா ரர்தலாற் புகன்ற வண்ணந்
தீவிர மாகச் செய்மி ரெனத்துவ சத்தை நாட்டித்
தேவநா டளவு மோங்கச் செயமுர சறைவித் தாரால்.

(இ-ள்.) இவ்வுலகிலில்லாதபொருளைக் கேட்கப்போமோ! அவ்வாறு கேட்டபோதினும் யாவரேனும் எத்தன்மை வாய்ந்தவராயினுங்கொடார்கள்; ஆகையால் யான் உங்களுக்குரைத்த விதியின்படி கொடியனைச் செய்வீர்களென்றறைந்த மொழியைக்கேட்டு மந்திரிகள் துவசத்தைநாட்டி வானுலகளவும் பேரொலிமுழக்கம் எட்டும்படி ஜெயமுரசறைவித்தார்கள். எ-று. (௪௨)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நாதன்வா ழருணை நகரினில் வேந்த
னட்டிய துவசத்தை யோர்ந்து
பூதலத் துள்ள விருத்தர்கா வடிகொள்
பூரியருடன் மிகச் சிறந்த



மாதவர் மறையோர் ஜோகி ஜங்கமர்கள்
வாணர்க ளியாசக ரியாரும்
நீதமாய்த் திரளாய் யெய்தி யன்னோர்க
ணிலைபெறப் பரிசினை யடைவார்.

(இ-ள்.) நாதனாகிய ஜகதீசன் ஸ்ரீ அருணாசலேசுரர்வாழும் அருணையம் பதியின்கண் வல்லாளமகாராஜனால் தருமக்கொடி நாட்டியிருப்பதாய் கேள்வியுற்ற நெடியகடல்சூழ்ந்த வையகத்திலிருக்கும் விருத்தர், பிராமணர், தபோதனர், ஜோகிஜங்கமர்கள் பாவாணர் யாசகர் முதலியயாவரும் பத்தியோடுங் கூட்டங்கூட்டமாய்க் கூடி வந்து தத்தம் வறுமை நீங்கும்படியாய் அரசனிடம் வேண்டியவைகளைப்பெற்று குறைவின்றிவாழ்வார்கள். எ-று. (௪௩)

வதுவை செயப் பொன்வேண்டி வந்தோருக்
காயிரம்பொன் வழங்கிப் பின்னுங்
கொதுவை மனை நிலம்பணிதி கொற்றவனே
யதைமீட்டுக் கொடுமென் றோர்க்கத்
ததியி லாயிரம் பொன் றந்தவரை
மகிழச்செய் ததன்பின் னங்கு
முதுமறையோ ருபாயன முடிக்க வென்று
லவர்க்குநிதி முந்நூ றீவான்.

(இ-ள்.) விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஆவலோடும் அரசனை நாடிவந்துகேட்டவர்கள் மனம் திருப்தி யடையும்படி ஆயிர மாயிரமாகப் பொன்கொடுத்தும், பின்னர் ஆபரணமுதலிய மண்மனையாவுங் கொதுவைவைத்து மீட்டுக்கொள்ளுவதற்குவழியில்லாமல் மூழ்கிப்போகின்றன அரசர்க் கரசனாகிய எங்கள்கோவே! தேவரீர் அவற்றைமீட்கும் பொருட்டுத் திரவியம் தரப்பீர

யின் மிக்கப் புண்ணியமாமென்று பணிந்துவினவியவர்களுக்கிரங்கி அக்கணமே இரண்டாயிரம் பொன்கொடுத்து அன்னவர் மனமகிழச் செய்வித்தும் அதன்பின்பு வேதாகமங்களையுணர்ந்தபெரியோர்களாகிய அந்தணர்வந்து அரசனை ஆசிர்வதித்து மகாராஜனே! உபாயனம் நடத்தவேண்டியிருக்கிறதென்று அறிவிப்பார்களாயின் அவர்களுக்கு முந்நூறுபொன்கொடுத்துமகிழச்செய்விப்பான். எ-று. (௧௪)

ஆலயத்தி லுற்றமணி மண்டபமுஞ்
சூழ்மதிலு மவமாந் தன்னைக்
கோலமுறத் திருத்தவபதனுக் கிறையவனே
திரவியங்கள் கொடுப்பா யென்னச்
சீலமுட னிருபதி னாயிரம் பொன்னுந்
தந்துசீர் செய்யென் றன்பின்
ஞாலமதின் மடந்தருமஞ் செய்ய வைம்ப
தாயிரம்பொன் னல்கி னானால்.

(இ-ள்.) ஸ்ரீ அருணாசலேசுரர் எழுந்தருளி யிருக்கும் கோயிலினுள் நவமணிகளினாலுஞ் சந்திரகாந்தக்கற்களினாலும்அமைத்துப்பிரகாசம்பொருந்தியிருக்கும் மண்டபங்களும் செஞ்சுடராகிய சூரியனுஞ் சாய்ந்து ஒதுங்கிப்போகும்படி ஆகாயத்தையளாவி மேகங்கள் தவழுஞ் சுற்றுமதில்களுஞ் சிலபட்டிருக்கின்றமையாலவைகளைத்திருத்தஞ் செய்யும்பொருட்டுப் பொருளுதவி செய்யவேண்டும் மகாராஜனேயென்று கேட்குங்கால், அரசன் மிக்கபத்தியோடும் ஜகதீசன் திருப்பணி நிறைவேறும்பொருட்டு இருபதினாயிரம் பொன்கொடுத்துச் சீர்திருத்தஞ் செய்தும் பின்பு உலகின் மடம் புதுக்கவேண்டுமென்று அவைகளுக்கு ஐம்பதினாயிரம் பொன்னுங் கொடுப்பான். எ-று. (௧௫)



அந்தகர்க்குஞ் சங்கமர்க்கு முடவருக்கும்
சோகிகட்கு மாபத்தென்று
வந்தவர்க்கு மாதுலர்க்கு மாருத
சந்தலமும் வறுமை நோயால்
நொந்தவர்க்குஞ் சொலுமின்ன மற்றவர்க்குந்
தினந்தினமும் நுவன்றவாறு
சந்தமொடு பரி சளித்தல் நாரதரு
மோர்ந்தங்கண் சார்ந்திட் டாரால்.

(இ-ள்.) கண்ணில்லாதவர்களுக்கும், ஜங்கமர்களுக்கும், காசராதிக ளற்றவர்களுக்கும், ஜோகிகட்கும் விளைவுழியால்வெவ்விய ஆபத்துசேர்ந்து வந்தவர்களுக்கும், ஆதுலர்களுக்கும், கெடாததுன்பத்தையடைந்து தரித்திர மென்னும் பிணியால் மெலிந்துமனநொந்தவர்களுக்கும், பின்னும் சொல்லுஞ் சகல யாசகர்களுக்கும், சதாகாலமும் அவரவர்கள் விரும்பிய வண்ணம் மனக்களிப்போடும் உதவி செய்வதை நாரதமுனிவர் கேள்விப்பட்டு வல்லாளமகாராஜனிடத்திற்கு மிகுந்த கருணையோடும் எழுந்தருளினார். எ-று. (௧௬)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மாதவ முனிவ ராங்கு வந்ததை மன்ன னோர்ந்து
காதல்கொண் டமைச்சர் சூழக் கடிதினி லரசை விட்டுப்
பூதல னெதிர்சென் றேத்திப் புகிதனை யழைத்து வந்து
ஏதமில் பீட நல்கி யெழுந்தபின் னியம்பு வானால்.

(இ-ள்.) மகாதபோதனாகிய நாரதமுனிவர் வரவைக் காவலாளிகளால் கேள்விப்பட்ட வல்லாளமகாராஜன் மிகவும் அன்போடும் சிங்காசனத்தை விட்டெழுந்து மந்திரி முதலியசேர்வைக்காரர்

கன் புடைசூழ்ந்துவரும்படி அரசன் எதிர்சென்று பணிந்து தமியோங்களை யாட்கொள்ளும்பொருட்டுத் திருவருள் சுரந்தெழுந்தருளி வந்த மாதவமே! புண்ணியப் பொருளே! என்று துதித்துப் பேரானந்தத்தோடும் அழைத்துவந்து குற்றமற்ற மணிகளினலலங்காரம் பெற்ற பொற்பீடமளித்து அதிலெழுந்தருளியபின் சொல்லுகின்றுன். எ-று. (௧௭)

அயன்றவத் தினிலு தித்தே
யழகிய கரத்தின் வீணை
வியமுறக் கொண்டு பாடும்
மென்முனி வரனே தாங்க
ணயமுட ஞயன் மீது
நாட்டமுற் றெழுந்த செய்தி
தயையுட னருள்க வென்னத்
தாபத ரிசைப்ப தானுர்.

(இ-ள்.) சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன் தபோமகிமையால் உதித்து, சரோருகம்போன்ற அழகியகரத்தில் வீணை இலங்கக்கொண்டு கானஞ்செய்யும் மேன்மைபொருந்திய முனியே! தாங்கள் நாயினுங் கடையேனுகிய பேதை யேன்மேல் கருணைவைத்தெழுந்தருளிவந்த சங்கதியை அருள்செய்யவேண்டுமென்று பணிந்துநின்ற வல்லாள மகாராஜனைப்பார்த்து நாரதமுனிவர்கூறுவார். எ-று. ()

தலத்தின்மேன் மகிமை யுற்ற தாபதர் புகழு மாவைம்
புலத்தினை வென்ற மோனர் புகலுமு வகையுள் வன்னி
குலத்தினில் வருமன் னுநின் கோதிலாத் தருமங் கேட்டந்
நலத்தினை யறிய வந்தோம் நவின்றிடா யெனவு ரைப்பான்.



(இ-ள்.) புவனத்தின்கண் மகிமைபொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புல னுசர்ச்சிகளையும் வென்று மெய்யுணர்ச்சிபெற்ற புண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினியென்னு முக்குலத்தரசருள் அக்கினிகுலத்திலுதித்த அரசே! நின்குற்றமற்றமகாதானத்தின் பெருமையைக் கேள்வியுற்று அதையறியும் பொருட்டு வந்தோம், ஆதலால் உன்கருத்தை வெளியிடுவாயென்று நாரதமுனிவர்கேட்க அரசன் சொல்லுவான். எ-று. (௧௯)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மனுமுறை யறிந்த தாபதர் புகழு
மாதவ முனிவரே கேண்மோ
தனியிவென் னரசைத் தாங்கவு மென்பேர்
சாற்றவு மகவில னதனுற்
பனிமலர்க் குழலாள் பாகனுர் தொழும்பர்
பரிவுடன் கேட்டவை மண்மேற்
கனிவுட னளிக்கத் துவசமு யர்த்தேன்
கடவுளின் செயலறி யேனே.

(இ-ள்.) வேதசாஸ்திரங்களை யுணர்ந்த முனிவர்கள் புகழத்தக்க மகா தபோபலமுடைய நாரதமுனியே! எளியேன் ஆளுகையைத் தாங்கிக்கொள்ளவும், பின்னர் எளியேன் பெயரைச்சொல்லவும், மைந்தனில்லாமையால், மணமெலிந்த பூங்குழலையுடைய உமாதேவிபாகனுகிய ஸ்ரீ அருணசலேசுராடியார்கள் இச்சித்துக்கேட்டவைகளை இல்லையென்னுது கொடுக்கும் நியமங்கொண்டு துவசமுநாட்டடத்திவருகிறேன்; எம்மை யாட்கொள்ளுங் கடவுளின் திருவுளமேதோ! அறியேனென்றான் வல்லாளமகாராஜன். எ-று. (௨௦)

திருவுயர் தரும நடத்துவர் மண்மேற்
சேயரைப் பெறுவ ரென்றேநற்
றருமநூல் களினுஞ் செப்புவ தன்றித்
தக்கவ ரும்புகல் வதனாற்
பெருகுமர் நதியு மதியமுஞ் சடையிற்
பெட்புட னுற்றெலாங் காக்குங்
குருபர னருளாற் குழவியு முண்டாங்
கொற்றவா செலவிடை தருவாய்.

(இ-ள்.) அழகினுயர்ந்த முப்பத்திரண்டறங்களையும் இரப்பவர்களுக் கில்லையென்னாமல் நடத்துபவர்கள் மண்மேல் புத்திரபாக்கியங்களைப் பெறுவார்களென்று மேன்மைபொருந்திய ஆகமசாத்திரங்களிற்சொல்லி யிருப்பதல்லாமலும், மறைவிதியுணர்ந்த பெரியோர்களுஞ் சொல்லுவார்கள்; ஆதலால் எங்கும்பரவிமகிமையுள்ள கங்கையையும் சந்திரனையுஞ் சடையிற்றரித்து எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களைப் படைத்தளிக்கும் பரமசிவத்தினருளால் மக்கட்பேறு பெறுவாய், எனக்கு விடைதருவாய் அரசனேயென்று நாரதமுனிவர் விடைபெற்றுச்சென்றார். எ-று. (௨௧)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மன்னவன்ற னீதிதனைக் கயிலைவாழ்
பரமனுக்கு வழங்க வேண்டித்
துன்னுமுனி காதலுற்றுச் செல்லுகையிற்
சிவகணங்கள் துதித்து நிற்க
முன்னிலங்குஞ் சங்கரனை நாரதனும்
பணிந்து பின்னர் முனிவர்சூழச்
சென்னிமதி யணிந்தபிரான் றிருக்கோலங்
கண்டிறைஞ்சிச் செப்பு வானால்.



(இ-ள்.) வல்லாளமகாராஜனுடைய நன்மார்க்கத்தையும், தருமபரிபாலனத்தையும், கயிலாயகிரியில் எழுந்தருளியிருக்கும் பார்வதிசமேதனாகிய பரமசிவனுக்குத் தெரிவிக்கும்படி யெண்ணங்கொண்டு, தவத்திற்சிறந்த (நாரத)முனிவர் ஆசையோடுஞ் செல்லுகையில், அங்ஙனம் அநேக சிவகணங்கள் அடிபணிந்து துதித்து நிற்க முன்னம் பிரகாசித்துக் கட்டளைகள் விதித்துக்கொண்டிருக்கும் இரண்டாஞ் சங்கரனாகிய நந்திதேவரைப் பணிந்து, பின்பு மகாதபோதனர்களும் தேவர்களும் முனிவர்களும் புடைசூழும்படி உமையவள் இடப்பாகத்தில் இலங்கக் கொலுவீற்றிருக்குஞ் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து போற்றிக் கூறுவார் நாரத முனிவர். எ-று. (௨௨)

தேசின்மிகு கயிலையில்வாழ் தேவாதி
தேவேநின் றிருத்தாள் போற்றி
மாசின்றி விளங்கருணை யம்பதியின்
வல்லாள மன்னனென் போன்
ஓசைபெறச் சுதன்வேண்டிக் கொடிநாட்டி
யுலகிலுள்ளோ ருவந்து கேட்கும்
பாசமுட னெதையேனுந் தருவனென்று
பறைசாற்றும் பண்பைக் கேண்மோ.

(இ-ள்.) பிரகாசம்பொருந்திய கயிலாயகிரியில் வீற்றிருக்குந் தேவதேவனே! உன் உபய சரணங்கள்போற்றி! பூலோகத்தில் குற்றமற்று விளங்கும் அருணையம்பதி யென்னுந் தலத்துக் கிறைவனாகிய வல்லாள மகாராசனென்பவன் தன் பெயரை விளக்கஞ்செய்ய ஓர் புதல்வனைவேண்டி யாவர் எப்பொருளை விரும்பிக்கேட்டபோதிலும் அவர் திருப்தியடையும்படி தருகிறேனென்று கொடிபோட்டு, பறைசாற்றிநடத்தி வரும்பெருமையைக்கேளும் எந்தையே! என்று பின்னுங்கூறுவார் நாரதமுனிவர். எ-று. (௨௩)

வேறு.

நீதியை வளர்ப்போ னுண்மையைக் காப்போ
னெறி முறை தணிற்பிற ழாதோன்
கோதினைக் களைந்த வறமெனு முருவாய்க்
குவலயத் துதித்தநற் பூபன்
பூதலத் துயிர்க ளியாவுந்தன் னுயிர்போற்
புந்தியுட் கருதியே காப்போன்
ஆதியே நினது பதமலர் துணையென்
றனுதினந் தொழுதுவா ழன்பன்.

(இ-ள்.) நன்மார்க்கநீதிப்படி வளர்ப்பவன், சத்தியத்தைக்காப்பாற்றத் தக்கவன், செங்கோல் விதிபிசகாதவன், பாவங்களென்னும் இருளைத்தாத்தியெழுந்த மதிபோன்றதருமமாகிய ஒளியே ஒருருவங்கொண்டு உலகிற்பிறந்த மேன்மைபொருந்திய அரசன்; அல்லாமலும் பூமியில்வாழு மன்னுயிர் யாவுந் தன்னுயிர்போலமனத்தி லெண்ணிக்காப்பவன், அடியவர்க்கெளியன், ஆதிகடவுளாகிய தங்கள் சரணகமலங்களில் மனம்பொருந்திச் சதாகாலமும் பணிந்து துதிசெய்து வாழ்ந்து வரும் மெய்த்தொழும்பன் என்று நாரதமுனிவர் கூறினார். எ-று. (௨௫)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வந்தமா முனிவன் கூறும் வாய்மையை யீச னோர்ந்து
அந்தவல் லாளன் றன்மை யாமுங்கண் டறிவோமென்றே
சிந்தைசெய் முனிக்கு மற்றத் தேவர்க்கு மிருடி கட்குந்
தந்தமா சிரம மெய்தச் சாற்றினன் தன்னே ரில்லான்.

(இ-ள்.) அங்ஙனம்வந்து வல்லாள மகாராஜன் பெருமையைச் சொல்லும் நாரதமுனிவன் மொழியைப் பரமசிவன் கேட்டு, அவ்வரசன் தன்மையை நாமுங் கண்டறிய வேண்டுமென்று மனத்திலெண்ணி, துதிசெய்துகொண்டு நிற்கும் முனிவனுக்கும் மற்றத்தேவர்கள் இருடிகள் யாவர்களையுந் தத்தம் இருப்பிடம்போய்ச் சேரும்படி திருவாய்மலர்ந்தருளினார் ஒப்பொருவருமில்லாத உமாமகேசர். எ-று. ()



அக்கணங் கயிலைநாத னளகைக் கோன் றனையழைக்கத்
திக்கெலா மதிக்க வன்னோன் றிரண்ட பொற்குவியல் றாங்கி
அக்கர வணிந்த வீச னருட்பதம் வந்து போற்றச்
செக்கர்மே னியனுமாங்கு சிலமொழி யருள லுற்றான்.

(இ-ள்.) அக்கணமே கயிலாயபதியாகிய பரமசிவன் அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனைவரும்படி கட்டளையிட்ட மாத்திரத்தில் எண்டிசையு மதிக்கும்படி அவ்வரசன் அளவிறந்த பொற்குவியல்களோடும் பிரயாணப்பட்டு அக்குமணிகளாகிய உருத்திராட்ச மாலைகளையும் சர்ப்பங்களையும் ஆபரணமாகவணிந்த சிவபெருமானிடம் வந்து அடிபணிந்துபோற்றிநிற்கச் செவ்வானம்போன்ற தேககாந்தியுடைய பரமசிவன் அங்ஙனம் சிலவசனங்களை யருளுவார். எ-று.()

அளகையா ளரசே கேளு மருணையம் பதிவாழ் வேந்தன்
உளமுறு தியைச் சோதிக்க வுன்னிய படியா னீயும்
வளமுறுஞ் சிட ளுநி மாநிதி யுடனெம் மோடு
புளகமார்ந் வருக வென்று புகன்றனன் கயிலை நாதன்.

(இ-ள்.) அளகாபுரிக்கிறைவனே; பூமியில் நாம் அருணையம்பதியில்வாழும் வல்லாளமகாராஜன் மனவலியைச் சோதிக்கும்படி எண்ணங்கொண்டிருக்கின்றமையால், நீயும் சிறந்தசேனைகளொடு அளவிறந்த பொருளோடும் நம்முடன் மனமகிழ்ந்து வரக்கடவையென்று கூறினார் கயிலாயபதியாகியும் திரிநேத்திர முடையாகியும் விளங்கும் ஜெகதீசன். எ-று. (௨௭)

மாலய.னிருவர் கண்டு மனத்தினி லென்று மில்லா
மால்கொள வும்ப ராரு மலர்மழை சொரிய வேத
நூல்களுந் துதிக்க யாரு நுவலுதற் கரிய மாதோர்
பாலொளிர் பரமன் யாரும் பரவுஞ்சங் கமாய் நின்றார்.

(இ-ள்.) விட்டுணுவும் பிரமனுங்கண்டு மனத்தில் ஒருநாளுமில்லாத மகிழ்ச்சிகொண்டு போற்றவும் தேவர்கள் மலர்மாரிபெய்யவும், வேதாகமங்கள் துதிக்கவும், யாவராலுஞ் சொல்லுதற்கரிய உமாமகேஸ்வரியை ஒரு கூறுகக்கொண்ட பரமசிவன் சகலரும் பணியும்படி சங்கமராய் வேடங்கொண்டு நின்றார். எ-று. (௨௮)

தேவுறை கயிலை வாழுந் திருவுயர் சிவக ணங்கள்
யாவுமெம் மைய னற்சீ ரருளினு லாண்டி யானார்
பூவுல கினில்வல் லாளன் பொருந்துநற் பதியை நாடிக்
கோமுறை யோர்கொண் டாடக் கூட்டமாய் வருவ தானார்.

(இ-ள்.) தேவதேவனாகிய பரமசிவன்வாழும் கயிலாயகிரியில் வாசஞ்செய்து கொண்டிருக்கும் அழகிய சிவகணங்களெல்லாம் எமதையன் கருணாசத்தினால் ஆண்டிகளுருவங்கொண்டு உலகில் இணையில்லாக் கீர்த்தியையெய்திப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வல்லாளமகாராஜன் வாழும்பதியைநோக்கி அரசநீதியோர் கொண்டாடிப் பணியத்தக்கதாகக் குருமூர்த்தமா யெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைச் சூழ்ந்து வந்தார்கள். எ-று. (௨௯)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கற்பினி லுயர்ந்துங் கணவனை யிறைபோற்
கருதுதா யொருவரு மிலையோ
பொற்புறு மைந்த ரில்லையோ பசிக்குப்
போனக மளிப்பவ ரிலையோ



விற்பன முடைய வாசர்க ளிலையோ
வியப்புட னெங்களைக் கூப்பிக்
கற்பனை யோடு வமுதினைப் படைக்குங்
கன்னிய ரில்லையோ வென்பார்.

(இ-ள்.) கற்பினில் அருந்ததியைப்போல் மிகுந்தும் தத்தம் கணவனையே தெய்வமாகப்பாவித்து நடக்குந் தாய்மார்க ளொருவருமில்லையோ! அழகிய பெருமைதங்கிய வாய்மைகள்வாய்ந்த மைந்தர்களில்லையோ! அடியார்கள் பசிவேளையறிந்து அன்னங் கொடுப்பாரில்லையோ! மநுநீதியோர்க்கேற்கூடிய அரசர்களில்லையோ! மனப்பூர்த்தியாய் எங்களைத்தொழுது அழைத்துக்கொண்டுபோய் பத்தி ரசத்தோடும் அன்னம் பாலிக்கும் கன்னியர்களுமில்லையோவென்று கூறுவார்கள். எ-று. (௩௦)

பொன்னளித் தாலும் வேண்டுவ தில்லைநற்
பூட்டணந் தரினும்யாம் வேண்டோம்
துன்னுமா மணிக ளால்கினும் விரும்போந்
தொங்குமுத் தாரமுங் கருதோம்
மன்னர்கள் செங்கோ லரசினை யெமக்கு
வழங்கினு மனமதி லில்லை
அன்னமீந் தெம்மை யாதரிப் பாரே
லன்புட னுண்ணுவோ மென்பார்.

(இ-ள்.) செம்பொன் அளித்தாலும் விரும்போம், இரத்தினங்களை யழுத்தி யிலங்கும் அழகியபணிகளையும் விரும்போம், பிரகாசம்பொருந்திய ரத்தினங்களை அளித்தாலும் விரும்போம், முத்துமாலைகளினும் மனம்வையோம், அரசர்கள் செங்கோலின் விதியைத்,

தந்தபோதினும் வேண்டோம், அறுசுவைபதார்த்த வகைகளோடும் அமுதளிப்பார்களானால் மிகவும் அன்பாய் உண்ணுவோமென்று அடியார்கள் கூறுவார்கள். எ-று. (௬௧)

நவ்வியங் கரத்தி லிருந்ததை நீத்த
நாதர்சங் கமருமே நற்சீ
ரொவ்விய வருணை மாநகர்த் தெருவி
லொலியெழக் குமுதவாய் மலர்ந்து
வெவ்விய பசியான் மெலிந்தவ ரேற்க
மேவுவ போலவுங் கூவிச்
செவ்விய கொவ்வை வாயராங் கணிகைத்
தெருவினைச் சார்ந்தவ ரானார்.

(இ-ள்.) அழகிய கரத்தில் மானைத் துறந்தவராகிய சங்கமர் சிறப்போங்கி இலங்கும் அருணையம்பதி வீதியில் ஓசைபெறத் தக்கதாகச் செங்குமுதம்போன்ற திருவாய்மலர்ந்து கொடியதாகிய பசிப்பிணியால் துன்புற்று இரப்போரைப்போல வரற்றிச் சிவந்த கொவ்வைக்கனிபோன்ற கணிகைமாதர்கள் வசிக்கும் வீதியில் வந்தார் பரமசிவனான சங்கமர். எ-று. (௬௨)

கெண்டைபோல் விழியுங் கிளிநிகர் மொழியுங்
கிளர்மதி வதனமு மென்பூச்
செண்டயார் குழலுங் கந்தம துலவுந்
தெங்கதின் குரும்பை நேர் முலையா
ரண்டையி லிருந்து வல்விடி யளவு
மைங்கணை மாரனாற் புரியுஞ்
சண்டையை யகற்றத் தருபொனை மின்காள்
சாற்றுது மெனவவர் மொழிவார்.



(இ-ள்.) சேற்கெண்டைப்போன்ற அழகிய விழியையும், அஞ்சுகத்தையொத்த இனிய வார்த்தைகளையும் ஆகாயத்தி லிலங்கும் பூரணச்சந்திரோதயம்போன்ற திருமுகவொளியும், சிதரே நிறைந்த களபமலர்களாற் கட்டப்பட்ட பந்தைநிகர்த்து ஊசலாடுங் குழலும், சுகந்தங்களைத் திமிர்ந்து தென்னங்குரும்பைகளைப்போற் பிரகாசிக்கும் இரண்டுகுயங்களையுடைய வனிதையர்கள் பக்கலில் இன்றிரவு விடியுமளவுமிருந்து முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரை இவ்வைந்து மலர்களை ஐந்துகணைகளாகவும் கரும்பை வில்லாகவும்வளைத்து போர்புரிய எழுந்துநிற்கும் மன்மதன்கணை வலியைத் தடுத்தோட்டும் பொருட்டுப் பரியமாகக்கொடுக்கும் பொன்னைப் பகருவீர்கள் பெண்களேயென்று சங்கமர் வினவியபோது அக்கணிகைமாதர்கள் கூறுவார்கள். எ-று. (௬௩)

பையரா வணிந்த பரமனைப் போன்ற
பகரரும் ஐயகேள் யாங்கள்
பொய்யது முரையோம் வஞ்சக முணரோம்
புணர்தலுக் கோரிருண் முற்றும்
தையல ரொருத்திக் காயிரங் கனகந்
தருவதவ் வாறளித் திடின்யாம்
மெய்யுடன் மெய்யும் பொருந்திடக் கலவி
விளைத்துமன் மதன்வினை தவிர்ப்போம்.

(இ-ள்.) வெவ்விய விடங்களையுடைய சர்ப்பங்களை ஆபரணமாக வணிந்த ஸ்ரீகைலாயபதியாகிய பரமசிவனைப்போல் சொல்லுதற்கரிய சங்கமரே! யாங்கள் பொய்வார்த்தைகளைப் பேசோம், வஞ்சகமாகிய துரோகசிந்தனைகளையுங் கருதோம்; ஓரிரவு முழுமையுஞ் சகலீலைகளை யனுபவிப்பதற்கு ஒவ்வொரு பெண்ணுக்கு ஆயிரம் பொன் கொடுக்கும் நியமமாதலால், அதுபோற் றருவீராயின் யாம்,

கள் எங்கள் மனமும் மெய்யும் ஒன்றுபடத் தக்கதாக அஷ்டவித ஆலிங்கனமுஞ்செய்து அனங்கன் கணையுங் கருத்தும் நாணும்படி புணருவோமென்றார்கள் கணிகைமாதர்கள். எ-று. (௩௪)

வேறு.

பரத்தையர்க ளுரைத்தவணந் தந்துடனெவ்
வொருத்திக்கோர் பண்டா ரத்தைக்
கரத்தமைத்துப் பிரியாதீர் என்னவுங்கண்
காட்டிமிகக் கட்டுப் பாடா
யுரைத்துவிலை மாதர்களின் வீதியெலாஞ்
சங்கமரா யொளிரச் செய்து
வரத்தைமிகத் தருமருணை நகரினிலெண்
காதமட்டு மருவச் செய்தார்.

(இ-ள்.) அக்கணிகை மாதர்கள் சொல்லியவைபோல் அவர் மகிழும்படி கனகம்சொரிந்து ஒவ்வொருத்திக்கோர் ஆண்டியை நியமித்து கங்குல்விடியளவும் விட்டு நீங்காதீர்களென்று கண்சாடையினாற் றெரிவித்து மிகவும் கட்டுப்பாடாக அக்கணிகைமாதர்கள் வாழும் வீதியெல்லாம் சிவனடியார்களாகவே பிரகாசிக்கும்படி செய்து எண்ணிய எண்ணங்களையெல்லா முற்றச்செய்யும் அழகிய அருணையம்பதி எண்காதம் வரையிலுஞ் சரதலீலை புரியச்செய்தார் சங்கமராகிய பரமசிவன். எ-று. (௩௫)

வேறு.

விலைமாதர் தனித்தொருவ ரில்லாம
லரிதாக்கி வெய்ய காமன்
கலைமார்க்கப் படிமருவச் செய்தசங்க
மரும்நீங்கிக் கமழு மாநன்



னிலைமார்க்க மாய்ந்திட்ட சீடனுடன்
மேவவந்த நிலத்தை யாளுஞ்
சிலைமார்க்க மறிந்தமன்னன் கண்டெதிர்சென்
றிறைஞ்சியழைத் திருத்திச் சொல்வான்.

(இ-ள்.) விலைமாதர்கள் தனித்து எங்கும் இடைக்காது அரிதாகச்செய்து கொடிய மன்மதன் சாஸ்திர விதியின்படி அஷ்டவித ஆலிங்கனமும் நகக்குறி தந்தக்குறி தாடனங்கள் அறுபத்துநான்கு வித லீலைகள் இவைகளையுஞ் செய்யச்செய்த சங்கமராகிய சகதீசன் அவணின்றெழுந்து பிரகாசமும் பெருமையும் பொருந்திய நன்மார்க்க நிலையைப் பரிசோதித்த சீடனாகிய அளகேசனோடும் அரசன் அரண்மனையைநோக்கிச் செல்லுகையில், அப்பதிக் கிறைவனாகியும் சதுர்வேதமார்க்கம் யாவும் பூரணமாயுணர்ந்த மன்னனுமாகிய வல்லாளமகாராஜன் சங்கமர் வருதலைக்கண்டு எதிர்சென்று பணிந்து போற்றி யழைத்துக்கொண்டுபோய் நவமணிகளாலலங்கரிக்கப்பட்டு பிரகாசம்பொருந்திய அழகிய ஒரு சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து அஞ்சலியத்தனாய் நின்று கூறுவான். எ-று. (௩௬)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

புண்ணிய தவமோ வன்றிப் பாரினி லியானி யற்றும்
நண்ணிய கருமம் யாதோ நயக்கினவ் வாறு நல்கப்
புண்ணிய வசமோ தேவர் பொன்னடி வருந்த விங்கு [ருன்.
கண்ணிய முறுவேன் றங்கள் கடாக்ஷமும் பெறுவே னென்

(இ-ள்.) தமியேன் செய்த தவப்பலனோ! அல்லது ஸ்ரீ அருணசலேசுரர் வாழும் இவ்வருணையம்பதியில் எளியேனாற் செய்யப்பட்ட கிரியைகளின் புண்ணியமோ! பரமசிவத்தைப்போலெழுந்த சங்கமதேவரின் பிரகாசம்பொருந்திய தக்கமயமாகிய உபயசரண கமலங்கள் வருத்தமுறும்படி இங்ஙனம் அருள்சுரந்தவிதியாதோ! அவற்

றைத் திருவாய்மலர்ந்தருளினால் அத்தன்மையா யடியேன் நடத்தி னவியனுவதல்லாமலும் தேவரீர் கருணைகடாக்ஷத்தினுக் தோய வேனென்றான் வல்லாளமகாராஜன். எ-று. (௧௭)

மன்னனகே ளரசு நீதி மார்க்கமும் நீடுவாழி
உன்னையாங் கருதி வந்த தோதுவ முருவில் மாரன்
பன்னுமைங் கணையா லின்று படுத்திடுந் துயரை மாற்றக்
கன்னியை நல்கிற் கீர்த்தி கடலேழும் வியங்கு மென்றார்.

(இ-ள்.) இப்பூமண்டலத்திற் கீர்த்தியொருத்திய வல்லாளமகா ராஜனே! உன் அரசும், செங்கோன் முறைமையும், நீடூழிகாலம் வாழி; இப்போது உன்னை யாம்வேண்டி வந்தகாரணம் யாதெனில், உருவில்லியாகிய மன்மதனுவெய்யும் முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரைமலரென்று சொல்லப்பட்ட ஐந்து கணைகளினாலும், இன்றுயாம் படுந்துன்பத்தை நீக்கும்பொருட்டு ஒருமாந்தை எனக்கு கிட்டும்படி செய்வையேயானால் உன்கீர்த்தி எழுகடல்சூழ்ந்த இவ் வையகத்திற் பிரகாசிக்குமென்றார் சங்கமராகிய பரமசிவம். எ-று. ()

இனதவிட தேவ ரீருக்
கெழின்மனை முடிப்பிப் பேனென்
றனையுணர்ந் தைய ராசே
ராசேகே ளதுமா தொல்லை
வனைசெயுங் காம நோயை
மாற்றுதல் விலைமா தர்க்கே
புனையல்போற் றெரியு மென்று
புகன்றனர் பெரியோ ராங்கு.

(இ-ள்.) இவ்வாறு பரமாதரை இச்சித்துத் திரிவதைப்பார்க்கி லும் எக்காலமும் தேவரீரைவிட் டகலாமலிருக்கும்படி சிறப்போங்



கிய மணஞ்செய்து வைக்கிறேனென்று மிகுபத்தியும் பரிவுங்கொண் டுரைத்த வல்லாளமகாராஜனது அன்பு நிலையையறிந்த சங்கமராகிய சிவபெருமான் சொல்லுகின்றார், அரசனே? இப்போது நீசொல்லிய வார்த்தை கொடிய துன்பத்திற்கிடமாயும், சுடர்முன் மெழுகுபோல் மனம் ஒருங்குபடுத்தாமல் பலவிதகோலங்களை உண்டுபண்ணி அலை யச்செய்யும்; அதுவல்லாமல் பஞ்சேந்திரியங்களுந் தடுமாறி காம வெகுளி மயக்கத்தால் நாவறட்சிசெய்யும் சுகப்பிணியைப் போக்கும் ஔடதம் விலையின்றார்களுக்குக் கைவல்லியப்பட்டதேயன்றி இத ரமான மாதரறியார்கள்; ஆதலான் அவரால் என்பிணியை மாற்று விப்பாயென்று பெரியோராகிய சங்கமர் கூறினார். எ-று. (௧௯)

நிட்டைசெய் வோர்க்கும் போத நிகழ்த்துசங் கமரே தங்க
ளிட்டத்தின் படியான் செய்வே னென்றிறை காவலோரை
விட்டதி விரைவிற் சோரர் வேசையா மொருமின் னாளை
இட்டமா யழைமி னென்ன வேகினர் வாய்வின் மிக்கோர்.

(இ-ள்.) இல்வாழ்க்கையைக் கடந்து சதா நிட்டைசெய்யும் தபோதனர்களுக்கும் ஞானோபதேசஞ் செய்விக்கும் மகிமைபொருந் திய சங்கமரே! உமது கருத்தின்படியே நடத்துகிறேனென்று அங் குள்ள காவற்காரரை அழைத்து நீங்கள் அதிசீக்கிரமாய் சிறப்போங் கிய கணிகைமாதர்கள் வாழும் வீதியிற்சென்று அதி ரூபலாவண்ய முள்ள ஓர்மாதை அழைத்துவாருங்களென்று விடைதரக் காற்றி னும் அதிவேகமாய் நடக்குங் காவலாளர்கள் சென்றார்கள். எ-று. ()

சென்றுவே சையர்கள் வாழுந் தெருமனை தோறும் புக்கு
நின்றங்கு நோக்குஞ் சாலை ஞேயமாய் நடனநிதம்
கொன்றைகு டியவெம் மான்றன் குழுமுன ராடல் கண்டு
இன்றுத வாதென் றெண்ணி யிறைக்குவந் துரைப்ப தானார்.

(இ-ள்.) அரசன் ஆக்கினையைப் பெற்றுச்சென்ற தூதர்கள் அழகிய விலைமாதர்கள்வாழும் வீதிகளில் மனைகள்தோறும் புகுந்து புகுந்து பார்த்துவருகையில், ஒரு வீட்டிலாகிலும் சிங்காரமஞ்சுரலய தாளத்தோகேந்த ப்ரதிஷ்டியங்கள் வீணைகான சங்கீத முழக்கத்தோடும் பொன்னிறம்போன்ற கொன்றைமாலையைச்சூடிய சிவனடியார்கள் வீடுகள்தோறும் தனித்தனியாயிருந்து ஆனந்தித்துக்கொண்டிருக்குஞ் சம்பிரமங்களைக்கண்டு இன்று முடியாதென்று கருதினவராய் தமது அரசனிடம்வந்து கூறினார்கள். எ-று. (௬௧)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அம்மொழி யோர்ந்த மன்னவன் வெகுண்டே
யமைச்சரை நோக்கியே புகல்வா
னெம்மொழி பிறழ்வ தான்றிருச் செயலோ
நாம்செய்த பூசையின் குறையோ
செம்மொழி யார்ந்த சங்கமர் கேட்ட
தெரிவையர் கிடைப்பது மரிதென்
றிம்மொழி யவர்மு னிசைப்பது முறையோ
வென்னவு மமைச்சர்க ளிசைப்பார்.

(இ-ள்.) இவ்விதமாய்த் தூதர்கள் உரைத்த மொழியைக் கேட்ட அரசன் கோபித்துத் தன் மந்திரிகளைப்பார்த்துச் சொல்லுவான் நாம் பரமசிவத்தின் அடியவராகிய சங்கமருக் குரைத்தமொழி பிறழ்ந்துபோவது ஜகதீசனாகிய ஸ்ரீ அருணாசலேசுரன் திருவுளச்செயலோ அல்லது நாம் ஆண்டவனுக்குச்செய்த பூசையின் குற்றமோ! என்செய்வேன்! செவ்வியசொற்கள் பிரகாசிக்கின்ற சங்கமர் நம்மை நாடிக்கேட்ட மாதர் கிடைப்பது அரிதென்று அவர்முன் நாம்புகலுவது தருமமோவென்று துன்பப்படும் வல்லாளமகாராஜனைப் பார்த்து மந்திரிமார்கள் சொல்லுகின்றார்கள். எ-று. (௬௨)



சிந்தையிற் கவலை யுற்றிட வேண்டாஞ்
செல்வனே பேதையோம் சென்று
விந்தைகொள் வேசை மாதினைக் கொணர்வோம்
வியாகுலம் விடுமென வவர்வாழ்
சந்தைகொள் வீதி யடர்ந்தவர் மனையிற்
றங்கிய கோலமு நோக்கிப்
பந்துநேர் முலைமேற் கந்தமு மணிந்த
பரத்தையர்க் கெடுத்துரைப் பாரால்.

(இ-ள்.) மனத்திற் கவலைகொள்ள வேண்டாம் அரசே! கடையர்களாகிய யாங்கள்சென்று அடியவர் எண்ணியவண்ணம் அதிரூபலாவண்யமுள்ள கணிகைமாதைக் கொண்டுவருவோம், தாங்கள் துன்பமொழியுமென்றுசொல்லி அவர்வாழும்பேட்டையாகிய வீதிகளிற்சென்று மனைகளிற் புகுந்துபார்க்கையில், எங்குஞ் சிவனடியார்களாய் விளங்கியிருப்பதைப் பார்த்தும் பந்துபோன்ற அழகிய தனங்களின்மீது சுகந்த பரிமளங்களை யணிந்திருக்கும் விலைமாதர்களுக்குச் சில வார்த்தைகளை எடுத்துச்சொல்லுவார்கள். எ-று. (௬௩)

மையுலாம் விழிநேர் மாதர்க ணெருங்கி
வாழுமிவ் வீதியி லொருத்தி
மெய்யுலா மரசை நாடிய பெரியோர்
விரகதைத் தணித்திடு வாரேல்
கையுலாங் கடகப் பணிமணி வடமுங்
கலித்திடு சதங்கையு மணிந்து
செய்யுலாந் தயிர்பா லறுசுவை யன்ன
திருந்தா முண்டுவாழ் குவரே.

(இ-ள்.) நீலோற்பலம்போன்ற பிரகாசம் பொருந்தியகண்களை யுடைய பெண்கள் கூட்டமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் வீதியில் யாராகிலும் ஒருமாது உண்மைவிளங்கும் எங்களிறைவனை நாடி நயந்த சங்கமர் வெவ்விய காமநோயைத் தணிப்பாரேயானால், அவர்கள் இருகாய்களுக்கும் கடகமும், நவமணிகளாலமைத்த ஆபரணங்களும், முத்துமாலைகளும், ஓசையைக்கொடுக்கும் பாதச்சதங்கைமுதலிய நூபுரங்களை அணிவதல்லாமலும், நெய் பால் தயிர் அறுசுவை பதார்த்தங்களோடும் அமுதுண்டு, சதாகாலமும் யாதுங்குறைவின்றி வாழ்வார்கள். எ-று. (௬௭)

இன்னவா றமைச்ச ருரைக்கவும் மின்னு
 ரிறைஞ்சியே யாங்க ளெல்லோரும்
முன்னுபு வடியா ரிடம்பொரு ளிரவு
 முழுமையு மிருந்திடப் பெற்றேம்
துன்னுமிவ் விரவு கழிந்தபின் நீவிர்
 சொற்றது போலவா மமைச்சர்
தன்னகஞ் சலித்து மன்னனுக் கதனைச்
 சாற்றவு மாங்கவன் மொழிவான்.

(இ-ள்.) இவ்வண்ணமாய் மந்திரிகளுரைத்த மொழியைக்கேட்ட மின்னலைப்போற் றுவளும் இடையினையுடைய அக்கணிகை மாதர்கள், எதிர்வந்து நின்றுபணிந்து பலவாறாகத் துதித்து நாங்கள் யாவரும் இன்று பகற்போதே நம்மையாட்கொள்ளும் ஸ்ரீ அருணாசலேசருடைய மெய்த்தொழும்பாகிய இவ்வடியார்களிட மின்றிரவு விடியுமளவும் சகலீலைகளுக் கிணங்கி நடப்பதாய்ப் பொன்னைப் பெற்றுக்கொண்டோமாதலால் இந்நாள் செல்லுமாகில் தேவரீர் சொல்லியபடி நடக்கலாமென்று மொழிந்ததைகேட்ட அமைச்சர்கள் தத்தம் மனஞ்சலித்து அவணின்று நீங்கி அரசனிடம் வந்துரைக்க, அப்போது கூறுவான் வல்லாளமகாராஜன். எ-று. (௬௮)



அற்பமிது நமக்கரிதா யிருப்ப தென்கொ
 லந்தோவென றயர்வுற் றுங்கு
பற்பலவாய் சிந்தைதனி லேக்க முற்றீ
 திறையருளும் பான்மை தானே
தற்பரனைப் போலெழுந்த சங்கமருக்
 குரைத்தவண்ணந் தருவே னென்று
விற்பொருதும் வேந்தனதி விரை வாகக்
 கணிகையர்பால் மேவி னானால்.

(இ-ள்.) அற்பமாகிய இச்செய்கைநமக்குக்கிடைப்பது துற்பலமாகவிருக்கும் காரணம்யாது! ஐயோ! என்று அரசன்றுன்பமடைந்து, பின்பு பலவிதமாய் மனத்தில் ஏக்கங்கொண்டு இதுவும்பரமசிவனுடைய திருவிளையாடல் தானே! ஜகதீசனைப்போல்வடிவு கொண்டு எழுந்தருளிவந்த சங்கமர் எண்ணிய வண்ணந் தருவேனென்றெழுந்து வில்லேந்தியொளிரும் வல்லாளமகாராஜன் மிகவும் தீவிரமாய் விலைமாதர்கள் வாழும் வீதிக்குச்சென்றான். எ-று. (௬௯)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வந்தவ ரெதுகேட் டாலும் வழங்குது மெனப்ப தாகை
அந்தர மளாவ நாட்டி யளித்திடு நாளி னின்று
சுந்தர சங்க மற்குச் சொன்மொழிப் பிறழா தென்னைப்
பந்தமாய்க் காப்ப வட்கிப் பதியினைத் தருவே னென்றான்.

(இ-ள்.) நம்பதியைநாடி வந்தவர்கள் எந்தப்பொருளை எண்ணிக் கேட்டபோதினும் கொடுக்கின்றோமென்று ஆகாயபரியந்தம் உயர்ந்து பறக்கும்படியாய்த் துவசமுயர்த்தி நாட்டிவரும் நாட்களில், இன்று விரகவேதனையால் மெலிந்து நம்மை நாடிவந்த அழகியசங்கமருக்கு உமது நோயையகற்றுவோமென்று கூறியவண்ணம்மாறு

ஆசையோடுங் காப்பாற்றிய கணிகைக்கு என் அரசுக்குரிய இப்பதியையளிப்பேனென்று உரைத்தான் வல்லாளமகாராஜன். எ-று. ()

கரிபரி யுடனும் வேண்டுங்
　கனகமுந் தருவேன் முத்துச்
சொரிகிய சிவிகை யீவேன்
　றொல்லுல காள்வ தற்கிங்
கரியசெங் கோலு நல்கி
　யவர்க் கியான் பணியுஞ் செய்வேன்
பெரியவர் விரகந் தீர்த்தாற்
　பெற்றதா யெனக்கா மென்றான்.

(இ-ள்.) யானை, குதிரை முதலியவைகளோடுந் தாங்கள் வேண்டிய பொன்னுந் தருவேன்; இதல்லாமலும், முத்துகளினால் அலங்காரஞ்செய்த பல்லக்குங்கொடுப்பேன்; இப்பூமண்டல முழுமையும் ஆளுகினைத்தபோதிலும் என்செங்கோலைக்கொடுத் தாளும்படி செய்து அவர்கட்கு யான் பணிவிடையுஞ்செய்வேன்; இன்று நாடிவந்தசங்கமரது காமநோயைத் தணித்தால் என்னைப்பெற்ற அன்னையு மாவார்களென்று அரசர்க்கரசனாகிய வல்லாளமகாராஜன் புகன்றான். எ-று. (௫௮)

உலகினில் வருஞ் சுகத்து ளுயர்சுக மிஃதே யென்று
கலையுணர் முனிவ ராருங் கழறுவ ராத லானந்
தலமதி லுற்ற செய்ய சங்கமர் விரகந் தீர்த்தால்
இலருமென் னுயிர் கேட்டாலு மீகுவேன் வருவீர் மின்காள்.

(இ-ள்.) கடல் சூழ்ந்த இவ்வுலகில் வழங்கும் இன்பங்களுக்கெல்லா மேலாகிய மானார் விழியினையுடைய பெண்களின் கலவித்தொழிலில்வரும் இன்பமே யதிகமென்று வேதநூலுணர்ந்தமுனிவர்களும் கூறியிருக்கின்றார்கள்; ஆதலால், நமது பதியை நாடிவந்த மேன்மை பொருந்திய சங்கமரை வருத்தும் விரகவேதனையை இன்று மாற்றினவர்களுக்கு பிரகாசம்பொருந்திய என்பிராணனைத் தானமாகக் கேட்டபோதிலும் அளிப்பேன் வருவீர் கணிகைமாதர்களேயென்று கூறினான் வல்லாளமகாராஜன். எ-று. (௫௯)



ஆதர வாகத் தங்க ளாணையின் படியே யாங்கள்
ஏதமி லடியர் தம்மோ டின்புறப் பொருளும் பெற்றோம்
காதவென் செய்வோ மென்று நங்கையர் பணிந் துரைக்கப்
பூதல மன்னன் வெட்கிப் புகழ்மனை வந்து சார்ந்தான்.

(இ-ள்.) அரசன்சொன்ன மொழியைக்கேட்ட விலைமாதர்கள், தேவரீர் ஆக்கினையின்படி நடந்துவரும் நாங்கள் இன்று குற்றமற்ற பரமசிவத்தின் அடியார்களிடத்திற் கலவித்தொழில் புரியும்பொருட்டு பொருள் பெற்றுக்கொண்டோமாதலால் எங்களை ஆட்கொள்ளும் இறைவனே! யாங்களென்செய்வோமென்று அடிபணிந்துரைத்த மொழியைக்கேட்ட வல்லாளமகாராஜன் நாணமுற்றவனாய் கீர்த்திபொருந்திய தன் அரண்மனையைச் சேர்ந்தான். எ-று. (௬௦)

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இல்லமுற்ற மன்னன்மதி வதன மாறி
　யிருப்பதனை மங்கையர்க ளிசைந்து நோக்கி
மல்லமா தேவியரு மிளையா ளாகும்
　வண்மைமிகு சல்லமா தேவி யாரும்
தொல்லுலகைப் புரக்கவல்ல எங்கள் கோவே
　துன்பமுற்ற காரணமென் னவற்றை நீவிர்
சொல்லுமென வடிபணிந்து வினவ வாங்கு
　தூயநெறி யோனவருக் கிதுசொல் வானால்.

(இ-ள்.) அரண்மனை வந்து சேர்ந்த வேந்தனுடைய பூரணச்சந்திரோதயம்போன்ற முகாரவிந்தம் சலனத்தால் வேறுபட்டிருப்பதைக் கண்ட அவன் தேவிமார்களில் மல்லமாதேவியும் மிகுவண்மைபொருந்திய இளையாளாகிய சல்லமாதேவியும் நெருங்கிவந்து நெடிய கடல்சூழ்ந்த உலகங்களையெல்லாம் ஒருகுடைநிழலினின்று பரிபாலனஞ்செய்யும் எங்கள் காதலனே! எந்நாளுமில்லாது இன்று மனத்திற்றுன்பம் நேர்ந்தவாறென்னை? அதனை தேவரீர் அருளிச்செய்ய வேண்டுமென்று பாதகமலங்களிற் பணிந்துகேட்க, அங்ஙனம் பரிசுத்தமாகிய நிலையினையுடைய வல்லாளமகாராஜன் மங்கையர்களுக்கு நடந்த செய்தியைக் கூறுவான். எ-று. (௯௧)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இன்றொரு முதியோர் மாத
ரின்பத்தி லிச்சை கொண்டு
வென்றிசேர் நம்மை நாடி
வினவிய படிக்கி சைந்திம்
மன்றநில் விலைமின் னார்கள்
வாய்ப்பது மரிதா னொந்தே
னென்றவர் வாய்மை கேட்ட
வெழின்மனை யாருஞ் சொல்வார்.

(இ-ள்.) இன்று ஓர்பெரியவர் சேல்போன்ற விழியினையுடைய மடந்தையர்கள் மயக்கத்தின்மேல் மனம்வைத்து, வெற்றிபொருந்திய நம்பதியைச்சேர்ந்து, நம்மை வினவியவண்ணமிசைந்து இவ் வருணைமாநகர் முழுமையும் விலைமாதர்கள் வாழும் வீதியெங்கணுந் தேடியும் கிடைப்பது அரிதாயிருப்பதால் துன்பமுற்றேன்! நான் கொண்டிருந்த வைராக்கியத்தையும் துறந்துவிட்டேன்! என்செய்வேன்! அடியவருக்குரைத்த மொழிதப்பிப் போகின்றதேயென்று



கூறித் துன்பமுற்றிருக்கும் வேந்தன் வாய்மையைக்கேட்ட மங்கையர்கள் சொல்லுவார்கள். எ-று. (௯௨)

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

விரகமுற்ற வடியவர்க்கு வாக்களித்த வேந்தேநின்
மனம்யாதோ வறிகி லோம் யாம்
இருவர்களிற் சிறியவளா மென்னை யன்னோற்
கிசைத்திடவுங் கருத்துளதே லிசைவே னென்றாள்
திருவளரு மன்னனக மகிழ்ந்து நோக்கிச்
சேயிழையே யடியவரோ டறையிற் சேர்ந்து
உருவிலியாற் படுந்துயர மொழிப்பா யென்று
உத்தமனும் பெரியவருக் குரைத்திட் டானால்.

(இ-ள்.) விரகவேதனையால் மெலிந்துவந்த சங்கமருக் கந்நோயைத்தணியச்செய்கிறேனென்று வாக்குதத்தஞ்செய்த எங்களரசே! தங்களுடைய கருத்து எத்தன்மையதோ சிறியேங்களறியோம், ஆதலால் எங்களிருவர்களிற் சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க் கிசையச்செய்யும்படியாய் கருத்திருக்குமானால் தேவரீர் எண்ணங் குறைவுபடாம லவ்விதமே நடக்கின்றேனென்று கூறியபோது, இலட்சுமி கடாக்ஷம்பொருந்திய வல்லாளமகாராஜன் மனமகிழ்ந்து தன் மங்கையைப் பார்த்து பெண்கள்நாயகமே! என் எண்ணத்தை நிறைவேற்றிவைத்த என்னிரு கண்மணிகளே? நம்மை நாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற்சேர்ந்து மன்மதனாற்படுந் துன்பத்தைப் போக்குவாயென்றுசொல்லி விடைகொடுத்துப் பின்னர் உத்தமகுணத்தையுடையவனாகிய மன்னன் பெரியவரிடஞ்சென்று, தேவரீர்கருத்தின்படி யமைத்தேன் அங்கீகரித்துக் கொள்ளுமென்று மிகுபத்தியோடு கூறினன். எ-று. (௯௩)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அக்கண நன்னீராடி யழகுற வறையுட் சேர்ந்து
மிக்கநல் லியாழை மீட்டி விநோதமாய்க் கீதம் பாடிப்
பக்கலி னெருங்கி யந்தப் பரமனைப் பார்க்குங் காலி
லக்கணி மெய்ய னங்கே யரியயோ கத்தி லுற்றான்.

(இ-ள்.) இராஜபத்தினியாகிய சல்லமாதேவி உடனே மஞ்சன மாடி ஆடையாபரணமணிந்து சுகந்த பரிமளங்களை யணிந்து பஞ்ச கச்சாய வர்க்கங்களேந்தி வீணையெடுத்துப் பள்ளியறையுட் பிரவேசித்து இந்திரநீல மரகதங்களாலமைத்தொளிரு மஞ்சத்தில் அம்சதூளிகா சயனத்தின்மீ தாரோகணித்துக்கொண்டிருக்கும் அடியவர் பக்கலினின்று நனி இன்னோசையைத்தரும் வீணையை மீட்டிக் கீதம்பாடிக்கொண்டு சிலநேரஞ்சென்றபின்பு பெரியவர் சித்திரப்பிரதமைபோ லசைவற்றிருப்பதை நோக்கையில் உருத்திராட்ச மாலிகாபரணமணிந்து விளங்கும் மெய்யினையுடைய பெரியவர் யோக நித்திரையி லிருப்பதைக்கண்டாள் சல்லமாதேவி. எ-று. (௨௪)

பின்னுமம் மங்கையந்தப் பெரியவர் மகிழ வெண்ணித்
துன்னுமங் கவர்மீ துற்ற சுகந்தநீ ரெடுத்துத் தூவி
நன்னயத் துடனே நிற்க நயனமுந் திறவா தன்னோர்
தன்னையும் நோக்கா தாலுந் தயங்கியங் குரைப்ப தானாள்.

(இ-ள்.) பின்னையும் அருந்ததிக்கொப்பாகிய அவ்வரசி அங்ஙனம் யோகநித்திரையிலிருக்கும் சங்கமர் மனமகிழத்தக்கதாக நினைந்து பிரகாசம் பொருந்திய அவர்மீது சுகந்தமுறவும் பனிநீரை யெடுத்துத் தெளித்தும் நன்னயத்தோடு நின்றும் கண்விழியாமலும் தன்னையும் நோக்காமலு மிருப்பதையுணர்ந்த தேவி சிந்தைமெலிந்து கூறுவாள். எ-று. (௨௫)



வேந்தனு முரைத்த வாய்மை
விண்பட முறையோ வந்தோ
எந்தலே யென் றிறைஞ்சி
யெழிலுறு மடந்தை யாங்கு
சாந்தமாய் மேல் விழுந்து
தழுவவப் பரம ராமேனோர்
ஏந்தவுங் குழந்தை யாகி
யின்புற வழுவ தானார். 1

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய எங்கோமானுரைத்த வாய்மையியர்த்தமாவது தருமமோ! ஐயோ! கடவுளேயென்று தொழுது அழகுலாவும் மாது அங்கு நித்திரையிலிருக்கும் பெரியவர்மேல் மெதுவாய்ச்சாய்ந்து ஆலிங்கனஞ்செய்கையில், ஸ்ரீகயிலாயபதியாகிய சிவபிரான் ஏந்துங்குழந்தை வடிவமாகி யவ்வணங்கு களிப்பும் ஆச்சரியமுங் கொள்ளத்தக்கதாக செங்குமுதம்போன்ற அழகியவாயைத்திறந்து அழுவாரம்பித்தார். எ-று. (௧)

அரனொரு குழவி யாகி
யலறியே யழும்போ தங்கே
பரமனார் செயலென் றெண்ணிப்
பார்த்திபன் விரைவில் வந்து
கரமதி லெடுத் தணைத்துக்
களிப்புட னுச்சி மோந்து
விராகுட னிருக்கும் போதவ்
விமலனு மறைந்திட் டானால்.

(இ-ள்.) ஸ்ரீ கயிலாயபதியாகிய பரமசிவம் குழந்தைவடிவாய் அலறியழுகின்ற செயலறிந்த அரசன் இது ஆண்டவன் திருவிளை

யாடலென்று உணர்ந்து மிகத் தீவிரமாயக்குசேர்ந்து தாமரை மலர் போன்ற திருகரங்களா லெடுத்தணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து மிக்க காதலோடும் பேரானந்தங் கொண்டிருக்கையில், சகதீசனுகிய எம்பெருமான் மாயமாய் மறைந்தார். எ-று. (௰௭)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஐயனே நினது திருவுளச் செயலை
 யறிவமோ வறிவிலோம் யாங்கள்
மெய்யனே கண்கள் மூன்றுடை யானே
 வேதனே வேதநா யகனே
துய்யனே யெம்மைச் சோதனைச் செயவோ
 சுதனெனத் தோன்றியே மறைந்தீர்
செய்யனே யெங்கட் கென்விதி யென்று
 தேவியோ டரசனு மெலிந்தான்.

(இ-ள்.) சந்திரசடாதரமூர்த்தியாகிய ஐயனே! தேவரீரது திருவுளச்செயல் மடமையோமாகிய யாங்கள் தெரிந்து கொள்ளுவோமோ! நீக்கமற்றவனே! நிர்மலகுணனே! உலோகநாயகனே! ஜெகதீசா! சிவப்பிரகாசா! அரகரா! அண்ணாமலைநாதா! உண்ணாமுலைபாகா! ஜடாமகுடத்தில் இளம்பிறையும், கங்கையும், ஞான உலாவும் தரித்த ஜோதிசொரூபா! காளகண்டதிரிநேத்திரா! கருதுமடியவர் நேத்திரா! மான்மழுசூலகபாலா! மன்றபுகழ்சீலா! பாவநாசா! காமதகனு! முயலகமர்த்தனு! திரிநேத்திரங்களை யுடையவனே! மறையுருவானவனே! சுருதிநாயகனே! பரிசுத்தனே! காலாந்தகனே! புலித்தோலுடையோனே! திரிபுரமெரித்தோனே! நாகாபரணனே! சிரமாலைதரித்தோனே! மார்க்கசகாயனே! மாதவர்களுக்கனுகூலனே! கங்காதரனே! கிருபாகரனே! பராசத்தியை வாமபாகம்பெற்ற மஹானுபாவனே! சர்வத்துக்கும் தாரகமின்றவனே! ஆபத்பாந்தவனே!



அடியவர்களுக்கு அபயாஸ்தங் கொடுப்பவனே! மெய்ஞ்ஞானச்சுடரே! உமது பரிசுத்தம்பொருந்திய உபயசாரணாவிந்தங்களுக்குத் தொண்டனுகிய எளியோங்களைச் சோதனைசெய்யும் பொருட்டோ புதல்வனுகவுந்தோன்றி மறைந்தீர் மேன்மையுற்றவனே! எங்களுக்கென்னவிதியென்று மங்கையருந்தானும் ஆற்றப்படாத துன்பத்தி லழுந்தினுர்கள். எ-று. (௰௮)

கொற்றவ னிவ்வா றுளமெலிந் தாங்கு
 கோவெனக் கதறுமக் காலை
நற்றவத் தோர்க டுதிசெயு மீச
 ஞயடி யுடன்விடை யேறிச்
சுற்றிலுங் கணங்கள் சூழ்ந்திட விதிமால்
 தொடரவு மருணையம் பதிவாழ்
வெற்றிகொ ளிறைக்குத் தரிசன முதவ
 விரகுடன் பணிந்தவன் றுதிப்பான்.

(இ-ள்.) அரசன் இவ்வகையாய் மனம் வெதும்பிக் கோவென்று வாய்விட்டலறி நிற்கையில், மகிமை பொருந்திய தவத்தினையுடையவர்கள் போற்றிப் பணியத்தக்க பரமசிவம் பார்வதி தேவியோடும் வெள்விடையேறி அநேக சிவகணங்கள் சூழ்ந்தக்கதாகவும், பிரமனும், விட்டுணுவும் வாகனங்களிலேறிவரவும் அருணையம்பதியை ஆளும் வல்லாளமகாராஜனுக்கு தரிசனந் தந்தமாத்திரத்தில் அவலோடும் பூமியிற் பணிந்தெழுந்து சிரத்தில் இருகரங்களையுங் கூப்பித்துதித்தான், எ-று. (௰௯)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஆதியே சாரண மண்மே லடியரைக் காக்க வல்ல
சோதியே சரணங் கங்கைத் தூயநெஞ் சடையிற் றுன்னப்

பாதிமா மதிய ணிந்த பரமனே தமியேற் குற்ற
கீதியைத் தாங்க வோர்சேய் கின்மலா வருளு வாயே.

(இ-ள்.) அதிகாயகனாகிய தேவே சரணம்; உலகில் அடியார்களைச் சோதித்தாட்கொள்ளும் பூரணனே சரணம்; அருட்பெருஞ்சுடரே சரணம்; கங்கையையும் சந்திரனையும் பரிசுத்தமாய் பொன்போற் பிரகாசிக்குஞ் சடையிற்றரித்த பரம்பரனே! அடியேன்செங்கோல்விதியை ஏற்றுக்கொள்ளும்படி ஓர் புதல்வனைக் கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று தொழுதான். எ-று. (௬௦)

சுந்தர மன்னு கேண்மோ சுதனுமக் கியாமே யானோம்
அந்தத்தி னுமுனக்கே யிறைவிதி முடிப்போ மென்று
சந்திரசே கரனார் வாழ்த்திச் சார்ந்தனர் கயிலை பின்னர்
பந்தமா யுலகை வேந்தன் பண்புட னாண்டு வாழ்ந்தான்.

(இ-ள்.) அழகுலாவுங் கீர்த்திபொருந்திய அரசே? யாமே உனக்குப் பிள்ளையாய்த் தோன்றினபடியால், உன் அந்தியகாலத்தில் வேதவிதியிற் கூறுஞ்சடங்குகளைச் செய்துவருவோமென்று சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபெருமான் வாழ்க்கடவை என்று கூறித் தேவகணங்களுடன் கயிலாயகிரியைச் சேர்ந்தபின்பு, மிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராஜன் அருணையம்பதியை ஆண்டு வாழ்ந்திருந்தான். எ-று. (௬௧)

## ஏழாவது

## வல்லாளமகாராஜன் சருக்கம்.

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௫௧௨.



11. திருவண்ணாமலைத்தலத்தி னெட்டுத்திக்குகளிலும் பார்வதிதேவியார் முதல் பலதேவர்களாலும், உண்டாக்கப்பட்ட வனேகதீர்த்தங்களின் மகாத்மியம்; இப்போது சில தீர்த்தங்கள்மாத்திரம் காணப்படுகின்றன.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது.

# தீர்த்தச்சுருக்கம்.

இந்த அக்கினிமலைக்குக் கிழக்குதிக்கில் இருப்பது இந்திரதடாகம். இதில் தைப்பூசத்தில் ஸ்நானஞ்செய்தால் பிர்மஹத்திதோஷம் போய்விடும். முன்பு தேவேந்திரன் ஸ்நானஞ்செய்து தன் தீவினைகளைத் தீர்த்துக்கொண்டான்.

தென்கிழக்கிலிருப்பது அக்கினிதீர்த்தம். இதில் பங்குனி மாதம் பௌர்ணமியில் முழுகினால் ஸ்திரீகளால்வந்த பாவம் தீரும். இந்தப்படி நேரிட்டபாவத்தை அக்கினிதேவன் முன்பு போக்கிக்கொண்டான்.

தெற்கிலிருப்பது யமதீர்த்தம். இதில்முழுகினால் வியாதிபோம், இந்தப்படி யமனுக்கு வியாதிபோய்விட்டது.

நிருதிமூலையிலிருப்பது நிருதிதீர்த்தம். இதில் ஸ்நானஞ்செய்தவர்களுக்குப் பகைகள்தீரும். நிருதியானவன் இதில் முழுகினதினாலே பேயைத் தன்வசமாக்கிக் கொண்டான்.

மேற்குதிசையிலிருப்பது வருணதீர்த்தம். இதில் முழுகினால் நவக்கிரகங்கள் நன்மையைக் கொடுப்பார்கள்.

வாயுதிக்கிலிருப்பது வாயுதீர்த்தம். இதனால் எல்லாத் துன்பமுந் தீரும்.

வடக்கிலிருப்பது குபேரதீர்த்தம். இதனால் தரித்திரம் போய்விடும்.

ஈசான்னியதிக்கிலிருப்பது அசுவனிதீர்த்தம். இதனால் பரமசிவனைச் சேரலாம்.

முன்சொன்ன யமதீர்த்தத்திற்குத் தெற்கிலிருப்பது அகஸ்திய தீர்த்தம். இதனால் கல்வியில் சிறந்தவர்களாவோம்.

முன்சொன்ன குபேரதீர்த்தத்திற்கு அருகிலிருப்பது வசிஷ்ட தீர்த்தம். இதில் ஐப்பசிமாதத்தில் முழுகினால் சாஸ்திரங்களெல்லாம் விளங்குவதுமன்றிப் பாபமும் போய்விடும்.

இப்படி இன்னும் அனேக புண்ணியதீர்த்தங்கள் உண்டு.

அருணசலத்திற்கு வடபக்கத்தில் திருநதியென்று ஒருநதி இருக்கின்றது. அதில் முழுகினால் நாம் நினைத்தவரங் கிடைக்கும்.

தென்பக்கத்தில் சோணநதியிருக்கின்றது. அதில் முழுகினால் துன்பங்களெல்லாம் நீங்கும்.

மேற்பக்கத்திலிருக்கிற புண்ணியநதியென்கிற நதியில் முழுகினால் நல்ல உருவத்தையும் வேண்டியபேறும் அடையலாம். ஆதியில் ஈழன் என்கிற ஒரு அரசன் இதில் முழுகினபலத்தினாலே தனக்குவந்த பெண்ணுருவம் நீங்கி நல்ல உருவத்தைப்பெற்றான்.

முன்சொன்ன திருநதிக்கு வடக்கிலிருக்கிற சேயாறு என்கிற நதியில் முழுகினால் நினைத்தவரத்தை யடையலாம்.



ஆலயத்துக்குள்ளிருக்கும் சிவகங்கை என்னுந்தீர்த்தத்தில் மாசிமாசத்தில் முழுகினால் எல்லாத்தேவர்களைப்பார்க்கிலும் மேன்மை பெறலாம்.

அந்தச் சிவகங்கைக்குக் கிழக்கிலிருக்கிற சக்கிர தீர்த்தத்தில் முழுகினால் சிவபதத்தை யடையலாம்.

கோவிலுக்குப் பக்கத்தில் அக்கினிதிசையிலிருக்கிற பிரமதீர்த்தத்தில் முழுகினால் பிறவி நீங்கும்.

இத்தீர்த்தங்களிலும் நதிகளிலும் முழுகி இத்தலத்தில் தானஞ்செய்தால் ஒன்று கோடியாகப் பலனுண்டாகி நற்கதி அடையலாம்.

---

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

செருமலையுங் களிற்றுமுகப் பிள்ளையிரு
பதம்போற்றித் திரையான் முத்தந்
தருமலையு மொருமலையுந் தொலைத்தமலைக்
கிழவனிரு சரணம்போற்றிப்
பொருமலையு மிரங்கலையு மடியாருக்
கொழிக்கவழற் பொருப்பாய் நின்றென்
கருமலையுஞ் செம்மலையும் பச்சைமலை
மடந்தையையுங் கருத்துட் சேர்ப்பாம்.

(இ-ள்.) யுத்தஞ்செய்யத்தக்க யானைமுகத்தையுடைய பிள்ளையார் இரண்டுபாதத்தையும் வணங்கி, அலைகளாலே முத்துக்களைக் கொழிக்குஞ் சமுத்திரத்தையும் கிரௌஞ்சமென்னு மலையையும் அடக்கிய சுப்பிரமணியர் பாதத்தைவணங்கித் துன்பத்தையும் சோர்வையும் அடியார்களுக்கு ஒழிக்க அக்கினிமலையாக நின்று என்னுடைய பிறவியைக்கெடுக்குஞ் சிவபிரானையும் மரகதநிறம் பொருந்திய பார்வதியாரையும் மனத்திற்சேர்ப்பாம். எ-று. (௧)

கலி விருத்தம்.

தேங்கு மன்பிற் சிவபுரா ணந்தனி
லோங்கு ருத்திர சங்கிதை யோதினேன்
பாங்கி லிங்க புராணப் பரப்பினு
ளீங்க றிந்த படியு மியம்புவேன்.

(இ-ள்.) பெருகிய அன்பினாலே சிவபுராணத்தில் உயர்ந்திருக்கின்ற உருத்திரசங்கிதையை முன்சொன்னேன். பெருமையாகிய இலிங்கபுராணப் பரப்பிலே நானறிந்த தன்மையையுஞ் சொல்லுவேன். எ-று. (௨)

ஆதி வேத னருளச் சனகனும்
வேதம் வல்ல வியாதனுக் கீந்தனன்
சூத னுக்கவன் சொல்லினன் சூதனு
மேத மற்ற விருடியர்க் கீந்தனன்.

(இ-ள்.) ஆதியிலே பிரமன் சனகரிஷிக்குச் சொல்ல, சனகர் வேதவியாசருக்குச் சொல்ல, வேதவியாசர் சூதரிஷிக்குச் சொன்னார், சூதரும் குற்றமற்ற நைமிசாரணியத்து ரிஷிகளுக்குச் சொன்னார். எ-று. (௩)

வன்னி மாமலைத் தோற்றமும் வான்மலைக்
கன்னி பாகங் கலந்தது முன்னமே
சொன்ன தாதலி னங்க தொழித்ததன்
பின்ன ருள்ள கதைசில பேசுவாம்.

(இ-ள்.) அக்கினிமலை தோன்றியதும், பெருமையமைந்த மலைப்பெண்ணான பார்வதி, சுவாமியினது இடப்பாகம் பெற்றதும் முன்னமே சொன்னபடியினால் அதை நீக்கிப் பின்னுண்டாகிய சரித்திரங்களையுஞ் சொல்லுவோம். எ-று. (௪)



தீர்த்த மும்மதிற் செய்தரு மங்களும்
வாய்த்த வெற்பின் வலமு மிலிங்கமு
மேத் திடாதவ ரெய்து மிகழ்ச்சியும்
பார்த்த ரன்பொருள் கொண்டவர் பாவமும்.

(இ-ள்.) தீர்த்தங்கள் மகிமையும், அதிற்செய்யப்பட்ட தருமங்களும், கிரிப் பிரதட்சணத்தின் மகிமையும், இலிங்கமகத்துவமும், சுவாமியை வணங்காதவரடையுமிகழ்ச்சியும், அவரடைந்த இகழ்ச்சியைப்பார்த்துச் சுவாமியின்பொருளை அபகரித்தவர்களுக்கு வருகின்ற பாவமும். எ-று. (௫)

பந்த மாயறி யாதுசெய் பாவமுஞ்
சிந்தை யார வறிந்துசெய் தீமையும்
முந்தை யோர்க ளொழித்த முறைமையு
மெந்தை நான மகிழ்வுமி யம்புவேன்.

(இ-ள்.) பந்தவசமாயறியாமற்செய்த பாவமும், மனதார அறிந்து செய்தபாவமும், முற்காலத்திலுள்ளவர்கள் அப்படிவந்தபாவத்தைத் தீர்த்துக்கொண்டமுறைமையும், சுவாமியினால் மகிழ்ச்சியடைந்த புருகுபூபதியின் செய்கையுஞ் சொல்லுகின்றேன். எ-று. (௬)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

விருப்பில் கோதமமு னீசன்
றிருமுனே வேள்வி நாட்டத்
திருப்பொலி சடையோன் றன்னாற்
செனித்திடு மறையோ னங்கு
உருப்பொலி கனலோ னென்ன
வுதித்தன னவனை நோக்கிப்
பொருப்பிறை யவனைப் பூசை
புரியெனப் புகழ்ந்து சொன்னான்.

(இ-ள்.) உலகத்து ஆசையில்லாத கௌதமரிஷி, சுவாமி சந்நிதிமுன் வேள்வியொன்று செய்வதற்கு எத்தனித்து அக்கினிவளர்க்க, அழகுபொருந்திய சடையையுடைய அந்தச்சுவாமி கிருபையால் முன்னமே தோன்றியிருக்கிற சிவபிராமணன் அந்தயாகத்தில் * அக்கினி சொரூபம்போலப் பிறந்தான்; அவனைப்பார்த்துக் கிரிரூபமாகிவிளங்கிய அருணாசலேசுரரைப் பூசைசெய்யென்று புகழ்ச்சியாக உபசாரஞ் சொன்னார். எ-று. (எ)

மற்றுமேழ் தருப்பை தீயி
விடுதலு மலர்மா தென்னக்
சுற்றையங் குழலேழ் மின்னா
ருதித்தனர் கணிகை மாராய்
நிற்றலு மிறைவர் முன்னே
நிருத்தமே புரியு மென்று
ணற்றடம் பலவுங் கண்டு
நகரமுஞ் சிறப்புஞ் செய்தார்.

(இ-ள்.) அதன்பின்கௌதமர் ஏழுதருப்பையை யெடுத்துக் குண்டத்தின் அக்கினியிலேபோட்ட அளவில், இலட்சுமிபோலக் கற்றையாயிருக்கின்ற கூந்தலையுடைய ஏழுபெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள்; அவர்களைப்பார்த்து நீங்கள் சுவாமிசந்நிதியில் நாட்டியஞ்செய்து வாருங்களென்றார், அவர்கள் நன்மையாகியதடாகங்கள் பலவுண்டாக்கி ஊரைச் சிறப்புச்செய்தார்கள். எ-று. (அ)

மந்திரம் பரவும் வன்னி மலைதனக் கடுத்த கீழ்பா
லிந்திர தடமுன் னுந்த விந்திரன் முதலோ கண்ட

* அக்கினி சொரூபம்போல் பிறந்தான் என்கிற மொழியைக் கௌதம புராணத்தில் தெரிந்துகொள்க.



தந்தாத் தமரர் தாமு மதிற்றின மூழ்க லாலே
சந்தனக் குழம்பு நாறு மணக்குமைந் தருவின்மாலை.

(இ-ள்.) தேவர்கள் மந்திரங்களாலேதோத்திரஞ்செய்யப்பட்ட அக்கினிமலைக்கு அடுத்தகிழக்குத்திக்கில் இந்திரதடாகமென்றொன்றுண்டு; அது இந்திரன் முன்னுண்டாக்கினது; தேவலோகத்திலுள்ளவர்கள் அதில் நித்தியமும் முழுகுதலால் சந்தனக்குழம்பின் வாசனையும் கற்பகபுட்பத்தின் மாலையினுடைய வாசனையும் மணக்கும். எ-று. (௯)

பரமமா மதிற்றைப் பூசம் படிந்திடிற் பருகிற் கோடி
பிரமபா தகம்போ மென்று லதினலம் பேச லாமோ
சுரர்பதி மூழ்கி முன்னே தொடர்ந்த தீவினைக டீர்ந்தா
னிரவியுள் ளளவும் வாழ விமையவ ருலகம் பெற்றான்.

(இ-ள்.) மேன்மைபொருந்திய அந்த இந்திரதீர்த்தத்திலதைப் பூசத்தில் ஸ்நானஞ்செய்து ஒருகை சலம் ஆசமனஞ்செய்தால், கோடி பிரமஹத்திதோஷம் போமென்று லதன் பெருமையைப் பேசக்கூடுமோ! இந்திரன் முன் அதில்மூழ்கித் தன்னைப்பற்றிய தீவினைகளை நீக்கிக்கொண்டு சூரியனுள்ளளவும் வாழத் தெய்வலோகத்தையும் பெற்றான். எ-று. (௧௦)

அங்கிதன் பெயராந் தீர்த்த மருணைமால் வரைத்தென் கீழ்பா
பொங்கிய தகனின் மீனத் திங்கட்பூ ரணையின் மூழ்கிற்
செங்கையற் கருங்கட் செவ்வாய்த் திருந்திழை யவரால்வந்து
தங்கிய வினையுந் தீருந் தருமமுந் தவமுஞ் சாரும்.

(இ-ள்.) அருணாசலத்துக்குத் தென்கிழக்கில் அக்கினிதீர்த்தமென்றொன்றுண்டு; அதில் பங்குனிமாதம் பௌர்ணமியில் முழுகினால் செம்மையான மீன்போன்ற கரியகண்களையும் சிவப்பாகியவா

யையு முடைய மாதர்களால் வந்துபொருந்திய பாவமுந்தீரும்; தருமமும் தவமும்சேரும். எ-று. (௧௧)

வன்னிமுன் னொருநா ளேழு
மறைக்குல முனிவர் காதற்
றுன்னிய மடந்தை மாரை
விரும்பத்தன் சுவாகை யந்தப்
பன்னியர் வடிவ மாகப்
புணர்ந்துமேற் படர்ந்த பாவந்
தன்னைத்தான் கண்ட வந்தத்
தடத்தினிற் படிந்து சாய்த்தான்.

(இ-ள்.) அக்கினிதேவன் ஒருநாள்வேதமுணர்ந்த எழுமுனிவர்களுடைய பத்தினிமார்களைவிரும்ப, அதைத் தன்பெண்சாதியாகிய சுவாகாதேவியறிந்து அந்த மாதர்வடிவத்தை தானெடுக்கப்புணர்ந்து மேலே விளைந்தபாவத்தைத் தீர்க்கத் தன்னாலே உண்டாக்கப்பட்ட அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து பாவத்தைப்போக்கிக்கொண்டான். எ-று. (௧௨)

தென்றிசை தருமத் தீர்த்த முளததிற்
செறிந்து மூழ்கிற்
பொன்றிகழ் வடிவ மாகு முடற்பிணி
பொடிபட் டோடும்
வென்றியிற் காலன் முன்னாள்
விதிப்படை தொடா மேனி
குன்றிய சாபந் தீர்த்தா
னதனிடைக் குளித்து மாதோ.

(இ-ள்.) பின்னும் அந்தமலைக்குத் தென்பக்கத்தில் யமதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் அடைந்துமூழ்கினால் உடல்பொன்வடிவமாகும்; தேகத்திலுள்ளவியாதிபோம்; வெற்றிபொருந்தியபிரம்மா

210 210



வினது ஆயுதந்தொடர்ந்து தேகங்குன்றினதை யமனானவன் அதில் மூழ்கித் தீர்த்துக்கொண்டான். எ-று. (௧௩)

நீங்கரு நிருதி தீர்த்த முளதுமே னிருதி கோணத்
தாங்கதின் முழுகி னோர்க் கரும்பகை யனைத்துந் தீரும்
ஓங்குமத் தடத்தின் முன்னே யுருகியே நிருதி மூழ்கி
வீங்கிய கனற்கட் பேழ்வா யலகையின் விசயம் பெற்றான்.

(இ-ள்.) நீங்குதற்கரியதாகிய நிருதிதீர்த்தமென்று நிருதிமூலையிலிருக்கின்றது, அதில்முழுகினவர்களுக்கு அரியபகைகளெல்லாந் தீரும்; உயர்ந்த அந்தத்தீர்த்தத்தில் முன்னேமுழுகின பலத்தினால் நிருதியானவன் நெருப்புநிறம்போன்ற கண்களையும் ஆழமாகிய வாயையுமுடையபேயைத் தன் வசமாக்கிக்கொண்டான். எ-று. (௧௪)

வசையறு மலைக்கு மேல்பால் வளம்பெறு வருண தீர்த்த
நசைபெற வதனின் மூழ்கிற் கிரகமொன் பானு நன்றாம்
இசைபெறக் கிரக மெல்லா முழுகுமவ் விடத்தில் வாயு
திசையினிற் பவன தீர்த்த முழுகிலெத் துயருந் தீரும்.

(இ-ள்.) குற்றமற்ற அருணகிரிக்கு மேற்குத்திக்கில் வளப்பமுள்ள வருணதீர்த்தமென்றொன்றுண்டு, ஆசையுண்டாக அதில் முழுகினால் ஒன்பதுகிரகங்களும் நன்மையைக்கொடுக்கும்; முன் அந்த ஒன்பதுபேரும் அதில் தங்களிஷ்டத்தையடைய மூழ்குவார்கள்; வாயுதிக்கில் வாயுதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் முழுகினால் எல்லாத்துன்பமுந்தீரும். எ-று. (௧௫)

வடதிசை குபேர தீர்த்த முழுகினோர் வறுமை போமத்
தடமதிற் குணபா லீசன் மருத்துவர் சமைத்த தீர்த்தம்
புடைசெறிந் ததனின் மூழ்கிற் புலையரிற் கடைய ரேனு
மடைவுடன் வருணை நான்கி லதிகமா யானைச் சேர்வார்.

(இ-ள்.) வடக்குத் திக்கிலே குபேரதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் முழுகினவர்களுடைய தரித்திரம் நீங்கிப்போகும்; அதற்குக் கிழக்கு ஈசானியதிக்கில் அசுவனி தேவர்களால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் இருக்கின்றது, அதில் முழுகினால் கீசனைப்பார்க்கிலும் இழிந்தவராயிருந்தாலும் பெருமையோடு நான்குவருணத்தினு மதிகமாகிப் பரமசிவனைச் சேர்வார்கள். எ-று. (கக)

அந்தகத் தடத்திற் றென்பா லகத்தியத் தடமுண் டங்கே
முந்திய கன்னி மாதம் மூழ்கியுட் கொண்ட பேர்கள்
சந்திர வதனங் கண்டார் தமிழ்க் கவிக் கரசராவர்
செந்திரு மயிலுங் கல்விச் செல்வியுஞ் சேரு மன்றே.

(இ-ள்.) முன்தெற்காகச் சொன்ன யமதீர்த்தத்துக்குத்தெற்காக அகத்திய தீர்த்தமென்றொன்றுண்டு, அதிற் புரட்டாசி மாதத்தில்முழுகி ஒருகைஜலம் உட்கொண்டபேர்களுடையசந்திரனையொத்தமுகத்தைப் பார்த்தவர்கள் தமிழிற்சிறந்தவர்களாவார்கள்; இலட்சுமியும் சரசுவதியும் அவரிடத்திற் சேர்ந்திருப்பார்கள். எ-று. ()

தனபதி தடத்தைச் சேர வதிட்டனார் தடமுண் டந்த
முனிவரைப் பசியின் மூழ்கி முனிவரிற் றலைமை பெற்றா
ரனையதின் மூழ்கி னோர்கட் கங்கமுஞ் செங்கை நெல்லிக்
கனியெனு விளங்கும் பாவக் கடலதுங் கடப்ப ரன்றே.

(இ-ள்.) முன்சொன்ன குபேரதீர்த்தத்துக்கருகே வதிட்டதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் வதிட்டர் ஐப்பசிமாதத்தில் முழுகி முனிவர்களுக்கெல்லாம் முதன்மையா யிருக்கப்பெற்றார்; அப்படிப்பட்டதீர்த்தத்தில் முழுகினவர்கட்குச் சாத்திரங்களெல்லாமுள்ளங்கை நெல்லிக்கனிபோலவிளங்கும், பாவமாகிய கடலையுங்கடப்பார்கள். எ-று. (கஅ)



கங்கைவேற் குமரனானை முகத்தவன்
கதிரோன் வெற் பின்
மங்கையோர் வடுகன் கன்னி
மதியமென் வசுக்கள் வெள்ளைப்
பங்கய மடந்தை தேவர்
குடைதடம் பலவுஞ் சூழு
மங்கதோர் தடத்தின் மேன்மை
மறைகளு மறிவு றாவே.

(இ-ள்.) கங்கைவேலாயுதமேந்திய சுப்பிரமணியர், விக்கினேசுரர், சூரியன், பார்வதி, வயிரவர், சத்தகன்னிகள், சந்திரன், அஷ்டவசுக்கள், சரசுவதி, மற்றுமுள்ள தேவர்கள் முழுகியதீர்த்தங்கள் அனேகமுண்டு; அவைகளில் ஒவ்வொருதீர்த்தத்தின் பெருமையை வேதங்களும்சொல்லி அறியா! எ-று. (சக)

ஒருநதி தானு மொவ்வாத்
திருநதி வடபா லாக
வருநதி முழுகிப் பூமான்
மாயவ னாகத்திற் சேர்ந்தா
ணருமதை யாவுஞ் சோணை
நன்னதி தென்பாற் றென்றுஞ்
சுரநதி யமுனை பொன்னி
படிந்துதங் துயரந் தீர்ந்தார்.

(இ-ள்.) ஒரு நதியையும் ஒப்பச்சொல்லக்கூடாத திருநதி என்று ஒருநதி, அருணாசலத்துக்கு வடக்குப்பக்கத்தில் உண்டு; அதில் இலட்சுமி, முழுகி விட்டுணுவினுடையமார்பைச்சேர்ந்தாள்; நர்மதாநதி வணங்குஞ் சோணையென்று ஒருநதி, அருணாசலத்துக்

குத் தென்பாரிசத்திலிருக்கும்; அதில் கங்கை, யமுனை, காவேரி முதலிய நதிகள் முழுகித் தங்கள் துன்பத்தைப் போக்கிக்கொண்டார்கள். எ-று. (உ0)

புண்ணிய வாறு தெய்வ மலைக்குமேற்
  றிசையிற் பொங்கும்
நண்ணிய புண்ணி யாற்றா றென்றுபேர்
  நகரந் தானும்
எண்ணிய நதியின் மூழ்கி யிழுனென்
  றாசன் றீங்காம்
பெண்ணியல் வடிவந் தீர்ந்தான் வடிவமும்
  பேறும் பெற்றான்.

(இ-ள்.) தெய்வீகம்பொருந்திய அம்மலையின் மேற்பக்கத்தில் புண்ணிய நதியென்று ஒன்றுண்டு; அதனருகில் புண்ணியாற்றூர் என்று ஒருநகரமுண்டு, அதிலிருந்த ஈழுனென்கிற அரசன் தனக்குத் தீங்காக வந்தடைந்த பெண்ணுருவை அந்நதியில் முழுகித்தீர்ந்து நல்ல உருவமும் வேண்டியபேறும் பெற்றான். எ-று. (உக)

திருந்துசே யாறு முன்சொற் றிருநதி வடபாற் றேன்றும்
பொருந்தவே லெறிந்து செவ்வே ளழைத்தவப் புனித நீரி
லருந்திக ழயிலோன் மூழ்கி யசுரரைத் தொலைக்குஞ் சீரு
மருந்தயி லமரர் சேனா பதியெனும் வாழும் பெற்றான்.

(இ-ள்.) அழகிய சேயாறு என்னு நதி முன்சொன்னதிருநதிக்கு வடபக்கத்திலிருக்கும், அதுமுன் சுப்பிரமணியர் வேலெறிந்தழைத்ததீர்த்தம்; அதில் மிகவும் பிரகாசிக்கின்ற வேலையுடைய அச்சுப்பிரமணியரேமுழுகி அசுரர்களைக் கொல்லும்வரமும் அமிர்தபானஞ்செய்யுந் தேவர்களுடைய சேனாபதியென்கிற பேரும் பெற்றார். எ-று. (உஉ)



விருத்தா லயத்தி னுள்ளே சிவதட முளது நித்தங்
கருத்தினு னினைத்தால் தெய்வக் கங்கையிற் படிந்ததொக்கும்
உருத்திரர் பலரு மாசி மகத்திலே யுகந்து மூழ்கி
வருத்தினி லிருந்து தேவ ரெவரினு மேற்றம் பெற்றார்.

(இ-ள்.) சுவாமி ஆலயத்தில் சிவகங்கை யென்று ஒரு தீர்த்தமுண்டு; அதைத் தினந்தோறும் தன்மனத்திலே நினைத்தால் கங்கையில்முழுகிய பலனுண்டாகும்; அநேகஉருத்திரர்கள் மாசிமாதத்தில் ஸ்நானஞ்செய்து ரிஷபவாகனருடராய் எல்லாத்தேவர்களினும் மேன்மை பெற்றார்கள். எ-று. (உ௩)

சக்கர தீர்த்த மந்தத் தடத்தினிற் குணபாற் றேன்றும்
மைக்கட லனையமேனி விராகமால் படிந்த தாகும்
அக்கரை வலமாய் வந்தோர் முழுகினோ ரருந்தி னோர்கள்
துக்கசா கரம்விட் டீசன் றுணைப்பதம் பெறுவ ரன்றே.

(இ-ள்.) சக்கரதீர்த்தமென் றொருதீர்த்தம்,முன்சொன்னதீர்த்தத்துக்குக் கிழக்கிலிருக்கின்றது; அது முன்னமே சமுத்திரத்தினிறம்போன்ற விட்டுணுவராக அவதாரத்தில் முழுகிப்பேறுபெற்றதாகும்; அத்தீர்த்தத்தை வலமாகவந்தவர்களும் அதில் முழுகினவர்களும் அந்நீரை உட்கொண்டவர்களும் துக்கசமுத்திரத்தில் நின்று நீங்கிச் சிவபிரானது இரண்டு பாதங்களையும் இடமாகப் பெறுவார்கள். எ-று. (உ௪)

நாயக னமருங் கோயின் மருங்கினி னளிநக் கோயிற்
றூயவன் பெயராந் தீர்த்தந் தீயவன் றிசையிற் றேன்றுங்
காயமத் தடத்திற் றோய்ந்தார் பிறவியாங் கடலில் றோயா
ராயிரஞ் சனனந்தோறு மடைந்த தீவினையுந் தீர்ப்பார்.

(இ-ள்.) அருணாசலேசுரரெழுந்தருளியிருக்கின்றகோயிலுக்குப் பக்கத்தில் அக்கினிதிசையில் பிரமதீர்த்தமென்று ஒரு தீர்த்தம் உண்டு, அதில் முழுகினவர்கள் பிறவிக்கடலில் மூழ்கார்கள்; ஆயிரம்பிறப்புகள் தோறுஞ் சேர்ந்த தீவினையுந் தீர்ப்பார்கள். எ-று. ()

அத்தட முழுகிச் செம்பொன் னணுவள வளிப்பா ராயிற்
சத்தசா கரஞ்சூ ழிந்தப் புவியெலாந் தனத்தி னாலு
முத்தணி மணியி னாலு நிறைத்தது முழுது மீசன்
பத்தர்பா லளிக்கு மந்தப் பலத்தினு மதிக மாகும்.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில் முழுகித்தங்கம் ஒரு அணுவளவுகொடுப்பாரானால் சத்தசமுத்திரஞ்சூழ்ந்த இப்பூமி எல்லாம் சொர்ணத்தினாலும், நவரத்தினங்களினாலும் நிறைத்து, அவைகளையெல்லாம் சுவாமியினுடைய பத்தரிடத்திற்கொடுக்கும் பலனிலு மதிகமாகும். எ-று. (உக)

தேன்குந் தடத்தின் மூழ்கிச் செய்யவா னீந்தோர் வெள்ளை
தானவர் ரணஞ்சூழ் செம்பொற் சயிலநேர் விமானத் தேறி
மேனகை யரம்பை தூய சவரிக ளிரட்ட மேவி
யானிலோர் மயிர்க்கோர் கற்ப மரன்பதத் திருப்ப ரன்றே.

(இ-ள்.) தேன்பொருந்தியபுட்பங்களையுடையஅத்தீர்த்தத்தில் முழுகிச் சிவப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள் மதங்கொண்டவெள்ளையானைகள் சூழ்ந்து தாங்கப்பட்ட மகாமேருபோலுஞ் சொர்ணவிமானத்திலேறிக்கொண்டு மேனகை, அரம்பைஇருவரும்பரிசுத்தமாகிய சவரிவீசப்போய் அப்பசுவின்மயிர் ஒன்றுக்கு ஒருகற்பகாலம் சிவபதத்தில் இருப்பார்கள். எ-று. (உஉ)

காலமே யதனின் மூழ்கிக் கரியவா னளித்தோர் கோல
நீலமால் வரைபோ னில நெருங்கிய விமானத் தேறிச்



சூலமே பிடித்துப் பூத கணத்தவர் தொடர்ந்து போற்றப்
பாலலோ சனர்வாழ் கின்ற பரபதத் திருப்ப ரன்றே.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில் காலமேமுழுகிக் கறுப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள், அழகுபொருந்திய நீலமலைபோல் நீலரத்தினமிழைத்த விமானத்திலேறிச் சூலாயுதம் பிடித்துக்கொண்டு பூதகணங்கள் தொடர்ந்துவந்து வணங்க நெற்றிக்கண்ணையுடைய சிவனது பரமபதத்தி லிருப்பார்கள். எ-று. (உ௩)

வெள்ளையா னளித்தோர் வெள்ளை
விடைகளா யிரஞ்சூழ் முத்தின்
கொள்ளையாம் விமானத் தேறி
யிமையவர் குழாங்கொண் டேத்த
வள்ளலார் பதத்திற் சேர்வர்
மழைக்குடை செருப்புத் தந்தோ
ரெள்ளரும் பரிமா வீந்தோ
ரிந்திர பதத்திற் சேர்வார்.

(இ-ள்.) அத்தீர்த்தத்தில் முழுகி வெள்ளைப்பசுவைத் தானங்கொடுத்தவர்கள், ஆயிரம்வெள்ளை ரிஷபங்கள் சூழ்ந்த முத்தினாலலங்கரிக்கப்பட்ட விமானத்தி லேறிக்கொண்டு தேவர்கள் கூட்டமாகச்சேர்ந்து வணங்கச் சுவாமிபதத்தில் சேர்வார்கள்; மழைக்குக் குடையும், (வெயிலுக்கு) பாதரட்சையுங் கொடுத்தவர்கள் இகழ்தலில்லாத குதிரைகொடுத்தவர்களும் இந்திரபதவியிற் சேர்வார்கள். எ-று.

கன்னியைத் தான மாயக் கரைதனி லளித்தோர் தேவர்
பொன்னியு லுலகிற் போக பூமியி லளகை நாட்டின்
மின்றிகழ் மலரோ னாட்டில் விரும்பின நுகர்ந்துதேவர்
சென்னியால் வணங்கிப் போற்றச் சிவபதத் திருப்ப ரன்றே.

(இ-ள்.) அத்தீர்த்தக்கரையில் கன்னிகாதானஞ் செய்தவர்கள் தேவலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும், குபேரனுடைய அளகாபுரிபட்டணத்திலும், பிரகாசம்பொருந்திய பிரமலோகத்திலும், சிலசிலநாட்களிருந்துவிரும்பினவற்றையெல்லாம்அனுபவித்துத்தேவர்கள் தலையாலேவணங்க அதன்பின் சிவபதவியிற் சேர்வார்கள்-எ-று.

உத்தம தலத்திற் கோடி யருந்தவர்க் குதவு மன்ன
நித்தமாங் காசி மீதோ ரவிழ்ப்பலன் றனக்கு கோரா
தத்தலத் தனந்த கோடி யருந்தவர்க் குதவு மன்னஞ்
சத்திய வருணை நாட்டி லவிழ்ப்பலன் றனக்கொவ் வாதே.

(இ-ள்.) உத்தமமாகிய தலங்களில் கோடி அருமையாகிய தவசிகளுக்குப்படைத்த அன்னத்தின்பலன் நித்தியமாயிருக்கிற காசியில் பெரியோர்களுக்குப் படைத்த அன்னத்தில் ஒரு அன்னப்பலனுக்கும் ஒவ்வாது; அப்படிப்பட்ட காசியிலநேககோடி தவசிகளுக்குப் படைத்த அன்னத்தின்பலன் உண்மையாகிய அருணாசலத்தில் படைத்தஅன்னத்தில் ஒரு அன்னப்பலனுக்கு ஒப்பாகாது. எ-று. ( )

ஆவடி யளவு பூமி யந்தணர்க் களித்தோ ரீசன்
சேவடி நிழலிற் றங்கள் கிளையுடன் செருக்கி வாழ்வார்
மாவிடை யரற்கு விட்டோர் மற்றொரு விடையே லேறி
மேவிடுஞ் சிவலோ கத்திற் பவனிபோய் வியப்ப ரன்றே.

(இ-ள்.) பசுவின் குளப்படியளவுபூமி பிராமணர்கட்குத்தானஞ் செய்தவர்கள், பரமசிவன் பாதநிழலிலே தங்களுடைய சுற்றத்தோடுகளித்து வாழ்வார்கள்; சுவாமிக்குப் பெருமைபொருந்திய ரிஷபங்களைத் தானஞ்செய்தவர்கள் வேறுரிஷபவாகனத்திலேறிக்கொண்டு சிவலோகத்தில் பவனியாகப்போய் சந்தோஷித்திருப்பார்கள். எ-று.



சாலைகள் சமைத்தோர் நந்த வனஞ்சமைப் பித்தோர் கேணி
கூலமார் தடங்கள் கண்டோர் குலிசனார் பதத்திற் சேர்வார்
ஆலய மெழுதித் தூர்த்து விளக்கிட்டோ ரலங்க ரித்தோர்
வேலையி னடுவிற் பாந்தள் மெத்தையிற் றுயில்வ ரன்றே.

(இ-ள்.) அருணாசலத்தில் சாலை வைத்தவர்களும், நந்தவனம் வைத்தவர்களும், கிணறுகள், மணற்குன்று பொருந்திய குளங்கள் வெட்டினவர்களும் இந்திரபதவியடைவார்கள்; ஆலயத்திலுள்ள பள்ளம்நிறைவிமெழுகிவிளக்கேற்றிவைத்தவர்களும், அலங்காரஞ்செய்தவர்களும் விட்டுணுவாய்த் திருப்பாற்கடல் மத்தியில் சற்பசயனத்தில் யோகநித்திரை செய்வார்கள். எ-று. (௩௩)

மழைப்புன லரிதா நாளின் மருவுநீர்ப் பந்தர் வைத்தோர்
செழிக்குமேற் பதவி தன்னிற் றேவருந் துதிக்க வாழ்வார்
புழைக்கைமா வுரிய ரன்பர்க் கணிகலை புனைவித் தோரோ
ரிழைக்கள விறந்த கால மிறைபதத் திருப்ப ரன்றே.

(இ-ள்.) நீரரிதாகிய கோடைக்காலத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்தவர்கள், செழிப்பான மேலாகியபதவியில் தேவர்களும் புகழும்படி வாழ்வார்கள்; யானையுரிபோர்த்த சிவனுடைய அன்பருக்கு வஸ்திரங்கொடுத்தவர்கள் ஓர் இழைக்கு அளவிறந்தகாலம் சிவபதத்திலிருப்பார்கள். எ-று. (௩௪)

மடஞ்சமைத் தவர்க ளந்த மடத்திலோர் துகட்கோர் கற்ப
மிடம்பிடித் தறியா வீட்டி லிருப்பர்வே றிறந்த பேர்க்கும்
விடங்குடித் திறந்த பேர்க்கும் விதியினூ றுதி வேள்விக்
கடன்கழித் தனரே லந்தக் குலமெலாங் கதியிற் சேரும்.

(இ-ள்.) இத்தலத்தில் ஒரு மடங் கட்டினவர்கள், அம்மடத்தி லிருக்கிற ஒரு நாளுக்கு ஒரு கற்பகாலம் கெடுதலில்லாதமோக்ஷத் தில் நிலைபெற்றிருப்பார்கள்; பின்னும் வேறுவிதமா யிறந்தவர்கட் கும் விஷங்குடித் திறந்தவர்கட்கும் விதியாக உறுதி பொருந்தியபி ரியாகம் அத்தலத்திற்செய்தால் அவர்கள் குலத்தாரெல்லாருங்க தியிற் சேருவார்கள். எ-று. (௧௫)

காகமுன் பலிபீ டத்திற் பலிதனைக் கவரும் போதி
லாகமார் சிறையைக் கீழே புடைத்ததா லயத்தி னூடே
ஓகையா னமது கோயில் விளக்கிய தெனவுட் கொண்டு
பாகசா தனனூர் வாழும் பதியினைப் பரம னீந்தான்.

(இ-ள்.) ஒருகாக்கை அத்தலத்துக் கோயிற் பலிபீடத்தில்வைத் திருக்கிற பலியன்னத்தைவாயினாற்கிரகிக்கும்போது தன்னுடையசி றகால் கீழேயடித்தது; அதைச்சுவாமிபார்த்து ஆலயத்தில் பிரியத் தினால் நம்முடைய கோயிலை விளக்கினதென்று நினைத்து இந்தி ரன் வாழ்கிற தேவலோகத்தை அக்காக்கைக்குக் கொடுத்தருளி னார். எ-று. (௧௬)

மூடிக மொன்று கோயின்
முழையினைக் கிளரும்போது
தேடரு மணியொன் றங்கே
சிதறியோர் விளக்கங் காட்ட
வாடிய பெருமான் றீப
மளித்ததென் றதற்கு நல்ல
வீடியர் நெறியுங் காட்டி
விரைந்துசா லோக மீந்தான்.



(இ-ள்.) ஒரு பெருச்சாளி கோயிலில் வளையுண்டாக்கும்போது தேடுதற்கரிய மாணிக்கமணியொன்று அங்கே சிதறிச் சந்நிதியில் விளக்குப்போலக் காண்பிக்க, நடனஞ்செய்த சுவாமி நமக்குத்தீபங் கொடுத்ததென்று அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சா லோகபதவியைக் கொடுத்தார். எ-று. (௧௭)

சிலந்தியொன் றொருநா ளந்தத்
திருமலை யிடத்து நூலைக்
கலந்துட னிழைக்க வீது
கலைநமக் களித்த தென்று
நலந்திக ழரச னாக்கி
யதற்குநல் லறிவு நல்கி
யுலந்தபின் னெடிய மாய
னுலகினை யுதவி னானே.

(இ-ள்.) அம்மலையில் ஒருநாள் ஒரு சிலந்திவாயினூலால் பின் னவிட, இது வஸ்திரஞ்செய்து கொடுத்ததென்று அச்சிலந்தியை அரசனாகப் பிறப்பித்து நல்லஞானத்தைக்கொடுத்துத் தேசவியோக மானபிறகு விஷ்ணுலோகத்தைக் கொடுத்தார். எ-று. (௧௮)

வேறு.

ஒருமணலைச் சிவனுருவ மெனநினைத்தவ்
விடத்தில் வைத்தோ னொருவன் பின்னைப்
பரகதிபுக் கடைந்துசிவ னென்னவேற்
றுமையகன்ற பதவி சேர்ந்தான்

பொருவரிய வருணகிரிப் பதிவளமீ
தென வுரைத்துப் புண்டரீகத்
திருமுகமண் டலமலர்ந்தே யிருந்தனனன்
மறைபுகன்ற செல்வன் றானே.

(இ-ள்.) பின்னும் அத்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவமென்று நினைத்துவைத்ததனால், அவன்மேலாகிய கதியைச்சேர்ந்து சிவனென்றும் இவனென்றும் பேதமில்லாமல் இருக்கின்ற சாருப்பியபதவியைப்பெற்றான்; ஒப்பில்லாத அருணாசலத்தின்வளம் இதுவென்று தாமரை மலர்போன்ற முகமலர்ந்து சொல்லி யிருந்தார் வேதங்களையுஞ் சொன்ன பிரமதேவர். எ-று. (௬௧)

எட்டாவது
தீர்த்தச்சருக்கம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௫௫௦.



12. இத்திருவண்ணாமலையுங் கிரிசுனைச்சுத்தியுடன் இத்தலபுராணத்
தை மனோநிராமப்பாக வலம்வருவோர்கள் கிலிசோதீத், காணக்காப்புதலி மலைய
லெளன்று வலம்புரிபுரமாத்தியம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது.

# திருமலைவலம்புரி சருக்கம்.

இப்படிப்பட்ட தெய்வீகம்பொருந்திய அருணாசலத்தை வலஞ் செய்யும்விதம் எப்படியென்றால்:— பிரதக்ஷணஞ்செய்கிற தினத்தில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திரம் உடுத்தி விபூதிதரித்து நம்மால்கூடிய தானங்கொடுத்து நாம் ஒருவரிடத்தில் தானம் வாங்காமலும் மேற்போர்வையில்லாமலும் குடைபிடித்துக் கொள்ளாமலும் தாம்பூலந் தரிக்காமலும் போசனத்தை வெறுத்தும் வாகனங்களி லேறாமலும் பாதரட்சையில்லாமல் காலினாலே நடந்தும் சிரசில் கையைவைத்துக் கூப்பிக்கொண்டும் கோபம்முதலானது இல்லாமலும் அருணாசலத்தையே தியானித்து மெள்ளநடந்து கிரிப் பிரதட்சணஞ் செய்யவேண்டும். அப்படிசெய்யும்போது எட்டுத்திக்கையும் அந்தந்த திக்குகளிலிருக்கிற சுவாமிகளையும் வணங்கிச் சித்தர்களையும் தேவர்களையும் மனதினால் வந்தனஞ்செய்து ஆலயத்துக்குப்போய்ப் பரமசிவத்தைத் தரிசித்து நாம் இருக்கும் இடத்திற்கு

வந்து பழங்களும் பாலுமாவது, அல்லது, பரிசுத்தமாகிய அன்னமாவது புசிக்கவேண்டும். இந்தப்படி அந்த ஸ்தலத்திலிருக்கிறவர்கள் செய்யவேண்டியது. அதிக தூரத்திலிருந்து வந்தவர்கள் தங்கள் வருத்தத்தினால் எவ்விதமாக வலஞ்செய்தாலும் புண்ணியமே. இவ்வாறு பிரதட்சணஞ் செய்கிறவர்கள் மோக்ஷ சாம்பிராச்சியத்தை அடைவார்கள்.

மேலும் இம்மலையின் எட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர்கள் தங்கள்பேரால் சிவலிங்கங்களை ஸ்தாபித்துப் பூசித்திருக்கிறார்கள். கிழக்கில் பார்வதியார் பூசித்தலிங்கம் இருக்கின்றது.

தெற்கில் வச்சிராங்கத பாண்டியன் பூசித்த புழுகணியிறைவர் என்னும் சிவலிங்கம் இருக்கின்றது.

மேற்கில் பிரமாவினால் பூசிக்கப்பட்ட அணியண்ணாமலையார் என்கிற சிவலிங்கம் இருக்கின்றது.

சூரியனாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கமும் இருக்கின்றது.

இப்படியே பரமசிவரூபமான அநேக சிவலிங்கங்கள் இருக்கின்றன.

---

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கனகமல கனகமலர்த் தடங்களது
பெருமையினாற் களித்தே னந்த
வனகமலை வலம்புரியுஞ் செயலினையுந்
தெரியவுரைத் தருள்வா யென்று
சனகமுனி யெழுந்துபணிந் துரைக்குதலு
மனமகிழ்ந்து கிரணக் கோலிற்
றினகரனார் திறந்தடைக்குந் திருக்கோயிற்
கடவுளிவை செப்ப லானான்.



(இ-ள்.) மேலான பிரமனே? பொன்போன்ற நிறத்தையுடைய தாமரைப்புட்பங்கள் சூழ்ந்த தீர்த்தங்களின் பெருமையைச் சொல்லக்கேட்டுச் சந்தோஷித்தேன், பாபாகிதமாகிய கிரியை வலஞ்செய்யும் பெருமையுந் தெரிய அருளிச்செய்யென்று சனகரிஷி எழுந்து வணங்கிச் சொன்ன அளவில், மனம் சந்தோஷித்துச் சூரியன் தன் கிரணமாகிய திறவுகோலால் திறந்து மூடுந் தாமரைமலராகிய கோயிலில் வாசஞ்செய்கின்ற பிரமன் சொல்லத்தொடங்கினார். எ-று.()

கற்பமெலா மரியதவம் புரிந்தவரு
மதின்பெருமை காண மாட்டார்
அற்பதவம் புரிந்தவருக் கருணகிரி
வலத்தினல மறிய லாமோ
சிற்பரன்றன் புகழ்கேட்கும் விருப்புடையா
யெனவுனக்குச் செப்பா நின்றே
னற்புதமிக் கதையமுதைச் செவிவழியே
புகட்டவின்ப மருந்து கென்றான்.

(இ-ள்.) கற்பகாலம் அரிதாகிய தவஞ்செய்தவர்களும், அதன் பெருமையை யறியமாட்டார்கள்; அற்பமான தவத்தைச் செய்தவர்களுக்கு அருணாசலம் வலஞ்செய்யும் பெருமையை அறியக்கூடுமோ பரமசிவனுடைய புகழைக்கேட்கும் ஆசையுள்ளவனென்று உனக்குச் சொல்லத்தொடங்கினோம்; அற்புதமான இக்கதையாகிய அமிர்தத்தை உன் காதாகிய வாய்வழியில் புகட்ட இன்பமாக அருந்தென்று சொன்னார் பிரமதேவர். எ-று. (௨)

சோணகிரி வலம்புரிதல் பிறவியெனும்
பெருங்கடற்குத் தோணி யாகு
மேணரகக் குழிபுகுதா தரியமுத்தி
வழிக்கேற வேணி யாகும்

காணரிய தவத்தினுக்கு மறத்தினுக்கு
மரும்பொருட்குங் காணி யாகும்
வாணுதன்மின் னிடத்திருக்குங் கண்ணுதலை
மனமுருக்கு மகிழ்ச்சி யாகும்.

(இ-ள்.) அருணாசலத்தை வலஞ்செய்வது பிறவி என்னும் பெரிய கடலைத்தாண்டுவதற்கு ஒருதோணியாகும்; ஏழு நரகக்குழியிலும் புகுதாமல் அருமையாகிய முத்தியில் ஏறுவதற்கு ஏணியாகும்; காணுதற்கு அரியதவசுக்கும், தருமத்துக்கும், சம்பத்துக்கும், ஒரு காணியாயுமிருக்கும்; ஒளியுள்ள நெற்றியையுடைய பார்வதியை இடப்பாகத்தில் வைத்திருக்கின்ற சுவாமியை மனமுருக்குஞ் சந்தோஷமாகும். எ-று. (௯)

காசிமுதற் சிறப்புடைய தலங்களிலே
யிருந்திறையைக் கற்ப காலம்
பூசைசெயு மொருபலமு நெடுங்கால
மரியதவம் புரிகை தானுந்
தேசிகனு ருரைத்தபடி சமாதியிலே
யிருந்துபெறுஞ் சித்தி தானு
நேசமுட னருணகிரி வலம்வருகென்
றுரைப்பதற்கு நிகரா தாமோ.

(இ-ள்.) காசிமுதலாகச்சொல்லப்பட்ட சிறப்பையுடைய தலங்களிலிருந்து சுவாமியைக் கற்பகாலம் பூசைசெய்த பலமும், அநேக காலந் தவஞ்செய்தாலும், குருசொல்லிய முறைப்படி சமாதியில் இருந்து அடைகின்ற சித்திகளும், அருணாசலத்தை வலம்வரவேண்டுமென்று சொல்லிய பலனுக்கு நிகராகுமோவென்று சொன்னார். எ-று. (௰)



அருணகிரி வலம்வருகென் றுரைப்பளவி
லதிகபிர மத்தி நீங்கு
நருமதையி னளவுமது வருந்துபவம்
வருந்தநடு நடுங்கி யோடு
மருவுபெரும் பொருள்கவர்ந்த பழவினையுங்
கரங்குவித்து வழிக்கொண் டேகும்
குருபாற்குத் தவறிழைத்த கொடுவினையும்
பயந்துகருக் குலையுந் தானே.

(இ-ள்.) அருணாசலத்தை வலஞ்செய்யென்று சொல்லுமளவில் பிரமத்தி பாதகம்போய்விடும்; நருமதையாற்று நீரளவு மதுவைப்பானம் பண்ணியபாவமும் வருத்தமுற்று நடுநடுங்கி யோடிப்போகும்; பிறருடையபொருளைக் களவுசெய்த பழமையாகிய பாவமும் கைகுவித்துக்கொண்டு ஓடிப்போகும்; குருவாகியசுவாமிக்குத் தவறுசெய்தபாவமும் பயந்து கருப்பங்குலைந்து ஓடிப்போகும். எ-று. (௰௧)

அந்தவினை யுடன்படலும் பெருங்காற்றி
னெரிசுடர்போ லவியா நிற்குந்
தந்தையரைக் கடிந்தவினை கருடனுற்ற
வரவெனவே தளர்ந்து மாயு
மைந்தரையு மகளிரையுந் தொலைத்தவினைக்
கடல்சுவறி வறிய வாகு
மெந்தைபொருள் கவர்ந்த வினை
தனக்கிருக்கு மிடமேதென் றிசைக்குந்தானே.

(இ-ள்.) இறுதியைக் கொடுக்கும் பாவமும், அருணாசலத்தை வலஞ் செய்யவேணுமென்று நினைத்த அளவில், சூறைக்காற்றி னெதிரிலிருக்கும் தீபம்போலவிந்துபோம்; தந்தையைக்கொன்ற பாவ

மும் கருடனைக் கண்டபாம்புபோல் நடுக்கமடைந்து ஓடிப்போம்; குழந்தைகளையும் மாதரையுங்கொன்ற பாவமாகிய கடனும்வற்றிப் போம்; எம்முடைய சுவாமி திரவியம் திருடினபாவமும்நானிருக்குமிட மெங்கேயென்று ஓடிப்போம். எ-று. (௬)

வேறு.

ஓரடிக் கியாகஞ் செய்த பலத்தினை யுதவா நிற்கு
மீரடியி ராச சூய பலந்தரு மினிய மூன்று
னோரடி பரிமே தத்தின் பலத்தினை நிறைக்கு நாலு
பாரடி யிடுவார்க் கியாகப் பலனெலாம் பலிக்குந் தானே.

(இ-ள்.) அருணாசலத்தை வலஞ்செய்யவேண்டுமென்று நினைத்து ஓரடி எடுத்துவைத்தவருக்கு யாகஞ்செய்தபலன் சித்தியாம்; இரண்டடிக்கு இராசசூயயாகபலன் சித்தியாம்; மூன்றடிக்கு அஸ்வமேத பலனுண்டாம்; நாலடிக்கு எல்லாயாகத்தின் பலனுஞ் சித்தியாம். எ-று. (௭)

வலங்கொளோ ரடியே பூமி வலஞ்செயும் பலத்தை நல்கும்
அலங்குமீ ரடியே தீர்த்த மாடிய பலன்க ளீயுந்
தலங்கொண் மூன் றடிக ளீரெண் டானத்தின் பலத்தை நல்கு
மிலங்குநா லடிக்கி யோகத் தெண்வகைப் பலத்தை நல்கும்.

(இ-ள்.) பிரதக்ஷணஞ் செய்கையில் தூக்கிவைத்த ஓரடியின் பலன் பூமிப்பிரதக்ஷணஞ் செய்தபலன்தரும்; இரண்டடியின்பலன் சருவதீர்த்தமாடிய பலன்தரும்; மூன்றடியின்பலன் சோடசதானப் பலன்தரும்; நாலடியின் பலன் அஷ்டாங்கயோகஞ் செய்த பலன் தரும். எ-று. (௮)

வைத்தவோ ரடியே பூசைப் பலனெலாம் வழங்கு மங்கே
உய்த்தவீ ரடியே லிங்கந் தாபித்த வுறுதி நல்கு



மெத்தவே யடிமூன் றிட்ட பலன்சொலின் விமானங் கோடி
யெத்தனை தூபிக் கோயில் சமைத்தபே றெல்லா நல்கும்.

(இ-ள்.) அதுவல்லாமலும் வலமாகவைத்த ஓரடிக்குப் பூசாபலன்களெல்லாம் பலிக்கும்; இரண்டடிக்கு இலிங்கப்பிரதிட்டை செய்தபலன் கொடுக்கும்; மூன்றடிக்கு கோடிவிமானம் தூபிகளையுடைய கோயில் கட்டியபேறு தரும். எ-று. (௯)

வேறு.

நீடருண கிரிவலத்தோ ரடியிட்டோ
ருருத்திரர்வா ணிலைகைக் கொண்டோர்
நாடியிரண் டடியிட்டோர் மகேசுரர்தம்
பதத்தடைந்தார் நதியுஞ்சூடி
ஆடரவம் புனைந்தமலை வலமாக
வெழுந்தொரு மூன்றடியிட் டார்க்கே
கோடிதலை முறையவரைச் சிவலோகந்
தனிற்கொடுபோய்க் குடிவைத் தாரே.

(இ-ள்.) நீண்ட அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓரடிவைத்தவர்கள், உருத்திரபதமடைவார்கள்; இரண்டடிவைத்தவர்கள், மகேசுர பதமடைவார்கள்; மூன்றடி வைத்தவர்கள் கோடி தலைமுறையிலுள்ள மனிதரையும் பதவியிற்கொண்டு போய்ச்சேர்க்கும். எ-று. (௧௦)

நன்றிதரு மருணகிரி வலமாகச்
சிறிது வழிநடந்த பேர்க்குத்
துன்றுநெடுங் கிரணவெள்ளிக் கயிலைமலை
வழிகடுகித் தொலையா நிற்கு

மன்றியுமம் மலைவலமாய் நடந்தவழிப்
பாலுறுத்து மழற்சியாலே
கன்றியகா லரைக்காணிற் கன்றியகா
லரைப்போலக் காணும் பாவம்.

(இ-ள்.) நன்றியைக் கொடுக்கும் அருணாசலத்தை வலமாகச்சி றிதுனாம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தை வீசுகின்ற வெள்ளிமலையாகிய கைலாயத்திற்குப்போகும் வழிவிரைவில்தொலை யும்; அல்லாமலும், அம்மலையை வலமாகப் போம்போதுபருக்கைக் கல்லுகளாலும் அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவரைக் கண்டால் எமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போம். எ-று. (கக)

வள்ளிமலை வலம்புரிந்தோர் பதத்துகளொன்
றொருவாயு வசத்தி னாலே
புன்னரக மனையவிடம் புகுதிலது
கயிலையெனப் புனித மாகு
மின்னுமவர் பதத்துகளோர் மனிதருடற்
செறியிலவ ரிறப்பு நீங்குந்
துன்னுமவர் பிறப்பொழியும் வலம்புரிந்தோர்
பெருமைகளென் சொல்லு வோமே.

(இ-ள்.) அக்கினிமலையை வலம் வந்தவர்கள் பாதத்தில் ஒட்டி யதுகளொன்றுகாற்றினால்நரகத்தையொத்த இடங்களிற்சேர்ந்தால் அதுவுங்கைலாயம்போல் பரிசுத்தமாம்; இன்னும் வலம்வந்தவர்கள் பாதத்துகளில் ஒன்றுமனிதர்தேகத்திற்பட்டால் இறப்பும்அவர்களை பின் பற்றிவருகிற பிறப்பும் நீங்கும்; அப்படியாகும்போது பிரதக்ஷ ணஞ் செய்தவர்பெருமைகளை என்னசொல்லுவோம். எ-று. (கஉ)



அந்தமலை வலம்புரிந்தோர் சிவனிருக்குங்
கயிலையினி னேகும் போதிற்
சந்திரன்வெண் குடையெடுக்கு மிரவிவிளக்
கெடுக்குமங்கை தருமந் தாங்கும்
மந்திரமே லிந்திரனார் வழிக்குமலர்ப்
பரப்பிடுவா னளகைக் கோமான்
வந்தனைசெய் தருகுவருங் கந்தமலர்
மழைசொரிவர் வசுக்க ளாமே.

(இ-ள்.) அவ் வருணாசலத்தை வலஞ்செய்தவர்கள் பரமசிவன் வாசஞ்செய்கின்ற கைலாயமலையைச் சேரும்போது, சந்திரன்வெள் ளைக் குடைபிடிப்பான்; சூரியன் விளக்கெடுப்பான்; தருமதேவதை கைதாங்கிவரும்; இந்திரன் வருகிறவழியில் புட்பங்களைப் பரப்பு வான்; குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில் வருவான்; அஷ்ட வசுக்கள் புட்பவருஷம் பொழிவார்கள். எ-று. (கங)

மேனகையு மரம்பையுட னுருப்பசியும்
திலோத்தமையும் வீணை யார்க்கும்
கானநடம் புரிவர்கங்கா நதியுடனே
யமுனைநதி கவரி வீசும்
போனகவின் னமுதமலைத் துகிலுமுகி
லெடுத்தெதிரே போகும் போது
நானமுங்கொண் டலர்மடந்தை நணுகுமுன்னே
மறைபுகழ்ந்து நடக்குந் தாமே.

(இ-ள்.) மேனகையும், அரம்பையும், ஊர்வசியும், திலோத்த மையும்,வீணைவாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ்செய்துகொ ண்டு வருவார்கள்; கங்கையும் யமுனையும் சாமரம் வீசிக்கொண்டு

வருவார்கள்; சாப்பிடத்தகுந்த அமிர்தத்தையும் மலையளவு ஆடைகளையும் மேக மெடுத்துக்கொண்டு எதிரேவரும்; இலக்குமி பூவும் கஸ்தூரியுங் கொண்டுவருவாள்; முன்னே நாலுவேதங்களும் புகழ்ந்துகொண்டுவரும். எ-று. (கச)

வேறு.

சேற்பொதிந் துகளுங் கங்கை படிவதுஞ் சிறந்த தானம்
பார்ப்பது மியோகத்தாலே வருதலும் பலமொவ் வாதால்
ஆர்ப்பொலி சடையான் சோண சலத்தினை வலமாய்ச் சூழல்
காற்பல னென்றெண் ணாதே முழுப்பலங் கருதுங் காலே.

(இ-ள்.) சேற்கெண்டை குதித்துவிளையாடும் கங்கைமுதலிய தீர்த்தங்களிலாடியபலனும், சிறந்தசிவத்தலங்களைத்தரிசனஞ்செய்த பலனும், யோகஞ் செய்தலினால் வந்தபலனும் ஒப்பாகாது; ஆத்திமாலைதரித்த சடையையுடைய சிவசொரூபமாகிய அருணாசலத்தை வலஞ்செய்தால் காற்பலமென் றெண்ணாமல் முழுப்பலமாம் நினைக்கும்போது. எ-று. (கரு)

நிரந்தர மிமையோர் போற்று
நெடியமால் வரையைச் சூழ்வோர்
பரந்திடும் வழியிற் றோன்றும்
பரலினாற் சிவந்த பாதம்
வரங்கொள வணங்கும் வானோர்
மகுடகோ டிகளிற் றைத்து
விரிந்தசெம் மணிக டாக்கி
மீளவுஞ் சிவக்கு மாதோ.

(இ-ள்.) எப்போதும் தேவர்கள் வணங்கும் பெருமையுள்ள அருணாசலத்தை வலஞ்செய்வோர்களுடைய வழியிற்கிடக்கிற பரற்கல்லுகளை மிதித்துச் சிவந்தபாதம் பின்பு வரத்தைப் பெறுவதற்கு வணங்கும் தேவர்களுடைய மகுடகோடிகளிற் பதித்துப் பிரகாசிக்கும் இரத்தினகோடிகள் தாக்கி மறுபடியுஞ் சிவக்கும். எ-று. (கசு)



கானடை கொடுக்கப் பெற்றென் கரியகண் டெரியப் பெற்றென்
மானிடப் பிறவி யுற்றென் மலைவலம் புரியா மாந்த [ன்
ரூனுடைப் புழுக்கூடேறி நரகிடை யூச லாடி
தானிடர்ப் படுவ தல்லா துய்கிலர் சனக வென்றார்.

(இ-ள்.) அப்படிப்பட்ட அருணாசலத்தை வலஞ் செய்யாதவர்கள் கால்நடையுண்டாய் நடந்துதிரியப்பெற்றென்னபிரயோசனம்? கறுத்த கண்கள் நன்றாகத் தெரியப்பெற்றென்ன பிரயோசனம்? அரிய மானிடப் பிறப்பாகப்பிறந்தென்ன பிரயோசனம்? மாமிசம் திரண்ட புழுக்களையுடைய தேகத்திற்சேர்ந்து நரகத்தில் வீழ்ந்து அலைந்து துன்பப்படுவ தல்லாமல் பிழைக்கமாட்டார்கள்; சனக என்றார் பிரமதேவர். எ-று. (கஎ)

வஞ்சியர் புணர்ச்சி வேண்டின் மன்னர்கை வசமா வேண்டி
லஞ்சிய பகைமை யெல்லா மக்கணத் தகற்ற வேண்டிற்
பிஞ்சிள மதிபோ லல்ல புதல்வரைப் பெறுதல் வேண்டிற்
சஞ்சிதமுதலா மூன்று கருமமுந் தவிர்க்க வேண்டில்.

(இ-ள்.) அஃதல்லாமல் நல்ல மாதருடைய போகம்வேண்டினால், அரசர்கள் கைவசமாக வேண்டுமானால், அஞ்சத்தகுந்த பகையெல்லாம்அக்கணத்திலேநீக்கவேண்டுமானால், பாலசந்திரன்போல நல்ல பிள்ளைகளைப் பெறவேண்டுமானால், ஆகாமிய சஞ்சிதபிராரத்துவமாகிய மும்மலங்களையும் நீக்கவேண்டுமானால். எ-று. (கஅ)

முயலக னலகை பூத கணங்களை முனிய வேண்டிற்
றுயருறு பிணியு மாகச் சோகமுந் தவிர்க்க வேண்டி

வியலிசை யறியவேண்டி லெழுதருங் கோலம் வேண்டின்
மயலறு புகழை வேண்டின் மலைவலம் புரிவார் வல்லார்.

(இ-ள்.) முயலகன்போன்ற இராக்கதனையும் பசாசகளையும் பூதகூட்டங்களையும் கோபிக்கவேண்டினால், துன்பஞ்செய்யும் வியாதியையும் தேகத்தில்வரும் சோகத்தையும் நீக்கவேண்டினால், இயலிசை முதலாகிய கல்வியை வேண்டினால், அழகை வேண்டினால், குற்றமற்ற கீர்த்தியை வேண்டினால், அம்மலையை வலஞ்செய்வார்கள் பெரியோர்கள். எ-று. (௧௯)

வாந்தரு மருக்கவார மலைவலம் புரிந்தோர் வெய்யோன்
தெரிந்தமண் டலத்தைக் கீறிச் சிவகதி பதியாய்ச் சேர்வார்
திரந்தருஞ் சோமவாரந் திருமலை வலமாய் வந்தோர்
இந்தர னெனவேழ் பாரும் புரந்தான் றன்மை பூண்பார்.

(இ-ள்.) சிறந்த ஆதிவாரத்தில் அம்மலையை வலஞ்செய்தவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைச்சேர்வார்கள். ஸ்திரமாகிய சோமவாரத்தில் வலமாய் வந்தவர்கள் இந்திரன்போல வேழுலகத்தையு மாண்டு சிவசாரூப்பியமடைவார்கள். எ-று. (௨௦)

மங்கல *தினத்திற் சூழ்வோர் கடனுடன் வறுமை நீங்கிச்
சங்கிலித் தொடரா மேழு பிறப்பையுந் தவிர்ப்பார் புந்திக்
கெங்கணு யகரைச் சூழ்வோ ரிருங்கலை மறைக ளெலா
றங்கமுந் தெளிந்து முத்திக் கருகரா யமர ராவார்.

(இ-ள்.) மங்களவாரத்தில் கிரியை வலஞ்செய்வோர், தங்களுக்குண்டாகிய கடனையும் தரித்திரத்தையும் நீங்கி, சங்கிலிகட்டுபோல் தம்மைவிடாத எழுபிறப்பையும் நீக்குவார்கள்; புதவாரத்தில் சுவாமியைப் பிரதக்ஷணஞ் செய்வோர் நாலுவேதங்களும், ஆறுசாத்திரங்களும், அறுபத்துநாலு கலைகளும் தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள். எ-று. (௨௧)

மாவியா ழத்திற் செய்ய மணிவரை வலமாய்ச் சூழ்வோர்
மூவரும் புகழத் தேவர் முனிவர்தங் குரவ ராவார்
தாவிலா வெள்ளி வாரந் தனில்வலம் புரிந்தோர் கஞ்சப்
பூவையைப் புணரும் பூவைப் புணருமால் புரத்திற்சேர்வார்.

(இ-ள்.) பெருமைபொருந்திய குருவாரத்திலே அம்மலையை வலமாய்வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழும்படி தேவர்கள் முனிவர்களுக்கு எசமானராவார்கள்; குறைவில்லாத சுக்கிரவாரத்திலே வலஞ்செய்தவர்கள் தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியைச்சேரும் விட்டுணுபதத்தைச் சேருவார்கள். எ-று. (௨௨)

உதயமே சனிநாட் சூழ்வோர்க் கொன்பது கிரக நன்றாய்ப்
பதினோரா மிடத்திற் றூய பலன்களைப் பலியா நிற்கும்
மதியணி சிவனி ராவும் வருடம்வந் துதிக்கு நாளும்
அதிகமா மதிகமாகு மைப்பசி முதலா மூன்றும்.

(இ-ள்.) சனிவார உதயத்தில் பிரதக்ஷணஞ்செய்வோர்களுக்கு நவக்கிரகங்களும் பதினொன்றாமிடத்திலிருந்த பலனைக்கொடுப்பார்கள்; சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பினன்றும் ஐப்பசி முதலாகிய மூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களினும் அதிகபலன் சித்தியாகும். எ-று. (௨௩)

அயனசங் கிராம மாசி மகத்திலர்த் தோத யத்தில்
வெயிலுறுங் கதிரைப் பாம்பு விழுங்குநாள் விதிபா தத்திற்
பயனுற வலஞ்செய் வோர்க்குப் பலன்களிற் கோடி யாகும்
அயர்வறத் தினமுஞ் சூழ்வார் பேற்றையா ரறிய வல்லார்.

(இ-ள்.) உத்தராயனத்திலும், தக்ஷணாயனத்திலும், மாசிமகத்திலும், அர்த்தோதயத்திலும், சூரிய கிரணகாலத்திலும், விதிபாதத்திலும், இஷ்டசித்தியை அடையவிரும்பி வலஞ்செய்தவர்களுக்குக் கோடிபங்கதிகமாகப் பலன்கிடைக்கும்; தளர்ச்சியடையாமல்தினந்தோறும் வலஞ்செய்தவர்களுக்குண்டாகும்பலனை யாரறிந்துசொல்லவல்லவர். எ-று. (௨௪)

காரிகை யவரை யற்றைக் கனவிலும் புணர்ந்தி டாம
னீரினின் மூழ்கித் தூயதுடுத்துவெண் ணீறு சாத்தி
யாரிட முறையே தான மளித்துத்தா மவைகொள் ளாமற்
பாரிடை நடந்து சூழ்ந்த தேவரைப் பணிந்து போற்றி.

(இ-ள்.) அப்படி அதிக பலனைத்தரும் அருணாசலத்தை வலஞ்செய்யும்வித மெப்படியெனின், பிரதக்ஷணஞ் செய்யும் அன்றைக்குப் பெண்களைச் சொப்பனத்திலும் நினையாமல் நீரில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திரமுடுத்துக்கொண்டு விபூதி தரித்து அவ்விடத்திலே தானம் கிரமமாகக்கொடுத்து தாம் ஒருவரிடத்திலும் தானம் வாங்காமல் பூமியிலே காலினால் நடந்து கிரியைச்சுற்றியிருக்கின்ற தேவர்களைப் பணிந்து வணங்கி. எ-று. (௨௫)

கஞ்சுகம் போர்வை நீத்துக் கவிகையுஞ் செருப்பு நீத்தே
யஞ்சுதல் வெகுளி சோக மக்கணத் தகற்றி வாசி
குஞ்சர முதலா யுள்ள வாகனங் குறுகி டாமல்
விஞ்சிய வடைக்கா யுண்டி வழியிடை வெறுப்ப தாக்கி.

(இ-ள்.) அங்கத்தில் தரிக்குஞ் சட்டையும் போர்வையும்நீக்கிக் குடைபிடித்துக் கொள்ளாமல் கால்களுக்குச் செருப்பும் போட்டுக்கொள்ளாமல், பயமும் கோபமும்சோகமும் நீக்கிக் குதிரையானை



முதலாகிய வாகனங்களிலேறாமல் தாம்பூலம் தரிக்காமல்போசனத்தையும்வெறுத்து. எ-று. (௨௬)

செங்கைவீ சாமற் சோரா துவகையாற் சிரத்திற் கூப்பி
மங்கையர் பதிதர் நீச ருறுப்பிலா வடிவு நோக்கா
தங்குறு மடியி னோசை செவிப்புகா தரச மாதர்
திங்களையிரண்டுஞ்சென்று நடந்திடுஞ் செயல்போற்சென்று.

(இ-ள்.) கைகளை வீசிக்கொண்டு போகாமல், சோர்வில்லாமல் சந்தோஷத்தோடு சிரத்திற்கையைவைத்து கூப்பிக்கொண்டு மாதரையும் பாவிகளையும் நீசரையும் அவயவ ஈனரையும் பாராமல் நடக்கிறபோது அடியினுடைய சத்தம் காதிற்கேட்காமல் மெள்ள அரசமாதர்கள் பத்துமாதத்துக் கருப்பத்தோடு நடக்கிறதுபோல நடந்து. எ-று. (௨௭)

இருவினை யகற்று மந்த மலையையெண் டிசையும் வீழ்ந்து
பரவியங் கதனைச் சூழ்ந்த கடவுளர்ப் பணிந்து போற்றி
யருவமாய் வலமாஞ் சித்த ரமரரை மனந்தாற் போற்றி
யுருகியங் கவர்மேற் கைகாற் படுமென வொதுங்கிச் சென்று.

(இ-ள்.) நல்வினைதீவினைகள் இரண்டையும்நீக்கும் அக்கிரியை எட்டுத் திக்கும்வணங்கி அத்திக்கிலிருக்கும் சுவாமிகளையும்வணங்கி உருவந் தெரியாமல் வலஞ்செய்துகொண்டு வருகிற சித்தர்களையும் தேவர்களையும் மனத்தினால் வந்தனஞ்செய்து அவர்கள்மேல்தங்கள் கைகால்கள் படுமென்றுபயந்துவழியினின்றும் ஒதுங்கிச்சென்று.()

வானமார் மலையைப் பொன்னிற் படிகநன் மணியா யெண்ணி
மோனமாய் நடக்க வல்ல திறைபுகழ் மொழியைக் கேட்க
வானவிச் செயலி னாலே வலஞ்செய்தா லயத்தி னண்ணி
யேனமுன் னறியான் றாளைப்பணிந்து தன்னிருக்கை யெய்தி.

(இ-ள்.) ஆகாயமட்டு மளாவிய அம்மலையைப் பொன்போலவும் படிகம்போலவும், இரத்தினம் போலவும் நினைந்து மௌனமாய நடக்கவேண்டியது; அல்லது சுவாமிதுதிகளைக்கேட்கவேண்டியது இப்படிப்பட்ட தன்மையாக வலம்வந்து கோயிலுட்சென்று விட்டுணுவாகிய பன்றியறியாத சுவாமியின் பாதங்களை வணங்கித்தாங்களிருக்கு மிடத்துக்கு வந்து. எ-று. (௨௯)

குன்றெனுங் குணத்தார் சூழ
விருந்துதிங் கனிபால் கொள்க
வன்றியே புலவு நீத்த
வடிசிலை யுண்க நீதி
நின்றவத் தலத்தோர் செய்யு
நிலைமையி தறிதா ரத்திற்
சென்றவர் வருத்த மாயெவ்
வகைவலஞ் செயினுஞ் சீராம்.

(இ-ள்.) மலைபோலுயர்ந்த குணத்தை யுடையவராகிய சிவபத்தர்கள் சூழ இருந்து மதுரமாகிய பழங்களும் பாலுஞ்சாப்பிடக்கடவர்; அப்படி யில்லாவிட்டால் மாமிசபதார்த்தமில்லாமல் அன்னத்தைப்புசிக்கக்கடவர்; இப்படிப்பட்ட செய்கைகளை நீதிபொருந்திய அத்தலத்தி லிருக்கிறவர்கள் செய்யவேண்டியது; அதிக தூரத்தில் நின்றும்வந்தவர்கள் தங்களுடையவருத்தத்தினால் எவ்விதமாகவலஞ் செய்தாலும் நன்மையாம். எ-று. (௩௦)

தண்டுத லிலாத ஞானச்
சனகவிச் சயிலஞ் சூழ
வெண்டிசை புரப்போர் தம்பே
ரினிற்சிவ வுருவங் கண்டார்



வண்டிசை பெருகு மோதி
மலைமகண் மலையின் கீழ்பால்
கண்டனள் பவள வெற்பிற்
கயிலைவெற் பிறைவன் காட்சி.

(இ-ள்.) கெடுதலில்லாத ஞானத்தையுடைய சனகரிஷியே! இம்மலையி னெட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர் எட்டுப்பேரும் தங்கள் பேரினாலே இலிங்கங்களைத் தாபித்துப் பூசித்திருக்கிறார்கள்; வண்டுகளின் ஒலிபொருந்திய கூந்தலையுடைய பார்வதி கிரியின் கிழக்குத்திக்கில் பவளமலைபோல் ஒரு இலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தாள். எ-று. (௩௧)

மணிவரை பரியிற் சூழ்ந்த
வச்சிராங் கதனப் போது
புணர்பவந் தவிர்க்கத் தென்பால்
புழுகணி யிறையைக் கண்டான்
தணிவிலா வினைக ணீக்கத்
தமியனேன் மலையின் மேற்பால்
அணியண்ணா மலையா னென்னு
மருவுரு விறையைக் கண்டேன்.

(இ-ள்.) அருணாசலத்தி னிடத்தில் குதிரையிலேறிக்கொண்டு வந்த வச்சிராங்கதபாண்டியன், அக்காலத்தில் தன்னையடைந்த பாவத்தைத் தீர்க்கத் தென்திக்கில் புழுகணியிறைவனென்று ஒரு லிங்கத்தைத் தாபித்துப் பூசித்தான்; தணியாத பாவங்களை நீக்கிக்கொள்ள நானும் (பிரமன்) அம்மலையின் மேற்குத்திக்கில் அணியண்ணாமலையா னென்கிற பேரிட்டு ஒரிலிங்கத்தைத் தாபித்துப் பூசைசெய்தேன். எ-று. (௩௨)

வாலவெங் கதிர்மேற் சோண
   வரைகடந் தொருநாட் பாய்ந்து
சாலுமத் துயரந் தீரத்
   தளதுபே ரிறையைக் கண்டா
னுலய முழுதுந் தேவ
   ராவநாட் டுறைவோர் சித்தர்
சீலமா முனிவர் கண்ட
   சிவனுருத் தெரிக்கொ ணாதே.

(இ-ள்.) சூரியன் அருணசலத்தைத் தாண்டிப்போனதினல் வந்த பாவந்தீரத் தன்பேரிட்டு ஒரு இலிங்கத்தை தாபித்துப் பூசை செய்தான்; அஃதல்லாமல் அம்மலையிலிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள், நாகலோகத்தார்கள், சித்தர்கள் முனிவர்கள் இவர்களால் தாபித்துப் பூசைசெய்யப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது. எ-று. (௧௫)

ஈசனுர் வடிவமான விலிங்க
   மவ் வெல்லை சூழ
யோசனை மூன்றுஞ் சேர
   நெருங்கும்வா னுடுக்கள் போலப்
பேசுவ தெவனே வந்தத்
   தலத்தினிற் பெருமை வேலன்
நேசுறுங் கவுரி யானை
   முகத்தனுந் தெரிக்கொ ணாதே.

(இ-ள்.) பரமசிவரூபமான அநேக இலிங்கங்கள் அவ்வெல்லையைச்சுற்றி மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்து நக்ஷத்திரங்கள்போல நெருங்கியிருக்கும்; அப்படியிருக்கிறபோது அத்தலத்தின்பெருமை



யைச் சுப்பிரமணியர், பார்வதி, விநாயகர், இவர்களாலேயே சொல்லக் கூடாமலிருக்கிறபோது என்னல் சொல்லப்படுமோ. எ-று. ()

தாதவிழ் மலரோ னிவ்வா
   றுரைத்தலுஞ் சனகன் போற்றி
வேதனே பிறவி தீர்க்கும்
   விமலனே விமல ஞான
வாதியைப் பழித்தோர் செம்பொன்
   கவர்ந்தபே ரடையுந் தீங்கும்
பாதகந் தவிரு மாறும்
   பகரெனப் பதுமன் கூறும்.

(இ-ள்.) தாது விரிந்த தாமரைமலரிலிருக்கின்ற பிரமன் இப்படி சொன்னதும், ஜனகரிஷிவணங்கி வேதமுழுதும் கற்றுணர்ந்தவரே! பிறப்பை நீக்கும் பரிசுத்தரே! மலரகிதரான சிவனைப்பழித்தவர்களுக்கு வந்த பாவமும், அவர்தனத்தை அபகரித்தவர்களடையும் பாவமும், அவைகள் நீங்கும் வகையும் சொல்லுமென்று கேட்கப் பிரமதேவர் சொல்லத்தொடங்கினர். எ-று. (௧௬)

ஒன்பதாவது

## திருமலைவலம்புரி சருக்கம்.

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௫௮௫.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது.

# ஆதித்தச் சருக்கம்.

சிவசொரூபமாகிய இந்தமலையின் உச்சிவழியின் எல்லையாகச் சூரியன் முன்பு தன்தேரை நடத்தியபோது மலைவெடித்து அதிலிருந்து வெப்பங்கொண்டு புகைந்துவர அதனால் அவனுடைய தேர் பொரிந்துபோய் குதிரைகள் எழுங் கரிந்துபோய் சூரியன் மதிகெட்டுப் போனான். அப்போது பிர்மாவினுடைய அனுக்கிரகத்தினால் அவனுக்குப் புத்திவந்து அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டு வந்தான். உடனே பரமசிவன் ரிஷபவாகனரூடராய் அவனுக்குத் தரிசனங்கொடுத்துக் கயிலாயத்திற்கு எழுந்தருளினார். அதுமுதல் சூரியன் அந்தமலையின் உச்சியின் வழியாகப்போகாமல் அதை வலஞ்செய்துகொண்டு போகிறான்.



13. ஆதித்தபகவான் சோதிரூபமுள்ள மலையினுச்சியில் தன் இரதத்தை நடத்த, அச்சோதிஜ்வாலை இரதமெரிந்தபின்பு, ஆதித்தபகவான் மலையை வலம் வர, பரமசிவன் இடபவாகனரூடராய்த் தோன்றி காக்ஷிகொடுத்த மகாத்மியம்.

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அற்ற மற்ற முனிவர் சூழு மருணை பூதரத் துடன்
மற்ற வெற்பு மொக்கு மென்றி கழ்ந்து ரைத்த மனிதர்வாய்
புற்றெ ழுந்து புகை யெழுந்து புழுநெ ளிந்து புலவுநீர்
சுற்றெ ழுந்து பெருகு மன்றி சோரி மாரி சொரியுமே.

(இ-ள்.) குற்றம் நீங்கிய முனிவர்கள் சூழ்ந்துவரும் அருணாசல மென்னு மலையோடு மற்ற மலைகளையு மொக்குமென்று நிந்தை சொன்ன மனிதர் வாயில் புற்றுண்டாகிப் புகைந்து புழுக்கள்நெளிந்து புலால்நாற்றம்நாறுகின்ற நீர் சுற்றியெழுந்து மிகவும் இரத்த மாரிசொரியும். எ-று. (௪)

அந்த மைந்தர் தம்மை யெற்றி யந்த கன்ற னேவலாய்
வந்த தூதர் செக்கி லிட்ட ரைத்த ரைத்தெ டுப்பர்வாய்
வெந்த வாளி னுல நுப்ப நிந்தை சோண வெற்பையோ
நிந்தை செய்வை யென்றடித்து நெய்யில் வேக வைப்பரே.

(இ-ள்.) அருணாசலத்தை நிந்தித்த அம்மனிதர்களைப் பின்பு எமனுடைய ஏவலாய் வந்த தூதர்கள் செக்கில் அநேகதரம்போட்டு அரைத்து எடுப்பார்கள்; அவர்கள் வாய்களை நெருப்பிற் போட்டுக் காய்ச்சிய கத்தியினுலறுப்பார்கள்; எங்களாண்டவன் மலையையோ நிந்தைசெய்வாயென்று அடித்து நெய்யிலே வேகப்போடுவார்கள்.

பஞ்செ ழுத்து வைத் தரக்கு ருக்கி வாய் பாய்ப்பியே
நஞ்சி னைப்பு கட்டி வெய்ய நரகி லேகி டத்துவார்
அஞ்சி யந்த நரகு தானு மருவ ருத்த லைத்திடும்
நெஞ்ச கத்தி லெண்ணி னூர்த மக்கு மீது நிகழுமே.

(இ-ள்.) பின்னும் அவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களை எமதூதர்கள் பஞ்சாகத் துவைத்து அரக்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்

சைக் குடிப்பித்துத் தீமையாகிய நரகிலே தள்ளுவார்கள்; அந்நரகமோவென்றால் பயப்பட்டு இவர்களைத் தாங்குகிறதற்குச் சகிக்காமல் மிகவும் வருந்தும்; இப்படிப்பட்ட துன்பம் மனத்தில் இம்மலையைக் குறைவாக வெண்ணினவர்களுக்கும் உண்டாம். எ-று. (௯)

குருக்க டந்தை தாய ராவி கொன்ற தீயர் முதலினோ
ரிருக்கும் வெய்ய நரகின்மீதி விட்ட போதி லவர்களும்
பெருக்க நொந்து பாவி யென்று பேசு வார்க டம்முடன்
சரிக்கொ ணாது தள்ளு மென்று தங்கள் கண் புதைப்பரே.

(இ-ள்.) ஆசிரியர்களையும், தாய், தந்தையரையும், பிராணன் வாங்கிய தீயபாவிகள் முதலானவர்கள் வாசஞ்செய்யுங் கொடிய நரகத்தில் இவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களைப் போட்டபோது, இவர்களை முன்னிருக்கும் பாவிகள் மிகவும்வருத்தப்பட்டு சுவாமியை நிந்தித்தபடியினால், நம்மிலும் பாவிகளென்றுசொல்லி நம்மோடிவர்கள் சரியாயிருக்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள் கண்களைப்பொத்திக் கொள்ளுவார்கள். எ-று. (௰)

என்று ரைத்து நானும் வைய மேழு முண்ட மாலுமா
யன்று மின்று மளவி டாத வருணை பூத ரத்தையோர்
குன்ற மென் றிகழ்ந்து சென்று குன்றிமெய் குறைந்து முன்
கான்றிறை ரெருத்த னென்று கதைவி ளம்ப லாயினான்.

(இ-ள்.) பிரமன் இப்படியென்று சனகரிஷிக்குச் சொல்லிப் பின்னுஞ் சொல்லுவார்; நானும், ஏழுலகத்தையுமுண்ட மகாவிஷ்ணுவுஞ்சேர்ந்து அன்றுமுதலின்றையவரையிலும் அளவிடப்படாத மகிமையுள்ள அருணாசலத்தை, ஒருவன் ஒருமலையென்றிகழ்ந்து போய்க் குன்றுதலடைந்து தேகங்குறைந்து துக்கப்பட்டான் முற்காலத்தில் என்று அக்கதையைச் சொல்லத்தொடங்கினார். எ-று. (



உலவு கின்ற சோதி யாவு முள்ளில் வைத்திவ் வுலகிலோர்
மலைய தாகி நின்ற தெய்வ மலையை மற்ற மலைகள் போல்
அலகு பெற்ற விரவி யெண்ணி யாழி யொன்று வாசியே
ழிலகு தேரம் மலையி னுச்சி யெல்லை யாய் நடத்தினான்.

(இ-ள்.) நான்கு திக்கிலுஞ்சென்று விளங்கும் பிரகாசங்களையெல்லாம் தன் உள்ளத்தில்வைத்துக்கொண்டு இப்பூமியில் ஒப்பற்ற மலையுருவங்கொண்ட தெய்வீகமாகிய அருணாசலத்தை மற்றமலைகள்போல நினைத்து ஒருசக்கரமும் ஏழு குதிரையும் பூண்ட தேரை அவ்வருணாசலத் திருச்சிவழியின் எல்லையாகநடத்தினான் சூரியன். எ-று.

முகுந்தர் தேடு மந்த வெற்பின் முடியின் மேவு முன்னமே
மிகுந்த சோதி யுள்ளிலும் வெடித்தெழுந்து வெம்மை யாய்ப்
புகைந்து செல்ல விரத மூவர் புரமெ னப்பொ ரிந்ததே
யுகைந்த பச்சை வாசி யோவு லர்ந்த வாசி யானதே.

(இ-ள்.) சூரியன் விட்டுணுவினால் தேடப்பட்ட அம்மலையின் உச்சியில் போவதற்குமுன்னே, மிகுந்த பிரகாசமான மலைவெடித்து அவ்வுள்ளிடத்தில் நின்று எழுந்து வெப்பங்கொண்டு புகைந்துவரத் தேர் திரிபுரமெரித்த பரமசிவன் நகையாகிய நெருப்பிலேபொரிந்ததுபோலப் பொரிந்துபோய்விட்டது, நடத்தப்பட்ட குதிரைகளோ சீவனில்லாத குதிரைகளாயின. எ-று. (௨)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குதிரையுங் கரிக ளாகிக் கொடியதே ரலகைத் தேராய்க்
கதிரையுந் தனது பாகன் காலென விழுந்த பானு
மதியழிந் திருந்தா னந்த மலைவலஞ் செய்து ஞானக்
கதிபெறச் செல்வேன் கண்டு கதிரவற் கிவையு ரைத்தேன்.

(இ-ள்.) அம்மலையி னிடத்தில் நின்றெழுந்த கிரணவெப்பத்தினால், குதிரைகள் ஏழும் கரிகளாகப்போய்க் கொடியையுடையதேர் கானல்போலத் தோன்றியு முருவில்லாததாய்த் தன்னுடையபாகன் காலை யிழந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையும் தானிழந்து சூரியன் மதிகெட்டிருந்தான்; அந்தமலையைவலஞ் செய்துகொண்டு மேலாகிய கதியை அடையும்படியாகப்போகின்ற நான் பார்த்து அச் சூரியனுக்கு இவ்வார்த்தைகளைச் சொன்னேன். எ-று. (௮)

ஐயனை மலையென் றெண்ணி
யகந்தையா லிகழ்ந்து வீழ்ந்த
கையனே யொருகா லத்துங்
கதியிலை யுனக்கென் றானுஞ்
செய்யுமோர் தொழிலி னாலே
தீர்க்கலாந் தெளிவு ளார்க்கு
மெய்யனை யருணை யானை
வலஞ்செயன் றுரைத்து மீண்டேன்.

(இ-ள்.) அருணாசலேசுரரை ஒருமலையென்று நினைத்து அகங்காரத்தினால் நிந்தித்து கீழேவிழுந்து கிடக்கின்ற ஆயிரங் கிரணங்களையுடையசூரியனே? உனக்கு எவ்வகையினும் ஒருகாலத்துங் கதிகிடைக்காது, அப்படியிருந்தாலும் ஒருதொழிலினால் கிடைக்கலாம்; அதுயாதெனில் தெளிவுள்ளவருக்கு மெய்ம்மையாகிய அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டு வாவென்றுசொல்லித் திரும்பினேனென்றார் பிரமதேவர். எ-று. (௯)

போதித்த படியே சென்று
பொன்மலை வலமாய் முன்னாஞ்
சாதித்த வருக்கன் சோணா
சலத்தினை வலமாய் வந்தான்



வாதிக்கு மழு வினானு
மழவிடை மீதிற் கோடி
யாதித்த ரெனவே தோன்றி
யாதித்தற் கருளிப் போனான்.

(இ-ள்.) பிரமன் அனுக்கிரகஞ் செய்தபடியே மகாமேருகிரியை முன்னே வலமாக வருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டு வந்தான்; அச்சூரியனுக்கெதிரே வாதித்துச் சத்துருக்களைக் கொல்லுகின்ற மழுவையேந்திய பரமசிவன் இளமையாகிய ரிஷபத்திற் கோடிசூரியர்போல தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்கு எழுந்தருளினார். எ-று. (௧௦)

பன்னிரு மாதந் தோறும்
பரிதிமுற் பயத்தி னாலே
வன்னியின் வடிவ தான
மலையினை வலமாய்ச் செல்வான்
சென்னியி னெல்லை செல்லா
னிடப்புறஞ் செல்லான் றன்றோர்
அங்கிலை வரும்போ தேத்தி
யலர்சொரிந் தகலு மென்றான்.

(இ-ள்.) சித்திரைமுதல் பங்குனி யீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டு மாதமும் சூரியன் முன்னே தனக்குண்டான பயத்தினால் அக்கினி வடிவமாகிய மலையை வலஞ்செய்துகொண்டு போவான்; அம்மலையி னுச்சியின்மேலும் போகான்; இடப்புறமாகவும் போகான்; அம்மலைக்குச் சமீபத்தில் வரும்போது தோத்திரஞ்செய்து புட்பமாரிபொழிந்து செல்வானென்று சொன்னார் பிரமதேவர். எ-று.

பத்தாவது

ஆதித்தச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௫௯௪.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பதினொன்றாவது

# பிரதத்தராஜன் சருக்கம்.

முற்காலத்தில் ஒருநாள் காசிதேசத்தரசனாகிய பிரதத்தன் என்பவன் தன்னுடைய மந்திரிகளோடும் சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயாணப்பட்டுச் சோழநாட்டுக்குப் போகும்படி திருவண்ணாமலைக்குவந்து சுவாமியைத் தரிசிப்பதற்காகக் கோயிலுக்குப்போய் வந்தனஞ்செய்யும்போது அவ்விடத்தில் நாட்டியஞ்செய்திருந்த தாசிப்பெண்களில் ஒருத்தியைப்பார்த்து ஆசைகொண்டு இந்தப்பெண்ணைத் தன்னுடன் கொண்டுபோய் விடுவதற்கு நினைத்தான். அந்த நினைப்பு அவன்கொள்ளுவதற்கு முன்னமேதானே அவன் முகமானது குரங்குமுகமாய் விட்டதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள். பின்பு அவ்வரசன் மிகுந்தவருத்தப்பட்டுத் தன்னுடைய வாகனங்களெல்லாவற்றையும் தன்னோடேவந்த பெண்களையும் ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு சுவாமிக்கு அருமையான பூசை செய்தான் அப்பொழுது பரமசிவத்தின் கிருபையால் குரங்குமுகம் போய் இயல்பான முகத்தை அடைந்து தன் நாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அருணைவா ழிறைவன் திரவிய மனுமட்
டாயினுங் காந்தபே ருடனே
மாணமாய் நமனுட் டழலிலே குளிப்பர்
வச்சிர வுலக்கையான் மறிவ
திருணிறை நரக மிருபத்தெண் கோடி
யிடத்திலு மடையிலே யிருப்பர்
தாணியிற் புழுவாய்ப் பிறப்பர்கள் களவு
தனக்கியைந் தவருமத் தகையர்.



14. காசிநகரையாண்ட பிரதத்தராஜன் இவ்வண்ணாமலை சந்நிதிக்குவந்து தரிசனஞ்செய்யுங்காலத்தில் ஓர்தாசியை யிச்சித்தபாவத்தால் குரங்குமுகமாகி பிறகு சிவ காணிக்கைகள் கொடுத்துப் பூசித்துப் பழையவடிவமடைந்த மகாத்மியம்.

(இ-ள்.) அருணசலேசுரரது திரவியத்தில் அணுவளவேனுந் திருடினவர்கள் உடனே மரணமடைந்து எமலோகத்திற்குப்போய் அக்கினிக்குழியில் விழுந்தவஸ்தைப்படுவார்கள்; இருள் நிறைந்த இருபத்தெட்டுகோடி நரகங்களிலும் அடைவாக விழுந்துகிடப்பார்கள்; மறுபடியும் பூமியில்வந்து புழுவாய்ப் பிறப்பார்கள்; அத்திருட்டுக் குடன்பட்டிருந்தவர்களும் அப்படிப்பட்ட துன்பத்தை அடைவார்கள். எ-று. (க)

ஓங்கிய தரையு ளிசைத்தபொன் னெதிரே
யுற்றபே ருடலையு மொறுக்குந்
தேங்கிய கருணை யருணைநா யகர்பொற்
செய்கையைப் படியினிற் கரந்து
வாங்கிய பேரைக் கிளையுடன் சிதைக்கு
மலையினுங் கடலினு மொளித்து
நீங்கிய பொழுதுந் தொடர்ந்திடும் விடுமோ
நிழலெனத் தொடருமெந் நிலத்தும்.

(இ-ள்.) திருடி பூமியினுள் ஒளித்துவைக்கப்பட்ட பொன் அவ்விடத்தின்மேல் வந்தவருடைய தேகத்தையுங் கண்டிக்கும்; அப்படிச்செய்வது மிகுந்தகிருபையுடைய அருணசலேசுரருடைய திரவியத்தின்செய்தியாம்; அப்பூமியில் ஒளித்துவைத்து எடுத்துக்கொண்டவரையோ வென்றால், அவர்களுறவோடு கெடுக்கும்; மலையிலுங் கடலிலு மொளித்துக்கொண்ட பொழுதுந் தொடர்ந்து வருத்தும்; விடமாட்டாது; எவ்விடத்திற்போனாலும் நிழலைப்போலத் தொடரும். எ-று. (உ)

கடிக்கலாஞ் சிலையை விழுங்கலா நெருப்பைக்
கடுவிடங் குழைத்திழைத் தெடுத்துக்
குடிக்கலா மிரும்பை யருந்தலாங் கடும்பாற்
கொள்ளலா மருந்தினற் குணத்தால்

முடிக்கலாம் பகையை யருணா யகர்பொன்
விழுங்கினால் மிடற்றிலே பிடிக்கும்
உடற்குளே கனலும் புகையுமவ் வளவோ
வுயிரையு முளத்தையு மொறுக்கும்.

(இ-ள்.) பின்னும் பிரமன்சொல்வான்; கல்லைக் கடிக்கலாம், நெருப்பையெடுத்து விழுங்கிவிடலாம், விஷத்தோடு கொல்லும்படியான வஸ்துக்களைச்சேர்த்து அரைத்தெடுத்துச் சாப்பிடலாம், இரும்பைப் புசிக்கலாம், கள்ளிப்பால் முதலியவற்றையுங் குடிக்கலாம், இவைகள் உபத்திரவஞ்செய்யவொட்டாமல் நல்ல மருந்துகளால் நிவர்த்திபண்ணிக் கொள்ளலாம், அருணாசலேசர் திரவியத்தைச் சாப்பிட்டவுடனே தொண்டையைப் பிடித்துக்கொள்ளும், தேகத்துக்குள்ளே நெருப்பாகக் கனற்றும், புகையுண்டாகும், அவ்வளவுதான் செய்யுமோவென்றால் அவர்களுயிரையுங் கொன்று உள்ளத்தையுங் கெடுக்கும். எ-று. (௮)

முக்கணான் பொருளைக் கவர்ந்தபே ரிருக்க
முயன்றபேர் நினைத்தபேர் முதலா
யக்கணத் தழிவ ரவர்களு மிருக்க
வடியவர் பொருட்கவர்ந் தலைக்கத்
தக்கது நினைத்தார் கெடுவரென் றுரைத்துச்
சத்தியம் பலபல சாற்றிச்
செக்கருங் கருக வொளிவிடு மணிப்பூட்
டிசைமுக னொருகதை செப்பும்.

(இ-ள்.) மூன்றுகண்களையுடைய அருணாசலேசுரரது திரவியத்தைத் திருடினவர்கள் படுகின்ற துன்பமிப்படிப்பட்டது; அஃதிருக்கட்டும் அப்பொருளைத் திருடுகிறதற்கு முயற்சிசெய்தவர்கள் திருட நினைத்தவர்கள், இவர்களந்தக்கணத்திலே யழிவார்கள்; அவர்களுமிருக்கட்டும், சிவபத்தர்களுடைய பொருளைத்திருடி யவர்களைத்



துன்பப்படுத்த நினைத்தபேர்களும் கெடுவார்களென்று பலபல சத்தியத்தோடுஞ் சொல்லிச் செவ்வானமுங் கருகும்படி ஒளிவிடுகின்ற இரத்தினாபரணங்களைத் தரித்த பிரமதேவர் ஒரு கதைசொல்லத் தொடங்கினார். எ-று. (௯)

முன்னமே யொருநாள் வடதிசைக் கிறைவன்
முழுமணிக் கங்கைநீர்த் துறைவன்
இந்நிலத் திழிந்த விந்திர னனையா
னாண்டகை முருகவே ணிகர்வான்
மன்னவர் நிறைந்த மகுடகோ டிகளின்
வயிரநா யகங்களாற் றேய்ந்த
பொன்னவிர் கழலான் றருமமுங் கழலான்
புகழ்ப்பெயர் பிரதத்த னென்பான்.

(இ-ள்.) பிரமன் சொல்லுவான், முற்காலத்தில் ஒருநாள் வடதேசத்துக்கு அரசனாயிருக்கின்றவன், விலையுயர்ந்த முத்துகளுக்கிருப்பிடமாகிய கங்காநதித்துறையை யுடையவன், தெய்வலோகத்தினின்று பூமியிலிறங்கிய தேவேந்திரன் போன்றவன், ஆண்மைக்குணத்தில் சுப்பிரமணியருக்குச் சமானமானவன், அரசர்கள் பணியும்போது அவர்களால் நிரைநிரையாகத் தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில் இழைக்கப்பட்ட உயர்ந்த வயிரங்களாற் றேய்வுற்ற பொன்னாற்செய்யப்பட்ட வீரகண்டையைத்தரித்தவன்; தருமமென்பதை இடைவிடாது செய்கிறவன்; கீர்த்திபொருந்திய பிரதத்தமகாராஜனென்னும் பெயரையுடையவன். எ-று. (௰)

காலனோர் விழியார் முகமென விளங்கிக்
களங்குடைத் தொழுக்கிய மதிபோல்
நீலமா மணிக்காம் பிணைந்தவெண் கவிகை
நெடுநிலப் பரப்பெலா நிகழ்த்தச்

சாலவே பணியா வரசர்க ளிவன்பொற்
 சரணமே படிந்துயர் பெறுமென்
றேலவே யழைக்குந் தருமதே வதைபோ
 லிரண்டுசா மரைகளார்த் திடவே.

(இ-ள்.) எமன்போலக் கொடுமை செய்கின்ற கண்களையுடைய பெண்கள் முகம்போல்விளங்கிக் களங்கத்தையுடைத்து ஒழுகவிட்ட சந்திரன்போல நீலரத்தினமிழைத் திருக்கின்ற காம்பையுடைய வெள்ளைக்குடை நீண்டசந்திரிகையைப் பூமியின் பரப்பெல்லாமிகழ்த்தவும் மிகுந்தமரியாதையோடு பணியாத பகை யரசரைப்பார்த்து, இந்திரனுடைய அழகிய பாதங்களை வணங்கி உங்களுயிரை இறக்காமல் பெற்றுக்கொள்ளுங்களென்று பொருந்த அழைக்குந்தருமதேவதையைப்போல இரண்டு சாமரங்கள் வீசவும். எ-று. (௬)

வருணமண் டலத்திற் புரவிபோற் றிளர்ந்த
 மரகதக் குரகதம் வயங்க
அருணமண் டலத்தை யளவிடுங் கொடித்தே
 ரடவிகள் புடவியை யடைப்பக்
கிரணசிந் தூரத்துப் புகர்முக மருப்பிற்
 கிம்புரிக் கரிதிசை கிளரத்
தரணியர் நடுங்க மந்திரி கணத்தோ
 டெழுந்தனன் றண்டையாத் திரையே.

(இ-ள்.) வருணமண்டலத்தில் விளங்கும் குதிரைகள்போல் உயர்வாகிய மரகதநிறத்தையுடைய குதிரைகள் பிரகாசிக்கவும், சூரியமண்டலத்தை யளாவிய கொடிகள் கட்டியதேர்க்காடுகள் பூமியை யடைக்கவும், கிரணம்பொருந்திய சிந்தூரந் தீட்டிய புள்ளிகளையுடைய முகத்தையும் பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள் திசைகள்தோறும் பிரகாசிக்கவும் பகைமன்னர் பயப்பட மந்திரிகூட்டத்தோடுஞ் சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயாணப்பட்டான் பிரதத்த மகாராஜன். எ-று. (௭)



அங்கர்புற் றேற யவனர்வெற் படைய
 வவந்தியர் வில்லினுண் கௌவச்
சங்கிலித் தொடக்காய் மற்றமன் னவர்கள்
 தம்மிறை தாங்களே சுமக்கச்
சிங்கவே றெனவே சோழநா டணைவான்
 றிருநதி கடந்துதென் னருணைக்
கங்கைவாழ் சடையான் கோயிலிற் புகுந்தான்
 கங்கையுங் காசியும் புரப்பான்.

(இ-ள்.) இப்பிரதத்தமகாராஜன் பிரயாணப்பட்டபோது, அங்கதேசத்தரசர் பயந்து புற்றிலேறிக்கொள்ளவும், யவனதேசத்து அரசர்கள் மலையிலொளித்துக்கொள்ளவும், அவந்திதேசத்தரசர் வில்லிலிருக்கின்ற நாணியைக் கௌவிக்கொள்ளவும், மற்றதேசத்து அரசர்கள் சங்கிலிபோலத் தொடர்ந்து நின்று தாங்கள் கட்டவேண்டிய கப்பங்களைத் தாங்களே சுமந்துவரவும், ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்குப்போகும்படி புறப்பட்டுத் திருநதியைத்தாண்டி அழகிய அருணாசலத்தலத்துக்குவந்து கங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவன்கோயிலிற் புகுந்தான்; கங்கை நதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற பிரதத்தமகாராஜன். எ-று. (௮)

அரும்பவிழ் மலர்கொண் டருச்சனை புரிய
 வருணைநா யகர்திருக் கோயில்
விரும்பியுட் புகுந்து பணியுமவ் விடத்தில்
 விடத்தினுங் கொடியகூர் விழியாள்
இரும்பையு முருக்கு மிசையினு லொருத்தி
 யிலங்கிழை யாருட னிறைபால்
கரும்பெனு மொழியாற் பாடுதல் கேட்டான்
 கண்டனன் வளைத்தவேள் கரும்பை.

(இ-ள்.) காசிதேசத்தரசனாகிய பிரதத்தமகாராஜன் அரும்புகள் மலர்ந்த புட்பங்களைக்கொண்டு அருச்சனை பண்ணுகிறதற்காக அருணாசலேசுரர் வீற்றிருக்கும் திருக்கோயிலுள் பத்தியோடுபோய் வந்தனஞ்செய்யும்போது, அவ்விடத்தில் விஷத்தினுங் கொடுமைசெய்கின்ற கூறியகண்களையுடையவள், இரும்பும் உருகும்படிசெய்யும் சங்கீதவித்தையை யுடையவளாகிய ஒரு தாசிப்பெண் பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத்தரித்த சில பெண்களோடு நின்று சுவைநிறைந்தபாலும் கரும்பினிரசமும் போன்ற மொழியினால் பாடுவதைக்கேட்டான்; அக்கணத்தில்தான்மன்மதன் வளைத்த கருப்புவில்லையுங்கண்டான், காம விகாரங்கொண்டு பிரதத்தமகாராஜன். எ-று. (௯)

அன்னமோ கிளியோ வமிர்தமோ திருவோ
வமிர்தமன் றமரருக் களித்த
வன்னமோ கிளியோ விரதியோ பிரமன்
மனத்தினால் வருத்தமே னகையோ
என்னமோ கமதாய்த் தனதுநாட் டினிற்கொண்
டேகுவா னினைந்தன னதற்கு
முன்னமே குரங்கு முகமதா யிருந்தான்
முழுவலா யினதெவர் முகமும்.

*(இ-ள்.) காசிதேசத்துப் பிரதத்தமகாராஜன், அத்தாசிப்பெண்ணைப்பார்த்துச் சொல்லுவான்; இவள் அன்னமோ! கிளியோ! தேவாமிர்தமோ! இலட்சுமியோ! அசுரரைக்கொன்று அமிர்தத்தைமுற்காலத்தில் தேவருக்குக்கொடுத்த அழகாகிய மோகினியோ! இரதிதேவியோ! பிரமன் மனத்தினால் சிருட்டித்த மேனகையோ! என்று நினைத்து மோகத்தோடு தன்னுடைய தேசத்துக்கு அப்பெண்ணைக் கொண்டு போவதற்குநினைத்தான்; அந்நினைப்பு உண்டாகுமுன்னந்தானே குரங்குமுகத்தை யுடையவனாயிருந்தான்; அதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள். எ-று. (௧0)



மந்திரிக் கிழவ ராசனை வினவி
மன்னவா நினைத்தவா றதனால்
வந்தவித் துயரந் தவிர்ந்திட மலைமேன்
மருந்தினைப் பணியென வவனுஞ்
சிந்துரக் குவடுங் கவனவாம் பரியுஞ்
செழுமணிச் சிவிகையுந் தேருஞ்
சந்தன மணியுந் தனத்தினார் பலருந்
தமனியக் கோயின்முன் விடுத்தான்.

(இ-ள்.) மந்திரிமார்கள் பிரதத்தமகாராசனைப்பார்த்து குரங்குமுகம் வந்ததற்குக்காரணங்கேட்டறிந்துகொண்டு, அரசனே? தீமையாகிய உமது நினைப்பினால் அடைந்த இத்துன்பம் நீங்கும்படி மலைமேல்மருந்தாகிய அருணாசலேசுரரை வணங்கென்றுசொல்ல, அவ்வரசனும் மலையையொத்த யானைகளையும், வேகமாய்த் தாவுகின்றகுதிரைகளையும், நல்ல இரத்தினங்களா லிழைக்கப்பட்டிருக்கும் சிவிகைகளையும், தேவர்களையும், சந்தனக்குழம்பைப் பூசுகின்றஸ்தனங்களையுடைய பெண்களையும், பொற்பிரகாசம்பொருந்திய அக்கோயிலுக்குமுன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டான். எ-று. (௧௧)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பன்னரு மனந்த பூசனை புரிந்தான்
பரமனு மவற்கருள் புரிந்தான்
கின்னர மொழியாள் விருப்புற லடைந்த
கிலேசவா னரமுக மொழிந்தான்
நன்னர முகம்பெற் றிறையுநா டணைந்தா
னுதலா லரன்பொருட் கவர
வுன்னிய பாவம் பதின்மடங் கரும்பொன்
னுதவினாற் றவிருமென் றுரைத்தான்.

(இ-ள்.) பிரதத்தமகாராசன் சுவாமிக்குசொல்லுதற்கரிய அநந்தம் அருமையான பூசைகள்செய்ய, அப்பொழுது சுவாமியும் அவ்வரசனுக்குக்கிருபைசெய்தார்; வீணையினிசைபோலும் வார்த்தையையுடைய பெண்மேற்கொண்ட ஆசையினு லடைந்த துன்பம்பொருந்திய குரங்குமுகத்தை யொழித்தான்; நல்லமானிடமுகத்தையடைந்து அவ்வரசன் தன்னுடைய நாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்; ஆகையால் அருணாசலேசருடைய பொருளைத்திருட நினைத்ததனாலுண்டாகிய பாவம் அப்பொருளுக்கும் பதின்மடங்கு திரவியங்கொடுத்தால் தீருமென்றுசொன்னார் பிரமதேவர். எ-று. (கஉ)

மாதவனே யருணகிரி வளமிதுதா
னெனத்திருவாய் மலர்ந்தா னந்தப்
போதனையங் கடிபணிந்தன் போதனையான்
மகிழ்ந்தனமிப் புவியின் மீதே
கோதமுட னறிந்துசெய்த பவந்விருங்
கதையினையுங் கூறுகென் றுன்
மூதறிவா யினனுலு முகத்தினுமா
யிரமுகமாய் மொழிய லுற்றான்.

(இ-ள்.) மகத்தாகிய தவத்தையுடைய சனகரிஷியே! அருணாசலத்தினது வளம் இதுதானென்றுசொன்னார்; அப்பிரமனை அவ்விடத்தில் சனகரிஷி வந்தனஞ்செய்து உம்முடைய போதனையினால் ஆநந்தமடைந்தேன், இவ்வுலகத்தில்குற்றமாக அறிந்துசெய்தபாவம் நீங்கும்படியான கதையையும் அருள்செய்யவேண்டுமெனப்போதிவு கொண்டபிரமதேவர் தம்முடைய வாய்நான்கும் ஆயிரம் வாயாகச் சொல்லத் தொடங்கினார். எ-று. (கங)

பதினொன்றாவது
பிரதத்தமகாராஜன் சருக்கம்.
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௬௦௩.





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது.

# பாவந்தீர்த்தசருக்கம்.

முன்பு ஒருகாலத்தில் பிர்மாவினால் சபிக்கப்பட்ட அஷ்டவசுக்கள் அந்தச்சாபம் நிவர்த்தியாகும்படி கங்கைக்கரையில் பரமசிவனை நோக்கித்தவஞ்செய்தபோது, பரமசிவன்வந்து திருவண்ணாமலையைச் சூழ்ந்த கிழக்குதிக்குத்தொடங்கி எட்டுதிக்குகளிலுமிருந்து தவஞ்செய்தால் உங்களுடைய சாபம்நிவர்த்தியாகும் என்றுசொல்ல, அப்படியே அவர்கள் திருவண்ணாமலைக்குவந்து மலையைச்சூழ்ந்த எட்டுத் திக்குகளிலுமிருந்து சுவாமியைப்பூசித்துப் பழையபடி தமதுபதவிகளைப்பெற்றுச்சிவகிருபையும் அடைந்தார்கள். அந்த எட்டுவசுக்களும் செய்ததபோபலத்தினால் பரமசிவன் எட்டுமுகமாயிருந்ததைப் பார்த்துத் தேவர்கள் பல்லாண்டுகூறினார்கள்.

முன் ஒருகாலத்தில் தேவேந்திரன் பிர்மாவினிடத்திற்குவந்து எல்லாரும் தேவேந்திர பட்டத்திற்காகத் தவஞ்செய்கிறார்கள். அந்தத்தவத்தை எவ்விதமாயாவது அழிக்கவேண்டுமென்று கேட்டுக்

கொண்டுபோய்விட்டான். அதற்காகப்பிர்மா, திலோத்தமை என்னும்பெண்ணை யுண்டாக்கி அவளுடைய அழகைக்கண்டு அவரே இச்சித்தபோது, தகப்பனென்று அவர்கருத்துக்கு அவள் இசையாமல் பெண்மானாகி ஓடினாள், பிர்மா கலைமானாகித்தொடர்ந்தார். அப்போது அவள் மலையுருவமாகிய அருணாசலேசுரரைக் கொஞ்சதூரத்திற் கண்டு நீரே தஞ்சமென்றுசொல்லி யடைந்தாள். உடனேமலையைக் கீறி அதிலிருந்து பரமசிவன் வேடரூபமாகவும் நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றியதைப்பார்த்த பிர்மா பயந்து தன்னுடைய ஆசையைநிவர்த்திசெய்து சுவாமியைவணங்கினான். அப்போது பரமசிவன் பிர்மாவைப்பார்த்து நீ உண்டாக்கின திலோத்தமையை நீயே இச்சித்ததினால் நேரிட்டபாவம் தீரமாட்டாது. ஆகிலும் இந்தமலையைத்தரிசித்தா யாகையால் அந்தப்பாவத்தைத் தீர்த்துவிட்டோம். உன்னிடத்திற்குப் போவென்று சொல்லிமறைந்துவிட்டார்.

முன்னொருகாலத்தில் பரமசிவன் திருவிளையாட்டினாற் கற்பகாலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம்நீங்கியும் சமுத்திரத்திற்றுயிலும் விஷ்ணு உலகம்உண்டாக்கும்பொருட்டு பிரமனை சிருஷ்டிக்காமல் நித்திரைசெய்துத் தாழ்த்ததனாலே தீவினையைச் சம்பாதித்துக்கொண்டேனென்று பரமசிவனை நினைக்க அவர் ரிஷபவாகனத்தின் மேற்றோன்றினார். விஷ்ணுவானவர் எழுந்து அஞ்சலியத்தராய் எனக்கு நித்திரையினால் வந்த வினையைநீக்கி அருள்செய்யவேண்டுமென அதற்குப் பரமசிவன் அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினைபோம் என்று மறைந்தருளினார். விஷ்ணுவானவர் அப்படியே அவ்வருணாசலத்தைப் பூசைசெய்து, வினையை நீக்கிக் கொண்டார்.

சந்திரனானவன் உரோகிணியின்மேல் அதிகவிருப்பமாகவிருப்பதை மற்ற இருபத்தாறு பெண்களால் தக்கன் கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்திலும் விருப்பம்வையாமல் ஒருத்திமேல்மாத்திரம் வைத்ததனால் அவனுடல்குன்றிப் போகக்கடவதென்று சபித்தான்.



இச்சாபத்தை யடைந்த சந்திரன் அவ்வருணாசலத்தை வலம்வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான்.

கலி விருத்தம்.

வாக்கினால் வடிவினான் மனத்தி னால்பவந்
தாக்கினா ரருணைமா சயிலை நோக்கினா
னீக்குவா ரென்பது நிகழ்த்தி நான்மறை
தேக்கினான் சிலகதை செப்ப லாயினான்.

(இ-ள்.) வாக்கினாலும், தேகத்தினாலும், மனத்தினாலும், துர்விஷயங்களைச் சொல்லியும், செய்தும், நினைத்தும் பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால், அப்பொழுதே தங்கள் பாவத்தை நீக்குவார்கள் என்றுசொல்லி நான்குவேதங்களையுந் தன்னிடத்திலுடைய பிரமன் சிலகதையைச்சொல்லத்தொடங்கினான். எ-று. (௧)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

எம்பெரிய சபையிடத்தி லிருநான்கு
வசுக்களும்வந் திருந்தார் முன்னே
தம்பெரிய தவத்தினையும் புகழினையும்
வியந்துரைத்த தன்மை நோக்கிக்
கும்பமுனி முதலானோ ரிடையினுமை
வியந்துரைத்த கொடுமை யாலே
அம்புவியி லிழைத்ததவ மனைத்தினையு
மவமாக்கி யகற்று மென்றேன்.

(இ-ள்.) என்னுடைய பெரிய சபையினிடத்தில் அஷ்ட வசுக்களும் முன்னொருகாலத்தில் வந்திருந்தார்கள்; அப்பொழுது அவர்கள் தங்களுடையதவத்தின் பெருமையும் அதனால்வந்த கீர்த்தியையும் கொண்டாடிச் சந்தோஷித்தார்கள்; அதைப்பார்த்து அகத்தியர் முதலான ரிஷிகள் மத்தியில் செய்த தவமெல்லாம் அவமாகச் செய்துவிடுமென்று சொன்னேன். எ-று. (௨)

உற்றபெருந் தவத்தினையுந் தமதறத்தி
　னலத்தினையு முரைத்த பேரு
மற்றொருவர் தமையிகழ்ந்த வருந்துயரக்
　கடன்மூழ்கி மறிவ ரென்றேன்
சிற்றறிவா இயவசுக்க ளனைவர்களு
　நடுங்கியிது தீருங் காலஞ்
சொற்றருளு கெனவுரைத்தா ரரன்றுளாற்
　றீருமுங்க டுயர்தா னென்றேன்.

(இ-ள்.) பெருமைவாய்ந்த தம்முடைய தவத்தையும், செய்த தருமத்தையும் சொன்னவர்களும், மற்றொருவரை யிகழ்ந்து பேசின வர்களும், துக்கசமுத்திரத்தில்முழுகி மறிபட்டுக் கிடப்பார்களென் றேன். சிற்றறிவுடைய அஷ்டவசுக்களும் அவ்வார்த்தையைக்கேட்டு நடுங்கி, இச்சாபம் எக்காலத்தில் தீரும் அருள்செய்ய வேண்டுமெ ன்று கேட்டார்கள்; பரமசிவன்கிருபை உங்களுக்கு என்றைக்குக் கிடைக்குமோ அன்றைக்குத் தீருமென்றேன். எ-று. (௩)

சொல்லுதலும் வசுக்களெலா மெனையகன்று
　செடியகங்கைத் துறையி லேகி
எல்லையிலா நெடுங்கால மிறையைநினைந்
　தரியதவ மியற்றி னார்கள்
வல்லிபங்க னொருநாளின் மழவிடைமே
　லடைந்துதவம் வரமே தென்றான்
அல்லிமல ரவன்கொடுத்த கொடுஞ்சாபக்
　கடலிலெடுத் தருளு கென்றார்.

(இ-ள்.) அப்படி சொன்னவுடன் வசுக்களெல்லாரும் என்சபை யைவிட்டு நெடுந்தூரஞ் செல்லுகின்ற கங்காநதியின் துறையிற் போய் அளவில்லாக் காலம் பரமசிவனை நினைந்து அரிதாகிய தவத் தைச் செய்தார்கள்; பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண்



டிருக்கும் எமதுபரமசிவன், இளமையான ரிஷபவாகனத்தி லெழுந் தருளிவந்து நாம் உங்களுக்குக் கொடுக்கவேண்டியவரமென்னவென் றுகேட்டு அருள்செய்தார்; அவ்வசுக்கள் இதழினையுடைய தாமரை மலரி லிருக்கின்ற பிரமன் கொடுத்தகொடியசாபமாகிய கடலினின் றும் எங்களை எடுத்தருளவேண்டுமென்றார்கள். எ-று. (௪)

கருணைமுகின் முகமலர்ந்து வசுக்களுட
　னுமதுபவங் கடக்க வேண்டில்
தரணியிலே யொருநகரந் தலேச்சுரமென்
　றிலங்குமந்தத் தலத்தின் மீதே
அருணகிரி யெனுமலையா யிருக்குமந்தப்
　பதியணுகி யசலஞ் சூழ்ந்த
வருணதிசை தொடங்கியெட்டுத் திசைகளினு
　மிருந்துதவ மியற்று மென்றார்.

(இ-ள்.) கிருபாவருஷம் பொழிகின்ற மேகமாகிய பரமசிவன் திருமுகமலர்ந்து அந்தவசுக்களைப்பார்த்து உங்களுடையபாவத்தை நீங்கள் கடக்கவேண்டினால், பூமியில் தலேச்சுரமென்று ஒரு திவ்வி ய தலம் விளங்குகின்றது, அத்தலத்தில் அருணாசலமென்று ஒரும லையுண்டு, அத்தலத்தையடைந்து அம்மலையைச் சூழ்ந்த கிழக்குத் திக்குத்தொடங்கி எட்டுத்திக்குகளிலுமிருந்து தவம் செய்யுங்க ளென்றருளிச்செய்தார். எ-று. (௫)

அன்னவய லருணையிற்சீ ரரியதவ
　மியற்றிடு மவ்வளவே யுங்கள்
முன்னாழற் கிரியுமெட்டு முகமாக
　விளங்கியட்ட மூர்த்தி யாகு
மன்னுமுங்க ளரும்பவமுந் தவிருமென
　வுரைத்துவெள்ளி மலையிற் சேர்ந்தான்
தன்னையடைந் தவர்களெலாந் தனைப்போல
　விருக்கவாந் தருகு வானே.

(இ-ள்.) அன்னப்பறவைகள் தங்கிய வயல்சூழ்ந்த அருணாசலத்திற்குப்போய் நீங்கள் அரியதவத்தைச் செய்யுங்கள், அப்படிச்செய்த அளவிலே அக்கினிசொரூபமாய் விளங்கிய ஒப்பற்ற அம்மலை உங்களுக்கு முன்காட்சிகொடுக்கும், அப்போது நிலைபெற்ற உங்களுடைய பாவமும் நீங்குமென்று திருவாய்மலர்ந்து, கைலாயத்திற்கெழுந்தருளினார், தம்மிடத்தி லடைந்தவர்கள் எல்லாரையுந் தம்மைப்போல உருவத்தை யடைந்திருக்க வரமருளிச்செய்யும் பரமசிவன். எ-று.

முந்தவசு ரரையுமவர் புரத்தினையு
மெரித்தபிரான் மொழிந்த வாறே
அந்தவசு வினைவருஞ்சென் றருணையிலே
யரியதவ மியற்றி னார்க
ளிந்தவசு மதிதழைக்க வழற்கிரியெட்
டுருவாகி யிருந்த தங்கே
தந்தவசு நிலைபுகழ்ந்த கொடுஞ்சாபம்
கிரிகளெலாந் தள்ளி னார்கள்.

(இ-ள்.) முன்பு அசுரர்களையும், அவர்கள் வாசஞ்செய்துகொண்டிருந்த திரிபுரங்களையும், நகைத்தெரித்த சுவாமி அருளிச்செய்த பிரகாரம், அவ்வெட்டு வசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையான தவம்செய்தார்கள்; இப்பூமி தழைக்கும்படி அக்கினிமலை எட்டுமுகமாய்விளங்கியிருந்தன; முன்னே தங்களுடைய தவத்தைப் புகழ்ந்து சொல்லியதனால் வந்த கொடியசாபமென்று சொல்லப்பட்டமலையைத்தாண்டிவிட்டார்கள் அவ்விடத்தில். எ-று. (எ)

பூதரஞ்சூழ் திசைகளெலா மிருந்தட்ட
மூர்த்திதனைப் பூசித் தார்க
ளாதலினாற் பழயபடி தமதுபத
விகளையடைந் தருள்பெற் றார்க



ளோதமறும் படிக்கரிய மறைப்பயனெட்
டுருவாகி யிருந்த போதுஞ்
சீதரனும் பதங்கிரமத் துடனறியான்
முடியெனக்குந் தெரிந்த தின்றே.

(இ-ள்.) அந்தமலையைச்சூழ்ந்த எட்டுத்திக்குகளிலுமிருந்து வசுக்கள் அஷ்டமூர்த்தமாகிய சுவாமியைப் பூசித்தபடியினால், பழயபடியே தமது பதவிகளைப் பெற்றுக்கொண்டு சுவாமியினது கிருபையும்பெற்றார்கள்; குற்றம் நீங்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அச்சுவாமி எட்டுமுகமாயிருந்தபோதும், விட்டுணுவும் திருவடியைக் கிரமத்துடன் அறியாமற்போனார், இன்றளவும் எனக்கும் முடி தெரியவில்லை. எ-று. (அ)

சண்முகனை யளித்தவைந்து முகத்தவனென்
வசுக்கள்செயுந் தவத்தி னாலே
எண்முகமா யிருந்ததுகண் டொருமுகமா
யிமையவர்வாழ்த் தெடுத்தா ரென்று
தண்முகநான் குடையபிரான் சனகமுனிக்
குரைத்தருளச் சயிலத் தாடே
பண்முகயா ழனையமொழித் திலோத்தமைசேர்
கதையினையும் பகர லுற்றான்.

(இ-ள்.) சுப்பிரமணியரைப் பெற்ற பரமசிவன் எட்டுவசுக்களுஞ் செய்த தபோபலத்தினால் எட்டுமுகமாயிருந்ததைப் பார்த்துத் தேவர்களெல்லாம் ஒன்றாய்கூடி வணங்கிப் பல்லாண்டு கூறினார்களென்று கருணைபொருந்திய நான்கு முகங்களையுடைய பிரமன் சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அத்திருமலையில், யாழின் இசைபோன்ற சொல்லையுடைய திலோத்தமையடைந்த கதையையும் சொல்லத்தொடங்கினார். எ-று. (கூ)

கலி விருத்தம்.

தேவர்கோன் முன்னமென் னிடத்திற் சேர்ந்துதன்
பாவன மானதன் பதவி வேண்டியே
யாவரு மருந்தவ மியற்றினு ரதற்
காவது செய்யென வறைந்து போயினன்.

(இ-ள்.) பிரமதேவர் சொல்லுவார்; இந்திரன்முன்னே என்னிடத்தில் வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியைச்சிந்தித்து எல்லாரும் அருமையான தவத்தைச் செய்கிறார்கள்; அத்தவம் நிறைவேறாதபடி ஏதாவது ஒருவிக்கினம் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப்போனன். எ-று. (௧௦)

இந்திரன் போனபின் னியக்க மங்கைய
ரந்தர மங்கைய ரரவ நாட்டவர்
சுந்தரக் கடற்புவித் தோகை மார்வரை
மந்தர முலைச்சிய ரழகு வாரியே.

(இ-ள்.) இந்திரன் போனபிறகு இயக்கலோகத்துப்பெண்கள், தேவலோகத்துப் பெண்கள், நாகலோகத்துப் பெண்கள், அழகமைந்த கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ள பெண்கள், மந்திரகிரிபோன்ற முலைகளையுடைய வரையர மகளிர், இவர்களுடைய அழகு எடுத்துக்கொண்டு. எ-று. (௧௧)

வகுத்தனன் றிலோத்தமை யென்னும் வஞ்சியை
யுகுத்தனன் வலிமையென் மதியை யோட்டினன்
மிகுத்ததோர் வித்தையிற் புலியின் வேட்டுவ
னகத்துட லழித்துட லளிப்ப தென்னவே.

(இ-ள்.) குளவி தன்னிடத்திலுள்ள ஒரு சாமர்த்தியவிசேடத்தினல் புழுவின் உடலைக்கெடுத்து, அதற்கு வேறொரு தேகத்தைக் கொடுப்பது போலத் திலோத்தமையென்னும் பெண்ணை உண்டாக்



கினேன்; அப்பொழுதே அவன்மேற்கொண்ட ஆசையால் என்னுடைய வல்லமையை யிழந்தேன்; ஞானத்திற் சொல்லுகின்ற என்னுடைய புத்தியையுந் தூரத்திவிட்டேன். எ-று. (௧௨)

மன்மதன் கணையினுன் மயங்கி வாடுமென்
றன்மையை யறிந்துநான் றனக்குத் தாதையென்
றென்மனம் பொருந்திலா தெனது கையுறுன்
முன்பினி ஞெளிக்கநான் முகமுந் தேடினேன்.

(இ-ள்.) மன்மதனுடைய பாணத்தினலே மயக்கமடைந்து வாடுகின்ற என்னுடைய இயல்பையறிந்து, நான் தனக்குத் தந்தையென்று என்கருத்துக்கு ஒவ்வாதவளாகியும், நான் பிடிக்கும்போது என்கைக்கு அகப்படாதவளாகியும், எனக்கு முன்னின்றும் ஓரிடத்தில் தானறியாதபடி ஒளித்துக்கொள்ள; நான்கு பக்கங்களிலும் அவளைத்தேடினேன். எ-று. (௧௩)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கன்னிமா னுகச் சென்றுள்
கலையதாய்த் தொடர்ந்தேன் பேட்டு
வன்னியாய்ப் பறந்தாள் சேவல்
வடிவமாய்த் தொடர்ந்தேன் மங்கை
பின்னையோர் சதியுங் காணுள்
பிறங்கலா மருணை நாதன்
றன்னையே தூரக் கண்டாள்
சரணமென் றுரைத்துச் சார்ந்தாள்.

(இ-ள்.) அப்படி நான்தேடி அவளைக் கண்டுபிடிக்கும்போது, பிடிப்பதற்கு முன்னே பெண்மானுகி ஓடினள், நான் கலைமானுகத் தொடர்ந்தேன்; அதன்பின் பெண்கிளியாய்ப் பறந்தாள், நான் ஆண்கிளியாய்ப் பறந்து தொடர்ந்தேன்; அத்திலோத்தமை பிறகு என்கையி லகப்படாம லிருக்கிறதற்கு வேறொரு சதியுங்காணுமல் வருந்

தும்போது, மலையுருவாகிய அருணாசலேசரைச் சிறிது தூரத்திற் கண்டு நீரே தஞ்சமென்றுசொல்லி அடைந்தாள். எ-று. (௧௪)

மாயமால் விடையின் பாகர் வடிவிலா விடையின் பாகர்
காயழலான மெய்யர் கானகத் தாடு மையர்
ஆயுமா ரணத்தின் சோதியடைக்கல மென்றா ளேயன்
சேயிள மழலை போலத் திருச்செவி சாற்றினாளே.

(இ-ள்.) மாயஞ்செய்கின்ற விட்டுணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகின்றவரே! தோற்றாத இடையினையுடைய பார்வதியைப் பாகத்தில் வைத்துக்கொண் டிருப்பவரே! தகிக்கும் அக்கினி வடிவமானவரே! திருவாலங்காட்டி னிடத்தில் நடனஞ்செய்த சுவாமியே! ஆராய்ந்து தேடுகிற வேதத்தையுடைய சோதியே! நானடைக்கலமென்று சகலரையும் ஆளுகின்ற பரமசிவன் திருச்செவியிற் செல்லும்படி குழந்தையின் இளமையாகிய குதலைச்சொல்லைப் போலச் சொன்னாள். எ-று. (௧௫)

முருமலர்க் குழலி னுடன்
முறையிடு முறைக்கென் னையன்
திருவுரு வனைத்துந் தூய
செவிகளா யிருந்த போது
விரைவின்மால் வரையைக் கீறி
வேட்டுவ னாகி நாலு
சுருதியு ஞமலி யாகத்
தோன்றினன் றோகை பாகன்.

(இ-ள்.) வாசனையமைந்த புட்பமாலையை யணிந்த கூந்தலையுடைய திலோத்தமை முறையிடுதலுக்கு, என்சுவாமி அழகிய உருவமெல்லாம் செவிகளா யிருந்தன; அதனால் சீக்கிரத்தில் மலையைக் கீறி அதினின்றும் தாம் வேடவடிவமாகவும், பார்வதி வேடச்சி உருவமாகவும், நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றினார் பார்வதியை இடதுபாகத்தில் வைத்துக்கொண்ட பரமசிவன். எ-று. (௧௬)



சூடகச் செங்கை பாகன்
சிலையொடு தோன்றும் போதில்
வாடிய மருங்கு லாண்மேன்
மயக்கமும் வருத்தந் தீர்ந்தே
னாடிய பெருமா னம்மை
முனியுமென் றஞ்சித் தாழ்ந்தேன்
வேடனைப் பறவை கண்டால்
வெருவுமோ வெருவு றாதோ.

(இ-ள்.) வளையலையணிந்த கையையுடைய பார்வதியை ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடனாகி வில்லைக் கையிலேந்திக்கொண்டு தோன்றியபோது, முன்னே நடனஞ்செய்த சுவாமி என்னைக் கோபித்துக்கொள்வாரென்று பயந்து வளைகின்ற இடுப்பினையுடைய திலோத்தமைமேலுண்டாகிய மையலையும், அதினாலுண்டாகிய வருத்தத்தையுந் தீர்ந்து அச்சுவாமியை வணங்கினேன்; வேடனைப் பறவைக்கண்டால் பயப்படுமோ பயப்படாதோ. எ-று. (௧௭)

வெற்பெனு முலையா டன்னை
விதித்துநீ விரும்புந் தீமை
கற்பகோ டியினுந் தீரா
தாயினுங் கருணை யாமித்
தற்பர மலைகண் டாயே
யாதலாற் றவிர்த்தோம் போவென்
றற்புதன் மொழிந்து மீளப்
புகுந்தன னருளை வெற்பில்.

(இ-ள்.) மலைக்கு நிகராகிய தனத்தையுடைய திலோத்தமையைப் படைத்து நீயே விரும்பினதினா லுண்டாகியபாவம் கற்பகோடிகாலத்திலுந் தீரமாட்டாது. ஆனாலும் அருளுருவமாகியும் தானே பரமாகியும் உள்ள இம்மலையை தரிசித்தாயாதலால், அப்படிப்பட்ட

பாவம் தீர்த்துவிட்டோம், உன்னிடத்திற்குப் போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள் சுவாமி மறைந்துவிட்டார். எ-று. ()

கலிவிருத்தம்.

தன்னையறி யாமல்வினை சாருமுட ருணுங்
தென்னருணை சேரிலது திருவது திண்ண
மின்னல்வினை யற்றதனி லெண்ணியது பெற்றார்
முன்னமுள ரென்றயன் முனிக்குமொழி கின்றான்.

(இ-ள்.) ஒருவனுக்கு அபுத்தி பூருவமாகவந்த பாவம் அவன் அழகுபொருந்திய அருணாசலத்தை யடைந்தால் தீரும்; அது நிச்சயமே; முற்காலத்திலும் அநேகர் தங்களுடைய வினையைநீக்கி அத்தலத்தில் தாங்கள் நினைத்தவரம் பெற்றுக்கொண்டார்களென்று பிரமதேவர் சனகரிஷிக்கு ஒருகதை சொல்லுகிறார். எ-று. (௧௯)

கற்பமுடி வாயிருள் பெயர்ந்து புலர் காலத்
தற்பவிரு ணின்றதுமுன் னுளிறையி னாலே
சொற்பரவை மாயனுண ராதுதுயில் கொள்ளச்
சிற்பரம யோகியர்கள் செம்மலை நினைந்தார்.

(இ-ள்.) முற்காலத்தில் பரமசிவனுடைய திருவிளையாட்டினால் கற்பகாலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம் நீங்கி வெளிச்சமுண்டாகிறகாலத்தில், அவ்வந்தகாரத்திற் கொஞ்சம் நின்ற அக்காலத்தில் இதனை யறியாமல் விட்டுணு சமுத்திரத்தில் நித்திரைசெய்துகொண்டிருக்க மேன்மையான சின்மயமாகிய யோகியர்கள் பரமசிவனை நினைத்தார்கள். எ-று. (௨௦)

அத்தனடி யார்கடம தாணவ மறுக்குஞ்
சுத்தனழ லானதொரு சோதிவடி வானோ
னெத்தலமு மெத்திசையு மெங்கும்வெளி யானோ
னைந்தபொறி தம்மிலுள வாயவுல கெல்லாம்.



(இ-ள்.) எல்லாச் சீவராசிகளுக்கும் பிதாவாகியும், தமதடியார்களுடைய ஆணவமலத்தைக் கெடுக்கின்ற சுத்தராகியு மிருக்கும் பரமசிவன் நெருப்புமயமாகிய ஒருசோதிரூபத்தை யடைந்தார்; எத்தலங்களிலும் எத்திக்குகளிலும் மற்ற எவ்விடங்களிலும் ஆகாயமே தமக்குருவாகிய அச்சுவாமியானவர் அப்போது இந்திய பொறிகளாலே உலகமெல்லாம் உண்டாயின. எ-று. (௨௧)

ஊழிமுடி வாயிருள் புலர்ந்துமுண ராதே
யாழிமிசை யிற்றுயிலு மச்சுதனை யெய்தி
வாழியென யோகிய ரெழுப்புதலு மாயன்
பாழியினு நின்றதி பயத்துட னெழுந்தான்.

(இ-ள்.) ஊழிகால முடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்யும் விஷ்ணுவினிடத்தில்வந்து வாழியென்று சொல்லி யோகியர்கள் எழுப்புதலும் அவ்விட்டுணு சர்ப்பசயனத்தினின்றும் அதிகபயத்துட னெழுந்திருந்தார். எ-று. (௨௨)

வையக மளிக்கமல ரோனையுத வாதே
பையரவின் மிக்கதுயில் கொண்டபரி சாலே
வெய்யபுன் வினைத்தொழில் விளைத்தன னெனத்தன்
னையுணர்வு மஞ்சியென தையனை நினைந்தான்.

(இ-ள்.) உலகமுண்டாக்கும் பொருட்டு பிரமனைச் சிருட்டிக்காமல் படத்தையுடைய பாம்பின்மேல் நித்திரைசெய்த தன்மையினால், வெம்மையாகிய தீவினையைச் சம்பாதித்துக் கொண்டேனென்று ஐம்பொறிகளுங் கலங்கி யென்னுடைய ஆண்டவனாகிய சுவாமியை நினைந்தார். எ-று. (௨௩)

அன்பர்கரு திற்கடுமை யாகியெதிர் வந்தே
துன்பமகல் விக்குமது தூயதொழி லானோன்

வன்படிக வெற்புமிசை மன்னுசுடர் போலே
மின்படரு மேனியுடன் வெள்விடையில் வந்தான்.

(இ-ள்.) அடியார்கள் நினைத்தால் சீக்கிரத்தில் தானே அவர்களுக்கு எதிராகத்தோன்றித் துன்பம் நீக்குவதே தமக்குப் பரிசுத்தமாகிய தொழிலாகக்கொண்ட பரமசிவன் வண்மையாகிய படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல வெண்மையாகிய ரிஷபத்தின் மேல் மின்போன்ற நிறத்தோடும் எழுந்தருளி வந்தார். எ-று. (௨௪)

பொருக்கென வெழுந்தடி பணிந்தருள் புகழ்ந்தே
யருக்கிய முதற்புரி யருச்சனையி னாலே
யுருக்கியென் வினைத்தொட ரொழித்தருள்தி யென்றா
னெருக்கணி குவாணிவை யெடுத்துமொழி கின்றான்.

(இ-ள்.) அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்தவுடனே, விட்டுணு சீக்கிரத்தில் எழுந்து திருவடிக்கமலங்களுக்கு வந்தனஞ்செய்து, அவருடைய திவ்வியகிருபையைப் புகழ்ந்து, அவருக்கு அர்க்கியமுதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து, எனக்கு நித்திரையினால் வந்த வினையை நீக்கி அருள்செய்ய வேண்டுமென்றார்; எருக்கம்பூ மாலையைத் தரிக்கும் சுவாமி இவைகளைச் சொல்லத்தொடங்கினார். எ-று. (௨௫)

அர்க்கியம் முதலாயின என்பன அர்க்கியம், பாத்தியம் ஆசமனமாம்.

வாசிமக மேமுதன் மகம்பல செய்தாலும்
பாசமக லாதவினை பற்றறுத லெண்ணித்
தேசுமிகு தென்றிசை செறிந்தருணை தன்னிற்
பூசைபுரி விட்டுவினை போகுமெனை யென்றான்.

(இ-ள்.) ஒருவன் தனக்குண்டான பாசவினையை நீக்கும்படி நினைத்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச் செய்தாலும் அது போகாது; ஆகையினால், சோதிமயமாகிய தெற்குத்திசையில் விளங்கும் அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினை போம் என்றார் பரமசிவனார். எ-று. (௨௬)



நாறுபொழி லங்கரு ணாமும்வடி வொன்றே
வேறல வதன்பெருமை வேதமுண ராதால்
நீறுபுனை யோகியர்க ணிவிர்பலர் தொண்ணூற்
றாறுபிர மாவதி லருச்சனை புரிந்தீர்.

(இ-ள்.) வாசனையுடைய சோலைகள்சூழ்ந்த அவ்வருணாசலத்திற்கும் எனக்கும் வடிவம் ஒன்றுதான், பேதமன்று; (நான்கு) வேதங்களுங்கூட அறியமாட்டா; விபூதியை முக்கியமாகத் தரிக்கும் யோகியர்களும் விட்டுணுக்களாகிய நீங்கள் பலரும் தொண்ணூற்றாறு பிரமர்களும் அத்தலத்தில் பூசைசெய்தீர்கள். எ-று. (௨௭)

முற்றிழை யுரோகிணி முலைக்கிடையின் மூழ்கா
யற்றவிரு பத்தறுவர் வாழ்வையு மறந்தான்
கற்றைமதி தக்கனுடல் கன்றுறச் சபித்தான்
அற்றமதி யப்பதியி லத்துயரொ ழித்தான்.

(இ-ள்.) சந்திரன் நன்றாக வேலைதீர்ந்த ஆபரணங்களையுடைய உரோகிணி தனங்களின் போகத்தைவிரும்பி மற்றை இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையு மறந்துவிட அதை முன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்குத் தந்தையாகிய தக்கன் கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்தும் விருப்பம்வையாமல் ஒருத்திமேல் மாத்திரம் வைத்ததனால் அவனுடல் குன்றிப்போகக் கடவதென்று சபித்தான்; அச்சாபத்தை யடைந்த சந்திரன் அவ்வருணாசலத்தில் வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான். எ-று. (௨௮)

நினைப்பளவின் முத்திதரு நீணகா திற்போய்
மனக்குறை தவிர்த்திடுதி யென்றிறை மறைந்தா
னனற்கிரியை காடியரி யத்திசையி னண்ணிச்
சுனைக்கமல வாசமிகு சோணகிரி கண்டான்.

(இ-ள்.) நினைத்த மாத்திரத்தில் முத்தியைக் கொடுக்கும் அருணாசலமென்னும் அத்தலத்திற்குப்போய் மனக்குறையை நீக்கிக்கொள்ளென்று சுவாமி மறைந்தார்; விட்டுணு அக்கினிவடிவாகிய மலையைத் தியானஞ்செய்து அது விளங்குந் தென்றிசையை யடைந்து சுனையிலிருக்கிற தாமரைப்பூவின் வாசனைமிகுந்த அத்தலத்தைக் கண்டார். எ-று. (௨௯)

ஈசர்வடி வானமலை கண்டினி திறைஞ்சித்
தேசுமிகு நன்னகர் செறிந்து மகிழ் வாவி
வாசவ தடத்திடை படிந்துவல மாகிப்
பூசனை புரிந்துவினை போயமல னானான்.

(இ-ள்.) மலைவடிவமாகிய சுவாமியைத் தரிசித்து அன்போடு பணிந்து ஒளியமைந்த அத்தலத்திற்குப்போய்ச் சந்தோஷமடைந்து இந்திர தீர்த்தத்தில் முழுகிக் கிரிப்பிரதக்ஷணம்வந்து பூசைசெய்து கொண்டுவரத் தம்முடைய வினைநீங்கி விஷ்ணுமூர்த்தி பரிசுத்தரானார். எ-று. (௩௦)

மேவியரு ணைப்பதியின் மிக்கபுகழ் மாயன்
பாவமகல் வித்திடு பலத்தினை யுரைத்துத்
* தாவியுமை பாகமுறை சோணகிரி நாத
னாவியின் மகிழ்ச்சியையு நான்முக னுரைப்பான்.

(இ-ள்.) மிகுந்த புகழையுடைய விட்டுணு அருணாசலத்திற்குப் போய்த் தம்முடைய பாவத்தைநீக்கி அவர் அடைந்தபலனைப் பிரமதேவர் சனகரிஷிக்குச்சொல்லிப் பார்வதி ஒருபுறத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசர் புழுகுபூனையினாலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத்தொடங்கினார். எ-று. (௩௧)

## பன்னிரண்டாவது
## பாவந்தீர்த்த சருக்கம்.

ஆக திருவிருத்தம் ௬௬௦.

---

* தாவிமயல் பாகமுறை என்றும்பாடம்.



16. ஓர்காலத்தில் புளகனென்னும் அசுரன் புழுகுபூனை வடிவங்கொண் லோகத்தை யழித்து திருமலையில் புழுகைச்சிதறி ஜீவிக்குங்காலத்தில், தேவர்கள் தோத்திரத்திற்கு இரங்கிய பரமசிவன் புளகனுக்கனுக்கிரகஞ்செய்த மகாத்மியம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பதின்மூன்றுவது

# புளகாதிபன் சருக்கம்.

நினைத்தபடி வெவ்வேறுன உருவங்களை எடுக்கத்தக்கதாக வல்லமையுள்ள புளகாதிபன் என்னும் ஒரு அசுரன் ஒருநாள் புழுகுபூனை உருவத்தையடைந்து அருணகிரியின்மேல் உலாவிக்கொண்டு புழுகைச் சிதறியபடியால் சுவாமியினாலே அதிகபலத்தைப்பெற்றுத் தேவர்முதலானவர்களுக்கும் மிகுந்த துஷ்கிர்த்தியஞ்செய்ய ஆரம்பித்தபோது அவர்கள் சுவாமியினிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள். பின்பு சுவாமி மிகுந்தகிருபையோடும் அந்த அசுரனையழைத்து உன் பிராணனை விட்டுவிடென்று சொல்லியபோது, அவன் சுவாமியைப் பார்த்து ஐயனே! புழுகுபூனைகளினது புழுகை உம்முடைய திருமேனியில் ஏற்றுக்கொண்டு அதனுல் புழுகணி யிறைவர்என்கிற நாமத்தை நீர் தரித்துக்கொள்ளும்படியான கிருபை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவன்உயிரைவிட்டான். உடனே அவன் நற்கதி சேரும்படி சுவாமி அனுக்கிரகஞ் செய்தபடியால் முனிவர்க

ளும் தேவர்களும் மனிதர்களும் சுவாமியினது சிரசில் புழுகுகாப்பைச் சாத்தலானார்கள்.

இந்தப்புண்ணிய சரித்திரத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் அருணாசலேசுரருடைய கிருபாகடாக்ஷத்தினால் இகபரசவுக்கியங்களை யடைவார்கள்.

---

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

உருவுபல வேறுபுனை புளகனெனு மோரசுர
னொருபொழுது நாவி வடிவா
யருணகிரி மீதுலவி யரியபுழு கேசிதறி
யதிகபல மா யவனியோர்
வெருவவிமை யோர்முனிவ ரொருவரொழி யாதழிய
வினைபுரிகை யாலவ ரெலாங்
கருணைமலை போலிமய மலையமலை யாகருறை
கயிலைமலை மேவி மொழிவார்.

(இ-ள்.) நினைத்தபடி வெவ்வேறே உருவங்களை யெடுத்துக்கொள்ள வல்லமையுள்ள புளகனென்னும் ஓரசுரன் ஒருநாள் புழுகுபூனை உருவமடைந்து வெவ்விய நிறத்தையுடைய அம்மலையின்மேல் உலாவிக்கொண்டு புழுகைச் சிதறியபடியால், சுவாமியினால் அதிகபலம் பெற்றுப் பூமியிலுள்ளவர்கள் பயப்படவும், தேவர்கள், முனிவர்களெல்லாரும் துன்பப்படவும், துற்கிருத்தியம் செய்வதனாலே அவர்களெல்லாம் இமயபருவதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியை ஒருபாகத்தில் வைத்தருளிய கருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற கைலாய கிரிக்குப்போய்ச் சொல்வார்கள். எ-று. ()

புளகனெனு மோரசுரன் மிருகவடி வாகிவதை
புரியவுல கேழு முறைபோய்
வினைதுயர மாயினர்க ளெனவுரைசெய் தாரவர்கள்
விமலனவ ரோடு புகல்வா



னளவின்மண மானபுழு கருணகிரி மீதுதவி
யதிகபல மாய் மருவினு
னெளிதிலழி யானவனு மினியகதி யேறவுமை
யிடரலையி லேற விடுவோம்.

(இ-ள்.) புளகனென்னும் ஓர் அசுரன் புழுகுபூனை வடிவங்கொண்டு எழுலகங்களிலும் முறையே புகுந்து சீவராசிகளையும் வதைசெய்ய, அதனால் எல்லாரும் துன்பமடைந்தார்களென்று வந்தவர்கள் சொல்லிக்கொள்ளப் பரமசிவன் அவர்களோடு திருவாய்மலர்ந்தருளுவார்; மணம்வீசும் அளவில்லாத புழுகை நமதுருவமாகிய அருணாசலத்தில் சிதறியதனால் அதிகபலம் அடைந்திருக்கிறான்; அப்படிப்பட்டவன் எளிதில் அழியமாட்டான்; ஆனபடியினாலே அவனை மோட்சத்தில் அடைவித்து உங்களைத் துக்கசமுத்திரத்தினின்றும் கரையேற்றுவோம். எ-று. (௨)

மேவுமென வோதிபரு ளோடுபுள காதிபனை
வேதமுதல் கூவிய வுனை
நாவிவடி வாகியவு னாவிவிடு வாயெனவு
நாவிவடி வான்மொ ழிகுவான்
பாவையொரு பாக கருணாலய புராதன
பராபர விலோச னகுளா
ஏவலெளி யேன்மொழியு மாறுதவெ னாவிறைவ
னீரடியின் மீது தொழுதே.

(இ-ள்.) நீங்கள் உங்களிடத்திற்குப்போய்ச் சேருங்களென்று விடைகொடுத்தருளி மிக்கக் கிருபையோடு புளகனென்னும் அவ்வசுரனை, வேதமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனே? புழுகுபூனை வடிவங்கொண்ட உன்பிராணனை விடென்றுசொல்லிய அளவில், அவ்வசுரன் சொல்லுவான், பார்வதியை யொருபாகத்திற்

கொண்டருளியவரே! கிருபைக்கு இடமாயிருக்கின்றவரே! பழமையானவரே! பராபரமாகியவரே! நெற்றிக்கண்ணையுடையவரே! உமக்கு ஏவல்செய்தற்குரிய எளியேன் கேட்டுக்கொள்ளுகிற வரங்கொடுத்தருளுமென்று சுவாமி இரண்டு திருவடிகளுக்கும் வந்தனஞ்செய்து சொல்லுவான். எ-று. (௩)

எனாதுகினை யாமிருக முனாதுதிரு மேனிபுக
விளியபுழு காலு மொருபேர்
புனைகவென வேபரவி யுயிர்விடலு நாவிகதி
புகுதவிறை யோனரு ளினான்
மனமுருகி யேமுனிவ ரிமையவர்கண் மானிடர்கண்
மதிமுடியின் மே லணியவே
அனவாத மான்மதமு மிமசலமு மாலயம
தருவியென வே பெருகுமே.

(இ-ள்.) நாவெடுத்த உருவமாகிய புழுகுபூனையின் மாபினால் உண்டாகின்ற புழுகு உம்முடைய திருமேனி ஏற்றுக்கொள்ளவும்; அதனால் புழுகணியிலைறவனென்று ஒருநாமத்தை நீர் தரித்துக்கொள்ளவும், அருள்செய்யவேண்டுமென்று வணங்கி நாவி யுயிர்விட்டவுடனே, அவ்வசுரன் கதிசேரும்படி சுவாமி அனுக்கிரகஞ்செய்தார்; அப்படி அவனை இரட்சித்ததுகண்டு முனிவர்களும், தேவர்களும் மனிதர்களும் மனவுருத்தமடைந்து சந்திரனைத்தரித்த சுவாமி சிரத்தில் புழுகுகாப்புச்சாத்த, எப்போதும் அப்புழுகு கரைந்து பனிரோடு சுவாமிஆலயம்அருவியையுடையதாகப் பெருகியோடும். எ-று

புழுகுபனி நீர்களப மனுவளவ தேனுமிறை
புனையும்வகை யாலு தவினோர்
விழிகுளிர நாடியர னிணையடிக ளேபரவி
வினவினர்கள் வீடு பெறுவா



ருமைமருவு பாணியினர் சரிதமிது வாகுமென
வுவகையுட னேயுரை செய்தான்
மொழியுமல ராலயனை முனிவருட னேசனக
முனிபுகழ்வி னோடு தொழுதான்.

(இ-ள்.) புழுகும் பனிநீரும், கூட்டுவர்க்கச் சந்தனமுமாகிய இவைகளில் அணுவளவேனும் சுவாமி ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்களும், கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமி திருவடிகளை வணங்கி அவர்சரித்திரத்தைக் கேட்டவர்களும் மோட்சமடைவார்கள்; மானைக்கரத்தில்வைத்தருளிய பரமசிவனுடைய திவ்விய சரித்திரமிதுவாமென்று சந்தோஷமாய் அப்பிரமதேவர் சொல்ல அப்படிசொல்லிய பிரமதேவனை சனகரிஷி முனிவர்களோடு தோத்திரஞ்செய்து வணங்கினார். எ-று. (௫)

கலி விருத்தம்.

அஞ்செழுத்தும் வாழிவாழி யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம்வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம்வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறும்வாழி சைவம்வாழி வாழியே.

(இ-ள்.) பாவங்களைப் போக்கக் காரணமான பஞ்சாக்ஷரம் வாழ்க வாழ்க, அருணாசலத்தலம் வாழ்க, அருணாசலேசருடைய தாமரை மலர்போன்ற திருவடிகள் வாழ்க, அச்சுவாமி கிருபை வாழ்க, அக்கருணைபோன்ற அழகாகிய மேகவருஷம் வாழ்க, பூலோகம் வாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயம் வாழ்க வாழ்க., எ-று. (௬)

ஞானம்வாழி நன்மைவாழி நாடுராச நீதிசீர்
தானம்வாழி தருமம்வாழி சாதவேத மாகமங்
கானம்வாழி கல்விவாழி கற்றறிந்த கேள்வியன்
பானபேர்கள் வாழியீச னடியர்வாழி வாழியே.

(இ-ள்.) ஞானம்வாழ்க, நன்மைவாழ்க, நாடும் இராஜனும், அவனுக்குரிய நீதியும், கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமம் வாழ்க,

உண்மையாகிய வேதமும் ஆகமங்களும் வாழ்க, சங்கீதம் வாழ்க, மற்றவித்தைகளும் வாழ்க, அவைகளைக் கற்றறிந்தும் கேள்விப்பட்டும் யாவரிடத்தும் அன்பு உண்டானவர்கள் வாழ்க, பரமசிவன் அடியார்கள் வாழ்க வாழ்க. எ-று. (௭)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இக்கதை படித்தோர் கேட்டோ
ரெழுதினோ ரெழுதி வைத்தோர்
மைக்கடல் சூழ்ந்த விந்த
வையக முழுதுங் காத்துத்
தக்கசந் தான மேபாக
சவுக்கியந் தழைய வாழ்ந்து
இக்கரு ணேச ரன்பாற்
சிவபதம் பெறுவர் தாமே.

(இ-ள்.) இவ்வருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும், கேட்டவர்களும், எழுதினவர்களும், எழுதிவைத்துக் கொண்டவர்களும், கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும் காத்துத் தகுந்த புத்திர சம்பத்தும் போகசௌக்கியமும் தழையும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசர் கிருபையினால் சிவபதம் அடைவார்கள், எ-று. (௮)

பதின்மூன்றாவது
புளகாதிபன்சருக்கம் முற்றிற்று.

# அருணாசலபுராணம் மூலமும்-உரையும்
முற்றிற்று.

பாயிர முட்பட சருக்கம் பதினான்குக்கும்
௮௨ திருவிருத்தம் - ௬௯௬.
திருச்சிற்றம்பலம்.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலரவர்கள்
இயற்றிய

# திருவருணையந்தாதி.

காப்பு.

செந்தாதிமஞ்செறிசோணாசலத்தரைச்செந்தமிழி
னந்தாதியமலைச்சேற்றூர்க்குக்கோசலநாடுவிட்டுத்
தந்தாதியால்வனம்புக்காரும்வேதச்சதுமுகரு
மந்தாதிகண்டிலர்யானேவந்தாதியறைகுவனே. (௧)

திறவாகுவான்செம்மையொப்பான்பொருதிருதாஞ்சு
மறவாகுவான்மகவான்பணிவான்பணிவைத்திருந்த
திறவாகுவான்பொற்கவான்குறியாதின்றெண்கிந்தையுள்ளே
யுறவாகுவானம்மருணையந்தாதியுரைப்பதற்கே. (௨)

நூல்.

பூமன்றலைமை யளிசூழருணையிற் புங்கவனூர்
மாமன்றலைமை யடுந்தலையாக வரங்கொடுத்தார்
காமன்றலைமை யறவழலாக்கிய கண்ணர்விண்ணோர்
தாமன்றலைமையக் கந்தீரகஞ்சந் தரித்தனரே. (௧)

நஞ்சமையக் கச்சணிந்த வண்ணாமலைநம்பனெழுத்
தஞ்சமையக்கற் றடிபணியாதவ ரந்தியக
நஞ்சமையக்கத் துளேயிகத்தத்தித் தலைவெடித்து
கெஞ்சமையற்கத் துடன்போய்விழுவர் செறிக்கயலே. (௨)

ஆயற்கண்ணிறைக்குஞ் செழுமாவனக்க ளரும்பவிழ்த்தப்
புயற்கண்ணிறைக்கும் பொழிலருணேசர் புனலிறைக்குங்
கயற்கண்ணிறைக்குமப் பால்வனோ சோறுங் கருத்தருகு
மயற்கண்ணிறைக்கு மகாலயமன்ன வல்லியர்க்கே. (௩)

காவலர்கடுகுதல்.

வல்லியமன்றுமுதல் போற்றமாசனம் வாழ்த்தமறை
சொல்லியமன்று ணடமாடுமற்புதன் சோணைவெற்பிற்
கொல்லியமன்றுடியோக நகர்க்காவலர் கொட்டுபறை
பல்லியமன்று பகைத்துடியாகுநம் பார்த்திபர்க்கே. (௪)

பாரக்கழுநூர்த்தி வஞ்சியாடல் பயிலருணை
யாரக்கழுநூர்த்தி யாரணிவார்பத வம்புயமும்
வீரக்கழலுங் கண்டேன்குஞ்சிதாளும் வெறுத்துத்தந்
சோரக்கழலும் பொழுதுமுண்டோமன் றீதுகவே. (௫)

ஈதகங்காணி யளவுமில்லாதென் றிருக்குறத்தோன்
போதகங்காணி கொண்டோனெழு பீசன்பொருத்தருணைச்
சாதகங்காணிறை வண்டினங்காளுயிர் தான்வருந்தும்
பாதகங்காணிலன் றேபிரிந்தார்க்குண்டு பற்றுதலே. (௬)

பற்றவனக்கரும் பாரிடமோகின் படையிமவான்
பெற்றவனக்கரும் பாரிடத்தாய்மறை பேசருணைக்
கொற்றவனக்கரும் பாரிடாலையுஞ் சூட்டியழு
குற்றவனக்கரும் பாரிடத்தேரொன ஓர்ந்தவனே. (௭)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்.

ஊருவரம்பையன் ஞர்பகற்போதி லுறைவிடமைத்
தாருவரம்பையர் சூழும்பொன்னூட்டிடுங் தக்கதுகாண்
காருவரம்பையிற் காரிணையாகிய கண்டார்வில்லா
மேருவரம்பை யிடத்தாருணையில் வெற்பினனே. (௮)



வாயில் மறுக்கக்கேட்ட பாணன் கூறல்.

வெற்புடையானின்ற வேலோனைத் தந்தவன்வேழவுரிப்
பொற்புடையானியல் சோணாசலத்திற் புரவலனே
யிற்புடையாமெழுத் தென்மடமான்கலி லெதிரெறிந்தாள்
கற்புடையாளென்ற சொல்லேகொடுத்தது கைபலமே. (௯)

பாகனோடு கழறல்.

பலவாகனங்களுஞ் சேவிக்குமால்விடைப் பாகனுமை
குலவாகனம்ப னருணையிலேமுத்தின் கோவையெலா
நிலவாகனங்கடுந் தேர்நாடிநிற்பவர் நெஞ்சுருக
வலவாகனமுந்தி ஞனிற்குமோகையில் வண்டினமே. (௧௦)

வண்டுகளிக்கு மரிப்புன்னைதோறு மதுவுண்டென்றுங்
கண்டுகளிக்கு மலர்ச்சோலைத்தேனைக் கயலினங்க
ளுண்டுகளிக்கு மருணாசலத்தி லுவைந்துறைவார்
வெண்டுகளிக்கு மதனாகப்பூசிய மெய்யினரே. (௧௧)

இடையூறு கிளத்தல்.

மெச்சம்பரவை யிரும்பொடியாக விழித்தவன்றா
டச்சம்பரவை யுறமேவுமத்த னருணையன்னீர்
மச்சம்பரவை யிருங்காவியென்று மகிழ்ந்திருந்தேன்
நச்சம்பரவை யிலாறுற்புதைய நயனத்தையே. (௧௨)

கையுறை புகழ்தல்.

நதியமலைக்குஞ் சடைமுடியாரு ணாசலனார்
பதியமலைக்கு முயிருக்குமான பரமர்வெற்பி
னிதியமலைக்கு ளமுதமொப்பீர்தென்ற லின்றலவும்
பொதியமலைக்குங் கிடையாதுகாணுமிப் பூந்தழையே. (௧௩)

## கேடுநீ வினுதல்.

தழைக்குஞ்சரவணச் செவ்வேளோத் தந்தவர் சங்கரிகை
குழைக்குஞ்சரப ணருணையிலேயிரு கோலவிழி
யுழைக்குஞ்சரத்துக்கு மொக்குடையீரொழு குந்துருகி
மழைக்குஞ்சரமிங்கு வந்ததுண்டோமும் மதஞ்சொரிந்தே. (௧௪)

## நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்.

சொரியுங்கடமையு வாவுரிபோர்த்தவன் சோணைவெற்பி
லரியுங்கடமை புமைவாயமுலையு மந்திபகற்
றிரியுங்கடமையுங் கண்ணுமொருவன் பின்சென்றதென்னும்
பரியுங்கடமையு மெம்மையுநீத்தின்று பாவையரே. (௧௫)

பாவலருந்த வருங்காணத்துறு செல்பாதர்கனி
வாவலருந்த வருங்காவருணையின் மத்தரென்னார்
ஏவலருந்த வருங்காமன்கொண்டெய்ய வேந்திழையார்
நாவலருந்த வருங்காதல்பூண்டிவ ளின்றதே. (௧௬)

சைவளையாழிசைச் சொல்லிபங்காருணைசலனார்
மைவளையாழியி னந்தகந்தார்நெடு மாலவர்க்கே
கைவளையாழி யளித்தாரெனக்கண்டு கைதொழுதேன்
பெய்வளையாழிக ளெல்லாமிழந்தனள் பேதையரே. (௧௭)

பேய்த்தேரைநீரென்று நல்வீர்கதுழன் பிடித்தபணி
வாய்த்தேரைநீர்மைகண்டிரிந்தவாழ்க்கையும் மாயமெல்லாஞ்
சாய்த்தேரைநீர்பெறு பேறுசொல்கேன்கற்ப தாருகிக
ளாய்த்தேரைநீள்கொடி குழுருணேச ரடிதொழுமே. (௧௮)

தொழுவாருமாணிடர் காளைரகேளையுந் தார்க்கும்வண்ணம்
முழுவாருங்கோயில் வலஞ்செயவாரு முதன்மடக்கே
யழுவாருமங்கவர் மங்கைகல்லாரு மொதுங்கிமுத்தை
யெழுவாருஞ்செந்நெல் வயலருணேசரை யேத்தரையே. (௧௯)



ஏற்றுக்கரைக்குளிர் சோணசலத்தாரை யேத்தலின்றிச்
சோற்றுக்கரைக்குடைக் காடைக்கென்றேமனந் துன்புறவீ
ராற்றுக்கடைக்குண் மரம்போலுடல்விழ வாருயிரைக்
கூற்றுக்கரைக்கும் பொழுதயக்கார்கை கொடுப்பவரே. (௨௰)

கொடுங்கயிலாயிழை யார்தனபாரத்திற் கூடியவர்
நடுங்கயிலாயகண்ணுற் றளர்வீரவர் நன்மையெலாம்
விடுங்கயிலாய வயன்போற்றருணை விமலரைவாழ்த்
திடுங்கயிலாய மலைமேலிருப்ப தெளிதுமக்கே. (௨௧)

உன்பாவனையு நினைவுமுண்டாகி தொழி[illegible]
வென்பாவனையும் படியரிதேயிரங் கா[illegible]
வன்பாவனையும் பிறப்புமில்லாயன்பு [illegible]ருக்
கன்பாவனையு மதிலருணசலத் தாதிபனே. (௨௨)

ஆதித்தனையனங் காரகன்போற்றிய வி[illegible]ல்கழைச்
சோதித்தனையனங் காவருணசலன் [illegible]ம்
வாதித்தனையனங் காவினிப்போதுன் ம[illegible]றியப்
போதித்தனையனங் கான்றிங்களாகப் புறப்[illegible] (௨௩)

புறங்காட்டினுலும் புயம்வீசருணையிற் புங்கவனார்
அறங்காட்டினு முனிவோரையாண்டவ ரம்பொன்வெற்பிற்
கறங்காட்டினு நிக்ரோவெனச்சுழல் காற்றெய்வமே
யுறங்காட்டினு னதோவிவளாசைக் கொருமருந்தே. (௨௪)

## துணிவு.

ஒருமானிடங்கையி லேயொருமான்றறித் தொன்னலரைப்
பொருமானிடப மிசைவருவான்முப் புறமெரித்த
பெருமானிடங்கொண்ட சோணசலத்தினிற் பேதையின்பர்
தருமானிடமங்கை யென்பதுகாட்டிய தாமரையே. (௨௫)

25/7/51

D-KGAN
NO 2
11971

### தருகோடிரங்கல்.

தாவிக்கவரு மலகாற்கயலின் றலைபிடித்துண்
ணாவிக்கவரு மினக்குருகேயொரு நாளடியார்
சேவிக்கவருங் கதிதந்தபாதர் திருவருணை
பாவிக்கவரும் பகையாகுமோவென் பகருமதே. (௨௬)

### பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல்.

கருங்குவளைக்குளிர் பூவனைமீதிற் களித்தமுகந்
தருங்குவளைக்குவந் தழருணேசர் தாடிக்கிளையா
மருங்குவளைக்குந் தனமயிலேபுன் மடலல்லவோ
நெருங்குவளைக்குழை யார்தந்தகாதலை நீக்குமதே. (௨௭)

நீங்காவிடைக்கொடி யாரருணைபுரி நித்தர்வெற்பி
லோங்காவிடைக்கொடி யார்தந்தபால் கொண்டிலாவரவே
பூங்காவிடைக்கொடி போலேயிருந்தப் பொற்குடத்தைத்
தாங்காவிடைக்கொடி யாவகையார்செய்யத் தக்கவரே. (௨௮)

### கல்வித்துப்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைவிக்குணர்த்தல்.

தக்கவிருக்குமணி கேள்வர்போற்றிய சங்கரனார்
மிக்கவிருக்கு மறையாருணையில் வெற்பரென்றே
டொக்கவிருக்குமலர்ச் சோலையிலெய்தி யொண்ணுதலா
யிக்கவிருக்கு மணமாமென்றார் கல்வியெய்துமென்றே. (௨௯)

எச்சிலந்திக்கும் பகலைக்குமேற்ற மெயினனுக்கு
மெச்சிலந்திக்கு மருளருணேசரை வில்லம்விளா
நொச்சிலந்திக்குஞ் சடையாரையேத்திலர் நண்ணிடையார்
பொய்ச்சிலந்திக்கு நிகர்முலைக்கே வைப்பர்புத்தியையே. (௩௦)



புந்தினடைக்கந் தவிர்த்தென்னையாண்ட போதன்சென்னி
யைந்தினடைக்கந் தடிந்தோனருணை யமலனிதழ்க்
கொந்தினடைக்கந் தருங்கொன்றைவேண்டியென் கோதைவனை
சிந்தினடைக்கந் தனிலேயிழந்தனள் சித்தமுமே. (௩௧)

சித்தமிழுர்குறந் தீமையுறார்பெருஞ் செல்வமுறார்
முத்தமிழுக்கு முதன்மையுமாகுவர் முண்டகப்பூங்
கொத்தமிழுக்கு வரக்கனியூறல் குளிர்நதியாய்
நத்தமிழுக்கும் வயலருணேசரை நந்தினரே. (௩௨)

### கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்போது கண்டிரங்கல்.

நந்திக்கொடிய மலராதியார்திசை நான்கினுஞ்செல்
வந்திக்கொடிய மலர்வீசருணையில் வாசமலர்
சிந்திக்கொடியமன்போல் வானுலாவருந் தென்றலையு
மந்திக்கொடிய மதியையுங்காண்கில ரன்பினரே. (௩௩)

பின்பரியங்க வடியானுஞ்செய்ய பிதாமகனுந்
தன்பரியங்க வடிதாங்கநிற்ப வன்சந்தனத்தாள்
முன்பரியங்க மடிசினுண்டானை முகனருணை
யின்பரியங்க வடிவேல்விழிச்சிக் கலர்பெரிதே. (௩௪)

பெரும்படைவாளை யடர்த்துழவாளைப் பெயர்த்துவயற்
கரும்படைவாளை புகுமருணைபுரிக் கண்ணுதலார்
அரும்படைவாளை யிலாம்விழியாளை யளகத்திலே [யே,
சுரும்படைவாளை யணையான்கொடான் கொன்றைச்சூழ்த்தொடை

### மெய்தொட்டுப் பயிறல்.

தொடுத்தவண்டான மறைபாடவாடிய தோன்றல்வய
லடுத்தவண்டா னமருவருணைபுரி யன்னமன்னூர்

நடுத்துவண்டானம் பரிதேர்மருங்கு விக்காரித்தனை
விடுத்துவண்டானமர் கான்மதனுரிக்குள் வீற்றிருமே. (௫௬)

இரும்புணரிக்கணஞ் சேற்றுண்டநாத னிசைச்சரும்பின்
பெரும்புணரிக்கணன் மெய்யழித்தோனெம் பிரானருணை
விரும்புணக்கண மேமனமேபினை மெய்யொழிந்தாற்
கரும்புணரிக்கண ஞானியின்டகூட்டங் கழித்திடுமே. (௫௭)

சழிப்பாலையேகம்பந் தில்லையின்மேவிய கண்ணுதலான்
செழிப்பாலையேதிகழ் தென்னருணேசன் சிலம்பிலிரு
விழிப்பாலையேவுள வண்டர்மின்னேநயிர் விற்கலந்து
மொழிப்பாலையேஞ்சிந்து வீர்முனிவோர்கொள மோகத்தையே. ()

மோகமருப்புக் கமலவிற்காமன் முடிக்குதவிக்
கோகமருப்புக் கமலமொப்பாமெழு கொங்கைநல்லார்
நாகமருப்புக் கமவர்பொற்றுளிற் றனித்தருளாய்
நாகமருப்புக் கமலமுன்சூழரு ணாசலனே. (௫௯)

அருணாசலம்பதி யாயுறைவா யரவாபரணா
கருணாசலநிதி யேமுதலீறுங் கலையுமில்லாத்
தருணாசலஞ்சல மும்மயிராவதத் தந்தமும்போன்
மருணாசலங்கொடு தாருக்காதருண் மாதருக்கே. (௬௦)

தலைவியைத் தலைவனோதிற்படல்.

மாதவிழாவுடை யாருணேசர் வரையில்வண்டு
கோதவிழாமற் சுதிரோனடைத்தசெங் கோகனகத்
தாதவிழாதிருக் கோயிலுக்கொரு தாழுமுண்டோ
போதவிழாநிற்கு மன்பாலென்பாரிருட் போந்தவரே. (௬௧)

போதாம்பரத்தை யகலாமற்காஞ்சி புரத்துறைவான்
மீதாம்பரத்தைய னன்முகன்றேடும் பிரானருணை



மாதாம்பரத்தையு ரத்தையொப்பா னெஞ்சவஞ்சகரே
யேதரம்பரத்தையர் கண்டாலென்பால் வந்ததேழமையே. (௬௨)

ஏழுமுழக்குஞ் சரத்தோலருணை யிறையெனுமால்
கேழுமுழக்குஞ் சரத்தாள்கொடாவுமை கேள்வனெனும்
வீழுமுழக்குஞ் சரமாரியெய்தனன் வில்லியென்னுஞ்
சூழுமுழக்குஞ் சலதியென்றேது மென்றாநகையே. (௬௩)

தூரியங்காமன் கடலாகத்தோன்றினன் சூரியனார்
தேரியங்காமன் முகிலியங்காமற் றிசைகளெல்லாம்
வேரியங்காமன் றிருவருணாபுரி வித்தகனே
நாரியங்காமன் பதைபுரப்பான்றொழு நாயகனே. (௬௪)

நாயகனாவிக் குலஞ்சூழருணையி னம்பனழற்
சாயகனாவிக் குரியனென்றேத்திலர் தண்டமிழாற்
றூயகனாவிக் குமாரனென்றற்புலச் சொல்வர்நெடி
தாயகனாவிக் குரம்பையில்வாழ்க்கையு மாவியுமே. (௬௫)

ஆவணங்காரண மாய்வெண்ணெய்மேவிய வந்தணனார்
பூவணங்காயம் பலஞ்சேர்பவர்வரும் பூமகண்மால்
பாவணங்காரணன் போற்றருணேசர் பவனிவந்த
மீவணங்காரணங் காரணங்காகி மருவினரே. (௬௬)

மருமகரந்த நுகாவிநாரி வரிக்கொடியே
யொருமகரத்தனு விக்கானவேளை யுருவழித்தார்
அருமகரந்தனர் போற்றருணேச ரடியவர்க்குத்
தருமகரந்தனை யோவும்பர்நாடென்ப தங்குதற்கே. (௬௭)

பாங்கி கையுறையேற்றல்.

தங்குறைவந்தடை யாவயில்போல்விழித் தையலுன்றன்
வெங்குறைவந்தனை யானுரைத்தேனினி வேட்டருள்வாய்

மங்குறைவந்த மதிலருணேசர் மணிச்சிலம்பர்
கொங்குறைவத் தனைசோலையின்மாந் தழைக்கொத்தினையே. (௪௮)

ஆற்றிடமுங்கோர் பதவரை வினவுதல்.

கொத்தடியானடி யேனென்றுகூறிக் குலிசத்தினன்
மத்தடியான யன்போற்றருணேசர் மணிவரைமேற்
றத்தடியானடை யன்னமொப்பான வென்றையனல்லீர்
முத்தடியானடப் பீர்வந்ததாகின் மொழிந்திடுமே. (௫௯)

கனவினவிவுரைத்தல்.

மொழித்தேனையோர்ந்து மவராகஞ்சேர்ந்து முயங்கையிலே
விழித்தேனையோமுன் விதிப்பயனேகதி விண்ணவரை
யொழித்தேனையோர்க்குந் தருவாருணையி லோடையிற்பூங்
கழித்தேனையோதி மணத்தாலிழைக்குங் கருங்குயிலே. (௬௰)

கறுத்தகண்டத்தையர் சோணசலத்தர்வெண் காட்டுநட்கை
யறுத்தகண்டத்தை மகவாயழைத்தவ ராற்றிலர்தீப்
பொறுத்தகண்டத்தை விழுங்கிநிலாவெழும் போதயிலை
வெறுத்தகண்டத்தை யனையசொல்வார்தம் விருப்பிசையே. (௬௧)

பாங்கி யிறைவனை நகுதல்.

விருப்புச்சிலையமர்க் தாருணசலர் மேருவெற்பின்
மருப்புச்சிலையெனும் வேழமெய்வாருக்கு வாங்குவில்லம்
புருப்புச்சிலையின் றணங்கேயென்னுங்கொ லுலகைவென்ற
கருப்புச்சிலைமதன் கூர்வாளிபார்க்கிற் கடிமலரே. (௬௨)

கடியரவத்தையு நீர்மானுந்திங்கட் கலையும்வைத்த
முடியரவத்தை யன்பார்க்கணுகாமன் முழக்கஞ்செய்யுந்
துடியரவைத்தையர் சோணசலத்தைத் தொழாதமன
மிடியரவத்தை யடைக்சேழ்நரகத்தும் வெம்புவரே. (௬௩)



வெப்புக்குழைக்கும் பனிநீரென்றங்கம் வெதும்புமதன
னப்புக்குழைக்கு மருணசலத்தரை யையவொனுங்
கொப்புக்குழைக்கு மப்பாலுங்கண்மாரி குதிக்கவிழுஞ்
செப்புக்குழைக்கு விகாரமுலைவிழித் தீங்கனியே. (௬௪)

நற்றாய் தலைவிசெல்சுரந் தணித்தல்.

தீகுதிக்கும்பால் குழந்தசெம்பாலையின் றீமையற்றுப்
பாகுதிக்கும்பைங் கரும்பாலையாகப் பழனமன்றி
யாகுதிக்கும்பர் மகிழருணைபுரி யத்தர்வெற்ப
ரேகுதிக்குத்தையல் சென்றுடிடமு மிருநிலத்தே. (௬௫)

சித்து.

நிலவிரதத்தரைச் சோணசலத்தரை நெஞ்சில்வைத்த
நலவிரதத்தரென் சித்தரியாமவ னீற்றுடன்
பலவிரதத்தரும் போனமுங்கூட்டிப் படையப்பனே
தலவிரதத்தரி தாரம்பொன்னுமெந்தக் காலமுமே. (௬௬)

காலைக்கரும்பு கொண்டாற்போதலர்ந்த மெய்க்காதலினு
லாலைக்கரும்பு நிகர்த்தயின்னுருக் கருள்புரியாய்
வேலைக்கரும்பு லரக்கரைவாளி விடுத்தமுழாய்
மாலைக்கரும்பு யநேடருணசல மன்னவனே. (௬௭)

மன்றமரத்தை யல்காணநின்றுடிய மன்னைபுன்னை
யின்றமரத்தை நிகழருணேச வெனைமெல்லியா
ளென்றமரத்தை யலர்பூட்டினன்மத னென்றிடையன்
கொன்றமரத்தை யொத்தாளிழந்தாள்கைக் குருகினமே. (௬௮)

குருவடிவேபெற் றுயர்கயிலாயக் குவட்டில்வட
தருவடிவேர்கொண் டிருப்பாருணை சயிலத்திலே
யிருவடிவேல்விழி போல்வீரென்சென்னிக் கிசையவுங்கள்
திருவடிவேய்த்திடு மின்வன்றுழ்த்தவன் சேகரமே. (௬௯)

சேகரமாக வலையாருடன்வைத்த செல்வகரு
ஞகரமாக வலையாற்றருணையி னம்பவிழிச்
சாகரமாக வலையாற்றுவக்கிருந் தையலர்க்குச்
சூகரமாக வலையாவருவென்று தோற்றவதே. (௯0)

சோற்றுருத்திக்கு நிகரானதுநித்தஞ் சோறுதுற்றுப்
போற்றுருத்திக்கு ளொழுகாரிற்போய்விடும் பூதலத்தீர்
மேற்றுருத்திக்கு மருந்துக்குமீசரை வேரிவயல்
நாற்றுருத்திக்கு நிகரருணேசரை நம்புமினே. (௯௧)

மின்றனந்தங்க நிறமேபுனைந்ததும் வில்லிகணை
யொன்றனந்தங் கணையானதும்பார்க் கிலனுற்பலத்தே
சென்றனந்தங்க மலர்வீழருணைச் சிவன்கனக
மன்றனந்தங்க மலர்க்கரிதாகிய வானவனே. (௯௨)

வானரகத்திய னேமுதலாமவர் வாழ்த்தும்வெள்ளை
யானரகத்தி விடர்தீர்க்குமத்த ரருணையெண்ணு
நீனரகத்தில் வழிகுழியாய்ச்சென் றிரப்பர்பின்னைத்
தீனரகத்திரை தானுகவீழ்வரச் சேதகத்தே. (௯௩)

சேதாலவயோதிமத் தாற்புரந்தோன்பங்கர் தென்னருணைப்
போதாவையோதிமந் தன்னையென்றேவது பூங்கணையாற்
கோதாவையோதி சருகாவையென்றெமைக் கூட்டில்வைத்த
வேதாவையோதினம் வீழ்வாரகத்தின் மெத்தவுமே. (௯௪)

## எயிற்றியொடு புலம்பல்.

மெத்தவெயிற்றிகழ் கானகத்தேமலர் மென்கொடியே
யொத்தவெயிற்றகண் டாயிலையோவும்ப ருளவாய்
வைத்தவெயிற்றிகழ்தென் னருணேசர்மணி வரைமேன்
முத்தவெயிற்றியு முத்தாரமார்பனு முன்வரவே. (௯௫)



வரும்பெண்ணையிலனஞ்சூழ்தேயாடற்குமால்வரையோன்
றரும்பெண்ணையிலமைத்தாருணேசர்க்கென்றையல்மையல்
தரும்பெண்ணையிலையிலெல்லாமெழுதிக்கடிதுவிட்ட
சுரும்பெண்ணையிலைவகைவகையாகியதுதினுக்கே. (௯௬)

## இறையோ னிறைவிதன்மை யியம்பல்.

தூதுவனைக்குவனக்கனிவாயெர்ப்புச்சூதமன்ன
னூதுவனைக்குநிகர்சமூத்தாந்தெய்வருர்முனிந்த
போர்துவனைக்குஞ்சிலையருணேசர்பொருப்பனையார்
காதுவனைக்குவமேயுமின்றேயென்றன்கண்மணிக்கே. (௯௭)

## நெறி விலக்குதல்.

கண்கைக்கவரிகரிமேற்றொடரக்கரிகளஞ்சி
யெண்ணைக்கவரிவனத்தேயிரவிற்கிளங்கமுரு
தண்ணைக்கவரியிமெருணேசர்சயிலத்தின்ப
முண்ணைக்கவரிருள்வாராதுரையென்றனுண்மெலிவே. (௯௮)

உண்ணமலையத்தருங்கோபமோகமுலோபமுற்றுய்
தண்ணமலையத்தமிழ்ப்பாடல்புல்லர்தமக்குரைப்பாய்
அண்ணமலையத்தனைப்புகழாயனுவத்தனையு
மெண்ணமலையத்தனைமனமேமகக்கென்கதியே. (௯௯)

## பாங்கி புலம்பல்.

கதிரங்கழலிடரீமத்திலாடிவெங்காலனங்கத்
துதிரங்கழலவுதைத்தருள்வானிசையோங்கருணை
புதிரங்கழலணையானனஞ்சமழிந்தவஞ்சி
யெதிரங்கழலிறைக்குஞ்செக்கர்வானத்திளம்பிறையே. (௱0)

பிறைக்கண்டருந்திசைகாணுதழுதுமென்பேதைநல்லா
ருறைக்கண்டருந்திரையோதமொப்பாகியதோதமென்ன

முறைக்கண்டருந்திமலரோன்புருதமுழங்கருணைக்
கறைக்கண்டரும்பிற்கொடுத்தாரிலைச்செழுங்கைச்சங்கமே. (௭௧)

சங்கமலங்களைச்செல்லாதடர்த்திடுந்தண்பழனச்
செங்கமலங்களையாருவொழுகவத்தேனலைக்கே
துங்கமலங்களைதென்னருணைபுரிச்சோதிதந்தான்
பங்கமலங்களைப்பண்ணுமன்ஞானப்பளிக்கறையே. (௭௨)

தலைமகன் செலவின்றுட் டுணர்ந்து விடுத்தல்.

பளிக்கறைதோறுஞ்சுதையோட்டச்சொல்லுமுற்பாடமெல்லாங்
கிளிக்கறையச்சொல்லுமந்தணரேகிளர்காளவிடத்
துளிக்கறைகண்டத்திருத்தாஞ்செம்மேனியர்சோணைவெற்பி
லளிக்கறைபோன்றசெவிலிக்கும்பாங்கிக்குமன்னைக்குமே. (௭௩)

அன்னைக்களிக்குமதுவுண்டவரெருக்குமன்னமன்றே
னென்னைக்களிக்குமதுவுமற்றேவரையிந்த்ரதருப்
பின்னைக்களிக்குமதுசூதனன்றொழும்பிஞ்ஞகனூர்
புன்னைக்களிக்குமுதல்சூழருணைப்பொருப்பவனே. (௭௪)

அவமானமன்றமராற்செய்தவேளையழுத்தவனந்
தவமானமன்றமராடலன்சோணசயிலமிம்பற்
குவமானமன்றமராவதிநேரென்றுரைமனமே
சிவமானமன்றமராலழியாதுநஞ்சிற்றுயிரே. (௭௫)

சிறுமையிராவணனுகமுன்னாட்செய்தசேவடியாய்
பெறுமையிராவணனுடருணைபுரிப்பிஞ்ஞகனே
யுறுமையிராவணனுகியகாலன்பட்டோலையிலே
மறுமையிராவணனுகமற்றாட்கொண்டுமாற்றுகவே. (௭௬)

பாங்கி தலைமக ளவயவத் தருமைசாற்றல்.

மாற்கண்டனையந்தகன்வருத்தாமல்வரங்கொடுத்த
நீற்கண்டனையன்றிருவருணைபுரிநேரிழையார்



பார்க்கண்டனையகலஞ்சேர்மொழியைப்பயின்றகொலை
வேற்கண்டனையனைத்தோறுமன்பவிதிக்கரிதே. (௭௭)

அரிபுரந்தாழ்வுறச்சிம்புளதானவமலரக்கி
திரிபுரந்தாவகைத்தாருணையிற்செம்மலிரு
பரிபுரந்தாழுற்றபொற்றொடுதவர்பாலகா
புரிபுரந்தார்பின்புரந்தாளும்புரந்தனரே. (௭௮)

புரந்தரவானவன்போற்றருணைபுரிப்புங்கவனை
யிரந்தரவானபணிபூணைவாய்பிறப்பேழிகிரந்
தரந்தரவானமன்றூதர்செல்லாவரந்தாபிறவா
வரந்தரவானம்பினேனெனக்கோர்கதிமற்றில்லையே. (௭௯)

பாங்கன் றலைவனை வியத்தல்.

இலங்காரவாரணிந்தேகாயத்துண்ணின்றிடையொடிக்கு
மலங்காரவாரணக்கோட்டின்முன்னேநின்றவன்பரெங்கு
மலங்காரவாரநிறையருணேசர்மணிவரைமேற்
கலங்காரவாரணனுட்டுமெட்டாயகரிகளுக்கே. (௮௦)

மெய்யினும் பொய்யினும் வழிநிலைபிழையாது
பல்வேறுகவர் பொருள் சொல்லிநாடலிற்
குனைவியந் துரைத்தல்.

கரும்புகையுந்துஞ்சிலையாமதனுடல்கட்டழலும்
பெரும்புகையுஞ்செறித்தாருணைபுரிப்பெண்ணமுதே
சுரும்புகையுந்தொடையுஞ்சந்த்ரரேகையைச்சூழவெயர்
வரும்புகையுந்தருமோகனையாவர்சென்முடினுமே. (௮௧)

ஆடரவக்குழையாரணிவாரிசையாளர்நின்று
பாடரவக்குழையாரருணேசர்கண்பார்த்தருளார்

கோடரவக்குழையாரளிகாண்மதன்கோத்தமலர்த்
தோடரவக்குழையாரணங்காருயிர்த்துன்பத்தையே. (௮௨)

துன்னியமாமுனிவாலுரித்தானைச்சுகனொடுபெ
மன்னியமாமுனிபோற்றருணேசன்வரங்கொடுத்தா
னன்னியமாமுனிகாத்தாதரோடிங்சனுகியவா
றென்னியமாமுனிலாதேயெமைக்கடந்தேறநில்லே. (௮௩)

ஏற்றுவளத்துவசத்தாரருணையிலேந்திழையீர்
தோற்றுவளத்துளமுதூட்டிநாண்மலர்சூட்டியன்பா
னேற்றுவளர்த்துவிடுத்தமின்னேவன்னிலத்தினிடை
நாற்றுவளத்துவளநடந்தாள்பதநோவரவே. (௮௪)

வரங்களங்கற்றவர்க்கொன்றுங்கொடாதொழிவாரவர்மா
யிரங்களங்கற்றவர்க்கீவாருணையிறைவரன்று
புரங்களங்கற்றவர்கொண்டெரித்தார்மயல்பூணுமட்டு
சரங்களங்கற்றவர்மேல்விடுவோன்வரத்தாமதமே. (௮௫)

தாமதியாதவரன்பர்முன்னேவரத்தங்குவிழி
தீமதியாதவராமருணேசர்தந்தேரின்முன்னே
போமதியாதவர்தார்கேட்பதென்னைபுலருநெஞ்சே
நீமதியாதவர்பாற்பலகாற்செல்லனீதியன்றே. (௮௬)

நீடத்துவாபரம்பொன்மலையானநிருத்தர்பிறப்
போடத்துவாவறுத்தாருணைபுரியோங்குமணி
மாடத்துவாமதிநேர்முகம்வேர்க்கவென்மார்பமெனுங்
கூடத்துவார்முலைப்பந்தாடுனைநின்றகோதையரே. (௮௭)

கோதாயனங்கனம்பான்மெலிவேனுயிர்கொள்ளைகொள்ள
வாதாயனங்களிற்றென்றலையாவர்வரவழைத்தார்
பேதாயனங்கடுவாமருணேசர்பிரிந்தவர்க்குத்
தீதாயனங்கழையோசையென்றுருடன்செப்புமதே. (௮௮)



## நன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

செப்புளிக்குஞ்சிறுதையாமுரம்பூடுமென்சேவடிகள்
கொப்புளிக்கும்பொழுதென்படுமோவுழைகொங்கையிட்ட
மைப்புளிக்குங்குமத்தோளருணேசன்மணிவரைமே
லப்புளிக்குஞ்சரமோயும்வெம்பரலையருநெறிக்கே. (௮௯)

செற்றவிடும்பசிராதபுன்மாக்கலைநீக்கட்டும்
வற்றவிடும்பரிமாசகுலாவெனுமானிடர்காள்
உற்றவிடும்பையறவருணேசனையோண்கரத்தைச்
சுற்றவிடும்பையரவாரைவாழ்த்துஞ்சுருதிகொண்டே. (௯௦)

சுரும்பாயிரங்கலைமான்குயிலாயிரந்தூதுவிட்டேன்
இரும்பாயிரங்கலைநெஞ்சமென்னேவினியாயினுந்தான்
திரும்பாயிரங்கலைகுழருணைசலிசெப்பியமால்
பெரும்பாயிரங்கலைசான்போலதோற்பெருகிடுமே. (௯௧)

பெருகாவினியமதுரகன்சிறப்பிறாக்குமொழித்
தொருகாவினியவளுசெய்யுமென்குழுமுதவவுமே
முருகாவினியடாதேசாறுகவு தின்முதல்வரின்பந்
தருகாவினியும்பரம்புகழ்வார்க்குத்தருகுதுமே. (௯௨)

[illegible]வினிகலைசோனநேசர்திருவாகளுங்
[illegible] லக்குலையாத்தாரணுமேமார்த்துநெஞ்சே
[illegible] விலங்கலைறிறநிகாணின்மொழிக்குடுதூ
[illegible]லைவில்லாத்தருணையுமலரோந்நே. (௯௩)

## அச்சத்தன்மைக்கச்சுற்றிரங்கல்.

[illegible]தன்மைத்தாடரவரவென்றரும்பவிழ்த்த
[illegible]நிறைந்தமல்லிபைநதிருசுதியின்
பொங்கார்ச்சுனைபட்டுத்தன்னருணேசர்பொருப்பின்மலர்
கொங்கார்த்தனமலிழ்தாரோன்பின்செல்லக்குறித்தனனே. (௯௪)

குறித்திட்ட மோதக் கரங்காட்டி யென்னைக் குலித்திரண்டாம்
பிறித்திட்ட வொன்றுதிண் டனனை பெரியனென் றிருத்தைத்
மறித்திட்ட கோணகிரி மாதர்சேர் வருஞ்சடைவைத்தென்
மறித்திட்ட வனன்றுகோ ரப்பெருவில வஞ்செய்தகே. (௯௫)

வலத்திறைஞ் செய்துபனிச் சேத்தம் பன்பர் வழுவுசெவ்வ
கலைத்திணைஞ் செய்தாப்பிடத் தினைமாற் றலுறை தாக்கத்
கலத்தினைஞ் செய்துறைக் காத்தை தவிழுமலி னருணர்
நிலத்திறைஞ் செய்துனைத் தாடோ றுக்கண் டருள்சிற் பரனே. (௯௬)

சிற்பரவத் தனையியணி சேவெணியன் றிவ்வபுயத்து
பொற்பாவத் தனைச்சாக்கிய வருட் பொருந்திவிட்ட
கற்பாவத் தனைமகிழ்க்கத் தனையருணை யிர்க
னிற்பாவத் தனைவிண்புமெய்ப் பூவார்க் கினியதே. (௯௭)

நிலமைத் தரைப்பதியோர் கணித்தருமடைத்
கலமைத் தரப்புய கொன்றைய வெள்ளெருக்குல் பணிபு
கலமைத் தராயகத் தன்கண்டோ டுமத்த மலரத்தணிந்
குலமைத் தாப்பண்டரு மறுவேயைத் தொற்றவனே. (௯௮)

கொற்றவ ராக்கரம் வாளவரித் திரன்கோ கனத்த
நற்றவ ராக்கர மெட்டுடையான் புலிநாகத் தரும்
பற்றவ ராக்காருணைப் பதியருள் ளான்
புற்றவ ராக்காவிற் றமபதத் தான்புகழ் வயே. (௯௯)

உதவக் காத்தரவங் கணைத்திலர றுகம்புன்
னிதவக் காத்தரகோரி யருணைநிலத் திணைசே
ஏதவக் காத்தமாக் குழலாட்டி யம்பலையபத்
புதவக் காத்தரவர்க் குயர்பானன வெண்டுமன்னனே. (௧௦௦)

திருவருணையந்தாதி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலர் அவர்களால்

அருளிச்செய்யப்பட்ட

# திருவருணைக் கலம்பகம்.

## காப்பு.

நேரிசைவெண்பா.

அன்னவயல் சூழருணை யண்ணா மலையார்மேன்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத் - துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெண்கோட்டின் மீதெழுதும்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சைவத்தின் மேற்சமயம் வேறிலை யதிற்சார் சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வமில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமுந் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

(மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.)

இது எட்டித்தரவு-க.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடோறு முணராதே
ஏனத்தின் வடிவாகி யன்னத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி வருவலென முதண்ட மிசைப்பறந்தும்

காணரிய வொருபொருளாய்க் கருதுவோர்க் கெளியதாய்
சோணகிரி யெனவிளங்க வடிவெளியாய் நின்றருள்வோய்.

(இவை ஈரடித்தாழிசை-௬.)

மலைமகளை யொருபாகத் திருத்தினையே மலைமருந்தே
மலையரையன் மகிழ்தரத்தான் மலையுருவ மெடுத்தனையே. (௧)

இத்தலத்தி லெந்தைக்கீழ் விழுந்தோர்பெண் தழுவினரைத்
தத்துவங்கள் திருமேனி தரித்தனையே வியப்பாமே. (௨)

திருக்காளத்தி ... யமைப்ப
... வழியாதே. (௩)

கருமுகிலைத் ... ...
திருமுடியிற் பிறைமதியைத் ... ... (௪)

தானவரைக் ... ...
வானவரை ... ... (௫)

அண்டருக்கு முனிவருக்கு மழலைக் ...
கண்டமட்டு ... ... (௬)

மூவாமை ... ...
சாவாமை ... ... (௭)

(இவை நாற்சீரோரடியிரண்டு கொண்ட அம்போதரங்கம்-௨.)

... ...
... ... (௧)
... ...
... ... (௨)

(இவை முச்சீரோரடி அம்போதரங்கம்-௪.)

... மலையை வளைத்தனை. (௧)
... மொழிய நகைத்தனை. (௨)
... விழுமி படைத்தனை. (௩)
... புடைத்தனை. (௪)



(இவை இருசீரோரடி அம்போதரங்கம்-அ.)

விதி சிரத்தினை (௧)
அகழ் கரத்தினை (௨)
விடை நடத்தினை (௩)
பொது நடத்தினை (௪)
நதி தரித்தனை (௫)
மதி பரித்தனை (௬)
நான்க ளாயினை (௭)
கோன்க ளாயினை (௮)

(இவை பெயர்த்தும் ஈரடித்தாழிசை-௩.)

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ. (௧)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே. (௨)

ஆராலு மளவிடுதற் கரியவுனை யொருகாற்று
நீராலு மலராலு நெஞ்சுருகப் பணிவாமே. (௩)

இது தனிச்சொல்.

எனவாங்கு.

(இது பந்தடிநேரிசை ஆசிரியச் சுரிதகம்.)

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறத்தலுங் கமலையிற் பிறத்தலும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே. (௧)

நேரிசை வெண்பா.

வேதநவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவமை
சோதியிய மானனிவர் சோமனிவர் - ஆதவனும்

மண்ணுங்கா லும்புனலும் வானுமழ லுமிவர்
என்னுங்கா லெல்லா மிவர். (௨)

கட்டளைக் கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச சிவபரனின்
அல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மாரனிருக்கவும் யோகம் விளைத்த வர்நாள்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (௩)

கலித்துறை.

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவியீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்காள்
ஆகம் வித்தார் மோக மவித்தா ரருணேசர்
சோக னகத்தா ளாக நினைத்தே குழைவீரே. (௪)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

குழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர்
குளிர்வெற் பூடே
மழையெடுத்த துளிநுழைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருகித்
தளரு மாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பி யாதே. (௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

யாதவர் குலத்துறெடு மாதவன் மருப்புடைய
வேனமிரு கத்துருவ மாய்
வேதமொழி பெற்றவய னேதிம மெனப்பறவை
வேடமு மெடுத்த நிலையோ
ஓதருணை வித்தகரை மூவரி லொருத்தரென
வோதியிடு மற்ப மதியீர்



ஈதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி னைந்த பரமே. (௬)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவை யாடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினும்
குரவ ராயினுங் கனலி னின்றதன்
கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ
அரவ மாடுசெஞ் சடில ரங்கணு
ரமுதர் தாளினைக் கடியர் தம்மொடு
கிரவி நீரணிக் கருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே. (௭)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ்முறைமுறையான்பொடு
மப்பர்கவுணியர்சொல்சுந்தரர்
முப்பொழுதுமெதிர்புகழ்ந்திடு முதுநலார்
அத்தருணையினெடுநிரை
தத்துதிருநதியின்மென்பெடை
யச்சமறவுடனணைந்துறை மடநாராய்
ஒத்தமனதொடுபுணர்ந்தவர்
சற்றுங்கல்வநிலையென்றவ
ருற்றதுணையெனவிருந்தவ ருளம்வேறாய்
எத்தனைகபடநினைந்தவர்
கைப்பொருள்கருதிநடந்தன
ரெப்படியிறைவரை நம்புவ தினநாமே. (௮)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமக்லு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைவனுடல் புகமொழிவரே

கனகமுக படகவா சாடநட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமுகலை யொருமுகலை நாவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
அனகாபி னயகாதல ரமலரெம தருணைகிரி
யடிகடம தடியவர்களே. (௯)

தலைவன் வினவுதல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
னருணைவ ளம்பதி யன்றோ
படியினை வெங்கரி யினையம தங்கொடு
பதறிந டத்திடு மின்றோ
ஒடியு மருங்கெனு வுணர்ந்திலிர் தீன்றினி
யொருவக னன்சொல வொன்றோ
கடியசு ரங்களி னினொருகு டன்பல
கலகவி தம்பயில் கண்றோ. (௰)

அம்மானை-மடக்குத்தாழிசை.

நாரா யணனறியா நாதரரு ணைசருக்கு
வாரார் சிலைக்கலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெப்ப தையமன்றோ வம்மானை
அன்னமதி யாரெடுப்ப தையமோ வம்மானை. (௰௧)

பாங்கி தலைவிக்குரைத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென் பார்கைம்
மலையென்பார் வழியே தென்பார்
வேனென்பா ரிலையென் பார்பா
னோக்குமாந் தழைகள் தென்றார்



ஊனென்பார் கிறைபுக் தாரா
குறைபுர்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர்
கருத்தென்றே கருதுங் காலே. (௰௨)

புயவகுப்பு-ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறவாயினைச்தன
களபமலி குங்குமத் தளறுகுடி கொண்டுதட்
டியபுழுக ணைந்தமெய்ப் பனிநீர்துளைந்தன
கனமதிம ழுங்கிடத் தினமிருள டைந்தமுத்
தொளிசருக வெண்கதைத் திருநீறணிந்தன
கனலிசைய ரிந்தகட் பரிதிசைமு னிந்தறக்
கனைமுடித டிந்துமைத் தலையேவழங்கின. (௰௩)

இரணியனு ரங்கிழித் தளவறும தங்கொழித்
தெழுநரம டங்கலைத் தடமார்பிடந்தன
இமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
கவடுபட வின்பமுற் றுதிகெழுமுழந்தன
இரவிகிர ணங்கொழித் திசையமு டங்கிலாத்
தெழுபவள வண்பொருப் பெனவேவளர்ந்தன
இதழியரி சிந்துமுற் பலமலிந்தசெ ருந்திகட்
குரவலரி சண்பகத் தொடையாணிவநர்தன. (௰௪)

தரியலர்பு ரங்கெடச் சுரர்நாப் பயங்கெடத்
தமனியநெ டுஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தறுகலைத ருஞ்செயற் கமர்பொருச லந்தரச்
சரதமென யக்குமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருத்
தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன. (௰௫)

அருணகிரி யடங்கவிற் பலமணிசெ ருக்கிச்
 சாலமிளிர் கங்கணப் பணியான்மலிந்தன
அனவரத மம்பலத் தினினடமி டத்தொழிற்
 கனியவி தங்கள்பெற் றழகோடிருந்தன
அருமறைதெ ரிந்தசொற் புலவியிறை செந்தமிழ்க்
 கரசினொடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
அரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
 தருணையதி ருங்கழற் பெருமான்புயங்களே. (௧௫)

தலைவனை வேண்டல்.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
 புண்டரீகக் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்தசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கண்
 மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ றுமல்
அயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீர்
 அருணகிரிப் பெரியீரே யமல ரேகல்
வயந்தவிழா வழகரே யிலோக்க முத்தி
 வரந்தருவா ரேமலைமேன் மருந்த னாரே. (௧௬)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலைமேன் மருந்த ருணேச ரன்று வலைவீசி நின்ற வலையே
அலைமே னிறைந்து வருமீ னருந்தி யருகே யிடங்கொள் குருகே
முலைமேன் முயங்கு தலைநாளி லன்பர் மொழிகுண் மறந்த பிழையோ
தலைமேல் வரைந்த படியோ விருந்து தமியேன் வருந்து தகவே. ()

தலைவியைப்புகழ்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தகைபுனைநறவவிழ்ந்துமதனைமுனிபவர் சடையிலணிபவதலையினூர்
ஆகையறியவொடுநிறையுமிறையவ ருணைவளநகரினையார்



நிகரிறைன டவமுதநிறைநுட லிலவுமுசபடம்விலகினுல்
ககனமமாருகாருமிசல்கொடு கலசமிவெரிவ்வுலகிலே. (௧௬)

இதுவுமது.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலககண் டகனைய் வருசலந் தரனை
 யுடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனை ருணையங் கிரிசூழ்
 குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
 மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
 மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (௧௭)

ஊடல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமே சுகமே விரும்பவந் தபுணர்
 சூழ்கின் றவுமைத் தினமித் தினையுட்
புகமே யவிடா னசடிந் திடுமெம்
 பொல்லா மையுமின் றபொறுத் திடுமின்
மகமே ருசெஞ் சிலையா னரனை
 மலையா ருணை புரிமால் வரைமேல்
அகமே செலுமா றுதனிந் திரன்விட்
 டகறுன் பழமன் பர்வரிற் சொலுமே. (௧௮)

இதுவுமது-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லா ரணத்திற் கரிவரியார்
 சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா வெறிக்த பகைக்குவழி
 காட்டா தொழிதல் கண்டாயே.

கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டிற்றும்
புல்லா டவனே யெமக்குறுதி
புகன்று ரெங்கே யகன்றுரே. (௧௯)

பிரிவுவிலக்கல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
சீருமருந்தமிழ் செப்பிடு சீர்மைய நிச்சிவ னேருவீர்
மேருவொ டுஞ்சிலை யத்தனுர் விறரு ணைபுரி வெற்பரே. (௨௦)

காலம்மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன் போர்க்காயம் பிறைக்கும் காலம்
வெங்கனலே போற்காயம் பிறைக்கும் காலம்
சற்றுயிரு காமென்னே சங்கணியாக் காலம்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதும்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளர் தென்றன்மரு கிடத்தியங்கும் காலம்
பேதையேன் சிந்தைமரு கிடத்தியங்கும் காலம். (௨௧)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலிற் றுலங்கு ககத்தாலுங்
கையிற் பொலிசூர் நகத்தாலும்
சேலைத் தாக்க னூங்கொண்டீர்
திசைமா முகனைக் கிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்
வில்வேள் புரத்தைப் பகைத்தெரித்தீர்



சூலப் படையேன் மழுப்படையேன்
அமர்ந்தி ருணை யமர்ந்தீரே. (௨௨)

மாலைமாற்றல் மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே
யன்பர்க ளன்பினி லாழ்வீரே
சமர்த்தொளிர் சூலமெ டுப்பீரே
தோளணி மாலையெ டுப்பீரேல்
இமத்தரு வெண்மதி காயாதே
விருகனை யம்புனல் பாயாதே
சமைந்தகு முற்கொடி வாடாதே
சக்குவு யிப்படி நீடாதே. (௨௩)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வானொடு திகாஜ லாவுமி யாவையு
நீருயி காலமாய் விடுசோன்
கோடாழி மால்பி தாமக னாருன கோடி வீழ்தலை
கோர்த்த பாரமி றந்தவ
சூடாத மாலை சூடிவர் தோளொடு தோளை வீசுவர்
சோணை சேர்சோ ணமா
ஆடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
ராரர் த வேரணை கூடுவரே. (௨௪)

புன்னைக்கண்டிரங்கல்-கலித்துறை.

கூத்தாமெருவேண்சிவனாமன்பர்பெயர்குளன்புகொண்டென்னையும்
சீத்தார்கொள்ளிமுலிருப்பிமையாளிவிடின்றாயிகடுங்காலமே
பார்த்தாணுமைப்பெனின் மரத்தாய்ச் சிலிர்த்தாய்பகர்ந்தென்றலால்
பூத்தாய்பொன்னிறமாகவென்றைமேய்னைபுன்னைமே. (௨௫)

இரங்கல் - மடக்கு.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாகமெ டுத்தவ ரம்பானார்
நாளும றைக்கவ ரம்பானார்
தோகையி டத்தவர் சேனாராய்
சோணகி ரிப்பதி வானாராய்
மாகமெ டுத்தவி ளங்காவே
மன்னவ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
கொண்கரை விட்டெயி ருந்தேனே. (௨௬)

ஊசல் - மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடு ரூசல்
இளமுலைப்பொற் சிலம்பாட வாடு ரூசல்
மருவுகலை மருங்கசைய வாடு ரூசல்
வரிவளைக்கை மருங்கசைய வாடு ரூசல்
அருமறைக ளளவிடற் கரிதா மைய
ரருணகிரிப் பரமர்புக ழடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடு ரூசல்
புயமதனன் கயலுலவ வாடு ரூசல். (௨௭)

பாங்கி சொல்லுதல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசனு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
ரொண்டர வங்கொணர்வார் தண்டலை கொய்திடுவார்
ஆசில்பு னற்குடைவா ரம்மனை பந்துகழங்
காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரே
ஈசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
ரருணைப்பதிசூழ் மேருவி னிற்கவினை



மீசுறி னைப்புனமே யாவரெ னத்தெளியேம்
வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரே. (௨௮)

மடக்கு கலிவிருத்தம்.

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாரும்
சோலையன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரும்
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரும்
மேவகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. (௨௯)

தலைவியைப் புகழ்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணவொளி தனிலுமொளி ருமலைம ருத்தாய
வமலர்தி ருக்கழலினர்
மருமலர் விரித்தகதி பெருக்கருணை யம்பதியின்
மருவிய மடந்தையிடையாம்
ஒருகொடியி லொன்றுமுழு வொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுமிறைதான்
இருசிலையி ரண்டுகனை யிருபனையி ரண்டுகுழை
யிருமுலையி ரண்டுமலையே. (௩௰)

எழுதரி தென்றல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தரொழு
மலையா கிலத்து வருவார்
அலையாச னத்தரொடு மயிர்தாச னத்தர்தொழு
மருணாச லத்தர் வனாமீர்
முலையானை கட்டியிடை வெளிதோற்ற றுத்திமதி
முகமாய் வைத்தகுலாங்

[illegible] இங்கேசெல்ப நப்பிவிசனி தொழுதேன [illegible]
பெருந்தெனி [illegible] மணமே [illegible] (௩௧)

இரங்கல் - [illegible] - கட்டளைக்கலித்துறை.

மேலாடை தோற்றனி [illegible] [illegible] மென் [illegible]
[illegible] [illegible] [illegible] கோல [illegible] [illegible]
[illegible] [illegible] நின்று [illegible] [illegible]
மாயன [illegible] [illegible] பெருமான் [illegible]. (௩௨)

நேரிசை வெண்பா.

[illegible] பொருள் [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
போற்றுவார் [illegible] [illegible] [illegible].
[illegible] [illegible] (௩௩)

இரங்கல் - [illegible].

[illegible] மலையுந் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] மலையுந் [illegible] [illegible]
[illegible] மலையுந் [illegible] [illegible] (௩௪)

[illegible]

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] வரையில்
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] மன் [illegible] [illegible]
[illegible] மன்றுநரமே



அதுநில மன்றுவிழி யதுசாப மன்றுநுத
லதுகோப மன்ற தரமே. (௩௫)

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணை வெற்பின ரய னிருக்கவு மரியி ளைக்கவு மாகவே
திருமி டற்றொரு கருமை வைத்தவர் திருநதிக் கய றேடியே
கருது கெட்டெ லசைவ றந்துயில் கபட சித்திரை நாரைகாள்
இருக ணித்திரை யிலையெ னச்சொல விறைவர் பக்கலி லேகுமே. ()

பாங்கிதலைவிக்குறைத்தல்-கட்டளைக்கலித்துறை.

ஏகார் புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பரென்றும்
போகாத ஆர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியும்
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிலிந்
தோகா யணங்கனை யாயவர்க் கேதுசொ லத்தக்கதே. (௩௭)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினு னுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்தவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லாம்
எத்துலவு புகழருணை யீச னாரே
யினிதளிக்கும் பதவிதனக் கென்செய் வீரே. (௩௮)

சித்து-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகேஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்

ஆரத்தைப் பொன்னாக வமைத்தோர் தம்பி
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ ரிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனு கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித் தோமே. (௩௯)

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணேச ரூர்க்கின்
பச்சிலைபொன் செய்திமைபோர் பரிசோய் தீர
ஓதுசடை மருந்தளித்த சித்த ரேம்யா
மொருபிடிசோ றல்லதுடை முண்டோ வப்பா
மாதவர்தந் திருவாலை யரிக வெல்லா
மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
ஏதமற ஈசமொழித் தாவார் செய்வோ
மிரும்பையும்பொன் னாகவுரைத் திசைவிப் போமே. (௪௦)

தலைவியைப் புகழ்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ருணையங் கிரியி
லிரத முர்த்திவிடு வலவனே
பதிய டைந்துமற கினில்வ சந்தனதி
படையெ முந்தது பகருவேன்
புதிய கொம்புமிலை விளைவி ரண்டருகு
பொழியும் வெம்பகழி போருறு
உதய தந்தமத களிறு டன்கதலி
யுபய தண்டுவரு கின்றதே. (௪௧)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வரைக்கனக சாப சோணகிரிப்புனித கால கால
மதிக்குநெடு மாயர் போலவே



நரைக்குளினி யாரியாவ ரவர்க்குமுனி லாமனிடு
தழற்சிகரி யாக வீதியோ
விரைக்கமல வோடை யாவர் புரத்தைமுனி பாணமாவர்
விரித்தகொடி யாவ ரீதலால்
இரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவர் மேவி
யிடத்திலுறை தேவி யாவரே. (௪௨)

கட்டளைக்கலித்துறை.

ஆனிட பக்கொடி சோணா சலனென்று மன்பர்மலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றும்
கானிட வேடன்முன் னூனிட வுண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே. (௪௩)

களி-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
சரணமலர் புகழ்களியேந் தக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ
விதிவசத்தால் விரமற்ற விதஞ்சொல் வேனே
பனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணே
பச்சையா விலைதாயின்றன் பயாயன் றேனி
யனையிருக்கப் பணிதாயின்றன் மதுவாந் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. (௪௪)

களி-நேரிசை வெண்பா.

ஆனூர் கொடியா ரருணை புரிக்களியேம்
வானாட ரேனு மதியற்றார் - மேனாளில்
சம்மாகஞ் சாவிலையே யாளிடித்துத் தின்றாலும்
சம்மாகஞ் சாவிலையே தான். (௪௫)

பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவர்

காமுகரை யாண்டுகொளார் சிவநூல் கேட்பர்
கருத்தினின்மா றெரிசனமே காட்டா நிற்பர்
ஆமையா வணிதொடையார் விடையார் வாழு
மருணகிரி வளநாட்டி லகங்க டோறும்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்
திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றாரே. (௪௬)

இதுவுமது-மடக்குக் கட்டளைக்கலிப்பா.

தில்லை மன்றுண டம்புரி பாதனார்
தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
மொய்க்க வார்க்குழ மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
இல்லை யாயினு மிவ்விடை யையமே
யேற்க வந்தது மிவ்விடை யையமே. (௪௭)

கார்கண்டு பாகனொடு சொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங் காட்டிய மறையார் விடையாள ருணைவெற்பில்
புயங் காட்டிய மணித்தேர் வலவாமுன்பு போனகொண்டல்
சயங் காட்டிக் கோபமுஞ் சாபமுங்காட்டித் தடித்திடித்துப்
பயங் காட்டிறு லஞ்சமே தனியேநின்ற பைங்கொடியே. (௪௮)

நேரிசை வெண்பா.

பைங்கட் புலிக்குப் பரிபவத்தைக் காட்டிநா
சிங்கத் தினையடர்த்துச் சீறியே - வெங்கைம்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்த்த தருணைக்கே
தழைக்குஞ் சாபமொன்று தான். (௪௯)

குறம்-பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒன்று மூன்று நாமு ரைக்க வந்து கேளு மரிவைமீ
ருதய மான சுவாகு நெல்லு மொற்றை பட்ட தாதலால்



கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினார்
கண்ட மட்டி லேக ருப்பர் கைக்கபால ரவரையும்
சென்று நாடி லருணைமீது காண லாகு நாம முந்
தேவ ராய ரவர லாது தெய்வம் வேறு கண்டிலேம்
நின்று வாடி மிவட னுசை யிடர் தவிர்ப்ப ராதலா
னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதி லெழுதுமே. (௫௦)

இரங்கல் - இதுவுமது.

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனோ
நீர ணிந்த வாவி ருக்க நெடிய தென்றன் மூடுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை நலியுமோ
விரவு கங்கு லுமது கண்கள் வெயிலின் முன்பு நிற்குமோ
கற்றை யான குழலி யெந்த வுதவி கொண்டு பகைவெலும்
கருணை கூர்தெ னருணை மேவு கவியு கத்து மெய்யரே
செற்ற லார்கள் புரமெ ரித்த புழுக ணிப்ர தாபரே
தேவ ராய ரேசு கந்த தினை சந்த ராயரே. (௫௧)

கார்காலம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனைப்போது தானே நினைத்தாலு மேலோர்
சிறப்பான பேறீகுவோர்
வனத்தாடு சோணு சலத்தூடு நீரா
மயிற்பேட காளோடைகாள்
வினைப்பாவி யானேன் விழிப்பாயு நீரான்
மிகுத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சரற்கால மேகாலமே. (௫௨)

இளவேனில் - நேரிசை அகவற்பா.

காலையு மாலையுங் கைம்மலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோன்

இமைக்குமு னுலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன்
பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
அழநுற நடிக்கத் திருநடம் புரிவோன்
வினைவலை யறுக்கு மெய்த்தவ வேடன்
மனவலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேரு மறுபத் தாரு யிரம்பொன்
மாருத் தியாக வசந்தவி நோதன்
அண்ணு மலைய னதிருங் கழலன்
கண்ணு ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
இருத்திய தருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவலைப் பல்லவக் கனலு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்துள்
இசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீ ரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்
இன்னமும் வந்திலர் கேள்வர்
புன்னையங் கருங்குழ லன்னமென் னடையே. (௧௩)

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரும்
உன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முகைத்திடுமொ ரேனற்ருரு மிகைத்திடுமொ ரேனற்ருரும்
என்னகத்தா முரியாருங் கொன்னகத்தா முரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே. (௧௪)



சம்பிரதம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவைபொ ருக்கெழவுங் ககனம்வ டுப்படவும்
பரிதிவ டக்கெழவு நிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
மெளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ
அரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமா
னருண கிரிக்கிணையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே. (௧௫)

கருணைச்சிறப்பு - நேரிசைவெண்பா.

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே—வள்ளல்
அருணு சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணு சலமாங் கடல். (௧௬)

பாண்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற்
கடைதொறு நீபாட
அங்கை யாலிரு செவிபுதைத் தேத்துவோ
மருச்சுனன் றிருநாமம்
எங்கை மார்செவி பொறுக்குநின் னிசையெனு
மிடிக்குரன் மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகொள் பாணனே
மயிலெனப் புகழ்வாயே. (௧௭)

தலைவியைப்புகழ்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புடைசெறிந் தனிபாடு மிதழியந் தொடைமார்பர்
புலிபதஞ் சலிநாடுவோர்

மடையிளங் கயருவு மருணையங் கிரிமீது
　　மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருகையிந் திரதாரு
　　நயனமிந் திரநீலமே
இடையுமிந் திரசால மதனுமிந் திரசாப
　　மிதழுமிந் திரகோபமே. (௧௮)

உருவெளி-கலிவிருத்தம்.

இந்திர கோபமா மிதழி பாகனார்
செந்தமி ழருணைநந் தேருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியும்
மந்திர மேருவும் வளைந்து கொண்டவே. (௧௯)

தலைவியை வியந்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொண்டலணி கண்டர்பிறை கங்கையணி செஞ்சடையர்
　　கொம்பரொரு பங்கி லுறைவார்
அண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
　　ருங்கமலர் தங்க ருணையீர்
கண்டளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
　　கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக
　　மஞ்சகுடி கொண்ட வடைவே. (௨0)

நேரிசை வெண்பா.

அத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோர்
இடத்திலே நாரி யிருக்கும்—தடக்கையிலே
வந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. (௨௧)

கார்காலம் - கலித்துறை.

போதற்கு மரிதான வருணாசலத் தீசர்பொன் மேருவாய்
ஏதப்படும் பாவிமனமே பிரிந்தா ரிதென்னோர் கொலோ



ஓதத்தினீரோதெனவுண்டுபுயன்மீளவுமிழ்தன்மைபோல்
காதற்குண்மடவார்மெய்பொன்பூசுமின்வீசுகார்காலமே. (௨௨)

தலைவியைவேண்டல்-கொச்சகக்கலிப்பா.

கார்வந்தா லன்னகலைக் கண்டனார் செங்கதிரோன்
தேர்வந்தாலும் பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டில்
ஆர்வந்தா லுந்தணியா தன்னமன் னீராலும்
நீர்வந்தாலாசை நெருப்பவியுங் காணுமே. (௨௩)

பனிக்காலம்-கலித்துறை.

நாணம்பரந்தோலினுடையாளருணேசர்கைலாசமேல்
தாணங்கணிகர்தோளருறைகின்றநகரூடுசொரியாதரோ
பூணங்கைவளைசிந்தமடவார்மனத்தேறுபுகைபோலவே
பாணங்களுதிர்கின்றதுகள்போலவுறைகால்பனிக்காலமே. (௨௪)

நேரிசை வெண்பா.

பண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலும்
எண்ணிறந்த வேத ரிறந்தாலும்—கண்ணற்
கமைத்தவெலா மாண்டாலு மண்ணா மலையார்க்
கிமைப் பளவுங் காலமிலை. (௨௫)

தலைவனை வேண்டல்.

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து நாடி
　　யிடுமிரு நெடுங்கண் மாதரார்
இலகரிய கொங்கை மீது பழகமுலி வந்து பாலின்
　　விழுவதென வந்து சேர்கிலீர்
மலகரி குறிஞ்சி தேசி வைரவி சுரும்பு பாடும்
　　வயலருணை மங்கை பாகரே
பலமலர் கதம்பதுளி மிருகமத சுகந்தம் வீசும்
　　பரிமள வசந்த ராசரே. (௨௬)

### மதங்க.

### ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வசிகரம் வயங்கு நீறு மபிநய புசங்க ராச
  வலயமு மணிந்த தோளினார்
அசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
  ரருணையின் வளங்கள் பாடியே
இசைபெற வரங்கி னாடு பவுரிகொண் மதங்கி யார்த
  மிலகிவளர் கொங்கை யானையே
இசைபெற விருந்த யானை பிறகிட முனிந்து போர்செய்
  திறலிப முனைந்த மானவே. (௬௭)

### இதுவுமது மடக்குக்கட்டளைக்கலிப்பா.

நதியைச் சூடதி ருங்கழ லாதனார்
  நம்ப னாரரு ணாபுரி வீதிமேல்
சதியிற் பாடிந டிக்கும தங்கியார்
  தந்த வாசைத ரிக்கும தங்கியார்
வதனத் தாற்சசி மண்டல மாறுமே
  வந்தி ருந்தவிம் மண்டல மாறுமே
கதியிற் கொண்டது மந்தக் கரணமே
  கண்ட பேர்க்கிலை யந்தக் கரணமே. (௬௮)

### குறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணமணி முலைக்கிரிமேற் செங்கை வைத்தா
  யாகையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமுலை கண்ணாரப் பார்த்தா யுன்றன்
  மகிழ்நனுங்கண் ணாரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத்
  தநயரையும் பெறுவையிவை தப்பு மாயின்
இருசிறைவண் டார்குழலாய் குறமும் பாடேன்
  சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டிலேனே. (௬௯)



### மறம்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
  சிற்றிரும்பாற் சுற்றிவாச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வரைந்து சுற்றி
  திருபமெனக் கொடுத்தெதிரே நிற்குந் தூதா
தாண்டவமா டும்பரனா ரருணை நாட்டிற்
  றருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற் போந்து
மாண்டவரே றியகோணல் வளைக ளுங்கள்
  வருங்கல்வழி வாயினடு மாங்க டாமே. (௭0)

### மடக்கு கலிவிருத்தம்.

மறைக்கவனப்பரியாரும்வரைக்கவனப்பரியாரும்
எறித்தவிரும்பிறையாருமெவரும்விரும்பிறையாரும்
பொறுத்தசினவிடையாரும்பொருந்துசினவிடையாரும்
அறத்தவளம்பதியாருமருணைவளம்பதியாரே. (௭௧)

### கலித்துறை.

ஆரணி தங்க னாரணி பங்க னருணேசன்
தாரணி யுஞ்சுங் காரண நஞ்சந் தரியானேல்
வாரண மெங்கே சாரண மெங்கே மலர்மேவும்
பூரண மெங்கே நாரண மெங்கே போவாரே. (௭௨)

### தழை-கட்டளைக்கலிப்பா.

போந்த போதக நல்லுரி யாடையார்
  போர்வை யாளர் புகழருணைக்குளே
ஈந்த சூத நறுந்தழை யையனே
  யெங்கண் மாதரெடுத்து மகிழ்ச்சியாய்
மோந்த போது துவண்டது மெய்யிலே
  மொய்த்தபோது புலர்ந்தது கண்ணினீர்
பாய்ந்த போது நனைந்தது மீளவும்
  பார்த்த போது பசந்து மலர்ந்ததே. (௭௩)

இரங்கல் மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலரித ழித்தொடையான் மதியணி வித்தகனார்
மலைமக ளற்புதனார் வயலரு ணைப்பதிசூழ்
குலவுமி டக்கழியே பலவுமி டக்கழியே
குறவையி னக்கயலே யுறவுமெ னக்கயலே
சலமிரு முற்பலமே தளர்வது முற்பலமே
சருவும னத்திடரே தழுவும னத்திடரே
இலைநெரி சற்பனையே யிவருரை சற்பனையே
யினியப ணித்திரையே யினியிலை நித்திரையே. (எ௪)

சுவடுகண்டிரங்கல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நித்த னம்பனரு ணாசலத்திருவை
நின்று தேடியுழ னெஞ்சமே
இத்த டஞ்சுரமடங்க வேரிவிதல
இல்லை வேறுமர மிதனிடை
அத்தி நின்றவிட மவ்வி டஞ்சிலைகொ
ளரசு நின்றவிட மவ்விடம்
எய்த்து ளஞ்சியிள வஞ்சி நின்றவிட
மிவ்விடஞ்சுவடு மேவுமே. (எ௫)

மடல்விலக்கு-கலிவிருத்தம்.

ஏறுடை யண்ணலா ரேழை பாகனார்
ஆறணி சென்னியா ரருணை வெற்பரே
கூறொரு பெண்ணையே கூட வேண்டுவோர்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. (எ௬)

தவம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாய்ந்தநல மருந்தருந்தி யரிய யோக
வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கினாலும்



காய்ந்தவிருப் பூசியிலே தவஞ்செய் தாலுங்
காயம்வருந் திடுவதல்லாற் கதிவே றுண்டோ
ஆய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி
யகமகிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
எய்ந்தருணா சலத்தைவலங் கொண்டா ரன்றே
யிமைக்குமுன்னே கைலைமலை யிடங்கொண்டாரே. (எ௭)

மாலை யிரத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கியதிங்களெழுந்தாலெங்கண்யின்வெங்கதிரென்பாள்
கலங்கினளாயினுமன்னன்கட்கமலங்குவியாவோ
துலங்கியவெங்கதிர்தானேசோணகிரிப்பெருமானே
அலங்கலையென்றுகொடுப்பாயன்றதுவெண்மதியாமே. (எ௮)

நேரிசை வெண்பா.

ஆற்றங்காற் கஞ்சத் தவர்தா மரைக்கண்ணர்
சாற்றுங்காற் கண்ணாரவர் தந்தையார் - நீற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடுவதிங் கெப்படியோ சேர்ந்து. (எ௯)

கட்டளைக்கலித்துறை.

சேணார்திருவுடைச்செல்வரைக்காணிற்சிறப்புச்செய்து
பேணாதவருமுண்டோபுவிமீதிற்பெருத்தெழுந்து
சோணாசலவடிவாய்வெளியாய்நின்றசோதிதனைக்
காணாதகண்ணனைச்சொல்வர்செந்தாமரைக்கண்ணனென்றே. ()

தவம் - நேரிசைவெண்பா.

என்றுமதிக் கண்ணா ரிறைவரரு ணாபுரியில்
நின்றுதவம் புரியாய் நெஞ்சமே - பொன்றிரளான்
மாதரையா ளாயிழைசூழ் மாதரையா னீதுவண்டு
மாதரையா ளுமையென் சொல்வாய். (அ௧)

### இடைச்சியார்.

#### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாடி னுமக்கிரண்டு பசுவே யுண்டு
சுமந்திடுபொற் கலசமுமத் துணையா மீதும்
அல்லாம லிடையின்மிக விளைத்துப் போனீ
ராயிருந்து மிடைமதியோ வகத்தை தானோ
புல்லாரென் பணிதொடையா ருணை நாட்டிற்
பொதுவர்குல மங்கையரே புவிமேற் கண்டோம்
எல்லாருந் தனித்தனியே யெடுத்தக் காது
மிரண்டுமுறை யாமலகன் றேகுவீரே. (அ௨)

#### இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

வீரனை நல்கி மகமுறு செய்த விடைக்கொடியார்
காரணி கண்ட ருணை சலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறு மிடையினை மானுக்கு முண்டசம்போல்
ஈரடி மெல்லினம் வல்லின மாகு மிருதனமே. (அ௩)

### தலைவி யிளமை யுணர்த்தல்.

#### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தடனாக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர்
சடில நாதன்
அடனாக நெடுஞ்சிலையா னசுரர்புர மெரித்தபிரா
னருணை நாட்டில்
இடனாக மனையவரே தனஞ்சிறிதுங் காணாத
சிறியார் தம்மைக்
கடனாக நீர்வினவிப் பிணைதேடி முறிதனையேன்
கைக்கொண் டீரே. (அ௪)

#### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கையடைந்த மழுமானுஞ் செழுமானு முழைமானுங்
கயலு மானும்



மையடைந்த விழிமானு முடனாக வருணேசர்
வருகு வாரே
மெய்யடைந்த நிறங்கருதி விழிகளும்பஞ் சடைந்துவரு
மிடற்றி னாடே
ஐயடைந்து படர்ந்துவர யமனடர்ந்து தொடர்ந்துவரு
மன்று தானே. (அ௫)

#### தலைவன்சொல்லல் - நேரிசைவெண்பா.

அண்ணா மலையா ருணையனை யீரும்மைக்
கண்ணாலஞ் செய்தான் கமலத்தோன்—என்னா
இணைக்கோலஞ் செய்தமுலை யேந்திழையீ ரென்னை
மணக்கோலஞ் செய்தான் மதன். (அ௬)

### கொற்றியார்.

#### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மழலைமொழி யிசையாலுங் கொடும்பார்வை யதனாலு
மயக்க மாகிச்
சுழலும்விட ரவமெலாய் படமெடுத்து முன்னாடத்
தோன்றி னீரே
அழலுருவ மணிகாத்த ருணகிரி வளநாட்டி
லளிவந் தாலும்
குழலொருசற் றுண்டாயி னெப்படியோ வாட்டிடுவீர்
கொற்றி யாரே. (அ௭)

#### இதுவுமது - கொச்சகக்கலிப்பா.

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிறுகு கொங்கை மலைசுமக்குங் கொற்றீரே
பேரிருள்போய் நாமப் பிறைநிலவு கண்டொளிக்கச்
சூரியகண் ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரே, (அ௮)

#### வஞ்சித்துறை.

பாணர் மொழிநிறை
சோணா சலாடி

பேறு தவனுறு
மாறு நரகமே. (௮௯)

## வஞ்சிவிருத்தம்.

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பரார். (௯௦)

## வேற்றொலி வெண்டுறை.

அருணையதிருங் கழலராணிசெஞ் சடையாள ரிவைபாகர்
அருணைநெடுங் கடலான்பெருமானூர் தாடொழுதார் கதியைநாடின்
மரணமிலா விமையவர்தா மானுலக மன்றே
பொருணிறையு நான்மறையோர் புகலுமத் தாட்பூவே. (௯௧)

## இரங்கல்-கலித்துறை.

பூவுண்ட விடையாள ரருணாசலத் திசர்பொன் மேருவாய்
பாவுண்ட புகழாளர் பிரிவே னெனச்சொன்ன பருவத்திலே
காவுண்டு குயிலுண்டு மயிலுண்டு கிளியுண்டு கனிதூவுதே
மாவுண்டு குருகுண்டு திருகுண்ட மனமுண்டு மறவாமலே. (௯௨)

## வெறிவிலக்கு - கலிவிருத்தம்.

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதநீர்
ஈங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கினல்
ஆங்கவ ணிருந்தவ ரருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே. (௯௩)

## தலைவியைப்புகழ்தல் - கட்டளைக்கலித்துறை.

அன்னக் கடல்விட நீங்காதகண்ட ரருணை வெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையு மொப்பாநுதற் பேதைநல்லாள்
வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரிதியுங்
கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே. (௯௪)



## வலைச்சியார்.

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேவியிட மகலாத வருணகிரி வளநாட்டிற்
றெருக்க டோறும்
மாவிரத முனிவரெலா மயல்கூரக் கயல்கூறும்
வலைச்சி யாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து வருவோரைக்
கண்டோங் கண்டோர்
ஆவியெலாம் பிடித்திழுக்கு முமைப்போ லொருவரைக்கண்
டறிந்தி லோமே. (௯௫)

## வலைச்சியார்-நேரிசைவெண்பா.

மேலா றணிசடையார் வீறருணை வீதியிலே
மாலாக வந்த வலைச்சியரே—காலா
லிருவரா லுங்காட்டும் யான்பிடிக்கக் காதல்
ஒருவராலுந் தீருமோ. (௯௬)

## செவிலி நற்றாயைத் தேற்றல்.

## எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருவ ராலு மணுகாத நாளிலே
வுயிரி னையொரு கேள்வ னாசையால்
மருவி னாளுமென தாகு காளையே
வழிக டோறுமினி நாடி மீளவே
கருணை நீதிமனை பேணு மாதுடன்
கடல்க ளேழுமலை யேழு மேழுமா
வருணர் சூழுமுல கேழு மேழுமா
வருணை நாதர்சர பால தாரமே. (௯௭)

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாரிலங்கு மறைமுடிவி னடித்தருளு மருணேசர்
தமது நாட்டில்

நாரியர்மேன் மனமகிழு மளியினங்கா ளொருவார்த்தை
நவிலக் கேளீர்
ஏரிருக்குங் கைதையெலாஞ் சேறிருக்க நீரிருக்கு
மிடங்க டோறும்
வேரிமலர்த் தேனிருக்க விவர்கூழை விரும்பிவந்தேன்
விழுகின் றீரே. (௯௮)

தலைவியவயவ வருமைசொல்லல்.
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானு ணருணகிரி
யிறைவர் நாட்டிற்
றாமரைமண் டபத்தன்னம் மடந்தையிட வெழுந்தென்றுந்
தலைவ ணூரே
மாமுயற்கொம் பினிலேறி விசும்பலரைப் பறித்துமுனம்
வடிவி லாதோன்
ஆமையிர்க் கயிறுகொடு தொடுத்தணிந்த பதுமையினு
மருமை யாமே. (௯௯)

தலைவிதையுறை யேற்றமை சோல்லல்,
கட்டளைக்கலிப்பா.

ஆர்வ லர்க்கழி யாவர நல்குவா
ரத்த ரூரரு ணைபுரி வெற்பரே
பார்வி யப்புற நீர்தரு மாமணி
பட்ட பாடு பகர்ந்திட லாகுமோ
கார்கு ழற்கு முடிமணி யாயிரு
கண்கண் மீதுறு கண்மணி யாய்முலை
சேர்த லுற்ற பொழுதிரு குன்றினுஞ்
சென்று லாவுந் தினமணி யானதே. (௧00)

திருவருணைக்கலம்பகம்
முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்
பொம்மையபாளையம்
சிவஞானபாலையதேசிகராதீனத்து
நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்த

# சோணசைலமாலை.

காப்பு.
நேரிசை வெண்பா.

சதுரநெறிச் சோண சைலற் றிதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைநிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

நூல்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அன்னனன்மா புகழ்மு வரும்புனை யரும்பா வன்றியென் கவியுநின்
றனக்காம், பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற் பாணிமா
றுரலியுமேற் றிலையோ, விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
வெவ்வொரு புடையுற வொருபாற், றண்ணிலா வெறிப்ப வாங்கெ
ழுந்த சோண சைலனே கைலை நாயகனே. (௧)

துவக்கற வறிந்து பிறக்குமா றுருந் துயர்ந்திடா தடைந்து காண
மன்று, முவப்புட னிலைத்து மரிக்கு மோர்பதியு மொக்குமோ கினை
த்திடின் னகரைப், பவக்கடல் கடந்து முத்தியுங் கரையிற் படர்வு

வர் திசைப்புற நோக்கித், தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௨)

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளே னவைதூரந் திடுமுன், வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி வந்தன னின்குறிப் பறியேன், றுங்குறை மதியே தாங்கியென் றுலக மறைகுறை யறநிறை மதியுந், தாங்கிய முடியோ டோங்கிய சோண சைலனே கைலை நாயகனே. (௩)

கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங் கர்மனக் கொடியனுக் கென்னீ, தனிமலை பிறவி தவிர்த்தனை யென்றாலிற் கரியவ ரிலையெனக் கிரங்காய், பனிமலை கதிர்வர் தறுகி... பிடிகையென வுதயத், தனிமலை யிருப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௪)

சுடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித் துயர்ந்துநின் றலமரு மனநின், னடமலில் சரண பங்கய நினைந்து ன்னைந்துரைந் துருகுநா ளுளதோ, மடலவிழ் மனைமாட் டெழின்னை வருகுமதியுமக் கார்த்திகை விளக்குத், தடமுடி யிலங்க வளர்ந்தெழுஞ் சோணசைலனே கைலை நாயகனே. (௫)

அருங்கவி வாத ஆரனே முதலோ ரன்பிலே மென்றதுவேண்டி, யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனையா ளியம்பிலே மெய்யெனக் கருளாய், கருங்கட முமிழு மீர்ங்கவுட் பனைக்கைக் கரியுரிகஞ் சுகங்கடுப்பத், தாங்கமுண் டெழுகார் முகில்படியில் சோணசைலனே கைலை நாயகனே. (௬)

புரத்துற மவுணக் குழாமும் வண்டிசைகூர் பூங்கணை மதனுமுன் பெறநின், சிரித்தவெண் ணகையு நுதல்விழி நோக்குஞ் சிறியனே னிருண்மலம் பெறுமோ, கருத்தினுங் கருதவரியதன் னியனென் கடனற வுலகெலாங் காண்பான், றரித்ததி தூல வடிவுறுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௭)



ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ் சமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை, தீர்த்திட வுளங்கொண் டலவனேன் றனைநின் றிருவடிக் கன்பனுக் கிலையே, கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து கண்டவர கத்திரு ளனைத்துஞ், சாய்ந்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮)

தொடையுடைத் திரடோ ணமன்புறத் தடலுர் தொலைக்குமுன் சுத்துட லுலைத்துத், தடையறத் திகழ்பே ரறிவுருவாகத் தமியனேற் கருணா ளுளதோ, புடையினிற் கரிக்கோ டிளம்பிறை புரையப் பொருகுசோ தியங்கொடி விரித்த, சடையெனப் படர்ந்து கிடந்தெழுந் சோண சைலனே கைலைநாயகனே. (௯)

கணபுன றளிப்ப வழற்படு மிழுதிற் கரைந்துரு நெஞ்சினின் றனையே, பெண்பயி லுருவ மொடுகினைந் தெனது பெண்மய லகற்றுநா ளுளதோ, வண்புனல் வேந்த ரேர்கலிக் குடந்து மணிமுகிற் கலயத்தின் முகந்து, தண்புன லாட்ட யாடுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௧௦)

வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின் மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே, யெலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய் யெனுமெனக் கருள்புரிந் திடாயோ, காலனைக் குமைத்து சினகரம் புகுந்து காணரி தெனுதல கனைத்துஞ், சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௧)

மயலினு லழுந்தும் பிறவியா மளற்றை வளர்தரு நின்பெருங் கருணை, வெயிலினு லுலர்த்தி யெனதுளக் கமலம் விரிக்குமொண் பரிதி யிலையோ, பயிலுமர லயமோர் சைலமோர் சச்சலம் பசைப்புல முருக்குகார் முகமோர், சைலமா தலனு மெனக்கொளுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௨)

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால் புந்தியஞ் சினகரந் திருத்தி, நலம்புரி புதிதர் பேரவை தமியே னனுதுவா னருளுநா ளுள

தோ, வலம்புரி மணிதர் கடலென வொளித்து வளைவுற நவெண்மந்
தரம்போற், றலம்புரி தவத்தி னின்றொளிர் சோண சைலனே கை
லைநா யகனே. (௧௩)

நீரினி லெழுமொக் குளினழி யுடம்பு நிலையென நிலைக்கு மானந்
த, வாரிதி படிய வறிந்திடா தழலு மடமையே னுய்யுநா ளுளதோ,
வேரியல் பதமுன் றேமெச் சேழ லின்னுநா டியகிலைத் திடல்போற்,
சாரலி னேன மருப்புழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. ()

கருத்திடை நினது கருணைமா மேனி கண்டெழு[illegible] தைந்து[illegible] வி
யம்பச், சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான் [illegible] ரி
யுமா றருளாய், விரத்திரு முடியின் மதிதிரு முடியின் வி[illegible]கங்
காத்தினி லிருள்கந், தாத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண சை
லனே கைலைநா யகனே. (௧௫)

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனென வுணர்ந்தாளி
டொறுமா, றூரளு ரவையி னிகழ்ந்தசொற் றுதியி னுவக்குமின் பத
ந்தொழ வருளா, யேருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா லிலங்குறு
மண்டகோ ளகையாச், சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண சை
லனே கைலைநா யகனே. (௧௬)

இந்தியங் கரண முடலம் வேறுக்கி யிருண்மலப் படலமுங் கிழிக்,
கந்தமுமலரு மெனநினை யென்னிற் காண்பறக் காணுநா ளுளதோ,
வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற மலிபகை தவிர்ப்பவெண்
ணிறந்த, தந்தியும் புலியும் வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலை
நா யகனே. (௧௭)

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன் மொய்ம்முழுண் மக
ளிர்தம் மயலாற், புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற் புகவிடுத்
தளிக்குநா ளுளதோ, வழங்குவெண் டிரையா றவிர்சடை காப்ப ம
ணிமுடி யின்றிழிந் திடல்போற், றழங்குவெள் ளருவி யிழிந்தொளிர்
சோண சைலனே கைலைநா யகனே. (௧௮)



குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை மதனவே
ளெனவும், புன்மொழின் மணிதார்ப் புகழ்ந்து பாழ்க்கிறைக்கும் புல
மைதீர்த் தெனக்கருள் புரியா, யொன்றொரு தினந்தோட் குடக்கு
மைந் தனமென் றுருதுநா டொறுமகமேரு, தன்றலை தாழ்ப்ப வள
ர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௯)

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் தறம்பெரு மி
டியுங், கொண்டநல் விரதத் திளைக்குமாக் கையுமிக் கொடியனேற்
[illegible]ளுநா ளுளதோ, வண்டுழுங் குவளை மலர்த்தடஞ் சுனையின் மற்
[illegible]வா னவர்க்குரித் தன்றிச், சண்டியுண் மகிழ்ந்து கொளமலர்
[illegible] சைலனே கைலைநா யகனே. (௨0)

வந்துமா மறலி யென்னுயி ருண்பான் மயிலையுஞ் சிரலினிற் சின்
றான், முந்திநீ யெனையா ளந்தவா ரிதியின் மூழ்குற விடுத்தருள் புரி
யாய், நந்தனான் மலையே யென்று சாதிப்ப நனைமலர் வேங்கையு
மசோகுஞ், சந்துயேன் முளைப்பச் செய்துகொள் சோண சைலனே
கைலைநா யகனே. (௨௧)

பூமழை யமரர் பொழியமா தவர்கட் புனன்மழை யிடைப்பொழி
யடக்கத், தூமொழி மனைநீ தாதுபோம் பயனில் சொற்பதர் புடை
த்திளைக் கின்றேன், யாமுனர் மிருபே ருருவமாய் வரினு மிருவரு
மூணர்த்திடி னன்றித், தாமுனர் சிலரென் றெழுந்துயர் சோண
சைலனே கைலைநா யகனே. (௨௨)

குழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங் கமருகுமயிழ்
தின்மங் குறுமல், விழைவுறத் துறந்துன் றிருவடிக் கமலம் விழை
குநர்க் கேவல்செய் திலனே, மழைமதக் களிறல் யானைமத் தகம்
பாய் வள்ளுகிர் ரேறுசெல் வரிமா, தழைசிறைச் சிம்புள் கொண்டெ
ழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௨௩)

கார்தரு கருண்மென் குழற்சிறு நுதற்பூங் கணைபுரை மதாரிக் க
ருங்கட், டார்தரு குவவுக் கொங்கைநுண் மருங்குற் றையலார் மய

யலென் றெழிலென், சீர்தரு மணியி னணிந்தன லெனக்கட் செவி
யுமொன் கேழலின் மருப்புஞ், சார்தரு மூலக விளக்கெனுஞ் சோ
ண சைலனே கைலா யகனே. (௨௪)

நந்துறைத் தலத்து நாரணற் கயற்கு நவமணிக் கரகநீ ரிருந்து,
மைந்துறக் குறித்து மாட்டியுங் காண்பான் மதித்திடா துன்னையெ
ணிர்ந்திலரே, யைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு மறு
முகம் படைத்த கேசரியுந், தந்தையைப் புரக்குங் கருணைகூர் சோ
ண சைலனே கைலா யகனே. (௨௫)

விழையருஞ் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக் குதவிநேசன்
முந்திற், றுனையிரந் திடுவான் வந்தனன் பதீ யுதவியென் றுயரொ
ழித் தருளா, யினியபைந் தமிழின் பொருளியமால் வரைபோ லிசைக்
குரு காதிம மலையின், றனையின் றீஞ்சொற் குருகுறுஞ் சோண
சைலனே கைலா யகனே. (௨௬)

பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண் பேதையர்ப் புகழ்ந்
தலந் திரிவேன், பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென் றினுநீ பயன்
றர லறிந்துநிற் புகழேன், கண்ணுறுங் கவின்கூ ரவயவங் காந்தட்
கதிர்களா ருயிரங் கோடித், தண்ணுறுங் கரவா துயர்த்தெழுஞ் சோ
ண சைலனே கைலா யகனே. (௨௭)

உயங்குறா விடைப்பூங் கோதைய ரல்கு லொளிமணிப் பாம்பு நீ
ன்டிதலான், மயங்குவேன் றனக்குன் பதமலர்த் துணை மயக்கமென்
றொழித்தருள் புரிவாய்; முயங்குயா புகழ்ப்பூம் புகலியந் தனர்க்கு
முத்துவெண் பந்தரீந் தகல்வான், றயங்குமீன் முத்தப் பந்தர்வாழ்
சோண சைலனே கைலா யகனே. (௨௮)

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும் விளங்குமா கமவுணர்ச்
சியினும், பித்தலர் கொடிற் பரவுபூ சையினும் பொழுதுபோக் கெ
னக்கருள் புரிவாய், முத்தமு மாவ மணிகளுமெறிந்து முதிர்தினைப்



புனத்தெயின் மடவார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோண சைல
னே கைலா யகனே. (௨௯)

பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற் பழமொழி யொழிய
மெய்யடியா, ராயுமென் மலரோர் மலையளவ் வணிய வமர்ந்தநின் கோ
லம்யான் மறவேன், றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச்சூழ்
பசுங் கொடிபயி லுருவச், சாயைசென் றுறங்கலங் குருஞ் சோண சை
லனே கைலா யகனே. (௩௦)

டழிடு பசும்பொற் புறவிமேற் கொண்டு களிமென் மலர்க்காத்
தெளிபூம், படையொடு தூரந்து வந்துமென் விடயப் பகைப்புலி
தனையெறிந் திலையே, யடிகடு கிழல்செ னெழுகட லடைய வகல்
பெரும் புறத்துவா ரிதியிற், றடமுடி நிழல்சென் றுறவளர் சோண
சைலனே கைலா யகனே. (௩௧)

யாவுமா முனையுன் றுமுலை முலைப்பா லீந்துபா டச்செயா தெ
னினு, மேவுமா துயர்செய் குலைநோ யெனினும் விடுத்துநிற் பாடு
மா றருளா, யோவுமா னலது தொல்லுருக் கொளின்வே றொன்றெ
டுத்திடுமென நினைந்து, தாவுமா னினமென் னிசழ்ந்தருஞ் சோண
சைலனே கைலா யகனே. (௩௨)

விருப்பொடு வெறுப்பு மகன்று பேரின்ப வெள்ளத்து ளழுந்துமி
ன்னடியார், திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்மை செய்பெரு
ஞ்செல்வமே யருளாய், பொருப்புக டொறும்வீழ் பொங்குவெள் ள
ருவி போன்றறி விலக்கிடை யறுமற், றரிப்பருங் கருணை பொழித
ருஞ்சோண சைலனே கைலா யகனே. (௩௩)

பொங்கு றகலினுங் கற்பும்வாய்ந் திலங்கு புண்ணிய மடந்தையும்
பொருளு, மிங்குநன் குதவி யங்குவான் கதியி னிருத்துநிற் புலவரொ
ன் புகழார், துங்கவெங் குறவர் புனத்திடு பாண்கா றணிந்த கட்டா
ரமீ மிசைமா, தங்கவெண் மருப்புப் பரப்புறுஞ் சோண சைலனே
கைலா யகனே. (௩௪)

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப் புகழ்ந்திடு பிரம்படிக்
கொதுங்கிச், சூழ்ந்திடு மமரர் நெருங்குசந் நிதியிற் றொண்டனேன்
வரவருள் புரியாய், வாய்ந்திடு மகக்கண் டுருகுதாய் முலைப்பால்வழி
ந்தொழு குதலென வடியார், தாழ்ந்தெழ வருவி யொழுகுறுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (௩௫)

நேர்ந்திடு மொருசெங் கோல்கொடு கொடுங்கோ னிமிர்ந்திட
விலங்கைசென் றடைந்தோன், கூர்ந்தவன் பொடுநின் றிறைஞ்சுபு
வழுத்துங் குரைகழ லிரக்கவஞ் சுவல்யான், சேர்ந்திடு மலைமகள்
பெருமுலை யுவமை சிறுமலை களுக்குத வாமற், சார்ந்திட விரும்பி
வளர்ந்தொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௬)

தெருமரும் பிறவி தமையகன் றிடாத தேவரைத் தேவரென் றெ
ண்ணி, யருமருந் தனைய நினையடை யாத வறிவிலார் பவப்பிணி யறு
மோ, கரிமருங் கணைந்த தென்முழை வாயிற் கார்வர விரைந்தெழுந்
துகள்கே, சரிமறைந் திருந்து நாணுறுஞ் சோண சைலனே கைலை
நா யகனே. (௩௭)

ஆண்டுகள் பலசென் றிடவிருந் திடினு மன்றியோ ரிமைப்பினி
லுடலு, மாண்டுகு மெனினு நன்றுநின் கமல மலரடிக் கன்பரா யிரு
ப்பிற், பூண்டயங் கயில்வேற் குதலையர் நீஞ்சொற் புதல்வன்மே
விவர்செய லெனமார்த், தாண்டன்வக் கிவர விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. (௩௮)

விரைவிடை யிவரு நினைப்பிற வாமை வேண்டுநர் வேண்டுக மனு
ரம், பெருகுறு தமிழ்ச்சொன் மலர்நினைக் கணியும் பிறவியே வேண்டு
வன் றமியே, னிருசுடர் களுமேல் கீழ்வரை பொருந் தவிடையுறன்
மணிக்குடக் காவைத், தரையிடை யிருத்தி நிற்றனே சோண சைல
னே கைலைநா யகனே. (௩௯)

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க் குளத்திட மெலாம
ளித் தடியார், கண்மணிக் கழைய விருந்துசெய் தருணீ கணையிருப்



பதற்கிடம் புரியேன், வெண்மணிக் கழைமுன் கரியநெற் றிதழி
வேங்கைபொன் சொரியமா சுணங்க, டண்மணிப் பைக ளவிழ்த்தி
டுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௪௰)

அருங்கலம் புனைய மகளிரோ ரிருவ ரணிமணம் புணர்த்தி வா
ரணமுந், துரங்கமும் புலவர்க் குதவுநின் றனையே துதித்திடா துழ
ன்றனன் வறிதே, மருங்குநின் றழகா லத்திநாங் குவபோன் மரை
மலர்ப் பெருஞ்சுனை யொடுபூர், தரங்கநின் றிலங்க விளங்குறுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (௪௧)

எணுறு மமரர் கடைகட லளித்த விருளொடு மணிமிடற் றடியே,
னுளவ விருளுங் கலந்திடிற் கருமை யழகுமிக் கிலங்குறுங்கண்டா
ய், மாவெனுழில் வராக முழும்புழை யரந்தன் மணியொளிப் பிழம்
பெழல் சிறுநீர்த், தாணுவின் முருக னெழுதனேர் சோண சைலனே
கைலைநா யகனே. (௪௨)

மின்னவிர் சடிலக் கற்றையு மறுள்கூர் விழிகளுந் திருமுகத்தழ
குங் கன்னவி றிரடோ ளெண்குமீ ரடியுங் கண்டுகண் களிக்குமா
றுளதே, வின்னிசை யொலிகேட் டுருகுதல் கம்ப விழிதரவருவி
கிம்புருடர், தன்னிக ரிசைகூர் சாரலஞ் சோண சைலனே கைலை
நா யகனே. (௪௩)

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு மடியவர்ப் பெறினெழுந்
திளங்கன், றுள்ளிநின் றருகு மன்னையின் வநெக் குருகுபு சென்
றிறைஞ் சிலனே, யெள்ளிவெம் புலியெண் கரிதிருமேனி யேறுதற
காதென வெருண்டு, தள்ளிவர் தருவி யிழிதனேர் சோணசைலனே
கைலைநா யகனே. (௪௪)

இழையெனத் தளர்சிற் றிடையுறு முலையா ளெனக்குவண் புக
லிவேக் தயின்ற, கழுமணிப் பசும்பொற் குலவுயாற் கின்னங் கழு
வுநீர் வார்ப்பதற் குரையாய், முழையிடைக் கதிர்மா மணிவிளக்

கேற்றி முசுக்கலை பிறவொடு மசோகத், தழையிடைத் தழுவி யுற ங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௪௫)

வினைவழி யுடலிற் கமைந்தறு முணவே வேண்டினர் வினைகொ டு புணரா, நனைமலர் புனைநின் றிருவடி யடைவா ரொடொறும் வே ண்டில ருலகர், கனையிருள் காந்த விடமறிந் தணப்போங் காட்சி யிற் புனக்கிளித் தொகுதி, சனைவெறி மணிகண் முழைபுகுஞ் சோ ண சைலனே கைலைநா யகனே. (௪௬)

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறப்பவு முடிமிசை யிரு த்தும், பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப் புகலினு மென்கொ லீ யிரங்கா, யோங்குறு மண்ட கோளகை யளவு முயர்ந்து மோர் மழவிடை முதுகிற், றுங்குபு நடக்க விருந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௪௭)

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு மிந்தியப் பகை வெல், வீரமு மருளி யெனது வெம்பிறவி விலக்கியாட் கொள்ளுநா ளுளதோ, வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக ளரித்தெறிந் தெறு ழ்வலிக் குறவர், சாரலி னிறங்கு விதைக்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௪௮)

தொகைமிகு மமரர் முனிவரர் பரவித் தொழுதகை யொடுவிரை கமழ்பூம், புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப் புழுகுநீ யணி தல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதிமா மாஞ்சேர் குளிர் மதி விழுங்கவாய் வைத்த, நகைமிகு மூரற் றிரளைசேர் சோண சை லனே கைலைநா யகனே. (௪௯)

சினம்படு முளங்கொன்ற வரவை யெனையுஞ் சேர்ப்பது தகுமு னக் கிசைவண், டினம்படு மலரி னகவித ழொடுபுல் விதழுமொன் றதனுல குடைத்தே, மனம்படு மடிமை யுளன்சிலை யெறிக்குமனக் குழைந் தமையவன் களபத், தனம்பட வடிவங் குழைந்திடுஞ் சோ ண சைலனே கைலைநா யகனே. (௫௰)



வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன் மணிப்பணி பெரும்புவி யாட்சி, யாம்பரி சலவென் றன்பத மருவி னன்றியென் கவிகளென் றவிகள், காம்பரி மூரன்மும் மதகரி வளைத்த கைவிட மோதலாற் கதிர்த்தேர்த், தாம்பரி துணுக்கென் றீர்த்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௫௧)

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய் தொலைப்பினுந் தொ லைத்திடா தறினு, நின்னடி மலரை யன்றியான் மறந்து நினைப்ப னோ விறக்கும் வானவரை, மன்னனி பருக வுடைபிறுன் மதுவும் வா ரண மதமும்வெள் ளருவி, தன்னொடு மிகலி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௫௨)

நீரிறை லழலான் வருங்கொடும் பிணியா னிருதரா வுலகையால் விலங்காற், சோரரால் வருந்து மவரெலா மினது தூயநாமம் புகன் றிடுவார், சீருலா மணியா லரிபர வுதலாற் றிசையுற நீள்கையா லெழின்மை, சார்தலா லுமையாள் விழிநிகர் சோண சைலனே கைலைநா யகனே. (௫௩)

முகவிளக் கென்ன மணிக்குழை யிரிர [illegible]லைமுகட் டணிபெற மலரான், பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொற் பாவையர்க் கிரங்கிடா தருளா, யகவிளக் கென்ன வகறிரி நெய்தீ யாக்குவோ மின்றியே யெழுந்த, சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண சைல னே கைலைநா யகனே. (௫௪)

நீலியோ வேனா வொடொறுமருச் சித்துநின் னெழில் புரிந்திட வுட ற்குக், கூலியோ தனமென் றளிப்பவர்க் கன்றிக் கூற்றினைக் கடக்கு மா றெளிதோ, மாலியோ சனையின் வணங்குறுங் கைலைமலை நிவே தித் திடக் குவித்த, சாலியோ தனமென் றிடத்திகழ் சோண சைல னே கைலைநா யகனே. (௫௫)

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து துயர்ப்பிணியெனுமலை யலைப்பக், கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது குரைகழற் கரை

புக விடுப்பா, யேற்றிடும் விளக்கின் வேறு பட்டகத்தி னிருளெனாத் தன்பெய ரொருகாற், சாற்றினு மொழிக்கும் விளக்கெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௫௭)

கந்தர மிருந்து மடகுகீ ரயின்றுங் காரிலத் தமைத்திருப்பதமு, மந் தர மியிர்த்து நின்னிலை யறியா ரும்பவ மொழிபுமோ வுரையா, யிந் திரன் வனத்து மல்லிகை மலரி னின்னடைாத் தியதெனாநிறைந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

கூம்புறு காமு மலர்த்திடு முகமுங் கொண்டுநின் றனைவலம் புரி வோர், மேம்படு சரண மலர்ப்பொடி மேனி மேற்படிற் பவம்பொடி படுமே, பூம்பொழிற் புகலிக் கிறைவனு னிலஞ்சேர்ப் புண்ணியத் தலங்களி னடைந்து, தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண சை லனே கைலைநா யகனே. (௫௮)

கானமே மருவும் விலங்கினுங் கடையேன் கற்பவை கற்றிலேன் விடய, ஞானமே யுடையே னறிஞரைக் காணி னுணரிலே னுய்யுமா றுளதோ; வானமே யளவு நெடுங்கிரி மலய வாதமோ துறுபவர் தட் குத், தானமே புதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யக னே. (௫௯)

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியினைக் கவனி முன் கொன்னுங், கழைகுளி நெடுநல் யானையின் முளிந்து கடக்கு மென் பவமொழிக் கிடுமோ, மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரு மலிதரு புகையென வெழுந்து, தழலுரு வுண்மை விளக்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௬௦)

வாத்தியமுழங்கச் சிவிகையுங்கரியு மாதியூர்ந் தலைவிலாழ்ந்தவனு, மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற் றேவலேலாழ்வெனவுழி க்தேன், பாத்திய மணிகள் கொண்டிழைத் திலங்கும் பாவையினணி மேகஞ்; சாத்திய தெனவில் விளக்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௬௧)



குலத்தினிற் பிறந்து மலஙினால் கற்றுங் குணத்திற் சிறந்துமல் லாத, பலத்தினிற் கவர்ந்து நின்னடி யவர்க்குப் பரிவிலார் கதியிலா தவரே, கலத்தினிற் பொலிந்த விமயமீன் றெடுத்த கன்னிநுண் ணிடைமிசைக் களபா, சலத்தினிக் குறுதி கொடுத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௬௨)

மூடக விருளோ டென்னையின் றுண்ணுமுலையர சாலகற் றுவழென் கூட்ரு மொழியா லடைந்தனன் றமியேன் குள்வழுவாது நீயருளாய்; வீடுறுங் கவரி கீழ்விழ வுறல்கார் மிசையனம் பன்றிதா மாறித், தா டலை தருவ வடைதனோர் சோண சைலனே கைலைநா யகனே. (௬௩)

ஐயநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த வாதரவுன் பதாம் புயத் து, மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்டிரு நீற்றிலும் வருமோ, கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக் குழுக்கடோ ரணமென வெழுந்து, தையலர் கடியப் பறந்துறுஞ் சோண சைல னே கைலைநா யகனே. (௬௪)

கனவினு டமைத்த விழுதென வுருகக் கற்றதன் றுள்ளமென் கரங்கள், புனலுமாய் மலருங் கொடுநினைப் பூசனை செய்திலேன் செய்கோ வுரையாய், சினவுநோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ் சிலம்புக ளணைவுட் கொள்வோர், சகநோய் மருந்தா யெழுந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௬௫)

வழுறு மணிப்பொற் கோயில்போய் வான வுறக்கொடுத் தாங்கு திற் புணர்த்தாப், பாழுறு மநம்பே ரவாக்குடி யிருப்பப் பண்ணு மென் கண்ணுநண் ணுவையோ, வீழுறு மெயினர் கிழங்ககழ் குழி யும் வேழம்வீழ் குழிகளு நிரம்பத், தாழுறு மருவி பொன்சொரி சோண சைலனே கைலைநா யகனே. (௬௬)

பைம்மறைப் படுத்தி யுள்ளநி யாமற் பணிநறுந் துகில்புனை மட வார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும் வினையினே னுய்புமா றுளதோ, செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான் றிரு.

முடி கடப்பினு மூவர், தம்பியற் செப்பி னடங்குறுஞ் சோண சை
லனே கைலைநா யகனே. (சுஎ)

செக்குறு நிலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லனு நாடியின்
பிணிப்புட் நெக்குற வறிவு கலங்குசாக் காடு நினைதொறு முளம்
பதைக்கின்றேன், மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னுமுழக்
கமு மாகர வென்னுந், தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோண சை
லனே கைலைநா யகனே. (சுஅ)

மரணமும் பிறவித் துயரு நீங்குறநால் வாய்ச்சிலம் பிக்கருள் புரி
ந்த, கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின் கருத்தினை யின்
னதென் றறியேன், முரணிபம் பருஉக்கை தலைமிசை யெடுப்ப
முழைக்கரும் பாம்பென மணித்தேர்த், தீரணியுள் வெருவி யகன்றி
டுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுகூ)

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா லருவினைக் காடற வெ
றிந்து, மங்கலில் பத்தி வித்திட வடியேன் மனத்தினைத் திருந்துநா
ளுளதோ, பொங்குறு செக்கர் கருவிசும் புறவேள் புரத்தெரி கது
விட [illegible] தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண சைலனே கை
லைநா யகனே. (எ0)

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந் துன்னுநல் வினைமுகித்
தகன்றே, யிருக்கும் வெங்கயவ ரினமுமென் றருளி யென்னை நின்
னடிமைசெய் தருள்வாய், முருக்குமங் கதமா மணியுமிழ்த் தகன்ற
முழைசமுற் றெனவுளம் வெருவித், தருக்குமொண் புலிசென் றுற
மருட் சோண சைலனே கைலைநா யகனே. (எக)

அத்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மனோன்மணி மதங்கி,
சுந்தரி யுமையுண் ணமுலை யெனநின் றுணைவியை வாழ்த்துமா றரு
ளாய், வந்தரி சுருதி மருங்கினிற் பாட வயக்குதும் புருவுநா ரத
னுந், தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண சைலனே கைலைநா
யகனே. (எஉ)



நீக்குறு மயலு நிலைத்தபே ரறிவு நின்றிரு வடிமலர்க் கன்பு, காக்
குறு மனமு முடையமெய்த் தொண்டர் கணத்தினு ளெனைவிடுத்
தருளாய், தேக்குறு மிருளிற் கன்னல்காட் டிவபோற் றென்றல்வந்
திசைதொறு மெல்லத், தாக்குறு காந்த டிப்பலர் சோண சைல
னே கைலைநா யகனே. (எங)

பவமிலே மினியா மென்றிறு மாந்து பயமற விருந்திடப் பத்தி,
நவமிலே மடியே மென்செய்வா னிருந்து நாளினை வறிதொழிக் கின்
றேம், மவமிலே யிமையா விழியினுற் காண்கையால்வலங் கொளவடி
நிலைத்தோய், தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண சைலனே
கைலைநா யகனே. (எச)

கண்களிற் பரிந்து கண்டெவப் பனவே கைகளிற் றொழுபவே செ
வியகள், பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே பதயினை வலம்புரி
வனவே, யென்குபுற் றிடப்ப வெழுமணி காவா லிருந்துசென் றிரு
ள்கவர் வனபோற், றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண சைலனே
கைலைநா யகனே. (எரு)

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று நேரிழை யவர்விழைந்
திடுவோர், குணக்கிரி தனிரின் மடியவுங் கண்டு கொடியனேன் வா
ழ்வுவந் திருந்தேன், மணந்தியிர் மகளிர் [illegible] மைந்தர் வார்
கழ லுவக்கிட வலம்பேயய்த், தணக்கிடு மமயத் தூறித்துதான் சோ
ண சைலனே கைலைநா யகனே. (எசு)

மாந்தனிர் கவற்று மணிச்சிலம் படிகள் வடிவெிர் பொருவும்வா
ணெடுங்கண், காந்தளி னிமைக்கு மங்கையென் றலைக் கன்னியர்ப்
புகழ்வினை யறுமோ, பூந்திரை சுருட்டுங் கடல்கடை துரோண்
பொறியர விண்றிமா தவர்க்குச், சாந்துய ரகற்று மருந்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. (எஎ)

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு செவிகளுஞ் செவிடுபட் டைம்மே, லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவமுளங் கொளும் பரிசெனக் கருளாய், மந்தர சைலந் தருவிடங் களத்து வைத்திடத் தினிவிம சைலந், தந்திடு மருமதை வைத்திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௭௮)

நெய்கொளு மலரா னின்றிரு வடியை நாடொறு முயிருணுங் கூற்றம், பயங்கொள வகலா தருச்சனை புரிந்து பரகதி யடையுநா ளுளதோ, வயங்கொளும் விடயப் பெரும்பகை கடந்து வானநா டாண்டிட மதிப்போர், சயங்கொள வடைதற் கரணமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௭௯)

பிரம்பொரு கரங்கொண் டடிப்பகந் நீசர் பெருங்கல்வீழ் பாசியி னிமையோர், சிரம்பொர வீழ்ந்து நெருக்குநின் னவையிற் றீயனே னணையுநா ளுளதோ, வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே லமர்த்தகட் கிரிமக ளிணைக்குஞ், சரம்பொரா விருந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௦)

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க் கதியிடைப் புகவிடுந் திடனும், பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின் பதமல ரன்றிவே றுளதோ, வாமரை பொருந்து முலைகுள குவட்டு மலைகள்போ லாதிரு முலையா, டாமரை பொருந்து மானுள்வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௧)

தொடுக்குமா கமங்க ளெலாஞ்சொலைந் தெழுத்துந் துணிந்தவெஞ் சிறுக்கையாற் பகையைப், படைக்கலந் தாங்கிருந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமா மறலியை வெருவேன், மடக்குவார் கலாப மயிறாயி லெழுந்து மருவலர் வேங்கைமீ தகவத், தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௨)



இந்திய ரூடல முழுதுநீ றணிய வேசியா தமலவைந் தெழுத்துஞ், சிந்தியா தழுது மெலிந்தொடுங் குற்றேன் செய்யுமோ வறிந்திலேன் றமியேன், வந்தியா வரவ மன்றிடைக் கண்ட மலர்சிலம் படியையன் றுணிபோய்ச், சந்தியா தயர வொளித்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௩)

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு மதர்விழிக் கடலினு மனக், கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக் கதியிடை நடத்துமா றுளதோ, செங்கதிர் காலை மாலையுந் தங்கச் சிலம்புகா வனக், கடும் பகலிற், றங்குற நீடி நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௪)

கண்டிகைக் கல்லை கலனென விழைந்து காயமேல் வரிந்து வெண்ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான் பூசனை புரியுமா றருளாய், முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு முடிமிசை முத்துமேற் கட்டித், தண்டுரைக் கங்கை யாறுசேர் சோண சைலனே கைலைநா யகனே. (௮௫)

காவினைந் தெழுத்து மந்திரமலாது நவிற்றுவோர் தமையுநீ யிருப்பப், பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும் பாமரர் தமையுமென் றொழிவேன், கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த குன்றமம் பாடகக் குன்றந், தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௬)

திங்களுங் கதிரு மிலங்கிய மானுந் திகழ்பெரும் பூதமோ ரைந்துங், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டுகண் களிக்குநா ளுளதோ, பொங்குருக் குவியக் கலபவா ரழலிற் புகையெனச் சரோருக வல்லி, தங்குவண் டெழூஉம் பொய்கைசூழ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௭)

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள் பூதங்க ளெனவிலா தடங்க, வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி யருவினைக் குறும்பற வெறியாய், செறிமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ் சேரமா துமைதினங் கட்டுந், தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௮)

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து புண்ணியர்க் கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பி னடைந்தசெம் மணிபோ லெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கடலு ளடங்கும்வெற் பன்றி மலைதரு மருட்பெருங் கடலைத், தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௯)

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய கொடியவ னெஞ்சகன் றிடாத, தேங்கிய சோதி மன்றுளா டெவ்வென் சிந்தையு ணடப்பநின் பதங்க, ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந் துழுமணி புரியிறன் மருவித், தாங்கிய வால வட்டநேர் சோண சைலனே கைலை நாயகனே.

எழுபசும் புல்லும் புனலுமெவ் விடத்து மிருந்திட நினைத்தவவ் விடத்தே, விழைவொடு வந்து தோன்றுநீ யிருப்ப வீணின்மா னுடர்பிறந் துழல்வார், மொழிதரு கருணை மலையெனும் பெயரன் மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத், தழுவுற நின்று வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௧)

வேணவா வகன்று நின்றிரு வடியின் மெய்ம்மையன் படைந்து பொய்ப்பிறவி, நாணுவா ரினங்கண் டுறும்படி அஞ்ஞான நாட்டம்பெற வருளாய், சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச் சிலம்புகள் சிறுதரும் பாகத், தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௨)



நின்னையே நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்குநெஞ் சகமு, நின்னையே துதிக்கு நாவுமென் றருளி நின்றிரு வடியினை வைத் தருள்வாய், தன்னையே நினர்க்குச் சகமெலாங் காட்டித் தனியோ டிகலிமே வினர்க்குத், தன்னையே காட்டு மலையெனுஞ் சோண சைலனே கைலைநாய கனே. (௯௩)

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும் விளங்கொளி மார்பும்வா னுலக, மன்வணங் குறுநின் பதாம்புய மலரு மனக்குடி யிருக்குமா றுளதோ, பொன்வணம் புரியுங் காகமொன் றிலைப்பொற் பொருப்பென வடைபொரு ளனைத்துந், தன்வணம் புரியும் பொருப்பெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௪)

குருமணி மகுடம் புனைந்துள வாறுங் கொற்றவ னாதலினென் கட், கருமணி யெனுநின் றொண்டர்குற் றேவல் கருதியாட் பட்டிட வினிதே, பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த பிள்ளையங் கதிரென வரவந், தருமணி யொளியென் மதியுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௫)

சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த திறலுறுப் பரஞ்சுடு விறலு, மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட வடலுமேத் தினர்க்கிட ருளதோ, வும்பர்மா மதியி லங்கையி லிருந்த வுழைகுதித் திருப்ப வாரழல்வான், றம்பமா யெழுந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௬)

அஞ்சலென் றவலக் கொடியனே னுனைநின் னடியரிற் கூட்டுக வுலகி, னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றனது நற்கல மிகழ்பவ ருளரோ, வன்சமைங் கரன்கொண் டுளவலோ டிகலி வலங்கொள்வா னின்னும்வந் துறினுந், தஞ்சமென் றிடாது நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௭)

அணிந்திடு கலனுஞ் சாந்து மொண்டுகிலு மரிவையர் போகமும் பெறுவான், றுணிந்திடு மனமொன் றிலைப் பொருளாகத் துணியு மோ வறிந்திலேன் றமியேன், பணிந்திடு மயன்மால் பெருமைக ளனைத்தும் பறவைகொண் டெழுதலாய் முடிந்து, தணிந்திட நிமிர்ந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௮)

பூவுறு தடமு மதியுறு விசும்பும் பூணுறு முறுப்புநின் றலகாள், கோவுறுநகரு மென்ன வென் மனதின் குறைகழன் மருவுநா ளென்றோ, வோவுறு மனைசெய் பவர்கொள மாந்தாங் கோங்கல்க ளணையுன் னினர்க்குத், தாவுறு முயர்வீ டளித்தருள் சோண சைலனே கைலைநா யகனே. (௯௯)

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப், போரணி கலமென் புதல்வருங் கதியும் பெறத்துதிப் பவர்க்கருள் புவனீ, நேரணி கதியை மறந்தவர் கண்டு நினைந்துற மிக்கபே ரருளாற், றூரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௱)

சிறப்புப்பாயிரம்.

ஏனருஞ் சோண சயிலனுக்கென் றூன்றும்
பூணா மாலை புனைந்தணிந்தான்—மாறாப்
பவப்புணரி நீந்தியிடப் பாதிநால் செய்த
சிவப்பிரகா சையன்றான் றேர்ந்து.

சோணசைலமாலை.

முற்றிற்று.

---



சிவமயம்.

நமசிவாயசுவாமிகள்

அருணாசலேசுரர்பேரில்

அருளிச்செய்த

# சாரப்பிரபந்தம்.

காப்பு.

எக்கணக்கிற் கெட்டாத வின்பக் கடலனிக்கு
முக்கணக்க னீன்றெடுத்த முன்னவன்ற—னிக்கணத்திற்
சந்தமிகுஞ் சாரப் பிரபந்தந் தான்சொல்லக்
கந்தமலர்ப் பாதமே காப்பு.

ஆசிரியவிருத்தம்.

அரகரா திருவணாமலை தேவனே சரணார் பினாய் வந்தித்தவன், அடிகளரு ளருவாஞ் சிவானந்த தேசிகற் கடிமையா நமசிவாயன், மருவியே நமதிடம் பரிவுடன் விரவினீ வந்தகாரிய மேதுகாண், மாதேவனே யுமதுபேரி லன்பாய்த் தமிழ்மாலை பாடிக் கொணர்ந்தேன், பெருமையா யெதுவேண்டி நம்மீதி லதனைநீர் பேசியே கொண்டுவந்தீர், பிஞ்சகாசம் சாரசாகரத்தினில் வைத்த பிரபஞ்ச வாழ்க்கைதனிலே, மாவென்றுங் கூவென்று மனைவியென்றும் பெரியவா தனையிறல் விசனமாய், வறுமைபது நீரவும் வதுவையது செய்யவும் வந்தன னுமைநாடியே. (௧)

எனைநாடி வந்ததா லியாமென்ன செய்குவோ மெமக்கொருவர் செய்வதன்றி, எங்கேயும் வியாதுன துனக்கொன்று சொல்கிறோமெமக்கடிமை யாகுபடியால், உனைநாடு மன்பர்க ளுத்தமர்க ளல்லவர்க ளுறுதிசெய்கின்ற பேர்கள், உலகத்திலே நல்ல தர்மிஷ்டி யனை

வோர்க ளுண்டுகோ ணீயுமவர்மேல், தனையினிய கவிசெய்து செல்வையா லன்றனக் குதவிதப்பாது செய்வார், தற்பரா நல்லது நீர்சொன்ன வாக்கெனது சாண்வயி றதைவளர்க்க, வினோநாடு முலகத்தி னரரைவந் தனைசெய்து வேண்டவே கைகாட்டினீர், வீணல்லவோ வெனது வெண்ணமது நிறைவேற வேண்டியது செயல்வேண்டுமே. (௨)

அலட்ட வேண்டாம் புலவரேயெம்மை யுள்ளபடி யாய்த்தறிய விவைகேளுநீ, அன்னையுந் தந்தையு மில்லாத தனியனு னம்மைவிடு மருவினிமைய, மலைக்காவலன் மகள் பெண்டெனக்கவள் தந்தமைந்த ரிருவர்களின் மூத்த, மைந்தனுக் கின்னமோர் கலியாண மிலை பெருவயிற்றினு னிளவனுக்கு, நலக்காம விந்திரன் கன்னிகா தானமாய் நயப்புடன் செய்துவித்தான், நாணறக் குறமாதினைத் திருடி பலபேர் நகைக்கவே கூடவைத்தான், தலைக்கோ முழுக்கெண்ணெய் யில்லாமல் மயிரெலாஞ் சடைபிடித் ததுபொருமல், தண்ணீரு மதியமு மெங்கோரமுஞ் சுமைதான் வைத்தனம் புலவரே. (௩)

உடுக்கின்ற வஸ்திரங் கானகத்தி னின்மேவு முழுவையின் றோலதாகும், உடற்குளிர் பொறுமலே புகர்முகத் தானையை யுரித்துமேல் போர்த்திநேன்காண், தொடுக்கின்ற பூஷணஞ் சர்ப்பங்க ளதுவன்றி தொங்கலோ தலைகளசரமாஞ், சொந்தமொரு காசுக்கு மவகாச மில்லைகாண் தொகையா யுனக்குரைத்தோம், நடக்கின்ற செய்திதா னென்னென்று சொல்லுவோ நால்வயிற் றொடொப்பில்லைகாண், நாணவே காளியுட னடியொரு காலுமோ நான்றவாதக் காலதால், எடுக்கின்ற மாடொன்று மாறென்று கையினி விதன்றிவே றில்லையாலும், இலகுமழு வேந்தினே நால்வரிதை யறிவார்க ளின்னுமோ சேன் புலவரே. (௪)

கொட்டேன் கூடையுங் கொண்டுதான் பிட்டிற்குங் கூலிக்கு மண்சுமந்தோங், கூசாமலே தலையில்விற கெடுத்தோமன்றி கொலைவேட



னெச்சி லுண்டோங், தட்டேதலை யோடுகொண் டில்லங்க டோறுமே தனியா யிரந்துண்டனம், சாண்வயிறு தனைவளர்க்கப் பாடுபட்டதால் சலிப்புடன் விடத்தை யுண்டோங், கட்டழகி யுமையவள் கழுத்திற் றடுத்தனள் காயமது நிலைபெற்றனங், கருதுமென் னிர்வாகமிப்படியிருக்க நீர் காசுக்கு வாதாடுறீர், சிட்டர்தொழு மீசனின் பெருமை யறியாமலுன் றிருச்சமுகமுன் வருவனோ, திகழுமின் பெருமையை நீயறிந்தது மென்ன செப்புவன்கே ளீசனே. (௫)

மேலான வம்பொன் மகமேருகிரியுந் தவள வெள்ளிமலை யுன்றன்வீடு, விரும்புமுன் சம்பந்த மிமயகிரியும் பொனூர் மின்னுடைமையாயணிந்த, வானான வரவின் சிரோமணிக் கிந்தநல் வையகம் விலையொக்குமோ, மருவுமுன் மனைவிதான் முப்பத்திரண்டறம் வளர்த்திடு முலோக சனனி, குலாகி யவள்பெற்ற மூத்தவன் பேர்சொனற்றுன்பங்கள் விட்டோடுமே, அயனின் வல்லபை மருளனு மிளையவன் சுரர்குடிகணிலை கொள்ளவே, மாலான வசுரரை வதைத்ததாலிந்திரன்மகளை வதுவைப் புரிந்தான், வள்ளியைச் சிறையெடுத்தானவன் மகிமையை வாயினாற் பேசவெளிதோ. (௬)

பிரமனைத் தலையறுத் தங்கபத் தேந்தியே பிரமத்தி வந்ததென்றே, பேரிட் டிரந்தநீர் வேடமது காட்டினீர் பேருலகமது வெண்ணவே, பரவையிற் கடுவிடமுண் டமாருய்யப் பகிர்ந் தமிர்தமே யளித்தீர், பலவெனும்புஞ் சிரமு மாலையா யுற்றதும் பார்க்கிலுன் வெற்றியலவோ, வுரிபுலியி னுடையுஞ் செஞ்சடா தாரமும் யோகபாவனை யல்லவோ, வோங்கிவரு காளியுடன் வாதாடி னீரவளு றுவலி யடக்கவேதான், இருமைபெறு சதுர்வேத மதிருப மாகவே யிடபமா யேறினீர்கா, ணீசனே யேணிந்த வேழ்மையாய்ப் பேசுநீரே னென்றனக் காகவே. (௭)

பாதலிக்கின்ற நரைபிட்டு வாணிச்சி தன்பத்திக்கு மண் சுமந்தீர், பாணனுக் காகவே விறகெடுத்தீர் தலையில் பரிவுடன் கண்ணப்பனார்,

அருமையாய் குசிபார்த் துகந்திட்ட மாயிசமகமகிழ்க் கொத்து கொ
ண்டீர், ஒருவருக் கொப்பில்லை நாமென்ப தெவர்களு முன்றனுக்
கொப்பாவரோ, திருவிளை யாட்டதாயர்கு நீரிதுவெல்லாக் தேவரீர்த
மகித மாய்ச், சிறுமையும் பெருமையு முளதோ சொல்வா யெங்கள்
திவ்யசிவ சாம்பமூர்த்தி, அருமையா வென்று லறிந்ததை யுரைத்தீ
ன னப்பனே யிப்பவுன்ற, னருளின் லென்றனக் குவகையா யினி
மேலு மனுகூல மதுசெய்வீரே. (௮)

அகில காரணனு நீ யெள்ளுக்கு ளெண்ணெய்போ லனைத்து யுயி
ருக், குணர்வு நீ யகமு நீ புறமு நீ யாதிநடுவீறு நீ யகண்டபரி பூரண
னு நீ, யிகமு நீ பரமு நீ வருசரா சரமு நீ யின்பமுறு சாயுச்சிய, வாதி
சதுர்வேத முடிவு நீ வடிவு நீ யிமையகிரி யுதவுதரா, நகைவதனி பா
கனீ யமரருக் கரிதாகி னம்பினவருக் கெளியனீ, நன்குசித் சபைத
னிற் கலகவென நடனமிடு நடநாயகச் சொரூபனீ, இகமுமென் சித்
தி நீ முத்திதர வல்ல நீ திவ்யஞானக் கடவுள் நீ, திருவுள மகிழ்ந்துநல்
லடியவர்க் கருள்செயுந் திருவண்ணாமலை தேவனே. (௯)

வந்திடும் புலவரே யிருமிரும் முன்றனது மனபாவகம் பார்த்து
னம், மருவுநம் பெருமையை யெடுத் துரைத்திருந்த வாய்மையுரைன்
மிகமகிழ்ந்தோம், உந்தன்வாற் கல்வியமு மார்க்கமும் பெருமையு
முண்மைதரு புலமையெல்லாம், உலகத்தில் மூடரறி வார்களோ
வென்றுதா னுன்னி யெம்பால் வந்தனை, அந்த வறுமைக்கு காரு
செய்யவே வேண்டு நீராய்த்தழியு மாகமத்தி, லவனவன் பத்திக்கு
முண்மைக்கு முயர்கதி யளிப்பமென் றுரைசெய்வதால், சொர்ணமா
யுன்றனுக் கெந்தவிதமாகிலுந் தொண்டுபடு மன்பர்முன்பாய்த், தாய
கற் பொருடனைத் தருவிக்கிறோ மிகச்சுதந்தர மகிழ்ந்து கொள்ளே.

ஆரென்று கேட்பையா லாயிரவர் தங்களி லச்சரப் பாக்கையிய,
தவர்கமக் கன்புளோ ராறுநூறு தலைகட்டி லனைவருங் கூடுவார்கள்,



னேர்கொண்ட கும்பலிற் கண்டுநீர் நமதுபேர் செப்பியே வினவல்செ
ய்தால், செம்மையாய் மனதுசந் தோஷமா யுன்றற்கு செல்லுமென்
றுது தருவர்காண், பாரென்ன புலவரே யல்லாது தேவரீர் பயில்வ
துக்கென் சொல்லுவேன், பலர்களும் மொருசித்தமாகி சந்தோஷ
மாய்ப் பார்ப்பரோ வென் சொல்வரோ, சார்கின்ற வேற்கென்ன தி
ருமுகந் தருகிறேஞ் சதிருடன் கொண்டுபோய்நீ, சமுகத்தில் வைப்
பையேல் பார்த்தவுடனே தருவர் சந்தேகமில்லை யிதுவே. (௧௧)

பதினாறு காதவழிசென்று சிலைப்பற்றி பரிவோடுமுமதிடத்தே,
பாக்கியம் பெறுதற்குவந்தனனென்றுனை பகர்வதையறிந்தேகினுல்,
இதினாலுமென்றனுக் கனுமானமாகியேயிதயந் திடங்கொளாமல்,எ
ன்னுதேயென்செய்வேனெந்தையாமீசனேயிதற்குநீர் சொல்லுமை
யா, விதியாகநீகலைகள் கற்றறிந்தாலுமுன்விவேகத்தையென்சொல்
லுவேன்,விளங்குநந்திருமுகத்தினிலேயுமுன்னையும்விழியினாற்கண்
டபோதே, மதியாதமூடரும்பொருளாசையுத்தரும்மதியதும்விளங்
கிடல்ல, மார்க்காயொருமித் துனக்குதவிசெய்வார்கள் மனமகிழ்ந்
தினிதுகொள்ளே. (௧௨)

ஸ்ரீ மதுதேவதேவன்கைலைநாயகன்ஜீவாத்மபரிபூரணன், இகமுற்
றவுலகினிற்கொருகர்த்தனாகியதிருவண்ணாமலையீசனார்,சாமவேதங்கண்
முதல்பாராயணஞ்செயுஞ்சட்டநாதையர் வடிவாய்,தரணிதனில்வந்
துநாமடிமையது கொண்டமிகுதயவுள்ளவடியார்களும்,நாமமிடுகின்
றநம்மைத் தனக்கடிமையாய்நாடோறும்வாழுகின்ற,நன்மையடியா
ர்களும் யாவருங் காணவேநயந்துதானுண்மையதுவாய், யாமிகுதிப
த்தருளன்புள்ள பத்தரொன்றகமகிழ்வு கொண்டுங்களுக்,கன்புடன்ம
டலிற் சங்கராய வொழுதியவருட்டிரு முகங்காணிதே. (௧௩)

சிரஞ்சீவிபூவைசியகாட்டாமை செய்யுஞ் சிரோமணிசபாபதிக்கும்
தேர்ந்தசிவகணபதிக்கும்புகல்தயாளனுஞ் சீர்த்திகுமாரப்பனுக்கும், த

ருஞ்சொலருணசலச் செல்வனுக்கும் புகழ்ச்சரவணபவன் றனக்கும் தகைமைசிவசங்கர னமச்சிவாயன் முருகனுக்கு முயர்தனவைசிய ருள், வருஞ்செயலுணர்ந்தசக் கிரவர்த்திசெட்டி சொக்கப்பசெட்டிக்கும்வணிக, மன்னுசின்னசெட்டியுங்கறுப்பாசெட்டிமாரிசெட்டிக்கும்வளமைப், பெரும்புகழ்படைத்தகோ வைசியருளிராமசாமிப்பிள்ளைபெரியகிர்ஷ்ணபிள்ளை முதலாயினோர்க்கும் பாக்கியசம்பத்து மேன்மேலுமினிபெருகவே. (சஅ)

இப்போதுமெக்கடிமையாகிய புலவனெழின மசிவாயனென் போ, னெனதடிவணங்கிநற் றமிழ்மாலைபாடிவந் தேநியாகங்கேட்டதா, லப்போதுவுங்களுக்காசிர்வதித்து நாமன்புதிருமுகமெழுதினே மாதலாலாங்கவன் மகிழவேசங்கடாமாடையாபரணமீதிக, ளெப்போதும் வாழ்த்தவேயீந்திடுங்கீர்த்திபெற்றெண்ணில்காலங்களடியார்க் கினிதாக வந்தனைவழிபாடுசெய்வதா லெமதுபதமடைகுவீரால், தப்பாதுவிகபரசவுக்கிய மனைத்தையுமடைந்து சாயுச்சியத்திற், றருக்கியின்புச் சாகரத்தினிலழுந்தியே சார்வதாய்வாழ்குவீரோ. (சுரு)

அருணசலேசுரர்பேரில்

## சாரப்பிரபந்தம்

முற்றிற்று.

---

ஸ்ரீ



திருச்சிற்றம்பலம்.

# அண்ணமலைச்சதகம்.

## விநாயகர் காப்பு.

அண்டமனைத் தும்பரவு மண்ணமலைச்சதக
மொண்டமிழாற் பேதையேனோதவே—தொண்டர்பணிந்
தெண்ண வரந்தருநல் யானைதிறைக் கொண்டருண்முக்
கண்ண வரந்தருந்தாள் காப்பு.

## நூற்பெயர்.

மன்னுதிரு வண்ணமலைச்சதக மென்றம்பேர்
பின்னுமொரு நாமம் பேசுவாம்—இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்குந் துதிப்பதாமே.

## கடவுள்வாழ்த்து.

கார்கொண்டதிருமேனிச்செந்தாமரைக்கண்ணன் கமலாலயத்தெண்கணன்-காணரியபேரொளிச் சுடராகியண்டக்கடாகமூடுருவி நின்ற, வோர்கொண்டதிருவுருவ மருவுருவமாகியுல கெங்கும் வியாபியாகி-யெல்லாவுருக்கடோறு முயிராகியவ்வுயிர்க்கின்பவானந்தமாகிப், பார்கொண்டவுலகுக்குமமாகியழியாத பாசத்திரிபுடமுமாகிப் பஞ்சகிருத்தியமும் புரிந்தருள்காரத்தெழும்பாசிவமகாலிங்கமே, யார்கொண்டமலை வளச்சிங்க புரியாகசெய் தருள்பெறு வசந்தராயர், அன்றுவினிற்றுதிசெயுண்ணமுலைக்குரிய வண்ணமலைத்தேவனே.

## திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை.

கருணைகரக்குகமுனிக்காகவேமுனங்கைலாயகிரியின்முருகன்-க்கைவேல்விடுக்கவந் தான்றலாலேதிருக் கையில்வேலுளராகுமெய்ப்,

பொருளையறவதரித்ததல மௌனவயார் புகலும்வெண்பாவிளக்
காய்ப் - பொங்குபானெய்வந்த பெண்ணைநதிக்கும்தலம் பொன்மாரி
பொழியுந்தலம், வருமாவருட்பெரிய நாயகியும்வீரட்ட மாதேவர்வா
ழுந்தலம் - மாதவக்குகமுனி மகந்தனித்தெய்வீக மன்னவதாரத்
தலம், அருணாசலந் திருவண்ணதாண்டவ வசந்தவா ரணதகைவசந்தரா
யர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தே
வனே. (௨)

## அபிஷேகவிதி கூறியது.

சுத்தசலமபிடேக நல்லெண்ணெயரிசிமாத் தான்மஞ்சளெலு
விமுள்ளி-ஆபஞ்சகௌவியமோ டாவினெய்பாறயிர் சுவையானபஞ்
சாமிர்தம், உத்தபலமாக்கதலி மாதளையுமெலுமிச்சை யோங்குநாரத்
தைநார்த்தை-யொண் கனிச்சுளைகுளஞ்சித் தேன்றிரட்டுபாலையர்
கருப்பஞ்சாறுடன், மெத்துபனிநீரன்னம் வில்வநீர் தபனநீர் மிளிர்
பொன்னிரத்நோதகம்-மென்பசுங்கந்தநன்புனுகுசந்தனம்விளங்கு
தாராபிஷேகம், அத்தனிற்சிறந்தவிய வபிஷேகமேபுரிந் தருள்பெ
றுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே. (௩)

## அருள்பெறுமா றெங்ஙனெனவிரங்கல்.

தருமலொடுத்தனைப் பூஜைபுரிவோ மெனிற்றண்மலர்த்தொ
ருந்தச்-சமையந்தெரிந்துமுறை பயில்கின்றபோதுமீழ் தனிவண்டு
ளெல்சிலாம், விரிபுனலெடுத்தனைக் காட்டுவோமெனிலோ வே
யுமண்டுகமாமை-மீனத்தைதின்றடிருந் தலவலாலந்நீர் மிகுதியுந்
தானெச்சிலாந், தெரிமறையிருக்காதி மூவர்தேவாரங்க டிருவாசகந்
துதிகளைச்-செய்வமெனிலோ தாதிகள் செய்தாக்குலெச்சிலென் செய்
தனக்காளாவனோ, அருள்பரம்தேசிகக் குகைநமசிவாயர்திரு வருள்
பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்
ணாமலைத்தேவனே. (௪)



## திருவண்ணாமலைத் தீர்த்தத் தொகைவகை கூறியது.

இந்திரன் றீர்த்தமோ டக்கினித்தீர்த்தமா மெமதீர்த்தநிருதிதீர்
த்த - மியல்வருணதீர்த்தமுயர் வாயுதீர்த்தம்வடக்கெழிலாங் குபேர
தீர்த்தம், நந்தலறுமீசானியன் றீர்த்தமிறைவியுண் ணாமுலைத்தீர்த்த
மரிய-நற்சிங்கதீர்த்தமாணிக்கவாசகதீர்த்த நாடரும்பிரமதீர்த்தமுந்
துசிவதீர்த்தமரிமைந்துசக்கரதீர்த்த மொய்ப்பெருங்கட்கதீர்த்த-மூந்
றாற்றின்மேலுமறு பதாதீர்த்தமெனவுதல மொழியினின்னருணாசலம்
ஐந்தபூதத்தலத்தொருதலமிதென்பர்கா ணருள்பெறுவசந்தராயர்-
அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவ
னே. (௫)

## மூவர்பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடங்கூறியது.

காவிரியின்வடசரையி லறுபத்துமூன்றுபதி காண்டருந்தென்
கரையினிற்-கருதுமொருநூறுபத்தேமூறும்பதிகணிக்கிலீழத்
திரண்டு, கோவியற்பாண்டிபதி நான்குமலைநாடொன்று கொங்கி
லேழ்நடுநாட்டினிற் - கூறுமிருபத்திரண்டாந் தொண்டைநாட்டிற்
குறிக்கிலெண்ணான்குதலமாம், பூவிரவுதுளுவபதி லொன்றுவடதி
சையைந்து புகலிலிருநூறுமெழுபான்-புணருமேநாலுதலமூவர்பாடி
யதலம்புண்ணியத்தலமென்பர்கா ணாவிதொறுநின்றுணை வளித்
திடும்பரமனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்
ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬)

## மாசந்தோறு மபிடேகவகை கூறியது.

வருடாதிசித்திரைத் திங்கள்பூரணைநாண் மருக்கொழுந் தபி
டேகமாம்-வைகாசிசந்தனமதானியல்பலாப் பழமுமாங்கனியுங் கத
லிக்கனி, கருதாடிசர்க்கரைநலாவணியி லதிரசங்காணும் புரட்டாசி
யிற்-கார்ச்சியதிரட்டுபாலைப்பசிக்கன்னமாங் கார்த்திகைதீபார்ச்சனை,
திருமார்கழிக்குநெய் தைந்தேன்குடங்கிருதஞ் சேர்ந்தகம்பளமீன்
மதித்-தீர்த்தயிர்பரமனுக் காட்டல்விநோதத்திதோறுமாசபூசை,

யரிதாயறிந்துணக்கபிஷேகமதுபுரிந் தருள்பெறுவசந்தராயர் - அண்
ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭)

## விபூதி தரிக்கும் விதி.

நித்தலும்வைதிக ராதிமறையோர்கட்கு நீர்கொண்டுகுழைத்தணிந்
தை-நெற்றியிற்பன்னிரண் டங்குலத்தளவதா சோரந்தரித்தலென
றியாஞ், சித்திரமிழைத்தசின் காதளத்தாதகபுரி செக்கைவேலாகநுண்
குத்-திருநீற்றையொன்பதங்குல நீளமாகத் சேர்த்தணிதலேவிதி
யதாஞ், சுத்தவைசியருக்கு நாலிரண்டங்குலஞ் சூத்திரர்க்கேழங்கு
லந்-தோகையர்தமக்கு நாலங்குலத்தளவெனச் சொன்னதேமகுடா
கமம், அத்ததேவாங்குலத் திரிசூலவடிவணிந வருள்பெருவசந்தரா
யர் அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவ
னே. (௮)

## பிராமணர் சட்கருமத்தி விதிகூறியது.

வேதமதுதானோதன் மற்றொருவருக்கோதி வித்தலுன்யாகஞ்
செயல்-விதியோமெற்றொருவருக்கு தல்யாகஞ்செய்வித்த லோடீத
லேற்றல்,° ஓதுமிவைசட்கரும மாகவன்னியமொன் றுணைத்தகாருக்
பத்தியம்-ஒன்றுகூடர்தெக்ஷணாக்கினியொன்றதிவைமூன்று முறையுந்
திரேதாக்கினி, கேதமறுமியல்பிரமசாரிகிரகத்தன் கௌர்ந்தவானப்
பிரத்தன்-கேடில்சந்நியாசியிவை யாச்சிரமநான்கதாங் கிதவேதங்க
ணைன்காம், ஆதிவருணர்க்கெனவியாசமுனிசெய்தவிதி யருள்பெறு
வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே. (௯)

## அநக்கியங்கொடுக்குங் காலபலன் கூறியது.

இரவிலோனையர்த கடிகையதுஷக்காலமெத்த வான்மீனி
னங்க-ளொங்கும் விளங்குமக்காலையிலருக்கிய மிறைத்திடுதல் பூரண
பலன், மருவுமிருபானேழு கடினலருணோதயம் வானிலருதாரணை
யெலா-மழுங்கியுமழுங்கா திருக்கவர்க்கியமீதன் மத்திமப்பலனாகுமா
ம், உனாசெயிருபானெட்டி லின்னுதயமுகூடுவொளியொழிந்தருக்கிய



மதமமா-முதயமேலர்க்கியம் வந்திலம்துன பலனுரைக்குமறையோர்
க்கென்பர்காண், அருணகிரிநாதர் புகழியலவன்முதையே யருள்பெ
றுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே. (௧௦)

## அஷ்டவிவாகங்களில் பிராமணர்க்கிவையென்பதும் பிராமணர் நித்தியகருமவிதியுங் கூறியது.

கருதுபிரமந்தேவதம் பிராசாபத்தியங்காண மகிழாருடமா - கந்
திருவமசுரமுமிராக்கதம்பைசாச கலியாணமோரெட்டினிற், பாவமு
தனன்கும் பொருந்திமாண்ணிகருப் பாதானமாதியான - பதினாறு
மாச்சிரம நான்குசட்கருமமும் பழகுமுத்தழலும்வேள்வி, யிரவியுதி
யாமுன்னுஷக்காலநீராடி யேன்றதிரிசந்திகால - மிருகையாலர்க்கி
யம் பூசையெனபாசனமியம்புகாபத்திரிசபம், அரியநால்வேதாத்திய
யனமறை யோர்செய்கை யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்
றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௧)

## இருபத்தொரு யாகத்தின் பெயர் கூறியது.

ஓதரியவக்கினிஷ்டோமமத்யாக்கினிட் டோமமக்கிரகாயணி
யுத்தியஞ் சோடசீ வாசபேயம் மாக்கினி யோத்திரஞ் சதுர்மாசியந்,
திதிலா வத்தோரி யாமமதி ராத்திரஞ் செப்புமக் கினிய தேயக்-தெ
ரிசபூரணமாச நிருடபசுபந்தஞ் சிராவணி சவுத்ராவணி, மேதகைய
சத்திரி சிரார்த்தமோ டட்டகைவி ளங்குமாக்ரா யணிமுடன், மேவு
மார் வணமாசு வயசமிரு பத்தொன்றும் வேதநவில்யா கங்களாம்,
ஆதிவேள் வியில்வந்த வடிசகாசிங்கவே ளருள்பெறு வசந்தராயர்- அ
ண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

## அரசாளவேண்டுந்தன்மைகூறியது.

மலையரண் காடரண் மதிலரணு நீரரண் மருவுமிந் நான்கரணு
மும், மந்திரிக டளகர்த்தர் குடிபடையு முடையராய் வலியசதுரங்
கசேனை, நிலையுடைய ராயெளிய ரொளிதினிற் கண்டுகொள நேரிடுந்

கருணையுளராய், நிலமுழுங் குடிகள்பா லாறிலொரு கடமையின் னீதிகொண்டு தனதுநாட்டிற், கலகமிடு வோர்களைக் கொலைகளவினோர்களைக் கனதுஷ்ட மிருகங்களைக், கண்டித்து மனுநூலறிந்து செங்கோலின் முறைகாத் திடுதலை சாட்சிகாண், அலைபுனற் பாண்டிநா டாண்டசொக் கேசனே யருள்பெறு வசந்தராயர், அண்ணாவினிற் றுதிசெ யுண்ணா முலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௧௫)

அரசர்கட்குறுதிச்சுற்றங்கூறல்.

மந்திரியர் கருமாதி காரர்கடை காப்போர்கண் மருவுநகர் மாக்கள்சுற்ற, மலைபடைத் தலைவரோ டிவனியே ரிடுமறவர் மதயானை வீரரெண்மர், சந்ததமு மாசருக் குறுதுணைவ ராமியல்பு தவறாத வந்தணாளர், சாந்தமுறு நட்பாள ரோடுமடைத் தொழிலர் நோய்தனையறிந்தவிழ்தமீயும் - புந்தியின்மருத்துவர் கலைஞருமிமித்திகப் புலவரிவ ரைவர்களுமெய், போது மாசர்க்குறுதி யாகின்ற சுற்றமிது புகலுமனுநீதிகண்டாய், அந்திசந்திபுமுச்சிவந்தனம்பூசைபுரி யருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௬)

திருமுனைப்பாடி நாட்டுப்பிரமாணங்கூறியது.

மன்னியல்பசும்புரவி யேறியொருகணமதில் வலம்வரும்புவியையீயே-மாமுடிகவித்தாள்க வென்றுமூவேந்தரும்வாய் மலர்ந்தருள்வாங்கே, மின்னுறுகுணக்குக் கடற்கரைவரைக்குமிகு மேவுமலர்சோலைதெற்கு-விளங்குதிருவாத்துறைவ திட்டகுடிவெள்ளாறுமேற்றிசைக்கொல்லிமலையாக், தென்னியல்வடக்குப் புனற்றருங்கடியாறுசெப்புமிந்நான்கெல்லையுட்-டிருமுனைப்பாடிநா டதுசதுர்முடிபெற்றதெய்வீகமன்னனாண்ட, அந்நிலையில்சிங்கபுரி நன்னிலத்தாசுபுரியருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௭)

தெய்வீகராசன்மங்களங்கூறியது.

பணிவெள்ளிசெம்பொ னபாஞ்சிமணிமாகதப்பச்சை திகழ்வைரியம்-பவளமாணிக்க கோமேதகங்கோமளம் பணிமுத்துபுஷ்பராகம், மணியுந்துமாபரணமாலையும் பன்னிருவகைத்தெய்வமலர்மாலையும்-மார்பத்தணிந்துமாமுடிசூடியிலகு பகவான்புலியூர்த்துவேள்வி, நனியுள்ளெழுந்துவந்துயர் திருமுனைப்பாடிநாடார் திருக்கோவலூர்-நல்லசிங்காசனத் தெய்வீகராசனுமாசிங்கமுனையர்வாழ்க, அணிவென்னிகோத்ரகுல தீபமெனவந்தரிதியருள் பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௮)

தெய்வீகராசன் சதுர்முடிச்சிறப்புக் கூறியது.

பன்னிரண்டலர்மாலை புனைகின்றதிண்புய பராக்ரமத்தெய்வீகனீ - படையெடுத்தமர்புரிய வேண்டாமெனச்சொலிப் பாராளும்வேந்தர்காண, மன்னரோர்மூவரும் மல்லுயுத்தம் மேற்றுமல்லாடலுக்கிசைந்து-மற்போர்புரிந்திடற் கிவனொருவனாசிங்கமா வீரனெனவியந்து, தென்னனுஞ்சோழனுஞ்சேரனுந்தந்த முடிசெல்வ முடியென்றுசூட்டத்-திருமுடியுடன் மூன்றுமொருமுடிச்சதுர் முடித்தெய்வீககுலத்துதித்த, அன்னமெனமதிவளருங்புண கெம்பீரதுரையருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௧௯)

தெய்வீகராஜன்பன்னிரண்டுமாலைவகைகூறியது.

கொம்பலர்பசும்பொனேர் கொன்றைபுனைமுந்தை கூவிளங்குமிழ்சண்பகங்-குலவுபரிமளவகுள மலர்துளவுசம்மலமலர்கோங்குசெங்குவளைவாகை, தும்பையார்வேம்புபன்னிரு மாலைகொண்டபுயசுந்தரவிலாசமார்பன் - துயசதுர்முடிமகுடசேகரன் மும்மன்னர்சொந்தசம்பந்த முடையோன், கம்பமதமுத்தலைக்காரண்டனைச் சயங்கண்டவேல்கொண்ட திறலோன் - காசினியையெழுநூறுவயதாண்ட தெய்விகக் காவலன் மகிமைகண்டாய், அம்புயமலர்ந்தமுககெம்பீரராசர்புகழருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௰)

மலையரையன்தெய்வீகனுயவதரித்தமைகூறியது.

கரையில்புகழ்கைலையிற் சிவனுமையுமருவுமக் காலமலையரையனேர்நாட் - கடவுளுக்கறிவியாதே புகப்பாமனக்காதன் மாதுலை

நோக்கித், தரையின்மானிடனுச்சனிப்பையென் றுரைசெயத்தாழ்ச் தவன்சோர்ந்துநிற்கும் - தருணத்திலுமையெழுந்தன் மாமனார்பிறவி சார்வனேவென்றிறைஞ்சி, யுரைசெயச்சாபந்தவிர்க்க வேண்டுவதா லிவ்வுலகத்திலனைவயிற்றி - லுதியாமல்வேள்வியி லுதித்தவனியாள்க வென்றேதிடக் கும்முனிமகத், தரையனெனவந்ததெய் விகருலோத் துங்கதுரை யருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (௧௯)

## தெய்வீகராசன் மனைவிகள்பெயர் கூறியது.

சேரன்பயந்தபதுமாவதியெனும்பெயர்த் தெரிவையும் பாண்டியன்மகட் - டினமால்பொருந்துகாஞ்சன மாலையென்னுமொருதேவியுஞ்சோழனீன்ற, பொன்புகொண்டசண்பக மாலையென்கின்றபேதையும்மணம்புரிந்த - பெண்ணையாற்றங்கரைக்கோவறெய்வீகனருள் பெருமானிலங்குநால், மூன்றுதித்திருத்தொண்டத் தொகைக்குள்ளுமாபதி யுருக்கலந்தே - யுற்றவறுபத்துமூவரி லொருவராகின்ற வோங்குநரசிங்கமுனையர், ஆனவம்மிசருலகு பேரணிகர்செல்வத்துரை யருள்பெறுவசந்தராயர்- அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (௨௦)

## சந்திரபுரி ராசகுமாரிகளைத் தெய்வீகராசன் மணஞ்செய்தமைகூறியது.

காசிராசன் மகளனப்பிறைபைதன்னையுங் காஞ்சிபேரிகதனீன்ற கமலாவதிப்பெண்ணை யோத்தியிற்சேருமன் கன்னியாங் கனகையினையும், மாசறுமவந்தியா புரிவிசாலக்கன் மகிழ்தருள்கலாவதியினை மன்னுந்துவாரகைச்சந்த்ரவருமன் றருமடந்தையுற்பலமாலையுந், தேசுவடமதுரையம் போசவிசையாவருமா செல்விகமலக்கண்ணியைச் செல்வபுரிமாயை மாசேனன்பயந்தமதிசேர்ந்த வுற்பலநயனியை, யாசையொடுவேட்ட தெய்விகருலோத்துங்க துரையருள்பெறு வசந்தராயர் அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (௨௧)



## அங்கவை சங்கவை கலியாணங் கூறியது.

திங்களெனுந்தேய முழுதாளுமன்னன்சிறந்தபேர்பாரிசாளன் செய்தவப்பயனாற் பிறந்தநற்குணமான சிறுவியங்கவைசங்கவை, மங்கையர்களிருவரைவளர்த்தெடுத் தௌவையார்மாமுகக்கணபதிகையால்-மணவோலையெழுதி மும்மன்னரைக்கோவலூர் வரவழைத்தருகிடத்துத், தங்கியபனைத்துண்டமரமாகியே பழந்தரநிப்பெண்ணை செய்பா - மூன்வரப்பாடியப்பெண்களைத் தெய்விகத்தலைவன்மணம் புரியவே, அங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையேயருள்பெறு வசந்தராயர்-அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரியவண்ணுமலைத்தேவனே. (௨௨)

## மெய்ப்பொருணயனார் சரிதைகூறியது.

செப்பருந்தெய்வீகமன்னவன் றென்னவன்செல்விகாஞ்சன மாலையைத்-திருமணஞ்செய்தவனருவிப்பயந்தவொரு சிறுவர்மெய்ப்பொருணயனார்க், கொப்பறுஞ்சம்புரவியூர்ந்து முன்வட்டம்வந்துற்ற நடுநாடுதன்னி - லொத்தவிந்திரதிசையினைத் தங்களெல்லா மூவந்தரசுபுரிகுவாயென், றிப்பெருங்கோவலின்மணிமுடிதரித்திட விருந்த மெய்ப்பொருணயனார் - ஈன்றசந்ததியெலா நத்தமன்னவரென் றிருக்கிடுங்குடிகள்கண்டாய், அப்பெரியமெய்ப்பொருளினற்குலம் விளங்கவந்தருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (௨௩)

## நரசிங்கமுனையர்சரிதைகூறியது.

வந்துலகில்புகழ்கொண்ட தெய்வீகமன்னனெழின்மலையமான் றந்தபதுமா - வதிமாதினைப்புணர்ந் தரிதாய்ப்பயந்தவொருமைந்தனரசிங்கமுனையர், சிந்தகுதொடெனுந்திருமுனைப்பாடி நாட்டெல்லைக் குண்மலைமன்னனு-யிருவென்றுமுடி சூட்டிவைத்தபடியாலதற் கேய்ந்தநரசிங்கமுனையர், சந்ததியில்வந்தவர்கள் மலையமன்னென்று பெயர் சாற்றநெடு மேற்றிசையெலாந் - தங்கியபெருங் குடிகளாய்தி

றைந்தழுதுபயிர் தானிடுஞ்செல்வர்கண்டாய், அந்தநரசிங்கமுனை யரையர் போன்புநெறியருள் பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (உ௪)

குலசேகரநாயனார்சரிதைகூறியது.

சோழன்பயந்தசண்பக மாலைவதுவையிற் றேய்ந்து தெய்வீக னீன்ற - தோன்றல்குலசேகரன்சுருதியையுணர்ந்தனனாய் முனைப் பாடிநாட்டில், வாழுமொன்றினிலொன்றுதன்பங்கிலாசித்து வடநாடு போய்வந்துதன்-மனைவியைவிடுத்தேகுடந்தையின்குடபான் மணிச் சோழன்மாளிகைக்கண், ஞாழிநெறியாற்றுதி மூப்பியைச்சேர்ந்ததி லுதித்தவர் கண்மூப்பனாரென் - றுலகெலாஞ்சொல்லவுஞ்சுருதிமன் னென்று பெயருண்டாயிருப்பர்கண்டாய், ஆழ்தருபெருஞ்சுனைகள் சூழ்தருஞ்சிம்மபுரி[illegible]பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (உ௫)

மிருகண்டுமுனிவனுங் காரண்டனுந்தரித்தமை கூறியது.

கற்கோட்டையிறைசைநகர் நந்தவனத்திற் கனத்தமிருகண்டு முனிவன்-கடவுளைப்பூசிக்கமலர்கொண்டுவரவெனக்கடிதிலொரு பிரமசாரி, விற்கோட்டுமலர்கொய்ச்செல்காலைவஞ்சனை விபாவரி[illegible] மாதர் - விளையாடலைக்கண்டுதாழ்த்து வரவம்முனிவெகுண்டசுரனா வாயெனச், சொற்கேட்டவ்வசுரனாய்ப் பிறையூர்மலைச்சாரனென்று காரண்டனைமுனந் - தண்டித்தவாகைவேல் கொள்புயத்தெய்விகத் தோன்றல்புகழ் சொல்லவெளிதோ, அற்கூட்டமணிகண்டநாதாவினோதனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (உ௬)

வேளாளர் பெருமை கூறியது.

தேவாலயந்தொறுந்திருவிழாப்பூசையுஞ் செப்பரியபிரமாலயத்-தெய்வமறையோர்செய்யு நித்தநைமித்தமுந் திரிசந்தியாகங்களும்



பூவாளுமன்னர் சதுரங்கபல முதலான பொக்கசமிகுஞ் செல்வமும், பொன்வெள்ளி தனதா னியம்பலசரக்கினாற் பொருளாக்கும் வணிகர் தொழிலுங், கோவாதி சோடச மகாதான தருமமுங் குவலயத்தனைவர் சுகமுங் - கோளாறு கொண்டுழும் வேளாள ருழுபடைக் கோலதன் பெருமையன்றோ, ஆவாற் கறந்தபா லபிடேக நேயனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (உ௭)

வைசியர்பெருமை கூறியது.

செம்பொனைக்கல்லினி லுரைத்தாணிவைத்துத் தெளிந்ததன் மாற்றுரைப்பர் - திரளுடைமை யடகுவைத் தாலுநிலை கண்டுமேற் செட்டாக நிதிகொடுப்பர், பம்புநவரத்நப் பரீட்சை ரதிகண்கடாற் பார்த்து விலையைப் பணிப்பர்-படியுந் தராசுமுன் னெடுநிலைநிதானம் படைத்த நாநிலைமை யுடையார் [illegible]பவரு வர்த்தகமு காந்திரங்கோடி பொன்னம்புவார் வரவுசெலவு, நாடோறு நாடுவார் நாணயமிலார்க் கணுவுநல்கார்கள் வைசியர் கண்டாய், யம்புவியில் வணிகர்பாற் செம்பொன் வளர்ந்திடு மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (உ௮)

நான்குவருணர்க் குறுதொழில் கூறியது.

வேதம்படித்த லொருவர்க் கோதுவித் திடுதல் வேள்விசெயல் செய்வித்திடல் - வேண்டுவ திரத்தலொரு வர்க்கீத லாறுதொழில் வேதியர்க்கான விதியாம், ஓதருன் வேள்விசெய லீதலிவ் வுலகெலா மோம்பல்படை பயிறல்பொருத - லோராறு மரசர்தொழி லோதலி யாகஞ்செய்ய லோங்குபொரு ளீட்டலீதல், கோதனைக் காத்தலேருழல் வைசிய ராறுதொழில் குயிலுவத் தொழிலேருழல் - கோகாத்தல்காருக வினைத்தொழிற்பொருளீட்டல் குணமாக வீதலென்றும், ஆதிசூத்திரர் தொழிற் பகரிலீ ராறுகா ணருள்பெறு வசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

### தந்திரமுஞ் சாத்திரமு மல்லாரெனக் கூறியது.

செப்புமாயஸ் தம்ப சூத்திர மிசைத்திடுந் தியாயியாயன சூத்தி
ரம் - திறமான சத்தியா ஷாடசூத் திரமறை தெரிந்திட்ட போதாய
னம், ஒப்பிலாக் காத்தியா யனமா சிலாயன மித்தோரா று சூத்திரங்க-
ளோதரு வியாகரண சத்தசாத் திரமொன் றுயர்ந்தசோதிட சாத்தி
ரம், தப்பிறும் பாதசாத் திரமொன் றுரைப்பருந் தர்க்கசாத் திரமி
தொன்று - சாற்றும் வேதாந்த சாத்திர மந்த்ரசாத்திரந் தருசாத்தி
ரங்களாதிம், அப்புலிங் கத்துருவ மாகின்ற வண்ணமலை யருள்பெறு
வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணா
மலைத் தேவனே. (௫௦)

### நிலையுள்ள புகழாளரைக் கூறியது.

பாலனஞ் செய்துளோ ராலய மமைத்துளோர் பகர்கோபுரங்
கட்டினோர் பத்திமணி மண்டபந் தேர்விமானம் பொன்பதித்த வா
கன மமைத்தோர் சாலையுன சத்திரம் விக்கிரக ரூபஞ் சமைத்து
ளோ ரன்னதானம் - தடமேரி யேரா நிலமானியங் கோட்டை தண்
சாலை யுண்டாக்கினோர், வேலையா [illegible]யா தளித்தவர்கள் பொய்
சொலா விரதியர்கள் கவிவாணரான் - [illegible]லாங் கவித்தொங்கல் பெற்
றுளோ ரிவர்களே வியாதபுகழ் படைத்தோர், ஆலிலைத் துயினுமா
லறியாத பரமனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதி
செ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௧)

### சைவமுறை கூறியது.

சந்தமல ரோனுமா லறியாத பரசிவந்தானே யனாதி யாகுஞ்
சகலரும் பணிசிவாலயமே யனாதி யாஞ் சைவமடமாகு மதுதான்,
எந்தைசிவ லிங்கவுரு வைத்திண்டி யர்ச்சித் திறைஞ்சிவாழ் மறை
யோர்கடம் - மில்லமே யுயராதி சைவமட மாமென் றிசைக்குமுய ரா
கமங்கள், சிந்தையன் பாகியே மறவாது சந்ததஞ் சிவசம்ஸ்கா ராதி
கள் - செய்புமறை வேதியர்க ளில்லமே சோகமைகை திகள்மகா சை
வமடமாம், இந்து நதியாந்தலைக் கந்தரச் சைவனே யருள்பெறு வசந்
தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத்
தேவனே. (௫௨)



### பதினாறுபேற்றின்வகை கூறியது.

நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி நவதானியப் பெரு
மையு - நற்குணத் தொடுசொன்ன சொற்படி நடந்துவரு நன்மனையு
நன்மக்களும், மதிவளந் தருகின்ற குறைவிலாக் கல்வியுடன் மன
மிக்க ஞானவறிவும் - வளர்கின்ற விளமையொடு மறுவிலா வழகும்
மகிழ்ச்சிதரு நோயின்மையும், விதிவளந் தருகின்ற வாணாளு மெய்த்
திடமு மெய்த்துணிவு மிக்கபுகழும் - வெற்றியுட னல்லூழு மறுசுவை
நுகர்ச்சியும் மேலாய்நிறைந்த தனமும், அதிவளந் தருமிதைப் பேறு
பதினாறென்ப ரருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ
யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௩)

### பெண்கொள்ளுமுறை கூறியது.

தன்னுடைய கோத்திர மலாதநற் கோத்திரத் தகையளாய்ப்
பொய்மையி லளாய்த் - தவறிலா தானும்பெண் ணுகோதரத் தவளாய்
தருங்குலத் திழிவில்லளா, யிங்ஙில் புகழ்ந்த பழியுடைய மரபில்
லளாயேந்து விண்மீன் பறவையா - றெழில்வரைப் பாந்தள்பெய ரில்
லளாய்ப் புருடனுக் கிளையளாய் மென்மொழி யளாய்ப், பின்னுமுனி
வில்லளாய் நன்னய குணத்தளாய்ப் பெருமிதம்பிணி யில்லளாய்ப்,
பெருமதி முகத்தனாய்ப் பேசுமிப் பெற்றியுள பேதையை மணஞ்
செய்திடில், அன்னையிலு மிக்கபேரன்புடைய ளாமென்ப ரருள்பெ
று வசந்தராயர் - அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்
ணாமலைத் தேவனே. (௫௪)

### பெண்ணிலக்கணங் கூறியது.

பம்பைச் சுருட்டை மயிரில்லாம னுனிமயிர் பகுவாய்ப் பிளப்
பிலாமற் - பற்றுசடை யில்லாது கட்டைமயி ரொடுசெம் பட்டமயி
ரில்லாமலுங், கொம்புபோற் பிறமயிர் குறுகிவர வில்லாது கொத்
தாக மயிரிலாது - கோணலாய் மேன்மயிர் புடைகொண் டிலாது
வரி கொடுவெள்ளை மயிரிலாது, செம்பிறையி னெற்றிமேற் பாம்பி
ன்படச் சுழிகள் சேராமலங் கெற்றியுஞ் - செவியுமிரு கண்களுங் குறு
காமன் மூக்கொன்று திகழ்நீள மில்லாமலும், அம்பழுதி லாவிதே

பெண்ணிலக்கண மென்ப ரருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௫)

புருஷலக்ஷணங் கூறியது.

நெற்றியிடை யோரைந்து கீற்றாய் மடிப்புறையி னிறைகின்ற வாயுளுண்டாம் - நிலையாக நாலுவரை தோன்றிலெண் பதுவயது நிலையான வாழ்வுமுண்டாம், மற்றுமுக் கீற்று யிருக்கிலறு பான்வருட மட்டினு மகிழ்ச்சியுண்டாம் - மருவுமிரு வரைதோன்றி லாயுளைம் பானைக வரைதோன்றி லாயுண்முப்பான், ஒற்றையஞ் சுழிவலம் புரியாய் நடுத்தலையி லொருமையுடனே யிருந்தா - லுலகமுழு தாளுவானெற்றியில் வலம்புரிச் சுழியொன் றிருக்கி லிறையாம், அத்தரற் றெழுசோதி நயனப் ரகாசனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௬)

இ - து.

விழிதோள் கதுப்புமூக் கிருமுழந் தாளைந்து மிகநீண் டிருக்கவேண்டும் - விரன்மயிர் நகத்தோ னெருங்குபல் லிவையைந்து மெதுவா யிருக்கவேண்டும், ஒழியாது நீறணியு நெற்றியிரு தோண்மார்பு மொண்புறங் கைகள்வயிறு - மோதருங் கைம்மூல மாகுமிவ் வாறிட முயர்ந்தே யிருக்கவேண்டும், செழியு முள்ளங்கை கீழுதடு முன்னங்கால் சிறக்குமுன் னாக்குநீங்கு - சேருங் கடைக்கணுகிர் கூறுமிட னேழுஞ் சிவந்தே யிருக்கவேண்டும், அழிவிலா நூல்சொலும் புருடலக்ஷண மென்ப ரருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௭)

இ - து.

இடைமார்புநெற்றியிம் மூன்றும்விசாலமா யியல்பாயிருக்கவேண்டு - மிருமுழங்காற்கீழு மாண்குறிகிரீவமிவ் விடமிகக்குறுகவேண்டுந், தடையிலா தந்தியுஞ் சந்துதாள்வாய்மிகத் தாழ்ந்தேயிருக்கவேண்டுந் - தங்குகான்மேன்மையா யங்கைமிகவன்மையாய்த் தானங்



கிருக்கவேண்டுங், கொண்டருஞ் செங்கையிற் றங்குசக்கர ரேகை கோதண்டமகரரேகை - குலிசமாலிகை ரேகை நளின சாமரரேகை கோணாதிருக்கவேண்டும், அடையுமிப்புருட லக்ஷணமுடையராசராமருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௮)

விபூதியிடுங்காலங் கூறியது.

காலையிலெழும்போது மலசலம்விடுத்துமிரு கால்சுத்திசெய்தபோதும் - காரிகையொடுங்கூடி நீராடினுந்தனி காவலரிடம்போயினும், மாலையம்போதினுஞ் சண்டாளர்நிழல்படினு மறகூடுசென்றுவரினும் - மாதருதகமேவு மங்கையர்கணிழல்படினு மாபெரியரிடமேயினும், பால்பழம்போசனங் கொண்டபினுமருமலர் பறித்திடினு மாபாதகர் - பார்த்திடினுமெவ்வழி பயப்படினுநன்னூற் படித்திடினுமவிழ்தமுணினும், ஆலயம்புகினும் விபூதியிடன்முறையென்ப ரருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௯)

அறம் ௩௨ - கூறியது.

ஓதுவார்க்குணவீத லாறுசமையத்துளோர்க் கோதனமளித்தலாவர் - துரிஞ்சிடத்தறிநாட்ட லுடைமாறம்பசுவினுக்கு வந்துவாயிறைகொடுத்தல், காதேறலையிந்திடுதல் கண்ணாடிகாட்டலிரு கண்மருந்திடன்மடங்கள் - கட்டிடுதல்பூஞ்சோலை நாட்டிடுதல்பொருணீந்து கன்னிகாதானஞ்செயல், மாதுபோகம்புரியவைத்திட றலைக்கெண்ணெய் வார்த்திடுதல் சுண்ணமீதல் - மருவிலங்கிற் றுணைவளர்த்தறவி தனுதவல் வண்ணானமைத்துவைத்தல், ஆதுலரிருந்திடவறச்சாலைசெய்வித்த லருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௱)

இ - து.

செம்பொ னளவின்றியே விலைகொடுத் துயிர்காத்தல் சேருஞ் சிறைச்சோறிடற் - றின்பண்டநல்கலற வைச்சோறளித்திட றினைக்

தோறுமையமிடுத ், வெம்புரோய்க்கவிழ்தங் கொடுத்தலேநிடயம்
விடுத்தன் மகவிலேவளர்த்தன் - மென்மகப்பால்வார்த்தனன் மகப்
பெறுவித்தன் மேலும்பிறர்துயர்காத்திட, னம்புமறவைப் பிணமடக்
கலறவைக்காடை ல்குதல்குளங்கல்லுத - னல்லதண்ணீர்ப்பந்தல்
வைத்திடுதல் சொற்பிட்ட நாலெட்டறங்கண் முன்னம், அம்பிகை
வளர்த்ததென் றருபறைகண் முறையிடு லருள்பெறு வசந்தராயர்-
அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

தந்தகாட்டவிதி கூறியது.

இலைதிகழு மாவன்னி யரியநா ருவிவே ரிதழிகரு வேலழி
ஞ்சி - லிந்தாநாறலி விலங்கை யார்த்தலு லாநெல்லி யெழிஞுவல் வே
ம்புனார்த்தை, மலர்தருக் கொய்யா நறுங்குழு விருப்பைதுவர் வாய்
த்ததாய்ப் பாலுள்ளதாய் மருவுகைப் புள்ளதாய்த் தருமுழித் தங்
கு கிராதராய், கலைதெரிய மன்னவர்க் கேகாத சாங்
குலவ் கனவைஙியர்க் கோந்செங் - சுருதா குத்திராத்தமக் கொன்பதா
மங்குலங் கழியின்மேற் றேஜுள்ளதாய், அலர்தருந் தந்ததா வனவி
தியதா மென்ப ருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ
யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௨)

விபூதிதரித்திடு முறைமை கூறியது.

குழைத்திடு விபூதி மூன்றங்குலத் தளவதாக் கொண்டு தலைமே
விடலங் - கூறுகெற் றியினிலிரு நான்கங்குலத் தளவு கோணாது
நெல் லெள்ளளவை, தழைத்தளவை யிடைவிட்டுத் திரிகுல வடிவா
யத் தரித்திடு திரிபுண்டரந் - தனிமார்பிலும் புயத் தாறங்குலந்
தொப்புடன் னிலோரங்குலமிடல், கழைநிகர் முழங்கையின் மணிக்
கட்டிலே நிறுகணமிலாதே தொட்டிடல் - சுழுத்திடுப் பினிலுமூன்
றங்குலக்குறி யிடல் கணித்தமகு டாகமவிதி, அழைத்தன்ன முதவு
பார்க் கலகோத் திரத்தில்வரு மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவி
னிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௩)



பூசைக் காத பூக்களைக் கூறி து.

இச்சிலாலரசு பூசனை பெருக்கா மணைக் லையினி லெடுத்திட்
டபூ - வீஞ்சோலை பனையோலை பின்னலிடு கூ டயி லெடுத்தபூ வி
டதுகையிற், பச்சிலையி லாவெறுங் கையினி லெடுத்தபூ பாண்டத்
தெடுத்திட்டபூ - பால்போ னிறத்ததுகி ல னிலு மெடுத்தபூ பரி
சுத்த மில்லாவிடத், துச்சிதமதென்றே வெ த்தபூ கீழ்வீழ்ந் துதிர்
ந்தபூ மோந்திட்டபூ - வுண்மையாய்ப் பூச காகாது குற்றமென
வோதுஞ் சிவாகமங்கள், அச்சுதன் கண்ம பறித்திட வவந்தவா
வருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினி றுதிசெ யுண்ணாமுலைக்
குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௪)

பூஜைக்காம் புஷ்பவகை கூறியது.

வில்வமலர் கொன்றைமாந் தளிர்பு னை மல்லிகை விரிந்தசத
குப்பை தண்ணீர் - மிட்டான் பருத்தி ான் மத்
ரைவெண் பட்டிவெள் வழுதுணைச், செ வந்தி நறை தாமரை நறும்பச்
சை வெண்காசை தேமுறழ் மருக்கொழுந்து - செய்யமந் தாரைபன்
னீர்முல்லை மாதுளஞ் செழுமலர்க் கொன்றைபாத்தி, புல்லறு கழி
ஞ்சில்பொன் னாவாரை செவ்வந்தி பூத்திகழ் குதம்பைவெட்சி-பூளை
மலர் கார்த்தைசெவ் வரவிந்த ஞாழலிவை பூசனைக் காகுமலராம்,
ஆல்லிமலர் கொண்டுசிவ பூஜைபுரி நேசனருள்பெறு வசந்தராயர்-
அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

இ - து.

தேவிசெங் கழுநீர் பசுந்தும்பை கோங்குசிறு செண்பகம் வெ
ண்பட்டிகை - சிறுநாக மல்லிகை வலம்புரி யடுக்குநந் தியாவர்த்த
நீலோற்பலம், நாவல்பூம்பாதிரி புரோசைபொன் மத்தையெழி லுயு
ருவி குமரிவேங்கை - நாணல்வெண் காக்கணங் கோட்டங் கடம்பலர்
நறுந்தாளி வெள்ளெருக்குப். பூவுறு கருந்துழாய் வன்னிவெண் கரு
மையாம் போதுமால் காந்திபிச்சிப் - பூவிருடு வேரிலா மிச்சமிவை
சிவபூஜை புரியுமல ரென்பர்கண்டாய், ஆவலன் போடுதமிழ் நாவல

ர்க் குதவுமுகி லருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௪௧)

இ - து.

கரியசெம் பைப்பூ பகங்குசை செழுஞ்சேவ சன்போது செம்பா திரி - கள்ளொழுகு வெள்ளலரி வெள்ளைத் திலோத்தங் கமழ்ந்திடு ஞ் சிவகரந்தை, விரிதரும் வெட்பாலை மாமணிப் பட்டிகை மிருங் கொடிப் புலிதொடைக்கி - மென்குராக் குன்றுத்தி சண்பகம் பூகம் விளாகிளுவை வெள்ளெருக்கு நொச்சின், மருவுசரு வெண்ணெய் நல்கொ ட்டைக் கரந்தைகிளை மருக்கண்டங் கத்திரி - மாதளை செருந்தியை வண்ணமிரு வாட்சியிவை மாபூசைபண்ணு மலராம், அரியகண் ணப் பர்சண் மலர்கொண்ட விமலனே யருள்பெறு வசந்தராயர் - அண் ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. ()

இ - து.

நிலமருவு தமாத்தை வெண்கோங்க சோருதண் ணீரம்ப லா ண்குறுஞ்சி - னிலவுவெள்ளைத் துளவு மாவிலிங்கந் தளிர் நிறைந்திடு பெருங்கரந்தை, குலவிய நங்காலி செவ்வேங்கை வெண்ணிறக் கொக்கிறகு வெள்ளெருக்கு ... இப் பச்சை யார்ந்த குங் குமவலரி கருமைவெண்மை, நல்விளா செவ்வந்தி யோரிதழ்த் தாமரை நவின்றநூற் றெட்டுவகையின் - நன்மலர் சிவார்ச்சனைக் கா மென்று புட்பவிதி நவிலாகமத்தின் முறைமையே, அலர்கொண்டு நா டொறு மனேன்மணிப் பூசைபுரி யருள்பெறு வசந்தராயர் - அண்ணா வினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. ()

சிவலிங்கவகைப்பலன் கூறியது.

ஆற்று மணலாலே யிலிங்கமே வாணித் தருச்சனை புரிந்தபே ருக் - காயுளுண்டாம் பசுஞ் சாணலிங்கப் பூஜை யாற்றுவோர்க் கர் த்தமுண்டா, நீற்றிலிங் கார்ச்சனம் முத்தியுண்டா நித்த நியதியா யாற்றோரமண் - ணையலிங்கஞ் செய்து பூசித்தபேர்க் கின்ப நிதிமை ந்தர் பேறுமுண்டா, மாற்றருஞ் சந்தனச் சாந்தாலி லிங்கம்வகுத்து வழிபாடு செய்யும் - மானிடர் தமக்குக் குபேரபாக்கிய மவனிமணி



மாட மனைகளுண்டாம், சூற்று முடையவர் பூசையாசாக்ஷி செல்வமா மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௪௯)

அர்ச்சனைமுதலிய தருமமொன்றுக்கொன்று விசேஷங் கூறியது.

ஓராயிரம்பூவினு லருச்சித் தனிகமொருவில்வமர்ச்சித்தலா - மோ ராயிரங் கிணறுவெட்டி வைத்தது நிகருமொரு தடாக ப்ரதிஷ்ட் டை, சீராயிரம் மனைகள் கட்டிவைத்திடு பலன் சேருமொரு மடம மைத்தல் - செப்பருங் கிரகத்த ராயிரம்பேர்க்கு நிகர் நீதிமொரு சந் நியாசியாம், பேராயிரஞ் சொல்லு மந்திரங்கட்கு மொரு பெருமுத் தி பஞ்சாக்கரம் - பெரிதமென் ஞானிகட்கு மொரு ஞானி யைப் பிட்சைசெய்வித்தலாகும், ஆராம சிவகபுரிவாழ் தருந்தரு மது ரை யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமு லைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௦)

பலன்களைக்குறித்துப் பூசை செய்ய வாரங்கட்குப் புஷ்பவகை கூறியது.

ஆதிவாரத்திலே வில்வமர்ச் சிக்கின் வஷ்ட்டமா சித்தியுண் டாம் - அமலனைச் ... யர்ச்சிக்கி லளவிலாச் செல் வ முண்டாம், நீதிசெவ் வாயினில் விளாவருச் சிக்கினன் னையமுள மைந்தருண்டா - நிகழ்புந்தி வாரமா தளையருச்சிக்கி னன்னெறியு மெய்ஞ்ஞான முண்டாம், வேதியன் வாரமதில் வங்கமலர் கல்வி யாம் வெள்ளிநாவற் கொழுந்து, மேதினிக் கரசனுஞ் சனிவார மால் காந்தி மெய்யிலேய் வாராது காண், ஆதியினில் வல்லான ராயற்கு நேயனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணா முலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௧)

ஆலயத்தீப மொன்றுங்கொன்று விசேடங் கூறியது.

ஓதரிய தேவா லயங்களுக் குள்ளே யுவந்துதேங்கா யெண்ணெ யா - லொருகோடி தீபமிட் டதையொக்கு நல்லெண்ணெ யொரு விளக் கேற்றிவைத்தா, நீதறுந் தெளிவான நல்லெண்ணெ யொரு கோடி தீபங்க ளிட்டதொக்குஞ் - செருமிரு கொம்புள்ள வெண்பசு

வி நெய்யினாற் றீபமொன் றேற்றிவைத்தது, வீதிபுனை பசுவினெய்யாயிரம் விளக்கொக்கு மிறைமூலைக் காயிரப்பை - நெய்விளக் கொன்றிட லிவ்வாயிரஞ் சுடரொக்கு மிறைகட்ப் பூரதீபம், ஆதியிற் பாவைமனை ஆதுசெலு மண்ணாமலை யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. ()

உட்சமயமாறின் பெயருந் தேபதையுங் கூறியது.

சந்தகண பதிபூசை பண்ணுவது பாசுபத சமயமாக் கதிர்வேலன் - றன்பூசை பண்ணான்மா விரதசமயஞ் சிவன் றன்பூசை சைவசமயம், கந்தரண வீரபத் திரபூசை பண்ணுவது காளாமுகச் சமயமாய் - கருதுவைரவ தேவரைப் பூசைபுரியு மதுகாணும் வயிரவ சமயமாம், புந்தன பயோதரபராசத்தியைப் பூசை பண்ணுவது வாமசமயம் - பகருமிச் சமயங்களாறுமுட் சமயமாய்ப் பன்னுஞ் சிவாகமங்கள் - அந்தரற் கரிதான மெய்ஞ்ஞான பூசைபுரி யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௩)

விபூதிவழியுந் தரிக்தும்விதி கூறியது.

ஒருகரந் தனைநீட்டி மூன்று விரலாலெடுத்தி யொருவிரலினாற் பூமிமே - லுதிரும் படிக்குநீ றிடவோ ரகோரநர கொருகோடி கற்பமாழ்வார், இருகரங் கொடுதொழுது வளர்தளங் கையிலேற் றிறைவனெதிர் குருவினெதிரே - யெரியினெதிர்வழி நடுவிலா குசமேவுழியிடாம லெள்ளளவாயினும், பெருநிலந் தன்னிலே வீழாம லண்ணாந்து பேசுபஞ்சாக் கரத்தைப்-பேரன்பினா லன்னி வெண்ணிற விபூதியைப் பெட்புடன் பூசுவோர்கள், அருணிதியு முயர்கதியு மாயுளும் பெருகுவா ரருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௫௪)

உருத்திராக்கந் தரிக்கும்விதி கூறியது.

உச்சியிடை யோர்மணி தலைத்த லிருகாதிலு முயர்ந்தமா மணியாறிரண் - டுத்தமாங் கச்சிரத் தெண்ணைந்து நீள்கழுத்தாறு முப்பத்திரண்டாஞ், செச்சையணிமார்பு நூற்றெட்டிரு முழங்கையிற் செப்புமிருபத்தாறதாஞ்-சேர்திருமணிக் கட்டி லிருபத்திரண்டுமெனி தேர்ந்துருத்ராக்கமணியை, நிச்சயப்பயபத்தி நியமநெறியுள்ளன்பு நேயமிறையார்வமுடனே-நிதலும் பூசைபுரிகாலத்திலாயினு நீங்காதணிந்தபேர்கள் அச்சிவசெரூபமவாரமென்னுமாமறைக - ளருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௫)



செபமாலைக்கு விதியும்பலனுங் கூறியது.

செய்யவிருபத்தைந் துருத்திரமணிக்கோவைசேர்த்துசெபமன்பர்செயிற்-செப்பரியமுத்திதருமொன்பதக்கமணிசெல்வமேன்மேலாயிடும், பையவெண்ணான்கு மணிகல்விநலமுந்தரும் பதினைந்துமாபிசாரப்-பாலதாம்பதின்மூன்று மேவுமுச்சாடனபலந்தருஞ்செபமாலிகை, கையினிற் சுறுவிரலின்மேற்றலைவன் ஞானமதுகாட்டும்பவித்திரவிரல் - கமுறுநடுவிரற்பகை சேருந்தற்சனிகடியநோய்விளிவுமுண்டாம், ஐயமிலையங்குட்டமருளே தழைத்திடும் மருள்பெறு வசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௬)

செபஞ்செய்யுந் திசைப்பலன் கூறியது.

நல்லகிழக்குமுகமாயிருந்து செபமேசெய்யினுடனாறும் வசியமுண்டா - நாடுமக்கினிமூலைநோயில்லை தென்றிசையை நாடிச்செபம்புரியிலோ, வெல்லருந்தீமைதரு நிருதிபுல்குரவை விளைத்திடுவருடதிசையதோ- வேண்டிமுன்றேடியபொருட் செலவுவாயுதிசை வீறுமுச்சாடனமிருந், சொல்லரும் வடக்கு முகமாய்ச் செபஞ்செய்திடிற் சொன்னமுங்கல்விநலமுந்-தோன்றுமீசானதிசைமுத்தி வீடாமென்று சொல்லுஞ் சிவாகமங்கள், அல்லலறவெத்திசையு மாகுமெதிகட்கு நல்லருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௭)

பிரதோஷதரிசனவிதி கூறியது.

நண்ணுதிரையோதசித் திதியதேபிரதோட நாளென்று பெயராகுமந்-நாளிலிருபத்தாறு நாழிகையதற்கு மேலேழுநாழிகையுநீல,

வண்ணாத்திரியின் மூன்றரைநாழிகைத் தொகைவரைக்கும் பிர
தோடகாலம்- மறவாமலே சிவாலயமந்தி ருக்கொம்புமத்தியினிருட்
டம்வைத்து, வெண்ணந்திகேசரன் விஷ[illegible]த்தை நீவிவான்மேவுறி
யினின்றிறைஞ்சி - விமலசிவலிங்கத்தை[illegible]ப்ரகாரவெனச்சொல்விழி
யினூற் றெரிசிப்பவர், அண்ணலருளா[illegible] செல்வமாயுளும்பெறுவர்கல்
லருள்பெறுவசந்தராயர் அண்ணாவினி[illegible]றுதிசெ யுண்ணாமுலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே. (௮௮)

அநுசிதபதார்த்தங்களைக் கூறியது.

பனையினதுவெல்லங்கிழங்குநுங்கொடு பனம்பழமி வையருந்த
லாகா-படர்தருசெடிப்பசளை செம்பசளைசிறுபசளைபரியகுண்டைச்சு
ரைக்காய்,சினையுலவுமரவள்ளியீருள்ளிவெள்ளுள்ளி செங்கீரைசெம்
முருங்கை-தென்னவெல்லத்தினொடு மீச்சவ்வல்லங்காச்சிரக்குபான்
புள்ளிபுண்ணாக், இனியதேன்கையாற்பிசைந்[illegible] தயிரொட்டைநெய்
யெருமை செம்மறியசப்பா - லின்றநாட்பத்திற[illegible]பாற்குதகத்
தில்விற்கறந்திட்டபால்,அநுசிதமிராசாரமுடையோருந்திடா ரரு
ள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே. (௮௯)

நாடோறுஞ்செய்கையால் வருமைவகைப்பாவமு
மதற்கு நிவிர்த்தியுங் கூறியது.

தினந்தொறும்பலபண்ட மம்மியிலரைப்பதாற்செறிவிறகடுப்பி
லிட்டுச்-செந்தியெறிப்பதாற் றண்ணீர்குடத்தினுட் சேர்த்திடமுகக்
கும்தனுன், முனைந்துசோதினிகொடுபெருக்கி நற்சாணி படமுறை
யாய் மெழுக்கிடுவதான்-முரியரிவாண்மனையிலே கறிகுறைப்பதான்
முனுமைம்பாவநீங்க, நினைந்துமறையோதிட தருப்பணம் விடுத்திட
லெருப்புனிடை யோமஞ்செய-னியமமொடுபலியிடு தன்பாலுவந்
துவருகியதிபெறு மதிதியோர்கட், கனம்பகர்தலிவைதினஞ்செய்மக
மதென்பர்கா ணருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்
ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௦)



நாடோறுஞ்செய்யும் பஞ்சயாகங் கூறியது.

பரிவொடெங்காலைக் க[illegible]ன்கழித்தருமறைபகர்ந்திடுதல் பிரமயா
கம் - பலவமரிருடி பிதுர்திகடருப்பணம் பண்ணுமதுபிதுரியாக
மாக், தெரிதரும்விதியினாற் றீவளர்த்தோம விளைசெய்குவது தேவ
யாகஞ் - செப்புஞ்சிவாகமப் படியன்னபலியிடுத லோர்ந்திடும்பூதயா
கம், வருமரியவதிதியர்க் குளமகிழ்ந்தன்னம் வழங்கன்மானிடயாக
நோய் - மாற்றுமகமைந்துந் தினஞ்செயிற்பாவமது வாராதெனத்தூ
ணிந்தே, அரனருள்பெறுஞ் சைவமறையவர்புரிந்திடுவ தருள்பெ
றுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்
ணாமலைத்தேவனே. (௯௧)

போஜனத்திற்குற்றங் கூறியது.

பந்தியிடையோத[illegible] யிருப்புக்கரண்டியாற் பரிமாறவுண்ணறே
டம் - பாவையரிடுந்[illegible]யைமீண்டு கொடுவாவெனப்பன்னியிடவுண்
[illegible]யாகாலத்து மத்தராத்திரியினூர் தயிரடிசிலுண்ண
றேடஞ் - சாலவயலாருண்ட கற்கலந்தன்னிலே தானுண்ணலதிக
தோடம், வெக்கெதிடுத்திடுமட்கலத்தினுர்தகரத்துமிகவுடைந்திடுகல
த்து - மேவுமுள்ளங்கையினு மிட்டுண்ணினுண்ணன் மேலான
தோடமாகும், அத்தமிகுபொன்வெள்ளி பாத்திரத்திலையுமி[illegible]தமருள்
பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வ
ண்ணாமலைத்தேவனே. (௯௨)

போஜனகாலத் தன்னபலியிடும்விதி கூறியது.

போஜனஞ்செய மிடத்திருமெழுக்கிட்டுப் பொருந்திய கிழக்கு
முகமாய்ப் - பொற்பாயிருந்திட்டவடிசின் மேலுதகம்புரோட்சித்து
டன்வலப்பால், வாசநறுநெய்யன்ன மைந்துபிடிபலிவைத்து மந்திர
நவின்று நன்னீர் - வலமாகவாபோசனங் கொண்டயிருநீர் மருவு
சிறுவிரலின்வழிவிட், டேசிலப்பலிகொடிக்கிட்ட சனமைங்காலெழு
த்பிராணாகுதிபுரிந் - தின்னடிசிலுண்டுத் தராபோசனங்கொண்டெ
ழுந்தசட நீர்ப்பெருவிரல், ஆசில்வழிவிட்டெழுத லாசாரசைவநெறி
யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்கு
ரிய வண்ணாமலைத்தேவனே. (௯௩)

## போஜனஞ்செய்தபி னனுட்டானவிதி கூறியது.

போசனஞ்செய்தபின் பாசமனமுஞ்செய்து பொற்புடன்வட்டமுக்கம் - போருகாசனமேவி வில்வலன்வாதாவி பொன்றிடவயிற்றைவருடித், தேசொடுஞ்சிரணஞ்செய்தரும்போதுமச் சிவமுனியையுன்னியோர்ந்து - திலமளவு திருநீறருந்திப்புனைந்தனந் தேர்ந்தங்கன்யாசமுடனே, வாசியுனெழும் பிராணாயாமமாற்றிநா மௌனமாய்மூவேழுரு, மந்திரமகோ ரத்தையுள்ளேசெபித்துமேன் மகிழ்வொடுமிருப்பர்களாலும், ஆசையுறுகிரகத்தவாச்சிரமநெறியென்ப ரருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௪)

## தாம்பூலந் தரிக்கும்விதி கூறியது.

மெல்லிலைக்காம்பும் பழுப்போடுகாம்புதன்மேற் றெரும்புங்கசங்கன் - மிகமுறுகலமுகனும் வரங்கலிவ்வெட்டருகும் வெற்றிலைக்குற்றநீக்கி, நல்லபாக்கெச்சின்முக் காலுமிழ்ந்தாராய்வர் கடித்திட்டு ரிலைகிழித்து - நண்ணுகற்சுண்ணங் கிராம்பேலசக்கோல நன்மாந்துவான்மிளகுநேர், சொல்லருஞ்சுக்கு மணமேவுசாதிக்காய் தொடர்ந்திடுஞ்சாபத்திரி - சுகவாசபூரமிவை தாம்பூலசகிதமாய்த் துய்த்திவர் செல்வர்களென்டாய், அல்லியலர்வாவிசூழணியண்ணாமலையனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௫)

## தோடம்வரும்வகை கூறியது.

உணருந்துங்காலை போசனைசெய்தல்பிடி யுண்டையாயுண்ணல் சிந்தல் - ஒருவிரலைநீக்கியுணன் மயிரென்புபூச்சிபுழு வுகிர்ப்பட்டசோறுண்டிடல், காணுநகமயிரினைப்பல்லாற்கடித்தலொருகாலினைற் காறேய்த்துநீர் - கழுவிடுதலுண் கலத்தெச்சிலையுமிழ்ந்திடுதல் கையினை னகமுரித்தற், பாணியாற்றலைசொரிதல் விரலினைற்றரைகீறல் - பாழ்மனையிலேயுறங்கல் - பட்டகஞ்சாக்கட்குடித்தல் பெரியோரைப்பழித்த னித்திரையெழுப்பல், ஆனதன்றுதலிவை மகாதோடமென்பர்கா ணருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௬)



## ஆசமனஞ்செய்யுங்காலங் கூறியது.

வாசமலர்கொய்யினும் வீதியிடைபோய்வரினு மலசலம்விட்டுவரினும் - மாதரொடுசம்போக மேவிடினுநீசர்நிழன் மருவியுடன்மீதுபடினுந், தூசணையுடுக்கினும் பலகாரமுண்ணினுஞ் சோறுண்ணினுநீருண்ணினுந் - தூயநற்கருமங்க டருமங்கள்புரியினுந் தொகுசிராத்தங்கள்செயினுந், தேசுதருதானங்கள் செய்யினுங் கனிகாய்கடினுந் தூங்கியெழினுந் - தீயகொலைசெய்குவோர் பாயுநிழறேயினுந் தீண்டொணாதவை தீண்டினும், ஆசமனமக்கணஞ் செய்யல்விதியென்பர்கா ணருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௭)

## மூதேவிவாசமுந் தோடமுள்ளவையுங் கூறியது.

காட்டாசுநீழலுங் விளாமரத்தடிநிழலு நன்மனைவிளக்குநிழலும் - கூட்டாமுழு விரலினுடன்மேற்படியி னலமிலாச் சேட்டையுறையும், பூட்டுநான்மறையவர்கூடக்கிழமிதித்திடற் புனிதமாயொருவனுண்ட - புனற்சேடமொருவனுண லாடைதோய்த்திட்டநீர் பொருந்தவுட்கொள்ளலாகா, வீட்டிடைபெருக்கிய விளக்குமாற்றுப்புழுதி மென்மயிருகுத்தபுழுதி - வீரிடுங்கழுதைகாய்ப் புழுதிவெந்திசொம்பல் வேகாக்கரிப்புழுதியும், ஆட்டிடைப்புழுதியுமாகாதுமேலென்ப ரருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௮)

## இவ்வகையமையிற் சிறப்பெனக் கூறியது.

விளையுநன்னிலமுமாய்த் தண்ணீருமருகதாய் விளைவெலாமினிமுமாய் - வெள்ளிமலைபோலெருது கருமலையெனக்கடாவிடுகோனுமாயேருமாய், களவிலாநெஞ்சுடைய படியாளுமாயுழுங் காலத்திலேயுழவுமாய்க் - கனமான கிடைபெருத் தழையுமாய்நாற்றுவிரைகாலுமாய் மேனடவுமாய், வளமானபாடுமாய்க், களைபறிவுமாய் வேலிவளவுமாய் நற்காவலாள் - வைப்புமாய் நாடோறும் வந்துபார்க்குந்திறமுமா யிருந்தாற்பலிக்கும், அளையுறங்கொழுமுனைச் செல்வமேசெல்வமா மருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௯)

## இந்திராணிக்கி யிந்நாளிற்கூடிந் சுபுத்திரநுண்டாமெனல்.

இங்ஙனசரீரமுண் டாகின்றவயணமே காதசியிலங்குபர்வ- மிய
லமாவாசை மாதப்பிறப்பாகா திருக்குநாட்களைநீக்கியே, மங்கையர்
கள்பூத்துநீ ராடியதினத்தொட்டு வருமாறிரண்டுநாளில்-வாலாயமாய்
க்கருக் குழிவாய்திறந்திடும் மணவாளனுடைகலந்தால், பொங்குசுக்
கிலமுஞ் சுரோணிதத்தொடுசேர்ந்து பூரிக்குமொண்சிப்பியிற்-பூத்த
முத்தைப்போலு மருகுநுனிமேற்பனிப் போலுந் திரண்டுருவமாம்,
அங்கமலசன்வந் தமைப்பனேயிவ்வுருவ மருள்பெறு வசந்தராயர்-அ
ண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே.()

## சரீரமுண்டாகு முறைமை கூறியது.

சுக்கிலஞ்சோணிதத் துட்சேர்ந்துசோதித சொரூபமாய்த் த
மர்வாசலைத் - தோன்றுதடைத்திடும் வாயுவேகத்திபோற் சூழ்ந்து
காக்குறும்விந்துவோ, டொக்கப்பிராணவாய் வொளியாமபிந்துசேர்ந்
தொன்றியேவெளியினிற்கு - முட்பரியந்துவிந்துடன் பிராணவாயு
வுங்கூடி யுள்ளேகலந்திருக்கும், மிக்குதாணன்கருவளர்க்கு மக்கருவுக்
குண்மேவும் வியாதிமூன்றும் - விரவிக்கலக்குமைந்தாநாட் கருக்கு
மிழிமேனிபோலாய்வளருமே, அக்கமணிதார்க்கையுறை மிக்கபதி
வாசனை யருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணு
முலைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (எ௪)

## சரீரம்வளரும்வகை கூறியது.

கருத்தரித்திட்டபத்தா நாடிரண்டுருவுகண்டுமுளைபோன்முளை
த்துக் - கருதுபதினைந்தாந்தினத்திலே முட்டைபோற் காணுமக்க
ருமிதக்தே, யுருத்தருமுதற்றிங்கள் கம்பமாமிருமதியி லுற்றதலைமு
துகுமுகமா - மோதுமூன்றாந்திங்கள் செங்கையும்பாதங்க ளுறுவி
ரல்களையுமுண்டாந், திருத்துநாலாந்திங்கண் மூக்குமுகமுருவமா
ஞ் செய்யவைந்தாந்திங்களிற் - செவிநாவுகண்களாஞ் செப்புமாறாந்
திங்கள் சேர்ந்திடுநகங்களுண்டா, மாத்தமாணிக்கம்பதித்தமுடியர
சர்புகழருள்பெறுவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமு
லைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (எ௫)



## இ - து.

விஞ்சுமேழாந்திங்கண்மயிர்நரம்பென்பும் விளைந்திடுஞ்சடமோ
டுதான் - மேவிடுஞ்சலமலந் தங்குதாதுக்களு மிடைந்து மூச்சுண்டா
குமே, யெஞ்சிலெட்டாந்திங்க டாயுண்டசாரங்களியாவு முனையான
கதிர்போ-லேய்ந்தருவிபாய்ந்தே கபாலத்தின்வழியாக விழியவக்குழ
விவளருங், கொஞ்சவுருவாவொன் பதாந்திங்க ளறிவுமேற் கொடுபி
றப்பித்தோன்றனைக் - குறித்திருகரங்கூப்பி யருடாவெனத்தவங்
கொண்டே யிருந்துபுரியும், அஞ்சலப்பையொரீஇ வெம்பிறவிநோக்
குமே யருள்பெருவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமு
லைக்குரிய வண்ணுமலைத்தேவனே. (எ௬)

## பிறவித்துன்பத்தினியல்புகூறியது.

கொடியபத்தாந்திங்கள் சற்குருப்பார்வையே கொண்டிடுங்குழவி
தனக்கு - கோதறும்பானவாயிற் கீழ்நோக்குவிக்குமக்குழவிமிகுதுன்
பமுற்றுப், படியிற்பிறந்தபின் வைகரியமாயாபடப் போர்வையான் ம
றைந்து - பண்டையிலிருந்த போதிவழிந்திருவினைப் பாசவலையிற்ப
டிந்து, துடியளவுநோநீங் காக்கவலைநோயிலே தோயுமிங்கிதனை
நோக்கிற் - சுரைக்கொடிபடர்ந்ததை நிகர்க்குமிச்சனனமாந் தோதக
மொழிப்ப ரறிவோர், அடியணுமலையனே தொடியராவணியனே ய
ருள்பெருவசந்தராயர் - அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய
வண்ணுமலைத்தேவனே. (எ௭)

## அட்டலட்சுமிகள்பெயர் கூறியது.

மட்டிலாச்செல்வங்கண் மருவுதனலட்சுமி வளர்த்ததானியலட்
சுமி - மணிமாடமனையாதி செந்நெல்வயலேறட்டங்கள் வளமிகும்பூ
லட்சுமி, யிஷ்டபாக்கியகுணச் சந்தானலட்சுமியெழுத்தொடுநிறைந்
தகேள்வி - யியல்பானபுத்திவளர் வித்தியாலட்சுமி யிசைத்தவீரிய
லட்சுமி, திட்டமாயெங்ஙனுஞ் சென்றபோதினும்வெற்றி சேரும்வி
சையலட்சுமி, தீமைவந்தாலுங் கலங்காதிருக்கின்ற தீரதைரிய லட்
சுமி, யட்டலட்சுமிவாச நேசதுரைராஜர்புக ழருள்பெருவசந்தராயர்
அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத்தேவனே.

## ஆடியைந்தாந்தேதிவரும் வாரத்தின்பலன் கூறியது.

ஆடிமாதம்பிறந்தைந்தாந் தினத்திலே யரியபுதவாரம் வந்தா-லவ்வருடமொருபோக நாடெலாம்விளையு மவனிமேலிட்டபயிர்கள், பாவிளையாழும்வரி விருபோகமேவிளைவு பாரெலாஞ்சுகசீவனம்-பண்ணு சுக்கிரனெனில் கதிர்சாவி சனியதனு பயிரொன்றும் விளையாதுகாண், நீடுஞாயிறு பயிர்கள்பாழ் திங்களொருபோக நெல்விளையுமே செல்வமாம்-சேர்ந்தவங்காரகன் பனிச்சோளமேவிளையுநெறியீதுறுதி யென்பர்காண், ஆடல்புரியண்ணலே மாடமாளிகைசெல்வ மருள்பெரு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௬)

## பெண்கள்ருதுவாகும் நக்ஷத்திரபலன் கூறியது.

மன்னுமச்சுவினியினிற் புட்பவதியாயிடின் மருவுமுனைக்கேசேடமாம் - வரன்பரணிகாணவுல மைந்தருண்டாயிடக் மருவினி தந்தைமலடியா, முன்னுரோகணிதிர்க்க மங்கிலியமுமையுமாம் முலவுமான்றலை தலைவனுக் - குயர்சுகமளிப்ப டிருவாதிரைவெறுப்புமனமுடையனாம் புனர்பூசநாள், பொன்னெழில் சுகந்தரும் பூசன்சிறப்புடையள் பொலியுமாயிலியமைந்தர் - பூத்தொழிமுகமுரிய புருடன்மேலதிகாமி பூரமைந்தர்களாணியாம், அன்னநடையார் கடனசாலைவளர்சிம்மபுரி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௭)

### இ - து.

உத்திரம் பதிவிரதை யத்தமென்மேற்செல்வ முண்டாயிடுஞ்சித்திரை - யோக்கிய நலந்தரும் பாங்குறுசுவாதிசுக முற்றிடுந்தனிவிசாகம், மத்திபந்தலைவனுக் கல்லல்புன்கேட்டை மறுபுருடனிச்சைமூலம் - வாழ்வுபால்பாக்கியம் பூராட மடிமைகெடு மாமுத்திராடஞானப், பத்தியுறுமோணநற் பொருளாமவிட்டம் பசம்பொறுஞ் சதயநிதிபோம் - பசரும்புரட்டைமல தெத்திரட்டாதிமிடி பயமேவதி நடலையாம், அத்தந்தநிற்செறி மடந்தையர்கள்பூத்தபலனருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௮)



## ஆகுசமுறுத விடங்களைக் கூறியது.

தேவால யங்களிற் சந்நிதா னங்களிற் றிருவிழாவிற் சிறந்த-தேர்நடக்கிடு பொழுதி லருமறை பகர்ந்தவழி செய்யுக் தழற்சாலையிற், பாவாணர் கல்விப் ப்ரசங்கம் புராணம் படிக்கின்ற வித்வசபையிற் - பார்வைக் கலங்கார சோபன முகூர்த்தங்கள் பண்ணும் விவாகசபையிற், கோவான சிங்காதனத் திருக்தாகசெங் கோல்கொண்டராசர் சபையிற் - கூறும்மிவ் விடமெலா மாகுசமிலையென்று கூப்பிட்டுரைக்கு மறைகள், ஆனந்தனே மாவார் வனத்தனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணா முலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௭௯)

## அசுவயிலக்கணங் கூறியது.

நீலமாகத முத்து மாணிக்க மம்பொன் னிறைந்தவெண் பனிச்சந்திரன் - நெடியதாமரைமலர்க் காசைமலர் கருமுகி னெருப்புமணிவண்டுதிம்பூரற், கொம்மைமற கின்றசெம் பஞ்சுக் குழம்புகுயில் கூறுமிரெண்டு நிறமாகு - குதிரையுத்தம மிவையி லொருநிற முடைத்தாய்க் குறித்தமுகமார்புச்சிவாற், காலிவ் வெட்டிடம் வெளுப்பாயிருக்கிலது கதிபட்ட மங்கலமதாங் - கவினுமுக நாற்பாத மைந்தும் வெளுப்புறிற் கவிபஞ்ச கல்யாணியாம், ஆலவாயிற் பரியி லக்கண முறைந்தவா னருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௮௦)

### இ - து.

கட்டுவாம் பரிகரபி தொட்டுமுன் புறமெலாங் கதிர்போற் சிவக்குமதிபோற் - கவினுறம்பின் முழுது நலமா வெளுக்கிலக் கற்கிபகல் விஜயமென்பார், வட்டமதி போலவே முற்புறம் வெளுப்பாய் வயங்கியேபிற் புறமெலாம் - வடிவுசெங் கதிர்போற் சிவந்திடுங் கிளையது மருவுகதிர் விஜயமென்பார், இட்டமுறங்குல முயர்ந்தபரியுத்தம மெண்பத்துரா லங்குல - மிவுளியது மத்தியம தறுபத்தொரங்குல மியம்புமதக் கோடையாம்; அட்டமங்கல துரக நீத்தலு நடாதுதுரை யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௮௧)

இ - து.

வாசியின் வயதுமுப் பத்திரண்டே வருட மருவிடும்பத் தவத்தை - மாற்றியொரு மூன்றுவற் சரமுமிரு மாதமு மன்னுநாட் பன்னிரண்டாம், பேசுபரி யெவ்வண்ண பேதக மிருக்கினும் பெருவெள்ளை தான் கலந்தாற்-பெட்புமிகு மப்புரவி தலைவன் றனக்குப் பெருஞ்செல்வமுங் கல்வியாக், தேசுள கறுப்புப் பதுக்கு வயிறேனுந் திகழ்ந்த நெடுமார்பமேனுஞ் - செஞ்சிவப் பேறினுங் வெள்ளைநிற மேவினுஞ் செயவாருணத் தாகமாம், ஆசுமதுரஞ் சித்ர வித்தார கவிநூர்புகழருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (அஉ)

இ - து.

ஏறுபரிமாக் கழுத்திடை யிரட்டைச் சுழியிருக்கின் மிடியின்னலுண்டாம் - இருகாலிலே யிரட்டைச் சுழியிருக்கி லவ் விவுளியாளி னளபக்தங், கூறருங் கொடியவினை யாயிருக்குமுண்டாங் குதக்குருதெனினுங் - குலவுமுற் காலடியினுங் கபோல [illegible] முழந்தாளினும், வீறுசுழி தானொன்றின் மாவேறு தலைவனை வெவ்வினை மிகுத்தொறுக்கு-மேவுமிவுளிப்பந்தி யூடுறப்புண்டய மெலிந்து நல்குரவெய்திடும், ஆறலவுசெம்புவள வேணிமதிமுடியனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (அங)

இ - து.

தெரிதரு கழுத்தினிடை யொருசுழி யிருந்திடிற் றெய்வமணி யென்று பெயராம் - திருமகள் விலாசமுண் டாமுகந் தலைநாசி திகழுமார்பிவை நாலிடம், மருவிய விரண்டுசுழி யுண்டாயின் வெற்றிதரு மாறிலாச் சரிமத்தகம்-மணியா யிருக்கிலவ் வாசிமே லேறுவோர் வாழ்வுமேன்மே லெய்துவார், விரவுநெற்றியினடுவி லொருசுழி யிருக்கி னது வீறுகிரிமதிபு முண்டாம் - மேலிவ் விடங்களிற் சுழியிலா விவுளியின் மேலேறனன் றன்றுகாண், அறியயற்களவிடற் கரியபே ரழகனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (அச)



இ - து.

வேங்கைநரி சிங்கமுயன் மயின்மல் லாம்புமத வேழங் குரங்குபோல - வேகமுள நடையதாய்ச் சங்குவெண் கன்னலின் விலாழிகால்வாய் நுரையுமாய்த், தாங்குவிற் றெனிசங்கு மேகமத் தனமேறு தண்டிவரமடங்கநெறியாய்ச், சாற்றுகுற மகள்போற் கவிழ்ந்தமுக மாகநாத் தனையுமாந் தளிரினிறமாத், தேங்கமழ் மலர்ந்தகரு நெய்தல்போ லுக்கிரகஞ் சேர்ந்தவிழியாய்ப் பற்கடாஞ் - செப்பமா யொப்பமாய் வாலைந்து சாணுய்ச் சிறக்குங் குளம்புயரமா, யாங்குதிரை லக்ஷண முரைத்தவிதி யென்பர்கா ணருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (அரு)

இ - து.

பாயும் பெரும்பரி முகத்திடை வெளுத்திடிற் பார[illegible]சையிக்கும் - பணிபூண் கழுத்துவால் முதுகிவை வெளு[illegible]திடிற் பாக்கியமெனுங் கொடு[illegible]யுமிருபிடர் வெள்ளை[illegible] யிருந்தாற் புதல்வரின்[illegible]மேலு முண்டா - மெழின்மு[illegible]ல் வெள்ளையுறில் கவலையோ யின்றியே யெப்போது மனமகிழ்தருந், தோயுமுக மிடறுபால் வெள்ளைநிற மேவிடிற் றுயசந்தான முண்டாந், தோன்றிய வலப்புறம் வெண்ணிறஞ் செல்வமாங் அய்முகம் பிறபாற்சுகம், ஆயும்ப்ரபந்த கவி நேயம் பொருந்துதுரை யருள்பெறு வசந்தராயர், அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே.

இ - து.

மார்புங் கழுத்துமா லப்படம் போலதாய் வாழைமட லொத்த செவியாய் - வதனமுக் கோணமாய் நுதலுயர்ந் தகலமாய் வைக்குமடிபக் தொத்ததாய், ஏர்புனையு காலுகாலுங் கடைந்தே யதையெடுத்து காட்டியது போலா - யிருதலை திரட்சியாய்ச் சுழல்கின்ற போது தீயெழுகடைக்கோ லென்னலாய், போர்புரி முகத்திலே வெட்டினு மெதிர்ப்பதாய்ப் புரவியோன் மனமறிவதாய் - பொங்குசுழி கோட்டையுந் தங்கிய தருக்குமும் புலியெனப் பாய்கின்றதாய், ஆர்பரியிருக்கின்ற துத்தமப் புரவிகா ணருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

இ - து.

கொய்யுளைப் புரவியது கிற்கின்மலை யென்னவுங் கூத்தினடமக
ளென்னவுங் - குலவிடும் வாசியின் மான்மதம் பரிமளங் குங்கும
மகிற் கொப்பதாய், வெய்யகட் பொறியரா வட்டநெடு வீதிடை
விடுசுழற் பந்தென்னவும் - மேலேறு சேவகன் காற்குளடங்கியே
வேகத்தில் வளியென்னவுஞ், செய்யுநற் சவ்வீகை பதினெட்டு முன்
னதாய்த் திருத்தமிரு நான்குவயது - சென்றபரி மேலேறல் விதி
யென்று மறையாஞ் செழும்பரியி லேறிவந்தெம், ஐயநீ பாண்டியற்
கறிவித்த தென்பர்கா ணருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்
றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௮௮)

## இவர்முன் னிலின்னது பெறவேண்டுமெனல்.

[illegible]மாகிய பிறவி சாராத மெய்ஞ்ஞான சாதனம் பெறவேண்
டினோர் - சரியைகிரியா யோக மூன்றுங் கடந்துமெய்ச் சற்குருவை
யடையவேண்டும், [illegible]மார் தருசிவா லயலிங்க தரிசன நாடியருள்
பெற வேண்டினோர் - [illegible]ன் வலக்கைதலை மேற்கொள்ள[illegible]கார
நந்தியைமுன் காணவேண்டும், ஆமியா னரசரைக் கண்டுகாரிய செ
யம் பூர்த்தியாய்ப்பெற வேண்டினோர் - புரவலர் கருத்துக் கிசைந்த
மந்திரிகளபாற் போய்முன்பு காணவேண்டும், ஆமிக வளங்கள் மிகு
மாபுரி விளங்கவரு மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதி
செ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௮௯)

## கலவியிற் கொக்கோகவகை கூறியது.

நாடுமுட விழையுமா லிங்கனம தோரைந்து நண்ணுமிர முசரா
பான-நல்லசுவை பதினொன்று மயிர்த்தலை பதினைந்து நகநகக் குறி
களேழுங், கூறுதந்தக் குறிக ளெட்டுயர் பறவைபோற் குரலோ
சையெட்டு மிருகைக் - குவிதா னடங்களிரு நான்குமுரை கரணங்
கள் கூறுநாற்பத் தெட்டுமே, யூடுகல விப்போக மெய்ம்முயக் கிரெ
ட்டு முறைமுநூற் றிருபதுடனே - யோராறு மொழிகின்ற கொக்கோ
கவிதமறிந் தாடலோ டினிதாகவே, யாடவரு மங்கையரு மநுபவித்
திடலின்ப மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்
ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௦)



## பெரும்பாலுநோய்கள் வாராவகை கூறியது.

எட்டுநாளைக்கிரு முழுக்காடுவோர்பட்ச மிருசண்க லிக்கமிடு
வோர்- எத்தாக மதிதோறும் பித்தநீரெல்லா மெடுத்திட மருந்து
கொள்வோர், திட்டமா யெண்ணான்கு நாலினுக் கொருகாற் றிருந்
திழை புணர்ச்சிசெய்வோர், செப்புமொரு மூன்று மாதத்திலகுநசிய
மது சிருடன்செய்து கொள்வோர் - வட்டமா மூவிரு மதிக்கொரு
விரோசனம் வாங்காமலேவாங்குவோர்- வயிறுபசிகண்டுண்ணுவோர்
களுக்கொரு நோயும்வாராது மிகுதியாக, அட்டமாசித்தி முன்னிட்
ட மதுரேசனே யருள்பெரு வசந்தராயர்- அண்ணாவினிற் றுதிசெ
யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௧)

## தீயோர்தேடுபொருள் போம்வழி கூறியது.

வையகந் தன்னிலே தீயோர்க ளீட்டுபொருள் வம்பருக்காம்
பிணிக்காம், வாயோட்ட மாகவே பேயோட்டு பூசாலி மார்கடஞ்
செலவினுக்காங், கையகங்கொண்ட கொலை பாதகர்க்[illegible]டைக்
கன்னமிடு கள்ளருக்காங் - கஞ்சாமயக்க பிணி [illegible]மா சனங் கடி
யகட் குடியருக்காம், வையகஞ் சிறிதிலாப் [illegible]யவழக்கது பேசும்
வீண[illegible] தழற்காம் - வேசையர்க்காம் [illegible] மூசமன்னுக் காகும்
வேந்தர்தண் டத்தினுக்காம், அய்[illegible] ஐயனே செய்யவெழின்
மெய்யனே யருள்பெறு வசந்தராயா அண்ணாவினிற் றுதிசெ யுண்
ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௨)

## நல்லோர் பொருட்பயன்படுமாறு கூறியது.

சேற்கடற்றுரணியி னல்லோர்க ளீட்டுபொரு டேவாயலங்களு
க்காந் - தேவாபி டேகமா ராதனைக்கா மையர் திகழ்சமா ராதனைக்
கா, நூற்கடற் கரைகண்ட புலவர்கட்கா மௌன நுவலுமெய்ஞ் ஞா
னியர்க்காம் - நோற்குமா தவமுடைய பேர்க்காம் பசிக்கணனு கர்ச்
சிக்கு முதவவாகும், நாற்கிளரும் வேதநெறி வேள்விகட்காஞ் சுகு
ண நண்ணுதா னங்களுக்கா- நற்றொண்டர் பாகவதர் தங்களுக்காம்
பரியு நாலெட் டறங்களுக்காம், ஆற்கணுல் வர்க்குமுன் னருள்பாஞ்
சோதியே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்
ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௩)

## பிரயாணத்துக்கு ராசிபலன் கூறியது.

மேடலக்கின மதனி லூர்ப்பயண மாகாது வீறிடப லமுள்ள

தாம் - மிதுனத்திலே செலுங் காரிய மெதுப்படு மென்கடக மாசரீ சேவை, நாடருஞ் சிங்கத்தி லாதாயமாங் கந்நி ளிர்சுரங்காணுங் துலாம் - நற்பொருள் கிடைக்கும் விருச்சிகம் பிணியிறு னலிவுட னடுக்கமுண்டாங், கோடுறுந் தனுசுசத் துருஜயம் மகரமது கொடியபயமாங் கும்பமோ - கொடியர்தண் டனைசெய்து மீனமழையாற் பயங் கொண்ட யாத்திரை செய்காலத், தாடுவே யுருதோளி பங்கவிஃது. ண்மையா மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௪)

## முக்குணத்தியல்பு கூறியது.

ஞானமருடைவ மேன்மை வாய்மைபொறை மோனமொடு நவைசெயைம்பொறி யடக்கல் - நற்கரும வியல்புநெறி சாந்தமுயர் கல்வியிவை நல்லசாத்வீக குணமாம், ஈனமறு தானமன வூக்கந்தவந் தருமமெழில் கல்விகேள்வி ஞானம் - இவைவீர செளரிய மலங்கார மி... யிராசதகுணத்தி னியல்பாங், தாறுறு கெடுந்துயி லொழுக்கமுத ல... தாழ்வஞ் சமாதிகோபந் - தாவுகொலை பேருண்டி சோம்புபொய் ... வை தாமதகுணத் தன்மையாம், ஆனமுத மைந்தாடு மந்திவண் ண... னை யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமு...க் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௫)

## நவக்கி...தானங் கூறியது.

பானுவுக் கிந்திடுந் தானமது கன்றீன்ற பசுவாகு மதிதனக்குப் - பானிறச் சங்கு செவ்வாய்க்குச் செவப்பெருது பைம்புதற்குச் செம்பொனும், வானியல் வியாழந் தனக்குவெண் பட்டாடை மாசுக்கிரற்குவெள்ளி - மருவிய சனிக்குமிவை கரியநிறமா யிலகு மயிடமாமெருமைக்கடா, தானிய லிராகுவுக் கச்சங் கறப்புடைத் தானவெள்ளாட்டுக்கடா - தக்கசெங் கேதுவுக் கோதரிய மதயானை சாற்றுமறை யோர்க்களித்தல், ஆனது நவக்கிரக தானவிதி யீதென்ப ரருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௬)

## நவக்கிரகவுருவுந் திசையுங் கூறியது.

நடுவட்ட மாமிரவி யுருவிருக் கின்றநிலை நாடுமக் கினிமூலைதா, னற்சதிரமதியுருக் காற்றிசைத் திருகோண நாணிலமகன்வடிவமாம் - வடிவிலீசன்றிசைப்பாண வடிவம்புதன்வடதிசைத் தீர்க்கசதுரம்,மருவுபொன்கிழ்த்திசைப் பஞ்சகோணத்துரு வயங்குசீர்தரு சுக்கிரன் - மிடையுமேற்றிசை தனுப்போலுருச்சனி நிருதிமேவுசூர்ப்பாகாரமாய் - மேவுவனிராகுவட மேற்றிசைத் துவசமெனவெங்கேது தங்குமிடமாம், அடையுமொன்பது கிரகவடிவமுந்திசையுமீ தருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே. (௯௭)



## நவதானியமுஞ்சமித்துங்கூறியது

சூரியன்கோதுமைசெஞ்சாலி சோமனுந்துவரை செவ்வாய்தனக்காஞ்-சொல்லரியபுந்திக்கு நற்பசும்பயறதாந் தூய்வியாழந்தனக்கு,வேரியங்கடலையாம்வெள்ளிக்குமொச்சையாம்மேவியசனிக்கெள்ளதாம்-வெற்றிகொளிராகுவுக் கானமாடங்கேதுவிளைகாணநவதானிய,நாரியவெருக்குப் பலாசங்கருங்காலி நாயுருவியச்சுவத்தம்-நல்லத்திவன்னிகூர்ப்புல்லறுகு தர்ப்பையிவை நவசமித்தாகுமென்றே, யாரியமுணர்ந்த மேலவர்துவிதியென்ப ரருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

## மூவர்தேவாரத்தொகைகூறியது.

மன்னருந்திருஞானசம்பந்தர் செந்தமிழ்ப்பதிகமீரெண்ணாயிரம் பண்பாய்சுந்தரரிசைத்த தேவாரப்பதிமேலழாயிரம், நன்னுதற்றிலகவதி யாரொடுந்தோன்று திருநாவினுக்கரசர்சொன்ன-நற்றமிழ்ப்பதிக நாற்பத்தொன்பதாயிர நாமெம்மூவர்மொழியுட், பின்னரெண்ணூற்றுறுபத்து நாற்பதிகமிப்பேருலகுதனில் விளங்கும்-பேசுமிருநூற்றேழுபத்தைந்துசிவதலப்பெருமைசேர்பதிகமாகும், அன்னதிருமுறையோதிமின்னடிப் பூசைசெய்தருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௯)

## சிற்றின்பப்பேரின்பவட்டாங்கயோகங்கூறியது.

வனிதைபஞ்சணையாறு சுவைபோசனங்கந்த மருவுசித்திரவஸ்த்திரம்-மாழைமணியிழையணித்தயில தாம்பூலமெண்வகையதேசிற்றின்பமாங், தினமணிவிபூதி ருத்ராக்கபஞ்சாக்கரந் தீர்த்தம்பிரசாதமாசான்-றெரிசனமிலிங்கசங்கமமெட்டுமன்பருட்டெளிதரும்பேரின்பமாங், தனியியமநியமமாதனபிராணாயாமதற்பிரத்தியாகாரமாம்-தாரணைதியானஞ்சமாதியிவ்வெட்டுமே சாற்றுமட்டாங்கயோகம், அனவரதநடனமிடுவனருகபதத்தனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௦௦)

### நாலுயுகத்திலும்பூசை செய்தவர்களைக்கூறியது.

கிருதயுகத் திலாதியர் கிரேதாயுகந்தன்னிலே செங்கனற்சோதிமலையாக்-திருமாலயன்முதலவிமையோர் கண்மறையினூற் சிவதருமமேபுரிந்தார், நீதிமாமணிதிரேதாயுகத் தாகமநெறித் தபோதனர்பூசனை-கிதுவாபரமதில் வச்சிராங்கதனீன்ற கிருபனும்வீரசம்பு, காதனேகலியில் வல்லாளபிரபுடதேவராமர்தருமஞ்சகாப்த-நவிலாயிரத்தேழுனூறுமெழுபத்துமேனும் பிலவங்கவருட, மாதியாய்நின்றதல தருமகர்த்தாவானவருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௦௪)

### அவையடக்கங்கூறியது.

பரிமளந்தோயிதழி மாலையொடுமெணமிலாப் பச்சிளம்புல்லறுகினைப்-பழுதென்றுதள்ளாமலீசனுளமகிழ்வொடும் படர்சடையிலேற்றபடியால், விரவுமாசையினூலுரைத்தவிச்சதகமதுமிக்கபுன்சொல்லாயினும்-மேதினியெலாம்புகழிலக்கணமிலக்கியமிகத்தெளிந்தறிநாவலர், பூவுநின்புகழ்தலப்பெருமையின்றுதியிருப்பதனுலிகழ்ந்திடாமற் - படியுளநிறைந்தன்புகொடு பெரியவர்தருட்பாலித்துமேற்கொள்ளுவார், அரியயனேடிந்திரன்பூசித்தவீசனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௦௫)

### வாழி கூறியது.

சந்தமுமோது நான்மறைவாழி யாகந்தனிர்க்கும் பசுக்கள்வாழி-தரணிகாவலர்வாழி மனுநீதிவாழிமுத்தமிழ்வாழிவேள்வி தனிலே, வந்தெழுந்தெய்வீக மன்னவன்வாழி யவன்மதலைமெய்ப்பொருளுணர்-மைந்தர்வழி வந்தவர்கள்வாழி குகமுனிவாழி மாதவகிறைநதுவாழி, சுந்தரமிகுந்தவண்ணாமலைத் தாய்வாழி சோதிப்ரகாசமாகத்-தோன்று மண்ணாமலைப் பரமனார் வாழிமெய்த் துணைமகேந்திரனணியும்வாழி, யந்தணர்கள் வாழியெழில் செங்கபுரி வாழிமெய் யருள்பெறு வசந்தராயர்-அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத் தேவனே. (௧௦௬)

அண்ணாமலைச்சதகம் முற்றிற்று.

---

☞ இஃது மாம்பாக்கம்-உபாத்தியாயரென்னும் பெயருள்ள திருச்சிற்றம்பலநாவலரவர்களால் செய்யப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணாமலைக் கார்த்திகைத்தீபவெண்பா.

---

காப்பு.

வெண்பா.

சீர்த்திபெறுஞ் சோணகிரிமுடியின் மீதொளிருங்
கார்த்திகைத் தீபவெண்பா கட்டுரைக்கப்—பூர்த்தியுற
நம்பந்த வாரணத்தி னுதனருளேந்துகரச்
சம்பந்த வாரணத்தின் றாள்.

---

### நூல்.

கங்கை யணிதீபங் கற்பூர தீபமலை
மங்கையொரு பங்கில் வளர்தீபம்—பங்கயன்மால்
விண்பாரு நேடும்வண மேவியவண் ணாமலையிற்
பண்பாருங் கார்த்திகைத் தீபம். (௧)

அன்னமளிக் குந்தீப மண்டினரை யாதரித்துப்
பொன்னுமளிக் குந்தீபம் பொற்றீப—மன்னு
மராவணிசேர் காட்டுமெங்க ளண்ணா மலைமேற்
பராவ்வருங் கார்த்திகைத் தீபம். (௨)

மோகாந்த கார முறிந்தோடச் செய்தீப
மேகாந்த மாவந் திடுந்தீப—மாகாந்த
ளாங்காரந் தென்றுரைக்க வண்ணா மலைமுடிமேற்
பாங்கார்ந்த கார்த்திகைத் தீபம். (௩)

பந்துமுலைப் பாவையர்க்காப் பாங்காருங் கூடலிலே
வந்து வளையல்விற்ற மாதீபங்—கொந்து
மலர்மலியுஞ் சோண மலைத்தீபம் போற்றிப்
பலர்மலியுங் கார்த்திகைத் தீபம். (௪)

இட்டவிழி சாப மிரிந்தோடப் போற்றிசைக்கு
மட்ட வசுக்கட் கருடீபஞ்—சிட்டர்
துதிதருசீர்ச் சோண மலைத்தீப மெம்முட்
பதிதருசீர்க் கார்த்திகைத் தீபம். (௫)

ஆதலரா னீரென்றே யன்றொருசேய்க் காவழக்கு
மாதுலரா வந்துரைத்த வண்டீபந்—தாதலரா
நந்தனஞ்செய் சூழுஞ்சோ ணாசலத்தி லன்பரன்பிற்
பந்தனஞ்செய் கார்த்திகைத் தீபம். (௬)

நீகெற்பி னாளுடன்வாழ் நீலகண்டர் தம்மிடம்வந்
தோடுகவர்ந் தாண்ட வொருதீப—மாமெயிற்
கொக்கவிசை வண்டினம்பா டோங்கருணை வெற்பின்மிசைப்
பக்கமிருங் கார்த்திகைத் தீபம். (௭)

செங்கமல வேதா திலோத்தமையைப் பின்றுரத்த
வங்கவளுங் காவேட ளுந்தீபந்—திங்கடவழ்
சோணமலைத் தீபமிகத் தோத்திரஞ்செய் தென்றுமுயர்
பாணர்மகிழ் கார்த்திகைத் தீபம். (௮)

மண்ணிடந்துங் காணு மலரடியின் மாயவனார்
கண்ணிடந்து சாத்திக் களிதீப—மெண்ணிறந்த
கீர்த்திபெறுஞ் சோண கிரித்தீபந் தென்மதுரைப்
பார்த்திபனுங் கார்த்திகைத் தீபம். (௯)

எல்லா வுலகு மிசைய வருச்சுனன்கை
வில்லா லடியுண்ட மெய்த்தீபம்—பொல்லாக்



கலிதீர்க்குந் தீபங் கனவருணைத் தீபம்
பலியேற்குங் கார்த்திகைத் தீபம். (௧௦)

ஓரார் சிறுத்தொண்டர் செல்வன் கறியுண்ணப்
பேராசை வைத்த பெருந்தீபங்—காரா
ரருணகிரித் தீபமனத் தல்லும் பகலும்
பருணிதர்தேர் கார்த்திகைத் தீபம். (௧௧)

உள்ளதெனு நல்லோர்கட் குள்ளதா யில்லதெனுங்
கள்ளமனத் தோர்க்கிலதாக் காண்டீபம்—வெள்ளமதி
மேவுசடைத் தீபம் வியன்கொளரு ணாசலத்திற்
பாவுபுகழ்க் கார்த்திகைத் தீபம். (௧௨)

தொண்டர்க்குத் தோன்றாத் துணையான தீபநல்ல
வண்டர்க்கு மெட்டா வருட்டீபம்—வ[illegible]மருந்
தே[illegible]டைய பூம்பொழில்சூழ் சோணம[illegible]த் தீபநன்மேம்
பாடுடைய கார்த்திகைத் தீபம். (௧௩)

வென்றுளே வன்புலனை வீட்டியுணர் கும்பமுனிக்
கன்றுமணக் கோல மருடீபஞ்—சென்றுவியன்
விண்ணளக்குஞ் சோணகிரி மேற்றீப மன்பருக்குப்
பண்ணளிக்குங் கார்த்திகைத் தீபம். (௧௪)

போற்றுமடி யார்க்கருளும் புண்ணியதீ பம்வினையை
மாற்றுமருந் தாகு மணித்தீபஞ்—சாற்றுமறை
யுன்னரிய சோணமலை யோங்கிவள ருந்தீபம்
பன்னரிய கார்த்திகைத் தீபம். (௧௫)

சிற்றம் பலத்திற் றிருநடஞ்செய் தீபமன்பர்
குற்றம் பலகுணமாக் கொள்தீப—மற்றந
துடைத்தருளுஞ் சோணமலைத் தோன்றியதீ பஞ்சீர்
படைத்தருளுங் கார்த்திகைத் தீபம். (௧௬)

கஞ்சமலர்க் கண்ணனயன் காணரிய தீபமெனுள்
வஞ்ச மலமகற்றும் வான்றீப—நஞ்ச
மயிலுமுயர் தீபமெழி லண்ணு மலைமேற்
பயிலுமொரு கார்த்திகைத் தீபம். (௧௭)

அன்பருளத் தேயகலா வானந்த தீபம்பே
ரின்பருளத் தோன்று மெழிற்றீபம்—வன்பருளத்
துற்றறியாத் தீபம்வள மோங்குமரு ணாசலத்திற்
பற்றகலாக் கார்த்திகைத் தீபம். (௧௮)

ஆலால சுந்தரரை யன்று மணந்தடுத்து
மேலா வுவந்தாண்ட மெய்த்தீபம்—பாலாழி
யோர்புதல்வ னுக்கருளி யோங்குமரு ணைத்தீபம்
பார்புகழுங் கார்த்திகைத் தீபம். (௧௯)

வாதவூ ரன்பர் மகிழப் பெருந்துறையிற்
போத மளித்த புகழ்த்தீப—மேதினி
மகலவருந் தீபமுய ரண்ணு மலையிற்
பகலவனேர் கார்த்திகைத் தீபம். (௨0)

முத்திக்கு வித்தா முளைத்தெழுந்த தீபமெழிற்
சத்திக் கொருபால் தருதீப—மெத்திக்கு
மார்த்துமிக்கு மன்புடனே யண்ணு மலைமீது
பார்த்தவக்குங் கார்த்திகைத் தீபம். (௨௧)

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசைக்குந் தீபம்விந்து
நாதாந்த முங்கடந்த நற்றீபம்—வேதாந்தச்
சித்திதருந் தீபந் திருவருணைத் தீபநல்ல
பத்திதருங் கார்த்திகைத் தீபம். (௨௨)

பாணனுக்கோர் சத்துருவாம் பாட்டகனைக் கூடலிலே
காணமுற்றே டப்பாடு நற்றீபம்—பேணி



யயனுமரி யுங்காணு வண்ணு மலையிற்
பயனுருவாங் கார்த்திகைத் தீபம். (௨௩)

முத்திநெறி காணவென்று முன்னுமன்ப ருக்குமுன்னம்
பத்திநெறி காட்டிப் படர்தீபஞ்—சுத்திநெறி
யோடுதவஞ் செய்யருணை யோங்கியதீ பம்பெரியோர்
பாடுமெழிற் கார்த்திகைத் தீபம். (௨௪)

சத்தான தீபமுயர் சன்மார்க்க ருள்ளத்தில்
வித்தா முளைத்து மிளிர்தீப—முத்தான
மோங்குங் கரிக ளுலவுமரு ணாசலத்திற்
பாங்குபெறுங் கார்த்திகைத் தீபம். (௨௫)

இன்பந் தருதீப மேத்திப் பணிந்தோர்க
டுன்பவிரு ளோட்டுஞ் சுடர்தீப—மன்ப
ரவமருக்குந் தீப மரு[illegible]ளார் தீபம்
பவமறுக்குங் கார்த்திகைத் தீபம். (௨௬)

அஞ்ஞானம் போக்கி யருளுப மானந்த
மெய்ஞ்ஞானங் காட்டி மிளிர்தீப—மெஞ்ஞான்றுஞ்
சித்தர்மகிழ் சோணகிரித் தீபம் பணிந்தேத்தும்
பத்தர்மகிழ் கார்த்திகைத் தீபம். (௨௭)

நட்டம் புரிதீப நல்லடியார் தங்கள்கொடுங்
கட்டங் களையே களைதீப—மட்ட
திசைமேவு மெங்க டிருவருணைத் தீபம்
பசைமேவுங் கார்த்திகைத் தீபம். (௨௮)

நாடியடி யார்பரவு ஞானதீ பம்மறைக்கு
நேடி யறியா நெறித்தீப—நீடெந்
திருவருணைத் தீபந் திமையமரர் போற்றிப்
பருவரல்தீர் கார்த்திகைத் தீபம். (௨௯)

நாலா ரணமு நவிலரிய ஞானமெனு
மேலான போகம் விளை தீப—மாலால
முண்டமரர் தங்களிட ரோட்டருணைத் தீபமன்பாய்
பண்டமருங் கார்த்திகைத் தீபம். (௯௦)

சென்மப் பிணிதீர்க்குந் தீபமடி யார்செய்கொடுங்
கன்மவினை போக்குங் கனதீப—மன்மதனை
யங்கமிலா தாக்கியரு ளண்ணா மலைத்தீபம்
பங்கமிலாக் கார்த்திகைத் தீபம். (௯௧)

மாமறைக்கு மெட்டா மணித்தீப மேழைகட்குச்
சேமமளித் தூக்காக்குஞ் சீர்த்தீபந்—தாமரையு
மொத்துமொளிர் வண்சுனைச்சோ ணாசலதீ பந்திசைகள்
பத்துமொளிர் கார்த்திகைத் தீபம். (௯௨)

கற்றைச் சடைமுனிவர் காண்பரியாருரிற்
புற்றையிடங் கொண்டுறையும் பொற்றீப—மொற்றைத்
தவளவநத் தந்தைமுன் றந்த வருணைப்
பவளவநக் கார்த்திகைத் தீபம். (௯௩)

மன்னு மிளசைநகர் மாறன் முளைவாரி
யன்னமிடச் சேவை யருடீபம்—வன்னச்
சிகரநெடுங் கோபுரஞ்சேர் தென்னருணைத் தீபம்
பகரமிகுங் கார்த்திகைத் தீபம். (௯௪)

நாவுக்கு வேந்து நமச்சிவா யப்பதிகப்
பாவுக்குக் கன்மிதக்கப் பண்டீபம்—வாவிக்
கயன்மேய்க் கழுகுடைக்குங் காமரு ணைக்கோன்
பயன்மேவுங் கார்த்திகைத் தீபம். (௯௫)

சிந்தைக் கலக்கந் தெளிவிக்குந் தீபந்தாய்
தந்தைக் கிணையாகச் சார்தீபம்—விந்தை



மதினிலவுங் காரு வளரு மருணைப்
பதிநிலவுங் கார்த்திகைத் தீபம். (௯௬)

மன்னுயிர்கட் கோருயிரா வந்தருளுந் தீபமறை
யுன்னுதற்கு மெட்டாத வோர்தீபம்—பொன்னுலகைக்
கீழாக்குஞ் சோண கிரித்தீபம் வெவ்வினையைப்
பாழாக்குங் கார்த்திகைத் தீபம். (௯௭)

மூவருக்கு மாதி முதலான தீபமுயர்
தேவருக்குங் காண்பரிய சீர்த்தீப—மேவருவி
யாலிக்குஞ் சோணமலை யார்ந்தசெழுந் தீபமின்பம்
பாலிக்குங் கார்த்திகைத் தீபம். (௯௮)

கந்தனையு ஞானமதக் காரானை மாமுகத்தோர்
தந்தனையுஞ் சேயாத் தருதீப—மெந்தமைக்க
ணேக்கியருள் சோணமலை நோன்றீப மன்பருக்குப்
பாக்கியமாங் கார்த்திகைத் தீபம். (௯௯)

வேலனைசேர் மார்க்கண்டர் மேவுசிவ பூசைக்காக்
காலனையு தைத்த கனதீபம்—கோல
விதுமகிழுஞ் சோணகிரி வேணுவின்மேற் றும்பும்
பதுமநிகர் கார்த்திகைத் தீபம். (௱)

தக்கனுக்கு மேடத் தலையளித்த தீபமென்று
மக்கவெனப் பேர்படைத்த நற்றீப—மிக்க
விருப்பதனாற் சார்ந்தார் வினை தீர்க்குஞ் சோணப்
பருப்பதஞ்சேர் கார்த்திகைத் தீபம். (௱௧)

கற்றவுடன் கேட்டுணர்ந்து காதலுடன் சிந்தித்தோர்க்
குற்ற துணையா வுற்றீபஞ்—சொற்றகதிக்
கேணிநிகர் சோணகிரி யோர்முடிமே லஞ்சலெனும்
பாணிநிகர் கார்த்திகைத் தீபம். (௱௨)

பண்ணுடனே தேவாரம் பாடுமூ வர்க்கிமவான்
பெண்ணுடனே தோன்றும் பெருந்தீபம்—விண்ணுடனே
சேரமலை வான்புவிக்காச் செல்வதுபோ லோங்கருணைப்
பாரமலைக் கார்த்திகைத் தீபம். (௪௩)

தந்தைதிருத் தாடடிந்த சண்டே சுரருக்குச்
சிந்தைமகிழ் தீபஞ் செழுந்தீப—முந்தை
யொருமுடிவில் லாம லுயரருணை வெற்பின்
பருமுடியிற் கார்த்திகைத் தீபம். (௪௪)

பஞ்சாக் கரத்தைமிகு பத்தியுட னுன்னுனர்க்கு
விஞ்சாக்க மாக மிளிர்தீப—மஞ்சார்க்கச்
சிங்கமுழை விட்டகலாத் தென்னருணை வெற்புறமோர்
ப[illegible]ழ்வாங் கார்த்திகைத் தீபம். (௪௫)

பந்தவினைப் பாசத்திற் பட்டுழலும் பூதகனேன்
மந்த மதிநீக்கும் வண்டீபஞ்—சந்தமுங்
கொக்குமிசை நற்குயில்கள் கூவருணைத் தீபமுயர்
பக்குவர்காண் கார்த்திகைத் தீபம். (௪௬)

ஏதம் பெரிதுடையே னேத்துந்தீ பஞ்சாம
வேதம் பெரிதும் விழைதீபங்—கேதம்
புலிக்குங்கோ வுக்குமிலாப் பொன்னருணை வெற்பிற்
பலிக்குஞ்சீர்க் கார்த்திகைத் தீபம். (௪௭)

வன்னிமதி சென்னியிசை வைத்தருளுந் தீபமறை
பன்னி மதிக்கப் படர்தீபங்—கன்னிமதிற்
சூரியற்கு மேலுயருஞ் சோணமலை மீதுவளர்
பாரியசற் கார்த்திகைத் தீபம். (௪௮)

ஆர்த்துவந்தி டுக்கொடுக்க யாசானை யன்றொருகா
லீர்த்துரித்துப் போர்த்த வெழிற்றீபம்—பார்த்துரைக்க



வொண்ணாத சோணகிரி யோங்கியதீ யங்கோபம்
பண்ணாத கார்த்திகைத் தீபம். (௪௯)

பொய்வசமாம் வஞ்சமணம் போயழிய மூவர்களாற்
சைவ சமயந் தருதீபக்—தெய்வ
முனிவர்சித்த லுண்மகிழ்ந்து மெய்யருணை சார்ந்தார்
பணியகற்றுங் கார்த்திகைத் தீபம். (௫௦)

பாரருந்தி ஞான்றுதித்தல் பண்டபம் வாவிகரை
கீரருந்தி யேறக் கிளர்தீப—நீரருந்திச்
சீவனஞ்செய் மாதவர்வாழ் தென்னருணைத் தீபமெம்மைப்
பாவனஞ்செய் கார்த்திகைத் தீபம். (௫௧)

தாருவன மாதவர்க டாம்விடுத்த வேங்கைதனை
கூருகிரி னூரித்துக் கொள்தீப—மேருமுத
லோங்குமலை யெட்டினுமிக் கோங்குமரு ணாசலத்திற்
பாங்குமலி கார்த்திகைத் தீபம். (௫௨)

ஈன்றுபுரி பொன்னனையா ளண்ணுதிருப் பூவணத்திற்
சென்றரச வாதமது செய்தீபங்—கன்றுகளுக்
கம்பிடிகை யாலருத்தி யாடுசனைச் சோணமலைப்
பம்பிவளர் கார்த்திகைத் தீபம். (௫௩)

மாயப் பசுவமணர் மாமதுரைக் கேவவதை
வீயச் சமர்செய் விடைத்தீப—மேயமா
வீராட் டெனேர்கார் நீள்சோண வெற்பிலன்பர்
பாராட்டுங் கார்த்திகைத் தீபம். (௫௪)

போதனந்த ரத்தவரும் போற்றுந்தீ பங்கொடியேன்
கோதனந்த மும்பொறுத்துக் கொள்தீப—மாதனண்டந்
தாங்கனிகர் பண்டெலாத் தாங்கிவளர் சோணமலைப்
பாங்கமரும் கார்த்திகைத் தீபம். (௫௫)

பொன்புரையுஞ் செம்மேனிப் புண்ணியநீ பஞ்சரிய
வெண்புரைமுற் றுந்தீர்த் திடுந்தீப—மண்புரைகொண்
டேத்தியமாத் தொண்டர்களுக் கென்றுமரு ணாசலத்திற்
பாத்தியமாங் கார்த்திகைத் தீபம். (௫௬)

பாவிகளும் வந்தேத்திப் பார்த்துப் பணிவாரேன்
மேவிவினை தீர்த்தருளு மெய்த்தீபந்—தேவிமுலை
திட்டுதொய்ய னேர்மயில்சேர் தென்னருணை வெற்பிலன்பர்
பாட்டுவக்குங் கார்த்திகைத் தீபம். (௫௭)

சோமனைக் காருண்ணியமாச் சூடுந்தீ பங்கொடிய
வேமனைக்கால் கொண்டோச் செறிந்தீபந்—தாமரைக
ணொற்றிவளர் கண்போல நீளுமரு ணாசலத்திற்
பற்றிவளர் கார்த்திகைத் தீபம். (௫௮)

கோளுங் கொலையுங் குடிகெடுப்பு மாணவமும்
கேளுமவர்க் கெட்டாது நீடிப—நாளுந்
திடமிக்குஞ் சோணமலைச் சென்னிவளர் நாகப்
படமொக்குங் கார்த்திகைத் தீபம். (௫௯)

தில்லையம்ப லத்திற் றிருநடனஞ் செய்தீப
மொல்லையினி வின்பருத வந்தீப—மெல்லை
யிலாண்டுதவஞ் செய்தவரா லேரருணை வெற்பிற்
பலாண்டுபெறுங் கார்த்திகைத் தீபம். (௬௦)

ஆணிப்பொன் மேருவில்லா வம்பரியாச் சேடனையே
காணியெனக் கொண்டோர் நகைதீபம்—வேணி
விழுதிலா ரத்தவர்கண் மேவருணை வெற்பிற்
பழுதிலாக் கார்த்திகைத் தீபம். (௬௧)

மின்னார் மணியரவும் வெண்மதியு நேசிக்கப்
பொன்னார் சடைமேற் புனைதீப—கன்னாரி



பூரிக்குங் கும்பமுலை போலோங்குஞ் சோணமலைப்
பாரிக்குங் கார்த்திகைத் தீபம். (௬௨)

பன்னருஞ்சம் பந்தருக்குப் பந்தருநற் பல்லக்குஞ்
சின்னமுமுத் தாலளித்த சீர்த்தீபஞ்—செந்நெற்
கழனிபுடை சூழருணைக் காமர்மலை மீது
பழனிமலைக் கார்த்திகைத் தீபம். (௬௩)

பாகத் துமையும் படர்சடைமேற் சானவியு
மோகத் துடன்வாழ் முதிர்தீப—மேகத்
துழனிமிக்கார் சோணமலைத் தூய்முடிமேன் ஞானப்
பழநிகர்க்குங் கார்த்திகைத் தீபம். (௬௪)

பொல்லா மலவிருட்டைப் போக்குந்தீ பம்புவன
மெல்லாந்தா மாகு மெழிற்றீபம்—வல்லாளன்
மைந்தனென வந்த மகிமையரு ணாசலத்திற்
பந்தமிகுங் கார்த்திகைத் தீபம். (௬௫)

எங்கெங்கே யன்பரிருந் தெவ்வாறு வேண்டுகினு
மங்கங்கே யவ்வா றருடீபஞ்—சிங்கங்கேட்
டஞ்சமுகட் டார்ந்துமுகி லார்க்குமரு ணாசலத்திற்
பஞ்சமுகக் கார்த்திகைத் தீபம். (௬௬)

எட்டுமிரண் டுந்தெரியா வேழையே மென்பாருட்
சட்டுப்பட் டோங்குங் கனதீப—மட்டிலா
மேன்மைதரு சோணகிரி மேவும் பிறைக்கொழுந்தின்
பான்மைதரு கார்த்திகைத் தீபம். (௬௭)

கங்கைதனை யேவியெழிற் கம்பா நதியிலுமை
கொங்கை வளைத்தழும்பு கொள்தீபஞ்—சங்கையிலாப்
புங்கவர்சேர் சோணகிரிப் பொற்சடையாற் றிற்பூத்த
பங்கயநேர் கார்த்திகைத் தீபம். (௬௮)

செம்மையடி யார்பூசை செய்தாவந்த காலைக்கா
லம்மைக்கா லங்காட் டருடீபம்—வெம்மை
யரிகரிக்கு மில்லா வருளையடைந் தார்நோய்
பரிகரிக்குங் கார்த்திகைத் தீபம். (சுகூ)

காணரிய மெஞ்ஞானக் காட்சியரு டீபமன்பர்
வேணவரந் தந்தருளு மெய்த்தீபஞ்—சோண
கிரிமுடிக்கண் மேவியொளி கேழ்புவன முற்றும்
பரிமளிக்குங் கார்த்திகைத் தீபம். (எ0)

பாண்டுமகன் வில்லாற் பரிந்தடிக்கப் பாசுபத
மாண்டுமையோ டெய்தி யருடீப—நீண்டு
விசும்புருவு சோணகிரி வெந்தழலி னிட்ட
பசும்பொனிகர் கார்த்திகைத் தீபம். (எக)

பன்னற் கரியசெழும் பச்சை பவளமென
வன்ன மிரண்டா வளர்தீபந்—தென்னருணை
வெற்பரெனும் வெந்தழலின் வெந்திட்ட வெண்கட்டிப்
பற்பநிகர் கார்த்திகைத் தீபம். (எஉ)

மான்மேற் புலிபோல் வருமிடரெல் லாம்போக்கி
யான்மே லிவர்ந்தெனைவந் தாடீப—மேன்மே
லணிகொளரு ணாசலமா மம்புயமே லுற்ற
பணிலநிகர் கார்த்திகைத் தீபம். (எங)

தேடரிய தீபஞ் சிதம்பரத்தி லாடெடுத்து
நாடரியப் பேர்படைத்த நற்றீப—நீடக்
கரியார்க் குவக்காக் கனவருணை சார்ந்தார்
பசிதீர்க்குங் கார்த்திகைத் தீபம். (எச)

சாகையுடன் சாத்திரமுஞ் சாற்றரிய பல்கலையு
மாகமபு ராணமுத லாந்தீபக்—தேகப்



பிணியகல வந்தெவரும் பேசிமகிழ்ந் தேத்திப்
பணியருணைக் கார்த்திகைத் தீபம். (எரு)

துப்பற்ற வெண்ணெயுமோர் தொண்டராகக் கொள்தீபந்
தப்பற்ற சேவை தருதீப—மொப்பற்ற
வட்டாங்க யோகிகள்வாழ் வார்ந்தவரு ணாசலத்திற்
பட்டாங்காங் கார்த்திகைத் தீபம். (எசு)

ஆர்த்தவடி வாய்வந்து தோரா வியற்பகையார்
சேர்த்தவில்லா னைக்கொண்டு செல்தீபக்—தீர்த்த
நல்லருணைஞ் சோணமலை நாடினர்க்குக் கிட்டும்
பலனருங் கார்த்திகைத் தீபம். (எஎ)

கொக்கிறகும் வெள்ளெருக்குங் கோனாக லாமதியு
மக்கு மணியு மணிதீப—மிக்க
வரிசையுற்ற சோணகிரி வாழ்த்துனர்க்கு வேண்டும்
பரிசளிக்குங் கார்த்திகைத் தீபம். (எஅ)

இக்கடன்ஞா லத்தி லிறப்பு பிறப்பென்னுந்
துக்கமுறு வேற்கருளுந் தூய்தீப—மிக்க
திருமணிசேர் சோணமலைச் செம்மலரீன் முத்தின்
பருமணிநேர் கார்த்திகைத் தீபம். (எகூ)

மான்மீ னிகர்த்தவிழி மாதரார் மையலுற்ற
நான்மீளக் கண்பார்க்கு நற்றீபம்—வான்மீ
னுதிர்ந்ததென வேய்முத் தொளிர்சோண வெற்பிற்
பதிந்ததிருக் கார்த்திகைத் தீபம். (அ0)

தீங்கினில்வீ ழாதடியார் சீராரு முத்தியெனும்
பாங்கினிலே செல்லப் பகர்தீப—மோங்கின்மதி
சத்திரமேந் துங்காம்பாத் தானேயுங்குஞ் சோணவெற்பிற்
பத்திரமாங் கார்த்திகைத் தீபம். (அக)

பந்தத் தொடக்கைப் பரிகரிக்குந் தீபநிதம்
வந்தடியே னுள்ளம் வதிதீப—மிந்தத்

தரணிபணி சோழ சலமுடியி னல்ல
பரணிவரு கார்த்திகைத் தீபம். (அஉ)

கானகவே டன்றனைத்தீற் காய்ச்சியெடுத் துண்டீந்த
வூனக மகிழ்ந்தினிதென் றுண்டபம்—மான
சராசரமும் போற்றுந் தனியருணை வெற்பிற்
பராபரமாங் கார்த்திகைத் தீபம். (அங)

காசிமன்னன் றன்னைக் கவியாக்கிப் பின்பவன்சீர்
மாசிலுரு வந்தந்த வண்டபம்—காசினிமீ
தூற்றுதவம் போலாங் கருணைவள ரன்பர்வினை
பாற்றுமெழிற் கார்த்திகைத் தீபம். (அச)

கல்லா லடியிற் கரங்காட்டி நால்வருக்குஞ்
சொல்லா துணர்த்துஞ் சுபதீபம்—கொல்லா
விரதமொடு தென்னருணை மேவுமருள் ளத்திற்
பாதயமெய் கார்த்திகைத் தீபம். (அரு)

மெச்சிநக ராசமகள் வேண்டுநல்ல கம்பனெனக்
கச்சிநகர் வாழுங் கனதீபம்—கொச்சையயின்
மாமேனியர் வண்டன் மகிழருணை தன்னிலன்பர்
பாமருவுங் கார்த்திகைத் தீபம். (அசா)

ஆனஞ்சா டுந்தீப மன்பர் பிறப்பிறப்பா
மூனஞ்சா டுந்தீப மொண்டபம்—வானந்
தெவித்திர வெல்லும்போற்றிச் சோருணை வெற்பிற்
பவித்திரமாங் கார்த்திகைத் தீபம். (அஎ)

கேட்டவரெல்லாங் கேடுபடா மற்கொடுத்தே
காட்டுமுட ணுண்டருளு நற்றீபம்—வாட்டமிலாப்
புள்ளிசேர் மான்கள் பொலியருணை கண்டுகேடற்
பள்ளிதாழ் கார்த்திகைத் தீபம். (அஅ)

மானுய கன்னியுடன் மால்விடைமேல் வேய்ங்குழல்கேட்
டானுயர் முன்வந் தருடபம்—வானோர்



தருவதனி னுஞ்சிறந்த தாருவளர் சோணைப்
பருவதம்வாழ் கார்த்திகைத் தீபம். (அகூ)

ஏறி வருந்தீப மேத்துமவர் வல்வினையை
நூறி வருந்தீப நோன்றீபஞ்—சீறிவரு
மஞ்சிபமா வுற்றறிநாண மாவரு[illegible] வெற்பினிலின்
பஞ்சிறந்த கார்த்திகைத் தீபம். (கூ0)

பாம்பணியுந் தீபம் பத்திநெறி சேரடியார்
தாம்பணியுந் தீபந் தனித்[illegible]ப—மாம்பல்
விகசிக்கும் வாவி மிளிரருணை வாழ்கற்
பகமொக்குங் கார்த்திகைத் தீபம். (கூக)

நன்களிக்குந் தீப நவில்ருமுண் ணுமுலையா
மின்களிக்குந் தீபம் விழைதீபம்—வன்களிறு
தண்ணருவி பெட்டையுடன் றுறுடுஞ் சோணவெற்பிற்
பண்ணவர்தேர் கார்த்திகைத் தீபம். (கூஉ)

மங்களஞ்சேர் தீபமொரு [illegible]சடையா மாசடையிற்
திங்களஞ்சேர் தீபந் திருதீபம்—வெங்களஞ்சேர்
மாலுயிரு வர்க்கரிதா மன்னருணை [illegible]
பாலுயருங் கார்த்திகைத் தீபம். (கூங)

[illegible]தார விந்தம் பாவுந் தொழும்பருக்கோ
ராதார மாகி யருடபம்—[illegible]தாருங்
கொங்கிலங்குஞ் சோலை குலவருணை வெற்பினுமென்
பங்கினும்வாழ் கார்த்திகைத் தீபம். (கூச)

சங்கரிக்கோர் பங்குந் தகையுடனே மற்றொரு
பங்கரிக்கு மாகப் பகிர்தீபம்—வெங்கரித்தோல்
போர்த்ததென மங்குல் பொலியருணை வெற்பிலன்பர்
பார்த்தருள்சேர் கார்த்திகைத் தீபம். (கூரு)

ஆணிப்பொன் னம்பலத்தி லாடுந்தீபம் பொல்லா
மாணிக்க தீபமகி மைத்தீபம்—வேணிக்க
ணீராருந் தீபமெழி லீமேரு ணாசலத்திற்
பாராருங் கார்த்திகைத் தீபம். (கூசு)

அந்தவச்சி ராங்கதனை யச்சுவத்தின் கீழ்வருத்திப்
பிந்தவவ னேத்தவருள் பெய்ந்தீபம்—வந்தார்க்
குதவிசெய்வோ மென்றருணை யுற்றடியார் வேண்டும்
பதவிதருங் கார்த்திகைத் தீபம். (கூஎ)

பண்டுபுள காசுரனைப் பாவந் தவிர்த்தாண்டு
கொண்டுவகை கூர்ந்த குணதீபம்—தொண்டு
கரவிலா மற்செய்வார் காணருணை வெற்பிற்
பரவிவாழ் கார்த்திகைத் தீபம். (கூஅ)

சிந்தா மணிகாம தேனு பதுமநிதி
யுந்தாழ்ந் தவர்க்கருள்செ யுந்தீபம்—நந்தா
வியப்புள்ள சோணமலை மேற்றீப நல்ல
பயப்புள்ள கார்த்திகைத் தீபம். (கூகூ)

புத்திரருந் தீபநல்ல புத்திரசம் பத்துமுதல்
சித்திதருந் தீபஞ் சிவதீபஞ்—சத்திக்
குயிராகுஞ் சோணமலை யோங்குவளர் ஞானப்
பயிராகுங் கார்த்திகைத் தீபம். (க00)

வாழி.

வான்வாழி மணிவாழி மன்னவனும் வாழியய
னான்வாழி மெய்ம்மையடி யார்வாழி—மேன்மேலுஞ்
சோபனவண் ணாமலையுந் தூயதிருக் கார்த்திகைநற்
றீபமும் வாழி சிறந்து.

கார்த்திகைத்தீபவெண்பா முற்றிற்று.

313 313



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சோணாசலவெண்பா.

## காப்பு.

வாணாளை வீணாள வையகத்திற் போக்காமற்
சோணாசல வெண்பாச் சொல்லுதற்கு—காணாரு
மிங்கழுநீ ரானைநினை யேக்கமறக் காக்குமுக்கட்
செங்கழுநீ ரானைநினை நேர்ந்து.

## நூல்.

ஓங்காரபீடத் துறையும் பிரா னின்னைப்
பாங்காரக் காணப் பணித்திடா—யாங்கார
வெம்பிரமா நற்றிருமா லெய்யவுமுழா றித் தொடர்மா
சம்பிரமா சோணா சலா. (க)

கங்கைச் சடையுங் கருணைத் திருமுகமு
மங்கை மருமானு மணக்கைத்த—பொங்கரவுஞ்
செந்தாளு மெர்காளுஞ் சேவிக்க னென்மேலுந்
தந்தாளுந் சோணா சலா. (உ)

எற்றைநாண் மாதுமையோ டென்முன் வருவாயோ
வற்றைநா ளல்லநா ளானநாள்—மற்றைநாள்
கன்மநாள் வீணாள் கரிநா ளிருட்டுநாள்
சன்மநாள் சோணா சலா. (ங)

தீவாய்ப் படநாகந் தீண்டினுநுந் துயர்கூர்ந்
தாவாவென் றேங்கியழுங் காம—ஞ்வால்
விடாதரா வென்பார்க்கு வெய்யவிட முண்டோ
சடாதரா சோணா சலா. (ச)

கோயில்வலஞ் செய்யேன் கும்பிடே னின்றுருகேன்
வாயிலெழுத் தஞ்சும் வழுத்துகிலே—னாயிற்
கடையாளாப் பேய்போற் கலங்கின்றேன் கங்கைச்
சடையாளா சோணா சலா. (௫)

மாதேவா சங்கரா மைக்கண்டா முக்கண்ணா
கோதேது மில்லாக் குணாகரா—பூதேசா
வோம்பவா வோம்பவா வுள்ளவா வுள்ளவா
சாம்பவா சோணா சலா. (௬)

மெய்ந்நூலை விட்டுவிட்டு வேறுவே றுள்ளபல
பொய்ந்நூலைக் கற்றுப் புலம்புகின்றா—ரென்னோர்க்கும்
பொல்லாவா தைக்குளிர்க்குப் போர்வையுயர் கம்பலமா
சல்லாவா சோணா சலா. (௭)

பிறையிட்ட பொற்சடையெம் பெம்மானே நின்றா
ணிறையிட்ட வன்பரி னினைந்து—முறையிட்டுங்
கேளாது போலிருந்தாற் கெட்டேனி னிக்கணமுந்
தாளாது சோணா சலா. (௮)

வேதாகமந் தெரிந்த மேலோ ருடன்கலந்து
மாதாகமான் புனற்காண் மாண்பினுளப்—போதாகச்
சத்துவா னந்த சகசநிட்டை தந்தருளாய்
தத்துவா சோணா சலா. (௯)

மண்ணேறு பல்வகையா மன்பதைக ளத்தனையுங்
கண்ணேறு நீங்கிக் களிப்பதற்கோ—புண்ணேறு
சிந்தனையே னென்னையுமோர் சீவனென விவ்வுலகிற்
றந்தனையே சோணா சலா. (௧௦)

தண்டா மனையிலைமேற் றண்ணீரா வென்றனுள
மண்டாத் துயரா லலைகின்ற—கண்டாய்



சிலையெழுத்தா வோர்மொழியுஞ் செப்புகிலா யிதென்
றலையெழுத்தா சோணா சலா. (௧௧)

பேயுடனே நட்டம் பிரியமுடன் செய்பவனிச்
சேயுடனே சோராதென் செப்புவா—யாயுலக
மாமகண்டா வேதண்டா வண்டாண்டா வாலமுண்ட
சாமகண்டா சோணா சலா. (௧௨)

மாயாம லம்புணர்ந்து மாதவமாஞ் சைவநெறித்
தோயாம லம்புவியிற் சோர்கின்றேன்—றூயாநீ
வேண்டவா வின்படியே மெய்ஞ்ஞானப் பால்கொடுப்பாய்
தாண்டவா சோணா சலா. (௧௩)

துன்பக் கடல்வீழ்ந்த தொண்டனேன் றன்னைநீ
யின்பக் கடலாட்ட வெண்ணிறா—லன்பர்
சுடுப்பாரோ வைவாரோ கன்மியிவ னென்று
தடுப்பாரோ சோணா சலா. (௧௪)

தெய்வமுண் டென்றோர்வேனோ தெய்வமின் றென்றோர்வேனோ
மையவாருந் துட்டமன மிருந்தா—லுய்வதெவன்
ஈசனுனென் றுணார்ந் தீண்டவா வாண்டாளீ
தாசனுன் சோணா சலா. (௧௫)

எத்தனைதான் கற்றென்ன வெத்தனைதான் கேட்டென்ன
வத்தனையு மற்றோர்க் குரைத்தென்ன—சித்தந்
தராசனார்க் கல்லாலுன் றானுண்டோ மேருச்
சராசனா சோணா சலா. (௧௬)

அன்புவளர் தொண்டருள மாலயமா வெப்பொழுதுந்
தென்புவளர் தேவியுடன் சேர்ந்துவளர்—நின்புகழைப்
பாடுவேன் பந்தவினைப் பாசத்தை வேரறவே
சாடுவேன் சோணா சலா. (௧௭)

கருநிறத்த காகங் கனகமலை சார்ந்தாற்
றிருநிறத்த வாகுஞ் செயல்போ—லிருநிறத்த
வாகரானா னுனைச்சார்ந் தன்பனாவேன் கருணா
சாகரா சோணா சலா. (கஅ)

வன்பா தகஞ்செய்யும் வஞ்சர்தமைச் சேராம
னின்பா தகஞ்ச மினைந்துவா—ழன்பா
நிதானந்தா மந்தாகினிக் குவந்தா யெந்தாய்
சதானந்தா சோணா சலா. (ககூ)

மான்செய்த கண்ணியொடும் வாலவடி வேலனொடும்
வான்செய்த காட்சி வழங்கென்றால்—யான்செய்த
கன்மமா வந்துமுகங் காட்டிலா யீதுனக்குத்
தன்மமா சோணா சலா. (உ௦)

வெய்யபிறப் பீனுமுயர் வித்தாகு மாசையெனு
வுய்யநல்லோர் செற்றநெறி யோ[illegible]ன்—மையலிலே
யாழ்கின்றே னின்சீரு ளெள்ளளவு மின்றித்
தாழ்கின்றேன் சோணா சலா. (உக)

முற்றா விளஞ்சேய்க்கு மூண்டநோய்க் காமருந்து
பெற்றா ளருந்துகின்ற பெற்றிபோற்—சிற்றம்
பலத்துவந்த மன்பதைக் காப்பார நடஞ்செய்தித்
தலத்துவந்த சோணா சலா. (உஉ)

ஆட்டுகின்றா யாடுகின்றா யாடலையுங் காண்கின்றாய்
கூட்டுகின்றாய் கூடுகின்றாய் கொள்கைபல—நாட்டுகின்றாய்
ஞாலமெலா மிவ்வகையே நானறியே னின்னுடைய
சாலமெலாஞ் சோணா சலா. (உங)

என்னைப்போ லேழையிலை யெவ்வெவ் வுலகத்து
மின்னைப்போல் வள்ளலிலை நிச்சயமே—யின்னையே



யென்றொழிலே யாசித்த லில்லையென நீவதுநின்
நன்றொழிலே சோணா சலா. (உச)

நறும்பூ வுடன்சேர்ந்த நாருமண மெய்து
மிறும்பூ தன்றைய வெளியேன்—பெறும்பே
றதுவே தானாக வடியருடன் சேர்வேன்
சதுவேதா சோணா சலா. (உரு)

பத்தருக்குஞ் சித்தருக்கும் பண்ணவர்க்கும் விண்ணவர்க்கு
முத்தருக்கு மற்றவர்க்கு மூவனொனுங்—கத்தருக்கு
கற்றுணையாய் வாழ்கின்றாய் நாயேற்கு நாயகனார்
சற்றுணையாய் சோணா சலா. (உசா)

வணங்காத் தலையும் வழுத்தாத நாவு
மிணங்கா மனமு மெனக்கே—யணங்கா
மிகுதியா வின்னம் விளம்புவதெ னந்தோ
தகுதியா சோணா சலா. (உஎ)

என்னைநீ ராடப்போ லெண்ணமறந் தொருவன்
பின்னேசே றாடுகின்ற பெற்றிபோற்—கொன்னேவெங்
கன்மத்தைச் செய்துகழிக் கின்றே னல்லார
சன்மத்தைச் சோணா சலா. (உஅ)

அண்ணா மலையென்று மண்டமெலாம் பெற்றெடுத்த
வுண்ணா முலையென்று முள்ளத்தே—யெண்ணாத
நாளில்லை நாயேற்கு னற்றுள லாதடையுந்
தாளில்லை சோணா சலா. (உகூ)

இலவுதனைக் காத்தே யிருக்குங் கிளிபோற்
குலவுருடும் பத்தையே கோரி—விலகிலேன்
மாதுரியா னந்தசுகம் வாய்க்குமோ வேழைக்குச்
சாதுரியா சோணா சலா. (ஙo)

நாட்டைவிட்டுக் காட்டையுற்று நற்கனிதே ரோர்சிறுவன்
வேட்டையிற்றப் புங்கொடிய வேங்கைகண்டு—கோட்டை
யரண்புகுந்தே யுய்ந்ததென யானுய்ய நின்பூஞ்
சரண்புகுந்தேன் சோணா சலா. (௩௧)

வானே முதலட்ட மாமூர்த்தி யாவிளங்குங்
கோனே நினதுபதங் கூடாமல்—யானே
தனித்தேனோ விங்குத் தளரவிதற் கென்றே
சனித்தேனோ சோணா சலா. (௩௨)

தேவாரந் தன்னைச் சிரத்தையா நாயடியே
னோவாப் பாடி நயந்துவிழிக்—கோவாக்
கண்ணீகரு முள்ளங் கனித்துருகும் வாழ்வருளாய்
தன்னிகருஞ் சோணா சலா. (௩௩)

ஞாயிறு திங்க ளயனஞ் செவ்வா யுமைமெய்
மேயபுத னின்மெய் வியாழமுறை—வாய
தனியாமோர் வெற்புதனழ வெள்ளி யெற்குச்
சனியாமோ சோணா சலா. (௩௪)

பெண்ணாசை யாதியாப் பேசுகின்ற மூவாசை
யெண்ணாசை வையகத்தி லேற்காதோ—அண்ணா
மலையானே கொண்டவர்யார் மற்றாசை தம்மிற்
றலையானே சோணா சலா. (௩௫)

ஓர்கினிரு தாண்முமல மோவுறவே நாற்கரணஞ்
சேர்தரவஞ் சக்கரமுஞ் சிந்தித்தா—ரூர்பொழுது
மேழுவே தத்திசையி னேத்தருளெட் டங்கமுறத்
தாழுவேன் சோணா சலா. (௩௬)

காலத்தே சென்றுசிவ கங்கையிலே நீராடிப்
பாலத்தே நீற்றைப் பரிந்தணிந்து—மூலமா



மந்திரமே யோதிநினை மன்னிவலஞ் செய்வதுய்யுந்
தந்திரமே சோணா சலா. (௩௭)

நின்னைச் சதமா நினைக்குஞ் சிறியேற்கும்
பின்னை வறுமைப் பிணியுண்டோ—பொன்னைச்
சதாசிவா வென்றழைக்குந் தோகை புணர்சாம்ப
சதாசிவா சோணா சலா. (௩௮)

உடல்பொரு ளோட்டாவி யுனக்கே யளித்தேன்
கடலுல கங்காண வெனைக்காவா—தடலுடனே
யிங்கடத்தை நீபுரிந்தா லேவர்பாற் கூறுவனென்
சங்கடத்தைச் சோணா சலா. (௩௯)

தன்னிகரில் சோண சயிலனே யென்றன்பாச்
சொன்னிகழ் பாமாலையன்று சூட்டினருக்—கிந்நீத்தின்
முன்மானன் றெட்டரிய முண்டகத்தா னன்றியுண்டோ
சன்மானஞ் சோணா சலா. (௪௦)

வாக்கின் வருகவென்றால் வாய்நோமோ தாழ்ந்தேனைத்
தூக்கின் மலர்க்கை துவளுமோ—நோக்கின்
வலிக்குமோ நின்கடைக்கண் வள்ளலுக்கு முள்ளஞ்
சலிக்குமோ சோணா சலா. (௪௧)

கன்னெஞ் சுடனுன்ற னுண்மலர்த் தாள்பூசியே
னென்னெஞ் சுகல்லா யிருப்பதா—னின்னெஞ்சுங்
கல்லாபார் மேலென்னைக் காவாதென் காரணமோ
சல்லாபா சோணா சலா. (௪௨)

தஞ்சமென நின்கமலத் தாளடைந்து நானிருக்க
வஞ்சநம னென்பால் வருவானோ—நஞ்சமிக்க
பொங்கரா வேணிப் புனிதாமார்க் கண்டனையாள்
சங்கரா சோணா சலா. (௪௩)

காங்குவித்து மெய்சிலிர்த்துக் கண்ணீ ருதிர்த்துச்
சிரங்குனித்துத் தெண்டனிட்டுத் தேம்பி—யிரங்குனர்க்கு
வந்திடுவாய் கேட்டவரந் தருவாய் நாயேற்கென்
தந்திடுவாய் சோணா சலா. (௩௩)

ஒருவ னொருத்தியுட னொன்றுபெறக் கூடும்
பருவம் பனித்துளிபோற் பாய்ந்து—கருவுற்
றுருவஞ்சார்ந் துற்பவித் திங்கோடி யுழலாதான்
சருவஞ்சா சோணா சலா. (௩௪)

வன்பிறவி நோய்க்கு மருந்தா யிருந்தடியார்
துன்பிறவி நீக்குமினைச் சூழ்ந்தவருக்—கென்பிறவிச்
சிற்பரா வம்பலத்திற் றெய்வநடஞ் செய்தருளுஞ்
சற்பரா சோணா சலா. (௩௫)

ஒருவொன் றில்லாம லோடெடுத்துப் பிச்சைக்கா
இருநாச் சுற்றியுழனி னின்றாய்—பேறுநி
லேற்றுவா யென்றுன்னை யெப்படியா னம்புவது
சாற்றுவாய் சோணா சலா. (௩௬)

அன்பார வுன்றனடிக் கமலம் பூசித்த
லென்பார மென்னை விரட்டித்த—துன்பாரக்
காரணா தீரா கருணாகரா மழுமான்
தாரணா சோணா சலா. (௩௭)

பந்தக்கா லென்னைப் பருத்தவுடல் சமைப்பே
னந்தக்கா லென்னெருண்டு டாவிகொள—வந்தக்கா
லஞ்சலிப்பே னீவந் தருளாயே லென்செய்வேன்
சஞ்சலிப்பேன் சோணா சலா. (௩௮)

ஒருமனத்தை நீக்கி யுயர்காவ லூரார்க்
கிருமனத்தைச் செய்தாண்ட தென்னே—வருமனத்தோர்



மாட்டியோ வென்பாரேல் மங்கையுமை கங்கையிவர்
சாட்டியோ சோணா சலா. (௪௦)

ஞானகுரு மெய்ஞ்ஞான நவிலரிய வேதமென
வோதுமுமம் முப்பொருளி னுண்மைதனைப்—பேதுறவேன்
றோர்வேனோ தேர்ந்தன் றிருவாளர் தஞ்சபையிற்
சார்வேனோ சோணா சலா. (௪௧)

ஞாலமிட லோடருந்து நாரணனே யாதியாக்
காலமிடர் தீர்த்தெம்மைக் காத்திடென—வாலமிட
கஞ்சமுண்டா வுன்னைவிட நாயேற் குலகிலொரு
தஞ்சமுண்டா சோணா சலா. (௪௨)

அபய கரமு மருள்சேர் முகமு
முபய பதமு முமையா—ளிபமுகன்சேய்
நன்னவா மால்விடைமே றுமயேன் சாருனக்கே
தன்னவா சோணா சலா. (௪௩)

அன்பே திரியா வருளே நெய்யாகமிக
வன்போக மகலா நாணுறு—முன்பேமெய்ஞ்
ஞானமாத் தீபமிட்டு நன்பொலிவோம் வாழ்வருள்சேர்த்
தானமாஞ் சோணா சலா. (௪௪)

மணமென்று கூறியதோர் வாயாலே மற்றும்
பிணமென்று கூறுகின்றார் பின்பு—குணமென்ற
வெம்மதியை நன்னு மெய்யினைமெய் யென்றனுவத்
சம்மதியேன் சோணா சலா. (௪௫)

மாசகன்ற வாதவூர் வள்ளல் வழுக்குமணி
வாசகமே மாமறைக்கு மாண்பென்றே—பேசுவே
னங்கையா னீயெழுது மன்பே பெருஞ்சான்றாஞ்
சங்கையா சோணா சலா. (௪௬)

னிரந்தரம் பரிந்தே யிடுவென்னு நீதி
கரந்துவிடா திருக்கக் கச்சூர்ப்—பொருந்தி
யுணவா தரித்து நம்பியுண்ண வளித்தாய்சீர்
தணவாத சோண சலா. (௫௭)

பாலையளித் தாய்காழிப் பாலனு ரின்புறவே
ருலையளித் தாயப்பர் துன்புறவே—யேலவினை
நன்மையோ வாயுண் முறைநாமத் தினுல்விளைந்த
தன்மையோ சோண சலா. (௫௮)

கற்பனையெ லாங்கடந்த காரணு தீதசுக
தற்பரனே நின்றுள் சரண்புகுந்தே—னற்பனெனக்
கொள்ளாதே குற்றங் குறியாதே யன்னியமாத்
தள்ளாதே சோண சலா. (௫௯)

பூசேன் விபூதிதனைப் பூணேன்சிவ மணியைப்
பேசேன் பஞ்சாக்கரத்தைப் பேதமையை—வீசேன்
வலவனே போற்றிரிவேன் வாழ்வேனு வேணிச்
சலவனே சோண சலா. (௬௦)

அளவை கடந்தவரு ளொளியே நின்பே
ருளவை யணுவு முணரேன்—களவகன்றோர்
தந்நிதியே மெஞ்ஞான தாண்டவா வானந்த
சந்நிதியே சோண சலா. (௬௧)

தொண்டர்களு மாதவருந் தூயசிவ காமியுநல்
லண்டர்களுங் காணமன்று ளாடுகின்றாய்—பண்டிருவர்
காணுமே யென்று கருதுங் கமலப்பூந்
தாளுமே சோண சலா. (௬௨)

ஆணிலே பெண்ணிலே யல்லா வுயிர்களிலே
வீணிலே யென்போல் விழைபவர்யார்—வேணி



வியானனே பொல்லா வினையேனைக் காப்பாய
தயானனே சோண சலா. (௬௩)

தொல்லை வறுமையினாற் சோர்ந்தாலு மென்மேனி
யில்லையெனும் லோபிகளை யாசியேன்—றில்லையிலே
வேம்பசிவா னைக்கழுஞ் செய்வேண்டும் பாலாழிதந்த
சாம்பசிவா சோண சலா. (௬௪)

கருணைபுரிந் தென்னைநீ காத்திடியே லென்னே
யருணை யடைந்ததுண்டோ வன்பாத்—தருணமல [செய்யுந்
ரிண்மையுண்டோ தொண்டுண்டோ வென்றுண்டென் றன்பர்
சண்மையுண்டோ சோண சலா. (௬௫)

திட்டென்று வெண்ணெய்த் திருடியுண்டு மாதாரற்
கட்டுண் டடியுண்டான் கண்ணனோ—பிட்டுண்டு
வாழ்வெவர்க்கு நல்கவே மாறனடி யுண்டாய்நீ
தாழ்வெவர்க்குச் சோண சலா. (௬௬)

தாயுமிலை தந்தையிலை தான்றனிய னுனைநீ
சேயுமிலை செய்களுக்குத் தேர்ந்திதனை—யாயுங்கால்
வர்க்கமிலை முன்பின் மரபிலைநீ வந்தவென்னத்
தர்க்கமிலை சோண சலா. (௬௭)

நண்ணிய வெற்போ வெள்ளிற்சிலையும் பொற்சிலையாம்
புண்ணிய மாதேவி யன்னபூரணியே—யுண்மையிவை
நம்புவே னன்றுபத்தூர் நாடியிரந் துண்டகதை
சம்புவே சோண சலா. (௬௮)

விளைவான் மகிழ்ந்திடு செல்வேலி யுனக்குண்டே
விளையான் குடிமாற னின்பா—மூளையதனை
வாரிவருங் காலை மறுக்காயோ மா[illegible]மேற்
சாரிவருஞ் சோண சலா. (௬௯)

அன்னை மலேயா னயப்பக் தாயுமையு
முன்னை முலேயா னுண்மைசொல—வொன்றுதா
மிக்கதோ நல்லோர் வியந்துதுதி செய்யத்
தக்கதோ சோணா சலா. (௭௰)

சூதாடப் பொய்பேசத் தூயோரை நிந்திக்க
வாதாட வஞ்சிக்க வல்லவன்யான்—வேதாவின்
ரேதகமோ நின்றுடு திக்கறியே னென்னுடைய
சாதகமோ சோணா சலா. (௭௧)

குகைநமசி வாயர் குருநமசி வாயர்
தகையுறு வெண்பா மாலைசாத்திப்—புகழுடைத்தா
ரேத்துகின்றே னுள்ளபடி யில்லையவர் போலச்
சாத்துகின்றேன் சோணா சலா. (௭௨)

நந்தவனம் புக்கு நறுமா மலரெடுத்துச்
சுந்தரப்பன் மாலைதொடுத் தணிந்தே—யெந்தை
யருணேசா வெண்பாவை யாபத்திற் காக்குந்
தருணேசா சோணா சலா. (௭௩)

முயலகன் மேல்வைக்கா முளரித் தாளிந்த
மயலகன் மேல்வைத்து மகிழ்வா—வியல்சேர்
பாதமே செய்யலனுக்கு முண்டு
சாதமே சோணா சலா. (௭௪)

பூவடிவம் வெற்பரையன் புத்திரிக்குத் தீண்டரிய
தீவடிவ நின்றனக்கேற் சீர்க்கச்சி—மாவடிக்கீழ்த்
தந்தேகம் வாடாமற் றன்வலைத்தா ணியிலைத்தாய்
சந்தேகஞ் சோணா சலா. (௭௫)

நன்மார்க்க நால்மார்க்க நண்ணுஞ் சரியையுறு
முன்மார்க்கமேனு முயலாத—வென்மார்க்கத்

துன்மார்க்க மாதலினுந் தூழ்வதெங்கே மேலான
சன்மார்க்கஞ் சோணா சலா. (௭௬)



பல்லாயிரந் தரமாப் பாலன்குறை யெல்லாஞ்
சொல்லா திருக்கவிலை சொல்லியுமென்—பொல்லாத
புத்தியின் றேடத்தாற் பொருத்தமின்றே வாண்டருளச்
சத்தியின்றோ சோணா சலா. (௭௭)

ஆடரங்கா வன்பர்மன மானந்தக் கூத்துகந்தாய்
கோடரங்கா னென்றன் கொடியமன—மீடரங்க
மண்டிப்பாய் வேகமடங்க வெங்குமோ வைதைத்
தண்டி... சோணா சலா. (௭௮)

மழைமுகளிர் ... ...மேவல் விடிநிவெய்யில்
குழைபசியோய் கள்ளர் கொடுங்கோல்—விழைகூற்றுத்
தீங்குவா ... செய்வாரை நீயிருந்து
தாங்குவாய் சோணா சலா. (௭௯)

பூமாலை கையும் புனைமாலை நேத்திரமும்
பாமாலை நாவும் பரிந்தணியுந்—தாமே
நெடுமாலைத் தேடவைத்த நின்னைச் சேர்பார்கூயத்
தடுமாலைச் சோணா சலா. (௮௰)

முற்காசி மன்னன் முகத்தைக் குறிக்கும்...
பிற்காசி கந்தவருள் பெய்ததுவே—யெற்காசி
யப்படியேன் றண்டித் தருள்புரியா யத்தோயான்
றப்படியேன் சோணா சலா. (௮௧)

தென்பாகத் தேவியுடன் சேர்ந்துநிறுத் தொண்டரிட்ட
வன்பாங் கறியை யருந்தற்கே—யின்பாப்போய்ச்
சிறானா வென்றழையுஞ் சேவையெனத் த...
தாராளா சோணா சலா. (௮௨)

ஆக்குவாய் காப்பா யழிப்பாய் மறைப்பாய்பின்
னூக்குவா யாவு நொடிப்போதே—தாக்கு
மியியேற்கு நேர்ந்தா னெத்தனையோ கற்பத்
தமியேற்குச் சோணாசலா. (௮௩)

தாயிலாச் சேய்போற் றவிக்கின்றே னென்றுரைத்தா
லாயிலா னென்ற வுதவையென—வாயிலா
ஆமனே யொத்தியா னென்றுமுறை யேனிதழித்
தாமனே சோணாசலா. (௮௪)

அனங்காணு னஞ்சுண்டா னம்மை வினையாற்
புனையுடம்பும் பாதியாய்ப் போனான்—றினை[illegible]
னேமாந்த மானிடனென் [illegible] [illegible]ந்தவடேன்
றுமாந்தர் சோணாசலா. (௮௫)

சங்கரியுந் தங்கோனவாற் சக்கரமான் ம[illegible]தலால்
வெங்கரி யயந்தவனன் மேவலா—லிங்கரிது
நிற்குருவே [illegible]ரூருவ நீமுழுதுங் கொண்டுறைவாய்
சற்குருவே சோணாசலா. (௮௬)

மோன முடிவே மொழியவரு மானந்த
ஞான வடிவே நின்னலமுழுதுந்—தீன
[illegible]யம்புவே னெ[illegible]னியவருள் செய்யாய்
சயம்புவே சோணாசலா. (௮௭)

முத்தே மணியே முழுவயிரப் பொற்றூணே
சித்தே யமதகுல தெய்வமே—சத்தருணை
மேருவே நற்கருணை மேகமே வந்தடைந்தேன்
குருவே சோணாசலா. (௮௮)

சோதிக்[illegible]மா தொழும்பனேன் றன்னையிக்க
வாதிக்க லா[illegible]னியாவம்—பாதிக்



கலாமதிகஞ் சேரவைத்த காரணநின் றாட்குச்
சலாமதிகஞ் சோணாசலா. (௮௯)

அண்டாண்ட கோடி யருளா லளித்தடிமை
கொண்டாண்ட சோதிக் குருமணிநீ—கண்டாய்
சுமுகனே யாகவெனைத் தொண்டுகொள் வாயன்பர்
சமுகனே சோணாசலா. (௯0)

திருவல கிட்டுத் திருமெழுக்கு மிட்டு
மருவுதிருக் கோலமிட்டு வாழ்த்திப்—பெருகுதளி
கம்பத்தே கத்துடனே கைகூப்பிச் சூழ்வதுநற்
சம்பத்தே சோணாசலா. (௯௧)

உருவா யருவா யருவுருவாய் நின்ற
வொருவா வுபதேச மோதக்—குருவாய்
வரவேண்டு முன்றன் மலர்ச்சரணத் தந்து
தரவேண்டுஞ் சோணாசலா. (௯௨)

ஆருரு மம்பலமு மானந்த கானமெனும்
பேருருங் கட்டமெனப் பேணுகிலேன்—சீரா
நித்தியமே நின்னூர் நினைக்கின்றேன் முத்திபெறச்
சத்தியமே சோணாசலா. (௯௩)

பாரறியா விண்ணறியா பாதாளந் தானறியா
யாரறிவா ருன்றனருஞ் சீர்த்தி—யோரானும்
யானறியாத் தன்மையதே யெம்பெருமா னின்னருநீ
தானறியாய் சோணாசலா. (௯௪)

கார்த்திகைக்குக் கார்த்திகைநாட் காட்சிபெறக் காட்டுகின்ற
சீர்த்திவளர் மெய்ஞ்ஞான தீபத்தை—யேத்தி
மதுரநேயத் தமிழால் வாழ்த்த வரந்தாராய்
சதுரனே சோணாசலா. (௯௫)

வானே முதலட்டமா மூர்த்தியா யமர்ந்தா
யேனை வுலகுய்ய வெண்ணியோ—வானே
நதிபதியே ஞான வருணிதியே சீலச்
சதிபதியே சோணா சலா. (௯௬)

சம்புவே யென்றனது தாளிணைக்க வொட்டாம
லைம்புலத்தார் கூடி யலைக்கின்ற—வெம்பிறவி
வெந்தோட நீங்குவிபவ மருள்வாய் மிகவுஞ்
சந்தோடஞ் சோணா சலா. (௯௭)

சோதனை செய்யாதே சுயவடிவா வந்தென்னை
யாதரிப்பாய் காட்டி யருச்சுனனின்—பாதமலர்
நாடினான் வேறெவரு நண்ணினாய் வில்லாலே
சாடினான் சோணா சலா. (௯௮)

வெள்ளையா [illegible] விளம்புவதென் மென்கனிதேர்
கிள்ளைமொழி போலிதனை கேட்டருள்க—பிள்ளைநான்
மாதாநீ தொண்டனான் வண்பதிநீ யேழைநான்
தாதாநீ சோணா சலா. (௯௯)

அருணாசலா வென்றே யன்புடனே போற்றி
யிருணாச மெய்த்தீப மிட்டோர்—பெருவாழ்வைச்
சிந்தையே செய்தளவு தேர்ந்துரைக்க வொண்ணாதென்
றந்தையே சோணா சலா. (௧௦௦)

சோணாசலவெண்பா முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சோணாசலதசகம்.

சோணகிரா ராகச் சொரிமும் மதக்கிறுக
ளானைமுகன் றாதைசோ ணாசலத்தைத்—தேனைச்
சகம்பொதிந்த பார்வதிக்குத் தக்கிணனை யென்புல்
லகம்பொதிந்து பெற்றே னருள். (௧)

சோதிவடி வாயிருவர் தேடத் தலங்குமுக்க
ணாதிவடி வார்சடையி னார்கங்கை—பாதிச்
சசியணிந்தார் சோணா சலமதனைச் சுற்றா
லசியமின்றிச் சேர்வா மிது. (௨)

சோராத நெஞ்சினிடைச் சோணா சலத்தார்க
ளோராத காத லமைவானேன்—பாழாழி
சந்திரனுஞ் சூரியனுந் தங்கிலவின் டாலுமுழ
லந்தகனென் முன்சோரா னல். (௩)

சோகந் துடைத்தருள்வாய் சூர்ப்பனச் சிறுக
ணாகந் தனையுரித்த நம்பனே—மேகமொடு
சந்திரன் றுஞ்சோணா சலவாம பாற்றைய
லந்திவண்ணத் தையா வருள். (௪)

சோமன்றலைக் கணிந்த சோணாசல வுணரு
ணாமந்தனை யென்வாய் நல்குவாய்—காமன்
சாமுன்மேற் பூப்போலச் சார்ந்திடினு நம்மே
ஆமெனச் சாராமை யருள். (௫)

சோறுண்டிட லுடுத்தல் தூங்க லிவைகளின்க
ணூறுதலுண் டோநஞ்சோ ணசலா—நீறு
சயமாக மேனி தனிலெனது நெஞ்சா
லயமாக வென்று மிரு. (௬)

சோலைசெறி யாரூரோ சோணமலை யோவிசையென்
ணூலயிசைப் பார்வாயோ நம்பாட்டோ—மாலைச்
சயமழித்த காசியோ சார்தில்லை யோவா
லயமென்று நீசா ரிடம். (௭)

சோதித்தென் னின்ன றுடைகா ரெனவியங்க
ணோதிக்குஞ் சோணமலை நாதனே—வாதித்த
சங்கத்தா நெஞ்சின்மடந் தானொழித்தாய் வேதன்மா
லங்கத்தா யந்தீவ ணாத்தா. (௮)

சோகித் திருப்போரைச் சாய்யுசிவன் றாட்சிருக
ணூகீத் துயர மகற்றுமல்—யோகத்தார்
சங்கத்துச் சோணசல மதனி லேகாம
லங்கிருக்கச் சென்றலைவோ ராய். (௯)

சோபிக்கு ஞானவுருச் சோணசலத்தார்தா
ணாபிக் கமலற்கு நாடரிதே—பாவிச்
சனங்கட்குக் காணுமோ சத்திவிளக் காற்பா
லனங்கொண்டு காணுங்க ணன்பு. (௧0)

சோணசலதசகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருணைக்கலிவெண்பா.

கார்பூத்த மாலும் கருமாவாய்க் காணரிய
பார்பூத்த சேவடியும் பங்கயத்தோ - னேர்பூத்த (௧)

அன்னவடி வாயு மறியா முடியுமன்பர்
தன்மனக்கொள் சோண நகத்தனே - சின்மயமாம் (௨)

உன்ற னுமையம்மை யோர்பாகங் கொண்டிரு
வன்ன மலைவிளங்கு மைம்முகனே - விண்ணவர்கள் (௩)

தந்தியக்க ரீங்கமத தந்தி யுரிவைபோர்த்
தந்திவண்ண மேத்தருளாத் தந்திட்ட - சுந்தரனே (௪)

கஞ்சைதனி யாதித நஞ்சைவளை சோணமலை
கஞ்சையணி கண்டத்த நம்பனே - யைஞ்சபையாஞ் (௫)

செம்பம் பலசெல்லை சித்ரசபை குற்றாலம
[illegible] யம்பலமா லங்காடு - உம்பர்தில்லைப் (௬)

பொன்னம் பலங்கூடல் புக்கவெள்ளி யம்பலங்க
ளின்னடஞ்செய் சோணமலை யீசனே - வன்னமலி (௭)

தேவன் றுறைச்சந் திரசேக ராலயத்தெற்
காவன் கயிலை யதுவடக்காத் - தேவர்புகழ் (௮)

சோமநா தம்மேற்குச் சொல்லீமே சங்கிழக்கே
யாமத்தி நின்ற வருளையாய்—காமர் (௯)

வடக்குத் திசைமுழை வாணிற் றுறக்கஞ்
சுடர்ப்பொன் னிலங்கைதெற்காத் தொல்லோர் - நடத்துபுகழ் (௧0)

பொன்னிலங்கண் மூன்றும்விற் போல விளங்கநடு
நன்னிலங்கொள் சீரருணை நாதனே - தொன்மை (கக)

அவந்தி துவாரகைமேற் காக்காஞ்சி கீழாச்
சிவன்சீர் மாயாமதுரை தெற்காய்ப் - பவந்தீரும் (கஉ)

காசி யயோத்திவடக் காகநடு நின்றமரர்
பூசிக்குஞ் சோணப் பொருப்பனே - ஆசற்ற (கங)

கங்கை யமுனை கவுதமியே நன்மதைசீர்
மங்காச் சரசு வதிவடக்காய் - ஐங்கரத்தோன் (கச)

கொட்டியகா வேரி குமரிதெற்காய்ப் பாயநடு
வட்டிகழுஞ் சோணகிரி யோங்கொளியே - சிட்டர்புகழ் (கரு)

மண்ணிலிங்கங் காஞ்சி ம[illegible]யிலிங்க மானைக்கா
விண்ணிலிங்கந் தில்லை விய[illegible]தார் - திண்ணார்சார் (கசா)

வாயுலிங்கங் காளத்தி மற்றிவைக்கு மத்தியாந்
தேயுலிங்க சோணகிரிச் சிற்பரனே - காய (கஎ)

பிறக்கமுத்தி நல்கு மெழிற்காசி வந்து
பிறக்கமுத்தி நல்குதிரு வாரூர் - அறத்தாற் (கஅ)

றனைப்பார்க்க முத்திதரு தில்லை யிவைக்கு
நினைக்கமுத்தி நல்கருணை நின்றாய் - அனைத்தாறும் (கசூ)

கற்பால்கள் பஞ்சாய்க் கனமழையோ பூவலராய்
வெற்புதினூ ராகி விளங்கினவே - பொற்பொலியும் (உo)

அந்திவண்ணத் தாநின்மல மலர்ப்பாதம்
புந்திமிசைக் கொண்ட பொழுதத்தே - கந்தமலி (உக)

வன்னவ[illegible]லவி வாயவளை யாரவொளி
வென்ன விளையுள்வயல் வேலிவளை - யுள்ளு (உஉ)



நல்வரையா யாழிவா யாவயில்வா யுள்ளா
ருழியுலவா வொல்லை யருள்வாய் - விழிநிறைந்த (உங)

கஞ்சக் கழலிணைகள் கையாற் றுதித்தனது
தஞ்சத் தடைத்தேன் தயைதருவாய் - விஞ்சொளிய (உச)

சந்திரனுஞ் சூரியனுந் தாமிருவிற் கால்போல
அந்தவில்லம் பாய்மலைமே லார்தீபம் - இந்துகதிர் (உரு)

மத்திநிற்குந் தீயாகி மாலயனுண் ணீயாகு
மித்திருநாள் கண்டார்க் கிடருண்டோ - வித்தகமார் (உசா)

கல்வி மறந்தழியுங் காய நிலையாது
செல்வ நிலையாது தேருங்கால் - ஒரு[illegible]லை (உஎ)

வினையோ வெறுபலிக்காற் றிருமெய்றும் விடா
துணையேத்திப் பெற்றவரு ளுண்மை - கனைசிலம்பா (உஅ)

யாரணங்க ளோலிட் டறியா ததிலசக
காரணசத் தாகின் கழலிணைக்கே - நானியாற் (உகூ)

பாடலாப் பெற்றேன்கண் பார்க்கப்பெற் றேனின்னை
நாடமனம் பெற்றே னெனக்கில்லைத் - தேடரிய (ஙo)

பாதார விந்தம் பணியப்பெற் றேன்றமியேற்
காதார நீயே யருள். (ஙக)

திருச்சிற்றம்பலம்.

திருவருணைக்கலிவெண்பா

முற்றிற்று.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை

# திருவருட்பதிகம்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வளங்கிளர்சடையும் விளங்கியவிழி மாலையுமாலயன்வழுத்துங்
குளங்கிளர்நுதலுங் களங்கிளர்மணியுங் குலவுதிண்புயமும்புயத்தின்
றளங்கிளர்பதமு மிளங்கதிர்வடிவுந் தழைக்கநீயிருத்தல்கண்டுவந்த
உளங்கிளரமுதே துளங்குநெஞ்சகனே னுற்றருணையிற்பெறவருளே.
அன்பர்தம்மனத்தே யின்பமுற்றவைக ளளித்தவர் களித்திடப்
புரியும், பொன்பொலிமேனிக் கருணையங்கடலே பொய்யனேன்
பொய்மை கண்டின்னுந், துன்பமுற் றலையச் செய்திடே லருணைத்
தொன்னக ரிடத்துனதெழில்கண், டென்புள முருகத் துதித்திடல்
வேண்டுமிவ் வரமெனக் கிவணருளே. (௨)
பூத்திடுமவனுங் காத்திடுபவனும்புள் விளங்குருக்கொடுநேடி
யேத்திடுமுடியுங் கூத்திடுமடியு மின்னமுங்காண்கிலரென்றுங்
கோத்திடுமடியர் மாலையினுளவிற் குலவினையென்று நல்லோர்கள்
சாற்றிடுமதுகேட்டு வந்தனனினது சந்நிதியுறவெனக்கருளே. (௩)
அருள்பழுத்தோங்கு மானந்தத்தருவே யற்புதவமலநித்தியமே,
தெருள்பழுத்தோங்குஞ் சித்தர்தம்முரிமைச் செல்வமேயருணையந்
தேவே, யிருள்பழுத்தோங்கு நெஞ்சினேனெனினு மென்பிழைபொ
றுத்துநின்கோயிற், பொருபழுத்தோங்குஞ் சந்நிதிமுன்னர்ப் போந்
துனைப்போற்றுமாறருளே. (௪)
மறையுமம்புயனும் வாய்மையுமாகி மன்னியவள்ளலே மலர்
மே, விறையுநின்றவனு மிறையுமின்னவனென் றெய்திடா விறைவ
னே, பொறையுநன்னிறைவு மறிவுநற்செறிவும் பொருந்தி
டாப் பொய்யனே னெனினு, மறையுநற்புகழ்சே ரருணையைவிழை
ந்தே னங்கெனையடைகுவித்தருளே. (௫)



தேவொர்தேடுஞ் செல்வமேசிவமே திருவருணைபுரித்தேவே,யே
வொரிதழிக் கண்ணியெங் கோவே யெந்தையே யெம்பெருமானே,
பாவொர்க்களிக்கும் பரம்பரப்பொருளே பாவியேன் பொய்யெலாம்
பொறுத்து, நாவொர்புகழு நின்றிருக்கோயி னண்ணுமாவெனக் கிவ
ணருளே. (௬)
உலகுயிர் தொறுநின் றாட்டுவிட் டாட்டு மொருவனே யுத்தம
னேநின், னிலநுமுக் கண்ணுங் காளகண்டமு மெய்யிலங்கு வெண்
ணீற்றணி யெழிலுந், திலக வொண்ணுத லுண்ணாமுலை யுமையாள்
சேரிடப்பாலுங் கண்டடியேன், கலகவைம்புலன்செய் துயரமு மற்றற
க்கலக்கமு நீக்குமாவருளே. (௭)
அருட்பெருங் கடலே யானந்த நறவே யடியவர்தமுங்கடந்த,
தெருட்பெருமலையே திருவண்ணாமலையிற் றிகழ்நயஞ்சோதியேசிவனே,
மருட்பெருங்கடலின் மயங்குகின்றேனென் மயக்கெலாமொழித்து
னன்பிறவி, யிருட்பெருங்கடல்விட் டேற நின்கோயிற்கெளியனேன்
வர வரமருளே. (௮)
கருணையங்கடலே கண்கணுதலுடைய கடவுளே கமலமா
லறியா, வருணையெங் கோவே பரஞானந்த வமுதமே யற்புதநிலை
யே, யிருணிலம்புகுதா துனையெடுத் தாண்ட வின்பமே யன்பர்தம்
மன்பே, பொறுமையம்பெறநின் சந்நிதிக்கெளியேன் போந்துனைப்
போற்றுமவா றருளே. (௯)
எதுசெயினுநம் பொறுத்தருள்புரியு மென்னுயிர்க்கொருபெ
ருந்துணையே, தீதுசெய்மனத்தார் தம்முடன்சேராச் செயலெனக்
களித்தவென்றேவே, வாதுசெய்புலனுள் வருந்தல்செய்கின்றேன் வ
ருந்துறு வண்ணமெற் கருளித், தாதுசெய்பவனைத் தருணையங்கோ
யிற் சந்நிதிக்கியான்வரவருளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பதிகம்.
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலீசர்பதிகம்.

காப்பு - வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாம்பதிகங் கூறுதற்குத் தொந்திக்
கணபதியைக் கைதொழுதக் கால்.

---

வினைவாயிலூலம் விலையாகிதேசம் விசுருபமான வடிவே
மனமாய்கைமூடி யறிவேகலங்கி மனமும்மயங்கி வெருவாய்
வினையோடிருந்து அவதிக்குலைந்து யெமதூதரோடி வருமுன்
மனவேகமாக அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௧)

கயிலாயமேரு அதிலாறுவீடு கரைகண்டதில்லை யொருவர்
வெயிலானசோதி விளையாடும்வீடு வெளியாய்கை யேதுமறியேன்
பயிலானகொம்பிற் பசுங்காயுமாகி பழமாயுதிர்ந்து விழுமுன்
மனவேகமாக அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௨)

கதியோடுதும்பை முடிமீதணிந்து வெயானவெள்ளி மலைமே
பரியாயிருந்து வுமையாதிகொண்ட பரனேயுன்றனைமறவேன்
விதிதூதனேவ யெமதூதர்வந்து வெருவாதைசெய்து விடுமுன்
மதியேபுனைந்த யருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௩)

உற்றாருமில்லை புறவுமில்லையாரு முறைசொல்லி யிப்பவரவே
பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானேயுன் றனைமறவேன்
கற்றாருமேற்ற வடியாரிருந்து கனியாயமர்ந்த கனியே
மற்றாருமில்லை யருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௪)



நித்திரை செய்கிறவராகிய விஷ்ணுமூர்த்தி இந்தமலையி னடியை நா னறிந்து வருகின்றேனென்று வராகவடிவானான்; இந்த மலையின் சிகரத்தைக் காணுகின்றேனென்று பிரமனும் அன்னப்பக்ஷியாகி ஆகாயத்திற் பறந்தான். எ-று. (௪௪)

மெத்துமறைக் கணத்தினுக்கா யிரங்காதம்
பறந்தயனார் விரைந்து போனார்
துத்தியரா வெடுத்தபுவி கணத்தினுக்கா
யிரங்காதந் துளைத்துப் போனா
ரத்தகையோர் செயலுரைக்கிற் கனகமணி
நெடும்பூட்டுக் கருகி லோடு
நித்திலப்பொற் குண்டிகையு நீலமணிக்
குண்டிகையு நிகர்த்த மாதோ.

(இ-ள்.) சொல்லப்பட்ட அரை க்ஷணத்தில் பிரமதேவர் ஆயி ரங்காதவழி பறந்து மேலாகப்போனார்; படத்தையுடைய ஆதிசே டன் சுமந்தபூமியை அரைநொடியில் ஆயிரங்காததூரம் தொளைத் துக்கொண்டு விட்டுக் கீழாகப்போனார்; அஃதெப்படி யிருந்த தென்றால், அம்மலை தங்கமயமாகிய ராட்டணப் பூட்டைப்போல வும், அதில் இந்திரநீலத்துக்குக் கட்டிவிட் டிருக்கின்ற நீலரத்தினத் தோண்டிபோலவும் முத்தாக விழைத்திருக்கிற அழகிய தோண்டி போலவு மிருந்தது. எ-று. (௪௫)

பூவுலகை யரியகன்று கீழுலகின்
முறைமுறையே புகுந்து போந்து
காவலுறு மாவலிதன் போகவதி
யெனும்புரமுங் கடந்து மேவித்

தேவர்தொழும் பரஞ்சுடர்வா ளாடகே
சுரங்கரத்துஞ் சிரத்தும் போற்றி
மூவுலகை முதலளந்தோ னேழுலக
மளந்துமதன் முடிவு காணான்.

(இ-ள்.) வராகவடிவமெடுத்த விஷ்ணுவானவர் பூலோகத்தைக் கடந்து, அதின்கீழிருக்கிற ஏழுலகத்தையும் முறையே தொளைத்துக்கடந்துபோய் மாவலிச்சக்கிரவர்த்தி காவலிலிருக்கிற போகவதிபட்டணத்தைத்தாண்டி, அப்புறம் தேவர்கள் வணங்கும் பிரமசொரூபமாய் விளங்குகின்ற ஆடகேசுரத்தைக்கண்டு கைகளினாலும் சிரத்தினாலும்வணங்கி முன்னே மூன்றுலகத்தையு மளந்தவர் இப்போ ஏழுலகங்களை அளந்தும் அந்தமலையினடியைக்காணமற்போனார். எ-று.

வளர்ப்புடைய பிறைபோல வளர்மருப்புந்
தேய்பிறைபோல் மழுங்கிப்போகக்
குளப்படியு முகநுனியும் பினைத்தேடு
மாசையைப்போற் குறைந்துபோக
வளப்பரிய துயரின்விழுந் தொருநாளுன்
டொழிந்ததற்பி னரனை வாழ்த்தி
யிளைப்பதுவுஞ் சலிப்பதுமற்
றெழுதலமு மிடர்க்கடலு மேறினானே.

(இ-ள்.) அப்படி மகாவிஷ்ணு வராகவடிவங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல் நாளுக்குநாள் வளர்ச்சியுற்ற இரண்டு கொம்புகளும் தேய்பிறைபோல் குறைந்து மழுங்கிப்போகவும், குளம்புகளும் முகத்தினுனியும் தேடுமாசை பின்பு எப்படி குறைந்துபோயிற்றோ! அப்படித்தேய்ந்து குறைய் எண்ணக்கூடாத துக்கசமுத்திரத்தில் விழுந்து அறுவருஷகாலம் தேடியுங்காணமல் பின்பு தெ



ளிவுவந்து இது சிவனுடைய செயலென்றறிந்து அவரைத்தியானஞ்செய்து இளைப்புஞ் சலிப்பும் நீங்கித் தன்னுடைய துக்கசமுத்திரத்தையும் ஏழுதலத்தையும் தாண்டிவந்தார். எ-று. (௪௭)

தம்போரை முதற்றடுக்கத் தழற்பிழம்பா
யெழுந்தவந்தத் தலத்தைச் சார்ந்தா
னம்போத னிதன்முடியி னளவறியா
னெனமனத்தி லையந் தீர்ந்தா
னம்போருக் கரியானைச் சேயானைத்
தனதுவிழி நயனத் தோடே
யைம்போதைப் புனைவானைப் பலகாலும்
பணிந்துருகிப் பரவி நின்றான்.

(இ-ள்.) தனக்கும் பிரமனுக்கும்வந்தகலகத்தை நீக்கும்படி அக்கினிசொரூபமாக எழுந்த தலத்தைச்சேர்ந்து அழகியதாமரைப்பூவிலிருக்கிற பிரமன் இந்[illegible]மலையின்முடியை அறியமாட்டானென்று நிச்சயஞ்செய்துகொண்[illegible], நம்பாதமனிதர்களுக்கு அரியவரை எப்படிப்பட்டவர்களுக்கும் [illegible]ரமாகவிருக்கிறவரைத் தம்முடைய கண்ணாகிய புட்பத்தோடு அழகியபுட்பங்களைத் தரிக்கின்றவரைப் பலதரமும்வந்தனஞ்செய்[illegible] உள்ளமுருகிப்பாவினார் விஷ்ணுமூர்த்தி. எ-று.

கலி விருத்தம்.

இன்னதா யிவன்செய விருக்க விங்கிதன்
முன்னமே யழற்கிரி முடியைத் தேடவே
யன்னமாய்ப் பறந்தவ னரைக்க ணத்திலே
மன்னுமோ ராயிரக் காதம் வாவினான்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் இந்தவிஷ்ணுவிருக்க, இதற்குமுன்னே அக்கினிமலையின் முடியைத்தேட அன்னப்பட்சியாகிப் பறந்த பிரமன் அரைக்ஷணத்திலே ஆயிரங்காதவழி தாண்டினார். எ-று. ()

கீறியே யண்டகோ ளகையுங் கீழுற
வேறிநா றாயிர மாண்டு மேவிநூ
றூறுநா றாயிரக் காத போக்கினு
மீறிலா திருந்ததவ் வெரியின் றாணமே.

(இ-ள்.) அண்டகோளகையுங் கிழிபடக் கிழித்துப்பறந்து நூறாயிரவருடந் தேடினர்; அப்படி அநேக நூறாயிரங்காதந் தாண்டிப் போய்ப் பார்த்தாலும் முதல்பார்த்ததுபோலவே முடிவில்லாதிருந்தது அந்த அக்கினித்தூண். எ-று. (௩0)

சிறையெலா முதிர்ந்தன விசையுந் தீர்ந்தன
நிறைவதா மிடுக்கனு முயிர்ப்பு நீண்டன
குறையெலாம் வளர்ந்திடத் தனிமை கூர்தலு
மறையினு னிவையிவை மனத்தி னெண்ணினன்.

(இ-ள்.) அப்படி பிரமன் அன்னமாய்ப்பறந்து போம்போது, சிறகெல்லா முதிர்ந்துபோயின; விசையும் அடங்கிற்று; குறைவில்லாத துக்கமும் பெருமூச்சும் அதிகப்பட்டன; மனக்குறையகர ஒருவருமில்லாமல் தான் ஒன்றியானபடியினாலே பிரமா இவைகளை மனத்திலெண்ணினர். எ-று. (௩௧)

அரியமா விதனடி யறிந்து மீளுமோ
தெரிவுறு திடையிலே திரும்புமோ வென
வரியதா மெதுய ருசலாடினு
னெரியுறு மெழுகுபோ லினகுஞ் சிந்தையான்.

(இ-ள்.) அரியமகாவிஷ்ணு இந்த அக்கினிமலையினுடைய அடியையறிந்து திரும்புவாரோ! கொஞ்சந்தூரந்தேடி இனிமேல் தேடக்கூடாதென்று திரும்பிவருவாரோ! என்கிற துக்கமாகிய ஊசலிலிருந் தாடினர். நெருப்பிலேயிட்ட மெழுகுபோல் இளகிய மனமுடையவனாகிய பிரமதேவன். எ-று. (௩௨)



மற்றிது சிவனென மனத்தி னெண்ணிலே
னுற்றரி தன்னையு முறவு கொண்டிலே
னிற்றைநாள் வரைக்குமிவ் விடர்க்குண் மூழ்கினேன்
சிற்றறி வுடைமையோ செய்த தீமையோ.

(இ-ள்.) இந்த மலையைச் சிவனென்று அறியாமற்போனேன்! பகைத்துக் கொள்ளப்பட்ட விட்டுணுவையாவது உறவுகொள்ளாமற் போனேன்! அன்றுமுதலின்றுவரையிலும் வெகுகாலமாய்த் துக்கசமுத்திரத்தில் மூழ்கினேன்! என்னுடைய சிறியபுத்தியினாலேயோ! பூர்வம் நான்செய்த பாவத்தினாலேயோ! என்று விசனத்தையடைந்தான் பிரமன். எ-று. (௩௩)

எய்தினேன் முடியறிந் தேகிலே னெனும்
பொய்களை யுரைக்கினும் பொருந்தவே யுரை
செய்துணை பிறிதிலை யென்று தேம்பினன்
*கைதையின் மடலவரப் பின்பு கண்டனன்.

(இ-ள்.) இவ்வளவுதூரந் தேடிவந்தும் முடியை யறியாமற் போனேன்! ஆனாலும் இனிமேற்போய் விட்டுணுவினிடத்திற் பார்த்தேனென்று பொய்சொன்னாலும், ஒத்தாசையாகப் பார்த்தேனென்று பொய்ச்சாட்சி சொல்வதற்கு ஒருதுணையு மில்லையேயென்று விசனப்பட்டான்; அச்சமயத்தில் தாழம்பூமடல் ஒன்று மேலேயிருந்திறங்கப்பார்த்தான் பிரமன். எ-று. (௩௪)

இம்மட லெங்குற்று வருவ தென்னுமுன்
னம்மட லணைந்ததங் கதனை யேற்றனன்
செம்மறன் முடியில்வீழ் ‡செம்ம லாகையால்
மெய்ம்மைசே ருயிர்ப்பதாய் விடுமி னென்றதே.

---

* கைதை = தாழம்பூ. ‡ செம்மல் = பழம்பூ.

(இ-ள்.) இந்தத் தாழைமடல் எங்கேயிருந்து வருகிறதென்று ஆலோசிக்குமுன்னே, தாழம்பூ பிரமனுக்குச்சமீபத்தில்வர, அதைக் கையினாலே பிடித்தான்; அது பரமசிவனுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்த பழம்பூவாகையால் மெய்மையான பெருமூச்சோடு என்னைச் சீக்கிரத்தில் விட்டுவிடுவாயென்று சொல்லிற்று. எ-று. (௫௫)

ஏரணி கைதையே யிங்கு நீவருங்
காரண மேதெனக் கமலன் கூறினான்
ஆரண னாரண னளவிடா முத
லாரணி முடியினுந் தவறி வீழ்ந்தனன்.

(இ-ள்.) அந்தத் தாழம்பூ சொல்லியதைக்கேட்டு, அழகான தாழம்பூவே? எங்கேயிருந்து இங்குவந்தாயென்று பிரமன்கேட்க, பிரமனாலும் விட்டுணுவினாலும் அறியக்கூடாத பரமசிவத்தினுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்தேனென்று சொல்லிற்று. எ-று. ()

தார்ப்பொலி முடியினுந் தவறி வீழ்ந்தபின்
னாற்பதி னாயிரம் வருட நண்ணினே
னேற்பது விடுகவென் றுரைப்ப வேதையைப்
பார்ப்பது விடுத்தயன் பகர்வ தாயினான்.

(இ-ள்.) கொன்றைமாலை பிரகாசிக்கின்ற சுவாமியின் திருமுடிமேலிருந்துவிழுந்து நாற்பதினாயிரம் வருஷங்களாக வந்தேன், இன்னும் நான் பூமியிற்போகவில்லை; வருத்தத்தோடு வருகிறேன், என்னைப் பிடிக்கவேண்டாம், விட்டுவிடென்று தாழம்பூ சொல்ல, பிரமன் சுவாமியைத் தேடுவதைவெறுத்துச் சிலவார்த்தை சொல்லத் தொடங்கினான். எ-று. (௫௭)



துன்னிய கைதையே துணையுமாய் நமக்
கின்னமு மலைவுறு திடுக்க ணீக்கினு
னுன்னினு முயிர்த்துணை யுறவுவேறிலை
யன்னிய னல்லனு னனமு மல்லனே.

(இ-ள்.) என் சமீபத்திலடைந்த தாழம்பூவே! நீ எனக்குத் துணையாயிருந்து நானின்னமுந் தேடியலையாமல் என்வருத்தத்தை நீக்கினால், உன்னைப் பார்க்கினும் உயிர்போன்றதுணையும் உறவும் வேறில்லை; நானும் அன்னியனல்லன், அன்னப்பக்ஷியு மல்லன் என்று சொன்னான் பிரமன். எ-று. (௫௮)

நாமமோ நான்முக னாகு மாலுமா
யேமமா யிதற்கள விசைக்க வெண்ணினேம்
பூமிகீ ழிடந்தவன் போயினான் மனத்
தீமையேன் றிருமுடி தேடிக் காண்கிலேன்.

(இ-ள்.) என்பெயரோ பிரமன்; நானும் விட்டுணுவுங்கூடி அக்கினிசொரூபமாகிய இத்தமலையினளவைத் தெரிந்துகொள்ள வெண்ணினேன்; பூமியின் கீழிடத்தைப் பிளந்துகொண்டு அடியை அவன் தேடப்போனான்; பாவியாகியநான் முடியைக்காண வெகுநாள் தேடியுங் காண்கிலன். எ-று (௫௯)

அடிதலை வாவிது வதுகொண் டென்பய
னெடியநின் வாவினா னினைத்த தெய்தினாற்
படியளந் தவனுடன் பறவை யாமிவன்
முடியறிந் தானென மொழிதல் வேண்டுமே.

(இ-ள்.) ஆதியந்தமாக நடந்த செய்தியிது; அதைக் குறித்துப் பேசுவதினாற் பலனென்ன; பெருமை பொருந்திய உன்னுடையநல்வாவினாலே நினைத்தகாரிய முடிந்தால் தான் பயன்; பூமியை யளந்த

விஷ்ணுவினுடன் பறவையா யுருவெடுத்த இப்பிரமன் சிவனுடைய முடியையறிந்தானென்று நீசொல்லவேண்டுமென்று பின்னுஞ்சொல்லுவான் பிரமன். எ-று. (௬௦)

வஞ்சமென் றிகழ்ந்திடேல் வருந்தி னோர்க்குயிர்க்
கஞ்சமா மெனிற் பெரும் பொய்யுஞ் சாற்றலா
மஞ்சியே சொலத்தகா மொழியு மன்றிது
நஞ்சமுண் டமைவரே நண்பு வேண்டுனோர்.

(இ-ள்.) தாழம்பூவே! கேள், இது வஞ்சனைத் தொழிலென்று தள்ளாதே; யாதோ ஒரு அனர்த்தத்தை யடைந்தவர்க்கு உயிர்ச்சேதம் வருமாயின், அதுபிழைத்தற்குப் பெரிதாகியபொய்யையும் சொல்லலாம், இது பயப்பட்டுச் சொல்லக்கூடாத வார்த்தையு மல்ல; சிநேகம் வேண்டினவர்கள் தம்முடைய நண்பன் விஷத்தை தின் என்றாலும் தின்று சிநேகிதன் பேச்சைத்தட்டாமல் சீர்த்தி நிலைக்கச் செய்வார்கள். எ-று. (௬௧)

[உண்ண என்னும் செயவெ னெச்சம் உண்டு எனச்செய்தெனெச்சமாகத் திரிந்து அங்கு இழிவு சிறப்பும்மை தொக்கு நின்றது ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது.]

கண்ணுதன் முடியில்வாழ் கைதை யேயிறி
தென்னுவ தொழிலென வியைந்து போந்தது
விண்ணினு மிருந்துகீழ் விரைந்து வேதியன்
மண்ணுல களந்தமான் மருங்கு நண்ணினான்.

(இ-ள்.) பரம சிவனுடைய முடியில் வாழ்கின்ற தாழம்பூவே? வேறே ஓர் ஆலோசனையுஞ் செய்யவேண்டாம்; இதற்குடன்படென்று சொல்லத் தாழம்பூ அதற்கிசைந்துவந்தது; ஆகாயத்தில்நின்றும் சீக்கிரத்தில் பிரமன் மண்ணளந்த விட்டுணுவினிடத்தில் வந்துசேர்ந்தான். எ-று. (௬௨)



சிதரா கேட்டியென் வரவின் செய்கையைக்
காதநூ றாயிரங் கணத்தி லேகடந்
தாதியான் முடியறிந் தணுகி னேனென
வோதினான் கைதையு முள்ளதென் றதே.

(இ-ள்.) விட்டுணுவே! என்னுடைய நல்வரவைக்கேள், ஒரு கொடியிலே நூறாயிரங்காதம்பாய்ந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவனுடைய சிரம்பார்த்து வந்தேனென்று சொன்னான்; தாழம்பூவும் நிஜந்தான் பிரமன் பார்த்தானென்று சொல்லிற்று. எ-று. (௬௩)

எழுசீரடி யாசிரியச் சந்தவிருத்தம்.

அக்கண மழற்கிரி வெடித்தது வெடித்தவொ
வத்தினி லரக்க ரிமையோ
ருக்கனர் திசைக்களிறு கக்கின வரக்கரை
யுருக்கிய தெனக் குருதிநீர்
செக்கரொளி மட்கிட முருக்கிதழ் கறுக்குமெய்
சிவப்பொளி வெளுத்த வடிவாய்
முக்கண னதற்கிடை முளைத்தனன் முகத்திலவன்
மூப்புர மெரித்த நகையே.

(இ-ள்.) அப்படி பிரமன்சொன்ன அந்தக்ஷணமே, அக்கினி மலை படீரென்று வெடித்தது; வெடித்த சத்தத்தில் இராட்சதர்கள், தேவர்கள் திடுக்கிட்டு உயிர்சோர்ந்தார்கள்; திக்கில் உள்ள யானைகள், சூரியர்களை உருக்கிச்சாய்த்தா லெப்படியோ அப்படி இரத்த ஜலத்தைக்கக்கின; செக்கர் வானத்துப்பிரகாசம் மழுக்கிப்போம்படியாகவும், முருக்கம்பூவிதழ் கறுக்கும்படியாகவும், சிவந்த தமது திருவுருவின் ஒளிவுபொருந்திய நிறம் விபூதியினால் வெளுத்தவடிவாய்த்

தோன்ற அந்த வெடிப்பிலின்றும் பரமசிவன் முப்புரத்தை எரித்த நகை அவர்முகத்திலதோன்ற எழுந்தருளினார். எ-று. (௬௪)

முண்டக வகந்தையின் மொழிந்தவுரை நன்றெனா
மொழிந்து நகைகொண்ட ளவேவ
அண்டபகி ரண்டமிழ நடுங்கின வொடுங்கின
வடங்கின விடுந்சு டரெலாங்
கொண்டலு மறைந்தன சிறந்தன விறைந்தன
குறைந்தன நிறைந்த னருவா
லெண்டிசை திரிந்தல கரிந்தன பொரிந்தன
வெரிந்தன விரிந்த தருவே.

(இ-ள்.) ஓ பிரமனே? உன்னுடைய அகங்காரத்தினாற் சொன்னசொல் நன்றாயிருந்ததென்று சொல்லி நகைத்தபோது, அண்டபகிரண்டங்களெல்லாம் திடுதிடென்று நடுங்கி யொடுங்கிப் போயின; சூரியசந்திரருடைய பிரகாசமடங்கிப்போயின; மேகங்கள் மறைந்தன; சிறந்து நிலையாயிருக்கிறவைகளெல்லாம் இறந்தன; குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன; கூட்டமாகிய திக்குகள் அலைந்தன; பரவியிருந்த மரங்களெல்லாங் கரிந்தும் பொரிந்தும் எரிந்தும் போயின. எ-று. (௬௫)

கலி விருத்தம்.

அழிந்தன னயனென வமர ரஞ்சினார்
குழிந்தது நிலமெனக் கொள்ளை யாமலர்
பொழிந்தனர் நெடியவற் குவகை பூத்தது
கழிந்தது மலரவற் கிடும்பைக் கங்குலே.

(இ-ள்.) தேவர்களெல்லோரும் பிரமன் இன்றே அழிந்தபோனானென்று பயப்பட்டார்கள்; பூமிபள்ளமாகும்படி கொள்ளைகொள்

10262



ளையாகப் புட்பமாரி பொழிந்தார்கள்; நெடுமாலுக்குச் சந்தோடம் வந்தது; பிரமனுக்கு அகங்காரமென்கிற இருள் நீங்கிப்போயிற்று. எ-று. (௬௬)

பாடினான் பரவினான் பரவ சத்தினா
லாடினா னோடினா னளவி டா முதல்
கூடினா னெவ்வரங் கொ ளுகே னெனத்
தேடினான் சிவனையத் தெ ரிந்த செங்கண்மால்.

(இ-ள்.) அப்போது தெளி ந்த விஷ்ணுதேவர், அக்கினிமலையினிடத்திலிருந்து எழு ய பரமசிவனைப்பாடினார், வந்தனஞ்செய்தார், பரவசங் டானந்தக் கூத்தாடினார், நான்கு திக்கிலும் ஓடினார், யாவராலுமளவிடக்கூடாத இச்சுவாமியைத் தரிசித்துக்கூடினவனாகி, இனிநானென்னவரங்கேட்பேனென்றாலோசனைசெய்தார். எ-று. (௬௭)

ஆசையா லுருகுமவ் வரித னன்புகண்
டீசனும் பலவா யினிது நல்கினான்
வாசமா மலரவ னுக்கு மண்ணின்மேல்
பூசையுங் கோயிலும் போக வென்றனன்.

(இ-ள்.) இப்படி மிகுந்தபக்தியினாற் றேகம் உருகாநின்ற விஷ்ணுவினுடைய அடிமைத் திறத்தைப்பார்த்துக் கேட்டவரங்களெல்லாஞ் சிவன் அருளிச்செய்து, பிரமனைப்பார்த்து உனக்குப் பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற் போகக்கடவதென்று திருவுளம்பற்றினார். எ-று. (௬௮)

கைதையே யிவனொடு காவு நீயுரை
செய்ததாற் நீண்டிலே யென்று தீர்த்தன
னெய்திய முனிவுகண் டேங்கி நான்முகன்
மெய்தரை யுறப்பதம் வீழ்ந்து போற்றினான்.

(இ-ள்.) ஓ தாழம்பூவே! இப்பிரமனோடுசேர்ந்து பொய்ச்சாட்சி சொன்னபடியினால், உன்னை யிதுமுதற்கொண்டு தீண்டேனெனத் தள்ளினார்; அதன்பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம்வந்ததைப்பார்த்து எக்கமெடுத்துப் பிரமன், தன்னுடையதேகம் பூமியில் நன்றாய்ப்படவிழுந்து வந்தனஞ் செய்தான். எ-று. (சுக)

வேறு.

பொடிமூடிய தழலேநிகர் புநி யாணவ மலமாஞ்
செடிமூடிகை யாலேயுழ ...பேதெரு பொருளோ
வடிவேபெரு வெளியேசதுர் ...றயே சதுர்மறையின்
முடிவேதனி முதலேயெனை முனிவ...லெனை முனியேல்.

(இ-ள்.) நீறுபூத்த நெருப்பையொத்த சுவாமியே! சண்டாளத்துவமாகிய ஆணவமலமென்கிறசெடி மூடிக்கொண் டிருப்பதினால், அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியேனொரு பொருளோ! உருவமானவரே! அகண்டவெளியானவரே! நான்கு வேதமானவரே! நான்குவேதத்தினுடைய அந்தத்தி லிருக்கின்றவரே! ஒப்பற்ற முதலாகியவரே! கோபித்துக்கொள்ள வேண்டாம், கோபித்துக் கொள்ள வேண்டாம். எ-று. (எ0)

எந்நீர்களு மொன்றாகிய வெழுவாரியு மறுகி
வெந்நீரது வானாவுடன் விளாவப்புன லுண்டோ
நின்னீர்மையி தென்றாலுல குயிரெப்படி நிசமும்
முந்நீர்விட முண்டோயெனை முனியேலெனை முனியேல்.

(இ-ள்.) எல்லாநதிகளி னீரும்விழுந்து ஒன்றாகிய ஏழுசமுத்திரமும் காய்ந்து வெந்நீராய்ச்சுட்டால், அதையாற்றுவதற்கு வேறே சலமுண்டோ! உமக்கே யிப்படிப்பட்ட கோபம்வந்தால் உலகத்திலிருக்கிற சீவராசிகள் எப்படிப்பிழைக்கும்! முன்னேசமுத்திரத்தில்



‡ கலி விருத்தம்.

கண்டுலகெ லாமதுகற் பனைக ளென்றே
புண்டரிக வேதியன் மதத்தரி புரத்தில்
தண்டியெதிர் கொண்டுபகை தங்கவிசை வண்ட...
வண்டொடு மாயவனை வைதுரை வழங்கும்.

(இ-ள்.) இப்படிச் சகலமும் உண்டாக்கிய பிரமதேவ... உலகெல்லாம் நம்முடைய சிருஷ்டியி னாலல்லவோ உண்... டென்று அகங்காரங்கொண்டு, ... வைகுந்தத்தில் போயெதிர்த்துப் பகைகொண்டு ... சங்கீதம்பாடுகின்ற வண்டுகள் சூழ்ந்த துளபமாலையைத் தரித்த விஷ்ணுவைப்பார்த்து இத்துச் சிலவார்த்தைகளை சொல்லத்தொடங்கினான். எ-று.

ஏழுலக மேழுமில மேழுபுய லோரே
ழாழிமுத லேழுகிரி யாம்வகை யியற்றி
வாழுமுயிர் யாவையும் வகுத்திட மனத்தாற்
பாழிகொள் மரீசிமுதல் மைந்தர்கள் படைத்தே

(இ-ள்.) வாராய் விட்டுணுவே! பதினான்கு லோகங்களையும் ... சத்த மேகங்களையும், சத்த சமுத்திரங்களையும், ஏழு குலபருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினால் ப... இப்பொழுது வாழ்கின்ற எல்லாவுயிர்களையும் உண்டாக்கவமைந்த மரீசிமுதல் ரிஷிகளைப் பெற்றேன். எ-று.

மைந்தரது மைந்தர்கள் குருக்களுடன் வானோர்
சந்திரன் முதற்பெரிய தானவர்க ளானோர்
கந்தருவர் கிம்புருடர் சித்தர்கண நாத
ரிந்திரன் முதற்றிசைக ளெட்டினு மிருப்போர்.

‡ "அளவடி நான்கின் கலிவிருத்தமே" என்பதிலக்கண

(இ-ள்.) விட்டுணுவே! என்னுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள் குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத் தேவர்களும், சந்திர சூரியர்களும், அசுரர்களும், கந்தருவர், கிம்புருடர், சித்தர், கணநாதர்களும், தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் எட்டுப்பேருமாயிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் என்றுவல்லவோ உண்டானார்களென்று பின்னுஞ் சொல்லுவார் பிரமதேவர். எ-று. (௧௯)

எஞ்சுதலி லாவிறைவ னென்பதனை யென்பேர்
கஞ்சனெனு மைந்தனை மறந்திடு காத்தா
லஞ்சலில் படைப்பொழிவி லெப்படி யளிப்பாய்
செஞ்சுவ ரிலாதெழுது சித்திரமு முண்டோ.

(இ-ள்.) குறைவில்லாத சகலத்துக்கும் நானே கர்த்தாவென்பதையும், என்பிள்ளை தான் பிரமனென்பதையும் மறந்துவிடு; நான் கையினாலே உலகத்தைப் படைக்காவிட்டால் நீ எப்படிக்காப்பாற்றுவாய்! சுவரில்லாம லெழுதுகிற சித்திரமுமுண்டோ! வென்று பின்னுஞ் சொல்லுவார் பிரமதேவர். எ-று. (௨௦)

அளித்திடு களிப்பினை யகத்தினில் விடாயேல்
வெளிப்பட வொருத்தனை யளித்திட விடுப்பேன்
குளிர்ச்சிய கடற்கிடை குதித்திட தனுள்ளே
யொளித்திடு சுரத்திர ளுனைச்சருவு முன்னே.

(இ-ள்.) விஷ்ணுமூர்த்தியே? சகலத்தையும் இரட்சிக்கின்றேனென்கிற மதத்தை விட்டுவிடு; நீ விடாமற்போனால், உன் உத்தியோகத்தை நீக்கி மற்றொருவனை யுண்டாக்கி இரட்சிக்குந் தொழிலுக்கு நியமித்துப்போடுவேன்; நம்முடைய புத்திர பௌத்திரர்களாகிய தேவர்கூட்டங்கள்வந்து உன்னைக்கொல்லும்படி வளைத்துக் கலமுண்டாகுவதற்குமுன்னே திருப்பாற்கடலுக்குள்ளே குதித்து ஒளித்திருக்கப்போவென்று சொன்னார் பிரமதேவர். எ-று. (௨௧)



வித்தக முளரிப்பிறகு விட்ட முனிவாலே
பத்தரு வெடுத்ததனை பகுத்தறிகி லாயோ
வத்தனை யுடற்களு மமைந்தபடி யாலென்
கைத்தல முமிப்படி களுத்தபடி பாராய்.

(இ-ள்.) ஞானசொரூபியாகிய பிருகுரிஷிவிட்ட சாபத்தினால் பத்தவதாரம் பூமியில்பிறந்தாய்; நீ அதை பகுத்தறியவில்லையோ அப்படி நீ பிறந்தபோதெல்லாம் அவ்வளவு பெரிய வுனது உடல்களையெல்லாம் படைத்துப்படைத்து என்கைகள் காய்ப்பேறி இப்படிக் கறுத்துப்போயிற்று பாரென்று பின்னுஞ்சொல்லுவாராயினார். எ-று.

உந்திமல ரோனென விகழ்ச்சியுரை யாதே
முந்தவொரு தாணிடை முளைத்தனை யுனக்குந்
தந்தையென வோவதது தாயெனவோ சொல்
செந்தழல் பிறந்ததினை தெய்ப்ப தறியாயோ.

(இ-ள்.) ஓ விட்டுணுவே! நம்முடைய நாபிக்கமலத்திலுதித்தானென்று நிந்தனை சொல்லாதே; முன்னாலே நீ ஒருதூணினிடத்திலே பிறந்தாயே; அந்தத்தூணை உனக்குத் தகப்பனென்று சொல்லட்டுமா! அல்லது தாயென்றுசொல்லட்டுமா! அந்தத்தூண் உனக்குத் தந்தையானால் எனக்குந் தந்தையாவாய்; செந்நிறம் பொருந்திய நெருப்பு மூக்கிலிடத்திலேபிறந்த அக்கினிதேவனே கொளுத்திப்போடுகிறதை அறியாயோ! அப்படி உன்னிடத்திலே நான்பிறந்தாலும் உன்னை அழித்துப்போடுகிறேனென்றார் பிரமதேவர். எ-று.

வேதனிவை சொற்றன கொடும்படை வெதுப்பிக்
காதிடை துளைத்தனல் புகட்டின தெனப்பக்
கோதமொ டெழுந்த புகை கொண்டகை கொண்டே
மாதவன் மதித்தனன் மறுத்திவை யுரைப்பான்.

(இ-ள்.) பிரமன் இப்படிச்சொன்ன வார்த்தைகள் விட்டுணுவுக்கு இரண்டுகாதிலும் வேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் தொளைக்கவிட்டு உள்ளே செலுத்தியது நெருப்புப்போல் தகிக்க மிகுந்த கோபங்கொண்டு புகை யெழும்பும்படியாக நகைத்து இவனுக்கு இந்த அகங்காரம்வந்தது எந்தவித்திலேயென்று ஆலோசித்துச் சிலவார்த்தைகளைச் சொன்னார் விஷ்ணுமூர்த்தி. எ-று. (௨௪)

வந்தவழி தன்னையு நினைத்திலை மனத்தென்
னுந்தியுன தன்னையென வுன்னுதலை யில்லாய்
தந்தைசிறு மைந்தர்பிழை தன்னையுண ராரென்
றிந்தவுரை சொல்லினை யிகழ்ந்தது பொறேனே.

(இ-ள்.) பிரமாவே! நீவந்த வழியையும் நினைத்தாயில்லை! என்னுடையநாபியை யுனது தாயென்று ஆலோசிக்கவும் இல்லை; தந்தைகளா யிருக்கிறவர்கள் பிள்ளைகள் செய்தபிழையை ஒரு குற்றமாக்கினையார்களென்று இந்த வார்த்தை சொல்லினையோ! இனிமேல் இப்படி பொறுக்கமாட்டேனென்று பின்னுஞ்சொல்லுவார் விஷ்ணுமூர்த்தி, எ-று. (௨௫)

கன்று மதுவுங் கைட வப்பகடு தானு
மென்றனைய ராகவு மிகழ்ந்துயிர் குடித்தேன்
மன்றவொரு தீமைசெயின் மைந்தனென வுண்டோ
வன்றியுட னேயையு மறுத்தெறிகி லாரோ.

(இ-ள்.) கோபத்தையுடைய மதுவும், யானைபோன்ற கைடவனும் எனக்குப் பிள்ளைகளல்லவா! என்னையிகழ்ந்து எதிர்த்தபடியினாலே கொன்றுவிட்டேன்; நிலைபெற்ற ஒருதீங்கு செய்தால் மகனென்று பார்க்கக்கூடுமோ! அஃதல்லாமல் தேகத்திலே ஒருகட்டி கண்டால் அதை யறுத்தெறிந்து சொஸ்தப்படுத்திக் கொள்ளாமலிருக்கின்றார்களோ மனிதர்கள். எ-று. (௨௬)



பித்தனுனை தோர்தலை பிடுங்கியெறி போதி
லத்தலை நமக்கென வமைக்கவிதி யில்லா
யெத்தலைவ னென்பதுனை யித்தலைகளை கொண்டோ
னைத்தலை யாரமுடிகொள் பாரிடம் விதித்தாய்.

(இ-ள்.) ஓபிரமனே! பயித்தியக்காரனாகியசிவன் உன்னுடைய தலைகளிலொன்றைப்பிடுங்கி எறிந்தகாலத்தில், அந்தத்தலையை மறுபடி யுண்டாக்கிக்கொள்ள வகையில்லை; உன்னை எப்படித்தலைவனென்று சொல்லுகின்றது; இந்தத்தலையைக்கொண்டோனேபடத்தையுடைய ஆதிசேடன் முடியிலிருக்கின்ற பூமியைப் படைத்தாயென்றார் விஷ்ணுதேவர். எ-று. (௨௭)

மச்சவுரு வங்கொடு மறைத்தொகுதி தந்தேன்
விச்சையுள தானவரை வென்றுயிர் குடித்தே
னச்சுமர மாமெனினும் வைத்தமர மென்றே
யச்சமுறு கின்றன னழிக்கவரி தென்றே.

(இ-ள்.) பிரமனே! சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைப்பிடுங்கிக்கொண்டு போனபோது, நான் மச்சாவதாரங்கொண்டு அவ்வசுரனைக்கொன்று வேதங்களை வாங்கித்தந்தேன்; அஃதல்லாமல் சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைக்கொன்று தேவர்களோடு உன்னையுங்காப்பாற்றினேன்; எட்டிமரமானாலும் தான் வைத்தமரமாகவிருந்தால் வெட்டார்கள்; அதைப்போலபிள்ளையானஉன்னைக் கொல்லக்கூடாதென்று பயப்படுகிறேனென்றார் விஷ்ணு. எ-று.()

என்றொருவ ருக்கொருவ ரெத்தனை யுரைத்தார்
கன்றினர் புயத்தின்மிசை கைத்தல மடித்தார்
நின்றுல குதித்தனர் நெருக்கினர் நிமிர்ந்தார்
துன்றிய கனற்பொறி சுருக்கெழ விழித்தார்.

(இ-ள்.) இப்படி ஒருவர்க்கொருவர் எத்தனை வார்த்தைகளோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்; கோபித்துக்கொண்டு புஜத்தின்மேல் கைகளாலே அடித்துக்கொண்டார்கள்; நின்று பூலோகத்தில் குதித்தார்கள்; நெருங்கினார்கள்; திமிர்த்தார்கள்; நெருப்புப்பொறி நெருக்கமாய்விழ சுறுக்கென்று கண்களை விழித்தார்கள். எ-று. ()

வெற்புகள் பொடித்தன வெடித்ததண் டாகம்
பற்பல சுடர்க்கதிர் பனிக்கதி ரொளித்த
சர்ப்பமு னெளித்தது தலைச்சுமை பொறுதே
கற்பமுடி வென்றமரர் கண்களை யிமைத்தார்.

(இ-ள்.) பிரமதேவரும், விஷ்ணுமூர்த்தியும், சண்டைசெய்தபோது மலைகளெல்லாம் பொடியாய்ப்போயின; அண்டகடாகம் படீரென்று வெடித்து, பற்பலகிரணங்களையுடையசந்திரசூரியர்கள் ஒளித்தார்கள் ஆதிசேஷன் தலைச்சுமை பொறுக்கமாட்டாமல்உடல் நெளித்துக்கொண்டான்; கற்பகாலம்வந்து உலகமழியப்போகின்றதென்று (இமையா நாட்டமுடைய) தேவர்கள் கண்களை இமைத்துக்கொண்டார்கள். எ-று. (௬௦)

உடுக்கண முகிற்கண முதிர்ந்த வுலகெல்லா
மிடுக்கணில் விழுந்தன வெழுந்தன பாதல
மடக்கின பகீரதிமுன் னனநதி யெல்லாந்
திடுக்கொடு முழங்கின திசைக்கரிக ளெட்டும்.

(இ-ள்.) நக்ஷத்திரக்கூட்டங்களும், மேகக்கூட்டங்களும் உதிர்ந்தன; உலகமெல்லாந் துன்பங்களோடு அடுக்குக்குலைந்து விழுந்தன; பாதலங்களெழும்பின; கங்கைமுதலான நதிகளெல்லாந் தண்ணீரில்லாமல் வற்றிப்போயின; அட்டதிக்கிலு மிருக்கிற யானைகள் திடுக்கிட்டுப் பயந்தன. எ-று. (௬௧)



மேவினி தெடுத்தெறிவர் வீழ்வர்கடி தோடிக்
கோவியெதிர் குத்துகென நின்றிடுவர் குத்திச்
சாலமடி தொட்டளவில் சாரிகை திரிந்தார்
மாலையு மிருட்டிம்வல மாவருதன் மான.

(இ-ள்.) ஒருவரையொருவர் மேலேயெடுத்தெறிவார்கள் கீழே விழுவார்கள்; மறுபடியும் எழுந்து விரைவில் ஓடிவந்து எதிரே நின்று குத்தென்று சொல்லுவார்கள்; அப்படிக்குத்திக்கொண்டு பிறகு மடியைப்பிடித்துச்சூறைபோல் விசைவிசை சுழன்று திரிந்தார்கள்; அந்தி சேரமும் இருளும் வலமிடமாக வருதலை யொத்திருக்கும்படி. எ-று. (௬௨)

ஊருவன தத்துவன செல்வன விண்ணோடே
சேருவன நின்றன திரிந்தன திரட்டார்
தாருவகை யிற்றன தழைந்ததிரு ளெங்கு
மேருவரை யுக்கதெழு வேலையுள ருக.

(இ-ள்.) அவ்வேளையில், உலகத்தில் ஊர்ந்துபோகின்ற சீவன்களும், தவழ்கின்றவைகளும், நடக்கின்றவைகளும், பறக்குஞ்சீவராசிகள்போல ஆகாசத்தில் பறந்தன; நிலையாகநின்ற விருக்ஷமுமலைகளுந்திரிந்தன; திரளாக நிறைந்த ஐந்துவகையாகிய தேவதருக்கள் பொடிப்பொடியாய்ப்போயின; எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது மகாமேரு அசைந்தது; சத்தசமுத்திரங்களுஞ் சேறாயின. எ-று. ()

அந்தமுடி வெல்லைதனி லஞ்சியிமை யோர்தா
மிந்திரனை யெய்தினர்க ளெய்திய துரைக்கு
முந்தியவ னுற்றதுயர் யாவையு மொழிந்து
வந்தவா வேதென வருத்துரைசெய் கின்றார்.

(இ-ள்.) சருவ சங்காரகாலம் வந்ததென்றுசொல்லும்படி இரு வருஞ் சண்டைசெய்யும் அந்த வேளையில், தேவர்களெல்லாம் பயப் பட்டுத்தேவேந்திர னிடத்திற்போய்ச்சேர்ந்து தங்களுடையதுக்கத் தைச் சொல்லுவதற்குமுன்னே, தேவேந்திரன் தான்பட்டதுன்பங் களெல்லாஞ் சொல்லிப்பின்பு நீங்கள் வந்தகாரியம் ஏதென்றுகேட் கத் தேவர்கள் சொல்லுவார்கள். எ-று. (௩௭)

ஆரண னு நாரண னு மானவிரு வோருந்
தாரணியி லேமிகு சமர்த்தொழில் விளைத்தா
ரோணிய வேறுகதி யில்லை யெவருக்குங்
காரணனை யேதொழுதல் காரியமி தென்றார்.

(இ-ள்.) பிரம விட்டுணுக்களாகிய இருவரும் பூமியில் மிகுந்த யுத்தத்தைச் செய்கிறார்கள்; எங்களுக்குப் பிழைக்கத் தகுந்தமார்க் கம் வேறேயில்லை; எல்லாருக்குங் காரணமாயிருக்கிற பரமசிவனைத் தொழுது இந்தச்செய்தியைச் சொல்வதே காரியமென்று சொன்னார் கள் தேவர்கள். எ-று. (௩௮)

நாயக னிசைந்துபினர் நாகவுல கத்தோர்
தூயமலர் போலடி துதித்தரிவை பாகா
மாயமுடன் மாலயன் வருத்தமது தீராய்
தாயலது மைந்தர்துணை தாரணியி லுண்டோ.

(இ-ள்.) இப்படிச் சொல்லத் தேவேந்திரனும் சம்மதித்துப் பின்பு, அவனோடு தேவர்களெல்லாரும்போய்ச் சிவனுடைய பரிசுத் தமாகிய தாமரைமலர்போன்ற பாதத்தைத்தொழுது, மங்கைபாக னே! மாயஞ்செய்கின்ற விட்டுணுவும், பிரமனும் சண்டைசெய்வத னால், வருந் துக்கத்தைத்தீர்க்கவேண்டும்; பிள்ளைகளுக்குத் தாயே துணையல்லாமல் மற்றொருதுணை பூமியிலுண்டோ! என்றுசொன் னார்கள் தேவர்கள். எ-று. (௩௯)



உருட்படு சகட்டைநிக ரூற்றுலவின் மீதே
யிருட்படு பிறப்பினை யிறப்பினை யுறாதே
பொருட்பெற வுனக்கடிமை புக்கள விலாவுன்
னருட்கடல் குளித்திட வடைக்கலம தானேம்.

(இ-ள்.) உருண்டுகொண்டு போகின்ற வண்டியினுடைய சக்க ரம்போல, அஞ்ஞானம் பொருந்திய பிறப்பையு மிறப்பையும் மாறி மாறியடைந்து வருத்தத்தை யநுபவியாமல் மோட்சத்தைப்பெற உனக்கடிமையாகப் புகுந்து உன்னுடைய அளவில்லாத கிருபைக்க டலிற் குளிக்க அடைக்கலமானோமென்றார்கள்தேவர்கள். எ-று. (௪௰)

புழுக்குடை யுடற்சுமை பொறுக்க முடியாத
விழுக்குடைய விச்சைகெட விச்சையருள் வானே
யழுக்கற விடைத்தின மிழுக்குறினு மாறா
வொழுக்கமல மற்றிட வடைக்கலம தானேம்.

(இ-ள்.) அநேகம் புழுக்களுண்டாய்க்கொண்டிராகின்றவுடற் பாரத்தைப்பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப்பிரி யத்தினாலே கிருபைசெய்கின்ற சுவாமியே! பெரிய சமுத்திரத்தினி டத்தில் தினம் முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்கற்றுப் போக அடைக்கலமா யும்மைச்சேர்ந்தோமென்றார்கள். எ-று. (௪௧)

எண்ணமினி வேறிலை யெமக்கருள்செ யென்றே
கண்ணுதலை விண்ணவர்கள் கூற்றுமொழி போதி
லெண்ண வு முணர்ந்தன னனைத்துயிரி னுள்ளே
யெண்ணெயென நிற்குமவ னெந்தநிகி லாதே.

(இ-ள்.) இனிமேல் வேறே ஆலோசனையில்லை, எங்களுக்குக் கிருபை செய்யுமென்று சிவனைத் தேவர்கள் புகழ்ந்து தோத்திரஞ் செய்கையில், சுவாமியும் அவ்விருவருக்கும் வந்தசண்டையின் மூலத்

தையறிந்தார்: எல்லா வுயிர்களிடத்திலும் எள்ளினிடத்து நெய் போல்நிற்கும் சுவாமி இது அறியமாட்டாரோ! அறிவார். எ-று. (௫௯)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நடுக்கமுறு முனிவரெலா மமரரெலாம்
பயந்தவிர நாகமீது
படுக்கைபுரி திருமாலும் பங்கையத்தி
லுறுமயனும் பகைமை தீர
வடுக்கிவிடும் புவனமெலா மடுக்கழியா
திருக்கமனத் தருள்வ தாகித்
தடுக்கரிய தழலுருவத் தொருவரையா
யிருவரையுந் தடுப்ப தானான்.

(இ-ள்.) நடுக்கமடைந்த முனிவர்கள் தேவர்கள் எல்லாரும் பயம் நீங்கும்படி [illegible] சயனம் செய்கின்ற விட்டுணுமூர்த்தியும், தாமரைபுட்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், ஒருவருக்கொருவர் பகைமை நீங்கவும், அடுக்கடுக்காயிருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்கழியாமலிருக்கவும் கிருபைசெய்வதாய்த் தடுத்தற்கரிய அக்கினிசொருபத்தோடு கூடிய ஒருமலையாகி இவ்விருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார் பரமசிவன். எ-று. (௬௦)

பாதலத்திற் பணிகளெலாம் விழுதாக
வதன்கீழிற் பருவே ரோடிப்
பூதலத்திற் கிளைத்திமையோ ருலகெல்லா
மலர்ந்து மலர்ப் புண்டரீகன்
மீதலத்து முகடுடைத்துக் கடாகவெளி
கடந்துபெரு வெளிக்கு மேலா
மாதலத்துக் கிதுவுமொரு கனன்மேரு
நடுத்ததென வளர்ந்த மாதோ.



(இ-ள்.) பாதாளலோகத்தி லிருக்கிற பாம்புகளெல்லாம் அம்மலைக்குச் சல்லிவேராகவும், அதன்கீழ் பருத்த வேரோடி பூமியிற் பெரிதாய் கிளைத்துத் தேவலோகங்களெல்லாந் தாண்டி பிரமலோகத்து முகட்டை யுடைத்து அண்டகடாக வெளியைகடந்து அதற்கப்பாலிருக்கும் பெரியவெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் அக்கினிச்சொருபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்லவளர்ந்தது. எ-று. (௬௧)

முளைக்குநெடுஞ் சுடரிரவி புரவியுலா
வாவுலக முழுது மோடிக்
கிளைக்குமணி யிருளகற்ற வேற்றிவைத்த
விளக்கெனவே வளர்க்கை யாலே
யளக்கரெலா மளப்பரிய வடவையழல்
பாரதென வுருத்துச் சார்ந்த
திளைக்குமெழு கிரிகளெல்லா மதுசொரிந்த
நெறுபொறிபோற் சிவந்த மாதோ.

(இ-ள்.) உதயமாகி நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக்கூடாத உலகமெல்லாம் ஓடி கிளைத்து நீலமணிபோலும் கரிய இருளை யோட்டுவதற்கு ஏற்றிவைத்த விளக்குபோல் பிரகாசிப்பதனால், சமுத்திரமெல்லாம் சொல்லுதற்கரிய வடவாமுகாக்கினி பரந்ததுபோலச் சிவப்பு நிறம் பொருந்த சத்தகுல பர்வதங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தினால் அந்த அக்கினிமலை சொரிந்த அக்கினிப் பொறிகள்போலச் சிவந்தன. எ-று. (௬௨)

கலிநிலைத்துறை.

வானக் கண்ணழ லாயதுகண்ட மலரோனுங்
கானக் கண்ணனு மஞ்சியகன்றார் கரைகாணார்
ஞானக் கண்ணினர் காணுமதல்லா லவைசேரு
மீனக் கண்ணின ருக்கெ ரியானே யெம்மானே.

(இ-ள்.) இப்படி ஆகாச பரி ந்தம் அக்கினி சொரூபத்தைக் கண்ட பிரமனும், வேணுநாதத்தைச் செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும், பயப்பட்டு ஒதுங்கி னார்கள்; ஞானக்கண்களையுடையவர்கள் காணுவதல்லாமல் குற் ம்பொருந்திய ஊனமாகிய முகத்திற் கண்ணுடையவர் காண்கிறத கு எளியவரோ! நம்முடைய பரமசிவன், எ-று. (சஉ)

அறுசீர்க்கழி நெடி ஆசிரிய விருத்தம்.

கண்ணிலன விடவரிய சடாடினைக்கண்
டுருவருவாய்க் கவலை யானு
ரெண்ணிவிதி னடிமுடியை யறிபவரே
பெரியவரென் றிசைத்தா ரிந்த
மண்ணினடி யறிவனெனப் பணவிடையிற்
றாக்கபிக்கோன் வராக மானான்
விண்ணின்முடி யறிவனென வெகினவடி
வெடுத்தயனும் விரைந்து போனான்.

இ-ள். கண்களாலே இவ்வளவுதூரம் இந்த மலைபோலிருக் ன் று அறியக்கூடாத பிரகாசமான மலையைப்பார்த்து, இர பருக துன்பத்தை யுடையவராய் இந்தமலையினது அடியை முடியையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக் யர். சொல்லிக்கொண்டார்கள்; அப்பொழுது சர்ப்பத்தில்



கொங்கைக்கரும்பை முலைமாதராசை கொடிதான மோகமதனாற்
சங்கற்பமொன்று மறியாமல்வீணாய்த் தடுமாறியாவி விடுமுன்
திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனேயுன் ஞமமறவேன்
மங்கைக்கிரங்கு மருணாசலீசர் வரவேணுமெந்த னருகே., (ரு)

உருவானகாய மதிலாறுவீடு யுதி ங்கலந்த தேகம்
கருவாகின்று புவிமீதில்வந்து படேது மொன்றுமறியேன்
குருவாகின்ற சிவஞானசோதி ருவேகின் ஞமமறவேன்
மருவிசிசோலை யருணாசலீசர் வ வேணுமெந்த னருகே. (சு)

பணியாதகோபி லணியாதநீறு ப யாதசோறு தருவாய்
துணியானவாசி சிவஞானமோன கமேயெனக் கருளுவாய்
தணியாதகோப முடலோடிருந் சலியாதமாய்கை வெளியே
மணியாடுநாத மருணாசலீசர் வர வணுமெந்த னருகே. (எ)

குதாகின்ற சிவகுஸ்திரங்கள் சுருவாயமர்ந்த சுழியே
பாதாதிகேச முடலோடிருந்து படுகாணிலாடு நடனம்
வேதாவுமாட மதியாடமூவர் விளையாடுகின்ற வெளியே
வாதாடுகின்ற அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (அ)

அடிமூலவட்ட வதிலாறுகட்ட வதின்மேலிருந்த பரனே
டியா சத்தி சிவரூபவல்லி சுகமானவேத வடிவே
டியா கருள்ளத் தெரிவாய்விளங்கு மறனேயின் ஞமமறவேன்
டிவானசோதி அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (கூ)

ரைதங்கின்ற யுயிரெங்குமாதி யுலகெ ருமேக வடிவாய்
ார்கண்டதில்லை வெகுகோடிகாலங் க காலமாய்கை ய றல்
றைதேடியாசை பரியால்மெலிந் கண்டியங்கி வி
ரைதங்கின்ற வருணாசலீசர் வரவே மெந்த னருகே. (க0)

அரு சலீசர்பதிகம் - முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணாமலை

# அருணாசலேஸ்வரர்பதிகம்.

காப்பு—வெண்பா.

ஆதி யயன்மா லடிமுடியைக் காண்பரிய
சோதி வரையா[illegible]நின்ற தூயனெனிர்—பாதிமதி
கற்றைச் சடை[illegible]கணிந்த கண்ணுதலைப் போற்றவெங்க
[illegible]ற்றைக் கொ[illegible]ந் துணைத்தா ளுண்டு.

ஆசிரியவிருத்தம்.

ஓதமலை தல்விய விபூதிமலை கைலையு னுறைத்தமலை மந்திர
மலை - உத்தமமெய்ஞ் ஞானியர் [illegible]தனர்கள் குழுமலை யோகரு



மலையழியாமலை, சோதிமலை யிருகண் களிக்குமலை மெய்யடியர் தொ
ழுதருகு சோணமலையே - அங்கபத்திரி யமுனை கலைவாணி நித்த
மலி சுனையருகி னொளிர்மாமலை, வேதமலை சித்திர விநோதமலை
யென் னன்னையர் வேண்டுமலை காண்டமலையே - வினோதிர்க்க வந்த
மலை கனகாபி ஷேகமலை வீறுமலை யேறுமலையே, ஆதிமலை மீதுறை
யாதியே யென்னையா ளருணாசலக் கடவுளே - அரகர மகேசனே
பரமகுரு வீசனே அணியண்ணாமலை வாசனே. (௧)

காளத்தி நாதராய்க் கழுகா சலத்தராய்க் காசிதனில் விசுவேச
ராய்க் - கச்சியே கம்பராய் வேளூர்விநோதராய்க் கமலமலர் தன்னி
லுறைபுத், தேனுக்கு மாலுக்கு மெட்டாத சோதியாய்த் திருவொற்
றியூர்த் தியாகராய்த் - தென்மதுரையிற் சொக்கராய்க் காழிதன்னி
ற்றிருத்தோணி யப்பர்தாமாய், ஞானச்சரோருகத் தடமேவுதென்
றில்லை நடராயராய்விரிஞ்சை - மகர்வழித் துணைலிங்க ராய்த்திருச்
செங்காட்டு கம்பாயடியார்களை, ஆளக்கடைக்கணருள் செய்விளங்
கியவெங்க ளருணாசலக்கடவுளே - அரகரமகேசனே பரமகுருவீசனே
அணியண்ணாமலை வாசனே. (௨)

பாணிச்செழுஞ்சடைப் பரமனேயுலகிறை பக்தர்கோடிகளே
த்திடும் - பாதபங் கேருகா சங்கர சதாசிவா பாலநேத்ரா சாம்பவா,
பூணிற்பொலிந்தமா தேவிபங்காசர்ப்ப பூஷணாநீலகண்டா - பூதநா
தாதற்பரா சிற்பராசர்வ பூரணசதாசாரணா, சேணிற்[illegible]த்த பண்
ணவர்களெணுமாலயன் சிந்தனைசெய் [illegible]தேவர் - திகழ்சிவா [illegible]
கோ தண்டாவகண்டா சிதம்பராகருணாகரா, ஆணிப்பொ[illegible]
யினேன் றன்னையாளுவா யருணாசலக்கடவுளே - அ[illegible]னே
பரமகுருவீசனே அ[illegible]ணியண்ணாமலை வா[illegible]னே. (௩)

குலமொடு மான்[illegible] யொரு[illegible]தொண்டர் [illegible]
சங்கரா - சற்றிவர் தன்கோயில் [illegible] தொழுது [illegible]

ன்றெல்லையைக்கேள், வாலிபந் தன்னிலே யொருநலமு மெய்திடா
வறுமைவந்தெனை வருத்த- வண்புவியிலொருசாண் வயிற்றினைவளர்க்
கவுளம் வாடினேன்தேடிவந்தேன், சாலவஞ்சித்தெனைக் கைவிடினு
நாயினேன் சாமியுனைவிடுவதில்லை- தள்ளாமலுன்பாத பதுமநிழற்
றிடத் தயைசெய்வ துன்பாரமே, ஆலவிடமருவுமணி நீலகண்டத்த
னே யருணாசலக்கடவுளே- அரகரமகேசனே பரமகுருவீசனே அணி
யண்ணாமலைவாசனே. (௪)

தேவர்துதி தேவராய் வாழ்விக்கு மீசராய் செகதலக்கர்த்தவ்ய
மாய்த் - தெய்வீகமாமுசித வைஷ்பாகராயனே சிந்தைநொந்தினிது
வாடி, மாவுலகில் கொலைகளவு கட்காமமாகிய வருத்தவைம்பாதகங்
கள்- மனத்தச்சமில்லா தியற்றினேனேனுமுன்னை வந்தித்திடாதகுறை
யோ, கூவென்ற சத்தமுன் செவிகொண்டு கேளாத கொடுமைதா
னென்னையனே - குழவியழு குரல்கேட்ட தாய்போல வந்தென்று
குறைதவிர்த் தாளையனே, ஆவிக்குநீதுணை யலாதுவே றில்லையென்
னருணாசலக் கடவுளே - அரகரமகேசனே பரமகுருவீசனே அணிய
ண்ணாமலை வாசனே. (௫)

மாணிக்கவாசகர்சுந்தரர் புநிதசம்பந்தர் மாதவத்தோர்தமக்கும்-
வரமேயளித்தசிவ போகவுண்ணாமலை வல்லிதனிடப்பாகனே, யா
ணிக்கைகொண்டட்ட திசையுளோர்நகையொடு கனிந்துபூசனைபுரி
ந்து- கவிஞர்புகழ்திருகாரு சிரமிசைகுவித்தேத்து கத்தனேகைலையா
சே, வீணுக்குழைத்து வாழ் நாள்கழிந்துப்புவியில் மெலிவிசாரக்கடலி
னில்- வீழ்ந்தலைந்திடுமென் தரும்பவமகற்ற த விதமென்னமோவை
யனே, ஆனந்தாத்துவெண் மூர்த்தமேயத்தனே அருணாசலக்கடவு
ளே- அரகாமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே.

நீயெனது தெய்வமென் றுன்கோவில் வலம்வந்து நேயமொடு
கொண்டாடினேன் - வினைவோடுபணிபவர்க் கழிவிலாப்பதவியும் நீதர



செல்வமுங்கனதையும், தேயுசும்மிக்கவுண் டாயுளும் நூறுண்டு தெ
ன்புண்டுவன்புமுண்டு- தியாணிக்கநினைவுமுண் டீகையுண்டுயர்கல்வி
தெளிவுண்டு ஞானமுண்டு, வாயுண்டுகவிசொலக் கேட்கவுஞ்செவி
யுண்டு வாழ்வுண்டுதாழ்வில்லையே- வல்லாண்மையுண்டெதிருநல்லோ
ரிணக்கமது மாறாதுதாழ்வுறாது, ஆயிராரோக்கியமும் பெருகவருள்
வாவிரும் அருணாசலக்கடவுளே - அரகரமகேசனே பரமகுருவீசனே
அணியண்ணாமலைவாசனே. (௭)

காலுடன்கைகளு நடுக்குற்றிடாமுனங் கழறுநாக்குளறுமுன்
னங்-கண்கள்பஞ்சடையுமுன் றுன்பம்வந்தெய்துமுன்காலன்வந்தணு
காமுனங், தோலுஞ்சுருங்கித் திரைந்துநரையொடுமூப்பு தோன்று
முன்னிருமல்முதலாம்-தொல்வினைவாராமுனம் பல்வரிசைவீழுமுன்
றுணியிட்டுமனைவிமக்கள், மாலுத்தழாமுனம் பாலன்றனக்குமுன்
வந்தெனைக்காப்பதரிதோ - மரணத்தயர்ந்திடுந் தருணத்திலுன்றன்
மலர்ப்பதமுவந்தருளுவாய், ஆலத்தையமுதுசெயு மயலனேயாதியே
அருணாசலக்கடவுளே- அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்
ணாமலைவாசனே. (௮)

வீணாயிவ் வவனியி லுதித்துவந் தழனேர் விசாரத்திலுலைந்து
ளம்- வெந்துமிக நொந்துன்னை வந்தடுத்தேனென்னை விதமானபாத
கங்கள், நாணாது செய்தகொடி யேனெனினு மென்பிழை நம்ப
னே நீபொறுத்து- நலமெலாந்தந்துன் னடிக்கமலமேல்தன்னை நா
டுவெனையடிமை கொள்வாய், சேணுடர் போற்றுமிறை வாசவ நாம
ஹா தேவாத்ரிலோகநாதா- சித்தர்கின்னரருரகர் அரகரவெனச்சோ
லிச் சேவிக்குமறைநாயகா, ஆணாய்ப்பெண்ணாய் ... னாயெனாய
னே அருணாசலக்கடவுளே- அரகரமகேசனே பரமகுருவீசனே அணி
யண்ணாமலை வாசனே. (௯)

இந்திரன் தீர்த்தமுடன், அக்கினித் தீர்த்தமும் யமதரும தீர்த்தமுதலாய் - இயனிருதி தீர்த்தமும் வருணதீர்த்தமு முக்கிய மென்னு வாயுவு தீர்த்தமும், விக்னைக்குபேரதீர்த்தமு மமலமேவுமீசான தீர்த்தமுமுவந்த - மினிர்முலைப்பால் தீர்த்த கனிதமிழ்பயந்தமுனி வேண்டுமுயர்தீர்த்தமிகவே, சந்தச்சரஸ்வதி தீர்த்தமுமிலக்குமித் தாய்தீர்த்தமுங்கௌதமர் - தன் தீர்த்தமுஞ்சக் கரத்தீர்த்தமுநந்தி நகைதீர்த்தமும்பிரமமாம், அத்தமலி தீர்த்தங்கள் விக்னைபுடைகுழுவு அருணசலக்கடவுளே - அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே. (௰)

கூட்டமிகுமடியார்கள் கூட்டுறவிலாமடமை கொண்டமூடமுடன் வித்யா - குருசிடனுய்க்கல்வி கல்லாதமூடனுன் கூறுசரிதத்தினையே, கேட்டதறியேனுனது நாட்டமறியேனமை சேர்பாதமுன் ஞமறியேன் - செந்தாட்சதைக்கூ விளங்கொண்டு பூசனைசெய் கிரியையறியாத மூடன், பாட்டுமறியேன் வினை கோட்ட வறியேன் கவிப் பத்தியவை யர்த்தமுடனே - பகாவறியே னுனைப் பாவறியேன்செய் பாவமேதோ வறிகிலேன், ஆட்டிவைத்தேமன்னை காட்டிக்கொடா தருள்செய் அருணசலக் கடவுளே - அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலை வாசனே. (௧௧)

அருணசலேஸ்வரர் பதிகம் - முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# திருச்சிற்றம்பலம்.

# உண்ணாமுலையம்மன் பதிகம்.

---

காப்பு - வெண்பா.

அண்ணா மலைநாத ரார்ந்திடப்பக்கத் தமர்ந்த
உண்ணா முலைப்பதிக மேவுரைக்க—ஒண்ணா
அந்திநிறத் தானீன்ற வன்னமெலனு மைந்தாகாத்
தந்திமுகன் றாளே சரண்.

சந்தவிருத்தம்.

திருவாருங் கூடுதனிலாறுவீடு இனமேயிருந்துமுடிவிற், பெருவீடுதன்னில் மனல்வீடுகட்டிப் பேயென்பிழைக்க வசமோ, எரிகாடெனச்சொல் சுடுகாடுபோமுன் னெளியேன் முன்வந்தருளுவாய், மருவார்ந்த வுண்ணாமுலைகாமதேவி வரவேணுமெந்தனருகே. (௧)

விலைமாதர்தங்கள் நிலையேமெய்யென்று விரிவான[illegible]கந்தனில், அலைவாய்த்துரும்பு போலேயுழன்ற வடியேனை[illegible]ருவார், கடைதேடிகாணு தொலிருமப்ராசித்திக் கனத்தோர்புகழுமண்ணா, மலைமேவுண்ணா முலைகாமதேவி வரவேணுமெந்தனருகே. (௨)

சீர்கொண்டவகிலத் தனில்வாழுமாந்தர் [illegible]காடி தப்பித்தந்தை, சீர்கொண்ட உன்றன் வாளாலறுத்து [illegible]மை நீ, ஆர்கண்டுகின்சீட ருணாசெப்பவல்லவ [illegible]சக்தியோர, வார்கொண்டவுண்ணா முலைகாமதேவி வரவேணுமெந்தனருகே. (௩)

பிறைபோன்றநெற்றிப் பறையம்பணத்தி பரிபாலனத்திபுகழ்சேர் இறையோடுநின்ற திருவேணி[illegible]செப்பவுனரார் [illegible]துறைவாழ்வைநீக்கிப் பதமீந்துரட்சி கொடியோலிடைப் பெண்[illegible] மறை[illegible]உண்ணாமுலைகாமதேவி வரவேணுமெந்தனருகே. (௪)

# உண்ணாமுலையம்மன்பதிகம்.

சென்னிக்குழிர்தைப் புனைந்தபுத்த சிவன்வாமபாகந்தனில், மின்னேயெனச்சொன் மிக்கவேயிருக்கு மெல்லியற்கணுமையே, என்னைப்போலேழை யகிலத்திலில்லை யீடேறவைத்தாளுவாய், மன்னிக்குமுண்ணு முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௫)

பந்தார்குசத்தி பணிசோமுகத்தி பதுமாசனத்திமாயி, நந்தார்சழுத்தி நாராயணத்தி நளினப்பதத்தினளிசேர், சிந்தாகுலத்தை யந்தாதரித்து சீர்பெற்றிடச்சிறுவன்முன், வந்தாள்கவுண்ணு முலைநாமதேவி வரவேண்டுமெந்தனருகே. (௬)

கொடிபோன்றிடைச்சி குறமாதுமாயி குணமானபூஷணத்தோ, டிடியேறுபோன்ற மிடியால்மெலிந்த யேழைக்கிரங்குசத்தி, நடையாலனத்தை மெலியச்செய்விக்கு நாராயணன்சோதரி, வடிவார்ந்த வுண்ணுமுலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௭)

சற்றேனுமின்ற னுளமேயிரங்க யினிதாமசங்களேதோ, சித்ராங்கருபி திவ்யப்பிரதாபி திருவார்ந்தநில்லையதனில், எத்தால்விளைந்த கதைபோலிருக்கு தென்னன்மழையிப்பூமியில், வற்றாதவுண்ணு முலைநாமதேவி வரவேண்டுமெந்தனருகே. (௮)

...ரிவானபூமி தனில்...ரூமாந்தர் ...பிதங்கள் செயினு ...னைநன்மதுவ...ளோ...ன்னை, பெருவா ...ப் பிரிய...டென்னை பிரியமிரு...விப்போ; வரு செல்வியுண்ணு...தேவி வரவேணுமெந்தனருகே. (௯)

...கதியேயிலாத தமியேனைரட்சிப்பதற், கெது ...ருமில்லை யுனை...வறு கௌமாரிவீரியிந்தப், ...சாணத்திலெ...ந பிரிவற்று வைகுமெனையான் மதிசத்தியுண் ணு முலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. (௧௦)

உண்ணாமுலையம்மன்பதிகம்

முற்றிற்று.